# திருக்குறள்

## உரைக் களஞ்சியம்

பொருட்பால் - அங்கவியல்

பகுதி - 1

ச. தண்டபாணி தேசிகர்

பதிப்புத்துறை

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

# திருக்குறள்
# உரைக்களஞ்சியம்

(பொருட்பால்—அங்கவியல்)

பகுதி - I


பத்மபூஷண் டாக்டர் மகாவித்துவான்

ச. தண்டபாணி தேசிகர்

முன்னாள் விரிவுரையாளர், திருக்குறள் ஆய்வகம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

உதவி :

திருமதி சலஜா கோபிநாத்

முதுநிலை விரிவுரையாளர்,

தலைவர் (பொறுப்பு)

திருக்குறள் ஆய்வகம்



பதிப்புத்துறை

பதிப்புத்துறை

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

மதுரை—625 021

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை—625 021.

© Publications Division
Madurai Kamaraj University
Madurai—625 021.

நூலகக் குறியீட்டு எண் : 031, 1 C 5 : g

பதிப்பு எண் : 124

திருக்குறள் ஆய்வக வெளியீட்டு எண் : 16

பதிப்பு விவரங்கள் :

1. உரைக்களஞ்சிய ஆசிரியர் : பத்மபூஷண் டாக்டர்
மகாவித்துவான்
ச. தண்டபாணி தேசிகர் (1905)
(PadmaBooshan Mahavidwan
S. Dhandapani Desigar)
முன்னாள் விரிவுரையாளர்
திருக்குறள் ஆய்வகம்
மதுரைகாமராசர் பல்கலைக்கழகம்

2. தலைப்பு : திருக்குறள்—உரைக்களஞ்சியம்.
பொருட்பால்-அங்கவியல் பகுதி 1
(Thirukkural variorum Edition)

3. பதிப்பு :
அ. இடம் : மதுரைகாமராசர் பல்கலைக்கழகம்
(Madurai Kamaraj University)
ஆ. பதிப்பித்தோர் : பதிப்புத்துறை
மதுரை காமராசர்பல்கலைக்கழகம்
மதுரை—625 021.
Publications Division
Madurai Kamaraj University
Madurai
இ. ஆண்டு : முதற்பதிப்பு 1996

4. மொத்த பக்கங்கள் : 24 + 532

5. பொருள் : திருக்குறள் உரைக்களஞ்சியம்

6. அச்சும் அமைப்பும் : தி முல்லை அச்சகம் T. வாடிப்பட்டி
✆ (O) 54333 (R) ; 54281

7. விலை : ரூ. 100-00

# இதில் அடங்கியவை

துணைவேந்தர் அணிந்துரை
முன்னுரை
பதிப்புரை
சுருக்க விளக்கம்
தேசிகர் வாழ்க்கை வரலாறு
அங்கவியல்
64. அமைச்சு 1
64.1. கருவியும் காலமும் 4
64.2. வன்கண் குடிகாத்தல் 10
64.3. பிரித்தலும் பேணிக்கொளலும் 16
64.4. தெரிதலும் தேர்ந்துசெயலும் 19
64.5. அறனறிந்தான்றமைந்த 23
64.6. மதிநுட்பம் நூலோடு 26
64.7. செயற்கை அறிந்த 30
64.8. அறிகொன் றறியான் 34
64.9. பழுதெண்ணும் மந்திரியின் 39
64.10. முறைப்படச் சூழ்ந்தும் 42
65. சொல்வன்மை 45
65.1. நாநலம் என்னும் 46
65.2. ஆக்கமும் கேடும் 49
65.3. கேட்டார்ப் பிணிக்கும் 53
65.4. திறனறிந்து சொல்லுக 57
65.5. சொல்லுக சொல்லை 61
65.6. வேட்பத்தாம் சொல்லி 63
65.7. சொலல்வல்லன் சோர்விலன் 66
65.8. விரைந்து தொழில்கேட்கும் 69
65.9. பலசொல்லக் காமுறுவர் 73
65.10. இணரூழ்ந்தும் நாறாமலர் 77
66. வினைத்தூய்மை 81
66.1. துணைநலம் ஆக்கம் 83
66.2. என்றும் ஒருவுதல் 85
66.3. ஓஒதல் வேண்டும் 88
66.4. இடுக்கண் படினும் 90
66.5. எற்றென் றிரங்குவ 94

66. 6. ஈன்றாள் பசி 100
66. 7. பழிமலைந்து எய்திய 103
66. 8. கடிந்த கடிந்தொரார் 106
66. 9. அழக்கொண்ட எல்லாம் 108
66. 10. சலத்தால் பொருள் 110

67. வினைத்திட்பம் 114
67. 1. வினைத்திட்பம் என்பது 115
67. 2. ஊறொரால் உற்றபின் 117
67. 3. கடைக்கொட்கச் செய்தக்க 122
67. 4. சொல்லுதல் யார்க்கும் 126
67. 5. வீறெய்தி மாண்டார் 129
67. 6. எண்ணிய எண்ணியாங்கு 132
67. 7. உருவுகண்டு எள்ளாமை 134
67. 8. கலங்காது கண்டவினைக் கண் 139
67. 9. துன்ப முறவரினும் 140
67. 10. எனைத்திட்பம் எய்தியக்கண்ணும் 142

68. வினை செயல்வகை 146
68. 1. சூழ்ச்சி முடிவு துணிவு 147
68. 2. தூங்குக தூங்கி 150
68. 3. ஒல்லும்வாய் எல்லாம் 153
68. 4. வினைபகை யென்றிரண்டின் 155
68. 5. பொருள்கருவி காலம் 158
68. 6. முடிவும் இடையூறும் 163
68. 7. செய்வினை செய்வான் 164
68. 8. வினையான் வினையாக்கி 168
68. 9. நட்டார்க்கு நல்லசெயலின் 171
68. 10. உறைசிறியார் உண்டுங்க 174

69. தூது 178
69.1. அன்புடைமை யான்ற 180
69.2. அன்பறிவு ஆராய்ந்த சொல் 183
69.3. நூலாருள் நூல்வல்லன் 187
69.4. அறிவுருவு ஆராய்ந்தகல்வி 191
69.5. தொகச்சொல்லித் தூவாத 193
69.6. கற்றுக்கண்ணஞ்சான் 196
69.7. கடனறிந்து காலம் 200

69.8. தூய்மை துணைமை 203

69 9. விடுமாற்றம் வேந்தர்க்கு 208

69.10. இறுதி பயப்பினும் 211

70. மன்னரைச் சேர்ந்தொழுகல் 214

70.1. அகலாஅ தணுகாது 215

70.2 மன்னர் விழைப 219

70.3. போற்றின் அரியவை 222

70.4. செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் 225

70.5. எப்பொருளும் ஓரார் 227

70.6. குறிப்பறிந்து காலங் கருதி 230

70.7. வேட்பன சொல்லி 233

70.8. இளையர் இனமுறையர் 235

70.9. கொளப்பட்டேம் என்றெண்ணி 239

70.10. பழையமெனக்கருதி 240

71. குறிப்பறிதல் 244

71.1. கூறாமை நோக்கி 245

71.2. ஐயப் படாஅ தகத்தது 249

71.3. குறிப்பிற் குறிப்புணர்வாரை 251

71.4. குறித்தது கூறாமை 255

71.5. குறிப்பின் குறிப்புணரா 257

71.6. அடுத்தது காட்டும் 260

71.7. முகத்தின் முதுக்குறைந்தது 264

71.8. முகம்நோக்கி நிற்க 266

71.9. பகைமையும் கேண்மையும் 270

71.10. நுண்ணியம் என்பார் 273

72. அவையறிதல் 277

72.1. அவையறித் தாராய்ந்து 279

72.2. இடைதெரிந்து நன்குணர்ந்து 282

72.3. அவையறியார் சொல்லன் 284

72.4. ஒளியார்முன் ஒள்ளியர் 286

72.5. நன்றென்ற வற்றுள்ளும் 290

72.6. ஆற்றின் நிலைதளர்ந்தற்றே 292

72.7. கற்றறிந்தார் கல்வி 294

72.8. உணர்வ துடையார் 296

72.9. புல்லவையுள் பொச்சாந்தும் 298

72.10. அங்கணத்துள் உக்க அமிழ்து 301

73. அவையஞ்சாமை 306

73.1. வகையறிந்து வல்லவை 307
73.2. கற்றாருட் கற்றார் 310
73.3. பகையகத்துச் சாவார் 311
73.4. கற்றார்முன் கற்ற 313
73.5. ஆற்றின் அளவறிந்து 315
73.6. வாளொடென் வன்கண்ணர் 320
73.7. பகையகத்துப் பேடிகை 322
73.8. பல்லவை கற்றும் 325
73.9. கல்லாதவறிற் கடை 326
73.10. ஊர்எனினும் இல்லாரொடு 329

74. நாடு 332

74.1. தள்ளா விளையுளும் 334
74.2. பெரும்பொருளால் 338
74.3. பொறையொருங்கு 343
74.4. உறுபசியும் ஓவாப் பிணியும் 346
74.5. பல்குழுவும் பாழ்செய்யும் 348
74.6. கேடறியாக் கெட்டவிடத்தும் 353
74.7. இருபுனலும் வாய்ந்த 357
74.8. பிணியின்மை செல்வம் 361
74.9. நாடென்ப நாடா 364
74.10. ஆங்கமை வெய்தியக்கண் 367

75. அரண் 370

75.1. ஆற்று பவர்க்கும் 372
75.2. மணிநீரும் மண்ணும் 375
75.3. உயர்வகலம் திண்மை 379
75.4. சிறுகாப்பின் பேரிடத்தாகி 383
75.5. கொளற்கரிதாய்க் கொண்ட 385
75.6. எல்லாப் பொருளும் 394
75.7. முற்றியும் முற்றாது 392
75.8. முற்றாற்றி முற்றி 363
7ɔ.9. முனைமுகத்து மாற்றலர் 398
75.10. எனைமாட்சித் தாகிய 400

76. பொருள் செயல்வகை 404
76. 1, பொருளல்லவரை 406
76. 2. இல்லாரை எல்லாரும் 409
76. 3. பொருளென்னும் பொய்யா 413
76. 4, அறனீனும் இன்பமும் 417
76. 5. அருளொடும் அன்பொடும் 422
76. 6. உறுபொருளும் உல்குபொருளும் 424
76. 7. அருளென்னும் அன்பீன் 429
76. 8. குன்றேறி யானைப்போர் 434
76. 9. செய்க பொருளை 431
76. 10. ஒண்பொருண் காழ்ப்ப 438

77. படைமாட்சி 442
77. 1. உறுப்பமைந் தூறஞ்சா 444
77. 2. உலைவிடத் தூறஞ்சா 447
77. 3. ஒலித்தக்கால் என்னாம் 451
77. 4. அழிவின் றறைபோகா 455
77. 5. கூற்றுடன்று மேல்வரினும் 458
77.6. மறமானம் மாண்டவழி 462
77.7. தார்தாங்கிச் செல்வது 465
77.8. அடற்றகையும் ஆற்றலும் 469
77.9. சிறுமையும் செல்லா 473
77.10. நிலைமக்கள் சால 476

78. படைச்செருக்கு 481
78.1. என்னைமுன் நில்லன்மின் 482
78.2. கானமுயல் எய்த 487
78.3. பேராண்மை என்பது 491
78.4. கைவேல் களிற்றொடு 495
78.5. விழித்தகண் வேல்கொண்டு 499
78.6. விழுப்புண்படாதநாள் 503
78.7. சுழலும் இசைவேண்டி 506
78.8. உறினுயிர் அஞ்சா 509
78.9. இழைத்த திகவாமை 512
78.10. புரந்தார் கண்ணீர் 514

நூலோதி 521

முதற் குறிப்பகராதி 527

# அணிந்துரை

''என்றும் புலரா (து) யாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்-குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போல்
மண்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்!''

என்பது 'திருவள்ளுவமாலை' கூறும் திருப்பாட்டு! வள்ளுவரால் வான்புகழ் கொண்டது வண்டமிழ்நாடு! வள்ளுவரைப்பற்றி மேலைநாட்டறிஞர் பலரும் புகழ்ந்து போற்றுவர்! ''கிரேக்க மக்களிடம் ஹோமரது நூல் விளங்கியது போன்று, தமிழர்களிடம் 'திருக்குறள்' இலக்கியக் கருவூலமாகவும், கவிதையை வெளி-யிடும் களஞ்சியமாகவும் மிக உயர்ந்த சொல்திறனும், ஒழுக்க நெறியும் காட்டும் தனிசிறந்த எடுத்துக் காட்டு நூலாகவும் இருந்துவரும் உண்மைக்கு ஐயம் இல்லை!'' என்பது 'சார்லஸ் ஈ. கவர்' (Charles E. Gover) என்னும் மேலைநாட்டு அறிஞர் கூற்று.

இதற்கு பெருமைபெறு திருக்குறளின் ஆழ்ந்த - உயர்ந்த கருத்துக்களை உலகம் அறிந்தின்புறவேண்டுமென்னும் நோக்கத்தால், பேரறிஞர் அண்ணா அவர்களால், 1968 - இல், சென்னை, மாநகரில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ்மாநாட்டின்போது 'திருக்குறள் அறக்கட்டளை' நிறுவப் பெற்றது அதன் பயனாகச் சென்னை, அண்ணாமலை, மதுரை, இம்மூன்று பல்கலைக் கழகங்களிலும் தமிழக அரசால் 'திருக் குறள் ஆய்வகங்கள்' நிறுவப்பெற்றன.

இம் மதுரை-காமராசர் பல்கலைக்கழகத்தில் உள்ள 'திருக் குறள் ஆய்வகம்' இதுவரை, திருக்குறள் தொடர்பான 15 நூல் களை வெளியிட்டுள்ளது.

இப்போது வெளிவரும் 'திருக்குறள் உரைக் களஞ்சியம் எட்டுத் தொகுதிகள் கொண்டது; இவற்றுள் ஐந்து தொகுதிகள்

முன்பே வெளிவந்து விட்டன. "திருக்குறள் உரைக்களஞ்சியம்—அங்கவியல் (பகுதி-1)" எனும் இந்நூல் இவ்வரிசையில் ஆறாவது தொகுதியாகும்.

இத் தொகுதியில் 'அமைச்சு' (அதி. 64) முதல் 'படைச் செருக்கு' (அதி: 78) ஈறாகப் பதினைந்து அதிகாரங்கள்—அஃதாவது 150 குறட்பாக்களுக்கான விரிவான விளக்கஉரை இடம்பெற்றுள்ளது.

இதனைத் தமிழுலகுக்கு வழங்கியவர் 'பத்மபூஷண்' என்றும், 'மகாவித்துவான்' என்றும் போற்றப்பட்ட முதுபெரும் புலவர் டாக்டர் ச. தண்டபாணி தேசிகர் ஆவர்! தேசிகர் நுண்மான் நுழைபுலமிக்க தண்டமிழ்ச் சான்றோர்; தமிழ்மொழியிலன்றி வடமொழியிலும் புலமைபெற்றவர்; அடக்கமே உருவானவர்; ஆழ்ந்த சமயப்பற்றுங் கொண்டவர்; அரிய நூல்கள் பலவற்றைத் தந்தவர்! இத்தகு பெரியாரை, இப் பல்கலைக் கழகம், ஆராய்ச்சி ஆசிரியராகக் கொண்டிருந்தது பேறாகும்! 'திருக்குறள் உரைக் களஞ்சிய'த் தொகுதிகளைப் படித்தாலே, இப் பெரியாரின் பெரும்புலமை புலனாகும்! இவண், இவ் உரைச் சிறப்புக்குச் சான்றாகச் சில குறிப்பிடலாம்:-

திருக்குறளுக்கு 'மணக்குடவர், பரிப்பெருமாள், பரிமேலழகர் முதலான பதின்மர் எழுதிய பழைய உரைகள் உண்டு! இனி, இக்காலத்தே கா. சு. பிள்ளை, வரதராசனார், புலவர் குழந்தை, சி. இலக்குவனார், பாவாணர் எனப் பலரும், குறளுக்கு உரை கண்டுள்ளனர்.

தேசிகர், இவ் 'உரைக் களஞ்சியம்' எனும் பெயருக்கு ஏற்பப் பழைய உரையாசிரியர் கூறும் உரைகளுடன், இக்கால உரையாசிரியர் உரைப்பனவும் ஒருங்கு தொகுத்துத் தருவதோடு, இவற்றில் பொருந்தும் உரை இது, பொருந்தா உரை இது என்றும் எடுத்து விளக்குகின்றார்!

"சொல்வன்மை, அமைச்சருக்கு இன்றியமையாதது என்கின்ற மணக்குடவர், பரிப்பெருமாள் உரைகளிலும் தாம் கருதிய வினை முடியுமாற்றான் சொற்களைச் சொல்லுதல், என்ற பரிமேலழகர் உரை சிறந்தது. கா. சு. வும் இதனையே கொண்டுரைப்பர். - 'சொல்வன்மை-சொல்லுதலின் வல்லமையும், வன்மையாகச் சொல்லுதலும் இருபிரிவானது,. என்று கூறும் வரதராசர் உரை

சிறந்தது. இதனுள், வன்மையாகச் சொல்லுதலை ஆசிரியரே 634ஆம் குறளில், 'ஒரு தலையாச் சொல்லல் வல்லது அமைச்சு' என்றமையான், ஈண்டும் அதனை இணைக்க வேண்டுமா? என்பது சிந்தித்தற்குரியது!" (ப.46)

— இவ்வாறு தெளிவுபட விளக்கும் தேசிகர், "கொளற்கரிதாய்' (குறள் : 745)

எனும் குறளுக்குக் காளிங்கரும் பரிப்பெருமாளும் கூறும் உரைகளை மறுத்து எழுதும் குறிப்புரை சிந்தனைக்குரியது :

"இவற்றுள் பூவும் வெற்றிலையும் பர்த்தையரும் உடையதாய் என்ற காளிங்கர், பரிப்பெருமாள் உரைகள் சுக்கிர நீதி போன்ற நூல்களின் கருத்தைத் தழுவி எழுந்தவை. தமிழ்நூல்களில் பகைமேற்சென்றோன் பாசறைக் கண்ணிருந்து வருந்துதலின்றிப் போகத்தை நினைக்கவும் மாட்டான் ஆதலின் இது பின்னோர் வழக்கம் என்க !" (ப. 388)

நூலில் ஆங்காங்கே அருஞ்சொற்களுக்குரிய பொருளும் அடிக்குறிப்பாகத் தரப்படுவது சிறப்பு. இன்னும் பல உள !

தேசிகரின் மறைவுக்குப்பின் இத்தொகுதி, அச்சாகி, நூல் வடிவில் வருகின்றது. இந்நூல் வெளிவரத்துணை புரிந்த திருக்குறள் ஆய்வகத் தலைவர் டாக்டர் சலஜா கோபிநாத், நம் பாராட்டுக்குரியர் !

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் 'பதிப்புத்துறை' வாயிலாக வெளிவரும் அரிய பல நூல்களில் இத் 'திருக்குறள் உரைக்களஞ்சியம் - அங்கவியல் (பகுதி 1)' என்பதும் ஒன்று. எஞ்சிய தொகுதிகளும் விரைவில் வெளிவரும்.

தமிழ்ப்பெருமக்கள் இத்தகு சிறந்த நூலினை வாங்கிப் பயன்பெற வேண்டும் என்பது எனது விருப்பம் !

பேராசிரியர் கு. ஆளுடைய பிள்ளை,
துணைவேந்தர்,
மதுரை-காமராசர் பல்கலைக்கழகம்.

# முன்னுரை

இப்பணி வளர்ந்து மலர ஏடுகள், பழைய கட்டுரைத்தாள்கள், ஆய்வுமலர்கள் தந்துதவிய பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரித் த- ளாளர் சிவத்திரு இராமசாமி அடியார் அவர்களுக் கும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி செங்கோட்டுவேலன் அவர்களுக்கும், செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, வள்ளுவர், குற ளியம் போன்ற தாள்களின் தாளாளர்கள் பலருக்கும் என்னுடைய பணிவான நன்றி என்றும் உரியதாகும்.

இப்பணியில் என்னை ஈடுபடுத்திய முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சை.வே.சிட்டிபாபு அவர்களுக்கும்,வழிவழித் துணை வேந்தர்களான டாக்டர் வ.சுப.மாணிக்கம் அவர்களுக்கும், டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்கட்கும், பேராசிரியர் ஜா. இராமச்சந்திரன் அவர்களுக்கும், இந்நாள் துணைவேந்தர் விஞ்ஞானக் கலைவேந்தர், கல்வியுலகிலும் சமுதாய சமயப் பணிகளிலும் பேராதரவு காட்டிவரும் டாக்டர்சீனி கிருட்டிணசாமி அவர்களுக்கும் மனநிறைந்த நன்றி. வழக்கம்போல் உரைக்களஞ் சியம் சிறப்புடன் வரப் பல்லாற்றானும் வழிதுறைகளை வகுத்துக் கொடுத்து ஊக்கம் தந்துதவும் தமிழ்த் துறைத் தலைவர் பேரா சிரியர் தமிழண்ணல் அவர்களுக்கும் நன்றி. உற்றுழி உதவியுறு துணையாக இருக்கும் திருக்குறள் ஆய்வுத் துறைத் தலைவர் டாக்டர் தி.முருகரத்தனம் அவர்களுக்கும் நன்றி. அயரா அன்போடு படியெடுத்தும், ஒப்பு நோக்கியும், மேற்கோட்பகுதி ஒப்புமைப்பகுதிகளை மூலநூலோடு ஒப்பு நோக்கிச் செப்பனிட்டும், தந்த ஆய்வுத் துறை உதவியாளர் திருமதி சலசா கோபிநாத், எம்.ஏ., அவர்களுடைய முழுநேர உழைப்பும் உதவியும் பாராட் டிற்குரியன. இவர் மேன்மேலும் இத்தகைய பணிகளில் வளர்ந்து தமிழன்னையின் அருளுக்கு இலக்காகி வாழ்வாராக.

பல ஆண்டு உழைத்த உழைப்பும், அமைப்பாளர் குழு தந்தி ஆணையின் வண்ணம் உருவாக்கிய அருமையும், அவ்வப்போது செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில், குறளியம், பல ஆண்டுமலர்கள், விழாமலர்களில் வந்த கட்டுரைகள் இவற்றான் களஞ்சியம் நிரம்பி வழிகிறது. அறிவுப்பசியைப் போக்கி ஆய்வு வன்மையை அளிக்கிறது. இதில் நிறை குறை கண்டு காட்டுபவர் களே இந்நூலை ஊன்றிப் படித்தவர்கள்; பணியாளன் அறிவைப் பதஞ்செய்பவர்கள்; ஆகையால், குணங்கூறிப் பாராட்டுவானினும், குறை கூறி என்னை வளர்ப்பவர்களே 'எண்ணின் எனக்கினிய' ராவார். ஆதலால் அவர்கள் உதவி இப்பதிப்பு முடியும் வரையில் எனக்கு மிகத்தேவை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்றும் செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருள் துணை நிற்கும். விரைவில் உரைக்களஞ்சியம் முற்றுப் பெற்று நிறைவு விழா பெறும் என்று எதிர்நோக்கி அங்கயற் கண்ணியம்மையின் திருவடிகளைப் போற்றி அமைகின்றேன்.

இங்ஙனம்
ச. தண்டபாணி தேசிகர்

குறிப்பு : 'அறத்துப்பால் — துறவறவியலி'ல் உள்ள முகவுரைப் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டது.

# பதிப்புரை

திருக்குறள் என்னும் பெட்டகத்தினை எத்தனை முறை புரட்டினாலும் ஒவ்வொரு முறையும் புதிய கருத்துக்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. இந்நூல் நயத்தினைத் தத்தம் அறிவால் அறிந்து அக்காலம் முதல் இக்காலம் வரை உரைகள் எழுந்து கொண்டே உள்ளன. அவ்வுரைகளுள் சிறந்ததும் தகுந்ததும் ஏற்றதும் காணவேண்டிய தேவை உண்டு. இப்பணியை மேற்கொண்டவர் முதுபெரும் புலவர் பத்மபூஷண் மகாவித்வான் டாக்டர் ச. தண்டபாணி தேசிகர். அவர் திருக்குறள் உரைக்களஞ்சியம் என்னும் தலைப்பில் எட்டுத் தொகுதிகளை வழங்கியுள்ளார்.

மகாவித்வான் தண்டபாணிதேசிகருக்கு உதவியாக அவருடன் முழுநேரம் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. தொடக்கத்தில் உள்ளூர ஒரு பயம். அவருடைய புலமையைக் கண்டு ஆச்சரியமடைந்த எனக்கு ஆசானாகவும் தந்தையுமாகவுமே அவர்மாறி என் பணிகளைச் செவ்வனே செய்வதற்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்தார் என்றே கூறலாம். அத்தகைய பெரியாருடன் இணைந்து பணியாற்றியது என் முன் தவப் பயன் என்றே கருதவேண்டியுள்ளது.

மேலும் இத்திருக்குறள் பணி மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் தொடங்குவதற்குக் காரணமாக இருந்தவர் திருக்குறள் துறையின் தலைவராக விளங்கிய டாக்டர் தி. முருகரத்தனம், அவர்கள் திருக்குறளில் பாடவேறுபாடுகள் பொருள் காணலில் சிக்கல்கள் வள்ளுவர் கொள்கை அறிதலில் ஐயப்பாடுகள் நேர்ந்த போது ஐயாவுடன் கலந்து பணி செம்மையுற உதவிசெய்தார்.

இந்நூல், உரைக்கொத்து (காசிமடம்), உரைவளம் (ச. தண்டபாணி தேசிகர்), உரைவேற்றுமை (கோ. சாரங்கபாணி) என்னும் நூல்களின் வரிசையில் வந்தது என்றாலும் தற்கால உரைகளையும் சேர்த்து நயம் காண்பதும் முற்கால உரைகளுடன் ஒத்துப்போகிறதா மாறுபடுகிறதா தற்காலத்திற்

கேற்றவாறு உரைகள் வகுக்கப்பட்டுள்ளனவா என்பதைத் தொகுப்பும் குறிப்பும் பகுதியில் தேசிகரின் விளக்கத்தால் அறியலாம்.

உரைப்பகுதியில் மணக்குடவர், பரிதியார், காளிங்கர் பரிப்பெருமாள் பரிமேலழகர் உரைகளுடன் பண்டிதமணி கவிராசர் உரையும் அடையாறு நூலகத்தார் வெளியிட்ட பழைய உரையும் தரப்பட்டுள்ளன.

ஒப்புமைப் பகுதியில் சங்க இலக்கியம், இடைக்கால இலக்கியம் ஆகியவற்றிலிருந்து ஒப்புநோக்கிக் குறட்பாக்களுடன் தொடர்புடைய பாடல்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், இலக்கணக் கொத்து, நேமிநாதம் முதலிய இலக்கண நூல்களுக்கு உரை வரைந்த உரையாசிரியர்கள் தம் உரைகளுக்கு ஏற்பச் சான்று காட்டி குறட்பாக்களை எடுத்தாண்டுள்ளனர். அவை மேற்கோள் பகுதியில் இடம் பெற்றுள்ளன.

தற்போது இத்தொகுதியில் திருக்குறள் உரைக்களஞ்சியம் அங்கவியலின் 15 அதிகாரங்கள் (அமைச்சு முதல் படைச்செருக்கு முடிய) பகுதி 1 என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது. இதன் எஞ்சிய பகுதியும் (அங்கவியல்-பகுதி 2 என்ற தலைப்பிலும்) ஒழிபியலும் அச்சில் உள்ளன.

நம் பல்கலைக்கழகத்தின் வழித் தமிழ்ச்செம்மல் பட்டம் பெற்றார் தேசிகர். அவர் இறுதிக்காலமும் நெருங்க தம் உழைப்பு தமிழ் உலகிற்கு வெளிப்படுத்தும்முகத்தான் பலவாறாக அலைந்-தார். ஆயினும் அவர் உள்ளத்தின் வேகம் யார்க்கும் இல்லை என்றளவில் அச்சுப்பணி அவர் மறைவிற்குப் பின்னே தற்போது முடியும் தறுவாயில் இருக்கிறது.

இந்நூலின்வழி வள்ளுவர் வழங்கிய குறட்பாக்களுக்கு உரைவகுத்த அன்றைய இன்றைய உரையாசிரியர் புலமையை மட்டுமல்லாது தேசிகரின் இலக்கண இலக்கியப் புலமையையும் வடமொழி அறிவையும் அறிய முடிகிறது. முப்பாலில் மூழ்கி முத்து எடுக்க விரும்புவார்க்கு இந்நூல் வழிகாட்டி மட்டுமல்ல; உற்ற உறுதுணையும் ஆகும்.

தேசிகர் அவர்களின் மறைவுக்குப்பின் பொருட்பால் —அரசியல், காமத்துப்பால் ஆகிய இரண்டு தொகுதிகள் வெளி-வந்துள்ளன. தற்போது இத்தொகுதி வெளிவருகிறது. இப் பணியை மேற்கொள்வதற்கு எனக்குத் துணிவும் ஆற்றலும் தந்த அனைவருக்கும் என் நன்றி.

இந்நூலை விரைவில் செம்மையாக அச்சிட்டுத் தந்த தி முல்லை அச்சகத்தார் நன்றிக்கும் போற்றுதலுக்கும் உரியவராவர்.

நம் பல்கலைக்கழக முன்னைப் பதிப்பாளர் டாக்டர் விநாயக மூர்த்தி, பதிப்புத்துறையினர் இந்நூலின் அச்சுப்பணி நிறைவேற வழிவகுத்தனர், அவர்களுக்கும் பதிப்பாளர் டாக்டர் ம. திருமலை அவர்கட்கும் என் நன்றி உரியதாகுக.

*சலஜா கோபிநாத்*
தலைவர் (பொறுப்பு)
திருக்குறள் ஆய்வகம்

மதுரை - 21
நாள்: 5 - 12 - 1995

# சுருக்க விளக்கம்

அ.) ஆசிரியர்கள்

| | |
|---|---|
| இராம. | இராமலிங்கம்பிள்ளை |
| இளம். | இளம்பூரணர் |
| கவிராசர். | கவிராசபண்டிதர் |
| கா.சு. | கா. சுப்ரமணியபிள்ளை |
| காரி. | காரி ரத்னக்கவிராயர் |
| காளி. | காளிங்கர் |
| குண. | குணவீர பண்டிதர் |
| கோ.வ. | கோ. வடிவேலு செட்டியார் |
| சங்கர. | சங்கரநமச்சிவாயர் |
| சபாபதி, ஈ. சபாபதி. | ஈக்காடு சபாபதி முதலியார் |
| சாமி, சாமி.சி. | சாமி.சிதம்பரனார் |
| சி.இ. | சி இலக்குவனார் |
| சிவஞான. | சிவஞானசுவாமிகள் |
| சுப்பிர. | சுப்பிரமணிய தீட்சிதர் |
| சுவாமி. | சுவாமிநாத தேசிகர் |
| சேனா. | சேனாவரையர் |
| சொக்கப். | சொக்கப்ப நாவலர் |
| தெய்வச். | தெய்வச்சிலையார் |
| தேவநேயர். | தேவநேயப் பாவாணர் |
| ந.சி கந். | ந.சி. கந்தையாபிள்ளை |
| நச்சி. | நச்சினார்க்கினியர் |
| பரிதி. | பரிதியார் |
| பரிப். | பரிப்பெருமாள் |
| பரிமேல். | பரிமேலழகர் |
| பெருந். | பெருந்தேவனார் |
| பேரா. | பேராசிரியர் |
| மணக். | மணக்குடவர் |
| மயிலை. | மயிலைநாதர் |
| மயிலை சிவ. | மயிலை சிவமுத்து |
| மு.கோ. | மு. கோவிந்தசாமி |
| மு.ரா.அரு. | மு. ரா. அருணாசலக் கவிராயர் |
| மு.ரா.கந். | மு.ரா. கந்தசாமி |
| மு.வ. | மு. வரதராசனார் |
| வ.சுப.மா. | வ.சுப. மாணிக்கம் |

| | |
|---|---|
| வரத , ஜி.வரத. | ஜி. வரதராஜபிள்ளை |
| வை.மு கோ. | வை. மு. கோபாலகிருஷ்ண மாச்சார்யார் |

ஆ) நூல்கள் :

| | |
|---|---|
| அகநா. | அகநானூறு |
| அப்பர். | அப்பர் தேவாரம் |
| அதிகை. | அதிகை வீரட்டானம் |
| கருகா. | கருகாவூர் |
| அறநெறிச். | அறநெறிச்சாரம் |
| ஆத்தி. | ஆத்திச்சூடி |
| இ. கொ. | இலக்கணக் கொத்து |
| இரங். முதுமொழி | இரங்கேசர்முதுமொழி வெண்பா |
| இலக். | இலக்கணவிளக்கம் |
| இலக்.சூறா. | இலக்கணவிளக்கச் சூறாவளி |
| இன்னா. | இன்னாநாற்பது |
| இனிய. | இனியவை நாற்பது |
| உத. | உதயணகுமாரகாவியம் |
| ஐங். | ஐங்குறுநூறு |
| கந்த. | கந்தபுராணம் |
| அசுரேந். | அசுரேந்திரன் மகேந்திரஞ் செல்லுதல் |
| சூரனமைச். | சூரனமைச்சியல் |
| மாயை. | மாயையின் அஸ்திரமும் வேலாயுதத்தின் ஆற்றல் |
| கம்ப. | கம்பராமாயணம் |
| எதிர்கோட். | எதிர்கோட் படலம் |
| காட்சி. | காட்சிப் படலம் |
| கிட்கிந்தா. | கிட்கிந்தா காண்டம் |
| சம்பா. | சம்பாதிப் படலம் |
| நகர. | நகரப் படலம் |
| படைத்தலை. | படைத்தலைவர் வதைப்படலம் |
| மந்தரை. | மந்தரை சூழ்ச்சிப் படலம் |
| கலி. | கலித்தொகை |
| காஞ்சி. | காஞ்சிபுராணம் |
| கார். | கார் நாற்பது |
| குண்டல. | குண்டலகேசி |

| | |
|---|---|
| குறள். | திருக்குறள் |
| கொன்றை. | கொன்றை வேந்தன் |
| கௌடீ. | கௌடீலியம் |
| சம்பந்தர். | சம்பந்தர் தேவாரம் |
| ஆக்கூர். | ஆக்கூர்த்தான் |
| ஆமாத்தூர் | ஆமாத்தூர் |
| தூங்கானை. | தூங்கானை மாடம் |
| பேணு பெருந். | பேணு பெருந்துறை |
| வீழிமிழலை. | வீழிமிழலை |
| சரபேந்திர. | சரபேந்திரக் குறவஞ்சி |
| சிலம்பு | சிலப்பதிகாரம் |
| கனா. | கனாத்திறம் உரைத்த காதை |
| மங்கல. | மங்கல வாழ்த்துக் காதை |
| வழக்கு. | வழக்குரை காதை |
| சிவபோ. | சிவபோதகம் |
| சிறுபஞ்ச. | சிறுபஞ்சமூலம் |
| சிறுபாணா. | சிறுபாணாற்றுப்படை |
| சீவக. | சீவக சிந்தாமணி |
| சுக்கிர. | சுக்கிர நீதி |
| சுந்தரர். | சுந்தரர் தேவாரம் |
| எதிர்கொ. | எதிர்கொள் பாடி |
| சூளா. | சூளாமணி |
| மந்திர. | மந்திரசாலைச் சருக்கம் |
| தக்க. உரை. | தக்கயாகப்பரணி உரை |
| தகடூர். | தகடூர் யாத்திரை |
| தஞ்சை. | தஞ்சைவாணன் கோவை |
| தண்டி. | தண்டியலங்காரம் |
| தணிகை. | தணிகைப்புராணம் |
| தமிழ்விடு., தமிழ். | தமிழ்விடு தூது |
| திரி. | திரிகடுகம் |
| திருக்கோவை., கோவை. | திருக்கோவையார் |
| திருநா. | திருநாளைப்போவார் புராணம் |
| நமச்சி. | நமச்சிவாயர் உரை |
| திருநாவுக்கரசர் | திருநாவுக்கரசர் தேவாரம் |
| திருவேதி. | திருவேதிகுடி |

| | |
|---|---|
| திருமந். | திருமந்திரம் |
| திருவா. | திருவாய்மொழி |
| திருவாச. | திருவாசகம் |
| திருவிளை. | திருவிளையாடற்புராணம் |
| தடா. அவ. | தடாதகைபிராட்டியார் திரு அவதாரப் படம் |
| தருமி. | தருமிக்குப் பொற்கிழியளித்த படலம் |
| பன்றி மந்திரி. | பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம் |
| வாத உபதே. | வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம் |
| பழியஞ்சின. | பழியஞ்சின படலம் |
| திருவெங். | திருவெங்கைக் கோவை |
| தொல். | தொல்காப்பியம் |
| செய். | செய்யுளியல் |
| சொல். | சொல்லதிகாரம் |
| பொருள். | பொருளதிகாரம் |
| நாலடி. | நாலடியார் |
| நான்மணி. | நான்மணிக்கடிகை |
| நீதிநெறி. | நீதிநெறி விளக்கம் |
| நீல. | நீலகேசி |
| நேமி. | நேமிநாதம் |
| நற். | நற்றிணை |
| நன். | நன்னூல் |
| பதிற்று. | பதிற்றுப்பத்து |
| பரமத பானு. | பரமத திமிர பானு |
| பழ. நா. | பழமொழி நானூறு |
| பா. வெ. | பாரத வெண்பா |
| பாக. | பாகவதம் |
| பிரபு. | பிரபுலிங்க லீலை |
| அக்கமா. | அக்கமாதேவி உற்பத்தி கதி |
| துறவு. | அக்கமாதேவி துறவு கதி |
| பூசை. | மாயை பூசை கதி |
| முனிவரர். | முனிவரர் கதி |
| வசவன். | வசவண்ணர் கதி |
| பிரமோத். | பிரமோத்தர காண்டம் |

| | |
|---|---|
| பு.வெ. | புறப்பொருள் வெண்பாமாலை |
| புறம். | புறநானூறு |
| பெரிய. | பெரியபுராணம் |
| மூர்த்தி. | மூர்த்தி நாயனார் புராணம் |
| திருவாரூர். | திருவாரூர்த் திருநகரச் சிறப்பு |
| பெரிய திரு. | பெரிய திருமொழி |
| பெருங். | பெருங்கதை |
| பொருந. | பொருநராற்றுப்படை |
| மணி. | மணிமேகலை |
| சிறைக்கோட். | சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆகிய காதை |
| மதுரைக். | மதுரைக்காஞ்சி |
| மலைபடு. | மலைபடுகடாம் |
| மனு. | மனுதர்மசாத்திரம் |
| மனோன். | மனோன்மணீயம் |
| மாற. | மாறனலங்காரம் |
| முத்திநிச். | முத்தி நிச்சயப் பேருரை |
| முதுமொழிக். | முதுமொழிக்காஞ்சி |
| யசோதர. | யசோதர காவியம் |
| யா.கா. | யாப்பருங்கலக்காரிகை |
| யா.வி. | யாப்பருங்கல விருத்தி |
| வளை. | வளையாபதி |
| வாக்கு. | வாக்குண்டாம் |
| விநா. | விநாயக புராணம் |
| விருத். | விருத்தியுரை |
| வில்லி. பாரதம் | வில்லிபுத்தூரார் பாரதம் |
| கிருட். | கிருட்டிணன் தூதுச் சருக்கம் |
| சூது. | சூது போர்ச் சருக்கம் |
| நச்சுப். | நச்சுப் பொய்கைச் சருக்கம் |
| நிரை. | நிரை மீட்சிச் சருக்கம் |
| வீர. | வீரசோழியம் |

இ) பிற:

| | |
|---|---|
| அத். | அத்யாயம் |
| அதி. | அதிகாரம் |
| சூ. | சூத்திரம் |
| சுலோ. | சுலோகம் |
| திருவே.ப.க. | திருவேங்கடவன்பல்கலைக்கழகம் |

# பத்மபூஷண் மகாவித்துவான் முதுமுனைவர்

# ச. தண்டபாணி தேசிகர்

தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறிந்த பெரியவர் அறிஞர் திரு ச. தண்டபாணி தேசிகர். படித்துப் பட்டம் பெற்றது முதல் தம் வாழ்நாள் இறுதிவரை தமிழுக்காகவே தொண்டு செய்து வாழ்ந்த இவர் தம் வரலாறு, வளரும் தமிழ் மாணவர்களுக்குக் கலங்கரை விளக்காக அமையும்.

அரிய பல தமிழ்த்தொண்டுகள் ஆற்றி, தமிழுலகில் அழியா இடம் பெற்ற இவர் அம்பலவாணர் ஆடி மகிழும் செம் பொன் அம்பலமான சிதம்பரத்தில் வானூர் திரு. ச. சட்டையப்ப தேசிகர் — திருமதி. பாலாம்பா ஆகியோர்க்குத் தலைமகனாய் 1905 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 30 ஆம் நாள் பிறந்தார்.

தேசிகர் திருவையாறு அரசர் கல்லூரியில் வடமொழி, தமிழ் ஆகிய இருமொழிகளையும் கற்றுச் சமப்பிரதான வித்து வான் பட்டம் பெற்றார். பின்னர் இன்றைய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதற்கல்லூரியாகிய மீனாட்சி கல்லூரி யில் தமிழ் வித்துவான் வகுப்பில் சேர்ந்து பயின்றார். புகழ் பெற்ற தமிழறிஞர்களாக விளங்கிய திரு ச. பொன்னோதுவா மூர்த்திகள், யாழ்ப்பாணம் திரு. ம. க. வேற்பிள்ளை, டாகடர் உ. வே. சாமிநாத ஐயர் ஆகியோரிடம் கல்வி கற்று மாநில முதல் வராகத் தேர்ச்சி பெற்று வித்துவான் பட்டம் எய்தினார்.

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர் கள் தமிழ் கற்பித்ததோடு ஓலைச்சுவடி படித்தல், தமிழ் நூல் கள் பதிப்பித்தல் ஆகியவற்றிலும் இவருக்குச்சிறப்புப் பயிற்சி அளித்தார்.

தேசிகர் தாம் பயின்ற மீனாட்சி தமிழ்க்கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகத் தமிழ்ப்பணி தொடங்கினார். 1928 முதல் 1930 வரை இங்குப் பணிபுரிந்தார். 1930 முதல் 1944வரை நாகை, திருவாரூர், குடவாயில் ஆகிய இடங்களில் உயர்நிலைப் பள்ளி களில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

தேசிகரின் கல்வியறிவுச் சிறப்பை உணர்ந்த திருப்பனந் தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் தமது செந்தமிழ்க் கல்லூரியில் நியமித்துப் பணி

கொண்டார்கள். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இவரை ஆதினக் கீழ்த்திசைக் கல்லூரியில் துணை முதல்வராக்கி இவரது தமிழ்த்தொண்டுகள் பலவற்றுக்கும்துணை புரிந்துதவினார்கள்.

தருமை ஆதீனக் கல்லூரியில் இவர் பணியாற்றியபோது உருவான அரியபடைப்புத்தான் திருக்குறள் உரைவளம். திருக்குறள் உரைக்களஞ்சியத்திற்கு முன்னோடியாக விளங்கும் உரைவளம் தேசிகருக்குப் பெயரும் புகழும் சேர்த்தது. தருமையா தீனத்தில் இவர் பணியாற்றியபோது திருஞானசம்பந்தர் தேவாரம் உரைக் குறிப்போடு வெளிவந்தது. திருவாசகம் குறிப்புரையோடு பதிப்பிக்கப் பெற்றது. பனசையிலும் தருமை யிலும் 1944 முதல் 1954 வரை பத்தாண்டுகள் இவர் தமிழ்ப்பணி புரிந்தார்.

தேசிகர்,1954 முதல் 1972 வரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகப் பணியேற்றார். அந்நாளில் விளங்கிய திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நி தானம் அவர்கள் இவரை ஆதீன மகாவித்துவானாக்கிச் சிறப் பித்தார்கள். அவ்வாதீனத்தின் சார்பில் கணபதி, முருகன் ஆடல் வல்லான், திருவாசகப்பேருரை, திருமந்திர விளக்கவுரை. சங்க இலக்கியச் சொற்களஞ்சியம் நன் னூல் விருத்தியுரை, விளக்கம், தொல்காப்பியச் சூத்திர விருத்தி விளக்கம் முதலிய அரிய பல நூல்களை இவர் எழுதி வெளியிட்டார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வு பெற்ற பின் இரண்டாண்டுகள் நாகை, கனகசபை தமிழ்க் கல்லூரியில் சிறப்புநிலைப் பேராசிரியராக இவர் விளங்கி மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலேயே திருக்குறள் ஆராய்ச்சித்துறையில் ஆய்வாளராகப் பணி மேற்கொண்டார். வள்ளுவத்தில் மெய்ப்பொருள் சுவடுகள், வள்ளுவரும் கம்பரும் போன்ற பல நூல்களை அப்போது இவர் எழுதினார்.

தேசிகரின் ஆழ்ந்த புலமை நலத்தை அறிந்த மதுரை காமராசர் பல்கலைக்கழகம் திருக்குறள் ஆராய்ச்சித் துறைக்கு

விரிவுரையாளராக இவரைப் பணி கொண்டது. திருக்குறள் உரைக்களஞ்சியப் பணியைச் செம்மையுறச் செய்து அளித்த தேசிகரை இப்பல்கலைக்கழகம் தமிழ்ப் பேரவைச் செம்மல் பட்டம் அளித்துப் பாராட்டியது. களஞ்சியப் பணி முடிந்த நிலையிலும் மீண்டும் இப்பல்கலைக் கழகம் 1987 முதல் உரைக்களஞ்சியம் அச்சாகும் வரை இவர்கட்குப் பணிவாய்ப்பளித்தது.

61 ஆண்டுகளாக ஆசிரியப் பணியிலும் ஆராய்ச்சிப் பணியிலும் ஈடுபட்டுப் பெருமை பெற்ற இவர் குறிப்புரை எழுதியும், பேருரை வரைந்தும், ஆழ்ந்துணர்ந்து ஆராய்ந்தும், ஏடு பெயர்த்தெழுதியும், ஒப்புநோக்கியும், வரலாற்று விளக்கம் செய்தும், விருத்தி உரையாய் விரிவுரை எழுதியும் வெளியிட்ட—பதிப்பித்த நூல்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 150 ஆகும்.

தேசிகரின் புகழ்விரிக்கும் இலக்கியப் படைப்புகளில் திருக்குறள் உரைக்களஞ்சியம், திருக்குறள் உரைவளம், திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் திருமுறை, திருவாசகப் பேருரை, திருமந்திர உரை, நன்னூல் விருத்தியுரை விளக்கம், தொல்காப்பியம் சூத்திர விருத்தி விளக்கம், தாள சாத்திரம், சங்க இலக்கியச் சொற்களஞ்சியம், கணபதி, முருகன், ஆடல் வல்லான் ஆகியன குறிப்பிடத்தக்க சிறப்புடையனவாகும்.

தேசிகர் பெற்றுள்ள பட்டங்களும் விருதுகளும் பலவாகும். தருமை ஆதீனம் தருமை ஆதீன வித்துவான் பட்டமும், பதக்கமும் திருவாவடுதுறை ஆதீனம் மகாவித்துவான் பட்டமும், பதக்கமும் காஞ்சி காமகோடிபீடம் திருமுறை உரைமணி பட்டமும் பதக்கமும், மதுரை ஆதீனம் சித்தாந்தப் பேராசிரியர் பட்டமும், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் முதுபெரும்புலவர் பட்டமும் பதக்கமும், திருச்சிராப்பள்ளிச் சைவசபை உரையாசிரியர் பட்டமும் பதக்கமும், குளித்தலை கா. சு. பிள்ளை நினைவு மன்றம் உரைவளத் திருவள்ளுவர் பட்டமும் அளித்துச் சிறப்பித்தனர். இவ்வாறே தமிழகத்தில் உள்ள பலமன்றங்களும் சங்கங்களும் கழகங்களும் பட்டமளித்தும் பணமுடிப்பு வழங்கியும் பொன்னாடைகள் போர்த்தியும் இவரைச் சிறப்பித்தன. இலங்கைவாழ் மக்கள்

கண்டியில் நடைபெற்ற புத்தர் 1500 வது ஆண்டு விழாவில் இவருக்கு உரைவளவேந்தர் என்ற பட்டமும், பொன்னாடையும் பண முடிப்பும் அளித்துச் சிறப்பித்தனர்.

இவரது பெருமையைப் பாராட்டித் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் முதுமுனைவர் (D. Lit. 1984) என்னும் பட்டம் அளித்துச் சிறப்பித்தது.

தமிழக அரசு பொங்கல் விழாத் திருவள்ளுவர் திருநாளில் (15-1-1988) ரூ. 10,000/- அளித்துப் பெருமை செய்தது.

1989 ஆகஸ்டு திங்கள் 5 ஆம் நாளன்று சென்னையில் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அறக்கட்டளையின் சார்பில் ராஜா சர் முத்தையா செட்டியார் பிறந்தநாள் விழாவில் டாக்டர் மு. அ. மு. இராமசாமி செட்டியார், தேசிகர் அவர்களை அழைத்து ரூ. 50,000/-மும் வெள்ளித்தட்டும் பொன்னாடையும் வழங்கிச்சிறப்பித்தார்.

1990 ஜனவரி குடியரசு நாளில் இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பாரதத்தில் தலை சிறந்த அறிஞர்கட்கு வழங்கும் பத்மபூஷண் விருது வழங்கி வாழ்த்தினார்.

தேசிகர் தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறையைத் தம் வாழ்விடமாகக் கொண்டிருந்தார். அவர் இல்லம் திருமந்திரம் என்ற பெயரோடு தருமபுரம் சாலையில் திகழ்கிறது.

தேசிகரின் அருமைத் துணைவியார் திருமதி தருமாம்பாள் இவரது தொண்டுகளுக்கெல்லாம் துணை நின்ற பெருமை பெற்றவர். ஆறு பெண்களும் கோச்செங்கணான் என்ற ஒரு மகனும் இவருக்கு மக்கட் செல்வங்களாக அமைந்தனர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்துவந்த இவ்வறிஞர் பெருந்தகை 1990 ஏப்ரல் 25ஆம் நாள் இறைவனடி கூடினார்.

''ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்''

என்ற குறளை உணர்ந்த தேசிகர் பூதவுடல் நீத்துப் புகழுடம்பு கொண்டார்.

# அங்கவியல்

பரிமேல் : இனி முறையானே அரசியல் நடத்துதற்கண் ஒன்றற்கு ஒன்று துணையாய அங்கங்கள் ஆறனது இயல்பு முப்பத்திரண்டு அதிகாரத்தால் கூறுவான் எடுத்துக் கொண்டு அவை ஆறனுள்ளும் ''காவற் சாகாடு உகைத்தற்கண்''[1] அவ்வரசற்கு இணையாய அமைச்சனது இயல்பு பத்து அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி முதற்கண் அமைச்சுக் கூறுகின்றார்.

## 64. அமைச்சு

அதிகாரப் பொருள் :

அ) மணக்.: அமைச்சாவது அமைச்சர் செய்யுந் திறன் கூறுதல். அஃதாவது அது கூறிய அதிகாரம் பத்தினும் முற்பட அமைச்சர்க்கு இன்றியமையாக் குணங்களெல்லாம் ஓரதிகாரத்தானும், வாத மண்டலத்திலிருந்து செய்யவேண்டுவன நான்கதிகாரத்தானும், புற மண்டலத்திற்குப் போம்[2] தூதர் இலக்கணம் ஓரதி காரத்தானும், அவர் செய்யும் திறன் நான்கதிகாரத்தானும் கூறினாரென்று கொள்ளப்படும்.[3] மேல் அரசர் செய்யும் திறன் கூறினார்; இனி ஒரு வினை செய்து[4] முடிக்குங்கால் அமைச்சு வேண்டுதலின் அதன்பின் இது கூறப்பட்டது.

---

1. புறம் 185

2. மறு மண்டலத்திற்குப் போய்பேரூர் ஏட்டுப்பாடம்.

3. கொள்ளப்படும் -- பேரூர் ஏட்டுப் பாடம்.

4. திறன் நான்கினுள் ஒருவினைசெய்து—பேரூர் ஏட்டுப்பாடம்.

ஆ) பரிதி.: அமைச்சாவது மந்திரி லட்சணம் சொல்லுவது எ-று.

இ) பரிப்.: அமைச்சாவது அமைச்சர் செய்யும் திறன் கூறுதல். அஃது யாங்ஙனம் கூறினார் எனின், அது கூறிய அதிகாரம் பத்தினும் முற்பட அமைச்சர்க்கு இன்றியமையாக் குணங்கள் எல்லாம் ஓர் அதிகாரத்தானும், வாத மண்டலத்திலிருந்து செய்ய வேண்டுவன நாலதிகாரத்தானும், புறமண்டலத்தில் போம் தூதர் இலக்கணம் ஓர் அதிகாரத்தானும் அவர் செய்யும் திறன் நான்கு அதிகாரத்தானும் கூறினார் என்று கொள்ளப்படும். மேல் அரசர் செய்யும் திறன் கூறினார். இனி ஒரு வினையைச் செய்து முடிக்குங்கால் அமைச்சர்வேண்டுதலின் அதன் பின் கூறப்பட்டது. அமைச்சாவது—அமைச்சன் இலக்கணம் கூறுதல்.

ஈ) காளி.: இப்படி இயனெறி வேந்தர்க்கு இறைமாட்சி முதலாக இடுக்கண் அழியாமையீறாக இராசதன்மமாகிய நீதிப் பொருளின் இயல்புணர்த்தி; இனி வினை மற்று இதன்பின்னரே அமைச்சியல் பொருள் உணர்த்துகின்றது மேலையதிகாரம்.

உ) பரிமேல்.: அஃதாவது அமைச்சனது தன்மை என்றது அவன்றன் குணங்களையும் செயல்களையும்.

ஊ) கவிராசர்.: அஃதாவது—அரசியல் நடத்தற்கேதுவாகிய அங்கங்களின் இயல்பு முப்பத்திரண்டதிகாரத்தாற் கூறுவான் எடுத்துக்கொண்டு அமைச்சனதியல்பு பத்ததிகாரத்தாற் கூறு-வான் தொடங்கி, முதற்கண் அமைச்சு கூறுகின்றார்.

அஃதாவது—மந்திரியுடைய குணலட்சணங்களைச் சொல்லுகிறது.

ஏ) பழைய 2.: அஃதாவது, அமைச்சனது இயல்பு கூறியது.

மல்லர்: அதாவது பிரதானிக்கத்திலே இருக்கிற மந்திரியின் அந்தஸ்து.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

வரத.: படைகுடி முதலிய ஆறு அங்கங்களைப் பற்றி அங்-கவியலில் கூறுகின்றார். மனிதன் மெய்வாய் முதலிய ஐந்துறுப்-

புக்களாலும் இன்பத் துன்ப நுகர்ச்சிகளைப் பெறுகிறான். அதுபோல அரசன் தன் அங்கங்கள் ஆறாலும் புகழ்ச்சிகளைப் பெறுகிறான். ஆகவே இவற்றை அங்கம் என்றார் ஆசிரியர்.

குழந்தை. : 'அமைச்சியல்' எனப் பெயர் தந்து, அமைச்சரது இலக்கணம், தூதரும் அமைச்சில் அடங்குவர் என்பர். 'அங்கம்' என்பது ஆரிய வழக்குச் சொல்லாதலின் இங்ஙனம் கருதினர் போலும்.

சாமி.சிதம்பரனார் :'அரசனுக்குத் துணையாவாரைப் பற்றிக் கூறும் இயல். அங்கம்—உறுப்பு. துணைவர்கள் அரசனுக்கு அவயவம் போன்றவர்கள்.

இராம. : அரசியல் என்பது அரசனோ குடும்பத்தலைவனோ நேரடியாக நடந்துகொள்ள வேண்டிய மாதிரியைக் கூறியது. இனி, அவர்கட்கு அமைய வேண்டிய ஆலோசனைத் துணை வர்கள், காரியக்காரர்கள் கருவிகள் முதலான உறுப்புக்களைப் பற்றிச்சொல்வது அங்கவியல் என்பர்.

தேவநேயர் : அரசனது கடமை, இலக்கணம், வினைசெய்யும் முறைகளைச் சொல்லியவர், இனி அரசியலின் ஏழுறுப்புக்களின் இலக்கணம் ஒழுகலாறுகளை நாற்பத்தைந்து இலக்கணத்தாற் கூறுவான் தொடங்கி அரசற்கு இன்றியமையாத் துணையான அமைச்சன் இயலையும் செயலையும் பத்ததிகாரத்தான் கூறத்தொடங்கி முதற்கண் அமைச்சியல் கூறுகிறார் என்பர்.

இவ்வுரைகளுள், குழந்தையுரை மட்டும் அங்கஇயலை அமைச்சியல் என முதலதிகாரத்தைக் கொண்டு இயற்பெயரமைக்கிறது. அங்கம் என்ற ஆரியச் சொல்லால் அமைக்க விருப்பின்மையான் என்க.

சுக்கிரநீதி போன்ற சில பொருளியல் நூல்கள் தமிழர் அரசியற் பண்பாடுகளையே கூறுவன என்றும், அவை கி. பி. 10ம் நூற்றாண்டினதென்றும் கா.சு. பிள்ளை சுக்கிரநீதி முகவுரையிற் கூறுவர். அதனை அடியொற்றிப் பார்க்கும்போது அரசியல் ஒருறுப்பி, அதற்குரிய தலை அரசன், ஏனைய அமைச்சு முதலாயின ஏனைய அங்கங்கள். அதனை எண்ணியே சுக்கிரநீதி

யுடையார் அரசியலுக்கு அரசன் முதலாய ஏழுறுப்புக் கூறினர். அது அரசியல் என்ற ஓரியலிலே அரசனியல்பு பத்ததிகாரங்களானும் ஏனைய அங்கங்களின் இயல்புகளை நாற்பத்தைந்து அதிகாரங்களான் உணர்த்துதலின் அரசியலும் உறுப்பியலுமாக இரண்டேயியற்பாகுபாடுடையது என்பர் தேவநேயர்.

பரிமேலழகர் அமைச்சியல் முப்பத்திரண்டு அதிகாரங் களை யுடையது. அதில் முதற்பத்து அதிகாரங்கள் அமைச்சனிலக்கணம் பின்னவை ஏனைய அங்கங்களைப் பற்றியவை என்பர். இராமலிங்கனார், சாமி. சிதம்பரனார் முதலியோரும் அங்ஙனமே.

ஏனையோர் கூறும் இயற்பாகுபாடுகளையும் அதிகார அமைவுமுறைகளையும் பொருட்பால் தொடக்கத்துத் தொகுப்பாசிரியர் குறிப்புட் காட்டினோம்; ஆண்டுக்காண்க.

*64.1. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்*
*அருவினையும் மாண்ட தமைச்சு. (631)*

உரைப்பகுதி :

அ) மணக். : செய்தற்கு அரியவினையும், அதற்காம் கருவியும் அதற்காம் காலமும், அதனை இடையூறுபடாமல் செய்து முடித்தலுமாகிய இந்நான்கும் மாட்சிமைப்பட்டவன் அமைச்சனாவான் எ-று,

செய்தற்கு அரியவினையாவது மறுமண்டலங் கோடல்:[1] கருவியாவது யானை, குதிரை முதலிய படை; காலமாவது நீரும் நிழலுமுள்ள காலம்; செய்தலாவது மடியின்றிச் செய்தல்,

ஆ) பரிதி. : ஆயுதம் முதலானதும், கால நீதியும், செய்யும் முறைமையும், செய்யும் பெருமையும் இந்தவகை உண்டானது அமைச்சு எ—று.

இ) பரிப். : செய்ய வேண்டும் அரிய வினையும் அதற்கு ஆம் கருவியும் அதற்கு ஆம் காலமும் அதனை இடையூறு

1. மறுமண்டலங் கோடல் -- சிறிதென்னும் ஊக்கம் துரப்ப அயல்நாடுகளையும் பிடித்தல்.

படாமல் செய்து முடித்தலும் இந்நான்கும் மாட்சிமைப்பட்டவன் அமைச்சன் ஆவான் எ—று.

செய்தற்கு அரிய வினையாவது — மறுமண்டலம் கோடல்: கருவியாவது-யானை, குதிரை முதலிய படை; காலம் ஆவது நிழலும் நீரும் உள்ள காலம். செய்தலாவது மடியின்றிச் செய்தல்.

ஈ) காளி.: யாதொரு காரியங்கள் இயற்றுதற்கு மற்று அதற்கு அடுத்த கருவிகளும், மற்று அவை செய்தற்கு அடுத்த காலங்களும், தாம் பொருள்களைச் செய்யும் செய்கை வேற்றுமையும், மற்று, அத்தொழில் வேற்றுமையால் செய்யும் அரிய கருமங்களும் ஒருவகைப்பட்ட மாட்சிமைபடத் தெளிந்து அமைந்ததே அமைச்சாவது.

உ) பரிமேல்.: வினைசெய்யுங்கால் அதற்கு வேண்டும் கருவிகளும், அதற்கேற்றகாலமும், அது செய்யுமாறும், அவ்வாற்றின் செய்யப்படும் அவ்வரிய வினைதானும், வாய்ப்ப எண்ண வல்லவனே அமைச்சனாவான்.

கருவிகள் — தானையும் பொருளும். காலம் — அது தொடங்குங்காலம். செய்கை எனவே, அது தொடங்கும் உபாயமும். இடையூறுநீக்கி முடிவு போக்குமாறும் அடங்கின. சிறிய முயற்சியால் பெரிய பயன் தருவது என்பார், அருவினை என்றார். இவை ஐந்தனையும் வடநூலார் மந்திரத்திற்கு[2] அங்கம் என்ப.

காரி.: வடநூலார் இவ்வைந்தினையும் மந்திரத்திற்கு அங்கம் என்ப. அரசுஅங்கம் ஆறு, அமைச்சங்கம் ஐந்து.

ஊ) கவிராசர்: காரியஞ்செய்யுமிடத்து அதற்கு வேண்டிய ஆயுதங்களும், அதற்கேற்ற காலமும், அந்தக் காரியஞ்செய்கிற போது இதனை இப்படிச்செய்தால் முடியுமென்பது, அதனாற் பெறும் பலனும் அறிந்து செய்கிறவனே மந்திரியாவான் எ—று.

---

2. மந்திரம் -- அமைச்சு.

ஏ) பழைய 2 : அரசனது வினை அமைச்சன் செய்யுங் காலத்-திற்கு வேண்டுங்கருவிகளும், வினை செய்வதற்கேற்ற காலமும், அவ்வினை செய்யுமாறும், அப்படிச் செய்யப்படும் வினை தானும், வாய்ப்ப என்ன வல்லவனே அமைச்சனாவான்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

குறட்போக்கு எளியதுதான்; ஆயினும், சொற்பொருள் விரித்ததாலும், தொகைகோடலானும், கொள்கை வேறு பாட்டானும் ஆசிரியர்கள் தம்முட் பெரிதும் மாறுபடுகின்றனர்.

கருவியும் :

'ஆயுதம்' பரிதி., கவிராசர், இராம.; 'யானை' குதிரை முதலிய படை' மணக்., பரிப்.; 'கருவிகளும்' காளிங்கர், பழைய, சி.இ.; 'தானையும் பொருளும்' பரிமேல்., மு.ரா.அரு,.குழந்தை; 'தொழிலுக்கு வேண்டிய சாதனங்கள்' சபாபதி, சாமி. சிதம்., இராம., வரத.; 'படையும், படைக்கலமும், பொருளும் துணையும்' தேவநேயர்.

காலமும் :

'(தொழிற்கு) ஆங்காலம் நீரும் நிழலும் உள்ள காலம்' மணக்.; 'கால நீதி (நியதி)' பரிதி.; 'செய்தற்கு அடுத்த காலம்' காளிங்கர் ;'தொழிற்கு ஏற்ற காலம்—அதாவது அது தொடங்-குங்காலம்' பரிமேல்., கவிராசர்; 'தகுந்த சமயமும்'—பழைய உரை2; முன் காலமறிதல் அதிகாரத்திற் கூறிய காலம்' வரத.; 'காலம்' குழந்தை,வ சுப.மா.,சாமி.சிதம்.,சபாபதி சி.இ.; 'பருவகாலம்' இராம.; 'தொடங்கி முடிக்குங்காலங்கள்' தேவநேயர்.

''செய்கையும்''

'இடையூறில்லாமல் செய்து முடிக்குங் காலம் அதாவது மடியின்றிச் செய்தல்' மணக்.; 'செய்யுமுறைமையும்' பரிதி ; 'தாம்பொருள்களைச் செய்யும் செய்கை வேற்றுமையும்' காளி ; 'செய்யுமாறும்—அதாவது தொடங்கும் உபாயம், முடிவு போக்கு-மாறும்'பரிமேல்.,குழந்தை;'இதனை இப்படிச்செய்தால் முடியும் என்பது' கவிராசர்; 'அவ்வினை செய்யுமாறும்' பழைய 2;

'அதுசெய்யும் விதமும்' சி.இ.; 'செய்கையும்' சபாபதி; 'அதனைச் செய்யும் வகையும்' தேவநேயர், சாமி. சிதம்.; செய்யுந் தன்மையும்' வ.சுப.மா.; 'அதற்கான செயல்களையும்' இராம.; 'அதற்கு ஏற்பச் செய்யும் முயற்சிகளும்' வரத.

செய்யும் அருவினையும் :

'செய்தற்கு அரியவினையும் மறுமண்டலங்கோடல்' மணக்., பரிப்.; 'செய்யும் முறைமை' பரிதி., பழைய2; 'தாம் பொருள்களைச்செய்யும் செய்கை வேற்றுமையும்' காளிங்கர்; 'செய்யப்படும் அவ்வினை தாமும் சிலமுயற்சியால் பெரும்பயன் கோடல்' பரிமேல்.; 'செய்வதாற் பெறுபயன்'-கவிராசர்; 'செய்யும்படியான அரிய செயல்' வரத., குழந்தை., சாமி. சிதம்., தேவநேயர்; 'செய்து முடிக்கும் உபாயங்கள்' சி.இ.; 'காரியம்' வ.சுப.மா.; 'தொழில்' சபாபதி; 'அவ்வழியிற் செய்யப்படும் அரியசெய்கையும்' மூ.ரா.அரு.

மாண்டது:

'மாட்சிமைப்பட்டவன்' மணக்., பரிப்., பரிதி., காளி.; 'வாய்ப்ப எண்ண வல்லவனே' பரிமேல்.; 'அறிந்து செய்பவன்' கவிராசர்; 'வாய்ப்ப எண்ண வல்லவனே' பழைய2; 'பொருந்த ஆலோசிப்பவனே' மூ.ரா.அரு., சி.இ.; 'எண்ணிச் செய்ய வல்லவனே' தேவநேயர்; 'சிறப்புடன் ஆராயவல்லவனே' சாமி.சிதம்; 'சிறந்தவனே' வ.சுப.மா.; 'நன்றாக அறிந்தவனே' இராம.; 'எண்ணியறியவல்லவனே' குழந்தை; 'பொருந்தச் செய்பவனே' வரத.

ஆய்வும் முடிவும் :

பழைய2: ஆண்டது அமைச்ச எனப்பிரித்து 'எண்ணியாள வல்லவன் அமைச்சன்' என்றும், மு கோ. 'ஆண்டது அமைச்சு எனலுமாம்; கருவி-கருவியாயிருப்பவன் எனவும், செய்யும் அருவினை ஆண்டது- செய்வினையாளரை ஆள்பவன்' எனவும் பொருள் காண்பர்.

இவ்வுரைகளுள், மணக்குடவர் அருவினையை முதலாக எண்ணி ஏனைய கருவி காலம் முதலியவற்றை அதனோடு

தொடர்புபடுத்தி அந்நான்கிலும் வல்லவனே அமைச்சன் என்பர். பரிதி. முதலாயினோரும் இக்கருத்தினரே.

பரிமேலழகர் மட்டும் கருவியை இரண்டாக்கி, வடவர் கூறும் வினை தொடங்குமாறு. இடையூறு நீக்கி முடிவு போக்குமாறும் ஆகிய இரண்டனையும் செய்கையுள் அடக்கி ஐந்தாக்கி இவைகளை வாய்ப்பச் செய்பவனே அமைச்சன் என்பர். இவரை ஒட்டி உரைக்கும் மு ரா. அரு., பழைய உரை முதலியோர் ஐந்து என்று தொகை காட்டாமற் போயினர்.

தேவநேயர் இக்குறளிற் கூறப்பட்டவை நான்கேயன்றி ஐந்தல்ல; செய்கையைத் தொடக்கமும் முடிவும்என இரண்டாக்கிய வடநூல் மரபு தவறானது. வீணும் ஆகும். திருக்குறளை வடநூல் வழியதாகக் காட்டவே பரிமேலழகர் செய்கையுள் தொடங்குமாறும் முடிக்குமாறும் அடங்கும் என்றார் என வன்மையாக மறுப்பர்.

உரைவேற்றுமையாசியர் 'வருங்குறளில் வரும்'ஐந்து' என்பது இக் குறட்பொருளின் தொகையென்று கருதினமையின் பரிமேலழகர் கருவியைத் தானையும் பொருளும் என இரண்டாக்கி ஐந்தென்ற தொகை கொண்டனர்' என்றனர்.

பரிமேலழகர் கூற்று செய்கையிலேயே தொடங்குமாறும் முடிக்குமாறும் அடங்குதலின் அதனைச் செய்கை யென ஒன்றாக்கி. முற்கூறியவண்ணம் கருவியை இரண்டாக்கி முடித்தமையை நன்கு விளக்குகிறது.

தேவநேயர் கூற்று செய்கையைப் பிரித்தது தவறு என்கிறது. இந்த முரண்பாடு 'ஐந்து' எனத் தொகை கொண்டதால் விளைந்ததேயாம்.

ஆசிரியர் வள்ளுவனார்'செய்கையும் செய்யும் அருவினையும், எங்கிறார். செய்கை மேற்கொள்ளப்பெறும் செயலைப்பற்றி எண்ணுதலும்,செய்யும் அருவினை — அதுமுடிவு பெறுங்காலும் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளையுமே உணர்த்துகின்றார். ஆதலின், கருவியை இரண்டாகப் பிரித்த பரிமேலழ

கர்க்குச் செய்கையுள் தொடங்குமாறும் முடிக்குமாறும் அடங்கும் எனக் கூறவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது.

இதிற் சிந்திக்க வேண்டிய பகுதி வடநூல்கள் தானையும் பொருளும் காலமும் செய்கையும் செய்யும் அருவினையையும் சேர்த்து ஐந்து என்கின்றனவா? கருவி முதலியவற்றோடு தொடங்குமாறும் முடிக்கும் ஆறும் கூட்டி ஐந்தென்கின்றனவா? என்பதுதான். பரிமேலழகர் கருவி தானையும்-படையும் என்றது ஏன்? ஆசிரியர் வள்ளுவனார் 'அரண்'என்னும் அதிகாரத்தில் ''செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும், எஃகு அதனிற் கூரியது இல்''(759)என்ற குறளிற் பொருளைக்கூரிய எஃகாணி-யன்ற கருவியாகக் கூறியதானும், பொருளையும் பொருளானாய படையையுங் கூட்டி ஐந்தாக்கினர். ஆனால் பெரும்பாலும் பரிமேலழகரின்பின் செல்லும் கவிராசர், பழைய உரை 2 இவர்கள் நான்கெனவே தொகை தந்தனர். வினை செயல் வகையில் ''பொருள் கருவி காலம் வினையிடனோடைந்து' பொருளும் கருவியும் தனித்துக் கூறப்பட்டுள்ளது ஆதலானும் இடனறிதலின் இடன் பற்றி அமைச்சன் நன்காராய வேண்டும் என்பதை விதந்து ஓதுதலானும் வருங்குறட்பாவிற் கூறும் ஐந்தில், முதன் நான்கின் ஆய்வை இன்றியமையாமையை உணர்த்தினர் எனலாம்.

ஆகவே 'ஐந்து எனத் தொகை கோடலைக் கருதாது கருவியும் இருவகைப்படும்; செய்கையும் இருவகைப்படும். ஆனால் செய்கையுள் எடுக்கு மாறும் முடிக்குமாறும் அடக்கிக் கருவியை இரண்டாக்குதல் ஆசிரியர் கருத்துமாதலால் இரண்டாக்கி ஐந்தெனலாம். ஆசிரியர் ஐந்தெனத் தொகை கொடாமையின், மணக்குடவர் முதலிய தொல்லாசிரியர்மரபு பற்றிக் குறட்போக்கிலே நான்கெனலே அமைவுடைத்து. ஆனாலும் கருவி இருவகைப்படும் எனல் வள்ளுவனார் கருத்துமாகும் என அமையலாம். சிந்திக்க.

ஓ) ஒப்புமைப்பகுதி:

முற்றும் :

காலமும் இடனும் ஏற்ற கருவியுங் தெரிந்து கற்ற

நூலற நோக்கித் தெய்வம் நுனித்தறங் குணித்து மேலோர்
சீலமும் புகழ்க்கு வேண்டுஞ் செய்கையுந் தெரிந்து கொண்டு
பால் வரும் உறுதியாவும் தலைவற்குப் பயக்கும் நீரார்

— கம்ப., 1409

......... ......... ......... மன்னர் என்பார்
எரியெனற் குரியாரன்றே எண்ணுதி ......... — கம்ப., 4182

சேய்மையோ டணிமையின்றித் தேவரிற் றெரியநிற்றி

—கம்ப.,4226

நனிபயன் பயப்பச் சிறுமுயற்சியினால் நலத்தகு வினையுமற்றனைய
வினையினைத் தொடங்குங் காலது தனக்கு வேண்டிய பொருள்களும் படையும்
இனிதுறு பொழுது உபாயமும் செயலும் இடைப்படும் ஊறுகள்
துளிவற முடிவு போக்கிடு மாறும் சூழ்தரவல்லவன் அமைச்சன்

— விநா., அரசி, 10

64.2. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ(டு)
ஐந்துடன் மாண்ட தமைச்சு. (632)

உரைப்பகுதி :

அ) மணக் : அஞ்சாமையும், குடிகாத்தலும், 'நூல் முகத்தானறிதலும், முயற்சியும் இந்திரியங்களைக் காத்தலும்,[1] என்னும் ஐந்துங் கூட மாட்சிமைப்பட்டவன் அமைச்சனாவான் எ-று.

இவை அமைச்சனாவதன் முன்னே வேண்டுமாதலின், இது முன் கூறப்பட்டது.

ஆ) பரிதி. : தறுகணாண்மை,[2] குடிகாத்தல், கல்வி, அறிவுடைமை, உத்தியோகம் என்னும் அஞ்சு குணமுள்ளவன் மந்திரி எ-று.

1. இந்திரியங்களைக் காத்தல் -- ஐம்பொறிகளை அடக்குதல்.
2. தறுகணாண்மை -- அஞ்சாமையைக் கைக்கொள்ளுதல்.

இ) பரிப் : அஞ்சாமையும் குடிப்பிறத்தலும்,இந்திரியங்களைக் காத்தலும், நூல் முகத்தான் அறிதலும், முயற்சியும் என்ற ஐந்தும் கூட மாட்சிமைப் பட்டவன் அமைச்சன் ஆவன் எ-று.

இவை அமைச்சன் ஆவதன் முன்னே வேண்டும் ஆதலின் முன் கூறப்பட்டன.

ஈ) காளி : வன்கண்ணதாகிய தறுகண்மையும், தன்னரசன் கோற் கீழ்வாழும் குடிகளது வன்மை மென்மை வழக்கு அறிதலும் காத்தலாகிய நாடுகாவலும், காடு காவலும், நாடிச் சொல்லுதலும், கற்றறிதல் ஆகிய பெரும் பொருள்நூல் கற்று உணர்ந்து அறிதலும், ஆள்வினை என்னும் அரசியல் முயற்சியும், அமைச்சியல் முயற்சியும் இவை ஐந்தும் ஒருதலைப்பட ஆராய்ந்தவன் அமைச்சன் ஆவன் எ-று.

உ) பரிமேல் : வினை செய்தற்கண் அசைவின்மையும்[3] குடிகளைக் காத்தலும் நீதி நூல்களைக் கற்றுச்செய்வன தவிர்வன அறிதலும், முயற்சியும், மேற்சொல்லிய அவ் அங்கங்கள் ஐந்துடனே திருந்த உடையானே அமைச்சனாவன்.

எண்ணொடு நீண்டது [4] அவ்வைந்துஎனச்சுட்டு வருவிக்க. இந்நான்களையும் மேற் கூறியவற்றோடு தொகுத்துக் கூறியது அவையும் இவற்றோடு கூடியே மாட்சிமைப்படவேண்டுதலானும், அவற்றிற்கு ஐந்து என்னும் தொகை பெறுதற்கும். இனி இதனை ஈண்டு எண்ணி யவற்றிற்கே தொகையாக்கிக் குடிகாத்தல் என்பதனைக் குடிப்பிறப்பும் அதனை ஒழுக்கத்தால் காத்தலும் எனப் பகுப்பாரும்,கற்றறிதல் என்பதனைக் கற்றலும்

3. அசைவின்மை -- சோம்பலின்மை.

4. ‘ஒடு, என்னும் உருபு, என்று மெனவும் ஒடுவுந் தோன்றி
ஒன்று வழியுடைய வெண்ணினுட் பிரிந்தே
என்னும் தொல். சொல். இடை. நூற்பா படி ஆள்வினையொடு என்பதில் உள்ள ‘ஒடு, வன்கண் முதலியவற்றோடுஇயைந்தது,

அறிதலும் என்பகுப்பாரும் உளர்.[5] அவர் உடன் என்பதனை முற்றும்மைப்பொருட்டாக்கியும், குடி என்பதனை ஆகுபெயராக்கியும் இடர்ப்படுப.[6]

**காளி :** முன் பாட்டிற்சொல்லிய அங்கங்கள் ஐந்துடன் ஈண்டு உரைத்த நான்கையும் கூட்டுக. எண்ணொடு நீண்டது. "உடம்போடு உயிரிடை நட்பு"[7] என்பதுபோல நீளாது நிற்பினுங் குற்றமில்லை. அதனை ஈண்டு நீண்டது என்பது இன்னொலி நோக்கியே என்க. உரையுள் அவருடன் என்பதனை அவர்என்றது பட்சாந்தரம்[8] உரைப்பாரை.

ஊ) **கவிராசர் :** ஒரு காரியஞ்செய்யுமிடத்திலே சவியாமல் இருக்கிறதும், குடிகளை ரட்சித்தலும் நீதிநூல்களைக் கற்றுச்செய்வன தவிர்வன அறிதலும், உற்சாகமும், தானை பொருள் காலம் செய்யுமாறு, பலன் என்று சொல்லப்பட்ட ஐந்துடனே கூடிச் செய்ய வல்லவனே அமைச்சன் (எ-று.)

ஏ) **பழைய 2 :** வினை செய்தற்கண் வன்கண்மையும், குடிகளைக் காத்தலும், நீதி நூல் கற்றுச் செய்வன தவிர்வன அறிதலும், ஆள்வினையுடைமையும் முன்சொன்ன அங்கங்களுடனே திருந்தவுடையவனே அமைச்சனாவான்.

ஐ) **தொகுப்பும் குறிப்பும் :**

**வன்கண் :-** 'அஞ்சாமை' மணக்.; 'தறுகண்மை' பரிதி 'வன்கண்ணதாகிய தறுகண்மை' காளி.; 'வினை செய்தற்கண் அசைவின்மை' பரிமேல்.; 'சலியாமலிருக்கிறது' கவிராசர்; 'வினை செய்தற்கண் வன்கண்மை' பழைய 2.

---

5. காளிங்கர் குடிகாத்தலையும், பரிதியார் கற்றறிதலையும் இவ்வாறு பகுப்பர்

6. தொகுப்பும் குறிப்பும் காண்க.

7. குறள்., 338.

8. பட்சாந்தரம் -- கொண்ட கொள்கையினின்று வேறான கொள்கை.

'செய்யுங்காரியத்தில் திடம் மனவுறுதி', இராம; 'உறுதியுடையனாதல்' வரத.;'அஞ்சாமை' குழந்தை.; 'துணிவு' வ. சுப. மா.; 'சோர்வின்மை' 'அஞ்சாமை' சாமி.சிதம்.; 'மனவுறுதி' தேவநேயர்; 'தொழில் செய்தலிலே சோர்வின்மை' சபாபதி; 'வினைசெய்தற்கண் அஞ்சாமை' சி.இ.; 'தொழில் செய்வதிற் சோர்வின்மை' மு. ரா. அரு.

முடிநிலை : அமைச்சன் அஞ்சாமையுடையனாதல் வேண்டும் எனின் வினை செய்தற்கண் அன்று. மேற்கொள்ள இருக்கும் வினைகளை ஆய்ந்து அரசற்குத் தெரிவிப்பதில் அஞ்சக்கூடாது என்பதேயாம். அரசனும் இவன் கூற்றை ஏற்று வினைசெய்ய-ஏவுவானாயினும், வினையைச் செய்ய முற்படுவானாயினும், அதில் அஞ்சாமையை வினைசெய் வகையினும், திட்பத்தினும் குறிப்பராதலின் இஃது அஃதுதன்று. கம்பரும் 'தம்முயிர்க்கு உறுதியெண்ணார் தலைமகன் வெகுண்ட போதும், வெம்-மையைத் தாங்கி நீதிவிடாது நின்றுரைக்கும் வீரர்' எனல் காண்க. ஆதலால் வன்கண் என்பது வினையைப் பற்றி ஆயுங்காலத்து அரசனும் ஏனையோரும் ஆகிய குழுவின கருத்து மாறுபடினும் அஞ்சாதுரைக்கும் வன்கண்மையேயாதல் காண்க. இக்கருத்து உதவியவர் இராம; அமைச்சனாவதன் முன்னம் வேண்டும் என்ற மணக்குடவர் கருத்தும் அத்துணை ஏற்புடையதன்று.

'குடிகாத்தல்' — 'தம் அரசன் கீழ் வாழுங் குடிகளது வன்மை மென்மை வழக்கறிதலும், நாடு — காடு காவலும்' காளி.; ஏனையோர் அனைவரும் 'குடிகாத்தல்' எனப் பொதுவகையிற் பொருள் காண்பர்.

'குடிப்பிறப்பின் பெருமையைக் காத்துக் கொள்வது' இராம; நாட்டின் குடிகளைக் காத்தல் அன்று; அது அரசன் கடமை ''பிறப்பின் மேன்மைப் பெரியவர்'' என்ற கம்பன் சொல்லையும் காண்க என்பர் இராம.: இதனுடன் 'குடிப்பிறந்து குற்றத்தினீங்கி' என்னும்வள்ளுவர் வாய்மொழியும் இதனையே வலியுறுத்தல் கண்டு இவ்வுரையின் சிறப்பைத் தேர்க.

'குடி — 'குடிப்பிறப்பு' : காத்தல் — 'குடிகளைக் காத்தல்' எனப்பிரித்துத் தன்குடிப்பிறப்பைக் காத்துக்கோடலும் குடிகளைக் காத்தலும்' என்பர் சாமி. சிதம் ; 'குடிமக்களுக்குத் தீமை வராமற்பாதுகாத்தல்' வடிந.;ஏனையோர்'குடிகாத்தலை ஒன்றே' என எழுதுவர்.

இவற்றுள் அமைச்சன் தான் குடிப் பெருமைக்கு இழுக்கு வராமல் பதவியிலுருந்து நடத்தல் என்ற உரையே சிறந்தது. இதில் இராமலிங்கனார் சிந்தனை சிறந்தது.

'கற்றறிதல்'

'நூன் முகத்ததன் அறிதல், மணக்.; 'பெரும் பொருணூல் கற்றுணர்ந்தறிதலும்' காளி.; 'நீதி நூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வன அறிதல் பரிமேல் ; கவிராசர், பழைய 2

'நூலறிவோடு நுண்ணறிவு பெற்றிருத்தல்' வரத.; 'அறநூல் களைக் கற்றறிதல்' குழந்தை, சாமி-சிதம்., சபாபதி, மு.ரா.அரு.; 'அறநூல்களையும் அரசியல் நூல்களையும் கற்று வேண்டுவன விலக்குவன அறிதல்' தேவநேயர்; 'அரசியல் நூல்களைக் கற்றறிதல்' சி.இ

ஏனையோர் கற்று+அறிதல் எனப் பிரித்துக் கற்றலும் அறி-தலும்என இரண்டாக்குவர்.தேவநேயர்'குடிகாத்தல்' என்பதனை இருபிரிவாக்கி 'ஐந்து' என்னும் தொகையைச் சரிப்படுத்துவர். கற்றறிதலை ஒன்றாக்குவர்,

'ஐந்துடன் மாண்டது'—மணக்குடவர் 'ஐந்திந்திரியங் களைக் காத்தல்' என்பவர். குழந்தையும் இக்கருத்தினர். ஏனையர் அனைவரும் இக்குறள் கூறும் 'வன்கண் முதலிய ஐந்தையுமே' கருதுவர்.

பரிமேலழர் வன்கண்-குடிகாத்தல்-கற்றறிதல்-ஆள்வினை என்ற நான்கோடு முதற்குறளிற் கூறிய கருவி முதலிய ஐந்தையும் ஒன்றாக எண்ணி ஐந்தெனக்கொள்வர் இதனைத் தேவநேயர் வன்மையாக மறுப்பர். இராமலிங்கரும் அங்ஙனமே.

'ஐந்து தந்திரங்களிலும் தேர்ந்த சிறப்புடையது' என்பர் இராம.; பஞ்சதந்திரங்களாவன தீய உறவுகளை நீக்குதல், நல்ல உறவுகளைப் பாதுகாத்தல், பகை நட்பாக்கல், பொருள் கொடுத்தேனும் காரியங்கோடல், ஆராயாது காரியஞ்செய்தல் என இவை என்பர். இவற்றுள் இவருடைய தமிழாக்கம் சிறிது வேறுபட்டுள்ளது.

இவ்வகையில் உரைப்போக்கு மூவகைப்படுகிறது. ஐந்து முதற்குறளிற் கூறிய ஐந்து என்பவர்கள் பரிமேலழகரும் அவரை ஒட்டியே செல்வோரும். 'கற்றறிதலை' இரண்டாக்கி ஐந்தென்றது இக்குறளில் உள்ளவற்றையே குறிக்கும் என்பர் பரிதி; ஐந்து என்பது 'ஐந்தவித்தான்' என்புழிப்போல எண்ணாகு பெயராய் ஐம்புலன்களை யுணர்த்தியதாகக் கொண்டவர் மணக்குடவரும் குழந்தையும். இங்ஙனம் மூவகைப்படுவர். ''கற்றறிந்தார் கல்வி விளங்கும்''(717) என்புழியும் இங்ஙனம் பிரித்தலைக் காணலாம் ஆதலால் இங்ஙனம் தொகை வேண்டிப் பிரித்தல் குற்றமாகாது ஆதலால் பரிதியுரை சிறந்தது.

**ஓ) ஒப்புமைப்பகுதி:**

**கற்றறிதல்:**

குலமுதற் றொன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனும் எய்தினார் — கம்ப., 1404

............ ............ அரிய நூலும்
கற்றவர் ...... ...... ...... ...... — கம்ப., 1405

...... ...... அறிவின் வாய்ந்த மந்திரம் ...... — கம்ப., 4226

நூலினால் நுணங்கிய அறிவு நோக்கினர்
போலுமால் உறுபொருள் புகலும் பூட்சியோர் — கம்ப., 6263

......... ......... ............ .........
தாட்சியில் பொருடருந் தரும மூர்த்தியைக்

காட்சியே யினிக்கட னென்று கல்விசால்
சூட்சியின் கிழவருந் துணிந்து சொல்லினார் — கம்ப., 6510

முற்றும்

குடியோம்பல் வன்கண்மை நூல்வன்மை கூடம்
மடியோப்பும் ஆற்றல் உடைமை — முடியோப்பு
நாற்றம் சுவைவெஃகி நல்லார் இனம்சேர்தல்
தேற்றானேல் தேறும் அமைச்சு —ஏலாதி., 17

மிகைவினை வரினும் அசைவுறா வன்கண். விழுக்குடி காத்தலான்
...... அமைச்சாம். — விநா., அரசி., 103

*64.3. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்*
*பொருத்தலும் வல்ல தமைச்சு. (633)*

உரைப்பகுதி:

அ) மணக்.: மாற்றரசரிடத்து[1] உள்ளாரையும் அவர்க்கு நட்பாகிய அரசரையும் அவரிடத்தினின்று பிரித்தலும்; அவ்வாறு பிரிக்கப்பட்டாரை விரும்பித் தம்மிடத்துக் கொளலும், தம்மிடத்து நின்றுபிரிந்தாரைக்கூட்டிக்கொளலும் வல்லவன் அமைச்சனாவன்.

ஆ) பரிதி.: மாற்றரசனிடத்திலுள்ள மனிதரைப் பிரித்தலும், பிரித்த பேரைத் தான் கூட்டிக்கொள்வதும், அரசர்க்குப் பிரிந்த மன்னவரைக் கூட்டுவதும் வல்லது மந்திரிதத்துவம்.

இ) பரிப்.: மாற்று அரசரிடத்து உள்ளாரையும்அவர்க்கு நட்பு ஆகிய அரசரையும் அவரிடத்தினின்றும் பிரித்தலும், அவ்வாறு பிரிக்கப்பட்டாரை விரும்பித் தம்மிடத்துக்கோடலும், தம்மிடத்தினின்றும் பிரிந்தாரைக்கூட்டிக்கொள்ளலும் வல்லவன்அமைச்சன் ஆவான் எ-று.

ஈ) காளி.: தம் அரசர்க்குப் பகைவேந்தரானோர் இருவருள் ஒருவரைப் பிரிக்க வல்லதும், மற்று, அவர்தம்மையும் பிறரையும் தம்மாட்டு விரும்பி அணைத்துப் பாதுகாத்தலும்,தம் அரசர்மாட்டு நின்றும் பிரிந்தார் உளர் ஆயின், அவர்தம்மையும் யாதாலும் ஒரு வழியால் பொருந்தச் செய்தலும், பின்னும் இவையும் எய்த இயற்றவல்லதும் யாது? மற்று அதுவே அமைச்சாவது எ-று.

1. 'வேற்றரசரிடத்' பரிப்., பாடம்

உ) பரிமேல்.: வினை வந்துழிப் பகைவர்க்குத் துணையா-யினாரை அவரின் பிரிக்கவேண்டின் பிரித்தலும், தம்பாலாரை[2] அவர் பிரியாமல் கொடை இன்சொற்களால் பேணிக்கொள்ளு-தலும், முன்னே தம்மிலும் தம்பாலாரினும் பிரிந்தாரை மீண்டுப் பொருத்தவேண்டின் பொருத்தலும், வல்லவனே அமைச்-சனாவான்.

இவற்றுள், அப்பொழுதை நிலைக்கு ஏற்ற செயல் அறித-லும், அதனை அவர் அறியாமல் ஏற்ற உபாயத்தால் கடைப் பிடித்தலும்[3] அரிய வாதல் நோக்கி, வல்லது என்றார். வட-நூலார் இவற்றுள் பொருத்தலைச் சந்தி என்றும், பிரித்தலை விக்கிரகம் என்றும் கூறுப.

ஊ) கவிராசர்.: பகை வந்த காலத்திலே பகைவர்க்குத் துணையாயினாரைப் பிரித்தலும், தன் மனுஷரைப் போகவொட்-டாமற் பிரியஞ்செரல்லி நிறுத்திக்கொள்ளுகிறதும்,முன்னே தன் ராசாவைவிட்டுப் பிரிந்து போனவரைக் கூட்ட வேண்டிற் கூட்டு தலும் வல்லவனே மந்திரி எ-று

எ) பழைய 2.: போர்வினை வந்துழிப்பகைவர்க்குத் துணையா-யினாரைப் பிரித்தலும், தம்பாற்றுணையாயினாரைப் பிரியாமற் பேணிக் கொளலும், முன்னே தம்மிற் பிரித்தாரை மீண்டும் வேண்டிற் பொருத்துக்கொளலும்,வல்லவனே அமைச்சனாவான்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''பிரித்தலும்''

மணக். 'பகையரசனிடம் உள்ளாரையும், அவர்க்கு நட்பி-னரையும் பிரித்தல்' என்பர். இவர் உரையமைதி 'அவர்க்கு' என்ற சுட்டு 'பகையரசற்கு' அவரிடம் உள்ளாற்கு நட்பினரையும் இரு பாலாரையும் கருதவைக்கிறது.

பரிதி. 'பகை மன்னனிடம் உள்ளாரைப் பிரித்தல்' என்கிறார்.

காளி.: 'பகைவேந்தர் ஆனோர் இருவரில் ஒருவரைப் பகை வேந்தனிடமிருந்து பிரித்தல்' என்பர்.

---

2) தம் பாலாரை — தம்மைச் சேர்ந்தவரை

3) கடைப்பிடித்தல் — உறுதியாகப் பற்றுதல்

பரிமேல். 'போர்க்காலத்து மட்டும் பிரிக்க வேண்டிற் பிரித்தல்' என்பர். தேவநேயர், சபாபதியும் இக்கருத்தினரே. கவிராசர், சாமி. சிதம். : 'பகைவந்த காலத்திலே பகைவர்க்குத் துணை-யாயினாரைப் பிரித்தல்' என்பர். பழைய உரை, குழந்தை 'அரசனுக்கு வேண்டியவனாக இருப்பவனைச் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விலகிகல்' என்பர். வரத .'பகைவரைப் பிரித்தல்' என்பர், வ சுப.மா. 'அரசனுக்கும் அரசுக்கும் தீங்கு செய்யக் கூடிய சகவாசங்களை நீக்குதல்' என்பர் இராம., மு.கோ. 'தன்னோடு வினைசெய்வோரைப் பிரித்தல்' என்பர்.

இவ்வுரைகளுள் நல்லன தொகுத்துப் 'பகைவந்த காலத்துப் பகை மன்னனிடம் உள்ளார், அவர்க்கும் அரசற்கும் நட்பாயினார், பகைவேந்தரிருவரில் ஒருவர், அரசுக்கும் அரசற்கும் கேடு சூழ எண்ணும் நட்டோர் உறவினர் முதலியவர்களைக் காலத்திற்கு ஏற்ப விலக்கல்' என்ற உரை சிறந்தது.

'பேணிக்கொளல்''

'பிரிக்கப்பட்டாரில் ஒருவரை விரும்பி நட்பாக்கிக் கொள்ளல்' மணக்., பரிப்.; 'பகைவனுக்கு வேண்டாதவர்களை விரும்பிய-யழைத்துச் சேர்த்துக் கொள்ளுதல்' வரத.; 'நம்மவரை நம்மை விட்டுப் பிரிந்து போகாமற் காத்துக் கொள்ளுதல்' குழந்தை, சாமி.சிதம்.;''நண்பரையணைத்தல்'' வ.சுப.மா.,சபாபதி. 'நன்மையான சகவாசங்களைக் கெட்டுப்போகாமற் பாதுகாத்தல்' இராம.; 'தமக்கு வரும் புதிய நட்பைப் போற்றிக் கொள்ளுதல்' தேவநேயர். 'நமக்குத் துணையாவாரைப் பிரியாமல் தழுவிக் கொள்ளுதல்' கா.சு.

மு.கோ. ''உள்ள நண்பரைப் பேணிக்கொள்ளல். அரச-னோடு மற்ற வினை செய்வாரைப் பிரித்தது முதலாகக் கொள்-ளுதலுமாம்'' என்பர்.

இவ்வுரைகளுள், தம்மரசருடன் வாழ்வாரை நீங்காது கொடையானும், இன் சொல்லானும், தகுதியளித்தலானும் பாது-காத்துக் கொள்ளுதல் என்பதே இப்பகுதிக்கு ஏற்புடையது. 'பிரிந்தார்ப் பொருத்தல்' என்பது தம்மிடம் பிரிந்தாரைத் தேவை-யாயின் சேர்த்துக் கொள்ளுதல், பகைவரிடமிருந்து பிரிந்து வந்தாரை பகைவர் வலியறிதற்கும், அவர் வலிகுறைதற்குமாகத்

தம்மிடம் சேர்த்துக் கொள்ளுதல் வருதலின் பேணிக்கொளல் இருப்பாரைப் பிரியாமல் பாதுகாப்பது என்பதே சிறந்தது.

ஒ) ஒப்புமைப்பகுதி :
பிரித்தலும் வல்லது அமைச்சு :

பேது செய்துபி ளந்திடல் பெட்டதே -சீவக., 1920

வருடகாரனை யழைத்து பத்தவ னியம்புமிப்
பருமிதநற் சேனையுள்ள பாஞ்சால ராயனிடம்
திருமுடி யரசனரத் திறத்தினால் கற்றெனப்
பொருளினவன் போந்த பின்பு போர்வினை தொடங்கினர்
-உதய.,179

முற்றும் :
பகைவர்தந் துணையைப் பிரித்தல்தம் மிடத்துப்
பயின்றவர் பகைவர்பால் புகாமல்
தகையுறச் செய்தல் பிரிந்தவர் தம்மைத்
தம்மொடு பொருத்தலும் அமைச்சாம்
-விநா.அரசி.,103

வேறு செய்துபின் பொருத்துறும் வினைவல அமைச்சில்
கூறு செய்ததன் சேறெலாம் குழப்பிஒன் றாக்கிச்
சாறு செய்துவா சவற்றொழு துறுமிடர் தவிர்த்து
நாறு செய்கென வெண்முளை வித்துவர் நாளால்
-காஞ்சி.நாட்டு.,74

பகையுடன் கிடந்த நிலைபிரி வழக்கினைப்
பொருத்தலும் பிரித்தலும் பொருபகை காட்டலும்
உட்பகை அமைத்தலும் உணர்த்துசொல் பொருத்தலும்
ஒருதொழிற் கிருபகை தீராது வளர்த்தலும்
செய்யா அமைச்சுடன் சேரா அரசன்
நாடு கரிந்தன்ன காடு -கல்லா.,3:1-6

*64.4. தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்*
*சொல்லலும் வல்ல தமைச்சு.* (634)

உரைப்பகுதி :

அ) மணக். : ஒருவினையை நன்றாக ஆராய்தலும், அதனைச்

செய்ய நினைத்தால் முடியுமாறு எண்ணிச்செய்தலும், ஐயமாகிய வினையைத்துணிந்து சொல்லுதலும் வல்லவன்அமைச்சனாவான்.

ஆ) பரிதி.: காரியத்தை நாலு வகையாக விசாரித்தலும், விசாரித்தாற்போலே செய்தலும் ஒரு மொழியாகச் சொல்லுதலும் வல்லது மந்திரிதத்துவம் எ-று.

இ) பரிப்.: ஒரு வினையை நன்றோ தீதோ என்று ஆராய் தலும் அதனைச் செய்ய நினைத்தால் முடியுமாறு எண்ணிச் செய்தலும், ஐயம் ஆகிய வினையைத் துணிந்து சொல்லுதலும் வல்லவன் அமைச்சன் ஆவான் எ-று.

ஈ) காளி.: அரசனது காரியம் வேறுபட்டுத் தெரிதலும் அங்ஙனம் தெரிந்த பின்னும் காரியத்தில் சிறந்ததனை ஓர்ந்து பார்த்துச் செய்தலும், மேற்செய்யும் கருமங்களை ஐயுறாது ஒரு-வழிப்படி அரசர்க்குச் சொல்லுதலும் வல்லது அமைச்சு எ—று.

இனி, இவ்வரசர்க்குக் கூறிய அமைச்சரானோரது சொல்-வன்மையைத் தோற்றுவிக்கிறது மேலை அதிகாரம்.

உ) பரிமேல்.: ஒரு காரியச்செய்கை பலவாற்றான் தோன்றின் அவற்றுள் ஆவது ஆராய்ந்தறிதலும், அது செய்யுங்கால் வாய்க்குந் திறனாடிச்[1] செய்தலும், சிலரைப்பிரித்தல் பொருத்தல் கண் அவர்க்கு இதுவே செயற்பாலது என்று துணிவு பிறக்கும் வகை சொல்லுதலும், வல்லவனே அமைச்சனாவான்.

தெரிதல் செயன்மேலதாயிற்று,[2] வருகின்றது அதுவாதலின்.[3]

ஊ) கவிராசர்: ஒரு காரியஞ் செய்ய வேண்டினபொழுது, பல வகை ஆலோசனை தோன்றினால், அவற்றுள் ஆகத் தக்கதை ஆராய்ந்து அறிகிறதும், அது செய்கிறபோது அதனால் வருகிற பலனை அறிந்து செய்கிறதும் ஒருத்தரைப் பரிக்கிற திலேயும் கட்டுகிறதிலேயும் அவர்களுக்குத் துணிவு பிறக்க இது வே செயல் என்று சொல்லுகிறதும் வல்லவனே மந்திரி எ—று.

---

1. வாய்க்குந் திறன்நாடி- கை கூடுந்திறத்தை நாடி,
2. தெரிதல் செயல் மேலதாயிற்று- தெரிதல் என்பது ஆராய்தல் என்றளவில் நில்லாமல் ஆராய்ந்து செய்தல் என்பதைக் காட்டிற்று.
3. வருகின்றது அதுவாகலின்- அமைச்சனுக்கு ஆய்ந்தறிய நேர்வது காரியத்தைச் செய்வதாதலால்.

ஏ) பழைய 2 : ஒரு காரியம் பலவிதமாகத் தோன்றில், அவற்றுள் ஆவது ஆராய்ந்தறிதலும், வினை செய்யுங்கால் வாய்க்குந் திறன் நாடிச் செய்தலும், சிலரைப் பிரித்தல் பொருத்-தல் செய்யுமிடத்து அவர்க்கு இதுவே செய்யற்பாலது என்று துணிவு பிறக்கும் வகை சொல்லுதலும், வல்லவனாம் அமைச்-னாவான்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'தெரிதல்'— 'நன்றாக ஆராய்தல்' மணக். ; இச்சொற்கு இதுவே பொருளாயினும், இப் பொருளை நன்கு விளக்க உரையாசிரியர் தரும் சூழ்நிலை விளக்கங்கள் பல ஆகின்றன. பரிதி. 'காரியத்தை நாலுவகையாக விசாரித்தல்' என்பர். இவர் கூறும் நாலுவகை சாம, தான, பேத, தண்டங்களாகிய நாலு வகையா? சுற்றம், அடிமை, நட்பு, பகை என்ற நாலுவகையா அல்லது 'நாலாபக்கமும் கேட்டு' என்ற உலகியல் வழக்கை ஒட்டிக்கூறியதா?என்பது அறியக் கூடவில்லை காளி.'அரசனது காரியம் வேறுபட்டுத்தெரிதல்' என்பர். இதன் கருத்து சமுதாயப் பார்வையான் ஆம் ஆய்வை விட்டுச் சிறப்பு வகையான் இது அரச காரியம் என்று ஆய்தல் எனலாமா? பரிமேல். 'ஒரு காரியத்தைச் செய்கை பலவாற்றான் தோன்றின் அவற்றுள் ஆவது ஆராய்ந்-தறிதல்'என்பர். கவிராசர் இதனையே விளக்கிக்கூறுவர். பழைய உரை 2ம் அங்ஙனமே. கா.சு.'ஆகுங்காரியம் இதுவென்றறிதல்' என்பர். 'ஒருகாரியத்தின் செய்கை பலவாறுதோன்றின்அவற்றுள் உண்மையையறிந்துசெய்தல்'என்பர்.மு.ரா.அரு.;'வினைக்குரிய யாரைத்தேர்தல்'என்பர் மு.கோ.;இது தெரிந்து வினையாடலாக அரசற்குரிய கடமையாகுமன்றி அமைச்சர்க்குரியதல்லாமை ஓர்க. தேவநேயர்'வினைசெய்யும்வகை பலவாகத்தோன்றின் அவற்றுட் சிறந்ததை முழுவாய்ப்பாக உள்ளதை ஆய்ந்தறிதல்' என்பர். 'வினைமேற் கொள்ளும் அமைச்சன் பலவழிகளில் வினைமுடிப்-பதைப்பற்றி ஆய்ந்து முடிவுசெய்தல்' வரத. ; 'செய்யவேண்டி-யதையும் அதன்பயன்களையும் தெரிதல்' இராம.; 'காரியத்தைத் தேர்தெடுத்தல்' சாமி.-சிதம்.;'ஆராய்தல்'. சி.இ.; 'காரியத்தை ஆய்ந்தறிதல்' - சபாபதி.

இவற்றுள், வினைசெய்வாரை நாடியறிதல் ஈண்டு இயை பின்று. வினையையும், அதுமுடிக்கும் வழிகளையும் ஆராய்தலே

அமைச்சர் கடமையாதலின் அக்கருத்தமைந்தன ஏற்புடையன.

'தேர்ந்து செய்தல்'—'முடியுமாறு எண்ணிச்செய்தல்' மணக்.; 'விசாரித்தாற் போலே செய்தல்' பரிதி.; 'சிறந்ததனை ஓர்ந்து பார்த்துச் செய்தல்' காளி.; 'வாய்க்குந் தன்மை நாடிச்செய்தல்' பரிமேல்., கவிராசர், பழைய 2.; 'வாய்க்கும் வழியை ஆய்ந்து செய்தல்' கா.சு., 'கைகூடும்வகை நாடிச்செய்தல்' மு.ரா.அரு.; 'வெற்றிக்கேதுவான வழிகளை ஆய்ந்துசெய்தல்' தேவநேயர்; 'ஆராய்ந்த முடிவின்படியே செய்தல்' வரத.; 'தெரிந்திராவிட்டால் ஆராய்ந்து அதன்பின்பு செய்தல்' இராம.; 'திறனாடிச்செய்தல்' சி.இ.

"ஒருதலையாச் சொல்லல்" 'ஐயமாகிய வினையைத் துணிந்துசொல்லுதல்' மணக்.;' ஒருமொழியாகச் சொல்லுதல்' பரிதி.; 'ஐயுறாது ஒருவழிப்படி அரசர்க்குச் சொல்லுதல்' காளி.; 'சிலரைப் பிரித்தல், பொருத்தல்களில் இதுவே செயற்பாலது எனத் துணிவு பிறக்கும்வகை சொல்லுதல்' பரிமேல் கவிராசர்., பழைய; இவற்றுள் ஒருதலையாச் சொல்லுதலை அரச காரியம் அனைத்திற்கும் உரிமையாக்கும் உரை சிறந்தது.

இவ்வுரைகளுள் தெரிதல். ஆராய்தலிலும், தேர்ந்துசெய்தல் வினைகளை மீளவும் மீளவும் ஆராயாமல் வழிவகைகளை ஆய்ந்து செயல்புரிதலிலும் இருக்கும் உரைகள் ஏற்புடையன.

ஒ) ஒப்புமைப்பகுதி :

தெரிதலும் வல்லதமைச்சு :

ஆற்றலால் அடுத்த தெண்ணும் அமைச்சர் —கம்ப., 3331

ஒருதலையாச் சொல்லல் :

நாவலர் சொற்கொண்டாக்கு நன்கலாற் றீதுவாரா—சீவக., 206

இன்னுயி ரழியும் போழ்தும் இறைவனுக்குறுதியல்லான்
முன்னிய முகமன் மாட்டா முற்றிய அறிவார் —குளா., 1861

...... ...... –... ...... துணிந்து சொல்லினார் —கம்ப., 6510

முற்றும் :

செறிந்தவர் தெளிந்த நூலால் சிறந்தன தெரிந்து கூறி
அறிந்தவை ஆற்ற கிற்கும் அலமதியான்அமைச்சன்
ஆவான் —குளா.மந்திர.,9

தன்னிலையும் தாழாத் தொழில்நிலையும் துப்பெதிர்ந்தார்
இன்னிலையும் ஈடில் இயனிலையும் — துன்னி
அளந்தறிந்து செய்வான் அரசமைச்சன் யாதும்
பிளந்தறியும் பேராற்ற லான் —சிறு., 57

செம்மையிற் றிறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியுங் காலம்
மும்மையும் உணர வல்லார் ஒருமையே மொழியும் நீரார்
—கம்ப., 1407

*64.5. அறனறிந் தான்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை. (635)*

உரைப்பகுதி :

அ) மணக்.: அறத்தினையும் அறிந்து, நிரம்பியமைந்த சொல்லினையும் உடையனாய், எல்லாக்காலத்திலும் செய்யுந்திறன்களையும் அறிய வல்லவன் அரசற்குச் சூழ்ச்சித் துணையாய அமைச்சனாவன் எ-று.

தேர்ச்சிக்குத்துணையாதலின் தேர்ச்சித்துணை என்று பெயர் இட்டார்.

ஆ) பரிதி.: தன்மநெறி யறிந்து, ஒழுக்கம் பொருந்திய சொல்லும் உள்ளவன் எப்போதும் உத்தியோகம் உள்ள மந்திரியாம் எ-று.

இ) பரிப் : அறத்தினையும் அறிந்து நிரம்பி அமைந்த சொல்லையும் உடையனாய் எல்லாக் காலத்திலும் செய்யும் திறன்களையும் அறிய வல்லவன் அமைச்சன் ஆவான் எ-று.

தேர்ச்சித் துணை ஆதலின் தேர்ச்சித் துணை என்று பெயர் இட்டார். எஞ்ஞான்றும் என்றது நிகழ் காலத்திலும் எதிர்காலத்திலும்.

ஈ) காளி.: இராச தன்மத்து இயல்பு அறிந்த அறிவினை உடையனுமாய், அதற்கு ஏற்ற சமைவு[1] என்கிற நிறைவினை உடையனுமாய், மற்று அரசன் விருப்புற்றுக் கேட்குமாறு அரிய சொல்லாளனுமாய், நாட்டகத்தும் புறவிடத்தும் வாழ்வோர் வினைத்திறம் அனைத்தும் நெறிபட அறிந்து அறிவு[2] நிறைவு[3] ஓர்ப்பு[4] கடைப்பிடி[5] என்னும் நாற்பெருங்குணனும் நன்குற அமைந்த அமைச்சனே அரசனது கருமத்திற்கு அமைந்த துணை ஆவான் எ-று.

உ) பரிமேல்.: அரசனால் செய்யப்படும் அறங்களை அறிந்து தனக்கு ஏற்ற கல்வியான் நிறைந்தமைந்த சொல்லை உடையனாய், எக்காலத்தும் வினை செய்யும் திறன்களை அறிந்தான், அவர்க்குச் சூழ்ச்சித்துணையாம்.

தன் அரசன் சுருங்கியகாலத்தும்,[6] பெருகியகாலத்தும்,[7] இடை நிகராய காலத்தும்[8] என்பார் 'எஞ்ஞான்றும்' என்றார். சொல்லான் என்பதனை ஒடுஉருபின் பொருட்டாய ஆனுருபாக்கி உரைப்பாரும் உளர்.[9] இவை ஐந்துபாட்டானும் அமைச்சரது குணத்தன்மை கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: அரசராலே செய்யப்பட்ட தருமங்களை அறிந்து, தனக்கு வேண்டின கல்விகேள்விகளாலே நல்ல வார்த்-தையை உடையவனாய், எக்காலமும் காரியங்கள் செய்கிற திறமையை அறிந்தவன் அரசற்கு நல்ல துணையாம் எ-று.

ஏ) பழைய 2: அரசராற் செய்யப்படும் அறங்களையறிந்து தனக்கேற்ற கல்வியால் நிறைந்தமைந்த சொல்லையுடையனாய்

---

1. சமைவு - பொருத்தம்
2. அறிவு -நன்மை தீமை பயப்பன அறிதல் (தொல்.பொருள்.206)
3. நிறைவு அமைதி (தொல்.பொருள். இளம்.,206)
4. ஓர்ப்பு - ஆராய்ந்துணர்தல் (இறை.,2.29)
5. கடைப்பிடி - உறுதி.
6, சுருங்கிய காலம் - பொருள், படை முதலியவற்றால் சுருங்கிய காலத்தும்.
7. பெருகிய காலம் - முற்கூறியவற்றால் வளர்ந்த நிலையும்
8. இடைநிகராய காலம்- மிகாமலும் நிறையாமலும் உள்ள நடுத்தரமான காலம்.
9. இங்ஙனம் உரைப்பவர் யார் என்று அறியக்கிடவில்லை,

எக்காலத்தும் வினைசெய்யுந்திறன்களையறிந்தான் அவர்க்குச் சூழ்ச்சித் துணையாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அறன் அறிந்து 'அறத்தையறிந்து' மணக்.; 'தன்ம நெறியறிந்து' பரிதி.;'இராசதன் மத்தியல்பு' காளி.;'அரசனால் செய்யப்படும் அறங்களையறிந்து'பரிமேல்.;கவிராசர்,பழைய 2, மு ரா.அரு.சபாபதி.;' அரசநூலறிதல்' மு.கோ.; 'அரச நீதிகளையறிந்து'சி இ.,வரத.; 'தர்மங்களையுணர்ந்து-அரசன் செய்யும் அறங்களை அறிந்து'என்பது பொருளல்ல; நீதி நெறிய றங்களை மந்திரி தெரிந்திருக்கவேண்டும், என்பதே பொருள்' என்பர் இராம.

''ஆன்று+அமைந்தசொல்'' நிரம்பியமைந்த சொல்'மணக்.; 'ஒழுக்கம் பொருந்தியசொல்'பரிதி.; 'சமைவு என்ற நிறைவினை-யுடையனுமாய்' காளி.; 'கல்வியானிறைந்தமைந்த சொல்-லினையுடையனுமாய்' பரிமேல்., கவிராசர், பழைய 2, 'அறிவான் நிரம்பியமைந்த சொல்லை' குழந்தை, சபாபதி, தேவநேயர். 'அறிவு நிறைந்த அமைதி''-வரத.;'அறிவு நிறைந்து, பொருத்த மான யோசனை சொல்லுபவன்' இராம; 'சொல்லான்' என் பதைச் 'சொல்லோடு எனினும் பொருள் சிதையாதார்' என்பர் தேவநேயர்.

'ஆன்று அமைந்த' என்பதற்கு இத்தனையுரைகளுடன், 'நற்குணங்களான் அமைந்து பணியவேண்டும்'. உயர்ந்தோ ரிடத்துப் பணிந்து,என்பதும்,'கல்வியால் நிறைந்து அதற்கேற்பச் சுவை முதலியவற்றிற் செல்லும் அறிவு அவிந்து முக்கரணங்களும் அடங்கிய' என்பதும் இணைத்து எண்ணத்தக்கனவாம் புறம். 191)

''எஞ்ஞான்றும்'' எல்லாக்காலத்திலும் எனப் பொதுவ-கையாற் கூறுவாரும், 'நிகழ்காலத்தும் எதிர்காலத்தும்' எனவும் (பரிப்.) ''தம் அரசனுடைய சுருக்க-பெருக்கக் காலங்களிலும் இடை நிலைகாலத்தும்'' பரிமேல்.; ''இராச தன்மத்திற்கேற்பச் சமைவு என்ற நிறைவு உடையனுமாய், அரசன் விரும்பிக் கேட்கும் நிலையில் அருமையான சொல்லையுடையனுமாய்'' காளி.; ஆன்றிருந்தாளாயினும் அரசன் முன் அரசன் அடங்கியே பேசு பவனாய்'' சொ.த.;என்ற உரைகளின் சிறப்பு நோக்கித் தேறுக.

இராம.: 'அரசனுடைய படைவலி பொருள்வலி, துணைவலி காலத்துணை இவற்றின் கணக்குகளை அறிந்தவனாக இருப்பன் என்பர்.

இவ்வுரைகளில் ஒவ்வொன்றில் ஒவ்வொருகருத்து விஞ்சி-விளங்குவதால் அவற்றை இணைத்து எண்ணத்தோன்றுகிறது. அமைச்சன் அரசதருமத்தையும் பொதுவகையான அறங்களையும் அறிந்திருத்தல் இன்றியமையாதது ஆதலின் அறங்கள்அனைத்-தையும் அறிந்து என்றும் பலதுறையறிவினாலும் அகன்று பரந்தஅறிவையுடையவனாகி, நிறைகுடம் நீர்த் ததும்பாதது-போல அமைதியாகவும் பேசும் இனியனாகி, முக்குணவசத்தால் முறை திறம்பல் மக்களுயிர்க்கு இயற்கையாயினும் அங்ஙனம் மாறாமல் எப்போதும் அரசுக்கும்அரசனுக்கும் ஏற்ற நலம் பயக்கும் உபாயங்களை உணர்ந்து உரைக்கவல்லவனே அரசனோடிருந்து சூழ்ந்து சொல்லுந்துணையாவான் என்றெண்ணலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

ஆன்றமைந்த சொல்லான்:

நூல் வினைந்தனைய நுண்சொற் புலவரொடு
—சீவக.; 2906

அமைச்சர் சொல்வழி ஆற்றத லாற்றலே —கம்ப.; 1510

கொற்றவற் குறுபொருள் குறித்த கொள்கையான் —கம்ப.; 2338

முற்றும்:

மன்னவர் மனத்தையுங் காலதே சத்தையும் வாழ்குடி படைத்
திறமையை யும்மந்திரா லோசனையு மெல்லா மறிந்தவன்
வளமான மதிமந்திரி —அறப்பளீச்சுர சதகம்.

*64. 6. மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்*
*யா[1]வுள முன்நிற் பவை.* *(636)*

உரைப்பகுதி:

அ) மணக்.: மேற்கூறிய நூற்கல்வியோடு கூட நுண்ணிதாகிய

1. யா என்னும் வினா இங்கு இல்லை என்னும் பொருளில் வந்தது.

மதியினையும் உடையார்க்கு அதனினும் நுண்ணியவாய் மாற்றாரால் எண்ணப்பட்டு எதிர் நிற்கும் வினைகள் யாவுள எ — று.

மேற்கூறியவற்றோடு மதியும் வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: மதிகூர்மையும், கல்வியின் கூர்மையும் உள்ள பேருக்கு யாது நுட்பம் எ — று.

இ) பரிப்.: 'அதினுட்பம்' பாடம்.

மேற்கூறிய நூற் கல்வியோடு கூட நுண்ணிது ஆகிய மதியினையும் உடையார்க்கு அதனினும் நுண்ணிய மாற்றாரால் எண்ணப்பட்டு எதிர் நிற்கும் வினை யாவை உள? எ — று.

மேற்கூறியவற்றொடு மதியும் வேண்டும் என்றது.

ஈ) காளி.: தம் பிறவிக்கண்ணே இயற்கையாக விதிவழி வாய்ந்த மதியின் கூர்மையைப் பின்னும் தெளியக்கற்று உணர்ந்த செயற்கைத்தன்மை நூலோடு கூட உடையாராகிய நுண்ணறிவாளர்க்கு மற்று அவைஇரண்டுடன் சிறந்த கூர்மையிற் கூரியன யாவை உளவோ? யாவும் இலது அன்றே முன்னிய நெஞ்சிற்கு[2] வேறு முன் நிற்பவை எ — று.

உ) பரிமேல்: இயற்கை யாகிய நுண்ணறிவைச் செயற்கை-யாகிய நூலறிவோடு உடையராய அமைச்சர்க்கு, மிக்க நுட்பத்தையுடைய சூழ்ச்சிகளாய் முன் நிற்பன யாவை உள.

மதிநுட்பம் என்பது பின்மொழிநிலையல்.[3] அது தெய்வந் தரவேண்டுதலின் முன் கூறப்பட்டது. நூல் என்பதூஉம் அதிநுட்பம் என்பதூஉம் ஆகுபெயர். அதி[4] என்பது வடசொல்லுள் மிகுதிப் பொருளதோர் இடைச்சொல்; அது திரிந்து நுட்பம் என்பதனோடு தொக்கது. முன்னிற்றல் மாற்றார் சூழ்ச்சியாயின தம் சூழ்ச்சியால் அழியாது நிற்றல். இனி அதினுட்பம் என்று பாடமோதி, அதனின் நுட்பம் யா என்று உரைப்பாரும் உளர்;[5]

2. முன்னிய நெஞ்சிற்கு — கருதிய உள்ளத்திற்கு
3. நுட்பமதி என்பது மதி நுட்பம் என்றாயிற்று இதில் மதி என்பதே நுட்பத்தின் அடைகொளியாய் நிற்றல் பற்றி இங்ஙனம் கூறப்பட்டது.
4. அதி — மிகுதி; வடசொல்.
5. இவ்வாறு உரைப்பவர் மணக்குடவர்.

அவர் சூழ்ச்சிக்கினமாய் முன் சுட்டப்படுவது ஒன்றில்லாமையும் சுட்டுப்பெயர் ஐந்தாம் உருபு ஏற்ற வழி அவ்வாறு நில்லாமையும் அறிந்திலர்.[6] பகைவர் சூழ்வனவற்றைத் தாம் அறிந்து அழித்து அவரறிந்து அழியாதனதாம் சூழ்வர் என்பது கருத்து. இதனால் அவரது சிறப்புக் கூறப்பட்டது.

காரி : மதி நுட்பம் பின்மொழி நிலையல், "வேங்கைப்பூ" என்பதும் அது. அதி என்பது வடசொல்லின் மிகுதிப் பொருளதோர் இடைச்சொல் வடநூலார் உபசர்க்கம் என்பர். அது திரிந்து நுட்பம் என்பதனோடு தொக்கது. இனி "அதினுட்பம் என்று பாடம் ஓதுவாரும் உளர். அவர் சூழ்ச்சிக்கினமாய்ச் சுட்டப்படுதல்லது ஒன்றில்லாமையும், சுட்டுப்பெயர் தாம்உருபேற்றவழி அவ்வாறு நில்லாமையும் அறிந்திலர்' என்றது "சுட்டுமுதலுகரம் அன்னொடுஞ்-சிவணி"[7] என்னுஞ் சூத்திரவிதியால் என்க.

ஊ) கவிராசர் : தனக்குச் சுவபாவமாகிய அறிவைச் சாத்திரங்களுடனே கட்டிவைத்துக் கொண்டிருக்கிற மந்திரிகளுக்கு மிக்க நுட்பத்தையுடைய சூழ்ச்சிகளாய் முன் நிற்பன யா உள?

எ) பழைய 2 : இயற்கையாய நுண்ணறிவை, செயற்கையாய நூலறிவோடு உடைய அமைச்சர்க்கு மிக்க நுட்பத்தையுடைய சூழ்ச்சிகளாய் முன்னிற்பன யானையுள?

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அதனினும் நுண்ணியராதல்' என உரைப்பதால் மணக்-குடவரே 'அதினுட்பம்' எனப் பாடங்கொண்டவராகின்றார். இப்பாடத்தை மறுக்கும் பரிமேலழகர் கூறும் ஏதுக்களில், முதல் ஏது 'அவர்சூழ்ச்சிக்கு இனமாய் முன் சுட்டப்படுவது ஒன்றில்லை' என்பது. அதிநுட்பம் எனப்பாடங்கொள்ளினும், இனமாய் முன் சுட்டப்படுவது இல்லை,; விஞ்சிய நுட்பம் ஒன்றுளது எனல் பெறப்படும். இனமானதாயினும், விஞ்சியதொன்றாயினும் ஆசி-ரியர் வினவும் 'முன்னிற்பவை யாவுள' என்ற வினாவின்

6. தொகுப்பும் குறிப்பும் காண்க.
7. தொல், எழுத்து. 176.

விடையாக இல்லை என்ற துணிவையே தருவன. ஆகையான் இது ஒரு மறுப்புக் காரணமாகாது. இலக்கண மரபுபற்றி 'அது' என்ற சுட்டுப்பெயர் 'சுட்டு முதலுகரம் அன்னோடு சிவணி நிற்றல் வேண்டும்' என்ற (தொல்-எழுத். 177) விதியால் அதனின் எனலாகுமேயன்றி 'அதின்' என்று ஆகாது. பிழைபட்ட ஆட்சியை வள்ளுவத்திற் காண இயலாது என்ற மறுப்புஆணித் தரமானது.மணக்குடவர் இலக்கணமரபு நோக்காது' அதிநுட்பம்'என்பதில் 'அதி' ஆரிய மொழியாயிற்றே என்று அதினுட்பம் ஆக்கினர் போலும். அதின் நுட்பம் என்பதில் உறழ்ச்சிப் பொருள் தரும் பொருளும் அதிநுட்பம் தரும் பொருளும் ஒத்த கருத்தினவே யாதலை எண்ணியிருப்பர் போலும். ஆயினும், இலக்கணச் சிதைவாதலைக் காட்டி மறுத்தல் ஒன்றேயமையும் என்க.

மதிநுட்பம் என்னும் ஆறாம் வேற்றுமைத் தொகையில் மதிநுட்பம் நூலோடுடையவர்க்கு எனப் பின்மொழிக்கட் பொருள் சிறந்திருத்தலின் பின்மொழி நிலையல் என்றார். வேங்கைப் பூ என்றவழி வேங்கைப்பூ நாறிற்று, மலர்ந்தது எனப்பூ வாகிய பின்மொழியே பின்னதோடு இயைய நிற்றலின் இதுவும் பின்மொழி நிலையாயிற்று. ஆசிரியர் சேனாவரையர் 'வேங்கைப்பூ' என்பதனை முன்மொழி நிலையல் என்பர். இடம் காலம் இவற்றால் முன் பின்னாதலும் பின்முன்னாதலும் உளவென்க. ஈண்டுக் கூறியது கால வகையால் பின்னதானவாறு காண்க.

ஓ) ஒப்புமைப்பகுதி:

மதிநுட்பம் நூலோடு உடையவர்:

ஒன்றுநன் றெனஉணர் ஒருவன் கொள்ளுமேல்
அன்றதன் றொருவனுக் கறிவு தோன்றுமால்
நின்றதொன் றுண்டுகேள் நீதி நூலினோ(டு)
ஒன்றிநின் றவரொடும் உணர்க ஒட்டியே — குளா , 236

பன்னூல், வல்லாரு மாகி மதிநுட்பரு மாகி —திருவிளை. பன்றி. மந்திரி. 13

குலமக ளுடனே வந்த குலச்சிறை குணனும் கேள்வித்
தலைமையும் மதியின் மிக்க தன்மையும் தூக்கி நோக்கி

நலமலி அமைச்ச னாகி நானிலம் புரக்கு நாளில்
— ஷை பாண்டியன்சுரந்., 9

......... ......... ......... ......... கற்ற
நூ லுற நோக்கி ......... ......... —கம்ப ,1 06
மந்திரங் கெழுமுநூல் மரபுணர்ந் துதவுவான் —கம்ப., 3902
நூலினால் நுணங்கிய வறிவு நோக்கினர்
போலுமா லுறுபொருள் புகலும் பூட்சியோர் —கம்ப , 6263
மதிநெறி யறிவு சான்ற மாலியவான் —கம்ப., 6944
ஓதிய கல்வியாளர் ...... ...... —கம்ப., 8425

ஒருபுடை
தூக்கி வினைசெய் —ஆத்தி., 60

*64.7. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்(து)*
*இயற்கை அறிந்து செயல். (637)*

உரைப்பகுதி :

அ) மணக்.: செயத்தகுவன அறிந்தவிடத்தும், அது செய்யுங்கால் நடை அறிந்து செய்க எ-று.

உலகநடை அறிதலாவது அரசர் சீலமும் பரிவாரத்திலுள்ளார்[1]. நிலைமையும் அறிதல். இவை அறியாது செய்யின் குற்றமாம் என்றவாறு.

ஆ) பரிதி.: செய்யும் முறைமை அறிந்தாலும் உலகம் பொருந்தின காரியம் செய்வது நன்று எ-று.

இ) பரிப்.: செய்யத் தகுவன அறிந்த இடத்தும் அது செய்யுங்கால், உலகத்து நடை அறிந்து செய்க எ-று.

உலக நடையாவது அரசன் சீலமும் பரிவாரத்துள்ளார் நிலைமையும் அறிதல் இவையிற்றை அறியாது செய்யின் குற்றம் என்றவாறு ஆயிற்று.

1, பரிவாரத்திலுள்ளார் - ஐம்பெருஞ் சுற்றம் ஆவார்.

ஈ) காளி.: இவ்வாறு நூல்வழிச் செய்கைப்பொருள் அனைத்தும் தெளிய அறிந்ததன் பின், உலகத்தோடு ஒத்த நடை ஆகிய இயற்கைப் பொருளினையும் எய்த அறிந்து யாதாலும் ஒரு கருமம் செய் எ-று.

உ) பரிமேல்.: நூல் நெறியான் வினை செய்யுந் திறங்களை அறிந்த இடத்தும் அப்பொழுது நடக்கின்ற உலக இயற்கையை அறிந்து அதனோடு பொருந்தச் செய்க.

கடைத்து என்புழித்'து' பகுதிப்பொருள் விகுதி. [2] நூல்நெறியேயாயினும் உலக நெறியோடு பொருந்தாதன செய்யற்க செய்யின், அது பழிக்கும் என இயற்கையறிவால் பயன் கூறிவாறு;

ஊ) கவிராசர்: சாத்திரப் பிரகாரத்தினாலே காரியஞ் செய்யும் வகையை அறிந்தபோதும் உலகத்திலே அப்பொழுது நடக்கிற இயற்கையை அறிந்து அதற்கேற்கச் செய்யவேணும்.

ஏ) பழைய 2: நூனெறியால் வினை செய்யுந்திறன் அறிந்த விடத்தும், அப்பொழுது நடக்கும் உலகு இயற்கையை யறிந்து வினை செய்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறளில் 'செயற்கையறிதல்' சிந்திக்கத்தக்க ஒருதொடர் மணக், 'பரிப்'. 'செயத்தருவது' என்றனர். பின்வரும் அடியில் 'இயற்கை' என்றுவருவதால் அதன் எதிர்மறையாகிய செயற்கை செய்யத்தகுவது என்ற பொருளைப்பயக்குமா? என்பது ஆய்வுக்குரியது. 'கை' என்பதைத் தொழிற்பெயர் விகுதியாகக் கொண்டலும் செய்தல் என்னும் பொருளதாமேயன்றிச் செய்யத்தகுவது என்றபொருளதாகுமா?இயற்கை இயல்புஎன்னும் பொருளதாயின் செயற்கை இங்ஙனம் இருந்தால் இது நல்லது என்று சிந்தித்து அமைக்கப்பட்டதுஆகும்.இதனை எண்ணிய'பரிதியார்'செய்யத் தகும் முறைமைகளை' என்றார். காளிங்கர் அம்முறைகளை நூல்கள் வாயிலாக அன்றி அறியக்கூடாமையின் 'நூல்வழிச்

2, அறிந்தக் கடை என்னும் வினையெச்சம் துவ்விகுதி பெற்று அறிந்த கடைத்து என ஆயினும் துவ்விகுதிக்குப் பொருளின்மையால் பகுதிப் பொருள் விகுதியாயிற்று என்பார்,

செய்கைப்பொருள் அனைத்தும் அறிந்திருந்தாலும்' என்றார். அதனை அடியொற்றிப் பரிமேலழகரும் பிறரும் அங்ஙனமே கூறினர். இங்ஙனம் வளர்ந்த எண்ணமுறையில் காளிங்கர் வழி வரும் உரையே சிறந்தது.

ஆகவே இயற்கை உலக நடையில் இயல்பாகவே அவ்வப்போது அமைவது. செயற்கை இயற்கையால் விளையும் நலந்தீங்குகளைக்கண்டு, இஃது 'இங்ஙனம் ஆயின் நல்லது'; நலம் பயப்பது' என்று அறிவுடையோரால் வாய் வழியானும் நூல்வழியானும் அறிவிக்கப்பட்டது. ஆதலால் செயற்கையைச் செயற்படுத்தும்போது உலக இயற்கையையறிந்து ஏலும், ஏலாது என்பதையறிந்து செய்க என்றதாம். கல்வியாலும் சிந்தனையாலும் ஆயது செயற்கை உலகம்; அவ்வப்போது இயங்குமுறை இயற்கை என்பதை 'உலகத்தோடொட்ட ஒழுகல்' (140) என்ற குறளாலும் அறிக.

மு கோ. செயற்கை-செய்யுள்(நூல் வழக்கு) ; இயற்கை-உலகவழக்கு என்பர். மேலும் செயற்கை-தன்னாட்டியல். இயற்கை-உலகத்தியிற்கை. அதாவது பிற நாடுகளின் இயலுமாம் என்பர் பின்னுரையாகிய இது இயைபுடைத்தன்று தன்னாடும் உலகத்துள் ஒரு கூறு ஆகலான் தன்னாட்டியல் செயற்கையாவது எங்ஙனம்? எனின் அமைதியின்மையின் இயைபுடைத்தன்று என்றாம்.

வரத : 'நூலறிவோடு நுண்ணறிவாலும் செய்ய வேண்டியதை அறிந்த இடத்தும்' என்பர். இது முதற்குறளைப் பின்பற்றிக் கூறியதாம் ஏனையோர் அனைவரும் நூலறிவை மட்டும் கூற இவர் நுண்ணறிவைப் பிணைத்தது நன்றன்று. நுண்ணறிவு என்பது செயற்கையறிவோடு உலகத்தியற்கையை இணைத்து செய்யத்தகுவன இவை; தக்கவற்றைச் செய்யும் முறை இவை என்று எண்ணுதல் ஆகவே உலகத்தியற்கையையும் ஒட்டி உணர்ந்து முடிவு காண்டலே நுண்ணறிவாதலின் ஏனையோர் நூலறிவைச் செயற்கை என்றனர். அங்ஙனமே செயற்கை முன்னிகழ்ந்த செயல்கள். இயற்கை-இப்போதைக்கு ஏற்றன என்ற குறிப்பும் சிந்தித்தற்குரியது இராம. 'நூல்—கருதி மதி—யுக்தி செய்ய இருக்கிற காரியம் சுருதிக்கும் (நூலறிவு) யுக்திக்கும் (மதி) பொருத்தமாயிருந்தாலும் அனுபவத்திற்குப் பொருந்துமா?

என்பதை எண்ணிச் செய்க' எனக் கருத்துரைப்பர். சுருதியும் யுக்தியும் முன்னாலே அமைந்ததாயின் அதனைச்செய்யும் எது எதனை எண்ணிப்பார்க்க வேண்டும் என்பது பெறப்படுதலின் மதிநுட்பம் உலக நடையை ஆய்வதன்றி வேறொன்றாக இருத்தல் இயலாது என்றுணர்க. தேவநேயர் 'பலசெய்திகளில் நூலியலும் உலகியலும் வேறுபட்டிருப்பதால் உலகியலோடு பொருந்தியிருப்பவற்றைச் செய்க' என்னும் கருத்துரைப்பர். இதவும் முற்கூறிய விளக்கத்திற்கு அரணாதல் தெளிக. சாமி. சிதம். 'தொழில்புரியும் வழியைச் சொல்கிறது' என்பர்.

இவைகளை இணைத்து எண்ணின் பள்ளிக்கணக்குப் புள்ளிக்கு உதவாதது போல நூலறிவுமட்டும் செயல்முறைக்குப் பயன்தராது உலகியலையும் உணர்ந்து செய்யவேண்டும் என்ற கருத்துடைய உரைகள் சிறந்தன.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

......... ......... .........உலக மோதும்
வழக்கினு மதிக்கவியி னும்மரபி னாடி
தழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான் —கம்ப., 2762

நூலியற்கையு னுங்குலத் துந்தையர்
போலி யற்கையுஞ் சீலமும் போற்றலை —கம்ப., 4135

......... ......... ......... அறிவின் வாய்த்த
மந்திரம் ......... ......... ......... ......... —கம்ப., 4226

அறிவதும் செயலும் ஒழிவதும் அரசர்க்காக்கமே குறித்தன வாகும்
திறனும்நன் றறியா அரசருக் குறுதி செப்பலும் செய்வன வேனும்
உறும்உல கியற்கைக் கொத்திடின் செயலும் ஒருவினைக்
கியைந்தபல் செயலும்
நிறுவுவ தொன்றால் வாய்ப்பளஞ் ஞான்றும் நிகழ்த்தலும்
அமைச்சருக்கு இயல்பாம் —விநா. அரசி., 104

64.8. *அறிகொன் றறியான் எனினும் உறுதி*
*உழைஇருந்தான் கூறல் கடன்.* (638)

**உரைப்பகுதி:**

அ) மணக். : அரசன் அமைச்சன் கூறிய பொருளை அறிக; அவன் ஒன்று அறியானாயினும் அவனுக்கு உறுதியானவற்றை அருகு இருந்த அமைச்சன் சொல்லுதல் கடன் எ-று.

இஃது அரசன் கேளான் என்று சொல்லாதொழிதலாகாது என்று கூறிற்று.

ஆ) பரிதி. : எல்லாம் அறிவுள்ள ராசா அறிகிறதறுவாயில் அறியாதபோது உறுதியாக மந்திரி சொல்லக்கடவன் எ-று.

இ) பரிப். : அரசன் அமைச்சன் கூறிய பொருளை அறிக: அவன் ஒன்று அறியான் ஆயினும் அவனுக்கு உறுதியாயின-வற்றை அருகு இருந்த அமைச்சன் சொல்லுதல் கடன் எ-று

அரசன் கேளான் என்று சொல்லாது ஒழிதல் ஆகாது. இத்துணையும் அமைச்சர் இலக்கணம் கூறப்பட்டது.

ஈ) காளி. : அரசரானவர் ஒன்றோ காரியா காரியங்களைத் தாமே அறியினும், மற்று அதன் உறுதிப்பாட்டினை அருகிருத்-தற்கு உரியனாகிய அமைச்சன் பெயர்த்தும் ஐயம் அற ஆராய்வது முறைமை. இனி ஒன்றோ அரசன் இவை அறியானாயின் இவன்தானே அதன் உறுதிப் பாட்டினை அமைவுற ஆராய்வது முறைமை எ-று.

அறிந்து ஒன்றறியான் என்பது ஒன்றோ அறியினும் அறியான் ஆயினும் என்றது. உழையிருந்தான் என்பது அரசர் அருகு இருந்தான் என்றது.

உ) பரிமேல். : அறிந்து சொல்லியாரது அறிவையும் அழித்து அரசன் தானும் அறியானேயாயினும், அக்குற்றம் நோக்கி ஒழியாது அவனுக்கு உறுதியாயின கூறுதல் அமைச்சனுக்கு முறைமை.

அறி என்பது முதனிலைத் தொழிற்பெயர். கோறல் - தான் கொள்ளாமை மேலும் இகழ்ந்து கூறுதல். உழையிருந்தான்[1] எனப்பெயர் கொடுத்தார், அமாத்தியார்[2] என்னும் வடமொழிப்பெயர்க்கும் பொருண்மை அதுவாகலின். உறுதி[3] கூறாக்கால் அவனது இறுதியெய்தற் குற்றத்தை உலகம் தன்மேலேற்றும் என்பார், கூறல் கடன் என்றார். இவை இரண்டு பாட்டானும் அவர் செயல் கூறப்பட்டது.

காரி : உழையிருந்தான் எனப்பெயர் கொடுத்தார், அமாத்தியன் என்னும் வடமொழிப்பெயரும் அப்பொருண்மையதாகலின்.

ஊ) கவிராசர்: அறிந்து சொன்னவரது வசனத்தையுங்கேளாமல் தானும் அறியாவிட்டாலும், அந்தக் குற்றத்தினாலே அவனை இகழ்ந்துவிடாமல், அந்த ராசாவுக்கு உறுதியான வார்த்தை சொல்லுகிறது மந்திரிகளுக்கு முறைமை எ-று.

ஏ) பழைய 2 : அறியுந்திறனெல்லாம் அறிந்தவர் சொல்லிய அறிவை அறியாது அழித்தானாயினும், அரசனுக்குறுதி, அக்குற்றம் நோக்கி ஒழியாது, அவனுக்குத் துணையாய் அருகிருந்த அமைச்சன் கூறுதல் முறைமை.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்குடவரும் பரிப்பெருமாளும் 'ஒன்று அறிக — (அரசன் அமைச்சன் கூறிய பொருளை அறிக ; ஒன்று அறியான் எனினும் உறுதி உழையிருந்தான் கூறல் கடன்—(அவன்) ஒன்று அறியானாயினும், அவனுக்கு உறுதியாயினவற்றை அருகு இருந்த அமைச்சன் சொல்லுதல் கடன்' எனச் சில சொற்களை இடைப்பெய்து பொருள் விரிப்பார்கள்.

கொண்டபாடம் 'அறிகொன்றறியான் என்பதே. 'அறிக' என்னும் வியங்கோளீறான அகரம் தொக்கு அறிகொன்று என விகாரப்பட்டது என்பது அவர்கள் கருதும் இலக்கணம், இங்ஙனன்றிப் பிறவுரையாசிரியர்கள் அறிகு + ஒன்றோ எனப்

1, உழையிருந்தான் - பக்கத்திலிருந்தான்

2, அமாத்தியர் - அமைச்சன்

3. உறுதி - நன்மையைப் பயக்கும் சொல்.

பிரித்து உரை காண்பர் என். மணக்குடவரையும் இணைத்து விட்டனர் ஒருவர்.

பரிதி. : 'எல்லாம் அறிவுள்ளராசா' என உரைப்பதால் இவர் பாடம் 'அறிகோன் அறியான் எனினும்' என்பது போலும். பரிதியுரை ஏடு இப்படியும் படிக்க வாய்ப்பளிக்கிறது. அறிகிற-தறுவாயில் என்ற தொடரை வருவித்து 'அறிகிற தறுவாயில் அறி-யான் எனினும்' என உரை கண்டனர்.

காளிங்கர் உரைப்பகுதியும் மூலபாடமும் உரைவளம், உரைக்கொத்து, ஆராய்ச்சிப்பதிப்பு, உரைவேற்றுமை அனைத்-தினும் சிதைந்தும் வேறுபட்டுள்ளன. நயமும், வேறு பாடும் செறிந்த காளிங்கர் உரைப்பகுதியையே விட்டுவிட்டது திருக்குறள் ஆராய்ச்சிப்பதிப்பு.

மூலபாடம் ;- உரைவளப்பதிப்பும், உரைவேற்றுமையும், 'அறிந்தொன்றறியான்' என்பது, ஒன்றோ அறியினும் அறியான் ஆயினும் என்ற உரையைக்கொண்டு காளிங்கர் கொண்ட பாடம் 'அறிந்தொன்றறியான்' எனத் துணிந்தது திருமலை திருப்பதி தேவஸ்தானம் பதிப்பு (1959). 'அரிதொன்றறியான எனினும்' எனப் பாடங்கொண்டுள்ளது. திருப்பதிப் பதிப்பைக் கொண்டு எழுந்த உரைக்கொத்தும் 'அரிதொன்றறியான்' என்றது. 'அறியினும் அறியானாயினும்' என்ற காளிங்கர் உரையை நோக்கிற்றிலது. இது திருப்பதிப் பதிப்புக் கண்ட பாடம்.

ஒன்றோ, மற்று, இனி, என்பன காளிங்கர் உரையில் பெரும்பாலும் வரும்சொல்வழக்கு. ஒன்றோ என்பது எண்ணிடைச் சொல்பெய்தார் எனலுமாம். வள்ளுவர் வாய்மொழியினும் 'பொய்படும் ஒன்றோ' (836) 'பேதைமையொன்றோ பெருங்-கிழமை' (805) வருதல் காண்க.

காளிங்கர் உரையமைப்பு : ஒன்று அறியினும்—அரசரானவர் ஒன்றோ காரியகாரியங்களைத் தாமே யறியினும், உறுதி உழையிருந்தான் கூறல் கடன்—மற்று அதன் உறுதிப் பாட்டினை அருகிருத்தற்கு உரியவனாகிய அமைச்சன் பெயர்த்தும் ஐயமற ஆராய்வது முறைமை. ஒன்று அறியான் எனினும் உறுதி உழை-

யிருந்தான் கூறல் கடன்-இனி ஒன்றோ அரசன் இவை அறியா-னாயின் இவன் தானே உறுதிப் பாட்டினை அமைவுற ஆராய்வது முறைமை என்று சொற்பொருள்காணின் அவருரைப் போக்கும் பயனும் நன்கு விளங்கும்.

இவ்வுரையில் 'அறிந்து' என்னும் செய்தெனெச்சத்தை உம்மை புணர்ந்த செயின் என்னும் எச்சமாக்கி 'அறியினும்' என உரை கண்டுள்ளார். இவ்வுரைக்கு அறிந்தொன்றறியான் என்ற பாடமே சிறந்தது.

இவ்வுரையாற்பெற்ற நயமான சிறந்த பொருள் அரசன் அறிவானாயினும் உறுதிப்பாட்டினை அறிய அமைச்சனும் ஆய்தல் கடமை. அறியானாயின் தானே ஆய்ந்து முடிவு செய்தல் கடன்என்ற இருபயனாம்.

பரிமேலழகரும் அவர் வழிவரும் பிறரும், அறி+கொன்று எனச் சிதைத்து, 'அறி' என்பதை முதனிலைத் தொழிற்-பெயராகக் கொண்டு அறிந்து சொல்லியாரது அறிவையும் அழித்து எனப்பொருள்கண்டனர். கொன்று என்பதற்கு இவர் கூறும் நயம் மிகச் சிறப்புடையது. இப்பொருளாற்போந்த பயன் அரசன் அமைச்சன் சொல்லைக்கேளாமை மட்டும் அன்றி அவமதிப்பானாயினும் அமைச்சன் கடமை உறுதி சொல்லுதல் என்பது.காளிங்கர்கருத்து அரசன் தாமேயுறியினும் அமைச்சன் மேலும் ஆய்தல் வேண்டும் என்பதும், அறியானாயின் தாமே ஆய்ந்து கூறுக என்பதும் ஆகிய இரு நலன்களைத் தருவன. ஏற்பன கொள்க.

ஓ) ஒப்புமைப்பகுதி :

உறுதி உழையிருந்தான் கூறல் கடன் :

உலப்பில் உலகத்து உறுதியே நோக்கிக்
குலைத்தடக்கி நல்லறம் கொள்ளார்க் குறுத்தல்
மலைத்தழுது உண்ணாக் குழவியைத் தாயர்
அலைத்துப்பால் பெய்து விடல் — பழ நா, 364

மூரித்தேன் தாரி னாய்நீ முனியினும் உறுதி நோக்கிப்

பாரித்தேன் தரும நுண்நூல் வழக்கது வாதல் கண்டே
— சீவக., 214

அற்றமின் றுலகம் காக்கும் அருந்தொழில் புரிந்து நின்றான்
கற்றவர் மொழிந்த வாறு கழிப்பது கடன தாகும்
மற்றவர்க் குறுதி நோக்கி வருபழி வழிகள் தூரச்
செற்றவர்ச் செருக்கும் சூழ்ச்சி தெருண்டவர் கண்ட தன்றே
— சூளா. மந்திர., 8

கொதிநுனைப் பகழியான் குறிப்பின் அல்லதுஒன்று
இதுநமக் கிசைக்கென் எண்ணும் எண்ணிலா
நொதுமலர் வெருவுறா நுவற்சி யானபின்
அதுஅவன் பகுதிதன் அமைதி வண்ணமே — சூளா.58

இன்னுயிரழியும் போழ்தும் இறைவனுக்கு றுதியல்லால்
முன்னிய முகமன் மாட்டா முற்றி அறிவினார் — சூளா.,1861

செவிசுடச் சென்றாங்கு இடித்தறிவு மூட்டி
வெகுளினும் வாய்வெரீஇப் பேரா கவுண்மதத்த
கைம்மா வயத்ததோ பாகுமற் றெததிறத்தும்
அம்மாண் பினவே அமைச்சு — நீதிநெறி., 45

கதம்கொள் சீற்றத்தை ஆற்றுவான் இனியன கழறிப்
பதங்கொள் பாகனும் மந்திரி ஒத்தனன் பன்னூல்
விதங் களாலவன் மெல்லென மெல்லென விளம்பும்
இதங்கள் கொள்கிலா இறைவனை ஒத்ததோ யானை
— கம்ப., 901

தம்முயிர்க் குறுதி எண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின்று உரைக்கும் வீரர்
— கம்ப., 1407

இறப்பது சரதமேல் இறைவ என்னுரை
வெறுத்தனர் இகழுமேல் வேண்டி இன்னும்யான்
மறுத்தெதிர் மொழியலன் மன்ன என்பிழை
பொறுத்திஎன்று இன்னுரை புகல்வ தல்லதே
— கந்த. சூரனமைச்., 167

மன்னவர் செவியழல் மடுத்த தாம்என
நன்னெறி தருவதோர் நடுவு நீதியைச்
சொன்னவர் அமைச்சர்கள் துணைவர் மேலையோர்
ஒன்னலர் விழைந்தவா றுரைக்கின் றார்களே ஷ., 192

அரசர் சீறுவ ரேனும் அடியவர்
உரைசெ யாதொழி யார்கள் உறுதியே — கலிங்.,378

இன்று சீறினும் நாளைஅச் சேனைமுன்
நின்ற போழ்தினில் என்னை நினைத்தியால் ஷ., 389

மறத்தாம வேலன் மனக்கொள்கைதந் நெஞ்சுள் வான
நிறத்தாடி நீழல் எனத்தோற்ற நிறுத்து மற்று அது
அறத்தாறு எனில்ஆற் றுவர் அன்றெனில் ஆக்கம் ஆவி
இறத்தான் வரினும் மனத்தானும் இழைக்க எண்ணார்
— திருவிளை, பன்றி மந்திரி; 17

ஓ) மேற்கோள்பகுதி:

சுவாமி.: முதனிலைதானே தொழிற்பெயராய் நின்றதற்கு ‘அறிகொன்றறியான்’ என்பது மேற்கோள் (இ.கொ.,66).

*64.9. பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும். (639)*

உரைப்பகுதி:

அ) மணக்.: குற்றப்பட எண்ணும் அமைச்சரில் எழுபது கோடி மடங்கு நல்லர், உட்பகையாய்த் தன் அருகிலிருப்பவர் எ-று.

இவை இரண்டு மந்திரிகளுள் விடப்படுவாரது இலக்கணங் கூறின.

ஆ) பரிதி.: அரசர்க்குப் பழுது எண்ணும் மந்திரியின், கொல்லும் சத்ருக்கள் ஏழ் கோடிதலையான காரியம் எ-று.

இ) பரிப்.: குற்றப்பட்ட எண்ணும் அமைச்சனில் எழுபது மடங்கு கோடிநல்லர், உட்பகையாய்த் தன் அருகில் இருப்பர் எ-று.

இவனைப் போல் அவர்கள் செறுக்க மாட்டார் என்றவாறு இவை இரண்டும் மந்திரிகள் ஆகாதார் இலக்கணம் கூறின.

ஈ) காளி.: இவ்விலக்கணத்தானன்றி அரசர்க்கு உரியவனும் பொருள் கருமத்தைப் பழுதுபட எண்ணும் மந்திரியினும் அரசன் பக்கத்தின்கண் பகைவர் பலர் புடை சூழ்ந்திருத்தல் யாது மற்று அதுவே மிகவும் தலையானது ; மற்று அது எங்ஙனமோ எனின், பலரே ஆயினும் பகைவர் என்று அறிதலால் பரிகரிக்கவும் கூடுமன் ; மற்று உழை இருந்துழி உரைத்தற்கு உரியான் ஒருவன் உணர்வு முதலிய குணம் இலனாயின், மற்று அவன் உரைக்கும் உரையினை நம்பி ஒழுகும் அரசனும் கெடும் அவ்வரசன் ஆளும் நாடும் கெட்டு விடும் எ-று.

உ) பரிமேல்.: பக்கத்திருந்து பிழைப்ப எண்ணும் அமைச்சனொருவனில், அரசனுக்கு எதிர் நிற்பார் ஓர் எழுபதுகோடி பகைவர் உறுவர் எ-று.

எழுபது கோடி என்றது மிகப்பலவாய எண்ணிற்கு என்று காட்டியவாறு. வெளிப்பட நிற்றலான் அவர் காக்கப்படுவர், இவன் உட்பகையாய் நிற்றலான் காக்கப்படான் என்பது பற்றி, இவ்வாறு கூறினார் எழுபதுகோடி மடங்கு நல்லர் என்று உரைப்பாரும்,[1] எழுபது கூறு தலை[2] என்று பாடம் ஓதுவாரும் உளர்.

ஊ) கவிராசர் : ராசாவின் அண்டையிலே இருந்து கொண்டு தப்பு நினைக்கிற மந்திரி ஒருவனில் எழுபதுகோடி சத்துருக்கள் நல்லவராவர், எ-று.

எ) பழைய 2 : 'தெவ்வர், எழுபதுகோடிதலை' — பாம் பக்கதிலிருந்து பழுதெண்ணும் அமைச்சன் ஒருவன், அரசனுக்குப் பகைவர் எழுபது கோடியிலும் அதிகமாம்.

மல்லர் : என்பது அரசனுக்கு (இ)ரெண்டகம் நினைக்கப்பண்ணுகிற மந்திரியைப் பார்க்க அரசனுக்கு எதிரியாய் நிற்கிற பகைவர எழுபதுகோடி பங்கு நல்லது என்றவாறு.

1) இவ்வாறு உரைப்பர் மணக்குடவரும் பரிப்பெருமாளும்
2) தொகுப்பும் குறிப்பும் காண்க

அதாவது எழுபதுகோடி பகைவர் அரசனுக்கு எதிராய் நின்றால் அவன் தாங்கமாட்டாமல் அவசியமாய்க் கெட்டுப்போவான். அப்படிப் போல ரண்டகம் நினைக்கிற மந்திரி அரசனுக்குத் தப்பாமலக் கேடு செய்வான் என்கிறதினாலேயும் எழுபதுகோடி பகைவர், அரசனுக்கு எதிராய் நின்றாலத் தப்பிப் போறதுக்கு அவகாசம் உண்டானாலும் ரண்டகம் நினைக்கிற மந்திரிபின் உளப்பகைக்குத் தப்பிப் போறதுக்கு அவகாசமில்லை என்கிறதினாலேயும் உளப்பகையாயிருக்கிற மந்திரி ஒருவனும் எழுபதுகோடி பகைவரும் அரசனுக்குச் சரியென்கிறதும் அல்லாமல் உளப்பகையாயிருக்கிற மந்திரியைப் பார்க்க எழுபதுகோடி பகைவர் அரசனுக்கு நல்லது என்பது கருத்து.

பழுது—பொய், எண்ணல்-நினைத்தல், பக்கத்துட்டெவ்வர்—பக்கத்துள் தெவ்வர், தெவ்வர்-பகைவர், தலை—பெருமை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக். 'பழுதெண்ணும் மந்திரியின், பக்கத்துள் தெவ்வர் எழுபது-கோடிதலை (அவர்)' எனக் கூட்டித் தலை எனப்பாடமும் கொள்ளுவர். தலை-தலையாவர், நல்லர் எனப் பொருள் கண்டனர். பரிதியும் அங்ஙனமே. மணக். 'எழுபது கோடி மடங்கு நல்லர்' என நேரேபகைவர்க்குஆக்காது அவரின் நன்மைக்கு அடையாக்குவர். காளிங்கரும் 'பக்கத்துத்தெவ்வர் எழுபது தலை' எனப் பாடங்கொண்டு, 'அரசர்க்கு உரியவனும், பொருள் கருமத்தைப் பழுதுபட எண்ணும் மந்திரியினும் பகைவர் எழுபதுகோடியுறுதல் தலையானது' என்பர். இதில் 'அரசற்கு உரியவனினும் மந்திரியினும் எழுபதுகோடி பகை தலையானது' என்று பாடம் இருத்தல் வேண்டும். எழுதுவோர் படிப்போர்களின் தவறுதலால் 'இன்' உருபு விடுபெற்றுள்ளது எனத்தோன்றுகிறது. 'எழுபது கூறுதலை' என்பது பரிப்., மணக்., காளிங்கர் பாடம். கூறு—மடங்கு.

பரிமேலழகரும் அவர் வழிவரும் சிலரும் 'தெவ் + ஓர் + எழுபது + கோடியுறும்' எனப் பாடங்கொள்வர். 'தெவ்வர்' என்றது பாடமாயின் 'உறும்' என்ற செய்யும்என்முற்றைக் கொண்டு முடிதல் மரபு வழுவாம். ஆதலால் 'ஓர் எழுபது' எனத் திருத்தினர். ஓர்— அசைநிலையாமேயன்றிப் பொருள் தருஞ் சொல்லாகாது என்க.

'உறும்' என்பது 'மிகும்' என்ற பொருள் தருமேயன்றி 'நல்லர்' எனப் பொருள் காண்பதாயின் ஆன்றோர் ஆட்சியும் வேண்டியுள்ளது. சிந்திக்க.

மணக்குடவர் கொண்ட பாட இயைபு நோக்காது உரை வேற்றுமை ஆசிரியர் 'தெவ்வேர் உறும்' என நின்றாங்கே பொருள் கொண்டு பலர்பால் வினைமுதல் செய்யுமென் முற்று ஏற்றதாகக் கூறியிடர்ப்பட்டனர். அவர்கொண்ட பாடம்'தெவ்வர் எழுபது கோடி தலை' என்பதே, 'தலை—தலை ஆவர்' என வினைமுற்று வருவித்து முடிக்க. 'ஓர்' என்பதனை அசைநிலையாக்குதலினும் பொருணிலையாகக்கோடல் சிறந்தது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

பழுதெண்ணும் வன்மனத்தார். — சீவக., 1552

இறைவனுக்கு அகிதம் எண்ணுமந்திரியும் — விநா. அரசி 105

*64.10. முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்*
*திறப்பா டிலாஅ தவர். (640)*

உரைப்பகுதி :

அ) மணக். : அடைவுபட[1] எண்ணியும், தம்மால் முடிவது இல்லாதவற்றையே செய்யா நிற்பர்; வினை செய்யுந் திறன் இல்லாதார் எ—று.

இஃது எண்ணவல்லாராய் வினை செய்யமாட்டார் என்று கூறிற்று.

ஆ) பரிதி. : விசாரம் இல்லாதார் ஒருகாரியத்தை முடிப்போம் என்று எடுத்து முடியாமல் கைவிடுவார். எ—று.

இ) பரிப். : அடைவு பட எண்ணியும் தம்மால் முடிதல் இல்லாதவற்றைச் செய்யா நிற்பர் வினை செய்யும் திறன் இல்லாதார் எ—று.

1. அடைவுபட — முறைப்பட

இஃது எண்ண வல்லாராய் வினைசெய்ய மாட்டாதாரும் உளர் என்று கூறிற்று.

ஈ) காளி : நெறிபடவே எண்ணியும் தாம் எண்ணியவண்ணமே முடியச் செய்யமாட்டார் : மற்று யார் எனின் அரசியல் திறப்பாடு அமைவுற அறியும் அறிவிலாத அமைச்சர் எ—று.

உ) பரிமேல். : செய்யப்படும் வினைகளின் முன் அடைவுபட எண்ணிவைத்தும், செய்யுங்கால் அவை முடிவிலவாகவே செய்யா நிற்பர், முடித்தற்கு ஏற்ற கூறுபாடு இல்லாதவர் எ—று.

அக்கூறுபாடாவன வந்த வந்த இடையூறுகட்கு ஏற்ற பரிகாரம்[2] அறிந்து செய்தலும், தாய் திண்ணியராதலுமாம். பிழையாமல் எண்ண வல்லவராய்வைத்தும் செய்து முடிக்க மாட்டாரும் உளர் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் அமைச்சருள் விடப்படுவாரது குற்றம் கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : செய்யவேண்டின காரியங்களை முந்தி அடைவாக நினைத்துக் கொண்டிருந்தும், நிறைவேறச் செய்யாமல் விட்டுவிடுவர் திறமையில்லாதவர் எ—று.

ஏ) பழைய 2 : செய்யப்படும் வினைகளை முன்னடைவுபட வெண்ணி வைத்தும், செய்யுங்கால் அவை முடிவிலவாகவே செய்யா நிற்பர், முடித்தற்கேற்ற கூறுபாடு இல்லாதவர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பரிதியுரையில் 'முறைப்படச்சூழ்ந்தும்' என்பதற்கு 'முடிப்போம், என்று எடுத்தும்' எனக் கருதுபொருள் எழுதுவர்.

தேவநேயர் தரும் 'பழுதெண்ணுவோரைப்போலத் தண்டிக்கத் தக்கவர் அல்லரேனும், விலக்கத்தக்கவர் என்பதாம்' என்ற பயன் கூறுமுடிநிலை சிறந்த பயம் பயப்பது.

'முறைப்படச் சூழ்ந்தும்' என்பதற்கு நீதிநெறிக்கேற்ப ஆராய்ந்தும்' என்னும் வரத'. உரை. இராம., முன்னே சொன்னபடி சுருதியுக்தி அனுபவங்கட்கு ஒத்தபடி' என்பர்.

2. பரிகாரம் பிராயச்சித்தம்

இவைகளைக் காட்டிலும். முன் அடைவுபட ஆராய்ந்தும், என்ற உரையும் இக்கருத்து அமைந்த கவிராசர், சி இ., பழைய, சபாபதி உரைகளும் ஏற்புடையன.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும் :

முறையுறச் சூழு மாத்திர மன்றி முடிக்கமாட் டாதமந் திரியும்.
—விநா. அர.,105

முற்றுற வருவதும் முதலும் அன்னதால்
பெற்றிடு பயன்களும் தூக்கியே
தெற்றென உணர்ந்துபின் பலவும் செய்வரால்
குற்றமொன் றவர்வயின் குறுக வல்லதோ.
—கந்த. சூரனமைச்., 93

## 64. அமைச்சு

| | கருவியும் | வன்கண் | பிரித்தலும் | தெரித்தலும் | அறனறிந்து | மதிநுட்பம் | செயற்கை | அறிகொன்று | பழுதெண்ணும் | முறைப்படச் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 5 | 1 | 6 | 4 | 3 | 2 | 7 | 8 | 10 | 9 |
| பரிதி. | 1 | 2 | 6 | 5 | 4 | 3 | 7 | 10 | 9 | 8 |
| பரிப். | 5 | 1 | 6 | 4 | 3 | 2 | 7 | 8 | 10 | 9 |
| காளி. | 3 | 1 | 5 | 10 | 7 | 2 | 4 | 6 | 8 | 9 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

64 வது அதிகாரம் 'அமைச்சு' முற்றிற்று.

# ௬௫. சொல்வன்மை

அ) மணக்.: சொல்வன்மையாவது வார்த்தைசொல்ல வல்லவனாதல். அரசர்க்குக் கல்வி இன்றியமையாததுபோல அமைச்சர்க்கு இஃது இன்றியமையாதது ஆதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: சொல்வன்மையாவது பதரற்றதாய்[1] பயனுண் டாகிய சொல்லை உரைத்தல் எ—று.

இ) பரிப்.; சொல்வன்மையாவது வார்த்தை சொல்ல வல்லவன் ஆதல். அரசர்க்குக் கல்வி இன்றியமையாதது போல அமைச் சர்க்கு இஃது இன்றியமையாமையின் அதன்பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது தான் கருதிய வினை முடியுமாற் றால் அமைச்சியல் நடத்தற்கு ஏதுவாய சொற்களைச் சொல்ல வல்லனாதல். மேல் ''ஒருதலையாச் சொல்லலும் வல்லது''[2] என்றதனையே சிறப்புப் பற்றி விரித்துரைக்கின்றமையின், இஃது அமைச்சின்பின் வைக்கப்பட்டது.

ஊ) கவிராசர்: அஃதாவது—தான் நினைத்த காரியம் முடிகிற தற்கேற்ற வார்த்தை சொல்ல வல்லவனாதல் என்பது.

ஏ) பழைய 2: அதாவது, தான் கருதிய வினை முடியுமாறு வார்த்தை சொல்லல்; 'ஒரு தலையாய்ச் சொல்லலும் வல்லது அமைச்சு' என்பதனால் அமைச்சனது சொல்வன்மை.

1. பதரற்றதாய் — உள்ளீடையதாய்
2. குறள்., 634

மல்லர்: அஃதாவது மந்திரியாயிருக்கிறவன் பேச்சிலே திராணியுள்ளவனாய்[3] இருக்கிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும் : சொல்வன்மை அமைச்சருக்கு இன்றியமையாதது என்கின்ற மணக்குடவர் பரிப்பெருமாள் உரைகளிலும் 'தாம் கருதிய வினைமுடியுமாற்றான் சொற்களைச் சொல்லுதல்' என்ற பரிமேலழகர் உரை சிறந்தது. கா சு. வும் இதனையே கொண்டுரைப்பர். 'தங்கருத்தைப் பிறர் உளங்கொள்ளுமாறு சொல்லுதல்' என்பர் சி. இ.; 'சொல்ல வேண்டியதை நன்றாகச் சொல்லத்தெரிந்த பேச்சுத்திறமை' இராமா.: 'தன் சூழ்ச்சியை அரசனுக்கு எடுத்துச் சொல்வதில்' வல்லவனாதல்' என்பர் தேவநேயர். அமைச்சன் கடமை அரசன் அறியச் சொல்லும் சொல்வன்மை மட்டும் அன்று. பகைப்புலத்தாரும் மக்களும் மற்ற அமைச்சரும் ஏற்றுச் செயலாற்றவும் தம்மரசற்கு அடிபணியவும் செய்யவல்ல சொல் வன்மையே குறிப்பது.ஆதலால்பாவாணருரை நிரம்பியதன்று. 'சொல்வன்மை—சொல்லுதலின் வல்லமையும், வன்மையாகச் சொல்லுதலும் இருபிரிவினது' என்று கூறும் வரதராசர் உரை சிறந்தது. இதனுள் வன்மையாகச் சொல்லுதலை ஆசிரியரே 634ம் குறளில் 'ஒருதலையாச் சொல்லல் வல்லது அமைச்சு' என்றமையான் ஈண்டும் அதனை இணைக்கவேண்டுமா? என்பது சிந்தித்தற்குரியது.

*65.1. நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்*
*யாநலத் துள்ளதூ உம் அன்று. (641)*

அ) மணக்.: நாவினது நலம் என்று சொல்லப்படுகின்ற நலம் ஒருவற்கு உடைமையாவது அந்நலம் எல்லா நலத்துள்ளும் உள்ளதொரு நலமன்று; மிக்கது எ-று.

எல்லா நலத்துள்ளளும் உள்ளதொரு நலமன்று என்றமையால் இன்பம் பயக்கும் என்பதாயிற்று.

ஆ) பரிதி.: நாவின் நலமாகிய சொல்லும் மற்றை நாலு புலன்களினும் விசேஷம் எ.று.

3. திராணியுள்ளவனாய் - வன்மையுள்ளவனாய்

இ) பரிப்.: நாவினது நலம் என்று சொல்லப்படுகின்ற நலம் ஒருவற்கு உடைமையாவது;அந்நலம் எல்லா நலத்துள்ளும் உள்ளது ஒரு நலன் அன்று;மிக்கது. என்றவாறு. இஃது எல்லா அழகினும் மிகுந்த அழகு என்றமையான் இன்பமும் பயக்கும் என்றது. 'சொல்வலை வேட்டுவன்'[1] என்றாரும் உளர்.

ஈ) காளி : 'நாநலன்' பாடம். அரசற்கு அமைச்சராய் அமைந்தோர்க்குத் தமது நாவில் பிறக்கும் சொல்நலமாகின்ற இன்னலமுடைமை யாவது; மற்று அது வேறுயாவை சில நன்மையின் கண்ணும் உள்ளது ஒன்று அன்று; எனவே இதற்கு மற்றும் ஒரு நன்மை உவமையாக எடுத்து உரைத்தல் அரிது என்பது பொருள் எ-று.

உ) பரிமேல்.: அமைச்சர்க்கு இன்றியமையாக் குணமாவது சான்றோரான் நாநலம் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் நலத்தினை உடையராதல்;அந்நலம் பிறர்க்கும்[2] பிறநலமெல்லா[3] வற்றுள்ளும் அடங்குவதன்றி மிக்கது ஆகலான்.

. நாவால் உளதாய நலம் எனவிரியும். இந்நலம் உலகத்தைத் தம் வயத்ததாக்கும் அமைச்சர்க்கு வேறாக வேண்டும் என்னும் நீதி நூல் வழக்குப் பற்றி 'நாநலம் என்னும் நலன்' என்றும், பிறர்க்கும் இதுபோற் சிறந்தது பிறிது இன்மையான் 'அந்நலம் யாநலத்துள்ள தூஉம் அன்று' என்றும் கூறினார். பிரித்தல் பொருத்தல் முதலிய[4] தொழிலில்லாதார்க்கும் இஃது இன்றி-யமையாதாய பின் அத்தொழிலார்க்குக் கூற வேண்டுமோ என்பது கருத்து.

ஊ) கவிராசர் : பெரியவர்களாலே நல்ல வார்த்தையை உடைவன் என்று சொல்லப்பட்ட நாநலமுடையவனே நல்லவன்.

1.புறம்., 252

2. பிறர்க்கும் — அமைச்சர் அல்லாதவர்க்கும்

3. பிறநலம் என்றது நாலநம் இல்லாத பிறவற்றை. அவை கல்வியுடைய்மை பொருளுடைமை, ஆண்மையுடைமை, அழகுடைமை முதலாயின

4. முதலிய — பேணிக்கொளல், தெரிதல், தேர்ந்து செயல்

அந்த நாநலம் உலகத்தையெல்லாம் தனக்குச் சினேகிதமாகப் பண்ணும். எ-று.

ஏ) பழைய 2 : அமைச்சர்க்கு இன்றியமையாத நற்குணமாவது சான்றோரால் நாநலமென்று சிறப்பித்துச் சொல்லும் நலம்முடையர் ஆதல்; அந்நலம் பிறநல மெல்லாவற்றுள்ளும் அடங்குவதன்றி மிக்கதாகலான்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பழைய உரையாசிரியர்களில் 'நலம்' என்ற சொற்கு 'அழகு', 'இன்பம்' எனப்பொருள் காண்பர் சிலர். பரிதி. 'நாவின் நலம் அதாவது சொல்' என்பர். பரிமேலழகர் 'உலகத்தைத் தம் வயமாக்கும் வன்மையது' என்ற கருத்தமைய எழுதுவர். நா என்பது நாவாகிய கருவியால் ஒலிக்கப்பெறும் சொல்லைக் கருவியாகு பெயராகக் குறிக்கும். நலம் என்பது நலம் பயப்பதாகிய அச்சொல்லின் வன்மையைக் குறிப்பது ஆதலின் இந்நயம் அமைய எழுதும் பரிமேலழகர் உரை சிறந்தது எனலாம்.

உரையமைதி : பரிமேலழகர் 'அமைச்சர்க்கு மிகத்தேவையான குணமாவது நாநலம் உடையராதல்' என எழுவாயை வருவித்து முடிப்பர். மணக்குடவர், குழந்தை' வ. சுப. மா., சாமி. சிதம்., வரத., தேவநேயர் ஆகியோர் 'நாநலன் என்னும் நலன் உடைமை' எனச் செய்யுட் சொல்லைக் கொண்டே பொருளை முடித்துக் காட்டுவர். கவிராசர், சபாபதி முதலியோர் வழக்கம் போலப் பரிமேலழகரை அனுகியுரைப்பர். பரிதியார் மட்டும் 'நாநலம்' என்றமையால் 'யாநலமும்நாஒழிந்த ஏனைய பொறிகளான் நுகரப்பெறும் இன்பமாதல் கூடும் எனப்பாரிசேட அளவையாற் கண்டு ஏனைய நாலு புலன்களாற் பெறும் இன்பத்தினும் பெரிது' என்பர். கவிராசர் கருத்துப் பொருளாக உரைப்பர்.

பிற்கால உரையாசிரியர்களில் கா.சு. 'நாவன்மை என்னுஞ் சிறப்பினை உடைத்தாயிருக்க வேண்டும்' என்பர். இதில் யார் இருக்க வேண்டும் என்பது குறிக்கப் பெறாமையால் இயல் நோக்கி அமைச்சரை எழுவாயாகக் கூறுவர் எனலாம். அது போலவே 'யா நலம்' என்பதற்கு 'எவ்வகைச்சிறப்பு' என நலம் அனைத்தையும் கருதச் செய்கிறார். அதனால் இவ்வுரை நடை தெளிவான கருத்தினைப் பயந்திலது எனவும் கூறலாம். இலக்-

குவனார் 'நா நலன் என்னும் நலனுடைமை' என்ற தொடரையே எழுவாயாக்கி, 'யாவருக்கும் இன்றியமையாதது' எனப் பயனிலை வருவித்து முடிப்பர். அமைச்சர்க்கே சிறப்புவகையில் அமையவேண்டிய சொல்வன்மையைப் பொதுமைப் படுத்துவர் இவர். இராம 'நலக்கு நல்லவன் என்னும் குணம்' என நா நலத்தைக் குணமாக்குவர்.

**ஒ) ஒப்புமைப்பகுதி:**

**நா நலம் என்னும் நலனுடைமை:**

மயிர்வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்
உகிர்வனப்பும் காதின் வனப்பும் — செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு. —சிறு. 35

ஆக்கப் படுக்கும் அருந்தளைவாய் பெய்விக்கும்
போக்கப் படுக்கும் புலைநரகத்து உய்விக்கும்
காக்கப் படுவன இந்திரியம் ஐந்தனும்
நாக்கல்ல தில்லை நனிபேணு மாறே. —வளை., 13

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும் — உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனி னென்னா மஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து. —நீதிநெறி விளக்கம்

65. 2. ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு. (642)

**உரைப்பகுதி :**

**அ) மணக்.:** ஆக்கமும் கேடும் சொல்லினால் வருவதால், சொல்லின் கண் சோர்வைப்போற்றிக்காக்க வேண்டும் எ-று.

இது சோர்வுபடமற் சொல்லல் வேண்டும் என்றது.

ஆ) பரிதி : வாழ்வும் கேடும் அதனால் வருதலால் சொற் சோர்வு வாராமல் காத்துச்சொல்லுக எ—று.

இ) பரிப். : ஆக்கமும் கேடும் சொல்லினால் வருதலால் அச் சொல்லின்கண் சோர்வைப் போற்றிக் காக்க எ—று

இது சோர்வு படாமல் சொல்ல வேண்டும் என்றது.

ஈ) காளி. : அரசர் வாழ்க்கையாகிய ஆக்கமும் அது வீழ்தல் ஆகிய கேடும் அமைச்சரது சொல்லினானே வந்து விளையும். ஆகலான், மற்றைச் சொல்லின்கண் ஒரு சோர்வும் படாமல் காத்துச் சொல்லத்தகுவதனைக் குறிக்கொண்டு சொல்லுக எ—று.

இனி உலகத்தில் யாவரேனும் யாதானும் ஒன்றினை இனிது இயற்றுமிடத்துத் தாம் கருதிய கருத்து உரையினும் செயலினும தூயதாக வேண்டுதலான் இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

உ) பரிமேல்.: தம் அரசற்கும் அங்கங்கட்கும் ஆக்க அழிவுகள் தம் சொல்லான் வருமாகலான், அப்பெற்றித்தாய சொல்லின்கண் சோர்தலை அமைச்சர் தங்கண் நிகழாமல் போற்றிக்காக்க.

ஆக்கத்திற்கு ஏதுவாய நற்சொல்லையும் கேட்டிற்கு ஏதுவாய தீச்சொல்லையும் சொல்லாதல் ஒப்புமைபற்றி 'அதனால்' என்றார். செய்யுளாகலின், சுட்டுப்பெயர் முன்வந்தது.[1] பிறர் சோர்வு போலாது உயிர்கட்கெல்லாம் ஒருங்குவருதலால் 'காத்தோம்பல்' என்றார். இவை இரண்டு பாட்டானும் இஃது, இவர்க்கு இன்றியமையாது என்பது கூறப்பட்டது.

காளி.: அதனால் என்பது, ''முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே''[2] என்பதனான் அறிக ''அவனணங்கு நோய் செய்தான்'' என்பதுபோலச் செய்யுளாகலின் சுட்டுப்பெயர் முன்வந்தது. ஆக்கத்திற்கும், கேட்டிற்கும் காரணமாகிய நற்சொல்லும், தீச்சொல்லும் சொல்லுதல் ஒற்றுமைப் பற்றி அவற்றால் என்னாது 'அதனால்' என்று ஒருமையாக்கினார்.

1. இயற்பெயர் சுட்டுப்பெயர் வருதல் வழாநிலை ஆயினும் செய்யுள் நோக்கி இயற்பெயருக்கு முன்னே சுட்டுப்பெயர் வந்தது

2. தொல், சொல், 39

ஊ) கவிராசர் : தனக்கும் தன்னையுடையவர்க்கும் செல்வமும் அழிவும் தன்வசனத்தால் வருமாதலால்,அப்படிப்பட்ட சொல்லிலே சோர்வுகளைத் தங்களிடத்திலே வாராமற்காக்க வேணும்.

ஏ) பழைய 2 : செல்வமுங்கேடுஞ் சொல்லினான் வரும் ஆகலான், சொல்லின்கண் சோர்வைப்போற்றிக்காக்க.

மல்லர். : என்பது அரசனுடைய மந்திரி மற்ற ஆஸ்தானங் களிலே பேசுகிற பேச்சுகள் தன்னரசனுக்கு நன்மையுங் கேடும் வருகிறதுக்கு ஏதுவாயிருக்கிறதுனாலப் பேச்சுகளிலே அசட்டை வராதபடிக்கு எச்சரிக்கையோடே காக்கவேண்டியது என்றவாறு.

மந்திரி புத்தியோடயும் வினையத்தோடேயும் பேசினாலக் காரியங்கொள்ளுவான். எக்கச்சக்கமாய்ப் பேசினாலக் காரியங் கெடுப்பான் என்கிறதினால் அவன் ராசாவினுடைய காரியங் களைப் பேசுகிறபோது வெகு அவதானமாய்ப்[3] பேசவேண்டியது என்பது கருத்து.

ஆக்கம் — இலாபம், ஓம்பல் — காத்தல், கண் — இடம், சோர்வு—மறதி.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக். ; 'காத்து ஓம்பல் வேண்டும்' என வினைமுற்றை வருவித்து முடிப்பர். ஏனையோர் ஓம்பல்—ஓம்புக என அல்லீற்று வியங்கோளால் முடிப்பார்கள்.

பரிமேலழகர் 'தீய சொல்லாற்கேடும், நல்ல சொல்லால் ஆக்கமும் வருதலான்' எனப்பிரித்துப் பொருள்தருவர். ஏனையோர் 'கேடும் ஆக்கமும் சொல்லால் வருதலான்' எனப் பொதுவகையாற் கூறுவர். அமைச்சர்கள் பேசும்போது இது நல்லசொல்லா? தீயசொல்லா? என அறிந்துபேசுதல் இயலாது. சொல்லின் நன்மை தீமைகளைப் பயக்கும் பயனைக்கொண்டும், கேட்போர் மன நிலையைக்கொண்டும் பின்னர் அறிய இயலுமேயன்றி அப்போதே அறிதல் இயலாது. நல்லன போன்றிருந்து தீமை பயப்பனவும் சிலவுண்டு. ஆதலால் நன்கு சிந்தித்துச் சோர்வு படாமற் பேசுக என்பதே இக்குறட் கருத்து என்பதனை நன்கு

3. அவதானமாய் — எச்சரிக்கையாய்

நோக்கிய மணக்குடவர் முதலியோர் 'சொல்லை' என வாளா கூறிப்போந்தனர். இதுவே சிறப்பாதலைக் காண்க.

சோர்வு-மறதியால் முன்னொடுபின் முரண்படப் பேசுதலும் மறைவெளிப்படப் பேசுதலுமாம் என்க. 'தளர்ச்சி' என்பர் கா.சு. 'ஆக்கம்-வாழ்வு' பரிதி.;'அரச வாழ்க்கையாகிய ஆக்கம்' காளி,

கவிராசர் தன்னையுடையவருக்கு ஆக்கமும் அழிவும் நல்வசனத்தால் வருதலான்' என்பர். நல்வசனத்தால் அழிவு வாராது ஆதலின் ஒருசார் கருத்தே கொள்க. 'விழிப்போடு சொல்லுக' எனக் கருத்துப் பொருள் காண்பர் வ.சுப,மா. 'அதனால் — சொல்வன்மையால்' என்பர் சி.இ.;கேடு சொல் வன்மையால்; உளதாமாயின் சொல்லுக்கு வன்மை ஏது? சோர்வு தானே! என்பதையும் எண்ணுக.

இராம.'சோர்வு வராமற் காக்க' என்பதற்கு எழுதும் நயம் சிறந்தது. மு.கோ. 'நூலாக்கமும் சொல்லாக்கமும், கேடும் வருதலால் சோர்வுபடாமலும் சொல்ல வேண்டியதை மறவா மலும் சொல்லுக' என்பர். நூலாக்கம் — சொல்லாக்கம் ஈண்டு வேண்டப்படாதன ஆதல் கூடும். ஆதலால் வளர்ச்சி என்ற பொருளே தக்கது. வரத. 'சோர்வுபடப்பேசுதல் — முன்னொடுபின் முரண்படப்பேசுதல். சொற்காத்தல்-மேற்கொண்ட செயலுக்குத் தேவையான அளவு பேசுதலும் பகைவர் குற்றங் காணாத படிப் பேசுதலும் + ஆம். ஓம்பலாவது கோபதாபம், மறதி அறியாமை இவற்றால் தவறுநேராதபடிப் பேசுதலும் குற்றம்படப் பேசா மையும் என்பர். தேவநேயர்மு.ரா அரு., சோர்வு — தவறு, என்பர்.

காத்து ஓம்பல் என ஒருபொருட்பன்மொழிப்பிணைப்பால் எச்சரிக்கையாகக் காக்க என்றவாறாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

காத்தோம்பல் சொல்லின்கன் சோர்வு ;

ஆக்கப் படுக்கும் அருத்தளைவாய்ப் பெய்விக்கும்
போக்கப் படுக்கும் புலைநரகத் துய்விக்கும்
காக்கப் படுவன இந்திரியம் ஐந்தினும்

நாக்கல்ல தில்லை நனிபேணு மறே. —வளையாபதி ,13

சொற்சோர் வுடைமையின் எச்சோர்வும் அறிப—முதுமொழிக்:,2:8

சொல்லுங்கால் சோர்வின்றிச் செல்லுதன் மாண்பினிதே.
— இனியவை., 35

சொற் சோர்வு படேல். — ஆத்தி., 53

*65.3. கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்*

*வேட்ப மொழிவதாம் சொல்.* *(643)*

**உரைப்பகுதி :**

**மணக். :** வினாவினாரைப் பிணித்துக்கொள்ளுந் தகையவாய், வினாவாதாரும் விரும்புமாறு சொல்லுதல் சொல்லாவது எ—று.

இது மேம்படக் கூறல் வேண்டும் என்றது.

**ஆ) பரிதி :** கேட்டவர் செவியும் மனமும் பிணிக்கவும் கேளாதாரும் சத்ருக்களும் நாலு புலன்களும் விரும்பச் சொல்லுதல் சொல் எ—று.

**இ) பரிப் .:** வினாவினாரைப் பிணித்துக் கொள்ளும் தகையமைவாய் வினாவாதாரும் விரும்புமாறு சொல்லுதல் சொல்லாவது எ—று.

கேட்டார் என்பதனைக் கேள்வியுடையார் எனினும் அமையும். சொல்லக் கேட்டார் எனினும் அமையும். கேளாமையும் அவ்வாறே கொள்ளப்படும். இது நயம்படக் கூற வேண்டும் என்றது.

**ஈ) காளி .:** பலவகைப்பட்ட நூல்களையும் பாடம் ஓதி அவற்றின் பொருட்பயன் தெளியக் குரவரை[1] வழிப்பட்டுக் கெட்ட குற்றமற்ற சான்றோரையும் தம்மாட்டுப் பிணித்துக்

---

1. குன குர்வரை ஆசிரியரை

கொள்ளும் தகுதியை உடையனுமாய்ப் பின்னும் அங்ஙனம் பொருந்தக்கேளாது புவியிடைத்திரியும் புல்லறிவாளரும் 'யாமும் இவ்வாறுகேட்டு ஒன்று அறியவேண்டும்' என்னும் விருப்பம் உளதாகச் சொல்லுமது அமைச்சரது சொல்வன்மை எ—று.

உ) **பரிமேல். :** நட்பாயேற்றுக் கொண்டாரைப் பின் வேறுபடாமல் பிணிக்கும் குணங்களை அவாவி[2] மற்றைப் பகையாய் ஏற்றுக் கொள்ளாதாரும்[3] பின் அப்பகைமை ஒழித்து நட்பினை விரும்பும் வண்ணஞ் சொல்லப்படுவதே அமைச்சர்க்குச் சொல்லாவது.

அக்குணங்களாவன வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன் தருதல் என்றிவை முதலாயின[4]. அவற்றை அவாவுதலாவது சொல்லுவான் குறித்தனவேயன்றி[5]. வேறு நுண்ணுணர்வுடையோர் கொள்பவற்றின் மேலும் நோக்குடைத்தாதல்[6]. அவாய் என்னும் செய்தெனெச்சம் மொழிவது என்னும் செயப்பாட்டுவினை கொண்டது. இனிக்கேட்டார் கேளார் என்பதற்கு நூல்கேட்டார் கேளாதார் எனவும், வினவியார் வினவாதார் எனவும் உரைப்பாரும் உளர். 'தகையவாய்' என்பதற்கு எல்லாரும் 'தகுதியையுடையவாய்' என்று உரைத்தார்; அவர் அப்பன்மை 'மொழிவது' என்னும் ஒருமையோடு இயையாமை நோக்கிற்றிலர். இதனான் சொல்லினது இலக்கணம் கூறப்பட்டது.

> **காரி.:** தகையவாய் — குணங்களை அவாவி ; அவாய் என்னும் எச்சம் மொழிவது என்னுஞ் செயப்பாட்டுவினை கொண்டது என்றார் ; தகைய மொழிவது என்னும் பன்மையொருமை மயங்காமல்.

---

2. அவாவி - விரும்பி
3. ஏற்றுக்கொள்ளாதாரும் - ஒப்புக்கொள்ளதாரும்
4. முதலாயின என்றமையின் முறையின் வைப்பு, உலகமலையாமை, உதாரணமுடையதாதல் முதலியவற்றைக் கொள்க
5. குறித்தனவேயர்றி - உத்தேசித்த பொருள்களை யன்றி
6. கொள்பவற்றின் மேலும் நோக்குடைத்தல் - கொள்ளும் பொருள் மேலும் கருத்தினை யுடைத்தல்

ஊ) கவிராசர்: சினேகமானவர்களை வேறுபடாமல் பிணிக்குங் குணங்களை அவாவி, பகைவர்கள் கேட்டால் முந்தின பகை யைவிட்டு நட்பினை விரும்பும் வண்ணம் சொல்லத் தக்கதே சொல்லாவது எ—று.

ஏ) பழைய : நட்பாய்க்கேட்டாரைப் பின் வேறுபடாமலிறுகக் கட்டுந்தகைமையையுடையவாய், பகையாயினாரும் பகை தவிர்ந்து விரும்பச் சொல்லப்படுவதே அமைச்சர்க்குச் சொல் லாவது.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'கேட்டார்' 'வினவினார்' மணக்.; 'சொல்லக் கேட்டார் அல்லது கேள்வியுடையர்' பரிப்.; 'கேட்டவர்' பரிதி ; 'பல வகை நூல்களைப் பாடம் ஓதி அவற்றின் பொருட்பயன் தெரிய ஆசிரியப்பாவில் வழிபட்டுக்கேட்ட சான்றோர்' காளி.; 'நட்பாய் ஏற்றுக்கொண்டார்' பரிமேல்., கவிராசர், பழையஉரை 2, சபாபதி; 'கேட்பவர்' கா.சு.; 'நேரில் பேசக்கேட்டனர்' குழந்தை; 'தான் சொல்வதைக் கேட்டவர், மு.கோ., சாமி' சிதம். ; 'காதில் கேட்கிறவர்கள் இராம. 'கேளார்'. 'வினாவாதார்' மணக். ; 'கேள்வியுடையரல்லார் அல்லது சொல்லக் கேளார்' பரிப். ; 'சத்ருக்களும் கேளாதாரும்' பரிதி ; 'பல நூல்களைப்படித்துப் பொருட்பயனை ஆசிரியனிடம் வழிபட்டுக் கேளாதவர்களாய்ப் புவியிடைத்திரியும் புல்லறிவாளர் கள்', காளி.; 'பகையாய் ஏற்றுக்கொள்ளாதார்' பரிமேல்., கவிராசர், பழைய உரை 2, சபாபதி, கா சு., இராம., தேவநேயர்; 'தமது அரசியல் சமயக் கோட்பாட்டை எதிர்ப்பவர்' மு. கோ. ; வரத. 'நட்பினர் பிரியாதபடியும், பகைவர் விரும்பும்-படியும், சுற்றம் யேற்றவும், அயலார் விரும்பவும் பேசவேண்டும் அதுவே பேச்சுத்திறன்' என்பர்.

'வேட்ப' 'விரும்ப' மணக்., 'நாலுபுலன்களும்' பரிதி. ; 'யாமும் கேட்டு இவ்வாறு அறிய வேண்டும் என விரும்ப' காளி ;'பகைமை நீங்கி நட்பை விரும்ப' பரிமேல்., கவிராசர் பழைய, தேவநேயர் முதலியோர்.

இவற்றுள், 'கேட்டார்'-'அமைச்சன் சொல்லும் உரைகளைக் கேட்டவர்,' 'அவற்றைக்கேளாதவர் பகைவர் வேட்ப—விரும்பிப்

பின்பற்ற அல்லது விரும்ப' என்ற உரைகள் சிறந்தன. இயல் பாயின. அங்ஙனமன்றிப்' பாடங்கேட்டார் முதலியன வலிந்து கொள்ளப்பட்டனவே. வரதராசனார் உரைபோன்றன சில மேடைப்பேச்சை உளங்கொண்டு உரைக்கப்பெற்றன. அமைச்சர் கட்கு அரசியல் ஆலோசனையில் ஆழ்ந்த நோக்குடைய சொல் சிலவாயினும் ஆக்கம் அளிப்பனவே சொல்வன்மை. அதுவே சிறந்தது என்பதே ஈண்டு வேண்டற்பாலது என எண்ணுக.

தகை+அவாய் எனப்பிரித்துக் குணங்களை அவாவி எனப் பொருள் கொள்ளும் பரிமேலழகர் தகையவாய் எனக்கொண்டு பொருள் கூறும் ஏனைய உரையாசிரியர்களைப் 'பன்மை ஒருமையோடு இயையாமை நோக்கிற்றிலர்' என வன்மையாக மறுப்பர். ஏனோர் கூறும் 'தகைய' என்பதனை அஃறிணைப் பலவின்பால் முற்றாகக்கொண்டு அதனை ஆய் என எச்சமாக்கிய தாகக் கொண்டமையால் அது 'மொழிவது' என்ற ஒருமை வாய்பாட்டுச் சொல்லைக்கொண்டு முடிதல் இழுக்காம் எனக் கருதினர். அதனால் அவருரை இங்ஙனம் எழுந்தது. ஆயினும் "ஓதுவது ஒழியேல்" 'நடப்பது நல்ல' என்பன காலம் காட்டும் இடைநிலையும் பெற்ற 'து' ஈற்றுத்தொழிற் பெயராதல் காணப் படுதலானும், தொழிற்பெயரில் ஒருமை பன்மைப் பகுப்பில்லை யாதலானும் வழுவாகாது. ஏனையோர் உரைகளும் அமைவு டையனவே எனலாம். அன்றியும் 'தகையவாய்' என எச்சமாய வழி அது 'மொழிவது' என்ற செய்வினைவாய் பாட்டான் வந்த செயப்பாட்டு வினையைக் கொண்டு முடித்தற்கு இழுக்கின்றாதல் காண்க.

ஓ) ஒப்புமைப்பகுதி :

**கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய் சொல்:**

கேட்டார்க்கு இனியவாய்ச் சொல்லானேல் — தகடூர்

நகைசால் வாய்மொழி — பதிற்று.,55: 12

**கேளாரும் வேட்பமொழிவதாம் சொல் :**

செருநரும் விழையும் செயிர்தீர் காட்சி — அகம்., 66: 3

முற்றும் :

சுருக்கிமெய் விளக்கி இனிமையும் பயனும்
தொகுத்தய லார்மொழி கிடையாத்
திருக்கிளர் மொழியைச் சோர்வற அவைக்கண்
செல்லுமா றஞ்சுத லின்றி
உரைக்கவல் லவரே அமைச்சர்க ளாவர்
உறுமுறை பிறழ்தரப் பலவாய்
விரிக்கவல் லவரும் கற்றுது விளங்க
விரிக்கமாட் டாரும்மெல் லியரே. —விநா.அரசி.,106

சுளிக்கச் சொல்லேல். —ஆத்தி., 48

ஓ) மேற்கோள்பகுதி:

சிவஞான.: கேளாம் புறன். [கேட்டல்-பொருளாகக்கோடல். அது 'கேளாரும் வேட்ப மொழிவதாம்' என்பதனானும் அறிக என்பர். (சிவஞான.—அவை)

65. 4. *திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்*
*பொருளும் அதனினூஉங் கில்.* (644)

உரைப்பகுதி:

அ) மணக். : சொல்லைச் சொல்லுந் திறன் அறிந்து சொல்லுக ; அதனின் மேம்பட்ட அறனும் பொருளும் இல்லை எ-று.

திறன் அறியவே புறங்கூறாமையும் பயனில சொல்லாமையும் பொய்கூறாமையும் உளவாம்; ஆதலான் அறனாயிற்று; அரசன்மாட்டும் ஏனையோர் மாட்டும் தகுதியறிந்து சொல்லுதலான், பொருளாயிற்று. என்னை? அதனானே ஆக்கமும் கேடும் ஆதலான். இஃது அறனும் பொருளும் பயக்கும் என்றது.

ஆ) பரிதி.: மனம் பொருந்தக் காரியங்கட்கு உட்படச் சொல்வானாகில் இதுபோலும் அறனும் பொருளும் இல்லை எ—று.

இ) பரிப். : சொல்லைச் சொல்லும் திறன் அறிந்து சொல்லுக: அதனின் மேற்பட்ட அறனும் பொருளும் இல்லை எ—று.

திறன் அறியவே புறம் கூறாமையும் பயன் இல சொல்லாமையும் பொய் கூறாமையும் உள ஆம்; ஆதலின் அறன் ஆயிற்று; அரசர் மாட்டும் ஏனையோர் மாட்டும் தகுதி அறிந்து சொல்லுதலால் பொருளும் ஆயிற்று; என்னை? அதனானே ஆக்கமும் கேடும் ஆதலான். இஃது அறனும் பொருளும் பயக்கும் என்றது.

ஈ) காளி.: அரசர்க்கு அமைச்சரானோர் ஒன்று சொல்லுங் காலத்து அமைவு உடையராய்ச்[1]சொல்லும் திறப்பாட்டினை அறிந்து, கீழ்ச் சொல்லிப்போந்த இல்லறம் முதலிய அறமும், மற்று இங்குச் சொல்லுகின்ற பொருள் நெறியும், மற்று உம்மையான் மேல் சொல்லுவதாகிய இன்ப நெறியும் எல்லாம் அவரவர் மரபின் திறப்பாடு[2]அறிந்து சொல்லுக. இத்துணை அல்லது இதனின் ஊங்குப் பயன் யாதும் இல்லை எ—று.

உ) பரிமேல்.: அப்பெற்றித்தாய[3] சொல்லை அமைச்சர் தம்முடையவும் கேட்பாருடையவுமாய திறங்களை அறிந்து சொல்லுக; அங்ஙனம் சொல்லுதற்கு மேற்பட்ட அறனும் பொருளும் இல்லையாகலான்.

அத்திறங்களாவன குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல்வம், உருவம், பருவம் என்பனவற்றான் வரும் தகுதி வேறுபாடுகள், அவற்றை அறிந்து சொல்லுதலாவது அவற்றால் தமக்கும் அவர்க்கும் உளவாய ஏற்றத்தாழ்வுகளை அறிந்து அவ்வம்மரபால் சொல்லுதல். அஃது உலகத்தோடு ஒட்ட ஒழுகலையும் இனிமையையும் பயத்தலின் அறனாயிற்று; தம் காரியம் முடித்தலின் பொருளாயிற்று. அறனும் பொருளும் எனக்காரணத்தைக் காரியமாக்கிக் கறினார்.[4]

---

1. அமைவு உடையராய் - அமைதி உடையராய்

2. மரபின் திறப்பாடு - முறைமையின் திறம்

3. அப்பெற்றித்தாய - அப்படிப்பட்ட

4. திறனறிந்து சொல்லுதலாகிய காரணத்தை அறனும் பொருளும் எனக் காரியமாக்கிக் கறினமையின், இது காரணம் காரியமாய உபசாரவழக்காம். திறனறிந்து சொல்லுதலால் அறனும் பொருளுண்டாகுமென்று கூறாது அதனையே அறனும் பொருளும் என்று கூறியவாறு காண்க

ஊ) கவிராசர். : நல்லதாகிய சொல்லைக்கேட்கிறவனுடைய திறமையையறிந்து சொல்லுக; அந்தச் சொல்லுக்கு மேற்பட்ட அறமும் பொருளும் இல்லை எ—று.

ஏ) பழைய 2: 'அதனினூஉங்கு' பாடம்.

கேட்குந்திறங் களையறிந்து சொல்லுக சொற்களை; மேம் பட்ட அறமும் பொருளும் அதுவே யாம்; அதனினும் வேறொன் றும் இல்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'திறனறிந்து சொல்லும் சொற்பயனுக்கு' விளக்கந்தரும் மணக்குடவர் 'அரசன் மாட்டும் ஏனையோர் மாட்டும் தகுதி யறிந்து சொல்லுதலான் பொருளாயிற்று. என்னை? அதனானே (பொருளானே) ஆக்கமும் கேடும் ஆதலான்' என்ற தொடரை, 'ஏற்புழிக்கோடல்' என்ற உத்தியான் தம் அரசர்க்கும் அரசுக்கும் ஆக்கமும், பகைவர்க்கும் அரசுக்கும் கேடும் எனக் கொள்க. இக் குறட்பாவில்' திறனறிந்து' என்ற தொடர்க்கு உரை கூறுவதில் ஆசிரியர்கள் மாறுபடுகின்றனர்.

'திறன்'

'புறங்கூறல், பயனிலசொல்லல், பொய்கூறல் முதலி யன இல்லாமை' எனபர் மணக். ; 'மனம்பொருந்த காரியங் கட்கு உட்பட' என்பர் பரிதி.; 'அமைவுடையராய்ச் சொல்லுந் திறனறிந்து' என்பர் காளி. ; 'கேட்பார் திறனறிந்து; அஃதாவது குடிப்பிறப்பு முதலியன அறிந்து அவற்றால் சொல்வோனாகிய தனக்கும், கேட்பவர்களாகிய பிறர்க்கும் உளவாய ஏற்றத்தாழ் வுகளை அறிந்து அவற்றால் சொல்வோனாகிய தனக்கும், கேட் பவர்களாகிய பிறர்க்கும் உளவாய ஏற்றத்தாழ்வுகளை அறிந்து மரபிற்கு ஏற்பச் சொல்லுதல்' என்பர் பரிமேலழகர். ஏனை யோர் 'திறமையறிந்து' எனப் பொது வகையாற் கூறுவர். மு.ரா.அரு., தேவநேயர், சபாபதி உரைகளும் இக்கருத்தின

'பேசும்போது சொல்வான்-கேட்பான் தகுதியறிந்து இனிமை யாகப் பேச வேண்டும். அது அறம்செய்யவும் பொருள்தேடவும் அரசர்க்குத் துணையாகும்' என்பர் வரத. ; இதிலும் மேடைப் பேச்சின் அமைப்பே ஒலிக்கிறது. மு. கோ. 'அறமும் பொருளும் தருவது சொல்லினூங்கில்லை என்ற ஆசிரியர் இன்பங் கூறாதது

இன்பம் சொல்லற்ற இடமாதலின் 'என நயங்காட்டுவர். அன்றியும் 'பொருள் கூறவே இன்பமும் அறம் கூறவே வீடும் பெறப் படும்' 'என்பர்.இத்துணைக் குறிப்புக்களும் குறட்சொல்லமைதியில் இருக்கின்றவா? என்று ஊன்றி நோக்கவேண்டியுள்ளது.

இராமலிங்கனார், பரிமேலழகர் உரையை மறுத்துச் 'சொல்லின் திறமறிந்து சொல்ல வேண்டும்' என்பர், 'அஃதாவது இன்ன சமயத்தில் சொன்னால் இன்னபொருள் பயக்கும் என் பதை நிதானித்துச் சொல்லுதல்' என விளக்கமும் தருவர். இவர் உரை மணக்குடவர் கருத்திற்கு இணைந்துபோகிறது. இவ்விருவகை உரைகளும் இணைந்த 'சொல்வான், கேட்பான் தகுதியும், சொல்லின்றிறமும் அறிந்து' என்ற உரை மிகச்சிறப் புடையதாகும்.

'கேட்போர், தகுதியை மட்டும்' கூறுவர் சாமி. சிதம் பரனார், சி. இ., முதலானோர். குழந்தை 'சொல்லின் தகுதியறிந்து' என்று கூறி 'வகையாவன கேட்போர் விரும் புவனவும் ஏற்பனவுமான சொல்' எனச் சொல்லின் திறனைக் கேட்போர் நிலையை மட்டும் வைத்து அளந்து கூறுவர். சொல் —அறனும் பொருளும் பயத்தற்கு மணக்குடவரும் பரிமேல ழகரும் கூறும் விளக்கங்கள் சிறந்தன.

ஓ) ஒப்புமைப்பகுதி.:

திறனறிந்து வெல்லுக சொல்லை ;

திறனன்று மொழியினும்
வறிது பெயர்குநரல்லர். -புறம்., 124 : 2-3

ஆக்கப் படுக்கும் அருந்தளைவாய்ப் பெய்விக்கும்
போக்கப் படுக்கும் புலைநரகத்து உய்விக்கும்
காக்கப் படுவன இந்திரியம் ஐந்தினும்
நாக்கல்ல தில்லை நனிபேணு மாறே. -வளை., 13

நூலோ ராய்ந்து நுண்பொறி கண்ணும் நொடிவல்லான்
மேலோ ராயும் மேதைமையாலு மிகநல்லான் -சூளா., 308

645.5 சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து. (645)

உரைப்பகுதி :

அ) மணக். : சொல்லைச் சொல்லுக; தான் சொல்ல நினைத்த அச்சொல்லைப் பிறிதொரு சொல்லாய் வெல்லுஞ்சொல் இல்லை யாதலையறிந்து எ-று.

ஆ) பரிதி. : களரியிலே[1] வார்த்தை சொல்லுவானாகில் தான் சொல்லுகிற சொல்லை வேறே ஒருவன் சொல் வெல்லாமல் சொல்லுவான் எ-று.

இ) பரிப். :

சொல்லைச் சொல்லுக: தான் சொல்ல நினைத்த சொல்லைப் பிறிது ஒரு சொல்லாய் வெல்லும் சொல் இல்லை யாதலை அறிந்த பின்பு எ-று.

சொல் வன்மையாயின பலவற்றுள்ளும் தோலாவகை[2] சொல்லுதல் சிறப்புடைத்தாகலின் இது முன் கூறப்பட்டது.

ஈ) காளி. : 'சொல்லுகசொல்லின்' பாடம்.

அமைச்சர் ஒன்று சொல்லும் இடத்து மற்று அச்சொல் லினைப்பிறர் ஒருவர் சொல் வெல்லுதல் இன்மையைக் குறிக்கொண்டு சொல்லுக; அல்லாக்கால் சொல்லற். எ-று.

உ) பரிமேல் .: தாம் சொல்லக் கருதிய சொல்லைப் பிறிதோர் சொல்லாய் வெல்ல வல்லதொரு சொல் இல்லாமை அறிந்து பின் அச்சொல்லைச் சொல்லுக.

பிறிதோர்சொல்—மாற்றாரது மறுதலைச்சொல்.[3] வெல்லு தல் — குணங்களான்[4] மிகுதல். அதுவே வெல்லச் சொல்லுக

1. களரியிலே — சபையிலே
2. தோலா வகை—தோற்றுப்போகா வண்ணம்
3, மறுதலைச் சொல்—மறுத்துச் சொல்லுஞ் சொல்
4, குணங்களான்—சுருங்கச் சொல்லுதல், விளங்க வைத்தல் முதலாயின

என்பதாம். இனிப் பிறிதோர் சொல் வெல்லும் சொல் எனச் செவ்வெண்ணாக்கி[5] ஒத்த சொல்லும் மிக்க சொல்லும் உளவாகா மல் சொல்லுக என்று உரைப்பாரும் உளர். இது சொற்பொருட் பின் வருநிலை.

காரி. : பின் வருநிலை, பட்சாந்தரம் இதனில் மிக்காய்த் தோன்றுவது காண்க.

ஊ) கவிராசர் : தான் சொல்ல நினைத்த சொல்லைப் பிறிதொரு சொல்லாய் வெல்லவல்லதொரு சொல் இல்லாமையை யறிந்து, பிறகு அச்சொல்லைச் சொல்லுக, எ-று.

ஏ) பழைய 2 .: தான் சொல்லக் கருதிய சொல்லைப் பிறிதோர் சொல்லாய் வெல்ல வல்லதொரு சொல்லில்லாமை அறிந்து பின் அச்சொல்லைச் சொல்லுக.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறட்பாவின் உரைவகையில் கருத்து வேற்றுமை யின்று. பரிமேலழகர் வேறுரையாகக் கூறுவது இன்னாருரை என்று அறியக்கூடவில்லை ஆயினும் நுண்பொருண் மாலை யுடையார் ஏனைய உரைகளிலும் இது சிறந்தது என்கிறார்.

'பிறிதோர்சொல்'

மாற்றாரது மறுதலைச் சொல்' எனப் பகைவர் கூறும் மறுப்புரையைக் கருதுகிறார் பரிமேழலகர். வரத. 'அமைச்சன் கூறும் யோசனையைவிடச் சிறந்த கருத்தை விளக்கும் சொல்' என்பர். இராம. 'சொல்லப் போகிற சொல்லைக் காட்டிலும் இன்னொரு சிறந்த சொல்' என்பர். மேலும் 'மாற்றார் கூறும் சொல்லன்று; மறுதலைச் சொல்லை யாரும் முன்கூட்டியறிய முடியாது. ஆதலால் மாற்றார் மறுக்காத படி பேசுவது என்பது முடியாத காரியம்' என மறுப்பர். வரத. 'மேலும் சொல்லுஞ்சொல்லை இனிமையாகவும் நயமாகவும் தெளிவாகவும் சொல்லுக என்பர். இது திறனறிந்து என்றதாற் போந்த தாகலின் ஈண்டை வேண்டா, என்க.

தேவநேயர், 'உண்மையுணர்த்துவதிலும், ஏதுக்களும் எடுத்துக் காட்டும் கூடிய ஏரண வலிமையினும் மிகுந்து, எதிரி

5. செவ்வென— எண்ணிடைச் சொல் தொக்கு நிற்பது

கள் சொல்லைப் பயனற்றதாகச் செய்யுஞ் சொல்லைக் கூறுதலே 'வெல்லுஞ் சொல்லின்மையாம்' என்றும், பரிமேலழகர் கூறும் வேறுரை பொருந்தாதாம் என்றும் உரைப்பர்.

இங்ஙனம் 'பிறிதோர் சொல்லும் வெல்லும் சொல்லும் இன்மையறிந்து சொல்லுக' என்று பரிமேலழகர் கூறுவதனைக் காரிரத்ன கவிராயர் பாராட்டுவர். தேவநேயர் மறுப்பர். மறுப்புக்குக் காரணம் கூறிற்றிலர்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

பிறிதோர் சொல் அச்சொல்லை வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து சொல்லுதல் :

நூலோ ராய்ந்து நுண்பொறி கண்ணும் நொடிவல்லான்
மேலோ ராயும் மேதைமை யாலும் மிகநல்லான் — சூளா., 308

மொழிவததனை அழிவதறமொழி — கொன்றை.,79

65.6. *வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்*
*மாட்சியின் மாசற்றார் கோள்.* (646)

உரைப்பகுதி :

அ) மணக்.: தாம் சொல்லுங்கால் பிறர் விரும்புமாறு சொல்லி, பிறர் சொல்லுங் கால் அச்சொல்லின் பயனைத் தெரிந்துகொள்ளுதல், மாட்சி மையில் குற்றமற்றாரது கோட்பாடு எ—று.

இது நயம்படக் கூறுதலேயன்றி, பிறர் சொல்லுஞ் சொல்அறிந்து சொல்லுதலும் வேண்டும் என்றது.

இ) பரிப். :——

ஆ) பரிதி.: கேட்பார் விரும்பும்படிச் சொல்லி அவர் பிரியப் படச் சொல்லும் வார்த்தை கேட்டல் கற்றோர் கடன் எ—று.

ஈ) காளி. : 'வேட்பத்தின்' பாடம்.

இவ்வாறு தாம் விரும்பிச் சொல்வதும் செய்து மற்று

அதுவேயும் அன்றிப் பிறர் சொல்லினது பொருட்பயனும்தேர்ந்து உள்ளத்துக்கோடல்[1]யாது:மற்றுஅதுவே அறிவுடையஅமைச்சரது கோட்பாடு எ—று.

உ) பரிமேல்.: பிறர்க்குத் தாம் சொல்லுங்கால் அவர் பின்னும் கேட்டலை விரும்புமாறு சொல்லி, அவர் தமக்குச் சொல்லுங் கால் அச்சொல்லின் பயனைக் கொண்டொழிதல்; அமைச்சிய லுள் குற்றமற்றாரது துணிபு.

பிறர்சொற்களுள் குற்றம் உளவாயினும் அவை நோக்கி இகழார் என்பதாம். வல்லாரை[2] இகழ்தல் வல்லுநர்க்குத்[3] தகுதியன்மையின், இதுவும்[4] உடன் கூறினார். இவை மூன்று பாட்டானும் அதனைச் சொல்லுமாறு கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: பிறருக்குத் தான் சொல்லுங்கால், அவர் பின்னையும் விரும்பிக் கேட்குமாறு சொல்லி, அவர்கள் தனக்குச் சொல்லுங்கால் அந்தச் சொல்லினுடைய பயனையறிந்து கொள்ளுகிறது மந்திரிகளிலே குற்றமற்றவரியல்பு (எ—று).

ஏ) பழைய 2: 'வேட்பத்தான் சொல்லி' பாடம்.

பிறர் விரும்பும் படித் தான் சொல்லி, அவர் தனக்குச் சொல்லும் போது அச்சொல்லின் பயனைக் கொண்டொழிதல் அமைச்சியலுட் குற்றமற்றார் கொள்கை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் உரையமைதி 'பிறர் வேட்பத்தாஞ் சொல்லி, பிறர் சொற் பயன் கோடல் மாசற்றார் கோள்' எனப் பிறரைப் பிரித்துஈரிடத்தும் இயைத்துப்பொருள் கண்டதையுணர்த்துகிறது.

---

1. உள்ளத்துக்கோடல் - மனத்திற் கொள்ளுதல்
2. வல்லாரை-வல்லவரை
3. வல்லுநர்-வல்லவர்
4. இதுவும்—குற்றமுள்ள பிறர்சொற்களின் பயன்கொண்டுய்தல், இதற்கு வல்லார் -வல்லமையில்லல்தார் எனப்பொருள்கண்டு இகழ்தல் என்று கோ,வடிவேலுசெட் டியார் உரைப்பர். வல்லார் என்பது வல்லார் அல்லாதாரை உணர்த்தும் என்பது யாங்ஙனம்?

பரிதி. 'கேட்பார் விரும்பும் வண்ணஞ் சொல்லி, அவர் பிரியப்படச் சொல்லும் வார்த்தை கேட்டல் கற்றோர் கடன்' என்பர். இது பிறர் சீரெல்லாந் தூற்றித் தன் சீரை அதற்குக் கைம்மாறாகக் கொள்ளுதல் என்னும் பொருளதாய்ப் புகழைக் கொடுத்துப் புகழை நோக்குகின்ற வாணிக நேர்மையில் அமைகிறது. இது சொல் வன்மையாகாது. சொல் வாணிகம் ஆகின்றது. சிறந்தது கொள்க.

பரிமேல். மு.ரா.அரு.பயன் கோடலுக்குத் தரும் குறிப்புக்கள் மிகச்சிறந்தன. அதிலும் பயனைக்கொண்டு, சொற்குற்றம் பொருட்குற்றம் முதலான பயனில்லாதவற்றை விட்டுவிடுக என்ற உரை விளக்கங்கள் உயர்ந்தவை. வரத. 'தீய பயனைக் கொள்ளாது நல்ல பயன்தரும் சொற்களை மட்டும் கொள்க' என்பதும் அங்ஙனமே.

'வேட்ப—இன்னுங் கேட்க வேண்டும் என்று விரும்பும் படியும், அப்படியே செய்யவேண்டும் என்று விரும்பும்படியும்' என்ற வரதராசர் கருத்தும் சிறந்தது. விரும்புவதைக் காட்டிலும் அங்ஙனமே செயற்படுவது என்று துணிவது உயர்ந்ததாதல் காண்க.

தேவநேயர்: 'பிறர் சொற்பயன் கோடல்—பிறர் சொல்லில் இனிமையும், விளக்கமும் இல்லையாயினும், இலக்கணவழுவுடையதாயினும் பயனைமட்டும் கொண்டு வழுக்களை விடுக' என்பர்.

இராம.: 'பிறர் சொல்வதும் பயனுடையதாக இருந்தால் அதனையும் ஏற்றுக்கோடல்' என்பர். இது அனைத்தினும் சிறந்த பட்டறிவான் வந்த பொருள்.

வ.சுப.மா. 'கேட்குமாறு சொல்லல்; பிறர் சொல்லக் கேட்டல் இவை நல்லறிஞர் கொள்கை' என்று கருத்துரையாக வழங்குவர்,

ஒ) ஒப்புமைப்பகுதி:
வேட்பத்தாம் சொல்:

கேட்பாரை நாடிக் கிளக்கப் படும்பொருட்கண்
வேட்கை அறிந்துரைப்பர் வித்தகர். பழ.நா.,18

நயமொழியால் ஐயம் உண்டு — பழ ,

நயத்திலாகிறது பயத்திலாகாது — பழ..

**வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல் :**

சோர்வில், சொல்லால் அடையார் மனமும்களிந்நூங்கச் சொல்லிப் பல்லார் பிறர்சொல் பயனாய்ந்து கவர வல்லார்.

— திருவிளை பன்றி - மந்திரி. 14

**முற்றும் :**

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு — குறள். 424

65.7. *சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை*
*இகல்வெல்லல் யார்க்கும் அரிது.* (647)

**உரைப்பகுதி :**

அ) மணக். : ஒருவன் சொல்ல வல்லவனுமாய் அதனைச் சோரவிடுதலும்[1] இல்லானாய் அஞ்சாது சொல்லுதலும் உடையவனாயின், அவனை மாறுபாட்டின்கண்[2] வெல்லுதல் யாவர்க்கும் அரிது எ—று.

ஆ) பரிதி. : வார்த்தை சொல்லவல்லவன் திடவானாகில்[3] அவனை மாறுபட்டு வெல்லல் யார்க்கும் அரிது எ—று.

இ) பரிப். : ஒருவன் சொல்ல வல்லனுமாய் அதனைச் சோர விடுதலும் இல்லானாய் அஞ்சாது சொல்லுதலும் உடையவன் ஆயின் அவனை மாறுபாட்டின்கண் வெல்லுதல் யாவர்க்கும் அரிது எ—று.

இம்மூன்று பகுதியினும்[4] என்பதனால் அவனைச் சொல்லில் வெல்வார் இல்லை எ—று.

---

1) *சோரவிடுதல் — மறந்துவிடுதல் அல்லது தளர்தல்*

2) *மாறுபாட்டின்கண் — வாதம் அல்லது சொற்போரின்கண்*

3) *திடவானாகின் — உறுதியுடையனாயின்*

4) *இம்மூன்றுபகுதியினும் — சொல்வன்மை, சோர்வின்மை, அஞ்சாமை என்னும் மூன்றுபகுதியினும்*

ஈ) காளி. : இங்ஙனம் ஏற்றத்தாழ்வு என்னும் குற்றம் தங்காமல் சொல்லுதல் வல்லனுமாய், மற்று இங்ஙனம் சொல்லு மிடத்து மறந்தும் ஒரு சொற்சோர்வு பாடு இலனுமாய், அரசனைக் கழற[5] வேண்டும் இடத்துக் கழற்றுரை கூறக் கண்ணஞ் சானுமாய், இருப்போன் யாவன் மற்று அவ்வமைச் சனை மற்று ஒருவர்க்கு மாறுபடக்கூறி வெல்லுதல் அரிது எ—று

உ) பரிமேல் : தான் எண்ணிய காரியங்களைப் பிறர்க்கு ஏற்பச் சொல்லுதல் வல்லனாய், அவை மிகப் பலவாயவழி ஒன்றினும்சோர்விலனாய், அவைக்கு[6] அஞ்சானாயினான் யாவன், அவனை மாறுபாட்டின்கண் வெல்லுதல் யாவர்க்கும் அரிது.

ஏற்பச்சொல்லுதல்[7] — அவர்க்கு அவை காரியமல்ல வாயினும்[8] ஆம் எனத்துணியும்வகை சொல்லுதல்.[9] சோர்வு— சொல்ல வேண்டுவதனை மறப்பானொழிதல். இம்மூன்று குணமும்[10] உடையானை மாற்றாராய்ப் பிரித்தல் பொருத்தல் செய்து வெல்வார் இல்லை என்பதாம்.

ஊ) கவிராசர் : தான் நினைத்த காரியங்களைப் பிறர்க்கேற்கச் சொல்லவல்லவனாய், வெகு சபை கூடியிருந்த இடத்திலே சோர்வில்லாதவனாய்ப் பயப்படாதவனை, மாறு பாட்டில் வெல்லுதல் எப்படிப்பட்டவர்களுக்கும் அரிது எ—று.

ஏ) பழைய 2 : தான் எண்ணிய காரியங்களைச் சொல்ல வல்லவனாகவும் பல காரியங்களினும் பல சொல்லிலும் மறதி யில்லாதவனாகவும் சபையிலஞ்சாதவனாகவும் இருப்பின்அவனை மாறுபட்டு வெல்லுதல் யார்க்கும் அரிது.

---

5) கழறல் - இடித்துரைத்தல்

6) அவைக்கு - சபைக்கு

7) ஏற்பச்சொல்லுதல் - அவையோர் ஒப்பும் படிச் சொல்லுதல்

8) அவர்க்கு அவை காரியமல்லவாயினும் - பிறருக்குத் தான் எண்ணிய காரியங்களைக் கேட்டல் காரியமல்லவாயினும்

9) ஆம் எனத் துணியும் வகை சொல்லுதல் - ஒக்கும் என்று துணியும்வண்ணம் சொல்லுதல்

10) இம்மூன்று குணமும் - 4-ஆம் அடிக்குறிப்பு காண்க

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'அதனைச் சோரவிடுதலும் இல்லானாய்' என்பது வல்லனாய்ச் சொன்ன சொல்லை யாதாமொரு காரணம் பற்றி நழுவவிடாதவனாய் என்னும்கருத்தினது. இந்த மணக். கருத்தை அரண் செய்வது பரிதியார் உரை. அஞ்சான் என்பதற்கு காளிங்கர் கூறும் விளக்கம் சிறந்தது. 'மன்னவன் வெகுண்ட போதும் நீதியை விடாது நின்று உரைக்கும் வீரர்' என்ற கம்பர் கருத்தும் இதுவாதல் காண்க. 'அவைக்கு அஞ்சாதவன்' என்பர் பரிமேலழகர். அவையஞ்சாமையை அமைச்சர் பண்புஎன ஆசிரியர் தனியதிகாரத்துக் கூறுதலான் ஈண்டும் கூறல் வேண்டா. ஆதலால் அரசற்கு அஞ்சாமை எனலே சிறந்தது. அதனாலேயே கம்பரும் கூறினர் என்க. சோர்தல்—'சொல்லவேண்டுவவற்றை மறப்பான் ஒழிதல்' என்பர்பரிமேல்.;எக்கணத்திலும் சொற் சோர்வு படாமை என்ற பொருளே சிறந்தது. சொற் சோர்வுபடுதல் — மறைக்க வேண்டியவற்றை வெளிப்படுத்தல். 'சொற்சோர்வு படேல்' என்பது ஆத்திசூடி தேவநேயர் 'முறைபிறழச் சொல்லுதலும் தனக்குக் கேடாகச் சொல்லுதலும் சோர்வாம்' என்பர்.

வரத : சொல்வன்மை முதலிய மூன்றையும் இணைத்துச் சொன்னதால் அஞ்சாதவனே மறதியில்லாமலும், தெளிவாகவும் பேச முடியும்' என ஒரு தொகுப்புக் கருத்தைக் கூறுவர்.

இராம 'அஞ்சான் — எதிரிகளின் உருட்டல் மிரட்டலுக்கு அஞ்சாதவன்' என்பர்.

குழந்தை .: அஞ்சாமை—அவையோருக்கும் எதிர் பேசுவோர்க்கும் அஞ்சாமை.

இவைகளில், சொலல் வல்லன் என்பதற்கு, தொகுத்தும் எடுத்தும் சொல்லும் சொல்வன்மையுடையவன் என்றும், சோர்விலன் என்பதற்கு மறைபிறரறியும் வகையில் சொற்சோர்வு படாதவன் என்றும், அஞ்சான் என்பதற்கு எவருடைய விருப்புகளுக்கும் சினத்திற்கும் அஞ்சாதவன் என்றும் கருத்துடைய உரைகள் சிறந்தன.

ஓ) ஒப்புமைப்பகுதி :

சொலல் வல்லான் :

சொல்லுஞ்சொல் வல்லான் ...... ...... ...... — கம்ப.1830

...... ...... .......... இயம்ப வல்லான். — கம்ப.4434

சொன்னெறி யறிவு நீரார் ...... ........ — கம்ப..0507

ஒ) மேற்கோள்பகுதி :

சங்கர : வினைக்குறிப்புச் சொல் குறிப்பினால் இருதிணை ஐம்பாற் பொருளைத்தரும் என்பதற்கு இக்குறளை மேற்கோள் காட்டி, வல்லன் இவன் என்னும் சொற்கள் பெயர்ப்பொருளை ஒழித்து வினைக்குறிப்புப் பொருளைக் குறிப்பான் உணர்த்தின என்பர். (நன். 269)

65.8. விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். (648)

உரைப்பகுதி :

அ) மணக்., இனிதாகச் சொல்ல வல்லாரைப் பெற்றாராயின், உலகத்தார் மேவி[1] விரைந்து சென்று செய்யுந் தொழில் யாது என்று கேட்பர் எ-று.

இது சொற்களைச் சொல்லின், இனிதாகச் சொல்ல வேண்டும் என்றது

ஆ) பரிதி. : கேட்பார் செவியும் மனமும் புலப்பட வார்த்தை சொல்லும் மந்திரிக்கு, மண்டலம் சொல்வழி கேட்கும் எ-று.

இ) பரிப் : சொற்களைச் சேர்த்து இனிது ஆகச் சொல்ல வல்லாரைப் பெற்றாராகில், உலகத்தார் தாமே விரைந்து செய்யும் தொழில் யாது என்று கேட்பர் எ-று.

இஃது இனிது ஆகச் சொல்ல வேண்டும் என்றது.

1. மேவி- விரும்பி

ஈ) காளி. : அரசர்க்கு ஆயினும் பிறர்க்கு ஆயினும் அவர் அவர்க்குப் பொருந்த உணர்ந்து செவிக்கு இனிதாகச் சொல்லு தல் வல்லராகிய அமைச்சரை அரசர் பெறுவாராயின், அரசர் ஏவாமல் தானே விரைந்து தொழில் கேட்டு ஒழுகுவர் இவ் வையகத்து வாழ்வார் எ-று.

உ) பரிமேல். : சொல்லப் படுங் காரியங்களை நிரல்படக் கோத்து இனிதாகச் சொல்லுதல் வல்லாரைப் பெறின். உலகம் அவற்றை விரைந்து ஏற்றுக்கொள்ளும்.

தொழில் சாதியொருமை.[2] நிரல்படக்கோத்தல் - முன்சொல் வனவும் பின் சொல்வனவும் அறிந்து அம்முறையே வைத்தல். இனிதாதல் - கேட்டார்க்கு இன்பம் பயத்தல். 'சொல்லுதல் வல் லான் நூறாயிரவருள் ஒருவன்' என்ற வடமொழி பற்றிப் 'பெறின்'[3] என்றார். ஈண்டுங்கேட்டல்[4] ஏற்றுக்கோடல்.[5] இவை இரண்டு பாட்டானும் அவ்வாற்றால்[6] சொல்லுதல் வல்லாரது சிறப்புக் கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : சொல்லவேண்டிய காரியங்களை வரிசை யாய்த் தப்பாமற் சொல்ல வல்லவர்களைக் கண்டால், உலகத் தார் அவற்றை விரைந்து ஏற்றுக்கொள்வர் எ-று.

ஏ) பழைய 2 : சொல்லப்படும் காரியங்களை நிரல்படக்கோத்து இனிதாகச் சொல்லுதல் வல்லாரைப்பெறின், உலகம் அவற்றை விரைந்து ஏற்றுக்கொள்ளும்.

2. வருமொழி நோக்காது - பன்மைப்பொருளை யுணர்த்துதலின் இது சாதியொருமை யாயிற்று

3. 'பெறின்' என்னும் செய்யின் என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் பெறுதலின் அருமையைக் குறிப்பித்தது

4. ஈண்டும் என்னும் எச்சவும்மை கேட்டார் பிணிக்குந்தகையவாய் என்னும் குறட் கருத்தைத் தழுவி நின்றது

5. ஏற்றுக்கோடல் - ஒப்புதல்

6. அவ்வாற்றல் - சொல்வன்மை, சோர்வின்மை, அஞ்சாமை, நிரந்தினிது சொல்லு தல் என்னும் அம்முறைமையால்,

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'நிரந்து'

மணக்.: உரை விடுபட்டுள்ளது. பரிதி 'புலப்பட' என்பர். 'பொருந்த உணர்ந்து' என்பர் காளி. 'தொழில் நிரந்து' எனக் கூட்டிக் 'காரியங்களை நிரல்படக் கோத்து' என்பர் பரிமேல்., கவிராசர், பழைய 2, சபாபதி, சாமி. சிதம்.; 'சொல்வன வற்றை வரிசைப்படுத்தி' சி. இ., குழந்தை., 'முறையாக' வ. சுப மா., 'நிரந்தரமாக அல்லது எப்போதும் என்பது பொருள்' என்பர் இராம.; 'நிரந்தரம்' என்ற வடசொல் இடை யீடின்றி எனப்பொருள் தருவது. அந்தரம் - இடையீடு. நிர் + அந்தரம் - இடையீடின்றி. இச்சொல் நிரந்து என ஆகாது. நிரத் தல் - வரிசைப்படுத்துதல், ஒழுங்காக்கல். 'நிர' என்னும் பகுதி யடியாகப் பிறந்த வினை எச்சம் 'நிரந்து' என்ற தமிழ்ச்சொல். ஆதலால் நிரத்தரம் எனப்பொருள் கோடல்சாலாது. 'நிரந்திலங்கு வெண்பல்' (குறுந். 52) என்பதும் காண்க.

இக்குறளுக்கு மணக். 'இனிது சொல்லுதல் வல்லார்ப் பெறின் ஞாலம் தொழில் கேட்கும்' எனக் சுட்டி இனிமையாகச் சொல்பவர்களைப் பெற்றாராயின் ஞாலம் விரைந்து தொழில் கேட்கும்' எனப் பொருள் காண்பர். இதில் 'பெறின்' என்பதற்கு யார் என்ற வினைமுதல் விளக்கமாக இல்லையாயினும் அங்ஙனம் சொல்லவல்ல அமைச்சர்களை அரசர் பெற்றால் உலகத்தவர் ஏவலைக்கேட்டு நடப்பர் என்ற முடிவினதாகின்றது. ஆகவே அரசர் அத்தகைய அமைச்சரைப் பெற்றால் உலகம் அரசர்க்கு ஏவல் கேட்கும் என்பதே கருத்தாகிறது. இதனால், சொல் வன்மையுடைய அமைச்சரால் அரசற்கு விளையும் பயன் கூறியது எனல் பெறப்படும். காளிங்கர் உரை இக்கருத்தை நன்கு விளக்குதலையும் நோக்குக.

பரிதியும் பரிமேலழகரும் கவிராசரும் பழைய உரை 2.ம் குழந்தையும், சாமி. சிதம்பரனாரும் 'சொலல் வல்ல மந்திரிக்கு ஞாலம் தொழில் கேட்கும்' என்ற முடிபும் கருத்தும் உடையவர்கள்.

'இன்னார்க்குப் பணி கேட்கும் என விதவாமல் சொலல் வல்லாரைப் பெற்றால் ஞாலம் தொழில் கேட்கும்' எனப் பொது மையிற் கூறுவர் சபாபதி, சி. இ., முதலியோர்.

'பெறின்' 'பெற்றோமானால்' என இராமலிங்கரும், 'முறையாக இனிது சொல்வேமாயின்' என வ. சுப. மா. வும் உரைப்பர்.

அ) உலகம் பெற்றால் அவர் சொல்லைக் கேட்டு உலகம் நடக்கும் என்ற கருத்தினர் பரிமேலழகர் குழுவினர்.

ஆ) அத்தகைய அமைச்சனை அரசன் பெற்றால் அவனுக்கு ஞாலம் தொழில் கேட்கும் என்னுங் கருத்தினது மணக்குடவர், காளிங்கர் குழு.

இ) இவ்விருவகையும் அன்றிப் பொதுவகையிற் கூறுவது சபாபதி, சி. இ குழு.

ஈ) இங்ஙனம் பலவகையான பொருள் கோள்வகைகள் உள்ளன இவற்றுள் அங்க இயலுக்கு ஏற்ப 'அமைச்சனை அரசன் பெற்றால் அவனுக்கு ஞாலம் சொன்னபடி நடக்கும்' என்ற உரையே சாலப் பொருந்துவதாகும். அமைச்சன் அங்கமேயன்றி அரசன் ஆகான். 'தலையிருக்க வாலாடாது' என்பது பழமொழி. அமைச்சன் அரசன் வாயிலாக ஆணைபெற்று, ஆணை வழி நடக்க என்பதே முறை. அன்றாயின் சிந்தாமணியுட் கட்டியங்காரன் கதையாகும் என்பதை எண்ணி உரையைத் தேர்க.

மணக், பரிமேல்., காளிங்கர் 'ஒரார்' என்பதற்கு 'நீக்காது' என உரைப்பதால் இவர்கள் கண்ட பாடம் 'கடிந்தெம் ராச் செய்தார்க்கு' என்பதாகக் கூடும். 'ஒரார் செய்தார்' என்பதே பாடமாயின் ஒராராகிச் செய்தார்க்கு என முற்றெச்சமாக்கி, அதன் கருத்துரையாக 'ஒராது' என வினை எச்சமாகக் கூறினர் எனல் வேண்டும். ஏற்பன கொள்க.

ஒ) ஒப்புமைப்பகுதி :

இனிது சொல்லுதல் வல்லார் :

சொல்லியக்கால் சொல்லின் பயன்காணுந் தான்பிறர்
சொல்லிய சொல்லை வெலச் சொல்லும் பல்லார்
பழித்தசொற் றீண்டாமற் சொல்லும் விழுத்தக்க
கட்டுரைக் கினியவாய்ச் சொல்வானேற் பூக்குழலாய்

நல்வயலூ ரன் துஞ்சா தணியகலம் புல்லலினூ டலரிது
— தகடூர் யாத்திரை

ஆர்த்தசபை நூற்றொருவ ராயிரத்தொன்றாம்புலவர்
வார்த்தை பதினாயிரத் தொருவர் - பூத்தமலர்த்
தண்டா மரைத் திருவே தாதாகோ டிக்கொருவர்
உண்டாயினுண்டென்றறு. — தனிப்பாடல்

நூற்றுவரிற் றோன்றுந் தறுகண்ண ராயிரவ
ராற்றுளித் தொக்க வவையகத்து - மாற்றந்தான்
ஒன்று கொடுக்கு மகன். — தனிப்பாடல்

ஒ) மேற்கோள்பகுதி :

இளம். : அனைநிலைவகையில் சொல்வென்றிக்கு மேற்கோள்
- தொல். பொருள்., 74

நச்சி. :ஷ - தொல். பொருள்., 75

*65.9. பலசொல்லக் காமுறுவர் மன்ற[1]மா சற்ற*
*சிலசொல்லல் தேற்றா தவர். (649)*

உரைப்பகுதி :

அ) மணக் .: பல சொற்களைச் சொல்லக் காதலியா நிற்பர்; குற்றம் அற்ற சில சொற்களைத் தெளியச் சொல்லலை அறிய மாட்டாதார் எ-று.

மன்ற — தெளிய. இது சுருங்கச் சொல்லல் வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: பல வார்த்தை சொல்லி அந்தச் சொல்லெல்லாம் காமிப்பர்[2]; சில சொல்லிலே பிரியப்பட வார்த்தை சொல்ல மாட்டாதார் எ-று.

இ) பரிப்.; பல சொற்களைச் சொல்லக் காதலியா நிற்பர் ;

---

1. 'மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்' தொல். சொல்; 265
2. காமிப்பர் விரும்புவர்.

குற்றம் அற்ற சில சொற்களைத் தெளியச் சொல்லுதலை அறிய மாட்டாதார் எ-று.

மன்ற-தெளிய. இது சுருங்கச் சொல்லவேண்டும் என்றது.

ஈ) காளி.: இவ்வாறு சொல்லுதலுடையான் அன்றியே எவ்வாறு சொன்னால் பொருள் ஆம் என்னும் கருத்தினால் பல வற்றையும் சொல்ல ஆசைப்படுவார் யார் எனின், குற்றமற்ற பொருளைச் செலச்சொல்லி[3] அமைதலைத் தெளியாத தீய அமைச்சர் எ-று.

உ) பரிமேல்.: குற்றமற்றனவாய்ச் சிலவாய வார்த்தைகளை அவ்வாற்றான்[4] சொல்லுதலை அறியாதார், பலவாய வார்த்தை களைத் தொடுத்துச் சொல்ல விரும்புவர்.

குற்றம் — மேற்சொல்லிய[5] குணங்கட்கு மறுதலையாயின[6] இடைவிடாது பல சொல்லுதலையும் சொல்வன்மை என்று விரும்புவாரும் உளர்; அவர் இவ்வாறு[7] சொல்லமாட்டாதாரே வல்லார்[8] அது[9] செய்யார் என யாப்புறுப்பார் 'மன்ற' என்றார்.

ஊ) கவிராசர்: குற்றமில்லாதனவாயிருக்கிற சில வார்த்தை களை முன்பின்னறிந்து வரிசையாய்ச் சொல்லமாட்டாதவர் பலவாய வார்த்தைகளைத் தொடுத்துச் சொல்ல விரும்புவர் எ-று.

ஏ) பழைய 2: குற்றமற்றனவாய்ச் சிலவாய சொற்களிலே தெளியாதவர் பல சொற்களைத் தொடுத்துச் சொல்லத் தெளிந்து விரும்புவர்.

---

3. செலச்சொல்லி — பிறர் மனத்திற் பதியுமாறு சொல்லி
4. அவ்வாற்றான் — 648ஆம் குறளின் 4ஆம் அடிக்குறிப்பு காண்க
5. 643 குறளின் விசேடவுரை காண்க
6. மறுதலையாயின — மாறுபாடான குணங்களாவன: வழுவுடைத்தால், மிகைபடக்கூறல், விளங்கக் கூறாமை, கேட்டற்கு இனிது ஆகாமை, விழுப்பயன் தாராமை, மாறுகொளக்கூறல், வெற்றெனத் தொடுத்தல் முதலாயின
7. இவ்வாறு — வழுவின்மை முதலிய இல்லாமல் இங்ஙனம்
8. வல்லார் —சொல்வன்மையுடையவர்
9. அது — பலசொல்லல்

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

காளிங்கர் 'செலச்சொல்லி அமைதலைத் தெளியாத அமைச்சர்' என உரைகாண்பதால் அவர் கொண்ட பாடம் ''செலச்சொல்லல்'' என்பதாகலாம். முதலடிக்கண் வந்த 'பல சொல்ல' என்பதற்கேற்பச் ''சிலசொல்லல்'' என்பதே ஏற்புடைய பாடம். 'மன்ற' என்ற சொல் உரையாசிரியர்களைக் கருத்தொத்த பலசொற்களால் உரைகாணச் செய்திருக்கிறது. பழைய உரை 'மன்ற காமுறுவர்' எனக் கொண்டு கூட்டித் 'தெளிந்து விரும்புவர்' என்கிறது. சுபாபதி 'மன்ற பல சொல்லல்' எனக் கூட்டி உண்மையாகவே பல வார்த்தைகளை' என்பர். குழந்தை 'மன்ற காமுறுவர்' எனக் கூட்டி 'மிகவிரும்புவர்' என்பர். சாமி.சிதம். 'மன்ற மாசற்ற சில' என இயைத்து 'நிலைபெறக் குற்றமற்ற சில வார்த்தை' என்பர். இராம.'மன்றம் மாசற்ற சில' எனச் சிதைவு செய்து 'அவையில் குற்றமற்றதாகச் சில சொற்களைக் கூடச் சொல்லத் தெரியாதவர்கள்' என்பர். தேவநேயர் 'தேற்றமாக (நிச்சயமாக) பல சொல்லக் காமுறுவர்' என்பர். வரத. 'திருப்பித் திருப்பிப் பல சொல் சொல்ல' என்பர் 'உறுதியாக பலசொல்லக் காமுறுவர்' மு. ரா. அரு.; வ சுப மா., சி.இ.'மன்ற' என்ற சொல்லை வாளாவிடுத்தனர்.

ஆசிரியர் வள்ளுவர் எந்தச் சொல்லையும் வாளா பயன் படுத்தார்; ஆகையால், இது பொருள் குறித்தே யாதல் வேண்டும் ''மன்ற வெண்கிளவி தேற்றஞ் செய்யும்'' தொல்: (265) ஆதலால், தேற்றப் பொருளையும் அப்பொருளைத் தரும் ஒருதலை, மெய், தெளிந்து, மிக, உறுதியாக, என்ற பொருளையும் தந்தனர். 'இடைச்சொற்கள் தாமாக இலங்கும் இயல்பிலவாதலான், எடுத்தோதப்பட்ட வடிவிலே இயங்குவதல்லது விகுதி சாரியை இடைநிலை சார்ந்து வேற்றுருவங்கொள்ளா; பெயரையும் வினையையுஞ் சார்ந்து அவற்றை வெளிப்படுத்தல் மாத்-திரையே செய்யும். ஆதலான், ஈண்டு 'மன்ற மாசற்ற சில' என்று பெயரோடோ, மன்ற காமுறுவர் என வினைச்சொல்லோடு கூட்டியோ வழங்கலாம்.

அப்போது அதனதன் தேற்றத்தை வெளிப்படுத்தும் என்க ஆதலால் மன்ற என்பது அகரவீற்று இயற்கையிடைச்சொல்.

இராம. மன்ற என மவ்வீறு கெட்டதாகக் கொண்டு பொருள் சொல்வர். மன்றத்துச் சொல்வன்மையை அவையஞ்சாமையில் விரித்துணர்த்துதலான் ஈண்டு ஆசிரியர் கருதுவது, ஐம்பெருங் குழுவினும் எண்பேராயத்தினும் அமைச்சன் நீதி வழுவாநெறி முறைக்காகவும், மாற்றரசன் முன் உரையாடும் போதும் ஒற்றும் தூதுமாகச்செல்லும் போதும் அமையவேண்டிய சொல்வன்மை யைக் குறிப்பதாகும் எனத் தெளிக. இங்ஙனமே அவை பேச்சைக் குறிக்கும் ஏனைய உரைகளும் இவ்வதிகாரத்திற்கு இயைபில என ஒதுக்குக. இங்ஙனமே இந்நூலுள் 'மன்ற' என்ற இடைச் சொல் வரும் ஏனைய ஐந்திடங்களிலும் கொள்க. அவையறிதலை அரசவையும் சொல்வன்மை பொதுவகையினும் நோக்குவது என்பது பரிமேலழகர் கருத்து.

ஐ) ஒப்புமைப்பகுதி:

**சிலசொல்லல்:**

உயவலூர்திப் பயலைப் பார்ப்பான்
எல்லிவந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே. — புறம்., 305: 2

சில சொல்லாற் பல கேள்வியர் —புறம்., 360:2

விரைந்துரையார் மேன்மேல் உரையார்பொய் யாய
பரந்துரையார் பாரித் துரையார் — ஒருங்கெனைத்தும்
சில்லெழுத்தி னானே பொருளடங்கக் காலத்தால்
சொல்லுக செவ்வி அறிந்து. — ஆசார., 76

மிகைபடச் சொல்லேல். — ஆத்தி., 90

**முற்றும்:**

சொற்றாற்றுக் கொண்டு சுனைத்தெழுதல் காமுறுவர்
கற்றாற்றல் வன்மையுந் தாந்தேறார் — கற்ற
செலவுரைக்கும் ஆறறியார் தோற்ப தறியார்
பலவுரைக்கும் மாந்தர் பலர். — நாலடி., 313

ஒரூபுடை:

பொருளற்ற ஆயிரம் வார்த்தைகளைவிட பொருள் நிறைந்த ஒரு வார்த்தை மேலானது — தம்மபதம்., 1

மன அமைதி தருகிற ஒரு செய்யுள் பயனற்ற ஆயிரம் செய்யு யுளைவிடச் சிறந்தது. — தம்மபதம்., 2

பயனற்ற ஆயிரம் செய்யுளைவிட பயனுள்ள ஒரு செய்யுள் மேலானது — தம்மபதம்., 3

*65. 10. இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்ற(து)*
*உணர விரித்துரையா தார். (650)*

உரைப்பகுதி ;

அ) மணக். : இணராய் மலர்ந்தும் நாற்றமில்லாத பூவை ஒப்பர், கற்றதனைப் பிறர் அறிய விரித்துச் சொல்லமாட்டாதார் எ—று.

ஆ) பரிதி. : கண்ணுக்குப்புலப்படக் கொத்தாகப் பூத்தும் மணமில்லாத முருக்கம் பூவொடு ஒப்பர்; கற்ற கல்வியைச் செவிக் குப் புலப்படச் சொல்லாதார் எ—று.

இ) பரிப். : இணர் ஆக மலர்ந்தும்நாற்றம் இல்லாதபூவை ஒப்பர், கற்றதனைப் பிறர் அறிய விரித்து உரைத்துச் சொல்ல மாட்டாதார் எ—று.

இது சுருங்கச் சொல்லுதலே யன்றி வேண்டும் இடத்து விரித்தும் சொல்ல வேண்டும் என்றது.

ஈ) காளி. : 'மரத்தனையர்' பாடம்.

நறுமலர்ப்பூங்கொத்து உடையவாகிய சண்பகம் புன்னை முதலியபோலத் தானும் பெரிதும் இணர்கொண்டு மலரப்பெற்று வைத்தும் அவைபோல மணம் நாறப் பெறாத பிறமரத்தை ஒப்பர்: யார் எனின், தாம் கற்ற சொல்மலரினைக்கேட்ட அரசர் முதலானவர்க்கு மற்று அதன்பொருள் நயம் மணம்தோன்ற விரித்துச் சொல்ல மாட்டாத அமைச்சர் எ—று.

சொல்மலர் எவ்விடத்துப்பெறுதும் எனின், குரவர் முதலான அரசர் சொல் திருவாய் மலர்ந்தார் என்னும் வழக்கத்துள் கண்டு கொள்க. இணர் என்பது பூங்கொத்து. ஊழ்த்தல் என்பது மலர்தல்.

உ) பரிமேல். : கற்றுவைத்த நூலைப் பிறரறியும் வண்ணம் விரித்துரைக்கமாட்டாதவர், கொத்தின்கண்ணே மலர்ந்துவைத்தும் நாறாத பூவை ஒப்பர்.

செவ்விபெற மலர்ந்துவைத்தும் நாற்றம் இல்லாத பூச்சூடப் படாதவாறுபோல நூலைக் கற்றுவைத்தும் சொல்லமாட்டாதார் நன்கு மதிக்கப்படார் என்றமையின், இது தொழிலுவமம் ஆயிற்று [1]இவை இரண்டுபாட்டானும் அது மாட்டாதாரது [2] இழிவு கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: தான் கற்ற நூல்களைப் பிறரறியத் தக்கபடி விரித்துச் சொல்லமாட்டாதார், மலர்ந்தும் மணமில்லாத பூவோ டொப்பர் (எ—று).

ஏ) பழைய 2: கற்றறிந்த நூல்களைப் பிறரறியும் வண்ணம் விரித்துரைக்க மாட்டாதவர் கொத்தோடே மலர்ந்தும் நாறாப் பூவை ஒப்பர்,

மல்லர்: என்பது தன்கொத்துக்கு அலங்காரங் குடுத்து வாசனை யில்லாத புஸ்பத்துக்குச் சமானமாயிருப்பார்கள் தான் படித் ததைப் பிறத்தியார் அறியும் படிக்குக் காண்பித்துச் சொல்ல மாட்டார்கள் என்றவாறு

வாசனையில்லாத பூவை விரும்புவாரில்லை என்றது போல வேண்டியது சாஸ்திரங்களால் நிறைத்துத் தான் சொல்லுகிற காரியத்தைப் பிறத்தியார் விபரமாய்க் கண்டுபிடிக்கும் வகையாய்ச் சொல்லமாட்டாத மந்திரியை ஒருத்தரும் மதிக்கதக் தில்லை என்பது கருத்து

இணர்-பூங்கொத்து, ஊழ்த்தல்-அலங்கரித்தல் நாறா வாசினையிடுதல், மலர்-பூ, அனையர்-உவமையுடைத்தவர்கள், விரித்துரைத்தல்—உரைசொல்லுதல்.

1. சூடப்படாமையகிய தொழிலை உவமனமாகக் கொண்டமையின் இது தொழிலுவமையாயிற்று

2. அதுமாட்டதரதே - முறைப்படச் செலுகின்ற திறமற்றவரது

(ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'மரத்தனையர்' என்பது காளிங்கர் பாடம். இக்குறள் பெரிதும் கருத்து வேறுபடாத உரைகளையுடையது.

'இணராகப் பூத்தும் நாறாத மலர்' என்ற உவம அடையால், 'அலகுசால் கற்பின் அறிவுநூல்கள் பலவற்றைத்தானே படித்தும், பலர்வாய்க்கேட்டும் கேட்டார்ப்பிணிக்குந்தகையவாய்ச் சொல்லமாட்டாதார்' என்ற பொருளின் பொதுத்தன்மையும் விரித்துக் கொள்க.

பழைய உரைகளில் பரிதியார் கண்ணுக்கழகாக இருந்தும் மணமில்லா முருக்கம்பூவை உவமிப்பது சிறந்த விளக்கம். பரிப்பெருமாள் தரும் சுருங்கக் கூறலேயன்றி வேண்டுமிடத்து விரித்தும் கூறவேண்டும் என்ற [விளக்கம் ஈண்டியையுடையதாகாமை காண்க.

இராம. 'சொல்வன்மையுடையார் சிலவே சொன்னாலும் பலர் பயனடைவர்; வன்மையில்லாதார் பலபேசினும் பயன்படார்; அவர்களை மதிப்பவர்களும் இல்லை' என்ற கருத்தை உவமையாற் கொணருவர்.

வ. சுப. மா. 'மணமில்லாத கொத்துமலர் போன்றவர்' எனச் சொன்னிலைமாற்றிப் பொருள் கொள்வர்.

குழந்தை, சி. இ., சபாபதி, 'இணர் ஊழ்த்தும்-கொத்தில் மலர்ந்தும்' என்பர். ஏனையோர் 'கொத்தாக மலர்ந்தும்' என்பர் பின்னதே சிறத்தல் காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

இணரூழ்த்து நாறா மலர்:

அள்ளிக்கொள் வன்ன குறுமுகிழ வாயினுங்
கள்ளிமேற் கைந்நீட்டார் சூடும்பூ வன்மையால் -நாலடி., 262

உளரெனினும் இல்லாரொ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார் .குறள் ,730

கற்ற துணர விரித்துரையாதார்:

நுண்மொழி நோக்கிப் பொருள்கொளலும் நூற்கேலா

வெண்மாழி வேண்டினும் சொல்லாமை - நன்மொழியைச்
சிற்றின மல்லார்கண் சொல்லலும் இம்மூன்றும்
கற்றறிந்தார் பூண்ட கடன். -திரி., 32

செழும்பெரும் பொய்கையுள் வாழினும் என்றும்
வழும்பறுக்க கில்லாவாம் தேரை - வழும்பில்சீர்
நூல்கற்றக் கண்ணும் நுணுக்கமொன் றில்லாதார்
தேர்கிற்கும் பெற்றி அரிது. நாலடி., 352

எத்துணைய வாயினும் கல்வி இடமறிந்து
உய்த்துணர் வில்லெனின் இல்லாகும் - உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை இன்றெனின் என்னாம் அஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து. -நீதிநெறி.,5

மொழிவ தறமொழி — ஆத்தி., 67

......... ......... உறுமுறை பிறழ்தரப் பலவாய்
விரிக்கவல் லவரும் கற்றது விளங்க விரிக்கமாட் டாரும்மெல்
லியரே.
—விநா. அரசி., 106

## 65. சொல்வன்மை

| | நாநலம் | ஆக்கமும் | கேட்டார்ப் | திறனறிந்து | சொல்லுக | வேட்பத்தாம் | சொலல்வல்லன் | விரைந்து | பலசொல்லக் | இணரூழ்த்தும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 10 | 5 | 4 | 9 | 1 | 3 | 8 | 2 | 6 | 7 |
| பரிதி. | 3 | 10 | 1 | 2 | 4 | 9 | 8 | 7 | 5 | 6 |
| பரிப். | 10 | 5 | 3 | 9 | 1 | 4 | 8 | 2 | 6 | 7 |
| காளி. | 7 | 10 | 1 | 4 | 5 | 2 | 8 | 3 | 6 | 9 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

65 வது அதிகாரம் 'சொல்வன்மை' முற்றிற்று.

# 66. வினைத்தூய்மை

அ) மணக்.: வினைத்தூய்மையாவது செய்யும் வினையைக் குற்றம் பயவாமற்செய்தல். மேல் சொல்லுங்கால் சொல்வதையும் பிறர் விரும்புமாறு சொல்லல் வேண்டும் என்றார்; செய்வதையும் அவ்வாறு செய்ய வேண்டுதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: வினைத்தூய்மையாவது காரியம் செய்வதின் திருத்தம் கூறுதல் எ-று.

இ) பரிப்.: வினைத்தூய்மையாவது செய்யும் வினை குற்றம் பயவாமல் செய்தல். மேற் சொல்லுங்கால் சொல்வதையும் பிறர் விரும்புமாறு சொல்ல வேண்டும் என்றார். அது செய்யும் வினையும் அவ்வாறு செய்ய வேண்டுதலின் அதன்பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: அஃதாவது செய்யப்படும் வினைகள் பொருளேயன்றி அறமும் புகழும் பயந்து நல்லவாதல். சொல்லேயன்றிச் செயலும் நன்றாக வேண்டும் என்கின்றமையின், இது சொல் வன்மையின் பின் வைக்கப்பட்டது.

ஊ) கவிராசர்: அஃதாவது — செய்யப்படுங் காரியங்கள் பொருளேயன்றி அறமும் புகழுங் கொடுத்து நல்ல ஆதல்.

ஏ) பழைய 2: அஃதாவது, மந்திரியர், சொல்லேயன்றித் தொழிலும் மறனும் புகழும் பொருளும் பயப்படச் செய்யும் வினை. வினைத்தூய்மை யென்றது, பழியும் பாவமுமில்லாத வினை.

மல்லர்: அதாவது தன்பேரைக் கெடுக்கத்தக்க தொழில்களைச் செய்யாமலிருக்கிறது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இவ்வதிகாரத்திற்கு விளக்கங் கூறும் மணக்குடவர், பரிப்பெருமாள் இருவரும் 'செய்யும் வினையைக் குற்றம் பயவாமற் செய்தல்' என்பர். இதன் கருத்து மேற்கொண்ட வினையின் இறுதிப்பயன் குற்றமாதல் கூடாது என்பதே பரிதி. 'திருத்தமாகச் செய்யவேண்டும்' என்பர். பரிமேலழகர், மூ.ரா.ஆரு, கா.சு., முதலியோர் 'பொருளேயன்றி யறமும் புகழும் உளவாகச் செய்தல்' என்பர். திருப்பதிப் பதிப்பு 'பின் இரக்கப்படும் செயல்களைச் செய்யற்க' என்னும். தேவநேயர் 'அரசியல் அறநூன்முறைகளில் அமைச்சர் செய்வன குற்ற மற்றனவாக இருத்தல் வேண்டும்' என்பர். வரத 'அமைச்சன் செய்யும் வினையில் இடைக்கண் முறிவுபடாமலும், தீமைகல வாமலும் செய்வதால் பயன் நன்மையாக முடிவதே வினைத் தூய்மை' என்பர். சி இ., சாமி-சிதம். இருவரும் 'செய்யும் வினைகள் குற்றமற்றனவாதல்' என்பர். இராம. 'காரியசுத்தம்: அதாவது செய்யுங்காரியம் குற்றமற்றதா என்பதை ஆய்ந்து செய்தல்' என்பர். குழந்தை 'சொல்வன்மையின் இடம்பெறத் தக்கவை அவையறிதலும் அவையஞ்சாமையும், குறிப்பறிதலும்' எனக்கருதி அறுபத்தொன்பதாவது அதிகாரமாக இடம் பெறச் செய்வர்.

இவற்றுள் 'செய்யும் வினைக்கண் நன்மை பயக்கும் வினை களையே செய்தலே வினைத்தூய்மை' என்பார் உரையினும், 'தூய்மை வினையின் முடிவில் அதன் பயனாக அறியப் பெறுவ தொன்றாகலின், அறமும் புகழும் பயப்பனசெய்தல்' என வள்ளுவர் உள்ளத்தையுணர்த்தும் உரைகளும் விளக்கங்களும் சிறந்தன.

முறைவைப்பில் குழந்தை கொண்டது இயைபுடையது போலத்தோன்றுமாயினும், சொல்வன்மையீறாகச் சொல்லைப் பற்றிய செய்திகளை முடித்துச் செயல்பற்றிய சிந்தனைகளை மூன்றதிகாரத்தான் மொழிந்து, பின்பு தூது சொல்லி, அமைச் சர்க் கேயன்றித் தூதர்க்கும் உரிய அவையறிதல் முதலிய வற்றை அமைத்தமையும் எண்ணி யின்புறுதற்குரியது என ஏண்ணியிருப்பர் போலும். சிந்திக்க.

66.1. துணைநலம் ஆக்கம் தருஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும். (651)

உரைப்பகுதி :

அ) மணக் : துணை நலம் ஆக்கத்தைக் கொடுக்கும்: வினை நலம் அவ்வளவேயன்றி,[1] வேண்டிய எல்லாவற்றையும் ஒருங்கு கொடுக்கும் எ—று.

துணை நலம் ஆக்கங்கொடுத்தல் எல்லாரானும் அறியப் படுதலின், ஈண்டு ஏதுவாக வந்தது.

ஆ)பரிதி.: நல்லோருறவு ஆக்கம் தரும்; செய்யும் காரியமும் முன் பின்பார்த்து நன்மையே செய்வானாகில் வேண்டியவெல் லாம் தரும் எ—று.

இ)பரிப்.: துணை நன்மை ஆக்கத்தைக் கொடுக்கும்: அவ் வளவே அன்றி வினை நன்மை வேண்டியது எல்லாம் ஒருங்கு கொடுக்கும் எ—று.

துணை நன்மை ஆக்கம் கொடுத்தல் எல்லாரானும் அறி யப்படுதலின் ஈண்டு ஏதுவாக வந்தது. இது வினைத்தூய்மை வேண்டும் எனபதூஉம் அதனால் பயனும் கூறிற்று.

ஈ) காளி.: 'வேண்டியது எல்லாம் ஒருங்கு' பாடம்.

ஒருவர்க்குத் துணைவலியாய் உள்ள நன்மையானது அத்து ணை நலத்துஆக்கமே தரும்:அதனை வினைத்தூய்மையாகிய இது தாம் விரும்பிய பயன் எல்லாம் ஒரு தன்மைப்படத் தரும் எ—று.

உ)பரிமேல்.! ஒருவனுக்குத் துணையது நன்மை செல்வம் ஒன்றனையும் கொடுக்கும் அவ்வளவன்றி வினையது நன்மை அவன் வேண்டியன யாவற்றையும் கொடுக்கும்.

வேண்டியவெல்லாம் என்றது இம்மைக்கண் அறம் பொருள் இன்பம் முதலாய வற்றையும்[2], மறுமைக்கண் தான்விரும்பிய

1. அவ்வளவன்றி—செல்வம் ஒன்றனையும் தரும் துணைநலம் போலாகாமல்
2. முதலாயவற்றை என்றது பேர், புகழ், சொல் செலவு, ஒளி முதலியவற்றை, ஒளி — 'உறங்குமாயினும் மன்னவன் தன்னொளி'

பதங்களையும்[3]. இதனான் காணப்படும் துணை[4] நன்மையினும் கருதப்படும்[5] வினைநன்மை சிறந்தது என வினைத்தூய்மையது சிறப்புக் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: ஒருவனுக்கு நல்ல துணையுண்டானால். அது செல்வமொன்றையுங் கொடுக்கும்; செயப்படும் வினை நல்ல தானால், அவன் வேண்டிய எல்லாங் கொடுக்கும் எ—று.

ஏ) பழைய 2: ஒருவனுக்குத் துணை நலஞ்செல்வம் ஒன்றனைத் தரும்; அவ்வாறன்றி வினைநலம் அவன் வேண்டிய வெல்லாந் தரும் என்றவாறு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

''ஆக்கம்''

'செல்வம்' என்பவர் பரிமேலழகரும், அவர்மரபுவழிப் படுவோரும்,

'துணைநலம் நல்லோர் உறவு' பரிதி.

'வேண்டியஎல்லாம்' என்பதற்குப் பரிமேலழகர் தரும் விளக்கம் ஏற்புடையதும் சிறந்ததும் ஆம். காளிங்கர் 'வேண்டியதெல்லாம்' எனப்பாடம் கொண்டதைத் திருப்பதிப் பதிப்பாலும் உரைக்கொத்தானும் அறியலாம். இவர் உரை 'விரும்பிய பயன் எல்லாம்' என்பது. வேண்டியது - விரும்பிய பயன். இந்த பால்பகா அஃறிணைப் பெயருடன் எல்லாம் என்ற இழிநிலைக்கண் வரும் பெயர்ச்சொல்புணர்ந்து பன்மையாக்கியது என்ற கருத்து அமைவதாகும். பரிமேலழகர் பாடத்தில் 'வேண்டிய-விரும்பிய' என்னும் பொருளதாய் எல்லாம் என்பதால் விசேடிக்கப்பட்டு அஃறிணைப் பலவின்பாற்பன்மை வினைப் பெயராகிறது.பிழையின்றாயினும்'வேண்டிய வெல்லாம்'என்பது ஓசை நயமுடையது.வ.சுப.மா. 'ஆக்கம்-நல்ல முன்னேற்றம்'என்பர்.

பரிமேலழகரும் பிறரும் 'வேண்டிய எல்லாம்' என் பதற்குத் தரும் விளக்கம் இருமைப்பயனையுங் குறிக்கின்றது. அதிகாரம் 'அமைச்சர் மேற்கொண்ட வினைக்கண் தூய்மை யுடையராக நடந்துகொள்ளல் வேண்டும்' என்பதையே வலி

3. பதங்கள் - இந்திரலோகம் சந்திரலோகம் முதலிய இடங்கள்
4. துணை — செயலாற்றற்கண் உடனிருந்து உதவுவர்
5. கருதப்படும் — ஆராய்ந்து எண்ணப்படும்

யுறுத்துவது. தூய்மையில்லாத வினைகளாக வள்ளுவனார் கருதுவன, புகழும் நன்மையும் பயவாதனவும், ஒளிமாழ்குஞ் செய்யும்வினையும் இளிவந்தனவும், கழிவிரக்கத்திற்குக் காரண மானவும், சான்றோர் பழிக்குரியனவும், நூல்களும் சான்றோரும் கடிந்து விலக்கியனவும், அழக்கொண்டனவும் சலத்தாற் பொருள் செய்தலும் முதலியன அடையும் என்றே அறிவித்தாரல்லது, மறுமைக்கண் வீட்டுலகையும் இன்பவுலகையும் எய்தலாம் என்றா ரல்லார். அரசுக்குரியனவே கூறினர்; மறுமைக்கு உரியன கூறிற்றிலர் என்பதை எண்ணிவேண்டிய எல்லாம் இவை இவை எனத்தெளிக. 'இனத்தானாம் மாந்தர்க்கறிவு' என்னும் ஆசிரியர் துணைநலத்தானாய பயன் ஆக்கம் ஒன்றே என்று கருதியிருக்க மாட்டார். அனைத்தானும் ஆம் உயர்ச்சியையே கருதியிருப்பர். அங்ஙனமே, அவ்வுயர்ச்சிக்கு வேண்டியஎல்லாம் வினைத் தூய்மையானாம் என்றிருப்பர். இவை குறணூல் முழுதையும் நோக்கான் நோக்கி முடிக்கத் தகுவதாம் என்க.

அன்றியும் ''இனநலம் எல்லாந்தரும்'' என்ற ஆசிரியர் நோக்கு 'துணை நலமும் வேண்டிய எல்லாந்தரும்' என்பதை எண்ணச் செய்யும். ஆகவே 'ஆக்கம்-உயர்ச்சி; வினை நலம்-வினை செய்தற்கண் உபதைகள் ஒன்றையுஞ்சாராது, துலைநாவன்ன தன்மையனாய் தொழில்களைச் செய்து முடித்தல்' எனக் கொள்ளின் யாண்டும் முரணாமல் அமைவுடையதாம் என எண்ணலாம்; எண்ணுக 'துணை நல்லதாக இருந்தால், காரிய வெற்றியும் செல்வமும் அடையலாம். காரியம் நல்லதாயிருந்தால் காரிய வெற்றி மட்டும் அல்ல; விரும்புகிற எல்லாம் கிடைக்கும் என்ற இராம., வரத. உரைப்போக்கும் இதற்குத் துணையாகும். தேவநேயர் 'துணைத் தூய்மையினும், வினைத் தூய்மை சிறந்தது' என்பர்.

66.2. *என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு*
*நன்றி பயவா வினை.* (652)

**உரைப்பகுதி :**

அ) **மணக். :** எல்லாக்காலமும் தவிர்தல் வேண்டும்; புகழோடு நன்மை பயவாத வினையை எ - று.

என்றும் என்றதும் செயலற்ற காலம் என்றது.

ஆ) பரிதி : என்றென்றும் கைவிடவேணும் ஆக்கமும் புகழும் தாராத காரியத்தை எ—று.

இ) பரிப். : எல்லாக் காலமும் தவிர்தல் வேண்டும்; புகழோடே கூட அறத்தைப் பயவாத வினையை எ—று.

என்றும் என்றது செயல் அற்ற காலமும் என்றது. இது முதலாகக் கடிய வேண்டுவன கூறுகின்றார் ஆதலின் முற்பட அறமும் புகழும் பயவாத வினையைத் தவிர்க என்றது.

ஈ) காளி. : எஞ்ஞான்றும் குறிக்கொண்டு தவிர்தல்வேண்டும்; யாதினை எனின் புகழுடன் தனக்கு நன்மையைப் பயவாத கருமத்தை எ—று.

உ) பரிமேல். : தம் அரசனுக்கு இம்மைக்கண் புகழும் றுமைக்கண் அறமும் பயவாத வினைகளை அமைச்சர்க்கு எக்காலத்தும் ஒழிதல்வேண்டும்.

பெருகல், சுருங்கல், இடைநிற்றல் என்னும் நிலைவேறு பாடு காலத்தான் வருதலின் 'என்றும்'[1] என்றார். வேண்டும் என்பது, ஈண்டு இன்றியமையாது என்னும் பொருட்டு.[2]

ஊ) கவிராசர் : தனக்கு இம்மையிலே புகழும் மறுமையிலே தருமமும் கொடாத காரியத்தை, என்றைக்குஞ் செய்யாமல் விட்டுவிடவேணும் எ—று.

ஏ) பழைய 2: அரசனுக்கு இம்மையிற் புகழும் மறுமையில் அறமும் தாராத வினைகளை அமைச்சன் எக்காலமும் ஒழிதல் வேண்டும்.

1. என்றும் - எஞ்ஞான்றும், தன்னரசன் சுருங்கிய காலத்தும், பெருகிய காலத்து இடைநிகராய காலத்தும்

2, பொருட்டு - பொருளது

ஐ) தொகுப்பும் குறிப்பும் :
எக்காலத்தும்

'செயலற்ற காலத்தும், ஒருவுதல் வேண்டும்' மணக்., பரிப் ; 'பெருகல் சுருங்கல் முதலியன காலத்தான் வருதலின் என்றும் என்றார்' என்ற பரிமேலழகர் கருத்தும் இணைத்துக் கொள்ளத்தக்கவை. ஏனையோர் சொற்பொருள் கூறுபவர்கள்.

தேவநேயர் புகழை மறுமைக்கும், அறத்தை இருமைக்கும் பங்கிடுவர். 'நன்றி—அறம்' மு கோ.; 'நன்றி—உலகெலாம் செலுத்தும் நன்றி, புகழ்—இவ்வுலகம் வானுலகம் கிடைப்பதாம்' என்பர். வரத. 'புகழ்—வாழ்க்கையின் பயன்; நன்றி—அதன் எச்சியமாகிய நன்றி. தனக்குப் புகழ் விளைவிப்பனவும், பிறர்க்கு நன்மை விளைவிப்பனவும் ஆகிய செயல்களே தூய்மை' என்பர். 'தன்னரசர்க்குப் புகழ் தருவனவும் நாட்டுக்கு நனமை தருவனவுமே தூயவினை' எனல் தகும்; சிந்திக்க.

இராம. 'இக்குறள் அமைச்சனுக்கு மட்டும் கூறியதன்று. இவ்வதிகாரம் முழுதுமே அமைச்சரைப் பற்றியதன்று என்பதை இதன்கண் உள்ள எல்லாக் குறள்களும் சான்று பகரும்' எனப் பரிமேலழகரை மறுப்பர். பாலியல் அதிகாரங்கள் வள்ளுவ மாலை காலமுதல் தொன்று தொட்டு வருவன ஆகலானும், வள்ளுவர் யாண்டும் சிறப்பிற் பொதுமையும், பொதுமையிற் சிறப்புமாக விதிகளை வகுப்பவர் ஆதலானும், வினை என்பது நாட்டாட்சியும் போருமே ஆகலானும், அவற்றிற்கான வினைகளைச் செய்து தூய்மை தவறுதல் அமைச்சர் மாட்டு நிகழக் கூடுமாதலானும், அவர்கள் வினையாற்றற்கண் தூய்மையைக் கடைப்பிடித்தல் இன்றிமையாதது என்றனர் என எண்ணுக. அரசரும் வினைசெய்தற்கண் தலைமைப் பங்கு ஏற்பவர்களே யாயினும் செய்யும் பண்பு அமைச்சர்க்கேயாதலின் இவ்வதிகாரம் அமைச்சியலில் இடம் பெற்றதையும் எண்ணுக. வ.சுப.மா. உரைநடையும் அமைச்சர்க்கு என்ற பொதுமை நோக்குடையதே என்பதைப் 'புகழும் புண்ணியமுந் தராத காரியத்தை என்றும் ஒழிக்க' என்னும் உரை உரைக்கும்.

ஒ) ஒப்புமைப்பகுதி :
முற்றும் :
பொருள்பயந் திடினும் அறம்புகழ் பயவாப் புரைபடுவினை என்றும் புரியார். —வினா. அரசி. 107

66.3. ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர். (653)

**உரைப்பகுதி :**

அ) **மணக். :** தமக்குப் புகழ்கெடவரும் வினையைச் செய்தலையும் ஆக்கங்கருதுவார் தவிர்க எ-று.

இது முன்புள்ள புகழ் கெடவரும் வினையையும் தவிர்க என்றது.

ஆ) **பரிதி. :** அரசர்க்கு ஆகாத காரியம் கண்டால் ஓவென்று நொந்து கொண்டு அந்தக்காரியத்தைக் கைவிடுவான் எ-று.

இ) **பரிப். :** தமக்குப் புகழ் கெட வரும் வினையைச் செய்தலை ஆக்கம் கருது வார் தவிர்க எ-று.

ஓஒதல் வேண்டும் என்றது ஓவுக என்னும் பொருட்கண் ஓவுதல் வேண்டும் என ஒரு சொல் நீர்மைப்பட வந்தது. இது முன்பு உள்ள புகழ் கெட வரும் வினையையும் தவிர்க என்றது.

ஈ) **காளி. :** 'ஒளிமாள்கும் செய்வினை' பாடம்.

தூய்மை அல்லாத வினை செய்தார்க்குக் கெடுதி உறுதி ஆகலான், அதனை ஒழியவேண்டும் : யார் எனின், இருமைக் கண்ணும் ஆக்கம் பெறக் கடவேம்யாம் என்னும் அறிவினை உடையோர் எ-று.

ஒளிமாள்கும் செய்வினை என்பது முன்பு தமக்கு நின்ற ஒளி கெடுமாறு செய்யும் வினை என்றது.

உ) **பரிமேல். :** மேலாகக்கடவேம் என்று கருதுவார் ; தம் ஒளிகெடுதற்குக்காரணமாய வினையைச் செய்தலைத் தவிர்க.

ஓதல் வேண்டும் என்பது ஒரு சொல் நீர்மைத்து, ஓவுதல் என்பது குறைந்து நின்றது. ஒளி-தாமுள காலத்து எல்லாரானும் நன்குமதிக்கப்படுதல். செய் என்னும் முதனிலைத் தொழிற்பெயர் மாற்றப்பட்டது.[1] அன்றிச் செய்வினை என வினைத்தொகை

1. 'செய்வினை' என்பது 'வினைசெய்' என்று மாற்றப்பட்டது.

யாக்கிய வழிப் பொருளின்மை அறிக.[2] ஒளி கெடவருவது ஆக்க மன்று என்பதாம்.

காரி. : ஓஒதல் என்பது, ''அடியளந்தான் தாவியது-தாயது[3]'' என்றாற் போல் இடைக்குறைந்தது, வினை செய்தலை என்றதனால் முதனிலைத் தொழிற் பெயர் மாற்றப் பட்டது.

ஊ) கவிராசர் : மேலே செல்வம் வரவேணும் என்று நினைத்துக் காரியஞ் செய்கிறவர்கள், தங்கள் கீர்த்தி கெடத்தக்க காரியங்களைச் செய்யாமல் தவிர்க எ-று.

ஏ) பழைய 2 : தாம் மேலாகக்கடவோம் என்று கருதுவார் தமக்குப்புகழ் கெடுதற்குக் காரணமாகிய வினையைச் செய்யாதொழிக.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'ஒளி'

'புகழ்' மணக், பரிப்., குழந்தை, சபாபதி சி. இ., இராம. ; 'தமக்கு முன்நின்ற ஒளி' காளி. ; 'தாம் உள்ள காலத்து அனைவரானும் நன்கு மதிக்கப்படுதல்' பரிமேல் ; 'அரசர்க்கு ஆகாதது' பரிதி. ; 'கீர்த்தி' கவிராசர்; 'தன்மதிப்பு' தேவநேயர் ! இங்ஙனம் ஒளி-பல பொருளில் உரையாசிரியர்களால் ஆளப்படுகிறது. நாலடியரில் ''உண்ணான் ஒளிநிறாஅன் ஓங்குபுகழ் செய்யான்'' என்புழி நாலடியாரில் புகழினும் வேறானதாகக் கருதப்படுகிறது சீவக சிந்தாமணியில் ''உறங்குமாயினும் மன்னவன் தன்னொளி கறங்குதெண்டிரை வையகங் காக்குமால்'' (சீவக. 248) என்புழி 'ஒளி-அரசர் பாலுள்ள கடவுட்டன்மை' எனப்படுகிறது. பரிமேலழகரும் 693 ம் குறள் உரையில், ''மன்னவன் உறங்கவும் அவனொளி உலகைக் காவாநிற்கும்'' என உரைகாண்பர். இவற்றான் ஒளி புகழ் மட்டும் அன்று புகழின் வேறான கடவுட்டன்மை எனல் காண்க.

---

2. 'செய்வினை' என்பதை வினைத்தொகையாகக் கொண்டால் செய்யும் எனப் பொருள்பட்டு இயைபின்றாம்

3. குறள்., 610

பரிதி. 'ஒஓதல் வேண்டும்-அரசற்கு ஆகாத காரியங்கண்டால் ஒவென்றி அலறி நொந்து அந்தக் காரியத்தைக் கைவிடுதல்' என்பர். இவருரை ஓதல்-ஒவென்றலறுதலா? நீக்குதலா? இரண்டுமா? என்ற ஐயத்தைத் தருகிறது.

காளி. 'ஒளி மாள்கும் செய்வினை' எனப்பாடம் கண்டு' 'மாள்குதல்—அழிதல்' என்பர். மாள்-பகுதி, கு - சாரியை, உம் பெயரெச்ச விகுதி.

ஓ) மேற்கோள்பகுதி :

தெய்வச். : இக்குறளை எடுத்துக்காட்டி, பல்லோர் படர்கையாதலின், வேண்டும் என்னும் முற்றுச்சொல்கொண்டு முடியாமையின், ஆக்கங் கருதுவார் இவ்வாறு செய்தல் வேண்டும் என வேண்டிக் கோடற் பொருட்கண் வியங்கோள் ஈறுதிரிந்தது என்பர். — தோல். சொல்., 219

சிவஞான. : வேண்டும் என்னும் சொல்லும் ஐம்பால் மூவிடத்தும் வரும் என்பதற்கு மேற்கோள். — நன். 339

சுவாமி : வேண்டும் தரும் படும் என்பன செய்யும் என்னும் வாய்பாடன்றோ எனின் 'ஒஓதல் வேண்டும் ............... அவர்' என உயர்திணைப் பல்லோர் படர்க்கைக்கண் வருதலின் அவ்வாய்பாடு அன்று என்பர். — இ. கொ , 85

காரி. : ஆதும் என்பது மேலாகக்கடவோம் என்னும் உளப்பாட்டுத் தன்மையில் வந்த எதிர்கால முற்றுவினைச் சொல்லாதற்கு மேற்கோள். — மாற. 261

யா-வி.: அளபெடை இயைபுத்தொடைக்கு மேற்கோள். —சூ.40

66.4. *இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்*
*நடுக்கற்ற காட்சி யவர்,* (654)

உரைப்பகுதி.:

அ) மணக்.: துன்பம் வரினும் இழிவாகிய வினைகளைச் செய்

யார், துளக்கமற்ற[1] தெளிவுடையார் எ—று.

இது பிறரால் இகழப்படுவன செய்யற்க என்றது. இத்துணையும் கடியவேண்டும் என்பது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: தாம் இடுக்கண் உற்றாலும் இழிவான காரியம் செய்யார் திடபுத்தியுள்ளவர்.

இ) பரிப் : இடுக்கண் வரினும்' பாடம்.

துன்பம் வரினும் இழிவு ஆகிய வினைகளைச் செய்யார்கள், துளக்கம் அற்ற[1] தெளிவு உடையார் எ—று.

அவர் வருமது வரும் என்று நினைப்பர். இது பிறரால் இகழப்படுவன செய்யற்க என்றவாறு ஆயிற்று. இத்துணையும் கடிய வேண்டுவன கூறப்பட்டது.

ஈ) காளி.: இதன் தன்மை இது ஆகலான் தாம் பெரிதும் வறுமை ஆகிய இடர் உறினும் அதனையுற்று, அமைவது அன்றி மற்று அது ஒழித்தல் காரணமாகப் பெரிதும் இளிவந்தனவாகிய வினையைச் செய்யத் துணியார்; யார் எனின் ஆக்கமும் கேடும் அனுபவித்தல் கடன் என்று நெஞ்சில் கலக்கம் அற்று அமைந்த அறிவினை உடையவர் எ—று.

உ) பரிமேல்.: தாம் இடுக்கணிலேபட[2] வரினும், அது தீர்தற் பொருட்டு[3] முன் செய்தார்க்கு[4] இளிவந்த வினைகளைச்செய்யார துளக்கமற்ற தெளிவினை உடையார்.

சிறிது போழ்தின் கழிவதாய இடுக்கண் நோக்கி, எஞ்ஞான்றும் கழியாத இழிவு எய்தற்பாலதன்று என்பதூஉம் அஃது எய்தினாலும் வருவது வரும் என்பதூஉம் தெளிவராகலான், செய்யார் என்றார்.

---

1. துளக்கமற்ற—நடுக்கமற்ற
2. பட—அகப்பட, சிக்க
3. அது தீர்தற்பொருட்டு— துன்பம் நீங்குதற்பொருட்டு
4. முன் செய்தார்க்கு—முன்னே வினைகளைச் செய்தவர்க்கு

ஊ) கவிராசர்: தமக்குத் துக்கம் வந்தாலும் அது தீரும் பொருட்டுக் குற்றம் வரத்தக்க காரியங்களைச் செய்யார், நல்ல நெறிகளை உடையவர் எ—று.

ஏ) பழைய:2 தாம் இடுக்கணிலே பட்டாலும் இடுக்கண் த்ரு தற்பொருட்டு அவ கீர்த்தி வந்த வினைகளைச் செய்யார், நடுக்கமற்ற தெளிவினையுடையார்.

ஐ) தெகுப்பும் குறிப்பும்:

''இடுக்கட்படினும்'' என்பதற்கு மணக்குடவர் 'துன்பம் வரினும்' என்று வினைமுதற் பொருள்பட உரை காண்டலால் இவர் கண்டபாடம்' இடுக்கண்படினும். என்றிருத்தல் வேண்டும். ''ணகார இறுதி வல்லெழுத்தியையின் டகாரமாகும் வேற்றுமைப் பொருட்கே'' (தொல். எழுத்து 303) ஆதலின் எழுவாய்ப் பொருள்பட வருவன அல்வழியாதலால் என்க.

பரிதி. 'தாம் இடுக்கண் உற்றாலும்'' என இரண்டன் பொருள்பட உரைப்பர். காளிங்கர் 'வறுமையாகிய இடர் உறினும்' எனவினைமுதற் பொருள்படவுரைப்பர். பரிமேலழகர் இடுக்கணிலேபடினும் எனஇடப்பொருள் வேற்றுமையாகவுரைப்பர். பழைய2ம் அங்ஙனமே. கவிராசர் 'துக்கம் வந்தாலும்' என எழுவாயாகப் பொருள் விரிப்பர். ஆகவே எழுவாயாகப் பொருள் காண்பவர்கள் கொண்டபாடம் 'இடுக்கண் படினும்' என்பது. வேற்றுமைப்பொருள்படக் கொண்டவர் பாடம் 'இடுக்கட்படினும்' என்பது. உரைக்கியையப் பாடங்கொள்க.

'இளிவந்த'

'இழிவான வினைகள்', 'இளிவந்த செயல்கள்' என இருவகையாக உரைப்பர் அனைவரும். இழிவாகிய செயலைப்புரிதல் காரணமாகப் பிறரிடம் விளையும் மெய்ப்பாடு இளிவரல். ஆகையான் இழிவான செயல் காரணமும், அதன் விளைவு இளிவரலும் ஆதல் கண்டு காரண காரிய ஒற்றுமை நயம் பற்றிக் கண்டதாக இரண்டுரைகளையும் கொள்ளலாம். ஆயினும் 'இளிவந்த' எனலே சிறப்பு.

தேவநேயர் நடுக்கற்றகாட்சியவர் என்பதற்குத் தரும் விளக்கம்சிறந்தது. அது: 1. இன்பமும் துன்பமுங் கலந்ததே இவ்வுலக வாழ்வு. 2. வருவன தாமே வந்து தீரும் 3. இழி வினைகளைச் செய்தால் இம்மையிற் பழியும், மறுமையிற்றுன்பமு மேயாம். 4. அறவழியாற் போக்க இயலாத துன்பத்தை அமைதியாக நுகர்ந்தே ஆகவேண்டும் என்பவற்றைத் தெளிய உணர்ந்தவராதலின் இங்ஙனம் கூறினர் என்பர்.

மு.கோ. 'இடுக்கட்படினும்-பிறர் இடுக்கட்படினும் அவர்கட்காகவும் இளிவந்த செய்யார்' என்பர். ஈண்டு இளிவந்த செயல் அரசற்கும் நாட்டுக்கும் ஒவ்வாத செயல்களேயாதலின் தனக்காக-தன்புகழினைக்காக்க-பொருளைப் பெருக்கச் செய்யார் என்பதே கருத்தாதல் காண்க. 'நடுக்கற்ற காட்சி-துளக்கமில் காட்சி அதாவது மலர்தலும் கூம்பலுமில்லாத அறிவு' எனவும் கூறுவர்.

வ சுப.மா. 'அதிராத அறிஞர் (தாம்) நெருக்கடிப்பட்டாலும் இழிந்த செயல்களைச் செய்யார்' என்பர். சி இ. 'நடுக்கற்ற காட்சி நிலையான அறிவு; 'கலங்காத அறிவு' கா சு; வரத. துன்பம் வந்த காலத்தும் தாழ்வளிக்குஞ் செயலைச் செய்யார் என்பர். அதற்கியை விளக்கமுந் தருவர். இவர் உரையும் விளக்கமும் மக்கட்சமூகத்திற்குக் கூறுவதுபோலப் பொதுமையின் இயங்குகின்றது. அமைச்சர்க்கென்ற சிறப்பும் தோன்ற உரைத்தல் வேண்டும். 'இடுக்கண்—வறுமை' என்றே உரைப்பர் இராம.; 'இளிவந்த—துன்பத்தைச் செய்தவர்க்கு இழிவுடைய தொழில்கள்' சபாபதி ; இடுக்கண் படினும்—தான் துன்புறினும்' தன்னுயிர் நீப்பினும் செய்யற்க என்றதை எண்ணி இங்ஙனம் உரைப்பர் மு.ரா அரு.

இவற்றுள், தேவநேயர் நடுக்குற்ற காட்சிக்குத் தரும் விளக்கமும், பரிமேலழகர் தரும் மரபுவழி உரையும் சிறந்தன. ஆனால் 'சிறுபொழுதிற் கழிவதாகிய இடுக்கண்' என்றது, துன்பத்தில் நெடுநாள் அனுபவிக்கப்படுவனவும் இலக்கணங்களில் மாறுவனவும் உண்டு என்பதை எண்ணி அவர் பெருந்துன்பம் வரினும் அது தன்னாயுட் காலம் வரைதான் இருக்கும். புகழோ இறந்த பின்னும் வரலாற்றேட்டில் இடம்பெறும் என்று கருதிக் கூறினராயின் அதுவும் சிறந்ததாகும்.

ஓ) ஒப்புமைப்பகுதி:

இளிவந்த செய்யார்:

அழகலாதன செயேல். —ஆத்தி., 28

66.5. *என்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்*
*மற்றன்ன செய்யாமை நன்று.* (655)

உரைப்பகுதி :

அ) மணக்.: துணியப்பட்ட தென்று பின் இரங்கப்படும் வினையச் செய்யா தொழிக; வினைசெய்வனாயின் அவை போல் வனவும் செய்யாமையே நல்லது எ-று.

இது பின்னிரங்கப்படும் வினையைச் செய்யலாகாது என்றது.

ஆ) பரிதி.: என்னகாரியம் செய்தோம் என்று பின்பு விதனப் படாத காரியமே செய்வான் மறுத்து நல்லகாரியம் செய்வான் எ-று.

இ) பரிப்.: துணியப்பட்டது என்று பின் இரங்கப்படும் வினையைச் செய்யாது ஒழிக. வினை செய்வான் ஆகில் அது போல்வனவும் செய்யாமையே நல்லது எ-று.

இது பின் இரங்கப்படும் வினை செய்யல் ஆகாது என்றது.

ஈ) காளி.: இவை தகாது என்று அஞ்சாது நெஞ்சில் துணிவு கொண்டு பிறர் சோகிக்கத் தகுவனவாகிய தூயது அல்லாத கருமங்களைச் செய்யாது ஒழிக; இங்ஙனம் இதனைக்குறிக் கொண்டு செய்வான் ஆயினும், செய்யும் கருமம் செய்யும் இடத் தும் பிறர்க்கு இரக்கம் வருதல் செய்யாமையே நன்று எ-று.

உ) பரிமேல்.: யான் செய்தது எத்தன்மைத்து என்று பின் தானே இரங்கும் வினைகளை ஒருகாலும் செய்யாது ஒழிக; அன்றி ஒருகால்மயங்கி அவற்றைச் செய்யுந் தன்மையன் ஆயினானாயின் பின்னிருந்து அவ்விரங்கல்களைச் செய்யாது ஒழிதல் நன்று.

'இரங்குவ' என முன்வந்தமையின் பின் 'அன்ன' எனச் சுட்டி ஒழிந்தார். அவ்வினைகளது பன்மையான், இரக்கமும்

பலவாயின. அச்செயற்குப் பின்னிருந்து இரங்குவா னாயின்; அது[1] தீரும் வாயில்[2] அறிந்திலன் எனவும், திட்டமிலன் எனவும், பயனில்லன செய்கின்றான் எனவும், தன் பழியைத் தானே தூற்றுகின்றான் எனவும், எல்லோரும் இகழ்தலின் 'பின்னிரங்காமை நன்று'[3] என்றார். இதுவும், வினைத்தூ யார் செயலாகலின், உடன் கூறப்பட்டது. 'பிற்றொருடருக்குச்[4] செய் வானாயின் அவைபோல்வனவும் செய்யாமை நன்று' எனப் பிறரெல்லாம் இயைபற[5] உரைத்தார்[6].

ஊ) கவிராசர்.: நாம் என்ன காரியஞ்செய்தோமென்று பின் தானே விசாரப்படத்தக்க காரியங்களைச் செய்யாமல் இருக்கவேணும்; அல்லாமல் மயக்கி அறிவில்லாமல் ஒருகாற் செய்தால், பின் அவ்விரங்கல்களைச் செய்யாமல் இருக்க வேணும்.

ஏ) பழைய 2: என்ன காரியஞ்செய்வோம் என்று பின் தானே இரங்கும் வினைகளை ஒரு காலும் செய்யாதொழிக; செய்வா னேல், முன்னாகாத காரியங்களைச் செய்தது போலப் பின்னுஞ் சய்யாதொழிவது நன்று.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'மற்று' 'அன்ன' என்பவற்றுள் மற்றென்பது 'செய்யற்க' என்ற வினையை மாற்றிச் செய்வானேல் என்பதைச் சிறப்பிக்க வந்தது.

'அன்ன செய்யாமை'ப் பரிமேலழகரும் பிறரும் 'அந்த கழிவிரக்கத்தைச் செய்யாமை நன்று' என்பர். ஏனையோர் 'அத்தகைய கழிவிரக்கந்தரும் செயல்களைச் செய்யாமை நன்று' என்பர்,

---

1. அது - இரங்குதல்
2. வாயில் - வழி
3. 'மற்றன்ன செய்யாமை நன்று' எனவும் பாடமுண்டு
4. 'பிற்றொடர்தற்கு' என்றும் பாடமுண்டு
5. இயைபற — தொடர்பின்றி
6. இங்ஙனம் உரைப்பவர் மணக்குடவர்

'அன்ன'

'அவ்விரங்கல்' — பரிமேல், 'அத்தகைய'—ஏனையோர். பரிமேலழகர் அன்ன — சுட்டடியாகப் பிறந்த அஃறிணைப் பலவின்பாற்பெயர் எனக் கருதுவர். ஏனையோர் உவமவுருபு இடைச்சொல்லாகக் கொண்டனர்.

மணக். '(துணியப்பட்டது) ஏற்று? என்று இரங்குவ செய்யற்க செய்வானேல் மற்று அன்ன செய்யாமை நன்று' எனக்கூட்டிப் பொருள் கண்டிருப்பர் போலும். இதன்கருத்து ஒரு காரியத்தைச் செய்த அமைச்சன் அதனாலாய தீமையைக் கண்டு, 'இச்செயல் என்னால் துணியப்பட்டது எப்படி? என்று கழிவிரக்கப்படுஞ் செயல்களைச் செய்யற்க; மற்று அத்தகைய வினைகளைச் செய்வானாயின் அவை போன்றவைகளை அதாவது கழிவிரக்கப்படும் செயல்களைச் செய்யற்க என்பது. பரிப்பெருமாள் கருத்தும் இதனை அரண் செய்கிறது.

ஒருசெயலின் பயன் அதன் முடிவிற்றானே அறியப்படும் மூதன்முறை செய்து பயன்கண்டவன், திரும்பவும், செய்து முடிந்தபின்புதானே பயன் காணத்தகும் என்ற துணிவுடன் செய்யாது, நுண்ணறிவாலும், சூழலாலும் முன்னரே அறிந்து செய்யாதுவிடுக என்பதே இதன் கருத்து.

பரிதியுரை. 'முன் விசனப்படுங் காரியஞ் செய்தவன் பின் நல்ல காரியமே செய்வான்' என்று கருத்துரையாக, விசனப்படுகிறவர்கள் மக்களா — மன்னனா—செய்யும் மந்திரியா என்பதை விளக்காமல் விட்டது

காளி. 'பிறர் எற்று என்று இரங்குவ செய்யற்க; செய்யுங் கருமத்தைச் செய்வானாயினும் பிறர்க்கு இரக்கம் நேராத வண்ணம் செய்க' என்பர். இவர் உரை இரக்கத்தைப் பிறர்மேல தாக்குகிறது. அமைச்சன் வினைசெய்யாமல் இருக்க இயலாது. அரசியல் வினைகளில் ஏதேனும் சிலவற்றை எப்போதும் செய்யக் கடமைப்பட்டவன்; அத்தகைய அமைச்சன் செய்யவேண்டியதைச் செய்தாலும் பிறர் இரங்கத்தக்கவற்றைச் செய்யற்க என்கின்றது. இதனால்அமைச்சன் வாலாயமாகச்செய்யவேண்டிய வினைகளும்,

அவ்வப்போது ஆய்ந்து துணிந்து செய்ய வேண்டும் வினைகளும், என வினை இருவகை என்பதும், செய்யவேண்டியதைச் செய்தாலும் பிறர் மனம் நோவன செய்யற்க என்பதும் போதரும்.

பரிமேலழகர் 'வினைசெய்த தானே இரங்கத்தக்கன வற்றைச் செய்யற்க; மீண்டும் செய்தால் கழிவிரக்கப்படற்க' என் பர்.கழிவிரக்கப்பட்டால் நேரும் தீமைகளையும் நன்கு விளக்குவர்.

தேவநேயர் 'எத்தகைய தவற்றைச் செய்துவிட்டோம் என்று பின்பு இரங்கத்தகும் செயல்களைச் செய்யாதொழிக; தவறிச் செய்ய நேர்ந்து விட்டால், அதன்பின்பாவது அத்தகைய செயல்களைச் செய்யாமை நன்று' என்பர். இவர் கருத்து முதன் முறை மறுமுறை செய்துவிட்டாலும் மீண்டும் செய்யாமை நன்று என்பது போலும்.ஒருமுறை செய்தவன் மறுமுறையாவது திருந்த வேண்டும் என்பர். பரிமேலழகர் கூறும் மறுப்புரையை 'எற்று என்று இரங்குவ செய்யற்க' என்பதே கழிவிரக்கத்தை எதிர்நோக் கலால் மீண்டும் இரங்காமை நன்று என்பது மூலத்தொடு முரண்' என மறுப்பர். மணக்குடவர் உரையைப் போற்றுவர்.

வரத. 'பின்னால் வருந்தும் வினையைச் செய்யாதே; செய்யின் அதனை எண்ணி வருந்தாதே; மீண்டும் அத்தகைய வினைகளைச் செய்யாதே' என்பர். இவர் கருத்து செய்வதற்கு முன் சிந்தித்துச் செய்; செய்தபின் தீமைகண்டு வருந்தாதே; மீண்டும் அத்தகைய வினைகளைச் செய்யாதே என்பது. இது பரிமேலழகரை ஓரளவு ஒத்துச்செல்கிறது எனலாம்.

இராம. 'ஐயோ! என்ன செய்துவிட்டாய் என்று பிறர் இரக்குஞ் செயல்களைச் செய்யற்க. தவறி ஒருமுறை செய்து விட்டாலும் மீட்டும் மீட்டுஞ் செய்தலாகாது' என்பர்.

சாமி. சிதம்.'செய்பவன் பின்பு தானே இரங்கும் செயல் களைச் செய்யற்க. மீண்டும் செய்யற்க' என்பர். குழந்தையின் கருத்தும் இது,

சபாபதி பரிமேலழகரை ஒத்துரைப்பர். வ.சுப.மா. செய்யாதே; பின்பும் செய்யாதே' என்பர். மு.கோ.எற்று என்று —என்று என்று; அன்ன செய்யாமை — அவனைப்பற்றிப் பிறர் இரங்காமை' என்றும் உழைப்பர்.

இவ்வுரைகளைத்தொகுத்தால் தீமை பயக்கச் செய்தவனாகிய தான் இரங்காதவண்ணம் எனவும், தீமையை அனுபவிக்கும் பிறர் இரங்காத வண்ணம் எனவும், செய்தவனைக் கண்டு பிறர் இரங் காத வண்ணம் எனவும் இரக்கம் மூவர் பால தாவதைக் காண லாம்.யாவர் பாலதாயினும் வினையின் பயன்வினைமேற்கொண்ட அமைச்சனையே சார்வதால் மீண்டும் அத்தகைய வினைகளைச் செய்யற்க என்ற ஆசைமொழி அமைச்சன் மேலதாதலே இயைபு.

தான் வருந்துவனாயின் தன்மாட்டுப்பிறந்த அவலம் .பிறர் வருந்துவதைக் கண்டு வருந்துவனாயின் அது பிறர் மாட்டுப் பிறந்த அவலம்பற்றித் தோன்றி யமைச்சன் மாட்டு எள்ளல் பற்றிய நகையாகிறது. எங்ஙனமாயினும் 'இரங்குவ செய்யற்க' 'மீளவும் செய்யற்க' என்பதே முடிபாகிறது.

பரிமேலழகரின் மனக்கண்ணில் ''கற்றார்முன் தோன்றாகழிவிரக்கம்'' (நான்மணி.8) என்பதுடன், அவர், ஒருக்கால் மயங்கிச் செய்வானாயின் பின்கழிவிரக்கப்படாலாகாது என்றனர். அதற்குப் பொருணூல் துணிபுகொண்டு விளக்கமுந் தந்தனர், கழிவிரக்கப்படுவானாயின் அரசகருமங்கள் தடைபடும் ஆதலால் செய்யாமை நன்று என்பதைக் 'கழிவிரக்கத்தைச் செய் யாமை நன்று என்றனர், ஏனையோர் கழிவிரக்கப்படும் வினை களை என்றனர். அன்ன என்பதை இரக்கத்தொடு கூட்டினர் பரிமேலழகர். இரங்கத்தகும் செயல்களுக்கு அடையாக்கினர் ஏனையோர்.ஆனால் பரிமேலழகர் உளத்தில் ,இரக்கம்' என்பது பண்பாய்ப் பால்பகாப் பெயராய்இருக்க—அதனை 'அன்ன' என்ற குறிப்புப் பெயரெச்சத்திற்கு இணைப்பது எப்படி என்ற ஐயம் எழுந்திருக்கிறது. அதனால் வினைகளது பன்மையான் இரக் கமும் பலவாயின என அமைதியுங் கூறினர். இலக்கண அமைதி எங்ஙனமாயினும் பரிமேலழகர் உரைப்போக்கு, குறள் கூறிய முன்விதியை மாற்றி 'செய்வானேல் இரங்கற்க' என்கிறது. இதனையே மேல்வரிச் சட்டமாகக் கொண்டு செய்து இரங் காமையும் செய்தல் கூடும் என்பதையும் எண்ணத் தோன்றுகிறது.

ஆதலால் இரங்குவ செய்யற்க; செய்வானேல் அன்னசெய் யாமையே நன்று ஆதலால் துணிவதற்குமுன் எண்ணிச்செய்க என்பது வினைத்தூய்மைக்கு ஏற்புடையதாகுமா? என்பதையும் எண்ணித் துணிக.

மற்று—பின் என உரை காண்பர் பரிமேலழகர். தொன் மரபு வினையை மாற்றுவதும் அசைநிலையும், பிறிதும் ஆகிய பொருள்களே 'பின், ஆனால் என்பனவும் வினையையடுத்து வருதலின் வினைமாற்றுப் பொருளனவேயாம். இவை ஆன்றோ ராட்சியைத் தொகுத்து நோக்கி முடிபு காணுதற்குரியது.

அங்ஙனமே 'அன்ன' என்பதற்கு 'அவ்விரங்கல்களை, எனக்கூட்டி உரைகண்டு, 'அன்ன எனச் சுட்டியொழிந்தார்' என்பர். இதற்கு விளக்கந்தந்த பின்னோர் சிலரில் பரிமேலழகர் 'அன்ன என்பது சுட்டளவாய் நின்றது' எனவும், ஏனையோர் 'அன்ன-அத்தகைய' என உவமையிடைச் சொல்லாக நின்றது எனவும் கொண்டனர். உவமாகக்கொள்ளின் அன்-பகுதி என்று காட்டி ஏனைய உறுப்புக்களை விதந்து கூறாதுவிடுத்தனர். உவம இயற் சூத்திரத்து அன்னவென்கிளவி வினையுவமத்திற்குரியதா தல் சிறப்பு எனவும் பயன், உருமெய் முதலிய உவமங்கட்கும் வரும் எனவும் உரைக்கப்பெற்றுள்ளது. அன்ன இன்ன என்பன யாண்டும் உவமஉருபாங்கால், சுட்டடியாகப் பிறந்து னகரச் சாரியை பெற்று னகரம் இரட்டித்து 'அ' என்னும் விகுதியுடன் புணர்ந்த அன்ன என்றாகிக் குறிப்பு பெயரெச்சமாகியோ, அஃறிணைப் பலவின்பாற் பெயராகியோ வருதல் இயல்பு என் பதையும் 'பல் குறிப்பின' என்பதற்கு இளம்பூரணர் தரும் விளக்கமாகிய 'இருவகை எச்ச நீர்மையாயும், முற்று நீர்மை யாயும் வருவன எனக் கொள்க' என்பதால் அறியப்பெறும் (தொல் பொருள். இளம். 282 உரை).

'இரங்குவ' என்பது இரங்கும் வினைகளையே உணர்த்து வதால் 'அன்ன' என்ற உவமச்சொல்லும் அத்தகைய செயல் களைச் சுட்டுமேயன்றி, செயற்பயனாகிய இரங்கலை மட்டும் உணர்த்தாது. இது கருதியே ஏனைய உரையாசிரியர்கள் 'இரங் குவ செய்யற்க; மற்றுச் செய்வானேல் அன்ன செய்யாமை

நன்று' என்றனர். இவ்வுரையில் மீட்டும் செய்தலாகாது என்ற தூய்மையும் இயைபும் இருத்தல் காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி :

எற்றென்று இரங்குவ செய்யற்க :

செய்து பின் இரங்கா வினையொடு —அகம்., 268: 13

செய்திரங்கா வினை — புறம்., 10: 11

கற்றார்முன் தோன்றா கழிவிரக்கம் — நான்மணி., 8

செய்தீர் செய்தற் கருநெடுந் தீயன
நொய்தி லன்னவை நீக்கவு நோக்குதிர்
உய்திர் போலு முதவிகொன் றீரெனா — கம்ப., 4401

தேவியை விடுதி யாயிற் றிறலது தீரு மன்றே
ஆவியை விடுவ தல்லா லல்லதொன் றாவ துண்டோ
தாவரும் பெருமை யம்மா நீயிணித் தாழ்த்த தென்னே
காவல விடுதி யின்றிக் கையறு கவலை நொய்தின்
— கம்ப, 7436

பின்னைநின் றெண்ணுதல் பிழை ............... — கம்ப., 7465

முன் கோபம் பின் இரக்கம். — பழ.

ஓ) மேற்கோள் பகுதி :

தெய்வச். : எற்றம் என்ற உரிச்சொல் துணிவுப் பொருளில் வந்ததற்கு மேற்கோள். — தொல் சொல்., 332

*66.6. ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க*
*சான்றோர் பழிக்கும் வினை. (656)*

உரைப்பகுதி :

அ) மணக். : தன்னைப் பயந்தாள் பசி கண்டானா யினும், சான்றோரால் பழிக்கப்படும் வினையைச் செய்யாதொழிக எ-று.

இது நல்லோர் பழிக்கும் வினையைத் தவிர்க என்றது.

ஆ) பரிதி.: மாதாவின் பசியைப் பார்த்தாலும் பெரியோர் பழிக்கும் காரியம் செய்வானல்லர் எ-று.

இ) பரிப்.: தன்னைப் பயந்தாள் பசி கண்டான் ஆயினும், சான்றோரால் பழிக்கப்படும் வினையைச் செய்யாது ஒழிக எ-று.

இது நல்லோர் பழிக்கும் வினையைத் தவிர்க என்றது.

ஈ) காளி.: ஈன்ற தாய் முதல் தெய்வம் என்று மறைமொழி தலானும் தன்னை ஈன்றாளை முன்னம் வணங்கி வழிபடுதல் யாவர்க்கும் கடன் ஆகலானும், மற்று இவள் பசி கண்டு இரங்கா நெஞ்சினன் ஆதல் மிகவும் தீவினை: மற்று அது யாம் கண்டு பொறுத்திருப்பதும் அன்று: அதனால் முழுதும் உணர்ந்த சான்றோர் பழிக்கும் பழிதரு வினைகளைச் செய்தலே மிகவும் தீது எ-று.

உ) பரிமேல்.: தன்னைப் பயந்தாளது பசியை வறுமையால் கண்டு இரங்கும் தன்மையனாயினான் எனினும் அது சுட்டி[1] அறிவுடையார் பழிக்கும் வினைகளை ஒருவன் செய்யாதொழிக:

இறந்த மூப்பினராய[2] இருமுதுகுரவரும்[3] கற்புடை மனைவியும் குழவியும் பசியான் வருந்தும் எல்லைக்கண் தீயனபலவும் செய்தாயினும் புறந்தருக[4] என்னும் அறநூற் பொதுவிதி,[5] பொருள்நூல்[6]வழி ஒழுகுதலும் அரசர் தொழிற்குரியராதலும் நன்கு மதிக்கற்பாடும் உடைய அமைச்சர்க்கு எய்தாமைபற்றி இவ்வாறு கூறினார். இவை ஐந்து பாட்டானும் பாவமும் பழியும் பயக்கும் வினை செய்யற்க என்பது கூறப்பட்டது.

---

1. அதுசுட்டி - தன் தாயின் பசியைக் குறித்து
2. இறந்த மூப்பு - மிகுந்த கிழத்தனம்
3. இருமுதுகுரவரும் - தாயும் தந்தையும்
4. புறந்தருக - பாதுகாத்தல்
5. அறநூற்பொதுவிதி - தருமசாத்திரங்களின் பொதுவான விதி
6. பொருள்நூல் - அர்த்தசாஸ்திரம்

ஊ) கவிராசர் : தன்னைப்பெற்ற தாயானவள் பசித்திருக்கக் கண்டாலும், அதற்காகப் பெரியோர்கள் பழிக்கத்தக்க காரியங் களைச் செய்யவேண்டாம் (எ-று).

எ) பழைய 2 : பெற்றதாய் பசித்திருப்பப்பார்த்திருப்பானா யினும் அப்பசிதீரும் பொருட்டு அறிவுடையார் பழிக்கும் வினை களைச் செய்யா தொழிக.

மல்லர் : என்பது தன்னைப் பெத்த தாய் கஞ்சிக்குச் சாகிற தைக்கண்டாலும் அவளுக்கு உதவியாயிருக்கத்தக்கதாகப் பெரிய அறிவுடையார் பழிக்கத்தக்க காரியத்தையுஞ் செய்யவேண்டாம் என்றவாறு

எத்தினை பெரிய அவசரத்திலேயு மந்திரியானவன் தன் தொழிலுக்கேலாத காரியத்தைச் செய்தால் அரசன் அவனைத் தன் அவசரத்துத் தக்கது நடக்கிறவன் என்றும் ஒருநிலையிலே நில்லா தவன் என்றும் எண்ணி நம்பப்போறதில்லை என்பது கருத்து.

ஈன்றாள் - பெற்றவள், ஆயினும்-ஆனாலும், செய்யற்க —வேண்டாம், சான்றோர் - அறிவுடையார், பழித்தல் — குறை சொல்லுதல், வினைசெயல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

"ஈன்றாள் பசி காண்பான் ஆயினும்"

உரையாசிரியர்களில் மணக்குடவர், குழந்தை முதலிய சிலர் 'கண்டானாயினும்' எனவுரை காண்பர். மு. ரா. அரு. 'வறுமையால் அப்பசியை நீக்கமாட்டாமல் பார்த்து வருந்திக் கொண்டிருப்பானாயினும்' என்பர். வரத. 'தாய் பசித்திருப் பதைப் பார்த்த போதிலும்' என்பர்.

"சான்றோர் பழிக்கும் வினை"

வரத. 'சான்றோர் - ஆன்மநலனுக்கு உழைக்கும் பெரி யோர்' என்பர். மற்றும் தாய்க்கும் பெரியோர்க்கும் துன்பந்தருஞ் செயல்களைச் செய்தல் கூடாது எனக் கருத்துரைப்பர். அதிகாரம் வினைத்தூய்மையாதலின் 'பசிகாண்பானாயினும்' என்பது செய்யத் தகாத செயலைச் செய்தலாகாது என்பதை வலியுறுத்த வந்ததே தவிர காண்டலை விலக்கவந்ததன்மையறிக.

அதிகாரம் அமைச்சன் ஆற்றும் வினைத்தூய்மையை விளக்குவது. அமைச்சுரிமை பூண்டார்க்கு ஒரு போதும் ஈன்றாள் பசி காணும் வறுமை வராது. அங்ஙனம் காண நேரினும் பழிக்கும் வினையைச் செய்யற்க என விதிக்கவே வந்தமை காண்க.

'தாயின் பெருமையை விளக்கி அவளைக்காத்தல் எவ்வகையினும் சிறந்ததாயினும் அதற்காகச் சான்றோர் பழிக்கும் வினையைச் செய்யற்க' என்னும் காளிங்கர் உரை நயமுடையது.

இக்குறள் அமைச்சரின் வினைத்தூய்மை கூறுவது போல அனைவர்க்கும் கூறியதாகக் கொள்வர் இராம., குழந்தை முதலியோர்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

ஈன்றாள் பசிகாண்பான் :

தாய்பசி யிழந்துயிர் தளரத் தான்றனிப்
பாய்பெரும் பாழ்வயி றளிக்கும் பாவி — கம்ப., 2291

'பசியால் துன்புறுகின்ற அன்னை, பிதா, குரு, வேலைக்காரன் என்னும் இவர்களைக் காப்பாற்றுகிறவனாயும் தேவர் அதிதியென்னும் இவர்களைப்பூசிக்கிறவனாயும் இருப்பவன் யாரிடத்தும் தானம் வாங்கலாம்; அத்தானத்தால் தான் ஜீவித்தல் கூடாது.
— மனு. அத்., 4

முற்றும் :

இருமுது குரவர் கற்புடை மகளிர் இளமகவு இவர்பசித் திடினும் பெருமிதப் படாத வினைசெயார் உலகு பேணுநர்க் கேமஞ்செய் அமைச்சர். — விநா. அரசி , 107

கௌவை அகற்று — ஆத்தி. 43

66.7. பழிமலைந் தெய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை. (657)

உரைப்பகுதி :

அ) மணக்.: பழியைச் சுமந்து எய்திய ஆக்கத்தினும், சான்றோர் மாட்டு உளதாகிய மிக்க நல்குரவே தலைமையுடைத்து எ—று.

மேற்கூறியவாறு செய்யின் நல்குரவு உளதாகும் என்றார்க்கு இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: பொல்லாங்கான காரியத்தைச் செய்து அதனால் வந்த இன்பத்தை அநுபவிப்பதில் நன்மைசெய்து மிடியை அனு பவிக்கை நன்று எ—று.

இ) பரிப்.: பழிப்பினாலே மிகுதியாக எய்துகிற ஆக்கத்தின் சான்றோர்க்குப் பெருமிடியே தலை எ—று.

ஈ) காளி.: இங்ஙனம் சான்றோர் பழித்த வினைகளைத் தானும் தகாது என்று உடன்பட்டு, மற்று அவற்றினைச் செய் யத்தவிராது மற்று அவர் உரைத்த நீதிக்கு எதிர்மலைந்து இயற்றி. மற்று அதனால் தான் எய்துவதாகிய செல்வத்தினும், தனக்கு மிக்க வறுமை தானே பெரிதும் தலைப்பாடு உடைத்து எ — று.

மலைதல் என்பது மாறுபடுதல்.

உ) பரிமேல்.: சாலாதார்[1] தீயவினைகளைச் செய்து அதனால் பழியைத் தம்மேற்கொண்டு பெற்றசெல்வத்தின், அதுமேற்கொள் ளாத சான்றோர் அனுபவிக்கும் மிக்க நல்குரவே தலை என்றார்.

நிலையாத செல்வத்தின் பொருட்டு நிலையின பழியை மேற் கொடல் சால்போடு இயையாமையின்,[2]சான்றோர் கழிநல்குரவே 'தலை' என்றார்,

ஊ) கவிராசர் : அறிவிலார் தீவினையைச் செய்து அதனால் பழியைத் தம்மேற்கொண்டு பெற்ற செல்வத்தின், அது மேற் கொள்ளாத அறிஞர் அனுபவிக்கும் மிக்க தரித்திரமே உயர்ந்தது. எ—று.

ஏ) பழைய 2 : நிலை நில்லாச் செல்வத்தின் பொருட்டு நிலை நிற்கும் பழிசெய்து வந்த செல்வத்திலும் நல்லோர் பழியும் பாவமும் செய்யாது இருந்தனுபவிக்கும் மிகுந்த தரித்திரமே தலைமையான செல்வம்.

1. சாலாதார் - குணங்களால் நிரம்பாதவர்

2. சால்போடு இயையாமையின் - பலகுணங்களாலும் பொருந்தாமையின்

ஐ) தொகுப்பும் குறிப்பும் ;

''ஆக்கம்''

'ஆக்கம்' 'செல்வம்', 'இன்பம்' எனக் கண்டனர் பழைய உரையாசிரியர்கள் அனைவரும். 'ஆக்கம்' எனப் பொது மையிற் கூறுவதிலும், 'நல்குரவு' என்றதற்கு எதிர்மறையான 'செல்வம்' எனப் பொருள் கொண்டதும், பின் அதனான் எய்தப் பெறும் 'இன்பம்' என்றதும் ஏற்புடையபொருள்கள்.

காளி. 'சான்றோர் பழி மலைந்து எய்திய' என்பதற்குச் சென்ற குறளின் 'சான்றோர் பழிக்கும் வினைசெய்யற்க' என்ற பகுதியை அனுவதித்துச் 'சான்றோர் பழித்தவினைகளைத்தானும் செய்து' என்று எழுதினர். இதில், 'தான்' என்பதால் அமைச்சனைக் கருதுகிறார் எனல் வெளிப்படை. இவர்கருத்து 'தனிமனிதனோ அரசோ — அரசுக்காக அமைச்சனோ சான்றோர் பழிக்கும் வினையைச் செய்து ஈட்டிய செல்வத்தினும் நல்குரவே தலை' என்பது அதுவே, ''அவமதிப்பும் ஆன்ற மதிப்பும் இரண்டும் மிகை மக்களான் மதிக்கற்பால'' ஆகலின் தீயன கண்டு பழித் தற்கு உரியார் சான்றோரேயாதலின் இங்ஙனம் கூறினர் ஆதல் காண்க. பரிமேலழகரோ 'சால்பென்னும் திண்மையுண்டாகப் பெறின், இன்மை ஒருவற்கு இளிவன்று' என்ற ஆசிரிய வசனத்தை எண்ணி இருந்த நிலையே உரை கண்டனர். சிறந்தது கொள்க.

வரத. 'சான்றோர்க்கு நல்குரவே தலை' என்று கூட்டி நான் கனுருபு விரித்து எழுதும் உரை 'பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்க்கு நல்குரவு தலையாயது' என்ற கருத்தினதாகிச் 'சான்றோரும் அரசியற்போர்வையில் பழிமலைந்து ஆக்கம் எய்தல் கூடும். அதனினும் வறுமை சிறந்தது' என்ற நயந் தருவதாகும்.

குழந்தை, பரிமேலழகரை ஒட்டி உரைப்பாராயினும் 'பழிமலைந்தெய்திய' என்பதற்குச் 'சாலார் எய்திய' எனப் பரிமேலழகர் கூறவும் அதனை விடுத்து வாளா எழுதினர். சாமி. சிதம்., பரிமேலழகரைத் தழுவியே உரைப்பர்.

ஈண்டு வினைத்தூய்மை, அங்கமாகிய அமைச்சன் மேற்கொள்ளும் வினைக்கண் தூய்மைவேண்டும் என்பதை வலி

யுறுத்துவது. சான்றோர் என்பது கல்விகேள்விகளான் நிறைந் தடங்கிய அமைச்சரையும் குறிக்கும். ஆதலால் 'சான்றோர்' என் பதைப் பொதுச்சொல்லாக்காது அமைச்சரையே குறிப்பதாகக் கொண்டு,அமைச்சர் பழிமலைந்தெய்திய ஆக்கத்தினும்,) நல்குரவு தலை எனக்கோடலே ஏற்புடையதாகும்.

ஓ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

சிறியவர் எய்திய செல்வத்தின் மாணப்
பெரியவர் நல்குரவு நன்றே — தெரியின்
மதுமயங்கு பூங்கோதை மானிழாய் மோரின்
முதுநெய்தீ தாதலோ இல். — பழ. நா., 90

ஓ) மேற்கோள்பகுதி :

இளம்.: புறப்பொருட்கண் அறக்கழிவுடையன பகைவர் தேஎத்து நிரைகோடலும் அழுத்தலும் போலப் பொருட்பயன் காரணத்தான் நட்டோர் தேஎத்துச் செயல். இவையும் பொருள் பயப்பினும் வழக்கென வழங்குதலாகா என்றவாறு இதுவும் ஓர் முகத்தான் நீதி கூறியவாறு. 'பழிமலைந்...... தலை' எனவரும்

— தொல், பொருள். 214

66.8. கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம்
முடிந்தாலும் பீழை தரும். (658)

உரைப்பகுதி :

அ) மணக்.: 'செய்வார்க்கு'—பாடம். நல்லோரால் கடியப் பட்டவற்றைக்[1] கடிந்து[2] நீக்காது செய்யுமவர்க்கு, அவ்வினை கள் தாம் கருதிய வாற்றான் முடிந்த பின்பும் பீழையைத்[3] தரும் எ—று.

இது நன்மையல்லாத வினையைச் செயின், அதுதீமை தரும் என்றது. அவை பின்பு காட்டப்படும்.

1. கடியப்பட்டவற்றை - விலக்கப்பட்டவற்றை
2. கடிந்து - நீக்கி 3. பீழை - துன்பம

ஆ) பரிதி.: காரியமல்லாத காரியத்தைக் கடிந்து நல்ல காரியம் செய்வான், காரியமல்லாத காரியம் முடிந்தாலும் பின்பு பீழை வரும் எ—று.

இ) பரிப். : 'கடிந்தொரார் செய்வார்க்கு' பாடம்.

நல்லோரால் கடியப்பட்டவற்றைக் கடிந்து நீக்காது செய்யும் அவர்க்கு, அவ்வினை தான் கருதினவாற்றான் முடிந்த பின்பு பீடையைத் தரும் எ—று.

உம்மையால் முடிவதன் முன்னும் பீடை தரும் என்றது இது நன்மை அல்லாத வினை செய்யின் அதுவும் தீமைதரும் என்றவாறு. அவை பின்பே காட்டப்படும் என்றார்.

ஈ) காளி, : இவை இவை செய்யத்தகா என்று சான்றோர் கடிந்தன வாகிய வினைத் தீமைகளைத் தாமும் கடிந்து நீக்காது, செய்வார் யாவர்? மற்று அவர்க்கு அவை தாம் கருதியாங்கு முடிந்தாலும்பெரிதும் இடரைத்[4] தருவதன்றிப் பெருமை பெறுதல் அரிது எ—று.

உ) பரிமேல். : நூலோர்[5] கடிந்த வினைகளைத்[6] தாமும் கடிந்து ஒழியாது,[7] பொருள் நோக்கிச் செய்த அமைச்சர்க்கு, அவை தூயவன்மையின் முடியா, ஒருவாற்றான் முடியினும் பின் துன்பத்தையே கொடுக்கும்.

முடிதல்—கருதிய பொருள் தருதல் பீழைதருதலாகிய பொருளின் தொழில் அதற்குக் காரணமாகிய வினைகள் மேல் ஏற்றப்பட்டது.[8]

ஊ) கவிராசர் : பெரியோர்கள் ஆகாதவை என்று சொன்ன காரியங்களைத் தாமும் ஆகா என்று விடாமல், பொருளுக்காக ஆகாத காரியங்களைச் செய்து முடித்தாலும், அவை பிறகு துக்கத்தைக் கொடுக்கும் எ—று.

4, இடரை — துன்பத்தை 5, நூலோர் அறநூல் அறிந்தோர்

6, வினைகளை - செயல்களை 7. ஒழியாது - நீங்காது

8. காரியத்தின் தொழில் காரணத்தின்மேல் ஏற்றிக் கூறிய வுபசார வழக்கு

ஏ) பழைய 2 : நீதி நூலோர் ஆகாது என்று தள்ளின வினைகளைத் தாமுந்தள்ளாது பொருளாசையாற் செய்த அமைச்சனுக்கு அது வினைத்தூய்மை யல்லாமையால் முடியாதழிந்து போம்; முடிந்தாலும் பீடையாம் துன்பத்தைக் கொடுக்கும்.

ஒ) ஒப்புமைப்பகுதி : .........

ஓ) மேற்கோள்பகுதி :

சேனா. ; கடி என்னும் உரிச்சொல் வரைவுப்பொருளில் வந்ததற்கு மேற்கோள். —தொல், சொல்., 378

தெய்வச். : ஷ

நச்சி. : ஷ —தொல். சொல்., 383

*66.9. அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்*
*பிற்பயக்கும் நற்பா லவை. (659)*

அ) மணக். : பிறர் அழக்கொண்ட பொருள்களெல்லாம் தாமும் அழப்போம் ; அவ்வாறின்றி அறப்பகுதியால் கொண்ட பொருள்கள் இழந்தாராயினும், பின்பு பயன்படும் எ-று.

இது தேடின பொருள் போம் என்றது.

ஆ) பரிதி. : பிறர் அழக்கொண்ட பொருள் தன்னையும் அழப்பண்ணிப்போம் ; இழந்தாலும் பின்னே வந்து கைகூடும் நீதியால் தேடும் பொருள் ; என்பதனால் நல்வினையால் பொருள் தேடுவான் எ-று.

இ) பரிப் : பிறர் கொண்ட பொருள்கள் எல்லாம் தாமும் அழப்போம் : அவ்வாறு அன்றி நற்பகுதியால் கொண்ட பொருளை இழந்தாராயினும் பின்பு பயன்படும் எ-று.

இது தேடின பொருள் கெடும் என்றது.

ஈ) காளி. : தாம் பிறரைச் செறுத்தும்[1] ஒறுத்தும்[2] அவர்

1, செறுத்தும் - வறுத்தியும்
2, ஒறுத்தும் - தண்டித்தும்

நெஞ்சு புழுங்கி அழுமாறு[3] வலியினால் வல்லிக் கொண்ட[4] பொருள் அனைத்தும் தாமும் அவ்வாறு அழும்படி, போய்விடும்: இனி இவ்வாறன்றி முன்னம் தமக்கு உளதாகிய பொருளினை ஒருவாற்றான் இழந்தாராயினும், பின்னும் உளதாய்ச் செல்லும் நற்கூறாகிய வினையினான் இயற்றும் பொருளானவை எ-று.

உ) பரிமேல.: ஒருவன் தீய வினைகளைச் செய்து பிறர் இரங்கக்கொண்ட பொருளெல்லாம் இம்மையிலே அவன்தான் இரங்கப் போகாநிற்கும், மற்றைத் தூயவினையான் வந்த பொருள்கள் முன் இழந்தானாயினும் அவனுக்குப் பின்னர் வந்து பயன் கொடுக்கும்.

'பின்' எனவே மறுமையும் அடங்கிற்று[5]. பொருள்களான் அவற்றிற்குக் காரணமாய வினைகளது இயல்பு கூறியவாறு.

காரி.: நற்பாலவை பிற்பயக்கும் என்றதற்கு, நற்பாலவை தானே பயக்கும் என்று, தன்வினையாய் உரையாமல் பின்வந்து கொடுக்கும் என்று, பயனைச் செயப்படு பொருளாக்கினார். இவ்வுரை யாசிரியர்க்குப் பயக்கும் என்பது, செயப்படு பொருளடைந்த சொல். "இருணீங்கி யின்பம பயக்கும்[6]" என்பதனுள் காட்சி என்பதனை எழுவாயாக் கினதும் காண்க. இதனை வடநூலார் சகன்மகம் என்பர்.

ஊ) கவிராசர்: ஒருவன் பொல்லாத காரியங்களைச் செய்து பிறர் விசாரப்படத்[7] தேடின பொருள்களெல்லாம் இம்மையிலே அவன் தானே விசாரப்படத்தக்கதாய்ப் போய்விடும்: நல்ல காரியங்களைச் செய்து தேடின பொருள்கள் முன்னே இழந்து போனாலும், பின் வந்து பலன்களைக் கொடுக்கும் எ-று.

---

3. புழுங்கி அழுமாறு - வருந்தி அழுமாறு
4. வல்லிக் கொண்ட - அபகரித்துக் கொண்ட
5. பின் எனப் பொதுப்படக் கூறினமையால் நல்வழியால் ஈட்டிய பொருள் அதன் பயனாகிய புண்ணிய வடிவாக வந்து மறுமைக்கும் பயன்படும் என்பது பெற்றாம்
6. குறள்:,352
7. விசாரப்பட - துன்பப்பட

ஏ) பழைய 2: பிறர் அழக்கொண்ட பொருளெல்லாம் தான் அழப்போம். போன பொருளும் திரும்பி வரும், பிறர் களிப்ப நன்மை செய்து தேடிய பொருள்.

மல்லர்: என்பது பிறத்தியார் கஸ்திப்பட ஒருவன் சம்பாதித்த பொருள் தான் கஸ்திப்பட தன்னைவிட்டுப்போம். புண்ணியத் துக்காக இப்போதைக்குப் பொருள் எழந்தாலும் அதுபின் வந்து பிலன் கொடுக்கும் என்றவாறு.

மற்றவரைக் கஸ்திப்படுத்திச் சம்பாதித்ததெல்லாம் அழிந்து போறது நிச்சயமாகையில் அது அழிகிற சமயத்திலே அதைச் சம்பாதித்தவனைக் கஸ்திப்படுத்தும். நீதியோடே தொழிலைச் செய்கிறதுக்காக வேண்டிய பொருள் சேதம் வந்தாலும் அந்தச் சேதம் இனிமேல் இந்த லோகத்திலேயும் ஆதாயங்குடுக்கும். மறுலோகத்திலேயும் மோஷத்தைக்குடுக்கும் என்கிற ஞாயத்தைப் பற்றி மந்திரியானவன் தன் தொழிலிலேநீதியைத்தப்பி நடக்கிற தாகாது என்பது கருத்து.

இழப்பினும்-இழந்தாலும், பிற்-பின்னைக்கு, பயத்தல்-உண்டாக்கல், நற்-நல்ல, பாலவை-குணமுடைத்தவர்கள்.

*66. 10. சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்*
*கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று. (660)*

உரைப்பகுதி:

அ) மணக்.: 'ஏமாத்தல்' பாடம்.

வஞ்சத்தாலே பொருள்தேடி மகிழ்ந்திருத்தல், பசுமட்கலத் திலே நீரை முகந்துவைத்த தன்மைத்து எ—று.

இது தானும் பொருளுங்கூடிக் கெடும் என்றது.

ஆ) பரிதி.: அநீதியினால் தேடும்பொருள் தன்னையும் கெடுத்துத் தானும் போம்; எப்படி என்றால் பச்சைமண் பாத் திரத்தில் வார்த்த தண்ணீரும் பாத்திரமும் கெட்டாற் போலே எ—று.

இ) பரிப்.: வஞ்சத்தாலே பொருள் தேடி மகிழ்ந்திருத்தல் பசுமண் கலத்திலே நீரை முகந்து வைத்த தன்மைத்து எ—று.

இது தானும் பொருளும் கூடிக் கெடும் என்றது.

ஈ) காளி. : 'ஏமாத்தல்' பாடம்.

இது நமக்கு உறுதி அன்று என்று கருதாது பிறரொடு சலம்[1]பற்றிக் கொண்டு மற்று அதனால் பொருளினைச் செய்து யாம் உடையம் என்று இருமாந்திருத்தல் எத்தன்மைத்தோ எனின், மண்ணால் வனைந்துளவாகிய பசுங்கலத்தினகத்து நீரினைப் பெய்து இருத்திய அத்தன்மைத்து எ—று.

உ) பரிமேல். : அமைச்சன் தீயவினைகளால் பொருள் படைத்து அதனால் அரசனுக்கு ஏமஞ்செய்தல், பசியமட்கலத்துள்ளே நீரைப்பெய்து அதற்கு ஏமஞ்செய்த[2]தனோடு ஒக்கும்.

முன் ஆக்கம் பயப்பனபோல் தோன்றிப் பின் அழிவே பயத்தலால், அவை 'சலம்' எனப்பட்டன. ஏமமார்த்தல் என்பது ஏமார்த்தல்' என்றாயிற்று; ஏமத்தை அடையப்பண்ணுதல் என்றவாறு. இருத்துதல் — நெடுங்காலம் இருப்பச்செய்தல் அரசனும் பொருளும் சேரப்போம் என்பதாம். பிறரெல்லாம் ஏமாத்தல் என்றும் பாடம் ஓதி, அதற்கு மகிழ்தல் என்றும், இரீஇயற்று என்பதற்கு வைத்தாற்போலும் என்றும் உரைத்தார்; [3]அவர் அவை தன்வினையும் பிறிதின் வினையுமாய் உவமையிலக்கணத்தோடு மாறுகோடல் நோக்கிற்றிலர். இவை நான்கு பாட்டானும் அதற்குக் காரணம் கூறப்பட்டது

காரி. :இரிஇ என்பதனை இருத்தி எனப் பிறிதின் வினையாக்குப் பட்சாந்திரத்தைத் தூஷித்தார். ''நன்கிரீஇ யாண்டும் பிறிது யாது நோக்கான்''[4] என முன்னியார் தன் வினையாக்கினராதலால், இவ்வுரையாசிரியர் கருத்து எம்மனோர்க்கு அறிதல் அரிது என்க.

ஊ) கவிராசர் : ஒருவன் பொல்லாத காரியங்களைச் செய்து பொருளைத் தேடிவைத்துக் கொள்ளுகிறது எப்படிப்போல

1. சலம் - வஞ்சனை. அஃதாவது மனத்தினின்றும் சொல்லிலும் செயலிலும் வேறுபட நடத்தல். 2. ஏமஞ்செய்து- பாதுகாத்து
3, இவ்வாறு பாடங் கொண்டவர் மணக்குடவர், காளிங்கர்
4, ஆசாரக்,,20

என்றால், பச்சைப்பானையிலே தண்ணீரை வார்த்து அதற்குக் கனம்[5]பண்ணுகிறாப்போலேயாம் எ—று.

ஏ) பழைய 2.: 'ஏமாத்தல்' பாடம்

கொடுமையாற் பொருள் தேடிச் சேமஞ்[6] செய்த மந்திரியும் அரசனும் அப்பொருளும் கெடுதல் பசுமண்ணாற் குடஞ்செய்து நீர்நிறையப்பெய்து வைத்தால் அது ஊறிக் குடத்தையுடைத்து நீர் எப்படியோடிப்போமோ அப்படித் தேடினவருங் கெட்டுப் பொருளும் கெடும்.

மல்லர்: மந்திரியானவன் தீவினைகளால் பொருள் சம்பாதித்து ராசாவை திரவியங்களால் நிறையப் பண்ணுகிறது பச்சைமண் பாத்திரத்தில் தண்ணீர் நிறைய ஊத்தியிருந்தால்போலும்" என்றவாறு.

பச்சை மண் குடத்திலே நீரும் போம் குடமும் அழிந்து போம். அப்படிப்போல மந்திரியானவன் அநியாயமாய்ச் சம்பாதித்த திரவியங்களைக் கொண்டு தன்னரசனுடைய அரசாங்கத்துக்குக் கேடுவரும் என்பது கருத்து.

சலம்-பாவம், ஏம்-ஏமம்-பொருள், ஆர்த்தல்-நிறைத்தல் பசுமண்-பச்சைமண், கலத்துண்-கலத்துள், பெய்தல்-போடல். இரீ-இருந்தால், அற்று-உவமைச்சொல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஏமார்த்தல்'

'மகிழ்ந்திருத்தல்'; ஏமம்-இன்பம். ஏமார்த்தல்-இன்பத்தான் மகிழ்ந்திருத்தல் என்பர் மணக்., பரிப்.; 'இறுமாந்திருத்தல்' காளி.; 'அரசனுக்கு ஏமஞ் செய்தல்' பரிமேல்.; ஏமம்+ஆர்த்தல் ஏமார்த்தல். ஏமத்தையடையப் பண்ணுதல்' எனஉரை கூறி, 'ஏமாத்தல்' என்றபாடத்தின் பொருந்தாமை காட்டி மறுப்பர் பரிமேலழகர் 'பச்சைமண்கலத்துள் நீர் பெய்து, (நீரைச்சேமித்து விட்டோம் என்று மகிழ்ந்திருந்தாற்போலும்'' எனஉரை முடிபு கானின் தன்வினை பிறவினை முரணின்றாதலையும் உண்ணுக.

5. கனம்பண்ணுதல்-அடை கொடுத்தல்

6. சேமம் - பாதுகாப்பு

ஒ) ஒப்புமைப்பகுதி :

**பசுமண் கலத்துள் நீர் பெய்திரீஇயற்று:**

ஈர்மண் செய்கை நீர்படு பசுங்கலம்
பெருமழைப் பெயற்கேற் றாங்கு. —நற்., 308:9-10

பெயல் நீர்க்கு ஏற்ற பசுங்கலம் போல —குறுந்., 29

எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பில்
இன்துளிப் படநனைந் துருகி,
—திருவிசைப்.கருவூர்.இடைமருது.,7

முற்றும் :

மன்றிடை நலிந்துவலி யோர்களெளி யோரைக்
கொன்றனர் நுகர்ந்தபொரு ளிற்கடிது கொன்றான் - கம்ப., 3139

ஓ) மேற்கோள்பகுதி :

பெருந். : ஆல் என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு வந்ததற்கு மேற்கோள். - வீர., 39

அனுமானத்திற்கு மேற்கோள். - வீர., 180

## 66. வினைத்தூய்மை

| | துணைநலம் | என்றும் | ஓஓதல் | இடுக்கண் | ஏற்றென்று | ஈன்றாள் | பழிமலைந் | கடிந்த | சூழ்க்கொண்ட | சலத்தால் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 1 | 2 | 3 | 6 | 4 | 5 | 10 | 7 | 8 | 9 |
| பரிதி. | 8 | 1 | 2 | 3 | 7 | 4 | 9 | 10 | 5 | 6 |
| பரிப். | 1 | 2 | 3 | 6 | 4 | 5 | 10 | 7 | 8 | 9 |
| காளி. | 7 | 1 | 2 | 6 | 3 | 4 | 5 | 10 | 9 | 8 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

66 வது அதிகாரம் 'வினைத்தூய்மை' முற்றிற்று.

# 67. வினைத்திட்பம்

அ) மணக்.: வினைத்திட்பமாவது வினையின்கண் திண்ணியராதல். மேல் நல்வினையைச் செய்யவேண்டும் என்றார். அது செய்யுங்கால் திண்ணியராகிச் செயல் வேண்டுமாதலின், அதன் பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: வினைத்திட்பமாவது காரியத்தினால் திடம்பெற்று நிற்றல். எ—று.

இ) பரிப்.: வினைத்திட்பமாவது வினையின்கண் திண்ணியர் ஆதல்;மேல் நல் வினை செய்ய வேண்டும் என்றார்: அது செய்யுங்கால் திண்ணியராகச் செய்ய வேண்டும் ஆகலின் அதன்பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்,: அஃதவாது அத்தூயவினை முடிப்பானுக்கு வேண்டுவதாய மனத்திண்மை. அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

ஊ) கவிராசர்: அஃதாவது—நல்ல காரியங்களைச் செய்து முடிக்கிறவனுக்கு வேண்டிய மனத்திண்மை,

ஏ) பழைய 2. அஃதாவது வினைசெய்யும் அமைச்சனுக்கு மனத்திண்மை—அது மனத்தினது வலியெனக்கொள்க.

மல்லர்: அதாவது சீர்மைக் காரியங்களை நடத்துகிறதிலேயுங் கெட்டி மனமுள்ளவனாயிருக்கிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'வினையின்கண் திண்ணியராதல்' என ஏழனுருபு விரித்

துப் பொருள் கொள்வர் மணக்., பரிப்., பரிமேல். மூவரும். 'காரியத்தினால் திடம்பெற்றுநிற்றல்' என மூன்றனுருபு விரித்துக் கூறுவர் பரிதி.; கவிராசரும் பழைய 2ம் 'மனத்திண்மை' 'மனத்தினதுவலி' என்பர். இராம., கா.சு., மு.ரா.அரு. 'மேற்சொல்லிய நல்ல காரிய முடிப்பவனுக்கு வேண்டிய மன வலிமை'; 'திட்பம்—செறிவானாம் உறுதி' தேவநேயர். 'செயல் முடிப்பதற்கான மனஉறுதி' குழந்தை; 'வினை செய்பவனுக்கு வேண்டிய மனஉறுதி சாமி.சிதம்., சி.இ; மனஉறுதியோடு செயலை நிறைவேற்றுவது. அதாவது செய்வான் மனம் உறு தியோடு செய்யும் செயலும் பயனுடையதாக அமைவது; இவ் வுரை அதிகாரத்தின் சொல்லமைதிக்கும் மேலும் பொருள் தருவது என்பர் வரத.

இவ்வுரைகளிற் சில வினையின் உறுதியை உரைப்பன. சில செய்வானது மனஉறுதியைக் குறிப்பன. ஒருவருரை திட் பத்தாலாய பயனையும் உரைத்தல் காண்க. ஆசிரியர் முதற் குறளில் வினையின் திட்பம் விளங்குவது செய்வானுடைய உள்ளத்தைப் பொறுத்தது என்ற உண்மையை உரைப்பதால் மனவுறுதி எனவே கொண்டமை ஏற்புடைதாகும்.

67.1. *வினைத்திட்பம் என்பதொருவன் மனத்திட்பம்*
*மற்றைய எல்லாம் பிற.* (661)

உரைப்பகுதி :

அ) மணக். ; வினையினிடத்துத் திண்மை என்று சொல்லப் படுவது ஒருவன் மனத்து உண்டான திண்மை:அதனை யொழிய மற்றவை யெல்லாம் திண்மையென்று சொல்லப்படா எ—று.

மற்றவை யென்றது கருவியும் உபாயமும் வினைத்திட்ப மாவது யாது என்றார்க்கு இது கூறப்பட்டது.

ஆ) பரிதி. : எடுத்துக்கொண்ட காரியம் முடிவது எப்படி என்றால், திடபுத்தியினாலே முடியும்; அல்லது, மற்றைத்திடமான சதுரங்க[1]பெலம் திடமல்ல எ—று.

1. சதுரங்கம் - யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை என்ற நால்வகையான அங்கங்கள்

இ) பரிப்.: வினைத்திட்பம் என்று சொல்லப்படுவது ஒருவன் மனத்தின் உண்டான திண்மை. அதனை ஒழிய மற்றைய எல்லாம் திட்பம் என்று சொல்லப்படா எ—று.

மற்றைய என்பது கருவியும் உபாயம் முடித்தலும். வினைத் திட்பம் ஆவது யாது என்றார்க்கு இது கூறப்பட்டது.

ஈ) காளி.: வினையின் திட்பமாவது அவ்வினை முடியும் அளவும் உரம் செய்து நிற்றல் ஆகலான், அதனை ஆங்ஙனம் கோலிக் கொண்ட[2] அமைச்சனது மனத்தின் திட்பமே திட்பம் ஆவது: மற்று ஏனையவெல்லாம் பிறவாய் ஒழியும்; செய்வன எல்லாம் வழியழிந்து கெட்டுவிடும் எ—று.

உ) பரிமேல்: வினை செய்தற்கண் திண்மை என்று சொல்லப்படுவது அதனை முடித்தற்கு உரியானொருவன் மனத்தினது திண்மை; அஃது ஒழிந்தன எல்லாம் அதற்குத் திண்மை என்று சொல்லப்படா.

ஒழிந்தனவாவன — படை, அரண், நட்பு முதலியவற்றின் திண்மைகள், அவையும் அதற்கு வேண்டுவனவாய் இனமாகலின் 'மற்றைய' என்றும், வேண்டினும், அஃது இவ்வழிப் பயனில-வாகலின் 'பிற' என்றும் கூறினார். இதனால் வினைத்திட்பமாவது இன்னது என்பது கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: ஒரு காரியம் செய்கிறதிலே கெட்டி என்று சொல்லப்படுகிறது அவனுடைய மனத் திடமே; அதுவல்லாமல் மற்றைய எல்லாம் கெட்டியல்ல எ—று.

ஏ) பழைய 2: வினை செய்யுமிடத்துத் திண்மையென்று சொல்லப்படுவது வினை செய்தற்குரியான் ஒருவன் மனத்தினது திண்மை. அஃதொழிந்தனவெல்லாம் அதற்குத் திண்மையாயினுந் திண்மை அல்ல.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மனத்திட்பம்'

'மனத்துண்டானதிண்மை' மணக்.; 'திட புத்தி' பரிதி.; வினை முடியும் அளவும் உரம்செய்து நிற்றல்'

2. கோலிக்கொண்ட - சூழல் அமைத்துக் கொண்ட

காளி.; 'எடுத்தவினையை முடுத்தற்குரியானொருவன் மனத்தின் திண்மை' பரிமேல்.; இவற்றுள் காளிங்கர் பரிமேலழகர் உரைகள் ஏற்புடையன.

'மற்றைய'

பரிதி. 'சதுரங்கபெலம்'; 'ஏனைய' எனப்பொதுவகையான் ஒழிவர் காளி., மணக். முதலியோர். 'படை, அரண், நட்பு முதலியவற்றின் திண்மை' என்பர் பரிமேலழகர்.

இவற்றுள் பரிமேலழகர் கருத்து ஏற்றமுடையது. தேவநேயர், பரிமேலழகரை ஒத்துரைப்பர். ஆனால் குடியையும் உடன்கூறுவர். குழந்தை அரணைவிட்டு ஏனைய கூறுவர்.

வரத. 'மற்றைய' என்பதற்குச் 'செயலைப்பற்றி ஆய்வதோ பயனைப்பற்றி ஆய்வதோ முன்னே ஆய்வின்பாற்பட்டன. அதாவது வினை தொடங்கியபின் செயலிலே கண்ணுங் கருத்துமாதல் வேண்டும்' என்பர். ஆய்தலைப்பற்றித் 'தெரிதலும் தேர்ந்து செயலும்' என முன்னர் அமைச்சரின் பொதுவிலக்கணமாகக் கூறினமையின் இங்ஙனம் கூறினர் போலும். ஆயினும் மற்றையதென்பது சுட்டியதற்கினமாதலின், வலியறிதலிற்கூறப்பட்ட வலியறிதல் நான்கனுள், வினைவலியும் நீங்க ஏனையவற்றைக் கூறலே இயல்பு.

மு ரா. அரு. 'போர்வினையைக்' கருதுவர்; 'மற்றைய சேனை வலி முதலியன. மற்றக் கருவிகள்' கா சு.; 'கருவி, துணை, காலம் முதலியவற்றின் வலி' என்பர் மு கோ.

இவற்றுள், பரிமேழலகருரைக் குறிப்பும், அவரோடு ஒத்தனவும் சிறந்தன.

67.2. ஊறொரால்[1] உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள். (662)

---

1. தழுவுதல் என்பது தழால் என்றாயினாற் போல் ஒருவுதல் என்பது ஒரால் என்றாயிற்று

உரைப்பகுதி:

அ) மணக் : வினைசெய்யுங்கால் உறும் துன்பத்தை ஓரார் ஆதலும், அவ்விடத்துத் துன்பமுற்றால் தளரார் ஆதலுமாகிய இவ்விரண்டினது நெறி என்று சொல்லுவார், நீதி நெறியை ஆராய்ந்தவர் எ—று.

ஆ) பரிதி. : காரியம் செய்வார் எப்படிச் செய்வார் என்னில் தங்கள் விதனம் பாரார்; விதனம் வந்ததென்று ஒடுங்கார்; இது சாதுரியவான்கள்[2] குணம் எ—று.

இ) பரிப். : வினை செய்யுங்கால் உறும் துன்பத்தை ஓரார் ஆதலும், அத்துன்பம் உற்றால் தளரார் ஆதலும் ஆகிய இவ்விரண்டினது நெறி என்று சொல்லுபவர்கள் வினையை எண்ணினவர்கள் செய்து முடிக்கும் கோட்பாடு எ—று.

மனத்திட்பம் ஆவது யாது என்றவர்க்கு அஃது இரண்டு வகைப்படும் என்று கூறிற்று.

ஈ) காளி. : யாதானும் ஒருவினை செய்யும் இடத்தை அதற்கு இடையூறு வருவதும் வந்துற்றதுமாய் இருக்கும். அவற்றுள் வருவதாகிய இடையூறு முன்கோலிக்[3] கழியுமாறு செய்தலும், அது அன்றி ஒன்று உற்றதாயின் அதற்கு மனம் தளராமையும் அவ்விரண்டினது நெறி என்று சொல்லுப ஆராய்ந்து அமைந்த அமைச்சரானோர் வினையினது கோட்பாட்டினை எ—று.

உ) பரிமேல் : முன் நீதி ஆராய்ந்த அமைச்சரது துணிபு பழுதுபடும்[4] வினைகளைச் செய்யாமையும் செய்யும் வினன தெய்வத்தான் பழுது பட்டவழி அதற்குத் தளராமையும் ஆகிய இவ்விரண்டின் வழியென்பர் நூலோர்.

தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப்பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் நீதிநூலுடையார் கூறியவாறு

2. சாதுரியவான்கள் — திறமைசாலிகள்
3. முன்கோலி —வருமுன் அறிந்து
4, பழுதுபடும் — கெடுதியுண்டாகும்

கூறுகின்றமையின்[5] ஈண்டு வினைத்தூய்மையும்[6] உடன் கூறினார். உறுதலுடையதனை[7] முன் 'ஊறு' என்றமையின் 'உற்றபின்' என்றும், இவ்விரண்டின் கண்ணே பட்டது என்பார் 'இரண்டின் ஆறு' என்றும் கூறினார். 'ஊறோரரார்' என்று பாடம் ஓதுவாரும் உளர்[8]. அஃது ஒல்காமை என்னும் எண்ணோடும் இரண்டு என்னும் தொகையோடும் இயையாமை அவர் அறிந்திலர்.

ஊ) கவிராசர். : நீதிபரராயிருப்பவர்களுடைய[9] நினைவு குற்றம் வரத்தக்க காரியங்களைச் செய்யாமையும், செய்யப்பட்ட காரியம் கருமவசத்தினாலே பழுதுபடின் அதற்கு விசாரப்படா மலிருக்கிறதும்[10] ஆகிய இவ்விரண்டின் வழி என்பர் நுலோர் எ—று.

ஏ) பழைய 2 : நீதியாராய்ந்த அமைச்சர் பழுதுபடும் வினை களைச் செய்யாதொழிதலும், பழுதுபடா வினைகளைச் செய் தலும் செய்யுமிடத்துப் பழுதுபட்ட வழி அதற்குத் தளராமையு மாகிய இவ்விரண்டின் வழியென்பார் கோளாகிய வியாழன் வெள்ளி என்னும் மந்திரியர் சரித்திர நூலை ஆராய்ந்த பெரி யோர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஊறு ஒரால்'

'உறும் துன்பத்தை ஓரார்' மணக்.'இவர் கொண்ட பாடம் 'ஊறோ' என்பதை இதனால் அறிக. பரிதி. பாடமும் இது.

காளி. பாடம் 'ஒரால்' என்பது. 'ஊறுகளை முன்கோலிக் காத்தல்' எனப்பொருள் காண்பர். பரிமேல். 'பழுதுபடும் வினை

5, தேவர்க்கு அமைச்சர் வியாழன். அவர் செய்த நீதிநூலின்முடிபைச் சுருக்கிச் சாணக்கியர் கூறினர். அசுரர்க்கு அமைச்சர் சுக்கிரன். இவர் நூலை சுருக்கிக் காமந்தகர் கூறினார். இந்த இரண்டு நூலைப் பின்பற்றிக் கூறினர் திருவள்ளுவர்

6. வினைத்தூய்மை — பழுதுபடும் வினைகளைச் செய்யாமை

7. உறுதலுடையதனை— பழுதுபடும் வினைகளை

8. மணக்குடவர், பரிதியார் கொண்ட பாடம் ஆகும்

9. நீதி பரராயிருப்பவர்கள் — நீதியை மேற்கொண்டு ஒழுகுபவர்

10. விசாரப்படாமலிருக்கிறது — கவலைப்படாமலிருக்கிறது

களைச் செய்யாமை' என்பர். மேலும், 'ஒரார்' என்ற பாடம் எண்ணோடும் தொகையோடும் இயையாமையை அறிந்திலர் அவர் என மறுப்பர். இம்மறுப்பும் உரையும், பாடமும் மிகப் பொருத்தமானவை.

**ஆய்ந்தவர் :**

'நீதிநூல்களை ஆய்ந்தவர்'என ஏனைய உரையாசிரியர்கள் சொல்ல பரிமேலழகரும் பழைய 2 ஆசிரியர் வியாழவெள்ளிகளது சரித்திர நூலை ஆய்ந்த பெரியார் என்பர். சரித்திரம் என்பதனை அவ்விருவர் வரலாற்றோடுபட்ட நீதி நூல்கள் என்ற கருத்தினர் போலும்.

தேவநேயர் 'ஆய்ந்தவர்' — 'முன் நீதியாராய்ந்த அமைச்சர்களின் துணிவு. வியாழ வெள்ளிகளது நூல் தொகுத்துச் செய்கின்றார் ஆதலின், என்பது பொருந்தாது என மறுப்பர். கா.சு., சுக்கிரநீதி முகவுரையில் இக்கருத்தை மறுப்பதைக் காணலாம். 'ஆய்ந்தவர் கோள்—திட்பத்தையுணர்ந்த அமைச்சருடைய கொள்கை கேடுதரும் செயல்களைச் செய்யாமையும், ஊறு தெய்வத்தான் நேரின் தளராமையும் ஆகிய இரண்டின் வழி என்பர் அரசியல் நூலார்' என உரை காண்பர். பரிமேலழகர் 'ஆய்ந்தவர்-முன் நீதியாராய்ந்த அமைச்சர்களாகிய வியாழ வெள்ளிகள்' என்பதும், அவற்றைத் தொகுத்துப் பின் நீதி நூலுடையார் கூறியவாறு வள்ளுவர் கூறுகிறார் எனச் சுக்கிர நீதி சாரம் போன்ற நூல் வழிவந்தது திருக்குறள் எனக் கருத முயல்வதையும் மறுப்பர் தேவநேயர். குழந்தை உற்றபின் ஒல்காமைக்குத் தெய்வத்தான் ஊறு உற்றபின் என்னாது வாளா கூறுவர். "ஊறு ஒரால்" என்று வினைத் தூய்மையும் உடன்கூறியவாறாம்' என்பர். சாமி சிதம், ஆய்ந்தவர் கோள் இவ்விரண்டின் ஆறு என்ப எனக்கூட்டி 'அமைச்சர் கொள்கைகள் இவ்விரண்டும்' என்று கூறுவர். இதனால் 'தெய்வத்தான் ஊறுநேரின்' என்பதும், 'வியாழ வெள்ளிகளது நூல் தொகுத்துச் செய்த நூலின் வழியது இந்நூல்' என்பதும் மறுக்கப்படுகின்றன. வரத. 'ஊறு ஒரால்-முன்னே இடையூற்றுக்குப் பயந்து விலகாமலும்' என்பர். 'ஒல்காமை' என்னும் எதிர்மறைத் தொழிற்பெயர் நோக்கி ஒரால் என்பதையும் எதிர்மறைப் பொருளதாக்குவர் இவர்.

இராம. 'வினைத்திட்பம் என்று ஆய்ந்தவர் கொள்வது, துன்புறுத்தும் செயல்களைச் செய்யாமையும், தமக்குத் துன்பம் நேரின் தளராமையும் ஆகிய இந்த இரண்டு குணங்களும் சேர்ந்த ஒழுக்கம் என்பர்: ஆறு—ஒழுக்கம் என்பது இவர் கருத்து. வ சுப. மா 'வருமுன் காத்தலும் வந்தால் தளராமையுமே அறிஞர் கண்ட வழிகள்'. இதனைக் காளிங்கர் உரை 'முன் கோலிக் காத்தலும், வந்தால் தளராமையும்' என்று நினைவூட்டுகிறது.

வரத : 'ஊறுஒரால்—முன்னே இடையூற்றுக்குப் பயந்து விலகாமலும், உற்றபின் தளராமலும் இருப்பதே வினையைத் திறம்படச் செய்வதற்குவழி என்பது ஆய்ந்தவர் கோள்' என்பர். 'இவ்வுரையுள் 'ஒரால்'' ஒல்காமை' என்பன தொழிற்பெயர்களாய் இவ்விரண்டு' என்ற தொகைப்பெயர் கொண்டமையான், அவற்றை விலகாமலும், தளராமலும் என் மல் ஈற்றுவினை எச்சமாக்கின் 'இரண்டு' என்ற தொகைப் பெயர் கொள்ளாது ஆகாலானும், என்பது' எனப் பெயர் வருவிப்பினும் அதுவும் ஒருமையாய்ப் பன்மைத்தொகையைக் கொள்ளாதாகலானும்: ஊறுஒரால்' என்பதன் பொருளும் 'உற்றபின் ஒல்காமை' ஒன்றேயாதலானும், 'ஒரால்' என்பது''மறைக்குங்கால் மரீஇயது ஒராஅல்' (தொல், சொல்,தெய்வச் ,436) என்புழிப் போல வியங்கோள் வினைக்கண்ணன்றி எதிர் மறைக்கண் வாராமையும், ''ஒராஅல் வேண்டின்'' (பொருந. 62) ''வேந்தர் தாரழிந்து ஒராலின்'' (பதிற்று. 23:17) எனப் பல்லிடத்தும் தொழிற்பெயராங்கால் ஒருவுதல் அல்லது நீங்குதல் என உடன்பாட்டுப் பொருட்கண்ணே வருதலானும் மிக ஆழ்ந்துசிந்திக்கதக்க தொன்றாதலைக் காண்க.

இவ்வுரைகளுள், 'ஊறு—இடையூறு அல்லது துன்பம்' என்ற 'அளவிலன்றித்' துன்பந் தரும் வினைகளை ஒருவுதல்' எனச் சிலர் உரைகாண்பர். அத்தகைய வினைகளை நீக்க வேண்டும் என்பதை வினைத்தூய்மைக்கண் விலக்கினமையின் திட்பத்தின் கண்ணும் விலக்கல் வேண்டா. ஆதலால் உறும் துன்பத்தை ஒரார் ஆதலும் என்ற கருத்தமைந்த உரைகளே ஏற்புடையன. அதினும் ''ஒரு வினை செய்யுமிடத்து அதற்கு இடையூறு வருவதும், வந்துற்றது மாயிருக்கும்; அவற்றுள் வருவதாகிய இடையறு முன் கோலிக் கழியுமாறு செய்தலும்'' என்ற காளிங்கர் உரைமிக்க நயமுடையது.

**ஏ) ஒப்புமைப்பகுதி:**

**முற்றும் :**

ஊறுசேர் வினையைப் புரிகலார் ஊழால் ஊறுவந் தடுப்பினும் கலங்கார். —வி.நா.அரசி.,180

**ஓ) மேற்கோள்பகுதி:**

இளம்.: சொல்லோடு சொல் தொடர்புபடும் வாய்பாட்டால் தொடராது பிறிதோர்வாய்பாட்டால் தொகுப்பினும் பொருள் தொடர்புஉண்டாயின் பொருள் இயையும்வழி அசைச்சொற்கள் திரியாது நின்ற நிலையே பொருள்படுமாறாயிற்று. 'ஊறொ ரார்......... கோள்' இதுவும் இரண்டு என்னும் தொகைக்கு ஊறொராமை எனப் பொருளுரைக்க வேண்டும்.

—தொல். பொருள்.193

*67.3. கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட் கின்*
*எற்றா விழுமம் தரும். (663)*

**உரைப்பகுதி !**

அ) மணக். : ஒரு வினையைத் தொடங்கினால், முடிவிலே சென்று மீளல்செய்வது ஆண்மையாவது; இடையிலே மீள்வ னாயின், அது மிகுதியைக் கொடாது நோயைக் கொடுக்கும் எ—று.

சென்றுமீளல் சுழல்தல் ஆயிற்று. இது தொடங்கின வினை யை முடியச்செய்ய வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: ஒரு காரியத்தை எடுத்துக்கொண்ட பிரியம்போல காரியம் முடியுமட்டும் செய்வான்; இடையிலே விக்கினம் வரு மாகில், உலகம் பேணாது தனக்கும் புகழில்லையாய்த் துன்பம் வரும் எ—று.

இ) பரிப்.: ஒரு வினையைத் தொடங்கினால் முடிவிலே சென்று மீளச் செய்வது ஆண்மை ஆவது: இடையிலே மீள்வன் ஆயின் மிகுதியைக் கொடாது, நோயைக் கொடுக்கும் எ—று.

சென்று மீளுதல் சுழல்தல் ஆயிற்று. இது தொடங்கின வினையை முடியச் செய்ய வேண்டும் என்றது.

ஈ) காளி : 'இடைக்கொட்கின்'— பாடம்.

அமைச்சரானோர் திண்ணிதாகத் தெரிந்து உரைத்த வினையினைக் கைக்கொண்ட அரசர் கடைபோகச்[1] செய்யத் தக்கதே ஆண்மைப்பாடாவது: இனி இவ்வாறன்றி இடைபுரிந்து விடின், நெஞ்சினான் எனைத்தொன்றும் கருதப்படாத துயரத்தைத் தரும் எ—று.

உ) பரிமேல். : செய்யப்படும் வினையை முடிவின்கண் புலப் படும்வகை முன்னெல்லாம் மறைத்துச்செய்வதே திட்பமாவது; அங்ஙனமன்றி இடையே புலப்படுமாயின் அப்புலப்பாடு செய்வானுக்கு நீங்காத இடும்பையைக் கொடுக்கும்.

மறைத்துச் செய்வதாவது அங்கம் ஐந்து எண்ணியவாறு[2] பிறர் அறியாமலும்; தான் அறிந்ததூஉம், தன் இங்கிதம்[3], வடிவு, செயல், சொற்களான் அவர் உய்த்துணராமலும்[4] அடங்கிச் செய்தல். அத்திட்பம் ஆண்தன்மையான் வருதலின் 'ஆண்மை' எனப்பட்டது. 'எற்றாவிழுமமாவன பகைவர் முன் னறிந்து அவ்வினையை விலக்குதல் செய்வானை விலக்குதல் செய்வராகலின் அவற்றான் வருவன, விழுமம் சாதிப்பெயர். இவை இரண்டுபாட்டானும் அதனது பகுதி[6] கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : செய்யவேண்டிய காரியங்களை முடிந்தபின் அறியும்வகை பண்ணி, அதற்கு முன்னெல்லாம் மறைத்துப் பிறரறியாமற் செய்கிறதே மனசுத் திடமாவது; அப்படியல்லாமல், செய்யும்பொழுது பிறர் அறிந்தால், அது செய்கிறவனுக்கு ஒரு காலும் நீங்காத துக்கம் கொடுக்கும் எ—று.

---

1. கடை போக - முடிவாக
2. நாடு, அரண், பொருள், படை, நட்பு என்னும் ஐந்து அங்கங்களையும் எண்ணியவாறு
3. இங்கிதம் - குறிப்பு. அது குறிப்பால் நிகழும் உறுப்பின் தொழில்மேல் நின்றது
4. அவர் உய்த்துணராமலும் - பிறர் அறியாமலும்
5. திட்பம் ஆண்தன்மையால் வருவது. அது கருவியாகு பெயராய் ஆண்மையையே உணர்த்திற்று
6. அதனது பகுதி - வினைத்திட்பத்தினது தன்மை

ஏ) பழைய 2: செய்யப்படும் வினையை முடிவின்கண் வெளிப்படும் வகை மறைத்துச் செய்வது திட்பம்; அதுவன்றி இடையிலே வெளிப்படும் வகை செய்யின், அவனுக்கு நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் !

'கடைக்கொட்க' 'இடைக் கொட்கின்' என ஈரிடத்தும் அமைந்த 'கொட்க' என்பது உரையாசிரியர்களைச் சுழல விட்டிருக்கின்றது. ஆதலின் அதன்பொருளை முதற்கண் ஆய்ந்து, பின்னர் குறட்பாவின் முழுமைக்கருத்தையும் முன்னுதல்.

'கடைக்கொட்க'

'முடிவிலே சென்று மீளல் செய்வது' மணக்.; 'முடியுமட்டும் செய்வான்' எனக் கருத்துரை வழங்குவர் பரிதி.; 'கடைபோகச் செய்யத்தக்கதே' காளி.; 'முடிவின் புலப்படும் வகை, பரிமேல். ; 'முடிந்தபின் அறியும் வகை' கவிராசர்'; 'முடிவின்கண் வெளிப்படும் வகை' பழைய 2.

பரிமேலழகரை ஒட்டியஉரை சி.இ.,கா.சு.,வ.சுப.மா. மு.ரா. அரு.,தேவநேயர், சாமி சிதம்., சபாபதி'குழந்தை. முதலியோருடையன. "மேற்கொண்டு செய்யப்புகுந்தகாரியத்தின் முடிவு காண்கின்றவரை" இராம.; 'முடிவுதன்னைச் சாரும்படி' என்று உரைகூறி 'எந்தச் சூழ்நிலையால் செயல் நிறைவேறினாலும் தன்னால்தான் அந்தச் செயல் நிகழ்ந்தது என்ற முடிவு காணும்படி' என்ற விளக்கமுந்தருவர் வரத.

இவ்வுரைகளுள் மணக்., பரிப்பெருமான் இருவரும் 'கொட்டுதல்-சுழலுதல்' எனவெளிப்படையாகப்பொருள் தந்தனர். பரிதி ; காளிங்கர் இருவரும் 'சுழலுதலைக்' குறிப்பால் தந்தனர். ஏனையோர் அனைவரும் 'வெளிப்படுதல்'என உரை கண்டனர். 'கடைக்கொட்குதல் — கடைசியில் வெளிப்படுதல்' என்றனர். 'வெளிப்படுதல்' என்ற பொருள் பரிமேலழகரே கண்டதாதல் வேண்டும். இன்றுள்ள பழைய இலக்கியங்கள் அனைத்திலும் சுழலுதல் என்னும் பொருளிலே வந்துள்ளது. 'வெளிப்படுதல்' என்னும் பொருளுக்குரிய வினைப்பகுதி யாது என்பதும், வேறுஎங்கேனும் ஆட்சியுண்டா என்பதும் ஆய்ந்து கண்டு தெளியவேண்டும்.

'இடைக்கொட்கின்'

'மீளுவனாயின்' மணக்., பரிப். இவர்கட்கு மீளுதல் என்று தாம் கூறுதல் வலிந்து கோடலாகவோ அன்றிப் புதிது புனைதலாகவோ தோன்றியிருக்கிறது. பிறர்க்கும் இவ்வை யத்தைப்போக்க வேண்டிச் 'சென்று மீளுதல் சுழலல் ஆயிற்று' என அமைதி கூறினர். இந்த அருமையைப் போலப் பரிமேலழகரும் வெளிப்படற்கு அமைதி கூறியிருப்பராயின் நன்று. ''இடைபுரிந்து மீளின்'' என்பர் காளி.; 'இடையிலே வெளிப்படுமாயின்' என்பர் பரிமேலழகர்; 'பிறர் அறிந்தால்' 'வெளிப்படும் வகையறியின்' என்பன கவிராசர், பழைய 2. "ஈண்டும் கொட்கும்' என்பது 'வெளிப்படின்' என்றே கொள்வர் பரிமேலழகரும் பிறரும். இப்பகுதியின் அடியாகப் பிறந்ததே கொட்பு என்பது, அதற்குப் பரிமேலழகர் வேறுபாடு என்பர்.

'எற்றா விழுமம் தரும்'

'அது மிகுதியைக் கொடாது; நோயைக்கொடுக்கும்' என்பர் மணக்., பரிப்., இவ்வுரையை நோக்கின், பாடம் 'எற்றா விழுமந் தரும்'' என்பதேயாயின் இவர் வருவித் துரைக்கும் 'அது' என்னும் எழுவாய் ஏற்றாது, அதாவது மிகுதியைக் கொடுக்காது, என இயைந்து ஒருமை பன்மை முடிபு வழுவாம். ஆதலால் உரை அவை ஏற்றா; விழுமம் தரும் என்றிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. ஏற்றுதல்— உயர்த்துதல் அதாவது மிகுதியைத் தருதல் என்பது. 'உலகம் பேணாது' என்ற பொருளும் இக்கருத்தினை அரண் செய்தல் காண்க. 'எனைத்தொன்றும் கருதப்படாத துயரத்தையும் தரும்' என்பர் காளிங்கர். இதுவும் என்றா—எனைத்தென்று கருதப்படாததுயரம் என்பதே பாடமாயிருத்தல் வேண்டும், 'நீங்காத இடும்பையைக் கொடுக்கும்' என்பர் பரிமேலழகர். இவர் 'என்றா' என்பதை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்ச மாகக் கொண்டு இப்பொருள் கண்டனர். இவர் வழிவரும் கவிராசர் முதலியோரும் இங்ஙனமே கொண்டனர். ஏற்றுதல் —நீங்குதல் என்னும் பொருளில் வருதல் சங்ககால வழக்கன்று என்பதை ஓரளவு துணியலாம். அஃபுஇலக்கியக்கால ஆக்கம் என்பதைக் காணலாம்.

இவற்றுள் பரிமேலழகர் காணும் பொருள் அரசியலமைப் பிலுள்ள அமைச்சற்கு மிக ஏற்புடையதாகலின் சிறந்தது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

......... ......... ......... ......... மதிநாடித்
தொடங்கிய தொன்றோ முற்று முடிக்குந் தொழிலல்லால்
இடங்கெட வெவ்வா யூறு கிடைத்தா லிடையாதீர்—கம்ப., 4834

*67.4. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்*
*சொல்லிய வண்ணம் செயல். (664)*

உரைப்பகுதி :

அ) மணக். : ஒரு வினையை இவ்வாறு செய்தும் என்று சொல்லுதல் யாவர்க்கும் எளியவாம்; அதனைச் சொல்லிய வாற்றால் செய்து முடித்தல் யாவர்க்கும் அரியவாம் எ—று.

ஆ) பரிதி. : சொல்லுதல் யார்க்கும் எளிது; அரியது சொன்னது போலே காரியம் முடிப்பது எ—று.

இ) பரிப். : ஒரு வினையை இவ்வாறு செய்தும் என்று சொல்லுதல் யாவர்க்கும் எளிய ஆம்: அதனைச் சொல்லிய ஆற்றால் செய்து முடித்தல் யாவர்க்கும் அரிய ஆம் எ—று.

மேற்கூறிய இருவகையினும், ஊறு ஒராது செயலின் கூறுவார் முற்படச் சொல்லியவாறு செய்யவேண்டும் என்று கூறினார்

ஈ) காளி : யாம் வினைத்திட்பம் உடையோம் என்று இங்ஙனம் சொல்லல் யாவர்க்கும் எளிய. மற்று அச்சொல்லிய வண்ணமே செய்து முடித்தல் அரிய ஆகும்; அதனால் அங்ஙனம் முறைவழி செய்யத் திட்பம் உடையோர் வானவருள் ஒருவர் ஆவர் எ—று.

உ) பரிமேல். : யாம் இவ்வினையை இவ்வாற்றான் செய்தும் என நிரல் படச் சொல்லுதல் யாவர்க்கும் எளிய, அதனை அவ்வாற்றானே செய்தல் யாவர்க்கும் அரியவாம்.

சொல்லுதல், செயல் என்பன சாதிப்பெயர். அரியவற்றை எண்ணிச் சொல்லுதல் திட்பமில்லாதார்க்கும் இயலின், 'எளிய' என்றார். இதனால் அதனது அருமை கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: ''நாம் இந்தக் காரியத்தை இப்படிச் செய்வோம்'' என்று கெட்டியாய்ச் சொல்லுகிறது எல்லோருக்கும் எளிதாய் இருக்கும்; சொன்ன காரியத்தை அப்படியே செய்து முடிக்கிறது எல்லார்க்கும் அருமையாம் (எ—று).

எ) பழைய 2: யாமிவ்வினை இவற்றாற் செய்தும் என்று நிரல்படச் சொல்லுதல் யாவர்க்கும் எளிதாம்; அரியவாஞ் சொன்ன வண்ணஞ் செய்து முடித்தல்.

மல்லர்: என்பது இந்தக் காரியம் இன்னபடிக்குச் செய்ய வேண்டியது என்று எல்லாரும் எளிதாய்ச் சொல்லுவார்கள். அந்தக் காரியத்தைச் சொன்ன பிரகாரமாகச் செய்கிறது என்றவாறு

காரியங்களைச் செய்கிற வகையறிதல் மாத்திரம் மந்திரிக்குப் பத்தாது. அறிந்த பிரகாரமாகச் செய்கிறதுக்கு மனத்துணிவு வேணும் என்பது கருத்து.

யாரும்—எல்லாரும், எளிய—எளிமையுடைத்து, அரிய—அருமையுடைத்தது, ஆம் — ஆகும், சொல்லிய — சொன்ன, வண்ணம்—வகை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் முதலிய தொல்லாசிரியர்களில் கருத்து மாற்றம் சிறிதும் இல்லையாயினும், பரிமேலழகர் பொருளை விரிக்குமுறை சிறந்தது. தேவநேயர் ஏற்புழிக்கோடலால் தரும் 'அரிது என்பது ஒருசிலர் அரும்பாடு பட்டேனும் செய்து முடித்தலையும், பலர் எப்பாடுபட்டும் செய்து முடிக்க இயலாமையும் உணர்த்தும்' என்றதும், 'அருத்தாபத்தியான் ஒரோருவர்க்கு அது எளிதாக முடியவும் கூடும்' என்றதும் மிகக்கூரிய சிந்தனைகளாய்க் கொள்ளத்தக்கனவே. மு.ரா அரு சொல்லுதலைவிடச் சொன்னபடிச் செய்தலே வினைத்திட்பம்' என வினைத்திட்பத்திற்கு வேறொரு நோக்கு விதிப்பர். இராமலிங்கரும்

முற்கருத்தினரேயாவர். மு.கோ. 'குறையப்பேசு; நிறையச்செய்' என்ற கருத்தைக் கொணர முயற்சிப்பர். இங்ஙனம் இன்றைய உரைகளிலும் கருத்து மாற்றம் அற்ற செய்யுள் இது.

ஊ) ஒப்புமைப்பகுதி:

சொல்லுதல் யார்க்கும் எளிய:

நெடுமொழி மன்னர் நினைக்குங் காலை —புறம்., 54:9

ஞாங்கர் நெடுமொழி பயிற்றி —புறம் ,376:22

முற்றும் :

எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பிற்
கள்ளுடைக் கலத்தர் உள்ளூர்க் கூறிய
நெடுமொழி மறந்த சிறுபே ராளர். —புறம் , 178:7-6

செயக்கடவ அல்லனவும் செய்ததுமன் என்பார்
நயத்தகு நாகரிகம் என்னாம் — செயிர்த்துரைப்பின்
நெஞ்சுநோம் என்று தலைதுமிப்பான் தண்ணளிபோல்
எஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று. —நீதிநெறி., 71

அரசியற் குரிய யாவும் ஆற்றுழி ஆற்றி ஆன்ற
திரைசெயற் குரிய சேனைக் கடலொடும் திங்கள் நான்கின்
விரைசுக என்பான் நின்னை வேண்டினென் வீர என்றான்
உரைசெயற் கெளிது மாகி அரிதுமாமொ ழுக்கில் நின்றான்.
—கம்., 4242

வினைதெரிந் துரைத்தல் பெரிதல் அஃது
தனைநன் காற்றலே யாற்றல்............
—மனோன்., 2:1.170-171

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயலென்று — மெல்லியலைக்
கொண்டு மனையில் குறுக............ —திருசெங்கை உல.,411

சொல்லலாம் இருந்துழிச் சொன்ன சொற்படி
வெல்லலாம் என்பது விதிக்கும் கூடுமோ

மல்லலா ளியைப்பல வளைந்து கொள்ளினும்
கொல்லலா யிருக்குமோ குஞ்ச ரங்களால்.
—வில்லி—நிரைமீட்சி., 83

67.5. வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும். (665)

உரைப்பகுதி :

அ) மணக் : மிகுதியெய்தி மாட்சிமைப்பட்டாரது வினைத்திட்பமானது அரசன்மாட்டு உறுதலையெய்தி[1] எல்லோரானும் நினைக்கப்படும் எ-று.

எய்த என்பது திரிந்தது. இது வினைத்திட்பமுடையாரை எல்லாரும் விரும்புவர் என்றது.

ஆ) பரிதி. : காரியத்தால் மேம்பாடு[2] பெற்று நிலைநின்ற மந்திரி நீதி மன்னருள்ளாரால் விரும்பப்படும். எ-று.

இ) பரிப். : மிகுதி எய்தி மாட்சிமைப்பட்டாரது வினைத்திட்பமானது, அரசன் மாட்டு உறுதலை எய்தலான் எல்லாராலும் நினைக்கப்படும் எ-று.

எய்த என்பது திரிந்தது இது வினைத்திட்பம் உடையானை எல்லாரும் விரும்புவார் என்றது.

ஈ) காலி. : வேந்தன் கோலிக்கொண்ட[3] வினைத்திட்பமானது பின்பு ஓர் இடையூறு வந்து எய்தின், அறிவு மாட்சிமை உடைய அமைச்சரானோர் அதனை வெல்லும் உபாயத்தை விருப்புற்று விசாரிக்க, மற்று அவ்விடையூறானது கெட்டுவிடும் எ-று.

இனி மற்று இங்ஙனம் ஆராய்ந்து ஓர்ந்து துளங்கிய[4] வினைக்கண் திட்பம்உடையான் பின்பு அது முடித்தலன்றே

1. உறுதலை எய்தி — அடைந்து 2. மேம்பாடு — உயர்வு
3. கோலிக்கொண்ட — வரையறுத்துக்கொண்ட 4. துளங்கிய — விளங்கிய

செயற்பாலது, அதனான் மற்று இதன் பின்னரே அதனை அறி விக்கின்றது மேலையதிகாரம்.

உ) பரிமேல். : எண்ணத்தால் சிறப்பெய்திப் பிற இலக்கணங் களாலும்[5] மாட்சிமைப்பட்ட அமைச்சரது வினைத்திட்பம், வேந் தன் கண்ணே உறுதலை எய்தலான், எல்லாராலும் நன்கு மதிக்கப்படும்.

வேந்தன்கண் ஊறெய்தல் எடுத்தவினை அதனான்[6] முற்றும் பெற்றுச் செல்வமும் புகழும் அவன் கண்ணவாதல். எய்தலான் என்பது திரிந்து நின்றது.[7] உள்ளல்-மதிப்பான் மறவாமை. இத னால் அதன்[8] சிறப்புக் கூறப்பட்டது.

காரி. : ஊறு - உறுதல் ; பாடு, வீடு, கேடு என்பனவும் அது. அறத்துப் பாலுள் எச்சத்திரிபு காட்டியதால் அவ்வாறு திரியும் எச்சங்களை ஈண்டுக்காட்டாது ஒழிந்தது என அறிக.

ஊ) கவிராசர் : எண்ணத்தாலே கெட்டிக்காரனாய், மற்று முள்ள லட்சணங்களாலும் குறையில்லாதவன் செய்யுங் குற்றமில் லாத காரியம் அரசனாலே சந்தோஷப்பட்டு எந்நாளும் நினைக் கப்படும். எ-று.

எ) பழைய 2 : எண்ணத்தாற் சிறப்பெய்திப் பிறவிலக்கணங் களாலும் பெருமை பெற்ற அமைச்சருடைய வினைத்திட்பம் வேந்தனிடத்து உறுதலால் எல்லாராலும் நன்கு மதிக்கப்படும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக். உரை 'அமைச்சரது வினைத்திட்பம் அரசனை எய்திஅனைவராலும் (சிறந்ததென்று) நினைக்கப்படும்' என்னுங் கருத்தினதாய் அமைச்சுக்குரியதாய் அரசனைச் சார்ந்து பாராட் டப்பெறும் என்ற இயலியையும், அதிகார இயைபும் பெற்றது. பரிதியின் கருத்தும் இது.

---

5. பிற இலக்கணங்களை - அமைச்சதிகாரத்திற் காண்க
6. அதனான் - (அமைச்சரது) மனவுறுதியால்
7. எய்தி என்னும் செய்து என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் உள்ளப்படும் என்ற பிறவினை முதலின் வினையைக் கொண்டு முடிதற்கு விதியின்மையின் 'எய்தலான்' என்பது திரிந்து நின்றது
8. அதன் - வினைத்திட்பத்தின்

காளி. உரை ''வேந்தன்கண் வினைத்திட்பம் ஊறு எய்தின் வீறுஎய்தி மாண்டார் உள்ளப் படும்'' என்று கொண்டுகூட்டிக் காணநிற்பது. 'ஊறு எய்தின்' என்பது இவர் கண்டபாடம். 'வேந்தன் கோலிக்கொண்ட வினை' என்ற இவரது உரை 'வேந்தன் கண்(ணிய) வினையினது திட்பம்' எனக்'கண்' வினைத் திட்பத்தை வினைத் தொகையாகக் கொண்டிருப்பர் என எண்ண இடந்தருகிறது. இதனால் கொண்டு கூட்டு வலிந்ததாகாதாயினும் 'நினைக்கப்படும்' (169) ''கூறப்படும்'' (185) என்பனபோன்று உள்ளப்படும் என்பதைப் பிரித்துப் பொருள் கோடல் அத்துணைச் சிறப்பினதன்று என்ற சாரங்கபாணியார் எழுத்து நல முடையது.

வீறு எய்துதலை மாண்டாரானமைக்கு ஏதுவாக்காது 'வீறு எய்துதல் எண்ணத்தின் விளைவு' என்றும் 'மாண்டாராதல் பிற இலக்கணங்களால்' என்றும் பிரித்தெண்ணுகிற பரிமேலழகர் உரை மிகுந்த நயந்தருவது. 'ஊறு எய்தல்' - அடைதல்-சி.இ.; குழந்தை, சபாபதி கருத்துக்களும் இதனை ஒட்டியதே.

தேவநேயர் 'வீறு எய்தி மாண்டார்-சூழ்வினையால் மேம் பட்டவர். அமைச்சனது வினைத்திட்பம்-பயன் தரும்போது அப் பயன் பொன்னாகப் புகழாக அரசனையே அடையும்' என்று கருதுகிறார். அதிலும் அவருரை வினைசெய்தற்கட் படும் உழைப் பும் துன்பமும் பகையும் அமைச்சர் மாட்டாகப் பொருளும் புகழும் மட்டும் அரசனைச் சார்வன என்ற நயமும் அறியக் கிடத்தல் காண்க. வரத. 'வீரத்தாற் சிறந்த பெரியோர்களின் செயல்திறம்' என அமைச்சை மட்டும் கருதாமற் பொதுமையின் உரைப்பர். 'வேந்தன்கண்-அரசனது கண் முன்னே ஊறு எய்தி உள்ளப்படும் (அவன் மனத்திலே) ஊறிஊறி எண்ணப்படவேண்டும்' என உரை கண்டு, 'அரசன் முன்னோரது வாழ்வியற் போக்கையும் லட்சி யங்களையும் விடாது எண்ணி அங்ஙனம் தானும் வாழ முயற்சிக்க வேண்டும்' என்பர். இப்பொருணோக்கில் இக்குறள் இவ்வியலில் இடம் பெறத்தக்கதறாகாலம். 'பெரியோரைத் துணைக்கோட லில்' அமையலாம் என்றாய்விடும். இயையுமேற்கொள்ளுக.

கா. சு. 'வேந்தன்கண் ஊறுஎய்தி-மன்னன் மனத்திற்கு உவப்பாகப் பொருந்தினன். 'ஊறு. உவப்பு' எனப் பொருள்

காண்பர். துன்பமும் இன்பமும் 'ஊறு' என்பதற்குப் பொருளா கலாம் ஆதலின் உவப்பென்றனர் போலும்.

மு. கோ. உள்ளப்படும்-அரசியல் வரலாற்றில் போதிக்கப் பெறும்; ஏனாதி,காவிதி முதலான பட்டங்களான் உள்ளப்படும் எழுபிறப்பும் உள்ளப்படும் என்றெல்லாம் எழுதுவர். இயையு —மேற்கொள்ளலாம். சாமி-சிதம்., 'வீறு-வெற்றி' என்பர். 'பெரு மிதம்' என்பர் வ. சுப. மா.

இராம. 'வேந்தன்கண் ஊறு எய்தி, வீறு எய்தி, மாண் டார் வினைத்திட்பம் உள்ளப்படும்' எனக்கூட்டி, 'வேந்தன் துன் புறுத்தினாலும் பொறுத்து எதிர்த்துநின்று வென்று புகழ் பெற் றாருடைய மனவலி போற்றத்தக்கது' என உரை காண்பர். இது அரசியல் அனுபவங்கொண்டு கண்டவுரை.

இவற்றுள், பரிமேலழகர் உரையும் விளக்கமும் எல்லா வகையானும் முன்னிற்கின்றன.

67.6. *எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்*
*திண்ணிய ராகப் பெறின்.* (666)

**உரைப்பகுதி :**

அ) மணக்.: தாம் எண்ணிய பொருள்களை எண்ணியபடியே பெறுவர்; அவ்வாறு எண்ணினவர் அவ்வினையைச் செய்து முடிக்குந் திண்மையுடையாராகப் பெறுவாராயின் எ—று.

இது வினையின்கண் திண்மை வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: எண்ணிய எண்ணம்போலே காரியம் எடுத்துக் கொள்ளுகிறபோதே, திடம் பெற விசாரித்துச் செய்ம்மின் எ—று.

இ) பரிப்.: ...........

ஈ) காளி.: இவ்வாறும் அன்றி மற்று இவ்வினையை இவ் வாறு செய்து முடிப்போம் என்று எண்ணியார், அதற்கு ஏற்பத் தாமும் திண்ணியர் ஆகப் பெறின், அவ்வினையானது மேல் வினையதாகத் தாம் கருதிய பயன் யாது? அதனை மற்று அக் கருதியாங்குப் பெறுவார்கள் எ—று.

உ) பரிமேல்.: தாம் எய்த எண்ணிய பொருள்களெல்லாவற்றையும் அவ்வெண்ணியவாறே எய்துவர். எண்ணியவர் அவற்றிற்கு வாயிலாகிய[1]வினைக்கண் திண்மையுடையராகப் பெறின்.

எளிதின் எய்துப என்பார், எண்ணியாங்கு எய்துப என்றார். அவர்[2]அவ்வாறல்லது எண்ணாமையின் திண்ணியராகவே வினைமுடியும்; அது முடிய அவையாவையும்[3]கைகூடும் என்பது கருத்து. இதனால் அஃதுடையர்[4]எய்தும் பயன் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: தாம் நினைத்தபடியே எல்லாக்காரியத்தையும் செய்து முடித்து அந்தப் பலத்தை அடைவர், நினைத்தவர் கெட்டி மனசை உடையரானால் எ—று.

எ) பழைய 2: தானெய்த வெண்ணிய பொருள் எல்லாம் எண்ணியவாறே எய்துவார், தாம் எண்ணிய வினையிடத்துத் திண்மையராகப் பெறின்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பழைய ஆசிரியர்களின் கருத்தும் பொருளும் ஒத்துள்ளன. வரத.'எண்ணியார்திண்ணியராகப்பெறின்எண்ணியவர்கள் மனத்திலே செயலைப்பற்றியே இடைவிடாது சிந்திக்கும் ஆற்றலைப் பெற்றால்' என்பர். திண்ணியராதல்-ஊறுகள் பல நேரினும் அஞ்சாது அவற்றைவிலக்கும் மனவுறுதியும், செயற்றிறமும் படைத்தாராதல் என்பதே கருத்தாக அனைவரும் கொண்டனர். இவர் செயலையே சிந்திக்க வேண்டும் என்பது அந்தப் பொருணிறைவைத் தருமானால் தக்கது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

எண்ணிய எண்ணியாங் கெய்துப ;

எண்ணிய எண்ணியாங்கே யான்பெற முடித்தாய் போற்றி.
— திருவிளை, விடையிலச். 15

---

1. வாயிலாகிய—காரணமான 2, அவர்—எண்ணியவர்
3. அவை யாவையும்—தான் அடைய எண்ணிய பொருள் எல்லாம்
4. அஃது —வினைத்திட்பம்

முற்றும் :

இனியாரும் இல்லாதார் எம்மிற் பிறர்யார்
தனியேம்யாம் என்றொருவர் தாமடியல் வேண்டா
முனிவில ராகி முயல்க முனிவில்லார்
முன்னிய தெய்தாமை இல். —பழ நா. 154

ஓ) மேற்கோள்பகுதி :

சிவஞான. : 'நாடிய பொருள் கைகூடின் மகிழ்ச்சி மேன் மேலுண்டாம் ஆகலின்' அவ்வாறு மகிழ்ச்சி உண்டாகும்படிநாடிய பொருளே எளிதில் கிடைக்கும் என்பார் நாடியபொருள் கைகூடும் என்றார். 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப' என்பதும் இக்கருத்தே பற்றி வந்தது.' —கம்ப. விருத்தி. பக். 9

''அறிந்தாங்கு-மறந்து மறந்து அறியாது அறிந்தவாறே திரிபின்றி அறிந்து. அறிந்தாங்கு என்பது அப்பொருட்டாதலை எண்ணிய...பெறின்' என்பதனானும் அறிக.''
—சிவஞான. சூ. 3.அதி.,6

67.7. உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்
தேர்க் (கு)
அச்சாணி அன்னா ருடைத்து. (667)

உரைப்பகுதி :

அ) மணக். : யாவரையும் வடிவுகண்டு இகழ்தலைத் தவிர்தல் வேண்டும்; உருளாநின்ற பெரியதேர்க்குக் காலாய் நடக்கின்ற உருளையைக் கழலாமல் தாங்கும் அச்சின் புறத்துச் செருகின சிற்றாணியைப் போலத் திண்ணியாரை இவ்வுலகம் உடைத்து ஆதலால் எ—று.

ஆ) பரிதி. : விசாரவான் [1] பொல்லாதவனாயினும் இகழக்கடவான் அல்லன்: அவன் தேர்க்கு அச்சாணி போலே இருப்பான் உண்டு ஆகையால் அவரவர் விசாரத்தால் [2] கொள்க எ—று.

1. விசாரவான் — ஆய்வறிவுடையவன் 2. விசாரத்தால் — ஆய்வால்

இ) பரிப்.: யாவரையும் வடிவு கண்டு இகழ்தலைத் தவிர்தல் வேண்டும்; உருளா நின்ற பெரிய தேர்க்குக் காலாய் நின்ற உருளைகளைக் கழலாமல் தாங்குகின்ற சிற்றாணியைப் போலத் திண்ணியாரை இவ்வுலகம் உளது ஆகலான் எ—று.

திண்ணியாரை அறியும் ஆறு என்னை என்றார்க்கு வடிவு கண்டு அறியல் ஆகாது என்பதூஉம் கூறிற்று.

ஈ) காளி.: தாம் கருதிய வினையைக் கைக்கொண்டு முடிவு செய்தற்கு உரிய கட்டாண்மையுடையோர் வேண்டுதலான், அவரை உருவினை நோக்கி இகழாது கைக்கொள்ளவேண்டும்: என்னை எனின், ஓடுகின்ற பெரிய தேர்க்கு அச்சாணிபோலும் திட்பம் உடையாரையும் உடைத்து இவ்வுலகம் எ—று.

உ) பரிமேல்.: உருளாநின்ற பெரிய தேர்க்கு அச்சின்கண் ஆணிபோல வினைக்கண் திண்ணியாரை உடைத்து உலகம்: அதனால் அவரை[3] வடிவின் சிறுமைநோக்கி இகழ்தலை ஒழிக.

சிறுமை[4] 'எள்ளாமை வேண்டும்' என்பதனானும், உவமையானும் பெற்றாம். அச்சு-உருள்[5]கோத்த மரம். ஆணி - உருள் கழலாது அதன் கடைக்கண் செருகுமது. அது[6]வடிவால் சிறிதாயிருந்தே பெரிய பாரத்தைக் கொண்டுய்க்கும் திட்பம் உடைத்து; அதுபோல, வடிவால் சிறியராயிருந்தே பெரிய வினைகளைக் கொண்டுய்க்கும் திட்பம் உடைய அமைச்சரும் உளர், அவரை[7] அத்திட்பநோக்கி அறிந்து கொள்க என்பதாம். இதனால் அவரை[8] அறியுமாறு கூறப்பட்டது.

காரி.: எள்ளாமை-இகழ்தலை ஒழிக என் மையீறு "அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும்"[9] என்பது போல வியங்கோளானது காண்க. ஈண்டும் வேண்டும் என்பது ஒரு

---

3. அவரை - அச்சாணி போன்றவரை
4. சிறுமை - உருவத்தின் சிறுமை
5. உருள் — சக்கரம்
6. அது — ஆணி
7. அவரை — அவ்வமைச்சரை
8. அவரை — வினைத்திட்பமுடைய மந்திரிகளை
9. குறள் 511

சொல்நீர்மைத்து எனல், ஓதல், கொளல் அல்லீறு தொழிற் பெயராயும் வியங்கோளாயும் வருதல்போல, மையீறும் அவ்வாறு வரும் என்க.

ஊ) கவிராசர்: ஓடுகிற பெரிய தேருக்குக் கடையாணிபோலக் காரியத்திலே சமர்த்தனானவன் உருவு கொஞ்சமாயிருந்தாலும், அவனுருவைக்கண்டு இகழவேண்டாம் எ—று.

ஏ) பழைய 2: உருள்கின்ற பெரிய தேர்க்கு அச்சின்கண் ஆணிபோல் வினைக்கண் திண்ணியாரையுடைத்து உலகம்; அதனால் வடிவின் சிறுமை நோக்கியிகழ்தலையொழிக.

மல்லர் : என்பது உருளத்தக்க பெருந்தேருடைய அச்சாணிக் குச் சரியான மனுஷரை லோகம் உடைத்ததினால் ஒருவனுடைய ரூபத்தைக் கண்ட அப்போவே அவனைக் கொஞ்சமாய் எண்ண லாகாது என்றவாறு.

தேர்அச்சுக் கோர்த்திருக்கிற ஆணி சின்னதாய் இருந் தாலுந் தேரினுடைய பாரமெல்லாந் தாங்கி யதை உருளப் பண் ணும். அப்படிப் போல மந்திரிக்குத் தோற்றத்தாலும் செல்வங் களாலுமாகிற பெருமை கொஞ்சமாயிருந்தாலும் அவன் சீர்மைப் பாரம் எல்லாந் தாங்கி அரசனுக்கு ராசாங்கம் நடக்கப் பண்ணு கிறதினால் அவனைக் கொஞ்சமாய் எண்ணலாகாது என்பது கருத்து.

உருபு - ரூபம், எள்ளுதல் - நிந்திதல், வேண்டும் - வேணும் அச்சாணி-அச்சிலே கோர்த்திருக்கும் ஆணி, அன்னார்-உவமை- உடைத்தவர்கள், உடைத்த-உடைத்தது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அவன் தேர்க்கு அச்சாணிபோலே இருப்பான் உண்டு' என்ற பரிதியுரை நடை செறிவின்றி யிருப்பினும் உண்டென்பது ஐம்பால் மூவிடம் பொதுவினையாதலின் இங்ஙனம் எழுதினர் என மனஅமைதி கொள்ளுதல் கூடும். ஆயினும் பொருட்சிறப் பின்று. இராம. 'உருளுகின்ற இவ்வுலகத்தின் அறவாழ்வாகிய

தேர் கவிழ்ந்து போகாமல் காக்கக்கூடிய மகாத்மாக்கள் இந்த உலகத்தில் உண்டு. அவர்களை இகழலாகாது' எனக்கருத்துக் கொணருவர். இது இக்குறளைப் பெரியாரைப் பிழையாமைக்கு ஏற்றதாக்குகிறது.

இக்குறட்பாவும் கருத்து மாற்றமில்லாதவற்றுள் ஒன்று. இலக்கண வரம்பு கடவாது செல்லும் பரிமேல். உரைப்போக்கு எல்லாவகையானும் ஏற்புடையதாகும்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் :

மாணியாம் படிவமன்று மற்றிவன் வடிவம் மைந்த
ஆணியிவ்வுலகுக் கெல்லாம் என்னலாம் ஆற்றற் கேற்ற
சேணுயர் பெருமை தன்னைச் சிக்கறத் தெளிந்தேன் பின்னர்க்
காணுதி மெய்ம்மை யென்னுதம்பிக்குக் கழறிக் கண்ணன்.

— கம்ப., 3871

சிறியரென் றிகழ்ந்து நோவு செய்வன செய்யல் — கம்ப., 4230

சிறுமை கண்டவர் பெருமை கண்டல்லது தேறார்

... — கம்ப ,6731

பலகற்றோம் யாமென்று தற்புகழ்தல் வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்
சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்கு
அச்சாணி அன்னதோர் சொல். — அறநெறிச்., 79

மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல் சிறியர் என்றிருக்க வேண்டா - கடல்பெரிது
மண்ணீரும் ஆகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும். — வாக்கு., 12

உடலின் சிறுமைகண்டு ஒண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார் - மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணும் கதிரொளிதான்
விண்ணளவா யிற்றோ விளம்பு. — நன்னெறி., 26

மருவிநின் றவரின் மருள னேயென
விரைவிலிங் ககலகல் எனவி லக்கினார்

ஒருவரும் கண்டிறை உருஉணர்ந்திலர்
உருவுகண் டெள்ளுநர் உணர வல்லரோ. —பிரபு. சூனிய., 39

**அச்சாணி அன்னார் உடைத்து:**

துச்சாத னாஇம் மொழிசென்று கங்கை சுதனுக் குரைக்க எனவே
நச்சாட ராவை யணையானும் அங்கொர் நொடியுற்று போழ்தின் நடவா
எச்சாப மன்னு மணியூக மான இரதந் தனக்கு நடுவோர்
அச்சாணியான அவனுக் கிவன்சொல் அடைவே புகன்றனனரோ.
—வில்லி. 9ம் போர் ,6

அச்சில்லாமல் தேர் ஓடுமா? —பழ.,

அச்சாணி யில்லாத்தேர் முச்சாணும் ஓடாது —பழ.,

மலையைத் துளைக்க சிறு உளி போதாதா? —பழ.,

மலைபோலிருக்கிற தேரும் சிறு சுள்ளாணியால்
நிலைபெறும். —பழ.,

அச்சில்லாத தேர் ஓடவும், ஆம்புடையான் இல்லாதவள்
பிள்ளைபெறவும் கூடுமா? —பழ.,

**முற்றும் :**

தேறுகா ரியத்தை முடிப்புழி யன்றிச் செயன்மொழி யாதியால் இடையே
வேறுபோ மாறு விளக்குறார் துணிந்த வினைதுளங் காதுவல் விரைவார்
வீறுசேர் இவரை உருவுகண் டெள்ளா வேந்தனே வேந்தனாம் மைந்தா.
—விநா. அரசி., 108

**ஒருபுடை :**

பன்னும் பனுவல் பயன்தேர் அறிவிலார்
மன்னும் அறங்கள் வலியிலவே - நன்னுதால்
காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
தாழொன் றிலதாயிற் றான். —நன்னெறி., 32

சிற்றுளியால் கல்லும் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கடத்தி னால். —நீதிநெறி., 14

ஒ) மேற்கோள்பகுதி :

பேரா. ; வாளாதே உவமஞ்செய்து உற்றது உணர்த்தாத வழித்தெளியுமாறு; உருவு......உடைத்து' என்பதனுள் அவர்செய்கை கூறாராயினும் அச்சாணி என்று உவமப்பொருள்தானே அச்செய்கை வன்மை கூறிற்று. -தொல். பொருள்., 205

பெருந். : 'இது இழிந்த உவமையின் உயர்ந்ததனைப் புகழ்ந்தமையால் இழிவு வுயர்ப்புப் புகழ்ச்சியுவமையாயிற்று என்பர்.
-வீர., 159

யா வி. : பலவிகற்பக்குறள் வெண்பாவிற்கு மேற்கோள்
-சூ., 59

67.8. கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல். (668)

உரைப்பகுதி :

அ) மணக். : கலக்கமின்றி ஆராய்ந்து கண்ட வினையிடத்துப் பின்னைத் துளக்கமன்றி,[1] அதனை நீட்டியாது செய்க எ-று.

இது விரைந்து செய்ய வேண்டும் என்றது.

ஆ) பரிதி. : திடபுத்தியாகிற காரியம், அழியுமாப்போலே வந்தாலும் கலங்காமல் விரையும் கருமம் தூங்காமல் செய்வான் எ-று.

இ) பரிப். : கலக்கம் இன்றி ஆராய்ந்து கண்ட வினை இடத்துப் பின்னைத் துளக்கம் இன்றி அதனை நீட்டி யாது செய்க எ-று.

இது விரைந்து செய்ய வேண்டும் என்றது.

ஈ) காளி. : யாதானும் ஒருவினையும் அதன் தூய்மையும் கலங்காமல் ஆராய்ந்து, தெளியக்கண்ட வினையினிடத்துப் பின்னை இதனைச் செய்வோம்கொல் என்று அசைவது செய்யாது, காலத்தாழ்வினையும் கடிந்து[2] கடிதின் செய்க எ-று.

1. துளக்கமின்றி - நடுக்கமின்றி 2. கடிந்து - விலக்கி

உ) பரிமேல். : மனந்தெளிந்து செய்வதாகத் துணிந்த வினையின்கண் பின் அசைதலின்றி[3] நீட்டித்தலை ஒழிந்து செய்க.

கலங்கியவழி ஒழிவது செய்வதுபோலத்தோன்றும் ஆகலின், தெளிந்து பலகால் ஆராய்ந்து தாம் செய்வதாக ஓர்ந்தவினையைக் 'கலங்காது கண்டவினை' என்றார். துளங்காமை - திட்பமுடைமை.

ஊ) கவிராசர் : மனசு தெளிந்து செய்யவேணும் என்று நினைத்த காரியத்தை ஆலஸ்யம்[4] பண்ணாமல் செய்யவேணும் எ-று.

ஏ) பழைய 2 : மனந்தெளிந்து செய்வதான வினையின்கண் கலங்காது, மனஞ்சலியாது, காலம் நீட்டியாது, உடனே செய்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

வரத. 'கண்டவினைக்கண் கலங்காது துளங்காது தூக்கங் கடிந்து செயல்' எனக்கூட்டிப் பொருள் கொள்வர். தொல்லாசிரியர்கள் 'கலங்காது' என்பதனைக் 'கண்ட வினை' என்தனோடு இயைத்துப் பொருள் கொள்வர். இங்ஙனம் கோடலே சிறப்பு.

67.9. *துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி*
*இன்பம் பயக்கும் வினை.* (669)

உரைப்பகுதி :

அ) மணக்.: முற்பாடு துன்பம் உறவரினும், துணிந்து செய்க; பிற்பாடு இன்பம் பயக்கும் வினையை எ—று.

ஆ) பரிதி.: துன்பம் மென்மேலே வந்தாலும் அதைப் பாராமல் இன்பமாக விசாரித்து அந்தக் காரியத்தைச் செய்வான் அதன்பின்னே இன்பம் தரும் காரியத்தை எ—று.

இ) பரிப்.: முற்பாடு துன்பம் மிக வரினும் துணிந்து செய்க பிற்பாடு இன்பம் பயக்கும் வினையை எ—று.

3. அசைதலின்றி - சோம்பின்றி
4. ஆலஸ்யம் - சோம்பல்

இனி உற்ற பின் ஒல்காமையின் பகுதி கூறுவார். முற்படத் துன்பம் உற வரினும் துணிந்து செய்க பிற்பாடு இன்பம் பயக்கும் வினையை என்றார்.

ஈ) காளி.: வினைத்திட்பம் என்பது இத்துணை அருமை உடைத்து ஆகலான், அவ்விடுக்கண் மிகவரினும் அதற்கு அழியாது[1] நின்று, நெஞ்சில் துணிவுடைமையை நடாத்தி, மேல் இன்பம் விளைவிப்பதாகத் தாம் எடுத்துகொண்ட வினைகளையே செய்து முடிக்க எ—று.

உ) பரிமேல்.: முதற்கண் மெய்ம்முயற்சியால் தமக்குத்துனபம் மிக வருமாயினும், அது நோக்கித் தளராது முடிவின்கண் இன்பம் பயக்கும் வினையைத் திட்பமுடையராய்ச் செய்க.

துணிவு—கலங்காமை. அஃது உடையார்க்கல்லது கணிகமாய[2] முயற்சித் துன்ப[3] நோக்காது நிலையுதலுடைய பரிணாமவின்பத்தை நோக்கிச் செய்தல் கூடாமையின் துணிவாற்றிச் செய்க என்றார். இவை இரண்டு பாட்டானும் அவர்[4] வினை செய்யுமாறு கூறப்பட்டது.

காரி.: கணிகமாய முயற்சி—நொடிப்பொழுதில் அழியும் முயற்சி. பரிணாம இன்பம்—ஒன்றொன்றாய்ப் பரிணமித்து நெடுங்காலம் நிற்பது.

ஊ) கவிராசர்: காரியஞ்செய்கையிலே உடம்புவருத்தத்திலே துக்கம் வெகுவாய் வந்தாலும் அதனைப்பொறுத்துச் செய்ய வேணும்: பிறகு சுகத்தையும் நன்மையையும் கொடுக்கிறகாரியமானால் எ—று.

---

1. அழியர்து - துன்புறர்து
2, கணிகம் - சணிகம் என்பதன் திரிபாகிய வடமொழி
3, முயற்சித் துன்பம் - முயற்சியால் வரும் துன்பம்
4. அவர் - வினைத்திட்பமுடைய மந்திரிகள்

ஏ) பழைய : 'பயக்கு மெனின்' பாடம்.

முந்தி உடம்பு வருத்தமுற வரினும் அது நோக்கித் தளராது துணிந்து செய்க, பின்பு இன்பந் தரும் வினையை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'உற'

'மிகுதியாகமேன்மேலே' பரிதி, வ.சுப.மா., சாமி.-சிதம்., சபாபதி முதலான அனைவரும். 'துன்பமுற வரினும்—மெய்ம்முறற்சியால் துன்பம் வரினும்' என்டர் பரிமேல்' கவிராசர், பழைய.

இராம. 'துன்பப்பட நேர்ந்தாலும் பின்வாங்காமல் (பலருக்கு) இன்பந் தரும் வினையைத் துணிந்து செய்க' என்பர். இவ்வுரை முன்பு வரும் துண்பங்கண்டு அஞ்சற்க; அது முடிவில் இன்பம் பயக்கும் எனக் காரண காரிய நடையில் கூறுகின்றாராதலின் துன்ப இன்பங்களில் துன்பத்தைத் தனக்கும் இன்பத்தைப் பிறர்க்கும் கூறுகின்றார் என உரை வேற்றுமையாசிரியர் கருதுவர். இவ்வுரை அமைப்புப் பின் வரும் இன்பத்தில் குடிகளில் ஒருவனாகிய தனக்கில்லை என்பதை மறுப்பது மன்று. செயலாற்றும் பதவியில் இருக்குந்தான் செயல்முடியத் துன்பம் வரினும் தாங்கிச் செயலாற்றிச் செயற்பயனை உடனிருந்து நுகரவேண்டும் என்பதையே குறிப்பதாக எண்ணத் தோன்றுகிறது. சிந்திக்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

துன்பம் உறவரினும் செய்க:

பகையுடை யரக்க ரென்றும் பலரென்றும் பயிலு மாயம்
மிகையுடைத் தென்றும் பூண்ட விரதத்தை விடுது மென்றால்
நகையுடைத் தாடு மன்றே ......... ......... —கம்ப ,3399

67.10. *எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்*
*வேண்டாரை வேண்டா துலகு.* (670)

உரைப்பகுதி :

அ) மணக்.: கருவி முதலான எல்லாவற்றானும் திண்மை

பெற்ற விடத்தும், வினையினது திண்மையை விரும்பாதாரை உலகத்தார் விரும்பார் எ—று.

பலபொருளும் அமைதியும் உடையார்க்கு வினைத்திட்பம் இன்றானால் வருங்குற்றம் என்னை என்றார்க்கு, இது கூறப் பட்டது.

ஆ) பரிதி.: செல்வம் கல்வி உறவு இந்தத்திடம் பெற்றாலும் வினைத்திடம் இல்லாதாரை உலகம் வேண்டாது எ—று.

இ) பரிப் : கருவி முதலான எல்லாவாற்றானும் திண்மை பெற்ற இடத்தும் வினையினது திண்மையை விரும்பாதாரை உலகத்தார் விரும்பார் எ—று.

பல பொருளும் மிகுதி உடையார்க்கு வினைத்திட்பம் இன்று ஆனால் வரும் குற்றம் என்னை என்றார்க்கு இது கூறப்பட்டது.

ஈ) காளி : மற்று எனைத்து வகைப்பட்ட திண்ணிமையும் அரசர்க்கு எய்திய இடத்தும், அமைச்சர் துணிந்து உரைக்கும் வினையின் திண்ணிமையை விரும்பிக் கொள்ளாராயின், அவர் களை விரும்பார் உயர்ந்ததோர் எ—று.

உ) பரிமேல் : வினைத்திட்பத்தை இது நமக்குச் சிறந்தது என்று கொள்ளாத அமைச்சரை, ஒழிந்த திட்பங்களெல்லாம்[1] உடையராயவிடத்தும், நன்குமதியார் உயர்ந்தோர்.

மனத்தின்கண் திட்பமில்லாதார்க்குப் படை, அரண், நட்பு முதலியவற்றின் திட்பங்களெல்லாம் உளவாயினும், வினை முடியாதாம்: ஆகவே, அவையெல்லாங் கெடும் என்பதுபற்றி உலகுவேண்டாது என்றார் இதனால் வினைத்திட்பம் இல்லா தாரது இழிவு கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: காரிய ஆலோசனையிலே தெரிந்து பண்ணு கிறகெட்டி மனசை 'இது நமக்கு நல்லது' என்று கொள்ளாதவர்

1. ஒழிந்த திட்பங்கள் எல்லாம் - படை, அரண், முதலியவற்றின் வலிமை

களை, மற்றைக் கெட்டியெல்லாம் உண்டாயிருந்தாலும், பெரியோர் எண்ணார். எ—று.

ஏ) பழைய: வினைத்திட்பம் இது நமக்குச் சிறப்பு என்று கொள்ளாத அமைச்சரை, மற்ற திட்பங்கள் எல்லாம் உடையராயினும் நன்கு மதியாது உலகம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

காளிங்கர் உரை 'எனைத்திட்பம் வேண்டாத அரசரை உலகம் வேண்டாது' என்கிறது. பரிமேலழகர் அவர் வழிவரும் பின்னோர் உரைகள் 'வினைத்திட்பம் வேண்டாத அமைச்சரை உலகம் வேண்டாது' என்கின்றன. கவிராசர் உரைப்போக்கு அமைச்சரது செயல்திட்பத்தை வேண்டாத அரசரையே சுட்டுவது போன்றுள்ளது. ஏனைய உரைகள் பொதுமையிற் செல்கின்றன. பிற்கால உரைகளில் அழகரடி யொற்றிக் கவிராசர், பழைய, சபாபதி உரைகள் செல்கின்றன.

வினைத்திட்பம் அரசற்கும் அமைச்சர்க்கும் இன்றியமையாத குணங்கள் சிறப்பாகச் செயற்படும் அமைச்சனுக்குச் சிறந்ததாகும். திட்பமாக அரசற்கும் கூறித் தானும் செயற்படவேண்டியவன். அங்ஙனமாகப் பரிமேலழகர் வேண்டார் — அரசர் என்றது ஏன்? என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

பரிமேலழகர் சிந்தனையை எனைத்திட்பம் எய்தியக் கண்ணும்' என்ற தொடர் மாற்றியுள்ளது. ஏனைய படை, துணை பொருள்,அரண்,குடி முதலியவற்றின் திட்பங்களை இயல்பாகவே உடையவன் அரசன். இத்துணைத் திட்பங்களை நோக்கி அரசன் அமைச்சன் கூறும் வினைத்திட்பத்தை வேண்டாமலும் இருக்கலாம்; அது கூடாது என வலியுறுப்பார் அரசரை என்றார்.

'படை முதலிய திட்பங்களை அமைச்சன் தாங்கும் பதவி காரணமாகத் தனக்கும் உரியதாக எண்ணலாம். வினைத்திட்பத்தை அவனும் வேண்டாதிருக்கலாம் என்று காளிங்கர் கருதியிருக்கிறார். அதனாலே 'அமைச்சரை" என்றனர்.

இவ்விருதிறத்தாரினும் பொதுமையின் நிற்பார் சிறந்தவர் எனலாம்.

## 67. வினைத்திட்பம்

| | வினைத்திட்பம் | ஊறொரால் | கடைக்கொட்க | சொல்லுதல் | வீறெய்தி | எண்ணிய | உருவுகண்டு | கலங்காது | துன்பம் | எனைத்திட்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 3 | 4 | 8 | 5 | 10 | 1 | 9 | 6 | 7 | 2 |
| பரிதி. | 6 | 5 | 9 | 7 | 10 | 3 | 8 | 1 | 4 | 2 |
| பரிப். | 3 | 4 | 7 | 5 | 10 | 1 | 9 | 6 | 8 | 2 |
| காளி. | 4 | 6 | 3 | 5 | 10 | 9 | 8 | 1 | 7 | 2 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

67 வது அதிகாரம் 'வினைத்திட்பம்' முற்றிற்று.

# 68. வினை செயல்வகை[1]

அ) மணக். : வினைசெயல்வகையாவது வினைசெய்யுமாறு கூறுதல். மேல்வினை செய்யுங்கால் திண்ணியராக வேண்டும் என்று கூறினார்; திண்ணியார் வினைசெய்யும் வண்ணம் கூறு கின்றாராதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி. : செயல் வகையாவது காரியம் செய்யும் முறைமை எ—று.

இ) பரிப். : வினைசெயல் வகையாவது வினை செய்யும் ஆறு கூறுதல்: மேல்வினை செய்யுங்கால் திண்ணியர் ஆகவேண்டும் என்றார்: அவ்வாறு திண்ணியார் வினை செய்யும் வண்ணம் கூறுகின்றார் ஆகலான் அதன் பின் கூறப்பட்டது.

ஈ) பரிமேல். : அஃதாவது அத்திட்பமுடைய[2] அமைச்சன் அவ்வினையைச் செய்யுந்திறம்:அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

ஊ) கவிராசர் : அஃதாவது — மனசு திடமுடையவன் அக்காரியங்களைச் செய்கிற வகை என்பது.

ஏ) பழைய : அஃதாவது, திட்பமுடைய அமைச்சன் வினையைச் செய்யும் வகை.

---

1. செயல் என்னுந் தொழிற்பெயர், பெயரெச்சப்பொருளில் வந்தது (கோ,வ,)

2. அத்திட்பமுடைய - வினைசெய்தற்கண் வேண்டிய மனவுறுதி

மல்லர் : அதாவது சீர்மைக் காரியங்களை நடத்துகிற வகை அறிகிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பழைய உரையாசிரியர் அனைவரும் 'வினைத்திட்ப முடையான் அமைச்சன். அவன் வினைசெய்யும் வண்ணம் கூறுவதிவ்வதிகாரம்' என்பர். மணக்., பரிப்., பரிதி., கவிராசர் நால்வரும் 'திட்பமுடையவர்' எனப் பொதுமையிற் கூறுவர்.

பிற்கால உரையாசிரியர்களில் தேவநேயர், மு.ரா.அரு. முதலானோர் 'அமைச்சன் செய்யும்வகை' என்றே கூறுவர். இராம. 'எந்தக் காரியத்தை எப்படிச் செய்யவேண்டும் என்ற தராதரம் அறிந்து சமயோசிதமாகச் செய்வது இது எல்லாருக்கும் பொது' என்பர். வரத 'வினைசெய் வகைகளாவன: அமைச்சன் தானே செய்வது, அரசன் செய்வது போலச் செய்வது, தன்னையும் அரசனையும் ஒத்த ஒருவனைக் கொண்டு செய்வது எனப் பலவாம் செயல்வகை தொழிலைச் செய்து கொள்ளும்முறை எனவும் செய்யவேண்டிய பகுதிகள் எனவும் பொருள்' என்பர். கா சு. 'மனத்திட்பமுடையார் செயல்களைச் செய்யுந்திறம்' என்பர் 'வினைகளைச் செய்யும் வகை, காரியத்தை வெற்றியுடன் செய்யும் விதம்' என்பர் ஏனையோர். எங்ஙனமாயினும் திண்ணியராகிய குடிகளும் மன்னனும்மந்திரியும் வினைகளைச் செய்யும் திறம் என்பது பொருளாகிறது.

அரசனும் அமைச்சனும் அரசுக்கு அங்கமாதலின் பொது வகையாற்கூறும் உரைகளே சிறந்தவை.

68.1. சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது. (671)

உரைப்பகுதி :

அ) மணக்.: சூழ்ச்சிக்கு எல்லை துணிவுபெறுதல்; அவ்வாறு துணிந்தவினை நீட்டித்தலின் கண்ணே கிடக்குமாயின், அது தீதாம் எ—று.

இது வினைசெயத் துணிந்தகாலத்து நீட்டிக்குமாயின், அதனை அறிந்து பகைவர் தம்மைக் காப்பார்; ஆதலால், நீட்டியாது விரைந்து வினை செய்யவேண்டும் என்றது.

ஆ) பரிதி .: சூழ்ச்சி முடிவு எடுத்துக்கொண்ட காரியம் முடியுமட்டும் ஒரு தன்மையாகக் காரியம் எடுத்து முடிப்பானாக எ-று.

இ) பரிப் .: சூழ்ச்சிக்கு எல்லை துணிவு பெறுதல்; அவ்வாறு துணிந்த வினை தாழ்ச்சியின் கண்ணே கிடக்குமாயின் அது தீது ஆம் எ—று.

இது வினைசெயத் துணிந்த காலத்து நீட்டிக்கும் ஆயின் அதனை அறிந்து பகைவர் தம்மைக் காப்பர்: ஆதலால் நீட்டியாது விரைந்து வினை செய்யவேண்டும் என்றது.

ஈ) காளி .: இவ்வாறு இவ்வனைத்துக் குறையும் தீரத் தேர்ந்து கொண்ட தேர்ச்சியினது சமைவின்கண்[1] தாம் கருதிய வினை செய்யத் துணியும் துணிவு எய்துதல், அங்ஙனம் துணிந்த இடத்து மற்று அத்துணிவு பின்பு காலத்தாழ்வின்கண் படுதல் குற்றம் எ—று.

உ) பரிமேல் .: விசாரத்திற்கு எல்லையாவது விசாரிக்கின்றான் இனி இது தப்பாது என்னும் துணிவினைப் பெறுதல்; அங்ஙனம் துணிவு பெற்ற வினை பின் நீட்டிப்பின்கண்[2] தங்குமாயின், அது குற்றமுடைத்து.

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் எனவே, துணிவெய்துமளவும் சூழவேண்டும் என்பது பெற்றாம். பின்னர்த் 'துணிவு' ஆகுபெயர்[3]. நீட்டிப்பு — செய்யுங்காலத்துச் செய்யாமை. அஃது உள்வழிக் காலக்கழிவாகலானும்[4] பகைவர் அறிந்து அழித்தலானும் முடியாமையின் அதனைத் 'தீது' என்றார்.

---

1. சமைவின்க்ண் — அமைதியின்கண் 2. நீட்டிப்பின்கண் — தாமதம் (காலம்)
3. அத்துணிவு என்பதில் உள்ள 'துணிவு' என்பது துணிவு பெற்ற வினையை உணர்த்துதலின் ஆகுபெயராயிற்று
4. காலக்கழிவாகலானும் — காலத்தின் போக்கானும்

ஊ) கவிராசர் . : ஆலோசனைக்கு வேண்டிய வகையெல்லாம விசாரித்து ஆலோசனை பண்ணி, இதற்குத் தப்பில்லை என்று நிச்சயித்துத் துணிந்தபிறகு, அந்தக் காரியத்தைச் செய்யாமல் ஆலஸ்யம்[5] பண்ணுகிறது பொல்லாது எ—று.

ஏ) பழைய : 'முடிவுதுணி செய்தல்' பாடம்.

ஒரு வினை செய்தற்குச் சூழ்ச்சியாக விசாரிப்பதெல்லாம் விசாரித்து முடிதல், பின்பு அது தப்பாது செயலாமென்னுந் துணிவு, துணிவு பெற்ற வினையின்பின் நீட்டிப்பின்கண் தங்குமாயின் அது குற்றமுடைத்து.

ஐ) **தொகுப்பும் குறிப்பும் :**

தேவநேயர் 'சூழ்ச்சி எதிர்ப்பும் தற்காப்பும் பற்றியதாயின் இங்ஙனம் செய்யவேண்டும் என ஆராய்வதாலும்; தற்காப்புப் பற்றியதாயின் செய்வதா? விடுவதா என ஆராய்தலும் செய்வதாயின் எங்ஙனம் செய்வது எனஆய்தலும ஆம்' என்பர்.

வரத.: 'சூழ்ச்சி—தானே ஆய்வதும், தன் நண்பர்களோடு ஆய்வதும், பின்பு வினைசெய்வானோடு ஆய்வதும் ஆம். முடிவு—செய்யும் செயல் நமக்கு நன்மை பயக்கும் ஆதலால் செய்ய வேண்டியதே என முடிவு செய்தல். துணிவு — இன்ன காலத்தில் இன்ன இடத்தில் செய்வது எனச் செயல் தொடங்கு நிலைக்கு வருதல்' என்பர். இவையனைத்தும் தெரிந்து செயல் வகை 461, ·62, 46· முதலிய குறள்களாற் கூறப் படுதலும், அவற்றோடு இவற்றிடைச் சில மாறி இருத்தலும் காண்க. சி.இ. 'சூழ்ச்சி—உற்றாருடன் கலந்து' என வினை எச்சமாகப் பொருள் காண்பவர் கலந்து. முடிவு செய்து. துணிவினைப் பெறுதல் என முடித்திருக்க வேண்டும். அங்ஙனம் இன்மை கருதத்தக்கது. மு.கோ. 'மனத்துணிவே கால மறிதல்; தாழ்ச்சி—மடியும் மறதியும்' என்பர். மடியும் மறதியும் ஆகிய இரண்டானும் விளைவனவே தாழ்ச்சி யாதலின் காரியத்தைக் காரணமாக உரை கண்டனர் போலும். குழந்தை 'சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் என ஒரு தொடராகக் கொண்டு ஆய்வினை முடிவு தெளிவான உறுதியைப் பெறுதல்' என்பர். இது மணக்குடவர் முதல் இலக்குவனார் வரை உரைப்போக்கை ஒட்டியது. வரத, தேவநேயர் இருவருமே 'சூழ்ச்சி, முடிவு, துணிவு' என மூன்றாக்கிப் பொருள் கூறுவர்.

சூழ்தலும் முடிவும் முன்னரே அரசியலிலும் வலியுறுத்தப்பட்ட வாதலின் ஒன்றாகக் கூறும் உரைகளே சிறந்தன. சூழ்ச்சி என்ற பண்புப் பெயரைச் சூழ்ந்து என வினை எச்சமாக்கல் மரபன்று.

ஒ) ஒப்புமைப்பகுதி :

துணிவு தாழ்ச்சியுள் தங்குதல்தீது

......... ......... ......... நொய்திற் செயவல்லீர். —கம்ப., 4818

வென்றியே யாக மற்றுத் தோற்றுயிர் விடுதலாக
வொன்றிலே நிற்றல் போலா முத்தமற் குரிய தொல்கிப்
பின்றுமே லவனுக் கன்றோ பழியொடு நரகம் பின்னை.

—கம்ப., 7433

தாமதம் தாழ்வுக்கு ஏது.

ஒ) மேற்கோள்பகுதி :

மயிலை .: துணிவு என்பது உடம்பொடு கூடிய உயிர்க்குணம் என்பதற்கு மேற்கோள் —நன்., 451

68.2. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. (672)

உரைப்பகுதி :

அ) மணக் .: தாழ்த்துச் செய்யவேண்டும் வினையைத் தாழ்த்துச் செய்க; தாழாமற் செய்யவேண்டும் வினையைத் தாழாமற் செய்க எ—று.

ஆ) பரிதி.: மெத்தென்ற காரியம் மெத்தெனவும் விரையும் காரியம் தூங்காமையும் செய்வான் எ—று.

இ) பரிப்.: தாழ்த்துச் செய்ய வேண்டும் வினையைத் தாழ்த்துச் செய்க: தாழாமல் செய்யும் வினையைத் தாழாமல் செய்க எ—று.

இஃது எய்தியது விலக்கிச் செய்யத் துணிந்தாலும் காலம் பார்த்துச் செய்ய வேண்டுவன தாழாது செய்க என்றது.

ஈ) காளி.: இப்படி ஆகலான் தொடங்கிய கருமமானது காலத் தாழ்வு படாது அதனை விரைவொடு செய்து முடிக்கவேண்டும். மற்று அக்காலத்தாழ்வு படவேண்டும் கருமப்பகுதி உளதேல் அவற்றிற்கு எற்றகாலம் வருமாறும் தாழ்க்க நின்று செய்க; எனவே இங்ஙனம் கடிதிற் செய்து முடித்த கருமம் எச்சக் குற்றம்[1] இல்லை; மற்றைக் காலம் பார்த்து நின்ற கருமமும் எச்சக் குற்றம் இற்லை எ—று.

உ) பரிமேல்.: நீட்டித்துச் செய்யும் பகுதி யவாய[2] வினைகளுள் நீட்டிக்க; நீட்டியாது செய்யும் வினைகளுள் நீட்டியாதொழிக.

இருவழியும்[3] இறுதிக்கண் தொக்க ஏழாவது விரிக்கப்பட்டது இருவகை வினைகளும்[4] வலியானும் காலத்தானும் அறியப்படும். மாறிச் செய்யின்[5] அவை வாயா என்பது கருத்து மேல்[6] 'தூங்காமை' என்றார். ஈண்டு அதனைப் பகுத்துக் கூறினார் இவை இரண்டு பாட்டானும் பொது வகையால் வினை செய்யுந் திறம் கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : ஆலோசனையிலே பார்த்து மெத்தெனச் செய்ய வேண்டின காரியத்தை மெள்ளச் செய்யவேணும்; சீக்கிரமாய்ச் செய்யவேண்டிய காரியத்தைக் கொப்பெனச் செய்ய வேணும் எ—று.

எ) பழைய : நீட்டித்துச் செய்யும் பகுதியையுடைய வினைகளை நீட்டித்துச் செய்க; நீட்டியாது செய்யும் வினைகளை நீட்டியா தொழிக.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பரிப்பெருமாள் உரைக்குறிப்பு 'செய்யத்துணிதலாகிய

1. எச்சக்குற்றம்—எஞ்சிய மிச்சத்தால் விளையுங் கேடு
2. பகுதியவாய—பகுப்பினையுடையவாய
3. இருவழியும்—செயற்பால, வினை என்னும் இரண்டிடத்தும்
4. இருவகை வினைகளும்—தாமதித்துச் செய்ததும், தாமதமில்லாமல் செய்தலும் ஆகிய இருவகைக் வினைகள்.
5. மாறிச் செய்யின்—விரைந்து செய்வனவற்றைத் தாமதித்தும், தாமதித்தச் செய்வனவற்றை விரைந்து செய்தல்,
6. மேல் என்றது 383 - ம் குறளை

எய்தியதை விலக்கிக் காலம் பார்த்துச் செய்க' என்கிறது. மு.ரா.அரு 'தாமதித்தும் தாமதியாதும் செய்யுந்தொழில்களை எங்ஙனம் என்பதற்கு விடையாகத் தன்னுடைய நிலைமையாலும் காலத்தானும் அறியலாம்' என்பர். தேவநேயர் 'காலந்தாழ்த்துச் செய்தலும், காலம் நீட்டித்துச் செய்தலும்' என இருவகையாக்கி, 'முன்னது வினை தொடங்கலையும், பின்னது வினை செயல்முறையும் பற்றியது' என்பர். இதுமிகமிகக் கூரிய கருத்து. வரத. 'இன்றைய அரசியல்பார்வையோடு நீண்டகாலத்திட்டம் குறுகிய காலத்திட்டம் எனப்பகுத்து அதற்கு ஏற்றவாறு செய்க' என்பர். மு கோ. 'அறத்தினை விரைந்தும், இன்பத்தினைப் பொறுத்தும் செய்தல்போல்வது' எனவும், 'தொழிலாளரை வாட்டிப் பிழியாமல் காலந்தாழ்த்து ஒய்வு கொடுத்தும் செய்க' எனவும், 'உலகம் தாங்கியபோதும் தாங்காதபோதும் அதாவது இரவிலும் பகலிலும் பிறர் அறியவும் அறியாமலும் செய்க' எனவும், பலவகைச்சிந்தனைகளைப் பாவிப்பர், இவற்றுள் இயைவன ஏற்புடையன, குழந்தை 'வலியும் காலமும் ஒத்தலும் ஒவ்வாமையுமே நீட்டித்தலுக்கும் நீட்டாமைக்கும் காரணம்' என்பர். ஏனைய உரையாசிரியர் இவற்றுடன் 'வினையின் விளைவின் தேவையையும்' கருதுவர். ஆகவே இவை மூன்றுமே இணைந்த காரணமே சிறந்ததென்க.

இராம 'தூங்கிச் செயற்பாலனவற்றைச் செய்ய வாய்ப்புக் கிடைத்தால் உடனே செய்து முடிக்கவும் செய்யலாம்' என்பர். முடிவு செயலின் தகுதிநோக்கிச் செய்க என்பதே.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும் :

மற்றுஇக் காலத் தல்லது மேற்சென்று
வெற்றிக் காலத்து வீட்டுதல் அரிது — பெருங்.,4:8:53-54

தூங்குக தூங்கிச் செயற் பால (ஒருபுடை):

சொன்ன வெல்லையி னூங்கினுந் தூங்கினன்
மன்னன் வந்திலன் ... ... ...... — கம்ப.,4374

ஈண்டு தாழ்கின்ற தென்னினி ...... ...... — கம்ப.,4552

...... ...... ...... நொய்திற் செயவல்லீர் — கம்ப.,4818

68.3. ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல். (673)

உரைப்பகுதி :

அ) மணக். : இயலும் இடமெல்லாம் வினைசெய்தல் நன்று; இயலாத காலத்து அதனை நினைத்திருந்து, இயலும் இடம் பார்த்துச் செய்க எ-று.

இது வினை செய்து முடிந்ததில்லை என்று இகழாது பின்பு காலம் பார்த்துச் செய்க என்றது.

ஆ) பரிதி .: காரியத்தை எந்தவகையாலும் செய்தால் அது பாரத்தைக்[1] கொடுக்கும்; தன்னால் முடிகிற காரியமே செய்வான் எ-று.

இ) பரிப். : இயலும் இடம் எல்லாம் வினை செய்தல் நன்று: இயலாத காலத்து அதனை நினைந்து இருந்து இயலும் இடம் பார்த்துச் செய்க எ-று.

மேல் பகை எஞ்சவிடல் ஆகாது என்றார் : அது முடியாத காலத்துச் செய்யும் ஆறு என்னை என்றார்க்கு அதனை இகழாது பின்பு ஆம் காலம் பார்த்துச் செய்க என்றது.

ஈ) காளி .: கீழ்ச்சொல்லிப்போந்த வினைசெய்யும் கூறுபாடுகள்[2] அங்ஙனம் செய்கை, தமக்கு இயலுமாயின் அவ்வியலும் வழியெல்லாம் வினை செய்து ஒழுகுதல் சால நல்லது. மற்று இயலாதற்பினும்[3] அவ்வினைகள் செலவுபடும் வழி[4] எல்லாம் ஓர்ந்து பார்த்துச்[5] செய்து கொள்க எ-று.

உ) பரிமேல் .: வினைசெய்யுங்கால் இயலுமிடத்தெல்லாம் போரால் செய்தல் நன்று; அஃது இயலாவிடத்து ஏனை மூன்று

---

1. பாரத்தை — சுமையை
2. வினைசெய்யும் கூறுபாடுகள் - வினைசெய்யும் வகைகள்
3. இயலாதற்பினும் - முடிவு பெறாத பின்னும்
4. செலவுபடும்வழி - சொல்லும்படியாக
5. ஓர்ந்து — ஆராய்ந்து

உபாயத்துள்ளும்[6] அது முடிவதோர் உபாயம் நோக்கிச் செய்க.

இயலும் இடம் — பகையின் தான் வலியனாய காலம் அக்காலத்துத் தண்டமே நன்று என்றார், அஞ்சுவது அதற்கே யாகலின். இயலா இடம் ஒத்தகாலமும் மெலிய காலமும். அவ்விரண்டு காலத்தும் சாம பேத தானங்களுள் அது முடியும் உபாயத்தால் 'செய்க'[7] என்றார்; அவை ஒன்றற்கு ஒன்று வேறுபாடு உடையவேனும் உடம்படுத்தற் பயத்தால்[8] தம்முள் ஒக்குமாகலின். இதனால் வலியான், ஒப்பான், மெலியான் என நிலை மூவகைத்து என்பதூஉம், அவற்றுள் வலியது சிறப்பும் கூறப்பட்டன.

ஊ) கவிராசர் : ஒரு காரியஞ்செய்யுங்காலத்துத் தனக்குச்செல்வாக்குண்டானால், பலவந்தத்திலே[9] செய்து முடிக்கலாம்; செல்வாக்கு இல்லாமல் சமானமான போதும் எளியவனான போதும் சாமமாகிய நல்ல வார்த்தையினாலேயும் தானமாகிய இரப்பு வார்த்தையினாலேயும் செய்து முடிக்கவேணும் எ-று.

ஏ) பழைய : வினை செய்யுங்கால் போர்வினையியலும் இடமெல்லாம் போர் நன்றே; அது பொருந்தாதாகில் மற்ற சமாதானம் நன்று.

ஐ) தொகுப்பும் குறிப்பும் . :

இக்குறள் 'தூங்கியும் தூங்காதும் செய்யும் வினைவேறுபாடு அது முடியும் வகையைக் குறித்தது என்பதைப் புலப்படுப்பதாகவும், இடமும் காலமும் பார்த்து முடிவு செய்க' என்பதை அறிவிப்பதாகவும், 'முடிந்ததைச் செய்' என்பதை மொழிவதாகும், போர்வினையை நோக்குவது என்றும் உரையாசிரியர்கள் கருதுவதைக் காண்க.

'வாய்'

'இடம்' மணக், பரிப்., பரிதி. என்பர். ஏனையர் இடவுருபாக இணைத்துக் காண்பர். கவிராசர் 'ஒல்லும்

---

6. ஏனை மூன்றுபாய்த்துள்ளும் — சாமபேத தானம் என்னும் உபாயங்களுள்ளும்
7. 'செயல்' என்றும் பாடமுண்டு
8. உடம்படுத்தற் பயத்தால் — உடன்படும்படிச் செய்தற்கு
9. பலவந்தம் — வலுக்கட்டாயம்

வாய் — 'செல்வாக்கு' என்பர். பழைய உரை 'முடிந்தாற்போர் — முடியாவிட்டால் சமாதானம்' என்கிறது. மு.ரா. அரு., தேவநேயர் முதலியோரும் இக்கருத்தினரேயாவர். வரத. 'ஒல்லாக்கால் செல்லும் வாய் எல்லாம் செயல்' என்பதற்கு 'அமைச்சன் தானே சில வினைகளைச் செய்யவேண்டும். அரசன் செய்வதுபோலச் செய்யவேண்டும்; இருவரானும் இயலாத செயலை தம் நம்பிக்கைக்கு உரிய பிறரைக் கொண்டு, முடிக்கவேண்டும். அன்றிச் சாமபேத தானங்களாற் செய்க என்பர். இது பரிமேலழகர் முதலிய ஆசிரிய வசனங்கள் பல வற்றை மனங்கொண்டெழுந்த சிந்தனையாகும். வ.சுப.மா. 'முடிந்தவரை தூதால் முடித்துக் கொள்ளல் நன்று. முடியா விட்டால் பலிக்கும் முறை பார்த்துச் செய்க' என்பர். தூதால் முடிக்க' என்றது வேறுயாரும் கருதாத புதிய நோக்கு. இராம., 'தூங்கிச்செய்யும் செயலை எதிர்பாராத நல்ல சந்தர்ப்பம் கிடைத்தால் உடனே செய்க; சந்தர்ப்பம் கிடைக்காதபோது காத்திருந்து செய்வதே நல்லது 'என முதற் குறளோடு இயைபு படுத்திப் பொருள் கூறுவர். பரிமேலழகர் உரையையும் விளக்கத்தையும், போரைத் தொடர்பு படுத்திக் கூறுதல் பெருந்தவறு; போரைப்பற்றிய பேச்சே இதில் இல்லை. இயைபில்லாமல் நாலுவகையுபாயங்களை இயைபுப்படுத்துவது இக்குறளின் நோக்கத்தையே மாற்றுவதாகும் என வன்மையாகக் கண்டிப்பர். வரும் குறளில் 'பகை எச்சம் வினைஎச்சம் என்பன சிறுபகையையும், அதனாலாம் போரையும் கருதலாம்' என்று பரிமேலழகர் எண்ணுவர். சுருங்க நோக்கின் பரிமேலழகர் 'போர்வினையைக் கருதி உபாயங்களை ஒல்லும் வாய்' என்பர். இராமலிங்கனார் முற்குறளோடு இயைத்து 'வினை என்றது அரச காரியம்' எனப் பொதுமையிற் கருதுவர் 'ஒல்லும் வாயெல் லாம் வினை நன்று' என வினையாற்றுதலின் இயல்பு கூறுவதான இப்பகுதியை வினையைத் தான் செய்தல் நன்று. முடியாதாயின் பிறரைச் செய்வித்தல் நன்று என இடர்ப்படுவார் சிலர். 'முடியு மிடத்துச் செய்; இல்லையானால் இடம் வாய்த்த போதுசெய்' என்ற மணக். உரை சிறந்தது.

*68.4. வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்*
*தீஎச்சம் போலத் தெறும். (674)*

உரைப்பகுதி :

அ)மணக். : வினையும் பகைமையும் என்னும் இரண்டினது

ஒழிபு[1] விசாரிக்குங்காலத்து, தீயின் ஒழிவுபோலக்கெடுக்கும் எ—று.

எச்சம் — சேஷம். இது வினைசெய்யுங்கால் சிறிதொழியச் செய்தேம் என்று விடலாகாது என்றது.

ஆ) பரிதி.: காரியமும் பகையும் ஒன்றிரண்டு காரியத்தை முன்பின் பாராமல் செய்தால் தீயைப்போலக்கெடுக்கும் எ—று.

இ) பரிப்.: வினையும் பகையும் என்னும் இரண்டினது ஒழிவும் விசாரிக்கும் காலத்துத் தீயினது ஒழிவு போலக் கெடுக்கும் எ—று.

எச்சம் — சேஷம். அது வினை செய்யுங்கால் சிறிது ஒழியச் செய்தேம் என்று விடல் ஆகாது என்றது. ஈண்டுப் பகை கூறியது என்னை எனின், வினை செய்வார் பகைவர்மாட்டு ஆதலான் அவரைச் சிறியர் என்று இகழாமையும் வேண்டும்; ஆதலால் ஈண்டுக் கூறப்பட்டது.

ஈ) காளி.: தாம் எடுத்துக்கொண்டது ஓர் கருமம் முடியச் செய்யாது ஒழிவுபட நிற்றலும் தமது பகைதீர்க்கும் இடத்துத் தீராது ஒழிவுபட்டு நிற்றலும் என்னும் இவ்விரண்டு ஒழிவுபாடும் ஆராயுங்காலத்து, ஒன்றினைக்கொளுவிப்பரந்த[2] தீயினைச் செலவு அறத்தணியாது[3] சிறிது ஒழிவுபட இகழ்ந்து நீங்கியவழி, மற்று அது யாங்ஙனம் சுட்டுவிடுவது போல, இவை இரண்டும் பற்றி நிற்பன தம்மாட்டு ஆகலான் வினை எச்சத்தால் தமது உயிர்க்கேடும் வரும் எ—று.

உ) பரிமேல்.: செய்யத்தொடங்கிய வினையும் களையத் தொடங்கியபகையும் என்று சொல்லப்பட்ட இரண்டனது ஒழிவும், ஆராயுங்கால் தீயினது ஒழிவுபோலப் பின் வளர்ந்து கெடுக்கும்.

இனி இக்குறை[4] என்செய்வது என்று இகழ்ந்தொழியற்க: முடியச் செய்க என்பதாம். பின் வளர்தல் ஒம்புமைபற்றிப் பகையெச்சமும்[5] உடன் கூறினார். இதனான் வலியான் செய்யுந் திறம் கூறப்பட்டது.

---

1. ஒழிபு — எச்சம் 2. கொளுவிப்பரந்த — பற்றிப்பரந்த
3. செலவு அறத்தணியாது — முற்றும் தணிந்து போகாமல்
4. இக்குறை — பகை வினை, என்னும் இரண்டின் ஒழிவு
5, பகை எச்சம் — பகையினது ஒழிவு 6, சேஷம்— மிச்சம்

ஊ) கவிராசர் : செய்யத்தக்க காரியமும் செயிக்கவேண்டிய பகையும் என்று சொல்லப்பட்ட இரண்டும் நிலைவேறச்செய்து முடியாமல் குறைவைத்தால் நெருப்புப் பற்றின் விடத்திலே அவித்துச் சேஷம்[6] வைத்தாற்போல், பின்பு அதிகமாய் வளர்ந்து கெடுக்கும்.

ஏ) பழைய : செய்யத்தொடங்கிய வினையும் களையத் தொடங்கிய பகையும் இரண்டினையு முடியாது குறையாய் விடில், இல்லிற்பட்ட தீயையெல்லாம் அவித்து ஓரிடத்தில் ஆவியாமற் குறையாய் விட்ட தீயெங்கும் கூடந்து சுடுவது போலச் சுடும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பரிதி. உரை கருத்துரையே: சொற்பொருளாய்த் தெளி வாக இல்லை என்பது.

வினை எஞ்சின் பகையையும், பகைமிஞ்சின் வினையையும் மூளச்செய்யு மாதலால் இவ்விரண்டன் எச்சங்களையும் இணைத்துக் கூறி அவற்றைத் தூரோடு களைக என்றதாம். தேவநேயரும் 'வினைஎச்சம் போர்வினையின் எச்சமாம்' என்பர். பகை எனப்பண்பின் மேல்வைத்துச் கூறிய ஆசிரியர் உள்ளம் அறிந்து இன்புறுதற்சூரியது. வினை—தொழிற்பண்பு. பகை—பண்பு. உண்மையடுக்கு இரண்டையும் பண்பாகவே கொண்டு அவை தீஎச்சம்போலத் தெறும் என்றார் இங்ஙனமாதல் பகை—பகைவர் என்பர் சில ஆசிரியர். சிறிய பகைவர்க்கு என்பது அவர் களுடையதுணை படை, பொருள் வலிமைகளைக் கருதியதாகும். சிறு பகை என்பது பகைமையின் குறைவை அதாவது சிறு பகுதியைக் குறிப்பதாகும். ஆகவே பகைமை சிறிதாயினும் என்னும் பொருளே சிறந்தது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

வினை..............எச்சம் :

பணிக்குறை வருத்தம். —குறுந்.,333:5

பகை.........எச்சம் நினையுங்கால் தீப்போலத் தெறும் :

எரியுந் தீத்திர ளெட்டுணை யாயினும்
கரியச் சுட்டிடுங் காந்திக் கனலுமேல்

6, சேஷம் — மிச்சம்

தெரியிற் றொல்பகை தான்சிறி தாயினும்
விரியப் பெற்றிடின் வென்றடு கிற்குமே, —சூளா., 643

………… …………நரர் வானரரை யெல்லாம்
வேறுபெய ராதவகை வேரொடு மடங்க
நூறுவது வேகருமம். ……… ……… —கம்ப., 6253

கருப்பை போற்குரங் கெற்றக் கதிர்சுழல்
பொருப்பை யொப்பவன் தான்என்று பொன்றினான்
அருப்பம் என்று பகையையும் ஆரழல்
நெருப்பை யும்இகழ்ந் தால்அது நீதியோ. —கம்ப., 7235

ஒ) மேற்கோள்பகுதி :

சேனா : என்று என்னும் இடைச்சொல் ஒழுவழிநின்று, பிரிந்து பிறவழிச் சென்று ஒன்றியதற்கு மேற்கோள்.
—தொல். சொல். 294

நச்சி. : ஷ —தொல். சொல். 296

மயிலை. : ஷ —நன்., 428

சங்கர. : ஷ —நன்., 429

காரி. : ஷ —மாற., 66

68.5. *பொருள்கருவி காலம் வினைஇடனொ டைந்தும்*
*இருள்தீர எண்ணிச் செயல்.* *(675)*

உரைப்பகுதி :

அ) மணக். : பொருளும், கருவியும் காலமும், செய்யும் வினையும், பகைவரைப் பொருதற்குரிய இடமும் என்னும் ஐந்தினையும் மயக்கந்தீர எண்ணி, பின்பு வினைசெயத் தொடங்குக எ—று.

இவற்றுள் ஒவ்வொன்றும் இரண்டு இரண்டு வகைப்படும்:- 1) பொருளாவது கெடும்பொருளும் பெறும் பொருளும்; 2) கருவியாவது தனக்கு உள்ள படையும்; மாற்றரசர்க்கு உள்ள படையும்; 3) காலமாவது தனக்காம் காலமும் மாற்றரசர்க்காம்

காலமும்; 4) வினையாவது தான் செய்யும் வினையும் பகைவர் செய்யும் வினையும்; 5) இடமாவது தனக்காம் இடமும் பகை வர்க்காம் இடம் ஆம். இவை செய்யும் வினைக்கு முற்பட வேண்டுதலின், முற்கூறப்பட்டன.

ஆ) பரிதி. : பொருள் செய்வகை, கருவி, காலம் அறிதல், வினைசெயல்வகை, இடம்அறிதல் இந்த ஐந்து காரியமும் எண் ணிச்செய்க எ—று.

இ) பரிப். : பொருளும், கருவியும், காலமும் செய்யும் வினை யும் பகைவரைப் பொருதற்கு உரிய இடமும் என்னும் ஐந்தினை யும் மயக்கம் தீர எண்ணிப் பின்பு வினை செய்யத் தொடங்குக எ—று.

இஃது ஒவ்வொன்றும் இரண்டு வகைப்படும். பொருள் ஆவது கெடும் பொருளும் பெறும் பொருளும்: கருவி தனக்கு உள்ள படையும் மாற்றரசர்க்கு உள்ள படையும்: காலம் தனக்கு ஆம் காலமும் பிறர்க்கு ஆம் காலமும்: வினை தான் செய்வினையும் பகைவர் செய்வினையும் ; இடம் தனக்கு ஆம் இடமும் பிறர்க்கு ஆம் இடமும். இவை செய்யும் வினைக்கு முற்பட வேண்டும் என்று முன் கூறப்பட்டன.

ஈ) காளி. : எடுத்துக்கொண்ட கருமம் முடிவுகாறும் நடத்த வேண்டும் பொருளும், அஃது இயற்றுதற்கு உரிய கருவிகளும், அது வாய்த்தற்கு அடுத்த காலங்களும் அது செய்தற்கு அமைந்த இடன் ஆகிய நிலன் என்னும் இவை ஐந்தும் இயையுமாறு மயக் கம் அற ஆராய்ந்து செய்தலே கடனாவது என்று அரசர்க்கு அமைச்சன் வினை செயல்வகை கூறியது இதன் கருத்து எ—று.

உ) பரிமேல். : வினைசெய்யுமிடத்துப் பொருளும் கருவியும் காலமும் வினையும் இடனுமாகிய இவ்வைந்தனையும் மயக்க மற எண்ணிச் செய்க.

எண்ணொடு பிறவழியும் கூட்டப்பட்டது.[1] பொருள் - அழியும் பொருளும் ஆகும் பொருளும். கருவி - தன்தானையும். மாற்றார் தானையும் காலம் - தனக்காம் காலமும் அவர்க்காம் காலமும்.

---

1. வினையிடனோடு என்பதிலுள்ள ஒடு பொருள், கருவி, காலம் இவற்றினோடுங் கூட்டப்பட்டது

வினை - தான்வல்ல வினையும், அவர் வல்லவினையும், இடம் - தான் வெல்லும் இடமும், அவர் வெல்லும் இடமும், இவற்றைத் தான் வென்றி எய்துந்திறத்தில் பிழையாமல் எண்ணிச் செய்க என்பதாம்.

ஊ) கவிராசர் : ஒரு காரியஞ் செய்யுமிடத்துப் பொருளையும் ஆயுதங்களையும் காலத்தையும் காரியத்தையும் இடத்தையும் நன்றாக வாராய்ந்து செய்யவேணும் எ—று.

ஏ) பழைய 2 : வினைசெய்யுமிடத்துப் பொருளுங் கருவிகளும் காலமும் வினையும் இடமுமாகிய ஐந்தினையும் மயக்கமற எண்ணிச் செய்க.

மல்லர் : என்பது மந்திரியானவன் ஒருகாரியம் நடத்த வேணுமானால் பொருளும் எத்தனமுங் காலமும் வினையும் இடமும் என்கிற அஞ்சு காரிய மயக்கமெல்லாம் நீக்கி ஆராய்ந்து பாத்துச் செய்ய வேண்டியது என்றவாறு.

மந்திரி தன் அரசனுக்குப் பகையாயிருக்கிறவர்களிடத்திலே ஒரு காரியம் நடத்த வேணுமானால் அந்தக் காரியத்தினால் வருகிற பொருட் சேதமும் பொருள் ஆதாயமும் அது செய்கிறதுக்கு எத்தனமாகிய [2] தன்படையும் எதிராளியடைய தனக்கு ஆகிற காலமுந் தன்னுடைய எதிராளிக்காகாத காலமும் அது செய்கிறதுக்குத் தனக்கான இடமும் எதிராளிக்காகாத இடமும் அதிலேதான் செய்யத்தக்க வினையும் எதிராளி செய்யத்தக்க வினையுந்தெளிவாய் விசாரித்து அஞ்சு காரியத்தை நடத்தலாம். ஒன்னு மாத்திரம் சார்வாயிராத போனாலுங் காரியத்தை விட்டு விடும் என்பது கருத்து.

கருவி-எத்தனம், இடம், இருடீர்-இருள்-மயக்கம், தீர்தல்-நீங்குதல், செயல்-செய்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறளில் ஆய்தற்குரியனவாகச் சொல்லப்பெறும் ஐந்தில் பொருள் கெடும்பொருளும் பெறும்பொருளும் என இரண்டாம் என்பர் மணக். பரிமேல். முதலியோர் 'கெடும்பொருள்

2. எத்தனமாகிய - முயற்சியாகிய

போரால் அழியும்பொருள் பெறும்பொருள்-மாற்றரசர்பாலிருந்து தமக்கு வரும் பொருள். இதனை வள்ளுவர் உறுபொருள்என்பர்' எனக் கூறுவர். தேவநேயர், பரிமேலழகர், மணக்குடவர் கூறும் வகையினை வேற்றுரையாக ஒப்பி, 'மாற்றான் பொருளும் தன் பொருளும்' என்பர். மு.கோ. 'இருள்பகை' என்பர். 'இருளறுக்கும் எண்ணிய தேயத்துச் சென்று' என்ற குறளில் பரிமேலழகர் கூறுவதை எண்ணி 'மயக்கம்' என்பர் ஏனையோர். இக்குறளில் பரிமேலழகரும் 'மயக்கம்'எனவே கூறுவர் அங்கு, பகையெனக் கூறிய பரிமேலழகர்' ஈண்டு 'மயக்கம்' என்றது 'இருள் தீர எண்ணிச்செயல்' என எண்ணுதற்கு அடைமொழியாக வருதலானும் எண்ணுதல் மனத்தின் செயலாதாலானும் அதற்கேற்ப 'மயக்கம்' என்றார்.இதனால் ஏற்புடைய பொருள் மயக்கமே யாதல் காண்க. இராமலிங்கனார் 'இக்குறள் கூறுவது போரைப்பற்றியன்று. பொதுவகையாக மக்களனைவருக்கும் பொருந்த எச்செயலைச்செய்தாலும் எண்ணிச் செய்க' என்றதே கருத்து என்று பரிமேழலகர் முதலாயினாரை மறுப்பர்.

ஓ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

காலம் அறிந்தாங்கு இடமறிந்து செய்வினையின்
மூலம் அறிந்து விளைவறிந்து - மேலும்தாம்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்து
ஆள்வினை ஆளப் படும். — நீதி நெறி., 52

காலமும் இடனும் ஏற்ற கருவியும் தெரிந்து கற்ற
நூலுற நோக்கித் தெய்வ நுனித்தறம் குறித்து மேலோர்
சீலமும் புகழ்க்கு வேண்டும் செய்கையும் தெரிந்து கொண்டு
பால்வரும் உறுதி யாவும் தலைவற்குப் பயக்கும் நீரார்.
-கம்ப., 4818

துணிவுறு மளவும் சூழ்ந்துபி னிராது சூழ்வினை பொருந்தும்வாயெல்லாம்
தணிவற முடித்தல் அதுதகா தாயின் தருபொருள் வினைஇடம் காலம்

அணியுறு கருவி ஐந்தும்ஆய்ந் திகலை அடர்த்தலொட் டார்க்
கழி வுறுங்கால்
பணிவுசெய் தேனும் காத்தல்முத் தொழிலும் பண்புடை அமைச்
சர்தந் தொழிலே.
—விநா. அரசி.109

ஒருபுடை :

பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம் - கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல். —வாக்கு., 11

ஓ) மேற்கோள்பகுதி

இளம். : பொருளொடு புணர்ந்த பக்கம்: பக்கம் என்றதனால் ஒற்று, தூது, வினைசெயல்வகை, குடிமை, மானம் என வருவன வெல்லாம் கொள்க எனக்கூறி வினை செயல்வகை என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர். —தொல். பொருள். 75

சேனா. : ஒடு என்னும் இடைச்சொல் எண்ணினுள் ஒருவழி நின்று, பிரிந்து பிறவழிச் சென்று ஒன்றியதற்கு மேற்கோள்.
—தொல். சொல்., 294

நச்சி. : ஷை —தொல், சொல். 296

'சின்மென் மொழியால் தாய பனுவலின் அம்மைதானே அடி நிமிர்வின்றே' என்ற சூத்திரத்திற்கு மேற்கோள்காட்டி, இஃது இலக்கணம் கூறலின் பனுவலின் என்றார் எனப்பதசாரம் குறிப்பர். —தொல். பொருள். செய் , 235

மயிலை. : ஒடு என்னும் இடைச்சொல் ஒரேவழி நின்று ஏனை நான்கிடத்தும் சென்று இயைந்ததற்கு மேற்கோள்.
—நன்., 428

சங்கர. : ஷை —நன்., 429

சுவாமி. : ஷை —இ. கொ., 130

68.6 முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். (676)

உரைப்பகுதி :

அ) மணக். : வினை தொடங்கினால் அது முடியும் வண்ணமும், அதற்குவரும் இடையூறும், முடிந்தாலுண்டாகும் பெரும்பயனும் முன்பே கண்டு. பின்பு வினைசெய்க எ—று.

ஆ) பரிதி. : ஒருகாரியம் முடிகிறது, அதற்கு இடையூறும், காரியம் முடிந்தால்வரும் பயனும் எண்ணிச் செய்வான் எ—று.

இ) பரிப். : வினை தொடங்கினால் அது முடியும் வண்ணமும், அதற்கு வரும் இடையூறும் முடிந்த இடத்து உண்டாகும் பயனும் முன்பே அறிந்து வினை செய்க எ—று.

முடிவு — மேல் கூறிய ஆற்றால் செய்யுங்கால் முடியும் முடியாது என்று அறிதல் இடையூறு — பகைவர்க்கு வரும் படைத்துணை. முற்றி யாங்கு எய்தும் படுபயன் — நேரும் இடையூறு சிறிதாய்ப் பெறும் பொருள் பெரிதாயினும் அதன் பின்பு விளையும் விளைவு இது வெற்றிப் பகை தோற்றுதல்.

ஈ) காளி. : மற்று இவ்வாறும் அன்றி யாதானும் ஒரு கருமம் செய்யும் இடத்து அது கடைபோகச் சென்று முடிவது ஓர் முடிவும், அது செய்யுங்காலத்து நடுவு வரும் இடையூறும், அது செய்து முற்றுப்பெற்ற இடத்து அதனால் எய்தும் பெரும்பயனும் முன்னுறச் சீர்தூக்கிக்[1]கொண்டு பின்பு செய்க அக்கருமத்தை எ—று.

உ) பரிமேல். : வினைசெய்யுங்கால் அது முடிதற்கு உளதாம் முயற்சியும், அதற்கு வரும் இடையூறும், அது நீங்கி முடிந்தால்[2] தானெய்தும் பெரும்பயனும் சீர்தூக்கிச் செய்க.

முடிவு ஆகு பெயர். முயற்சி இடையூறுகளது அளவின், பயனது அளவு பெரிதாயின் செய்க என்பதாம்.

1. சீர்தூக்கி - ஆய்ந்து
2. முடிந்தால்—வினைமுடிந்தால்

ஊ) கவிராசர் : ஒருகாரியஞ்செய்யுங்காலத்து, அது முடிக்கத் தக்க முயற்சியும், அதற்கு வரப்பட்ட இடையூறும், நீங்கினால் தான் எய்தும் பலனும் சீர்தூக்கி ஆராய்ந்து செய்க எ—று.

ஏ) பழைய : வினை செய்யுங் காலத்து இடையூறில்லாமல் முடிதலும், இடையூறு வருமது நீங்கி முடிந்தால் தான் எய்தும் பெரும் பயனும் சீர்தூக்கிச் செய்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :-

ஓ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

தன்தூக்கித் தன்துணை யும்பயன் தூக்கி
மற்றவை கொள்வ மதிவல்லார் — அற்றன்றி
யாதானும் ஒன்றுகொண்டு யாதானும் செய்தக்கால்
யாதானும் ஆகி விடும். — பழ நா., 155

நல்லவும் தீயவும் நாடி நாயகற்கு
எல்லையின் மருத்துவன் இயல்பின் எண்ணுவார்
ஒல்லைவந் துறுவன உற்ற பெற்றியின்
தொல்லைநல் வினையென உதவும் சூழ்ச்சியார். —கம்ப, 1408

ஒருபுடை :

உய்யுரை பெற்றாம் நல்லவை யெல்லா முறவெண்ணிச்
செய்யுமி னொன்றோ செய்வதை நொய்திற் செயவல்லீர்.
—கம்ப., 4818

*68.7. செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை*
*உள்ளறிவான் உள்ளம் கொளல்.* *(677)*

உரைப்பகுதி :

அ) மணக். : செய்யத்தகும் வினையைச் செய்யுமவன் முறைமையாவது அவ்வினையினது உளப்பாடு அறிவானது உள்ளத்தைக் கூட்டிக் கோடல் எ-று.

ஆ) பரிதி. : ஒருவன் ஒரு காரியத்துக்கு வல்லவனாகில் அந்தக் காரியத்தையும், அவன் காரியம் செய்யும் முறைமையும் தான் கவரப் பண்ணிக்கொள்ள வேணும் எ-று.

இ) பரிப். : செய்யத் தகும் வினையைச் செய்யும் அவன் செய்யும் முறைமையாவது, அவ்வினையினது உளப்பாடு அறிவான் உள்ளத்தைக் கூட்டிக் கோடல் எ-று.

உள்ளம் கொளல் என்றது உண்மை......னர் என்றற்கு இது வினை செய்யுங்கால் அவ்வினையை முன்பு அறியும் அவர் களைக் கொள்ள வேண்டும் என்றது.

ஈ) காளி. : யாதானும் ஒரு கருமம் செய்யும் இடத்துச் செய் கருமம் தானும், அக்கருமம் தலைக்கொண்டு செய்யுமவனும், மற்று அது முடியக் கற்று அதனை நாள் தோறும் செய்து ஒழுகும் முறைமைப்பாடும் என்று சொல்லப்பட்ட இவை மூன்றும் இனி இவற்றின் உள்பாடு அறிந்து நடாத்தும் உபாயம் உடையோனும் என்னும் இவை இத்தனையும் நெஞ்சு கைக்கொண்டு[1] செய்கை வினைசெயல்வகையாவது எ-று

உள்ளறிவான்[2] என்றது என்னை எனின் கடல் ஓடிப் பொருள் வினை செய்யும் வணிகனும் அவனுக்கு அவ்வினை செய்வாருமே அன்றிக் கடல் ஓட்டத்து உள்ளறிவான் ஆகிய மீகாமனும்[3] வேண்டியாங்கு வினை செய்வாரை அன்றி அவ்வினை உள்ளறிந்து ஓட்டும் உபாயம் உடையோரும் வேண்டும் என அறிக.

உ) பரிமேல். : அவ்வாற்றாற் செய்யப்படும் வினையைத் தொடங்கினான் செய்யுமுறைமையாவது, அதனது உளப்பாட்டி னை[4] அறிவான் கருத்தினைத் தான் அறிதல்.

---

1. கைக்கொண்டு - மேற்கொண்டு
2. உள்ளறிவான் - உள்ள நிலைமையை அறிபவன்
3. மீகாமன்- தோணி இயக்குவான்
4. அதனது உளப்பாட்டினை - வினையினது யதார்த்தநிலையினை

அவ்வாறு என்றது பொருள் முதலிய எண்ணலையும்[5], முடிவு முதலிய தூக்கலையும்[6]. உள்ளறிவான் முன்செய்து போந்தவன். அவன் கருத்து — அவன் செய்து போந்த உபாயம். அதனை அறியவே, தானும் அதனாற் செய்து பயன் எய்தும் என்பதாம். இவை மூன்று பாட்டானும் ஒப்பான் செய்யுந்திறம் கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கினான் செய்யும் முறைமையானது அந்தக் காரியத்தை முன்னே செய்து பலன் பெற்றவன் மனத்தை அறிந்துகொண்டு செய்ய வேணும். எ-று.

எ) பழைய : தவிரும் வினையைத் தவிர்ந்து, செய்யும் வினையைத் தொடங்கினான் செய்யும் முறைமையாவது, அவ்வினையின் உளப்பாட்டினை யறிவான் கருத்தினைத்தான் அறிதல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்., பரிமேல்., பரிப்., கவிராசர் முதலிய அனைவரும் 'செய்வினை செய்வான் செயல்முறையாவது, அவ்வினை உள்ளறிவான் உள்ளங்கொளல்' என ஒருதொடராக்கிப் பொருள் கொள்வர் பரிதி. 'செயல்முறைஎய' செயலும் முறையும் என உம்மை விரித்துப் பொருள் காண்பர். செய்வினை எனவே செயல் அடங்குதலின் வேறுபிரிக்க வேண்டா என்க,

காளி. 'செய்வினையும், செய்பவனும் செய்முறையும் ஆகிய மூன்றையும் இதனை நடத்திப் பழகிய ஒருவனுடைய உபாயங்களை உளங்கொண்டு செயல் வேண்டும்' என்பர். 'தானே அனைத்தையும் அறிவான் ஆயினும் செய்து பலகாற் பழகியவர்களின் பயிற்சியையும் உளங்கொண்டு செய்யவேண்டும்' என்னுங்கருத்தினர். அவர் தரும் விளக்கம் 'திரைகடலோடியுந் திரவியந் தேடுவார்க்குத் தம்மறிவும், சார்ந்தோரின் பட்டறிவுமேயன்றி, கலம் ஓட்டும் மீகாமன் பட்டறிவும் தேவை'

5. பொருள் முதலிய எண்ணலை 675-ம் குறளிற் காண்க

6. முடிவு முதலிய தூக்கலை - 676-ம் குறளிற் காண்க

என்பது இதனால் 'எடுத்த வினை முடித்தற்கு, நேரே துணையாவர் மட்டுமன்றி வழிவழித்துணையாவாருடைய பயிற்சியறிவும் தேவை' என்ற கருத்தினது. இதனைக்கொண்டு காளிங்கர் உரையை நோக்கின் 'வினைசெய்வார்க்கு எடுத்த வினைக்கு நேரே துணையாவார் அறிவு மட்டுமன்றி, வழிவழித்துணையாவார் பயிற்சியறிவும் தேவை' என்ற பிறிதோரு நயத்தையும் புலப்படுத்துதல் காண்க. அதனால் 'பெயர்க்குரியமரபின் செவ்வெண்ணிறுதி தொகையின்றியலாமை கருதிக் (தொல், சொல். இளம். 258) காளிங்கர் 'இவை மூன்றும்' எனத்தொகை கொடுத்து, 'உபாயம் உடையோனும் வேண்டும்' எனத் தனியே ஓதினர் எனலாம்.

வரத. 'உள்ளறிவான்-வினையை ஏவும் அமைச்சன், செய்வான்—அமைச்சன் ஏவல் வழி நின்று வினைகளைச் செய்பவன்' எனக்கொண்டு அமைச்சன் செய்பவனுக்குச் செய்வினைகளையும், முறைகளையும் விளக்குவானாக எனக் கருதுவர். அதிகாரம் அமைச்சர்க்குரிய கடமைகளையே விதிப்பதாயின் செய்பவனை வேறொருவனாகக் கோடல் ஏற்புடையதாகுமோ என்றெண்ணுக. ஏனைய தேவநேயர், சி. இ , சாமி.சிதம்., குழந்தை முதலியோரும் பரிமேலழகரை உளங்கொண்டே உரைப்பர். ஆதலால் பரிமேலழகர் உரைமிக சிறந்தது.

உள்ளறிவான் உள்ளங்கொளல்வது இராமன், இராவணன் படைத்திறம் படையமைதி முதலியவற்றை வீடணனைக்கொண்டு அறிந்தது போல, அந்தரங்கங்களை அறிந்தவனுடைய அறிவைத் தாம் கேட்டுக் கொள்ளுதல் என்றுமாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

உள்ளறிவான் உள்ளம் கொளல் :

மெய்ந்நீர ராகி விரியப் புகுவார்க்கும்
பொய்ந்நீர ராகிப் பொருளை முடிப்ப ரார்க்கும்
எந்நீர ராயினும் ஆக அவரவர்
தந்நீர ராதல் தலை.

—பழ. நா. 193

68. 8. வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று. (678)

உரைப்பகுதி :

அ) மணக். : ஒருவினையால் பிறிதொரு வினையைச் செய்து கொள்வது. ஒரு மதயானையால் பிறிதொரு மதயானையைப் பிணித்தாற்போலும், எ—று.

இது தமக்கு ஒரு பகைவர் தோன்றினால் அவர்க்குப் பகையாயினாரை அவரோடு பகைக்குமாறு பண்ணுவார்பக்கல் பகையாய் வருவார் இல்லை என்றது.

ஆ) பரிதி. : காரியத்தாலே காரியமாக்கிக் கொள்ளுதல் எத் தன்மைத்து எனில், அது ஆனையைக்கொண்டு ஆனைபிடித் தாற்போல், எ—று.

இ) பரிப். : ஒரு வினையாலே பிறிது ஒரு வினையைச் செய்து கொள்க. அது மதயானையோடே மதயானையைப் பிணித்தாற் போலும், எ—று.

நனைகவுள் என்பதனை இரட்டித்துக் கூட்டித் தனக்கு ஒரு பகை தோன்றினால் அவர்க்குப் பகை ஆயினாரை அவரோடு பகைக்குமாறு பண்ணுக : அவர் தம்முள் தாம் பொது அல்லது தம் பக்கல் வருவார் இல்லை என்றவாறு ஆயிற்று.

ஈ) காளி. : ஒரு கருமத்திற்கு வேண்டும்பொருள் நேர்ந்து நிறைவு செய்து பின் அக்கருமத்தானே வேண்டிய கருமத்தை ஆக்கிக் கொடல் எத்தன்மைத்தோ எனின், மதத்தினாலே நனை யும் கபோல நன்மைக்கு[1]உரியது ஒர் அண்ணல் யானையை ஆர்த்தற்கு[2]வேண்டும்பொருள் நேர்ந்தும் பின் மற்று அதனாலே வேறு அடவியுள்[3]வாழும் யானை பலவற்றையும் தங்கண் பிணித் துக்கொள்ளுகின்ற அத்தன்மைத்து எ—று.

1. கபோல நன்மைக்கு - கன்னத்தின் நன்மைக்காக
2. ஆர்த்தற்கு - கட்டுதற்கு
3. அடவியுள் - காட்டுள்

நனைகவுள் என்பது மதத்தாலே நனையும் கபோலம்.

உ) பரிமேல். : செய்கின்றவினையாலே அன்னது பிறிதும் ஓர்வினையை முடித்துகொள்க; அது[4] மதத்தால்[5] நனைந்த கபோலத்தினையுடைய யானையாலே அன்னது பிறிதும் ஓர் யானையைப் பிணித்ததனோடு ஒக்கும்.

பிணித்தற்கு அருமை தோன்ற 'நனைகவுள்' என்பது பின்னும் கூட்டப்பட்டது தொடங்கிய வினையானே பிறிதும் ஓர்வினையை முடித்தற்கு உபாயமாமாறு எண்ணிச் செய்க, அம்முறையான் எல்லாவினையும் எளிதின் முடியும் என்பதாம்.

காரி. : அன்னது பிறிதும் ஓர் ஆனை என்றதனால் பிணித்தற்கு அருமை தோன்றப் பின்னுங் கூட்டுக என்றார்; அது ''நனைகவுள் ............ யானை யாத்தற்று''[6]என்பது.

ஊ) கவிராசர் : ஒரு காரியஞ்செய்கிறவன் அந்தக் காரியத்தினாலே பின்னையுமொரு காரியத்தை முடித்துக்கொள்ளவேணும். அது மததாரையால் நனையப்பட்ட கபோலத்தையுடைய யானையாலே பின்னையும் ஒரு யானையைப் பிடிக்கிறதனோடு ஒக்கும், எ—று.

ஏ) பழைய 'ஆனையா லானையாத் தற்று' பாடம்.

செய்கின்ற வினையாலே அன்னது பிறிதுமோர் வினையை முடித்துக்கொள்ளுதல், மதத்தால் நனைந்த கபோலத்தையுடைய யானையை அன்னதோர்யானையாற் பிணித்ததனோடு ஒக்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

காளிங்கர் உரைப்போக்கு 'ஒருபகையை வெல்லச்சேர்ந்த தளவாடங்களைக் கொண்டு, மற்றவனையும் வெல்லுதல்' என்னுங் கருத்தினது. உவமையும் அதற்கேற்ப 'ஒருயானையைப் பிடிக்கச் சேர்த்த பொருள்களைக்கொண்டு வேறொரு காட்டு யானையையும் பிடித்தது போல' என விளக்குவர்.

---

4. அது - ஒரு தொழிலாலே அதுபோன்ற மற்றொரு தொழிலை முடித்துக் கொள்ளுதல்

5. மதத்தால் - மதநீரால் 6. குறள்.,678

பரிமேலழகர் எடுத்த வினையைக் கொண்டு வேறொரு வினையையும் முடித்துக்கொள்க; 'ஒருகல்லில் இரண்டு மாங்காய்' 'கம்பங் கொல்லையையும் கொத்தின தாகட்டும்;தம்பிக்கும் பெண் பார்த்ததாகட்டும்' என்னும் பழமொழிகளையும் எண்ணுக. இது குடி மக்கள் நிலையில் எழுந்த முதுசொல். யானையால் யானை பிடித்தல் அரசு நிலையில் எழுந்த முதுசொல். இதுவே உலகிய லோடு ஒட்டிய நடைமுறைக்கேற்ற நயமான உரை.

தேவநேயர் 'நனைகவுள் யானை என்றது எதுகைக்காக வந்ததன்றிப் பொருளோடுகூடியதன்று; மதம்பிடித்த யானை பெண்யானையாலன்றி ஒருவாற்றானும் அடக்கப்படாததாகும். ஒரு செயலுக்கும் பயன்படாததும் ஆகும் ஆதலால்" என்பர். ஏனைய பகுதியான் பரிமேலழகரை ஒட்டியுரைப்பர்.

வர்த.'கன்னமதம் வழிகின்ற பழகிய யானையைப் பார்வை விலங்காகக் கட்டி வைத்துக் காட்டானையைப் படுகுழியிலகப் படுத்திப் பிடிப்பதுபோலத் தம் வினையை முடித்துக்கொள்ளப் பிறர் விரும்புஞ்செயலைச் செய்வதுபோலக் காட்டி முடித்துக் கொள்ள வேண்டும்'. இவர்க்கு இத்தனை விளக்கத்தை யும் தந்தது 'யானை ஆர்த்தற்று' என்ற ஒரு தொடர். வினையால் பிறர்க்கு வேண்டிய வினையால், வினைஆக்கிக் கோடல்-தன் செயலை முடித்துக்கொள்ளுதல்' என்பன வருவித்துரைக்கப் பட்டனவாம். வலிந்து கோடலுமாம்.

இராம. 'வினையான்-வினைகளையுடையவன் காரியக் காரன்' என்பர். இங்ஙனம் பெயராக்கிக்கொள்ளின் யானையால் என் பதற்கு உவமத்தின் பொருளின்றாகும். 'நனைகவுள்யானை பழகிய யானைக்கே கபோல மதம்' என்ற நயமும், 'அதனால் பழகிய யானையைக் கொண்டு காட்டுயானையைப் பிணித்தல்' என்பதும் விரும்பத் தக்க விளக்கங்கள்.

நனைகவுள் யானையின் மதநாற்றம் காடெங்கும் பரவி, மற்றொரு மத யானையையீர்த்தலும், அவை பொருந்தலும், பின் ஒய்தலும், ஒய்ந்தபின் யானைபிடிப்பார் பிடித்துக்கொள்ளுதலும் வழக்கமாதலின் வலியபகைவனோடு மற்றொருவலியவனை

மூட்டிவிட்டு, இருவரும் ஒய்ந்தபின் இருவரையும் வயமாக்குதல் வினைசெயல்வகையாம். இது உவமந்தந்த உரைநயம்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

யானையால் யானை யாத்தற்று :

ஆண முடைய அறிவினார் தந்நலம்
மானும் அறிவின் அவரைத் தலைப்படுத்தல்
மானமர் கண்ணாய் மறங்கெழு மாமன்னர்
யானையால் யானையாத் தற்று. — பழ. நா., 30

வினையால் வினையாக்கிக் கோடல் (ஒருபுடை) :

தெள்ளி உணரும் திறனுடையார் தம்பகைக்
குள்வாழ் பகைவர்ப் பெறுதல் உறுதியே
கள்ளினால் கள்ளறுத்தல் காண்டு அதுவன்றோ
முள்ளினால் முள்களையு மாறு. — பழ நா., 309

இரும்பின் இரும்பிடை போழ்ப பெரும்சிறப்பின்
நீருண்டார் நீரான்வாய் பூசுப. — நான்மணிக்., 34

மோதி முள்ளொடு முள்பகை கண்டிடல் -சீவக., 1920:3

அஞ்சனக் காரன் முதுகில் வஞ்சனைக்காரன் ஏறுவான் -பழ.,

முள்ளை முள்ளாலே எடுக்கவேணும். -பழ.,

திருடனைக் கொண்டு திருடனைப் பிடிக்கவேண்டும் -பழ.,

மான்காட்டி மான்பிடிப்பதுபோல -பழ.,

68.9. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல். (679)

உரைப்பகுதி :

அ) மணக்.: தம் சுற்றத்திற்கு நல்லவை செய்தலினும், பகைவரைப் பொருந்தி நட்பாகக் கொள்ளுதலை விரைந்து செய்ய வேண்டும். எ—று.

இஃது அரசர்க்கும் ஒக்கக்கொள்ள[1]வேண்டுமாயினும், அமைச்சர் தம் தொழிலாக ஈண்டுக்கூறப்பட்டது.

ஆ) பரிதி.: நல்லோர்க்கு நல்லது செய்வதிலும் சத்துருக்களை நல்லது சொல்லி உறவுகட்டிக்கொள்வது நல்லது எ—று.

இ) பரிப்.: தமது சுற்றத்திற்கு நல்லவை செய்தலினும் விரைந்து செய்ய வேண்டும், பகைவரைப் பொருந்தி நட்பு ஆகக் கொள்ளுதல் எ—று.

இது சுற்றத்திற்கு நல்லவை செய்தலினும், வேண்டுவன விரைந்து செய்ய வேண்டும் அன்றே: அதனினும் பகை கொள்ளாமை விரைந்து செய்தல்வேண்டும், அவரும் தம்மோடு ஒத்த வலி உடையர் ஆயின் என்றவாறு.

ஈ) காளி.: தம்மொடு நட்டார்க்கு நல்லனவற்றைச் செய்தல் மிகவும் வேண்டுவது அன்றே! மற்று அவை செய்தலினும் சால விரைந்ததே; யாது எனின் பகைவரானோரை ஒருவாற்றால் பகைதீர்த்து இங்ஙனம் பொருத்திக்கொள்வாராயின் பகை எச்சம் இல்லை எ—று.

உ) பரிமேல்.: வினைசெய்வானால் தன் நட்டார்க்கு இனியவற்றைச் செய்தலினும் விரைந்து செய்யப்படும் தன் பகைவரோடு ஒட்டாரைத்[2] தனக்கு நட்பாக்கிக்கோடல்.

அவ்வினை வாய்த்தற்பயத்தவாய இவ்விரண்டும்[3] பகைவர்க்குத் தன் மெலிவு[4] புலனாவதன்முன்னே செய்க என்பார் 'விரைந்தது' என்றார். விரைந்து செய்யப்படுவது என்றவாறு வினை செய்யுந் திறமாகலின் பகைவரோடு ஒட்டாராயிற்று. தன் ஒட்டார் பிறருட் கூடாமல் மாற்றிவைத்தல்[5] எனினும் அமையும்.[6]

1. ஒக்கக் கொள்ள - பொருந்துமாறு கொள்ளுதல்.
2. ஒட்டாரை - பகைவர்
3. இவ்விரண்டும்—நட்டார்க்கு நல்ல செய்தலும், ஒட்டாரை ஒட்டிக்கொள்ளலும்
4. மெலிவு—தன்பகைவரினும் பொருள் படை இவற்றால் ஆற்றல் குன்றிருத்தல்
5. தனது பகைவரை மற்றவர் யாரிடத்தும் கூடாதவாறு வேறுபடுத்திவைத்தல்
6. இது பேதம் என்னும் உபாயம்

ஊ) கவிராசர்: காரியஞ்செய்கிறவன் தன் சினேகிதருக்கு நல்லது செய்கிறதிலும், தன் பகைவரைத் தனக்கு உறவாகச் செய்து கொண்டு காரியஞ்செய்கிறது நல்லது எ—று.

ஏ) பழைய: நண்பாகிய வேந்தர்க்கு நல்லன செய்தலினும், விரைந்து செய்யப்படும் பகை வேந்தரொடு ஒட்டாமற் பிரித்த வேந்தரை ஒட்டிக்கொள்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக். 'அரசனாயினும் அமைச்சனாயினும் பகைவரைத் தமக்கு நட்பாக்கிக் கொள்ளுதல் விரைந்து செய்யப்படுவதாம்' என்பர். காளி., பரிதி. முதலானோரும் இக்கருத்தையே வற்புறுத்துவர். பரிமேலழகரும் பிறரும், 'பகைவர்—தம்பகைவர்க்குப் பகையாயினர்' என்பர். 'நட்டார்க்கு நன்மை செய்தலே அவர்கள் எஞ்ஞான்றும் உள்ளன்புடன் தமக்கே துணையாக வேண்டும் என்பதனைக் கருதி. ஒட்டாரின் ஒட்டாரைத் தமதாக்கிக் கொள்ளுதலும் தம் துணையைப் பெருக்குதலோடு தம் ஒட்டார்க்கு அச்சமிகுவிப்பதும் பயனாகும். ஆனாலும் பகை எச்சமின்றி ஒழியாது. அதுவும் ஒழிய வேண்டுமாயின் தம் ஒட்டாரையே தமக்கு நட்டாராக்குதலே நன்று என்பதே' இக்கருத்தாக ஏனையோர் கொண்டனர். பரிமேலழகர் மட்டும் அரசியல் சூழ்ச்சியாக இதனைக் கூறுகின்றார் எனலாம். பரிமேலழகர் கூறும் வேறுரை 'தன் ஒட்டாரைத் தமக்கு நட்டாராக்குதலினும் சிறப்பின்று; அவர்களைப் பிறருடன் கூடாமல் மாற்றி வைத்தாலும் பகை நீங்கிற்றில்லையாம்.'

குழந்தை. 'ஒட்டார்-பகைவர்க்குப் பகைவர்களையே குறிக்கும் வினை செய்யுந்திறமாகலின்' என விளக்கந் தருவர். சாமி. சிதம். 'தம் பகைவரைத் தமக்கு நட்பாக்கிக் கோடல்' என்றே உரைப்பர். இராம அங்ஙனமே. மேலும் பரிமேலழகர் கருத்தை மறுப்பர். 'சான்றுரைப்பார் காலில் விழுவதை விடச் சண்டைக்காரன் காலில் விழுவது மேல்' என்பதுபோலச் சண்டைக்காரரைத் தம்மவராக்கிக்கோடலே சிறந்தது என்பதே இக்குறட்கருத்து என்பர். வரத. 'நம் பகைவர் விரும்புஞ்செயலை முன் செய்து அவரை நம்மவராக்குதல் நல்லது' என்று பொருள் கொள்ளலாம்

என்பர். இது தோல்வித் தானங்களில் ஒன்றல்லாமையை எப்படி உணர்த்த இயலும். தேவநேயர் 'நம் பகைவர்கள் அவர் பகைவருக்கு வேண்டுவ கொடுத்துத் தம்மவராக்கிக் கொள்வதன் முன் நாம் அவர்களை நம்மவராக்கிக் கொள்ளுதல் நன்று' எனப் பரிமேலழகர் உரையை ஒட்டியுரைப்பர். ஆகவே 'தன் நாட்டார்க்குநல்ல செயலின், தன் ஒட்டாரை ஒட்டிக் கொளல் நன்று' என்ற உரைகளே சிறந்தன எனலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

நட்டார்க்கு நல்ல செயல்இனிது எத்துணையும்
ஒட்டாரைஒட்டிக் கொளல்அதனின் முன்னினிதே.
—இனியவை , 18

68.10. உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறை
பெறின் கொள்வர் பெரியார்ப் பணிந்து. (680)

உரைப்பகுதி :

அ) மணக்.: உறையும் இடம் சிறியார் தமது இடம் நடுங்குதற்கு அஞ்சித் தமது குறைதீரப்பெறின், தம்மின் பெரியாரைத் தாழ்ந்து நட்பாகக் கொள்வர் எ-று.

இது சிறியனாயின் இவ்வாறு செய்தல் வேண்டும் என்றது.

ஆ) பரிதி. : பெலயீனனான ராசா தன்னை வந்து அடைந்தால் அவன் காரியத்தைப் பார்ப்பது மந்திரி தத்துவம் எ-று.

இ) பரிப். : உறையும் இடம் சிறியார் தமது இடன் நடுங்குதற்கும் அதற்கு அஞ்சித் தமது குறைதீரப் பெறின், தம்மின் பெரியாரைத் தாழ்ந்து நட்பாகக் கொள்வர் எ-று.

இது சிறியன் ஆயின் இவ்வாறு செய்ய வேண்டும் என்றது. இவை எல்லாம் அரசற்கும் ஒக்கச் செய்ய வேண்டும் ஆயினும் அமைச்சுத் தொழில் ஆதலான் ஈண்டுக் கூறப்பட்டன.

ஈ) காளி. : உலகத்துப் பொருள் வலி முதலிய அனைத்தா னும் பகைவரின் சிறியர் யாவர் சிலர் மற்று அவர் பகைவரால் தமக்கு உள் நடுக்கம் வருதலை அஞ்சி மற்று அவரினும் பெரிய வேந்தர்மாட்டுத் தமது குறை கூறி அவர்களை வணங்கி வழி பட்டுப் படைத் துணையாகக் கொள்வர் எ-று.

இனி மற்று இங்ஙனம் அரசர் உழையிருந்த அமைச்சரா னோர் வினையின் திட்பமும் வினைசெயல் வகையும் வைப்புறுத் தியும்,[1] பொருந்தாமன்னரைப் பொருந்துவித்தலும் திறைகோட லும் குறும்பு அறுத்தலும்[2] பிறவும் வேண்டுதலான் தூதுசேறலும் அமைச்சர்க்குக் கடன் ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) பரிமேல் : ஆளுமிடம் சிறியராய அமைச்சர் ; தம்மின் வலி யார் எதிர்ந்தவழித் தம்பகுதி நடுங்கலை அஞ்சி அந்நிலைக்கு வேண்டுவதாய சந்து கூடுமாயின், அவரைத் தாழ்ந்து அதனை ஏற்றுக் கொள்வர்.

இடம்-நாடும் அரணும், அவற்றது[3] சிறுமை ஆள்வார்மேல் ஏற்றப்பட்டது.[4] மெலியாரோடு சந்திக்கு[5] வலியார் இயைதல்[6] அரிதாகலின், 'பெறின்' என்றார். அடியிலே[7] மெலியராயினார் தம்பகுதியும் அஞ்சி நீங்கின் முதலொடும்[8] கெடுவராகலின், அது[9] வாராமல் சிறிது கொடுத்தும்[10] சந்தினை ஏற்றுக்கொள்க என்பதாம் பணிதல்[11] மானமுடையார்க்குக் கருத்தன்மையின், 'கொள்வர்' என உலகியலால் கூறினார் இவை மூன்று பாட்டா னும் மெலியான் செய்யுந்திறம் கூறப்பட்டது.

---

1. வைப்புறுத்தியும்—வைக்கும்படியாக்ச் செய்தும்
2. குறும்பு அறுத்தலும் பகைமை நீக்குதலும்
3. அவற்றது —நாடு அரண்களது
4. நாடு அரண்களின் சிறுமையை அவற்றையாள்வார் மேலேற்றி 'உலறசிறியார்' என்று கூறினார். இடத்தின் சிறுமை இடத்தை யுடைவர் மேலாய வுபசாரவழக்கு
5. சந்திக்கு —சமாதானம் 6, இயைதல்—பொருந்துதல்
7. அடியிலே —போர் செய்ய ஆரம்பித்த காலத்திலே
8. முதலொடும் —அடியொடும் 9. அது — முதலொடுங் கெடுதல்
10. சிறிது கொடுத்தும் - தானம் செய்தும் 11. பணிதல்—தாழ்ந்தொழுகுதல்.

ஊ) கவிராசர்: கொஞ்சமான ராச்சியத்திலே இருக்கிற மந்திரிகள், தங்களிலும் பலவந்தர்[12] வந்து எதிர்த்தால், தங்கள் சேனை நடுங்குதலுக்குப் பயப்பட்டு, எதிராளியை வணங்கிச் சமாதானம் பண்ணிக்கொள்வர் எ-று.

எ) பழைய: ஆளும் இடம் சிறியராய அமைச்சர் தம்மில் வலியார் எதிர்த்தால் தஞ்சேனை நடுங்குதலையஞ்சி அந்நிலைக்கு வேண்டுவதாய சமாதானம் கூடுமாயின் அவரைத் தாழ்ந்து சமாதானத்தையேற்றுக்கொள்வார்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'உள் நடுங்கல் அஞ்சி'

'தமது இடம் நடுங்குதற்கு அஞ்சி' மணக்.; 'உள் நடுக்கம் வருதலை அஞ்சி' காளி; 'தம்பகுதி நடுங்கலை அஞ்சி' பரிமேல், கவிராசர்; பழைய 2, மு ரா.அரு; தமது நாட்டிலுள்ள குடிகள் அஞ்சுதற்கு அஞ்சி' தேவநேயர்; 'மனத்திலே பயம் ஏற்பட்டு' வரத.; 'உறை'-ஆயுள். உள் நாட்டு நம்மவரும் பகைவரும் நடுங்குதற்கு அஞ்சி மு.கோ. 'தம் நாட்டிலுள்ளார் நடுங்குதலுக்கு அஞ்சி' சி. ஜ.; தமது அங்கங்கள் நடுங்குதற்கு அஞ்சி' சபாபதி; 'தம்மைச் சேர்ந்தவர்கள் நடுங்குதற்கு அஞ்சி' இராம.; 'தமது மனம் நடுங்குலுக்கு அஞ்சி' சாமி சிதம்; 'குடியும் படையும் நடுங்குதற்கு அஞ்சி' கா. சு. குழந்தை; 'உள்' என்பதற்கு 'இடம்' என்றும் 'மனம்' என்றும் 'அகப்பரிவாரங்களாகிய தானையும் சேனையும்' என்றும் 'குடிகள்' என்றும் நம்மவரும் பகைவரும் என்றும் பொருள் காண்கின்றனர். இவற்றுள் 'மனம்' அல்லது 'குடியும் படையும்' என்றபொருளே சிறந்தது. இந்த எல்லாப் பொருளும் இடவாகு பெயரான் வந்தனவே யாதலின் அவரவரும் விருப்பம் போற் கூறுவராயினர்.

'குறைபெறின்'

'குறைதீரப்பெறின்' மணக்.; 'குறைகளைக் கூறி', காளி; 'சந்து கூடுமாயின்' பரிமேல்., கவிராசர்; 'தூதுவரின்' வ.சுப.மா.; 'தாம் எண்ணியபடி உடன்பாடு செய்து கொள்ள விரும்பின்' குழந்தை; 'இணக்கத்திற்கு இசைந்தால்' கா.சு.; 'குறையைக் கேட்டுச் சமாதானத்திற்கு விரும்பினால்' சாமி.

12. பலவந்தர் – வலியர்

சிதம்.; 'பிறர்குறை கூறினும்' இராம.; 'குற்றத்திற்காக வருத்தம் தெரிவித்தால்' வரத.:

இங்ஙனம், குறை பெறுதல் என்பது பலபொருளதாயினும், தம் குறையை தாமே எண்ணி இணக்கத்திற்கு இசைதல் என்ற பொருளே ஏற்புடையது. 'சந்து கூடுவதாயின்' என்பது கருத்துப் பொருள்.

இக்குறட்பாடம் 'பெரியார்ப் பணிந்து' என்றிருக்கவும் வரதராசர் 'பெரியார் ஏற்றுக் கொள்வர்' என்பர். இரண்டாம் வேற்றுமையில் மிகுந்து வருதலை நோக்கி ஏனையர் அனைவரும் பெரியாரைப் பணிந்து' என்றனர்.

## 68. வினைசெயல்வகை

| | சூழ்ச்சி | தூங்குக | ஒல்லும்வாய் | வினைபகை | பொருள்கருவி | முடிவும் | செய்வினை | வினையான் | நட்டார்க்கு | உறைசிறியார் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 5 | 6 | 8 | 7 | 1 | 2 | 3 | 4 | 10 | 9 |
| பரிதி. | 2 | 5 | 6 | 7 | 1 | 10 | 3 | 4 | 8 | 9 |
| பரிப். | 10 | 2 | 4 | 3 | 1 | 7 | 8 | 9 | 6 | 5 |
| காளி. | 8 | 3 | 9 | 2 | 1 | 7 | 5 | 6 | 4 | 10 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

68வது அதிகாரம் 'வினைசெயல்வகை' முற்றிற்று.

# 69. தூது

அ) மணக். : தூதாவது மாற்றரசர்மாட்டுச் சந்து செய்யும் அமாத்தியரிலக்கணம் கூறுதல். இனிப் பகைவர்மாட்டு அமாத்தியர் செய்யும் திறம் கூறுகின்றாராதலின், அதன் பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி. : தூதாவது தானாதிபதி சொல்லும் முறைமை சொல்லுதல் எ—று.

இ) பரிப். : தூது ஆவது மாற்றரசர் மாட்டுச் சந்து செய்யும் அமாத்தியர் இலக்கணம் கூறுதல். இனிப் பகைவர் மாட்டு அமாத்தியர் செய்யும் திறம் கூறுகின்றார் ஆகலின் அவற்றின் பின் இது கூறப்பட்டது.

உ) பரிமேல். : அஃதாவது சந்தி விக்கிரகங்கட்கு[1] வேற்று வேந்தரிடைச்[2]செல்வாரது தன்மை. அவ்விரண்டனையும்[3] மேல் வினைசெயல்வகை என்றமையின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது. தான் வகுத்துக் கூறுவான்,[4] கூறியது கூறுவான்[5]எனத்

---

1. சந்தி விக்கிரங்கட்கு - கூட்டுதற்கும் பிரித்தலுக்கும், அடுத்துக் கெடுத்தலுமாம்.
2. வேற்று வேந்தரிடை - தம்மரசனோடு மாறுப்பட்ட அரசரிடை.
3. அவ்விரண்டனையும் - சந்தி, விக்கிரகங்களையும்
4. வகுத்துக் கூறுவான் - தான் பிறரோடு சொல்லும் வகையையும், அதற்கு அவர் சொல்லும் வகையையும், அவர் சொல்லும் கட்டளையையும், அதற்குப் பின் தான் சொல்லும் வகையையும் மேன்மேலும் தானே படைத்திட்டுக் கொண்டு சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி பேசுந் தூதன்
5. கூறியது கூறுவான் - கிளிப்பிள்ளையைப் போலச் சொன்னதைச் சொல்பவன்

தூது இருவகைப்படும். அவருள் முன்னோன்[6] அமைச்சனோடு ஒப்பானாகலானும், பின்னோன்[7] அவனிற்காற் கூறு குணம் குறைந்தோனாகலானும், இஃது அமைச்சியலாயிற்று.

ஊ) கவிராசர் : அஃதாவது எதிராளியிடத்திலே போய்த்தான் தெரிந்து சொல்லி வருகிறதும், சொன்னது சொல்லி வருகிறதும். தான் சொல்லிவருகிறவன் மந்திரியோடொப்பன்; சொன்னது சொல்லி வருகிறவன் மந்திரியிலுங் கால்வாசி குணங் குறைந்தவன்.

ஏ) பழைய 2 : அஃதாவது, பொருத்தலும் பிரித்தலுமாகிய சந்தி விக்கிரகஞ் செய்வார்க்குத் தூதென்று பெயர். ஆதலால் தூது சொல்வாரைத் தூதென்றது எனக்கொள்க. ''மந்திரியர், புரோகிதர், சேனாவரையர் உரைக்குந் தூதர் ஒற்றென்று இவர் அரசர்க் கமைத்த ஐம்பெருஞ்சுற்றம்'' என்பதனாதல் அறிக. மல்லர் : அதாவது ஸ்தானாபதிக்கு வேண்டிய குணம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

தூதும் 'அமாத்தியர் வகையுள் ஒன்று' எனவும், 'அது இருவகைப்படும்'எனவும் பரிமேலழகரும் 'ஐம்பெருஞ்சுற்றங் களுள் ஒன்றென்று' பழைய உரையாசிரியரும் கூறுவர். மு.ரா.அரு. 'மாற்றரசரிடம் சண்டை கருதியோ சமாதானங் கருதியோ தம் அரசன் சொன்னவைகளைச் சொல்லி வருபவர் தன்மை' என்றும், 'அவர் இரு வகையர்' என்றும் கூறுவர். 'தூது செல்வார்க்குள்ள தன்மை' என்பர் கா சு . குழந்தை, சி.இ.; வரத.'தன் நாட்டரசன் சொன்னவைகளை வேற்றரசனிடம் சென்று சொல்வதும், அந்நாட்டு நிலையை அறிந்து வருவதும் தூதின் கடமை' என்பர். 'அரசிடமிருந்து மற்றோரரசரிடம் தூதுபோகிற வர் கடமை' சாமி. சிதம்.; 'ஒரு நாட்டரசன் மற்றொரு நாட் டரசனிடம் இரண்டு நாடுகளுக்கும் உள்ள உறவுகளைக் கருதிச் செய்தியனுப்புகிற மந்திரி' இராம.

இங்ஙனம் தூதின் இயல்பு, பயன் இவைகளைச் சிலர் விரித்தெழுதினும் கருத்து மாற்றமின்று.

6. முன்னோன் - தான் வகுத்துக் கூறுவோன்
7. பின்னோன் - கூறியது கூறுவான்

69.1. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு. (681)

**உரைப்பகுதி :**

அ) **மணக். :** அரசன் மாட்டு அன்புடைமையும், அமைந்த குடியின்கண் பிறத்தலும், வேந்தனால் விரும்பப்படும் குணமுடைமையும், தூதாகிச் சென்று சொல்லுமவனது இயல்பாம் எ—று.

வேந்தனால் விரும்பப்படும் குணமுடைமையாவது அவன் விரும்புவனவற்றைத் தான் விரும்பாமை.

ஆ) **பரிதி. :** அரசன்மேல் அன்புடைமையும் நற்குலத்தில் பிறத்தலும் அரசனது மனமகிழ்ச்சி உள்ளவனும் தூதுவன் எ—று.

இ) **பரிப். :** அரசன் மாட்டு அன்பு உடைமையும் அமைந்த குடியின்கண் பிறத்தலும், வேந்தனால் விரும்பப்படும் குணன் உடைமையும் தூது ஆகிச் சென்று சொல்லுமவனது இயல்பு எ—று.

வேந்தனால் விரும்பப்படும் குணமாவது அவன் விரும்பும் அவற்றைத் தான் விரும்பாமை,

ஈ) **காளி. :** தன் அரசர்மாட்டு அன்பு பெரிது உடையனுமாய்த்தான் நல்ல குடியில் பிறந்தானுமாய், வந்து பயிலுந்தொறும் வேந்தனானவன் விரும்பும் மரபு உடையனுமாய் இம்மூன்று குணமும் உடையான் அரசர்க்குத் தூது உரைப்பான் எ—று.

உ) **பரிமேல். :** தன் சுற்றத்தார்மாட்டு அன்புடையனாதலும், அமைச்சுப்பூணற்கு அமைந்த குடியின்கண் பிறத்தலும், அரசர் சாதி விரும்பும் பண்புடையனாதலும், தூதுவார்த்தை சொல்லுவானுக்கு இலக்கணம்.

முன்னைய இரண்டனாலும்,[1] முறையே சுற்றத்தார்க்குத் தீங்கு வாராமல் தான் பேணி ஒழுகலும், தன் முன்னோர்

1. முன்னைய இரண்டனாலும் - அன்புடைமை, ஆன்ற குடிப்பிறத்தல் என்ற இரண்டானும்

தூதியல் கேட்டறிதலும்[2] பெற்றாம். 'வேந்தவாம்[3] பண்புடைமை[4]' முன்னர் மன்னரைச் சேர்ந்தொழுகற்கண் பெறப்படும். அதனால்[5] வேற்றரசரும் அவன்[6] வயத்தராதல் பெறுதும்.

ஊ) கவிராசர் : தயையுடையவனும், நல்லகுடியிலே பிறந்தவனும், அரசர்கள் சந்தோஷப்படத்தக்க குணமுடையவனுமாயிருக்கிறவனே தூதனாவான் எ—று.

ஏ) பழைய2: சுற்றத்தாரிடத்து அன்புடையனாதலும், நிறைந்த குடியின் பிறத்தலும், வேந்தர் முதலாயினார் விரும்பும் பண்புடையனாதலும் தூது செல்வானுக்கு இலக்கணமாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'அன்புடைமை'

'அரசர் மாட்டன்புடைமை' மணக்., பரிதி., காளி; 'தன் சுற்றத்தார் மாட்டன்புடைமை' பரிமேல்., பழைய, மு ரா அரு., சாமி. சிதம் ; 'மக்களிடத்தில் அன்பாயிருத்தல்' தேவநேயர்; 'தன்னைச் சார்ந்தவர் மாட்டன்புடையனாதல்' கா.சு.; இங்ஙனம் 'யார்மாட்டு' என்பதை விளக்குவதில் ஆசிரியர் மாறுபடுகின்றனர் தூது ஓர் இன்றியமையாத அரச காரியமாதலின் நாட்டிடத்தும் அன்புடையனாதல் என்ற உரையே சிறந்தது. சுற்றத்திடம் அன்பாதல் மக்கட் பொதுப்பண்பாதலால் அதனைத் தூதற்குரைப்பதிற் சிறப்பின்று

'ஆன்றகுடி'

'அமைந்தகுடி' மணக்.; 'நற்குலம்' பரிதி, காளி., கவிராசர். 'அமைச்சு பூணுதற்கு அமைந்த குடி' பரிமேல்., மு ரா அரு ; 'உயர்ந்தகுடிப்பிறப்பு' கா.சு; 'அறிவுநிரம்பிய குடி' சாமி.சிதம். ; இவற்றுள் அமைச்சு பூணுதற்கு அமைந்தகுடி என்ற பரிமேலழகர் உரை மரபுவழி மந்திரிப் பதவியை வற்புறுத்துவது போலத் தோன்றுதலின் அறிவுநிரம்பி ஆன்றவிந்

2. தன் முன்னோர் தூதியல் கேட்டறிதலும் - தன்தந்தை பாட்டன் முதலானோர் தூதராய் ஒழுகிய தன்மையைக் கேட்டு உள்ளத்தமைத்தலும்
3. வேந்தவாம் பண்புடைமை - நூல்களையறிதலும், சொற்குறி, உறுப்புக்களின் அசைவு ஆள் சிமிட்டுதல், சிட்டிகை போடுதல் முதலான செய்கைகளை அறிதலும், பொருளாசை இல்லாமையும், சாமர்த்தியமும் குடிப்பிறப்புஉடைமையாம்
4. பண்புடைமையாவது - பாடறிந்தொழுகும் வல்லமை
5. அதனால் - வேந்தவாம் பண்புடைமையால் 6. அவன் என்றது தூதனை

தடங்கிய கொள்கையையுடைய குடியென்ற உரையே தெரிந்து விளையாடலுக்கு ஏற்றதாகும்.

'வேந்தவாம் பண்புடைமை'

வேந்தனால் விரும்பப்படும் குணமுடைமை' மணக்., பரிமேல்., கவிராசர், கா.சு., சாமி. சிதம்.; அரசர் சாதி விரும்பும். பண்பு' எனப் பரிமேலழகர் விளக்கந்தருவர். மு.ரா.அரு. கருத்தும் இது. 'அரசனது மனமகிழ்ச்சியுள்ளவன்' பரிதி., 'பயிலுந்தோறும் வேந்தனானவன் விரும்பும் பண்புடையவன்' காளி.; இவற்றுள் தன்னரசனேயன்றி மாற்றரசனும் விரும்பும் பண்பு என்பதும் பலகாற்பழகினும் விரும்பும் பண்பு என்பதும் சிறந்தன.

வரத. 'மனத்தில் அன்பு நிறைந்தவன், உயர்குடிப்பிறப்புடையவன், அரசர்கள் மதிக்கும் மாண்புடையவன்' எனப் பொதுவகையிற் கூறுவர். மு. கோ. 'அன்புடைமையும் குடிப்பிறத்தலுமாகிய இரண்டுமே வேந்தவாம் பண்பு' எனக்கூட்டிப்பொருள் காண்பர். மேலும் 'அன்புடைமையால் ஆன்றகுடி' எனவும் கூறுவர். சி.இ 'நாட்டுப் பற்றுடையதனாதல் ஒழுக்கம் நிரம்பிய குடிப்பிறப்புடையனாதலும், அரசவாம் பண்புடையாராதலும் தூதன் பண்பு' என்பர்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

அன்புடைமை ஆய்ந்த அறிவுடைமை இற்பிறப்பு
நன்குடைமை நவ்ல நயனுடைமை — நன்கமைந்த
சுற்ற முடைமை வடிவுடைமை சொல்வன்மை
கற்றடங்கல் தூதின் கடன். — பாரதவெ.,

குடிப்பிறந் திருநூல் கற்றறிந் தமைச்சர் குணங்களும்
உடையனாய்ச் சுற்றம்
கடப்படும் அரச னிடத்துறும் அன்பும் கருதுவேற் றரசரைப்
பண்பும்

விடப்படா இன்சொல் வன்மையும் உருவும் வெருவுறாத்
திண்மையுமருவி
............ ............ தூதன் —விநா. அரசி., 110

குலமுதற் றொன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனுமெய்தினார் — கம்ப., 1404

வேந்தவாம் பண்பு :

'சர்வசாஸ்திரங்களையு மறிந்தவனாயும் சொற்குறி கண் சிமிட்டுதல் முதலிய சமிக்கை சிட்டிகை போடுதல் முதலிய செய்கை என்னுமிவற்றைக் கண்டறிபவனாயும், பொருளாசை யில்லாதவனாயும் சமர்த்தனாயும் நற்குலத்திற் பிறந்தவனாயும் இருக்கிற ஒரு தூதனை அரசன் தன்னிடத்தில் வைத்துக்கொள் ளல் வேண்டும்.

'அந்தத் தூதன் யாவரிடத்தும் அன்புள்ளவனாயும் சமர்த்த னாயும் பொருளாசையில்லாதவனாயும், நியாபக முள்ளனவாயும் தேசகாலங்களை யறிந்தவனாயும் தேகபுஷ்டியுள்ளவனாயும், பயமில்லாத வனாயும், சமஸ்கிருத முதலிய பாஷைகளைப் பேசு கிறவனாயும் இருந்தால் அரசனுக்குப் பெருமையை யுண்டு பண்ணுவான். —மனு அத்., 7

69.2. அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்
பார்க்(கு)
இன்றி யமையாத மூன்று. (682)

உரைப்பகுதி :

அ) மணக்.: அன்புடைமையும், அறிவுடைமையும், தெரிந்த சொல் வன்மையுடைமையும், தூதுரைப்பாற்கு இன்றியமையாத மூன்று குணங்களாம் எ—று.

இத்துணையும் தூதர் இலக்கணம் கூறியவாறு.

ஆ) பரிதி.: அரசன்மேல் அன்புடைமையும், அறிவுடைமையும், அரசற்கு இழுக்கம் வாராத சொற்சொல்லும் சொல்வன்மையும் உள்ளவன் தூதன் எ—று.

இ) பரிப். : அன்பு உடைமையும், அறிவு உடைமையும், தெரிந்த சொல்வன்மை உடைமையும் என்னும் மூன்றும் தூது உரைப் பார்க்கு இன்றியமையாதது எ—று.

ஆராய்ந்த என்றமையால் கல்வி ஆயிற்று, மேற்கூறிய குணங்கள் எல்லாவற்றினும் இவை மூன்றும் இன்றியமையாதன என்று கூறிற்று, இத்துணையும் தூதர் இலக்கணம் கூறிற்று.

ஈ) காளி.: அரசர்மாட்டு அன்பு பெரிது உடைமையும், இயற்கையானும் தெளிந்த அறிவு உடைமையும், சொல்லும் சொல் ஏற்றத்தாழ்வு இல்லாத சொல்வன்மையும் என்னும் இம்மூன்றும் அரசர்க்குத் தூது உரைக்கும் அமைவுடையோர்க்குப் பெரிதும் இன்றியமையாது எ—று.

உ) பரிமேல்.: தம் அரசன்மாட்டு அன்புடைமையும், அவனுக்கு ஆவன[1] அறியும் அறிவுடைமையும், அவற்றை[2] வேற்றரசரிடைச் சொல்லுங்கால் ஆராய்ந்து சொல்லுதல் வன்மையும் எனத் தூது உரைக்க உரியார்க்கு இன்றியமையாத குணங்கள் மூன்று.

ஆராய்தல் — அவற்றிற்கு[3] உடம்படும் சொற்களைத் தெரிதல். இன்றியமையாத மூன்று எனவே, அமைச்சர்க்குச் சொல்லிய பிறகுணங்களும் வேண்டும் என்பது பெற்றாம். இவை இரண்டு பாட்டானும் இருவகையார்க்கும்[4] பொதுவிலக்கணம் கூறப்பட்டது

காரி:. ஆராய்ந்த சொல்வன்மை — ஆராய்ந்து சொல்லுதல் வன்மை என்றமையால் சொல் முதனிலைத் தொழிற்பெயர். ஆராய்ந்த எனப்பெயரெச்சமாக உரையாது வினையெச்சமாக உரைத்தல் காண்க. முருகாற்றுப்படையுள் ''சீரைதைஇய'' என்றதற்கு உரைத்தாங்கு உரையாது 'திலகந்தைஇய' என்பதற்கு வினை எச்சமாக உரைத்தலும், 'உரையிடத்தியலும் இடனிலை அறிதல்''[5] என்னுஞ் சூத்திரத்துள்

1. ஆவன - நன்மைத் தருவன
2. அவற்றை - அன்புடைமையையும் அறிவுடைமையையும்
3. அவற்றிற்கு முற்கூறிய இரண்டற்கும்
4. இருவகையார்க்கும் - வகுத்துக் கூறுவானும் கூறியது கூறுவானுமாகிய இருசாரார்க்கும்
5. தொல்.சொல். 488 நச்சி.உரை

"பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்" என்பதனையும் 'ஆடிய கூத்தனும் வந்தான்; அவனொடு கூடிய கூத்தியுங் கொண்டு' எனவும் காட்டி இவற்றைப் பெயரெச்சம் வினை யெச்சமாகத் திரிந்தது எனவும் நச்சினார்க்கினியரும் உரைத் தார் என்க.

ஊ) கவிராசர் : தன்னுடைய அரசனிடத்திலே தயையுடை யவனும், தன் அரசனுக்கு ஆகிற காரியத்தையறியும் அறிவுடை யவனும், அந்தக்காரியத்தை மறுமண்டலத்து அரசர்களுடனே சொல்லுகிறபோது ஆராய்ந்தறிந்து சொல்லுகிறவனுமாயிருக் கிறவனே தூதனாவான் எ—று.

ஏ) பழைய2 : தம்மரசரிடத்து அன்புடைமையும், அவருக்காவன அறிவுடைமையும், வேற்றரசனிடை சொல்லும்போது ஆராய்ந்து சொல்லுஞ்சொல் வன்மையும் எனத் தூதுரைக்க உரியார்க்கு இன்றியமையாத குணங்கள் மூன்று.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

ஆசிரியர் முதற்குறளில் 'அன்புடைமை முதலிய தூதுரைப் பான் பண்பு' என்றார். இக்குறளில் 'அன்பு அறிவு முதலிய மூன்றும் தூதுரைப்பார்க்கு இன்றியமையாதன' என்றார். இரண்டி லும் அன்பு வருவதால் உரையாசிரியர்கள் அன்புடைமைக்கு மக்கள், மன்னர், நாடு என்றெல்லாம் இடம் கூறுவதில் மாறு பட்டனர். இக்குறளில் 'அன்பு, அரசனிடம் காட்டும் அன்பு' என ஒருமுகமாகக் கூறினார். ஒன்றை உளங்கொளல் நன்று; முற்கூறிய மூன்றும் 'தூதுரைப் பண்பு' என்றனர். இக்குறள் கூறும் மூன்றும் 'தூதுரைப்பார்க்கு இன்றியமையாதன' என்றார். பண்பு என்பது பண்பியைவிட்டுப் பிரியாத குணம். இன்றியமையாதன என்ற சொல்லாட்சியே வலிதாகப் பற்ற வேண்டிய பண்பு என்பதை விளக்குகிறது. ஆகவே இக்குறள் கூறும் அன்பு மேற்கொண்ட தொழிலுக்காக அன்பைக் காட்ட வேண்டாதாரிடத்தும் காட்டுதல் இன்றியமையாதது. அங்ஙனமே அறிவு உயிர்ப்பண்பாய் என்றும் உளதாயினும் நுண்ணிய நூல் பலகற்றதாலான கல்வியறிவையும், சூழ்நிலையறிவும் செயற்கை யறிவையும் கருதுவது. அவற்றால் ஆவன இந்நேரத்தில்

இன்னசொல் சொன்னால் எதிரி ஐயுறான்; தன் உண்மைகளை யுரைப்பான் என்று எதிர்பார்த்து அதற்கேற்ற சொல்லை ஆராய்ந்து தெளிந்து சொல்லுதலாகிய செயற்கைப் பண்பாம் இங்ஙனம் எண்ணும்போது முதற்குறளிற் கூறிய மூன்றும் இயற்கைப்பண்பு. இக்குறள் கூறுவமூன்றும் செயற்கைப் பண்பு இவ்வேறுபாட்டை உளங்கொண்டு அன்பு அறிவென்பவற்றிற்கு உரைகோடல் தகும்,

தூதனும் மக்களுள் ஒருவனேயாவன் ஆதலால் அவனுக்குத் தொடர்புடையார்கண் காதலுடையவனாதல் வேண்டும் என் பதை அறத்துப்பாலிலே அன்புடைமையான் விளக்கிப் போந்தமையின் ஈண்டும் உரைத்தல் வேண்டா. ஆதலால் முதற் குறளிற் கூறியது நாட்டுப்பற்றும், இதிற் கூறியது இறைப் பற்றுமேயாகக் கோடல் ஏற்புடையது. இங்ஙனமே அறிவிற்குக் கொள்க முன்னர் அறிவுடைமையிற் கூறிய எண்பொருளவாக அற்றங்காக்கும் கருவியாகத் திறனறிந்து மறைபிறரறியாமைச் சொல்லுதலுமாகிய பண்புகளே சொல் வன்மையிற் கூறப்படு வன இங்ஙனம் முன்னோடு பின் முரணாமையும், கூறியது கூறலாகாமையுங் கண்டு கூறும் உரைகள் ஏற்புடையன.

வரத 'அன்பு நிறைந்த மனமும், நன்மைதீமையறியும் பகுத்தறிவும், சொன்னபடிப் பிறரைச்செய்யத்தூண்டும் சொல் வன்மையும் இன்றியமையாதன' என்பர். இவற்றுள் முதலிரண்டும் மக்கட் பொதுமைக்குள்ள பண்புகள்; பின்னது தூதின் செயல் அன்று தூதன் நிலையறிந்து சொன்னபின் அரசன் பாலதாகிய செயல் ஆதலால் இவ்வுரை ஆழ்ந்து சிந்தித்துத் தெளிதற்குரியது. மு.கோ. சொல்வன்மையைத் தன் வேந்தனிடம் அன்புச் சொல்வன்மையையும், பகைவேந்தனிடம் அறிவுச் சொல்வன் மையையும் உடையவன் என இரண்டாகப் பிரிப்பர். இராம. 'அன்பு— தூதாகச் சொல்லப்போகிற காரியத்தில் ஆர்வம்; அறிவு பேசப் போகிற விஷயத்தைப் பற்றிய அறிவு, பேசும்போது சொற்களைப் பொறுக்கி எடுத்துப் பேசும் நாநலம்' என்பர். இவ்வுரை முதற் குறளின் அன்புடைமை முதலியவற்றிற்குக் குற்றம் நேராமற் சித்தித்து எழுதிய உரைகளில் ஒன்று. இங்ஙனமே அறிவு 684 என்ற குறளில் வருதலால் இவற்றிடை வேறுபாடு கண்டு தெளிக

ஓ) ஒப்புமைப்பகுதி :

சொல்வன்மை :

கற்றவர் கற்றன கருதுங் கட்டுரைக்கு
உற்றன உற்ற உரைக்கும் ஆற்றலான்
மற்றவன் மருசியே அவனை நாம்விடச்
சுற்றமும் கருமமும் சொல்ல வல்லனே. — சூளா.,427

முன்னிய உலகநூலும் குலங்களும் முறையும் உள்ளிட்டு
இன்னவா றறியுநீரார் இல்லை —சூளா.,564

ஒப்பமாய் உரைக்க வல்லான் ஒருவன் —சூளா., 108

... ... ... ... ... நவைதீரச்
சொல்லவும் வல்லீர் ... ... ... — கம்ப.,4828

அறிவு

குலமுதற் றொன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனும் எய்தினான். —கம்ப.,1404

முற்றும் :

மாண்டமைந்தார் ஆய்ந்த மதிவனப்பே வன்கண்மை
ஆண்டமைந்த கல்வியே சொல்லாற்றல் — பூண்டமைந்த
கால மறிதல் கருதுங்கால் தூதுவர்க்கு
ஞாலம் அறிந்த புகழ். —ஏலாதி.,21

அன்புடைமை யாய்ந்த வறிவுடைமை யிற்பிறப்பு
நன்குடைமை நல்ல நயனுடைமை — நன்கமைந்த
சுற்றமுடைமை வடிவுடைமை சொல்வன்மை
கற்றடங்கல் தூதின் கடன். —பாரதவெண்பா.,

69.3. நூலாருள் நூல்வல்ல னாகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு. (683)

உரைப்பகுதி :

அ) மணக். : 'நூலார்முன்', 'வேலார்முன்' பாடம்.

எல்லா நூல்களையும் கற்றார் முன்னர் அந்நூல்களைத் தானும் சொல்ல வல்லவனாதல், வேலுடையார் முன்னின்று தன்னரசனுக்கு வெற்றியாகிய வினையைச் சொல்லுமவனது இயல்பாம் எ—று.

ஆ) பரிதி.: கல்வியுள்ளார் தான்கற்ற கல்விவிளங்குதல் வெண்பா மாலையை[1] வெல்லுதற்கு ஒக்கும் எ—று.

இ) பரிப்.: 'நூலார்முன்', 'வேலார்முன்' பாடம்.

பல நூல்களையும் கற்றார் முன்னர் அந்நூல்களைத் தானும் சொல்ல வல்லன் ஆதல், வேலுடையார்முன் நின்று தன் அாசனுக்கு வெற்றியாகிய வினையைச் சொல்லுமவன் இயல்பு எ—று.

ஈ) காளி.: 'நூலாரின்' பாடம். பலவகைப்பட்ட நூல்களையும் கற்று வல்ல சான்றோரினும் சமையக் கற்று[2] வல்லானாய் இருக்கின்றது யாது மற்று அது வேல்வேந்தர் மாட்டுச் சென்று தன் அரசர்க்கு வென்றிக் கருமம் சொல்லுவானது மரபு எ—று.

எனவே அரசரும் யாவையும் மற்றுளோரும் அனைத்தும் அறிந்த தன்மையர் ஆகலான் அவர்மாட்டுச் சென்று உரைக்கும் இடத்துக்கல்வியும் திருத்தம் வேண்டும் என்பது கருதி இவர்க்கு நூல் வன்மை எடுத்து உரைத்தது என அறிக. சூழ்ச்சியாளரில் சூழ்ச்சி பெரிது உடையன் ஆதல் என்றும் ஆம்.

உ) பரிமேல்: வேலையுடைய வேற்றரசரிடைச் சென்று தன்னரசனுக்கு வென்றிதரும் வினையைச் சொல்லுவானுக்கு இலக்கணமாவது, நீதிநூலை உணர்ந்த அமைச்சரிடைதான் அந்நூலை வல்லனாதல்.

கோறன்மாலையர் என்பது தோன்ற 'வேலார்'[3] என்றும், தூது வினை இரண்டும்[4] அடங்க 'வென்றிவினை' என்றும்

---

1. வெண்பாமாலை —இக்குறளின் தொகுப்பும் குறிப்பும் காண்க
2. சமையக் கற்று —பொருந்தக் கற்று
3. வேலார் — தலைமை பற்றிக் கூறியது, வேல் மற்றப்படைகட்கும் உபலட்சணம்
4. தூதுவினை இரண்டும் — பொருத்துதலும் பிரித்தலும் ஆகிய இரண்டும்

கூறினார்.வல்லனாதல் - உணர்வு மாத்திரம் உடையராய அவர்[5] முன் வகுக்கும் ஆற்றலுடையனாதல்.

ஊ) கவிராசர் : வேலாயுதங்களையுடைய மறுமண்டலத்து அரசர்களண்டையிலே போய்த் தன் அரசனுக்கு வெற்றிதருங் காரியத்தைச் சொல்லுகிறவனுக்கு இலக்கணமாவது, நீதி நூலை யறிந்த மந்திரிகளைப் பார்க்கிலும் தான் அந்நீதிநூல்களைக் கற்றுவல்லனாதல் எ - று.

ஏ) பழைய 2 : வேலையுடைய வேற்றரசரிடைச் சென்று தன்னரசனுக்கு வெற்றிதரும் வினையைச் சொல்லும் தூதனுக்கு இலக்கணமாவது, நீதிநூலையறிந்த அமைச்சரிடைத் தானும் அந்நூலை வல்லவன் ஆதல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும். :

மணக். உரை 'நூல்வல்லனாதல் வினையுரைப்பான் பண்பாம்' என்பது. இது 'ஆதல்' வினைமுதலாய்ப் 'பண்பு ஆம்' என்ற வினையைக் கொண்டது. இவ்வதிகாரம் தூது. அவனியல்பு வேலார்முன்வென்றியுரைத்தல். இதுவே வினை முதலாதற்கு ஏற்றது ஆதலால் பண்பு வல்லனாதல்(போல்வதாம் அல்லதுஆம்) என்றிருத்தலே நலம். இதுவே 'ஆதல் பண்பாம்' என முடித்துக் காட்டிய மணக்குடவர் நோக்கமும் ஆகும். உரையும் ஓசெய்யுளாதலின் குறட்போக்கிலே உரை எழுதியமைந்தார் எனலாம்.

பரிதி. : பெரும்பாலும் கருத்துரை வழங்குபவர் 'அது கற்றவன் கல்வி விளங்குதல் வெணபாமாலையை வெல்லுதற்கு ஒக்கும்' என்பது ஆதலால் இவர் கண்ட பாடம் 'வெண்பாவான் வென்றியுரைப்பான்' என்பதாகலாம், ஆனால் எமமிடம் உள்ள ஏட்டில் இப்பாடம் இல்லை என்பது எணணத்தக்கது. வெண்பாமாலையை வெல்லுதலாவது மன்னன் பல போரில் கண்ட வெற்றியைப் பாராட்டி வெண்பா யாப்பான் மாலைபாடுதல் உண்டு. அது வீரவெண்பாமாலை எனப்படும் என்பதனை,

''ஏடியல்மாலை யணிந்தாலும் வாடுமெனப் புலவர்
பாடியவீரவெண் பாமாலையைப் பொன்னின் பாண்டியன்
போர்

5. அவர்முன் — நீதிநூல் கற்ற அமைச்சர்கட்கு முன்பு

தேடியவேற் செழியன்குல சேகரத் தென்னனைப் போற்
சூடிய வேந்தருண் டோவொரு வேந்தரைச்
சொல்லுகிலே'' (பெருந்

தொகை. 954) என்ற (வீரவேள்) குலசேகரபாண்டியன் பாடல் தெரிவிக்கும். ஆதலால் ஒரு மன்னனுடையவீரவெண்பா மாலையை மாற்ற வேணடுமானால் அவனை வெல்லும் மன்னனால் தானியலும். அவனை வென்றான் என்பார் அவன் வெண்பாமாலையை வெல்லுதற்கு ஒக்கும் என்றார் எனலாம். ஆகையால் இவர் கண்டபாடம் 'வெண்பாவான்' என்றேயிருந் திருக்கலாம் எனத் துணியவும் செய்யலாம். சான்றுகாட்டின் திருத்தலாம்.

காளிங்கர் 'கற்றலினும் கற்றுவல்லனாதலே வேலார் முன் வென்றியுரைப்பான் பண்பாம்' என்பர். மேலும் 'வென்றி யுரைக்கும் தூதன் கற்று வல்லனாகவும் இருத்தல் வேண்டும்' என்பர். சூழ்ச்சிபெரிதுடையன் ஆதல் என்ற கருத்துப்பொருளே யாதலைக் காண்க.

பரிமேலழகரும் காளிங்கர் கருத்தையுட்கொண்டு 'வென்றுயுரைப்பான பண்பு அதாவது அவணிலக்கணம் கற்று ணர்ந்த அமைச்சரிடைத்தானும் அந்நூலில் வல்லனாகுதல்' என்பர். கவிராசருரையும் பழைய உரையும் இங்ஙனமே கருதும்.

இவைகளில் மணக்குவடரும் பிறரும் அவையஞ்சாமை யில் ஆசிரியர் ''கற்றாருள் கற்றார் எனப்படுவர்; கற்றார்முன், கற்றசெலச் சொல்லுவார்'' (722) என்ற குறளால் பின்னர்க்கூறப் போவதால், ஈண்டு அதனை உவமையாகக் கொண்டு 'வென்றியுரைப்பான் பண்பு நூல்வல்ல னாதல் போலும்' என்றனர். பரிமேலழகருரையும் பிறரையும் போல நூல் வல்லனாதலும், அவன் பண்பு எண்ணாது, இங்ஙனம் கூறிய மணக்குடவர் உரை சிறத்தல் காண்க

ஓ) ஒப்புமைப்பகுதி :

நூலாருள் நூல்வல்லன் ஆகுதல்:

நூற்கிடங் கொடுத்த கேள்வி நுண்செவி. — சீவக, 2916

குலமுதற் றொன்மையும் கலையின் குப்பையும்.
பலமுதற் கேள்வியும் பயனும் எய்தினார். — கம்ப., 1404

... ... அறிவின் வாய்த்த மந்திரம் — கம்ப., 42.6

நூல்வலி காட்டுஞ் சிந்தை நுண்பெருந் தூதன் — கம்ப.,7063

69.4. அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு (684)

உரைப்பகுதி :

அ) மணக் : அறிவும், வடிவும், தெரிந்த கல்வியுமாகிய இம் மூன்றினது அடக்கமுடையவன் வினைக்குச் செல்க.

ஆ) பரிதி. : அறிவுடைமை, அழகு, கல்வி இம்மூன்றும் உள்ளான் தூது செல்வான் எ-று.

இ) பரிப். : அறிவும் வடிவும் தெளிந்த கல்வியும் இப்மூன்றினது அடக்கம் உள்ளவன் வினைக்குச் சொல்லுக எ-று.

அறிவு—இயற்கை அறிவு. உருவு—வடிவு அழகு ஆராய்ந்த கல்வி—கலைகளை அறிந்து ஆராய்ந்ததனால் ஆட்சியான கல்வி, இவையிற்றினது அடக்கம் ஆவது—இம்மூன்றினால் வரும் பெருமிதத்தை அடக்கி ஒழுகுதல்.

ஈ) காளி : முன்னமே தான் இயல்பாக அறிவு உடையன் ஆதலும், மன்னரும் பிறரும் மகிழ்ந்து அணைத்தற்கு உரிய வடிவு உடையன் ஆதலும், கீழ்ச்சொன்னவரம்பின் அன்றி மற்றும் பல ஆராய்ந்த கல்வி உடையன் ஆதலும் என்னும் இம்மூன்றினையும் உடையனவாய் இருக்கின்றான் யாவன்? மற்று அவன் செல்வானாக அரசர் காரியத்துக்கு எ-று.

உ) பரிமேல். : இயற்கையாகிய அறிவும், கண்டார் விரும்பும் தோற்றப் பொலிவும்[1], பலரோடும்

1. தோற்றப் பொலிவு —வடிவின் விளக்கம்

பலகாலும் ஆராயப்பட்ட கல்வியும்என நன்குமதித்தற்கு ஏதுவாய[2] இம்மூன்றனது கூட்டத்தை உடையான் வேற்று வேந்தரிடைத் தூது வினைக்குச் செல்க.

இம்மூன்றும்[3] ஒருவன்பால் கூடுதல் அரிதாகலின், 'செறிவுடையான்' என்றார். இவற்றான் நன்கு மதிப்புடையனாகவே வினை இனிது முடியும் என்பது கருத்து.

ஊ) கவிராசர் : சுபாவமான அறிவும், கண்டபேர் சந்தோஷிப்படத்தக்க நல்ல வடிவும், ஆராய்ந்து அறிந்த கல்வியும் இந்த மூன்று குணமுடையவன் தூது போக வல்லவன் எ-று.

எ) பழைய : 'மூன்றின்' பாடம்.

இயற்கையறிவும், கண்டார் விரும்புந்தோற்றப் பொலிவும், பலரோடும் பலகாலும் ஆராயப் பட்ட கல்வியும் என நன்கு மதித்தற்கு எதுவாகிய இம்மூன்றினது செறிவு முடையான் வேற்று வேந்தரிடைத் தூது சொல்லும் வினைக்குச் செல்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அறிவு— இயற்கையறிவு'. 'உரு—அழகு அல்லது தோற்றப் பொலிவு' என்பன மணக்குடவர் முதலான தொல்லாசிரியர் கண்ட உரை, இராம. 'சமயோசித அறிவு' என்பர்.

வரத.'உரு—கம்பீரமான தோற்றம் பகைவரும் அஞ்ச' ஏனையோர் மதிக்கத்தக்க தோற்றம்' என்பர்.

'ஆராய்ந்த கல்வி'

'தெரிந்த' 'பல' 'ஆராய்ந்த கல்வி,'பலரோடும் பலகாலும் ஆராய்ந்த கல்வி' என்பன பழைய உரைகள். தேவநேயர் 'பல நூல்களைப் பலருரையுடன் கற்று உலகியலோடு பொருந்த ஆராய்ந்த கல்வி' என்பர்.

'செறிவு' 'அடக்கம்' மணக்., 'கூட்டம் என்பர். பரிமேலழகர். மணக்குடவர் உரைக்குப் பரிப்பெருமாள் விளக்கமாகிய' 'இம்மூன்றினாலும் வரும் பெருமிதம் 'என்பது நயமான கருத்து.

ஒ) ஒப்புமைப்பகுதி :

கல்வி :

---

2. நன்கு மதித்தற்கு ஏதுவாய - மிகப் பாராட்டுதற்கு ஏதுவாய

3. இம்மூன்றும்—அறிவு, உருவு, ஆராய்ந்த கல்வி இம்மூன்றும்

நூற்கிடங் கொடுத்த கேள்வி நுண்செவி — சீவக., 2916

குலமுதற் றொன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனும் எய்தினார். — கம்ப., 1404

அறிவு :

………… ………… அறிவின் வாய்ந்த மந்திரம் — கம்ப., 4226

*69.5. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி*
*நன்றி பயப்பதாம் தூது. (685)*

உரைப்பகுதி:

அ) மணக்.: சுருங்கச்சொல்லி, விரும்பாத சொற்களை நீக்கி, மகிழுமாறு சொல்லி, தன் அரசனுக்கு நன்மையைத் தருமவன் தூதனாவன் எ-று.

ஆ) பரிதி.: தொகுத்துச் சொல்லி நல்லவையுட்கொண்டு அரசன் மனமும் முகமும் மகிழச்சொல்லுவான் தூதன் எ-று.

இ) பரிப்.: சுருங்கச் சொல்லி விரும்பாத சொற்களை நீக்கி மகிழுமாறு சொல்லித் தன் அரசனுக்கு நன்மையைத் தரும் அவன் தூதன் ஆவான் எ-று.

இது சொல்லுமாறு கூறிற்று.

ஈ) காளி.: இங்ஙனம் ஆராய்ந்து தகுவன சொல்லுமிடத்தும் பொருள் பொதிந்த சொல்லினைச் சுருங்கச் சொல்லி, அங்ஙனம் சுருங்கச் சொல்லுமிடத்தும் பயன்படாத சொல்லினை நீக்கி, மற்று அச்சொல்வது தன்னையும் கேட்டவர் மகிழ்ந்து முகமலரு மாறு சொல்லிப் பின்னும் இவ்வாறு சொல்லுதலே அன்றி மற்று அவரால் தன் அரசர்க்கு வேண்டும் நன்மையைத்தர வல்லதாம் தூதாவது எ-று

தூவாத நீக்கி என்பது பயன்படாத ஒழித்தல் என்றது.

உ) பரிமேல்.: வேற்றரசர்க்குப் பலகாரியங்களைச்சொல்லும் வழிக் காரணவகையால் தொகுத்துச் சொல்லியும், இன்னாத காரியங்களைச் சொல்லும்வழி வெய்யசொற்களை[1] நீக்கி இனிய சொற்களான் மனமகிழச் சொல்லியும், தன் அரசனுக்கு நன்மை யைப் பயப்பவனே தூதன் ஆவான்.

---

1. வெய்ய சொற்களை - கொடுஞ் சொற்களை

பல காரியங்கட்கு உடம்படாதார் பரம்பரையான்[2] அவற்றிற்குக் காரணமாய தொன்றைச் சொல்ல அதனால் அவை விளையுமாறு உய்த்துணர[3] அருமையானும் சுருக்கத்தானும்[4] உடம்படுவர்; இன்னாதவற்றிற்கு உடம்படாதார் தம்மனம் மகிழச் சொல்ல அவ்வின்னாமை காணாது உடம்படுவர் ஆதலின், அவ்விருவாற்றானும்[5] தன் காரியம் தவறாமல் முடிக்க வல்லான் என்பதாம். எண்ணும்மைகள் விகாரத்தால் தொக்கன.

காரி.: எண்ணும்மை விகாரத்தால் தொக்கது. எண்ணும்மை தொகுவது, உம்மைத்தொகை விதியாயிருந்தும் அதனை விகாரம் என்றது ''வினையொடு நிலையினும் எண்ணு நிலை திரியா''[6] என்னுஞ் சிறப்புவிதிபற்றி என்க.

ஊ) கவிராசர்: வேற்றரசருக்குத் தன் அரசன் சொன்ன காரியங்களைச் சொல்லும் வழி நன்றாய்த் தெரியச் சொல்லியும், பொல்லாத காரியங்களைச் சொல்லுகிறபோது கடினவார்த்தைகளைச் சொல்லாமல் நல்ல வசனங்களினாலேயே அவன்மனது குளிரச் சொல்லியும், தன் அரசனுக்கு நன்மைவர நடக்கிறவனே தூதனாம் எ-று.

எ) பழைய 2: வேற்றரசர்கட்குப்பல காரியங்களையும் சொல்லும்போது, விரிவாகச் சொல்லாமல் தொகுத்துச் சொல்லியும், பொல்லாத காரியங்களைச் சொல்லும்போது வேந்தருக்குக் கோபம் வாராமல் பொல்லாத சொற்களை நீக்கி இனிய சொற்களான் உபாயமாக மன மகிழ்ச்சியாகச் சொல்லியும் தன்னரசனுக்கு நன்மையைச் செலுத்துபவனே தூதனாவான்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'தொகச் சொல்லி'

'சுருங்கச்சொல்லி' மணக்., 'பொருந்தச் சொல்லி' பரிதி., 'இங்ஙனம் ஆய்ந்து தகுவன சொல்லினும், சுருங்கச்

---

2. பரம்பரை - தொடர்ந்துவரும் மரபு 3. உய்த்துணர - ஆய்ந்தறிய

4. சுருக்கத்தானும் — சுருங்கச் சொல்லுதலானும்

5. அவ்விருவாற்றானும் — தொகச் சொல்லுதலானும், தூவாத நீக்கி நகச் சொல்லுதலானும்

6. தொல். சொல்.295

சொல்லி' என்பர் காளி., 'காரணவகையாற்றொகுத்துச் சொல்லுதல்' பரிமேல். : 'நன்றாகத் தெரியச் சொல்லி' கவிராசர்; 'விரிவாகச் சொல்லாமல் தொகுத்துச் சொல்லியும்' என்பர் பழைய உரைகாரர். இவற்றுள் பரிதி. உரையும், பரிமேலழகர் தரும் விளக்கமும் ஏற்புடையன.

'பல காரணங்களை எடுத்துச் சொல்லி' மு.ரா.அரு.; 'காரணகாரிய இயைபுபடத் தொகுத்துச் சொல்லி' கா.சு.; 'தொகுத்துச் சொல்லி' சபாபதி; 'தொகுத்துச் சொல்லவேண்டியதைத் தொகுத்துச் சொல்லுதல்' குழந்தை, சாமி.சிதம்.; 'மிகுதியாகப் பேசாமையும்' மு.கோ.; 'தொகுத்துச் சொல்லி' சி.இ.; 'விடாதுசொல்லி' வ.சுப.மா.; 'மூலவகையாலும், ஒப்புமை வகையாலும், சுருக்க வகையாலும், தொகுத்துச் சொல்லி' தேவநேயர்: 'வரிசைப் படுத்தித் தொகுத்துச் சொல்லி' வரத.; ஒழுங்குபடக்கோத்துச் சொல்லி' இராம.

'தூவாத நீக்கி'

'விரும்பாத சொற்களை நீக்கி' மணக்.; 'நல்லவையுட்கொண்டு' பரிதி ;'பயனிலவாகிய சொற்களை நீக்கி' காளி.; 'தூவாத நீக்கி நகச் சொல்லி' என இணைத்து 'வெய்ய சொற்களாற் சொல்லாமல் இனிய சொற்களால் மனமகிழச் சொல்லி' என்பர் பரிமேலழகர், கவிராசர்' பழைய உரை2.

இராம.'சொல்லத் தகாத குற்றமான சொற்களை நீக்கி' என்பர், வரத., 'வேற்றரசற்கு ஒவ்வாதனவற்றை விளக்கியும் அவற்றையே அவன் மகிழும்படியாக இனிமைப்படுத்தியும்' என்பர். தேவநேயரும் இக்கருத்தினரே. சி. இ. 'இன்னாச் சொற்களின்றி' என்பர். குழந்தை 'கடுஞ்சொல்லின்றி' என்பர். இவற்றுள் வரத. உரை இருவகையான் தூவாமை நீக்குவதைச் சொல்வதால் நயமிக்கது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

தொகச் சொல்லி ;

வயலைக் கொடியின் வாடிய மருங்குல்

உயவல் ஊர்திப் பயலைப் பார்ப்பான்
எல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே அதற்கே
ஏணியும் சீப்பும் மாற்றி
மாண்வினை யானையும் மணிகளைந் தனவே. -புறம்., 305

69.6 கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாம் தூது. (686)

உரைப்பகுதி :

அ) மணக். : தன்னரசன் சொன்ன மாற்றத்தைச் சொல்லுங்கால் பகையரசன் வெகுண்டானாயின் அது மாற்றுதற்காம் உபாயத்தைக்கற்று, அவ்விடத்தினும் அஞ்சுதலின்றி, மகிழ்ச்சி வருமாறு இசையச் சொல்லி நாளோடே கூடச் செய்யத் தகுவன அறிந்து சொல்ல வல்லவன் தூதனாவான் எ—று.

ஆ) பரிதி:. மந்திரி நூல் கற்று ஆஸ்தானம் அஞ்சாதவனுமாய் அரசன் செவிக்கு ஏறச் சொல்பவனுமாய்க் காலம் அறிவன் தானாபதி எ—று.

இ) பரிப். : தன் அரசன் சொன்ன மாற்றத்தையே சொல்லுங்கால், பகை அரசன் வெகுண்டானாயின், அது மாற்றுதற்கு ஆம் உபாயத்தைக் கற்று, அவ்விடத்து அஞ்சுதல் இன்றி வெகுட்சி தீருமாறு இசையச் சொல்லி, நாளோடே கூடச் செய்யத் தகுவன அறிந்து செய்ய வல்லவன் தூதன் ஆவான் எ—று.

தக்கது அறிதலாவது சொல்லின வார்த்தையைச் சொல்லாமல் போதலும் வினை செய்து போதலும். இஃது இவ்விடத்திற்கு ஆவன செய்ய வேண்டும் என்றது.

ஈ) காளி. : இராச நீதிக்கு ஏற்ற நூல்களை இனிது உணரக் கற்றும், இகல் வேந்தர் முன்னர்ச் சென்று உரைக்குமிடத்துத் தறுகண்மையும்[1] வேண்டுங்கால் உடையனாய், வேண்டாக்கால் அவர் செவிக்கு இனிது சொல்லுமாறு சொல்லிச் சொல்லுதற்கு அமைந்த காலத்தையும் கடைபிடித்து ஏற்றத்தாழ்வு படாமல் சொல்லத்தக்கதனையே அறிந்து சொல்லுவது யாது, மற்று அதுவேயாம் தூது என்று சொல்லப்படுவது எ—று.

1. தறுகண்மை - அஞ்சாமை

உ) பரிமேல். : நீதி நூல்களைக்கற்று, தான் சென்ற கருமத்தைப் பகைவேந்தர் மனங்கொளச் சொல்லி, அவர்செயிர்த்து[2] நோக்கின் அந்நோக்கிற்கு அஞ்சாது, காலத்தோடு பொருந்த அது[3] முடிக்கத்தக்க உபாயம் அறிவானே தூதனாவான்.

அவ்வுபாயம் அறிதற்பொருட்டு நீதி நூற்கல்வியும், அதனானன்றிப் பிறிதொன்றான் முடியுங்காலம் வரின் அவ்வாறு முடிக்க வேண்டுதலின் காலத்தால் தக்கது அறிதலும், இலக்கண மாயின.

ஊ) கவிராசர். : நீதி நூல்களைக் கற்றுத் தான்போன கரு மத்தைப் பகையாளி மனசு சந்தோஷப்படச் சொல்லுகையிலே, அவர்கள் கோபித்துக்கொள்ளுகிறதுக்குப் பயப்படாமல, காலத் துக்குத் தக்க உபாயம் அறிகிறவனே தூதனாம் எ—று.

ஏ) பழைய2 : நீதி நூல்களைக் கற்றுத் தான்சென்ற கருமத் தைப் பகைவேந்தர் மனங்கொளச் சொல்லி, அவர் கோபித்து நோக்கின் அந்நோக்கிற்கஞ்சாது, காலத்தொடு பொருந்தக் காலதாமதமில்லாமல் முடிக்கத்தக்க உபாயமறிவானே தூதனா வான்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

''கற்று''

''பகையரசன் வெகுளினும் அதனை மாற்றற்குரிய உபாயங்கற்று' மணக் ; 'நூல்பல கற்று'' பரிதி ; 'இராசநீதிக் கேற்ற நூல்களைக்கற்று' காளி : 'நீதி நூல் களைக்கற்று' பரிமேல்., கவிராசர், பழைய. உரை. கா சு. மு.ரா.அரு., சபாபதி, சாமி சிதம் ; 'அறநூல்களைக் கற்று' குழந்தை: 'அரசியல்நூல்களைக்கற்று' சி இ. ; 'அற அரசியல் நூல்களைக்கற்று' தேவநேயர்; ''கற்பன அனைத்துங் கற்று'' வரத. ; இவற்றுள் 'கற்பனகற்று' என்னும் பொதுமை கூறும் உரையினும் 'அறநூல்களையும் அரசாட்சி நூல்களையும்

2. செயிர்த்து - சினந்து

3. அது - தான் வந்த காரியத்தை

கற்று' என்னும் உரைகளே சிறந்தவை. அவற்றினும் மணக்குடவருரை தூதிற்கு இன்றியமையாத கல்வியை உணர்த்துதலின் சிறந்தது. இவர் 'கண்ணஞ்சான் கற்று' எனக்கூட்டிப் பொருள் கண்டிருப்பர் போலும்.

பிற்கால உரையாசிரியர்களில் இராம கற்று — 'நிலைமையை உய்த்தறிந்து' என்பர். 'கல்வியைக் கற்று' என்பது இயைபுடையது அன்று என மறுப்பர்.

'கண் அஞ்சான்'

'ஆஸ்தானம் அஞ்சாதவனாய்' பரிதி.; 'இகல்வேந்தர் முன்சென்று உரைக்குங்கால் தறுகண்மை உடையனாதல்' காளி.; 'செயிர்த்து நோக்கின் அந்நோக்கிற்கு அஞ்சாது' பரிமேல., கவிராசர், பழைய 2; இவர்கள்' செலச்சொல்லி கண் அஞ்சான்' என இயைத்துப் பொருள் கண்ட வர்கள் ஆவர். 'காலத்தால்'என்பதனைக் காலத்தொடு என உடனிகழ்ச்சிப்பொருளதாக மாற்றிப் பொருள் கொள்வர் மணக்., பரிமேலழகர்.

'காலத்தாற்றக்கது'

'சமயசந்தர்ப்பங்கட்குத் தக' என்பர் வரத.: 'செலச்சொல்லி பகைவரும் ஏற்கச் சொல்லி; தக்கது அறிவது-பகைவன் சூழ்நிலையை அறிதல்' என்பர் இராம ; 'தக்கதறிவதாவது நூலறிவு பயன்படாதவிடத்துத் தன் மதிநுட்பத்தாலும், உலகியலறிவாலும், சமயத்திற்கேற்றவாறு தக்கவழிகளைக் கையாளுதல்' என்பர் தேவநேயர். சி.இ, குழந்தை, சாமி.சிதம்., சபாபதி, பரிமேலழகர் கருத்தை ஒட்டியே உரைப்பர்.

மு. கோ. 'கண்ணஞ்சாமை-சொல்லேருழவர்க்கும் அஞ்சாமை' என்பர். இது இயைபுடையதாயின் ஏற்கலாம். 'கற்று சொல்லவேண்டியதை நன்கறிந்து' கா சு.; காலத்தாற்றக்கதறிதலாவது 'இப்போது காரியம் முடியாவிட்டாலும் முடியும் காலம் பார்த்து' என்பர் மு.ரா அரு.; 'சமயத்திற்கு ஏற்றதறிந்து' என்பர் வ. சுப. மா.; பரிப்பெருமாள் தரும் விளக்கம் சிறந்தது.

உரையனைத்திலும் பொதுவகையான மாற்றம் கண் அஞ்சாது-செயிர்த்து நோக்குமிடத்தும் என இடவுருவாகக் கொண்டு பொருள் தந்தார்கள் மணக்குடவர் முதலியோர். கண்ணுக்கு

அஞ்சாது எனச் சினைப் பெயராகக் கொண்டு பொருள் கண்டவர் பரிமேலழகர் முதலியோர். இங்ஙனம் கொள்ளுதலினும் ''கடா அக்களிற்றினும் கண்ணஞ்சா ஏற்றை'' (கலித, 101:39) என்புழிப்போல ஒருசொல்லாகக் கொண்டு 'தறுகண்மை' எனப் பொருள் கோடலும் தகும். பரிமேலழகர் 'கண்ணஞ்சாமை' என்னும் மரபுத்தொடரைப் பிரித்துப் பிற இடங்களிலும் உறுப்புப் பொருளையே கொள்வர். மனநெகிழ்ச்சியைக் காட்டும் உறுப்பு கண்ணல்லதில்லையாதலாகிய சிறப்பு நோக்கி இங்ஙனம் கண்டனராதல் கூடும்.

ஓ) ஒப்புமைப்பகுதி;

செலச்சொல்லி :

கற்றவர் கற்றன கருதுங் கட்டுரைக்கு
உற்றன உற்றன உரைக்கும் ஆற்றலான்
மற்றவன் மருசியே அவனை நாம்விடச்
சுற்றமும் கருமமும் செய்ய வல்லனே. -குளா., 427

முன்னிய உலக நூலும் குலங்களும் முறையும் உள்ளிட்டு
இன்னவா றறியுநீரார் இல்லை ...... ...... -சூளா., 564

ஆரியன் முன்னர்ப் போதுற வுற்ற வதனாலும்
காரிய மெண்ணிச் சோர்வற முற்றுங் கடனாலும் -கம்ப., 4825

நூலை நயந்து நுண்ணிதின் உணர்ந்தீர் நுவல்தக்கீர்.
-கம்ப., 4826

பகைப்புலனணுகி யுய்த்தார் பகர்ந்தது பசர்ந்து. -கம்ப.,

ஓ) மேற்கோள் பகுதி :

இளம் : பொருளொடு புணர்ந்த பக்கம்:பக்கம் என்றதனால் ஒற்று, தூது, வினைசெயல்வகை, குடிமை, மானம் என வருவனவெல்லாம் கொள்க எனக் கூறி, தூது என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர். -தொல் பொருள்., 75

69.7. கடன் அறிந்து காலம் கருதி இடனறிந்(து)
எண்ணி உரைப்பான் தலை. (687)

**உரைப்பகுதி :**

அ) மணக்.: காரியம் நின்ற முறைமையை அறிந்து, காலத்தையும் நினைத்து, இடமும் அறிந்து, தானே எண்ணிச் சொல்ல வல்லவன்தலையான தூதனாவான் எ—று.

இது தலையான தூதரிலக்கணம் கூறிற்று.

ஆ) பரிதி.: செய்யும் முறைமை அறிந்து, காலம் இடம் அறிந்து, முன்பின் விசாரித்துச் சொல்பவனே தானாபதி எ-று.

இ) பரிப்.: காரியம் நின்ற முறைமையை அறிந்து காலத்தையும் நினைந்து இடமும் அறிந்து தானே எண்ணிச் சொல்லவல்லவன் தலைவன் ஆவான் எ-று.

தலை, இடை, கடை என மூன்று வகையாருள் மேற் கூறின எல்லாம் இடையும் கடையும் ஆகிய தூதர் இயல்பு கூறினார்: இது தலையான தூதர் இலக்கணம் கூறிற்று. தலையான தூதன் தானே காரியம் அறிந்து சொல்லும். இடையான தூதன் சொன்ன மாற்றத்தைச் சொல்லும். கடையான தூதன் ஓலை காட்டும்

ஈ காளி : 'உரைப்பதாம் தூது' — பாடம்.

அரசர் சொல்லும்திறப்பாடுகள்[1] யாவும் அறிந்து சொல்லுதற்கு உரிய காலத்தையும் கருதிக்கொண்டு, மற்றுச் சொல்லுதற்கு அமைந்தஇடத்தையும் இனிதுஉணர்ந்து பின்னும் மக்கள் பாட்டு, உரை[2] தம்மினும் அப்பொழு ........ ... .. கற்பனவற்றை நெஞ்சகத்து ஓர்ந்து கொண்டு இங்ஙனம் சொல்ல வல்லதாம் தூது எ-று.

உ) பரிமேல் : வேற்றரசரிடத்துத் தான் செய்யும் முறைமை அறிந்து, அவர் செவ்வி பார்த்து, சென்ற கருமம் சொல்லுதற்கு

---

1, திறப்பாடுகள் - முறைமைகள்

2, மக்கள் பாட்டு உரை - மக்களது பாட்டு உரையுமாகிய இவற்றின் தன்மை

ஏற்ற இடமறிந்து, சொல்லுமாற்றை முன்னே விசாரித்து, அவ்வாறு சொல்லுவான் தூதரின் மிக்கான்,

செய்யுமுறைமையாவது அவர்[3] நிலையும் தன்னரசன் நிலையும் தன்னிலையும்தூக்கி[4] அவற்றிற்கு ஏற்பக்[5] காணுமுறைமையும்[6] சொல்லும் முறைமையும் முதலாயின[7]. செவ்வி-தன்சொல்லை ஏற்றுக்கொள்ளும் மனநிகழ்ச்சி. அது[8] காலவயத்ததாகலின் 'காலம்[9]' என்றார். இடம் தனக்குத் துணையாவாருடனாய[10] இடம். எண்ணுதல் தான் அது[11] சொல்லுமாறும் அதற்கு அவர் சொல்லும் உத்தரமும்[12] அதற்குப்பின் தான் சொல்லுவனவுமாக இவ்வாற்றான் மேன்மேல் தானே கற்பித்தல். வடநூலார் இவ்விருவகையாருடன்[13] ஓலைகொடுத்து நிற்பாரையும் கூட்டித் தூதரைத் தலை, இடை, கடை[14] என்று வகுத்துக் கூறினாராகலின, அவர் மதமும் தோன்றத் 'தலை' என்றார். தூது என்பது அதிகாரத் தான்[15] வந்தது. இவை ஐந்து பாட்டானும் தான் வகுத்துக் கூறுவானது இலக்கணம் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: வேற்றரசரிடத்துத்தான் செய்யும் முறைமையறிந்து. அவர் சந்தோஷவேளை பார்த்துத் தான் சொல்லுகிறதுக்கு இடனறிந்து. சொல்லுகிற வரிசையை முன்னேவிசாரித்துக்கொண்டு சொல்லுகிறவனே தூதர்களுக்கெல்லாம் தலையானவன். எ-று

---

3. அவர் - வேற்றரசர் 4. தூக்கி - நன்கு ஆய்ந்து
5. அவற்றிற்கேற்ப - வேற்றரசனிலை, தன்னரசன் நிலை, என்பனவற்றிற்குப் பொருந்த
6. காணுமுறைமையும் - மாற்றரசனைப் பார்க்கும் முறை
7. முதலாயின என்றமையின் மாற்றரசன் குணம் இங்கிதம் ஆகாரம் செயல்என்பவற்றையறிதலும் கொள்க
8. அது - செவ்வி
9. காலம் என்றது மனத்தின்தன்மை. காலவாகுபெயர்
10. உடனாய - கூட இருக்கிற 11. அது - தான் வந்த காரியத்தை
12. உத்தரமும் - பதில்
13. இவ்விருவகையார் - வகுத்துக்கூறுவாரும், கூறியது கூறுவாருமாகிய இருவர்
14. தலையிடை கடைத்தூதர்கள் - தானறிந்து கூறுவான், அரசன் சொன்னதைச் சொல்வான், அரசன் கொடுத்த ஓலையைக் காட்டுவான் ஆகிய மூவரும் ஆவர், இவரியல்பைப் பாரத வெண்பாவைக் கொண்டறியலாம்
15. அதிகாரத்தான் - தூது என்னும் அதிகாரத்தினால்

எ) பழைய: வேற்றரசரிடத்துத்தான் செய்யும் முறைமையறிந்து, சமயம் பார்த்து, சென்ற கருமம் சொல்லுதற் கேற்ற இடம் அறிந்து, சொல்லுமெண்ணத்தை முன்னேவிசாரித்து, அவ்வாறு சொல்லுவான் தூதரிற் றலையான தூதன்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பரிப்.,பரிமேல். உரைக்குறிப்புக்கள் தூதரைத் தலையா யார் இடையாயார் கடையாயார் எனமுத்திறப்படுத்துகின்றன. இக்கருத்து கௌடலீயம், அதி.1, அத்.16 முதலானும் வெளிப் படுகிறது. இக்கருத்தைப் பரிமேலழகர் 'உரைப்பான் தலை' என்பதாற் கொள்வர்.

'கடன்'

'கடமை' என்பர் வ.சுப.மா.; மு.ரா.அரு. 'கடனறிதல் —சீர் தூக்கிப்பார்த்தல்; அதவாது, மாற்றான் நிலை, தன்னரசன் நிலை, தன்னிலை இவற்றை எண்ணி' என்பர். தூதன் தன் கடமையை நன்கறிந்து' எனச் சொற்பொருள் விரிப்பர் கா.சு. 'தன்கடமையிதுவென, நன்கறிந்து' என்பர் சபாபதி. 'முறை யறிந்து 'என்பர் சி.இ.

'மாற்றானிடம் தான் நடந்து கொள்ள வேண்டிய முறை மை' என்பர் குழந்தை. கடனறிதல் முதலியவற்றிற்குத் தேவநேயர் தரும் விளக்கம் சிறந்தது. 'காலம்—மாற்றான் கேட் குங் காலம், காலம் — அவன் விரும்பிக்கேட்குங்காலம், எண்ணி யுரைத்தல்—இன்னதை இங்ஙனம் செய்யின் இன்னது விளை யும் என்ற வினையைக் கருதி' என்பர் வரத.; இவற்றுள் மணக்., பரிப். கருத்தினை ஒட்டி எழுதும் பரிமேலழகர் உரை சிறந்தது எனலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

காலம் கருதி;

காலம் அறிதல் கருதுங்கால் தூதுவர்க்கு
ஞாலம் அறிந்த புகழ் —ஏலாதி.26

இடனறிந்து:

செல்லுங்கால் தேயத் தியல்தெரிந்து சென்றக்கால்
புல்லிய சுற்றம் புணர்வறிந்து—புல்லார்
மனத்தால் பிரித்து வலியால் உதவும்
இனத்தால் தெரிவது தூது. —பா.வெ

காலம் கருதி இடனறிந்து எண்ணி உரைப்பான் :

இடத்தொடு செவ்வி யறிந்துகா லத்துக் கேற்றவும் உரைப்ப வன் தூதன். —விநா. அரசி.110

*69.8. தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்*
*வாய்மை வழியுரைப்பான் பண்பு. (688)*

உரைப்பகுதி :

அ) மணக். : தூய்மை உடைமையும், சுற்றம் உடைமையும், ஒரு பொருளை யாராய்ந்து துணிதலுடைமையும், இம்மூன்றின் கண்ணும் மெய்ம்மையுடைமையும் தூதற்கு இயல்பாம் எ—று.

தூய்மை — மெய்யும் மனமும் தூயன் ஆதல். இதன் மெய்மையாவது பிறர்க்கு வேண்டிச் செய்யாது தனக்கு வேண் டிச் செய்தல், சுற்றத்தார்மாட்டும் பொய் கூறாமை பகைவர் மாட்டுப்பொய்கூற வேண்டுதலின் இது பின் கூறப்பட்டது. துணிவு துணிந்தபின்பு ஐயம் தோற்றாமல் துணிதல். வழியுரைப் பார் என்றார் அரசன் சொன்ன மாற்றத்தையே சொல்லுதலால்.

ஆ) பரிதி. : வினைத்தூய்மை, உதவிக்கட்டு[1], திடபுத்தி[2] இம்மூன்றும் உள்ளவனாய் ஒருவழிப்பட்ட வார்த்தை சொல்வான் தானாபதி எ—று.

இ) பரிப். : தூய்மை உடைமையும், சுற்றம் உடைமையும், ஒரு பொருளை ஆராய்ந்து துணிதல் உடைமையும் இம்மூன்றின் கண்ணும் மெய் உடைமையும் தூதற்கு இயல்பு எ—று.

---

1. உதவிக்கட்டு - துணைவரின் கட்டுப்பாடு 2. திடபுத்தி - நிலைத்த அறிவு

தூய்மை—மெய்யும் மனமும் தூயன் ஆதல். இதன் மெய்மையானது பிறர்க்கு வேண்டிச் செய்யாது தனக்கு வேண்டிச் செய்தல். சுற்றத்தார் மாட்டும் பொய் கூறாமை பகைவர் மாட்டுப் பொய்கூற வேண்டுதலின் இது பின் கூறப்பட்டது. துணிவு துணிந்த பின்பு ஐயம் தோற்றாமல் துணிதல். வழியுரைப் பார் என்பது அரசன் சொன்ன மாற்றத்தையே சொல்லுதலால்.

ஈ) காளி.: குலத் தூய்மை, குணத்தூய்மை, மனத் தூய்மை, வாய்மொழித் தூய்மை முதலிய தூய்மையும், இருபாலும் சென்று சொல்லுங்கால் தன் அரசற்கும் அவன் கருமத்திற்கும் பெரிதும் துணைமைப்பாடுடையன் ஆதலும், அரசர்முன்னர்ச் சொல்லு மிடத்துக் கலங்காது சொல்லும் தெளிவுடைமை இம்மூன்றி னுடைய வஞ்சனையற்ற வன்மைப்பாடுடையது? மற்று அது தூது நடந்து சொல்லுவான் மரபாவது எ—று.

இ) பரிமேல்.: தன்னரசன் வார்த்தையை அவன் சொல்லிய வாறே வேற்றரசர்க்குச் சென்று சொல்லுவானது இலக்கண மாவன, பொருள் காமங்களால் தூயனாதலும்[3] தனக்கு அவ ரமைச்சர் துணையாந் தன்மையும், துணிதலுடைமையும், இம் மூன்றோடு கூடிய மெய்ம்மையும் என இவை.

பொருள் காமங்கள்பற்றி வேறுபடக் கூறாமைப்பொருட்டுத் தூய்மையும், தன்னரசனுக்கு உயர்ச்சி கூறியவழி எம்மனோர்க்கு அஃது இயல்பு[4] எனக்கூறி அவர்[5] வெகுளி நீக்குதற் பொருட்டுத் துணைமையும்[6], இது சொல்லின் இவர் ஏதஞ்[7]செய்வரென்று ஒழியாமைப்[8]பொருட்டுத் துணிவுடைமையும், யாவராலும் தேறப் படுதற்பொருட்டு மெய்ம்மையும் வேண்டப் பட்டன. இன் ஒடுவின் பொருட்கண் வந்தது.

காளி.: இம்மூன்றோடு கூடிய மெய்மையும், என இவையே

3. பொருள் காமங்களால் தூயனாதல் பொருட்பற்றும், காம இச்சையும் இலனாதல்
4. அஃது இயல்பு-உயர்ச்சி கூறுதல் இயல்பு 5. அவர்-வேற்றரசர்
6. துணைமை—மாற்றான் மந்திரிகள் தனக்குத் துணையாதல். கண்ணனுக்கும் விதுரரும் அனுமனுக்கு வீபீஷணனும்போலாம் 7. ஏதம்—துன்பம்
8. ஒழியாமை—நீக்காமை

இலக்கணம் என்றதனால் இன் ஒடுவின் பொருட்கண் வந்தது ; புறநடைச் சூத்திரவிதியால் அமையும் என்க.

ஊ) கவிராசர் : தன்னுடைய அரசன் சொன்ன வார்த்தையை அவன் சொன்னபடியே வேற்றரசருக்குச் சென்று சொல்லுவானது இலக்கணமாவது, பொருள் காமங்களாலே சுத்தனாதலும், தனக்கு மாற்றரசனுடைய மந்திரிகள் துணையாதலும், துணிவுடைமையுமென்று சொல்லப்பட்ட இந்த மூன்று குணங்களுடனே கூட மெய்ம்மையுண்டாயிருத்தல் எ—று.

ஏ) பழைய 2 : தன்னரசன் வார்த்தையை அவன் சொல்லியவாறே வேற்றரசற்குச் சென்று சொல்வானது இலக்கணமாவது, பொருள் வாஞ்சை காமவாஞ்சையில்லாமல் தூயனாதலும், அந்த அரசனுடைய அமைச்சர் தனக்குப் பகையில்லாமல் துணையாந் தன்மையும், துணிவுடைமையும் இம்மூன்றொடு கூடிய மெய்ம் மையும் என்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'துணைமை'

'சுற்றம் உடைமை' மணக்; 'உதவிக்கட்டு பரிதி., 'தன் அரசற்கும் அவன் கருமத்திற்கும் பெரிதும் துணைமைப்பாடு உடையனாதல்' காளி, 'தனக்கு அவரமைச்சர் துணையாந் தன்மை' பரிமேலழகர், கவிராசர், பழைய 2.

மணக்குடவர் போன்றார் உரைகள்' தூய்மை முதலிய மூன்றின்கண் வாய்மையுடைமையும்' என வாய்மையை உடன் எண்ணுகின்றன. பரிமேலழகர் போன்றார் உரைகள் இம்மூன் றோடு வாய்மையும் என வாய்மையை நான்காவதாக இணைத்து எண்ணுகின்றன. தூயராதல் முதலிய இம்மூன்றின் கண்ணும் வாய்மையுடையராதல் என்ற மணக்குடவர் உரை சிறந்தது. 'வாய்மை என்பதனைத் தொழிற்பெயராகக் கொண்டு வாய்த திருத்தல்' எனப் பொருள் கூறுவர் மு.வ.; அவ்வுரைக்கும் இம் மூன்றும் வாய்மை என முற்றும்மையிருப்பின் நலம். இம்மூன்று என்ற எழுவாயேற்ற பெயர்ச்சொல்லுக்கு 'இன்' என்ற சாரியை வேண்டப்படாமையும் மரபின்மையையும் சிந்திக்க.

'வழியுரைப்பான்'

'ஒரு வழிப்பட்ட வார்த்தை சொல்வான்' பரிதி.; இராம., 'சுத்தமான எண்ணம், தனக்குத்தானே ஆலோ

சனை சொல்லிக் கொள்ளும் துணைவனாகுந்தன்மை, சமயோசிதமான செயல்முறையைத் துணிதல் இம்மூன்றையும் வாய்த்தவனே தூது' என்பர். இதில் வாய்மை வாய்ந்திருத்தல் எனத் தொழிற் பெயராகவே கருதுவர் இவர். இவை முன்னையவற்றினும் புதிய நோக்காதலைக் காண்க. இவற்றையரண் செய்ய விளக்கமும் கூறினர். எண்ணித் தெளிக. வரத 'தூய்மை—நிலைதவறாமை, துணைமை—தன்னரசற்கு உற்ற துணையாதல் தன்மை, துணிவுடைமை—தனக்குவரும் இடர்கட்கு அஞ்சாமை வாய்மை—தன்னலனிற் பற்றின்றி இருத்தல்' என்பர். மேலும் 'வாய்மை வழி உரைப்பான்' எனக் கூட்டிச் 'சத்திய நெறி பிறழாமையும் தூதன் இயல்பு' என்பர் வரத.; இவை வலிந்து கோடலாவதைத் தெளிக.

குழந்தை, 'மனத்தூய்மை, தன்னரசற்கு நன்மையாங் காரியம் சொல்லும்போது மாற்றரசன் சினப்பானாயின், 'இது தூதனியல்பு' எனக் கூறிச் சினமாற்ற மாற்றார் மந்திரிகளைத் துணையாக்குந்திறமை, தருகண்மையும் ஆகிய இம்மூன்றையும் உண்மையாக உடைமை தூதனியல்பு' என்பர்.

சாமி.சிதம் 'துணைமை—அறிஞரைத் துணைக்கொள்ளும் தன்மை, இம்மூன்றின் வாய்மை—இம்மூன்றோடு கூடிய உண்மை' என்பர்.

மு கோ., 'தூய்மை—அழுக்காறவா முதலிய மனமாசின்மை, துணைமை—தன் அரசியற்கோட்பாட்டு உண்மையான துணைமை. வாய்மை - இல்லாததையே வாய்மை. இடத்ததாகச் சொல்லித் திரியாமை என்பர்.

சபாபதி வாய்மையையும் கூட்டி 'இந்நான்கையும் வாய்த்திருத்தலே நூதனியல்பு' என்பர். கா.சு. 'தூய்மை முதலிய மூன்றுங்கலந்த மெய்ம்மையுமாம் எனத் தூய்மை முதலிய மூன்றையும் உண்மையாக உடையனாதலே தூதன் பண்பு' என்பர். மு.ரா.அரு. கருத்தும் இது. வ.சுப.மா. 'வாய்மை—இம்மூன்றும் நன்கு வாய்த்திருத்தல்' எனத் தொழிற்பெயராகவே கொள்வர்.

இவற்றுள் தூய்மை-பொருள் உபதை இன்ப உபதைகள்

இன்மையும், துணைமை-மாற்றார் அவைத்துணைவர்களையும், வேற்றரசர் அவைத்துணைவர்களையும் தம் துணையாக்கிக் கொள்ளும் வன்மையும் துணிவுடைமையும் ஆகிய இம்மூன்றின் கண்ணும் உண்மையாக நிலைத்திருப்பவனே வழியுரைப்பா னாகிய தூதனாவான் என்ற உரை ஏற்புடையது எனலாம்.

ஓ) ஒப்புமைப்பகுதி :

வாய்மை வழியுரைப்பான் பண்பு :

வாய்மைசொல் ......... மந்திர மாந்தர் ......... — கம்ப , 4226
பொய்யார் தூதர் ......... ......... ......... — கம்ப., 8804

தூய்மை :

மிகைப் புலனடக்கி மெய்ம்மை விளம்புதல் விரதம் பூண்ட
தகைப் புலக் கருமத்தோர். — கம்ப., 6002

முற்றும் :

தூய்மைய னிருங்கலை துணிந்த கேள்வியன்
வாய்மையன் மறுவிலன் மதியின் கூர்மையன்
ஆய்மையின் மந்திரத் தறிந னாமெனச்
சேய்மையி னோக்குறு சிறுக ணான்றனை — கம்ப., 2785

உறுபொருள் காமம் விரும்புறாத் தூய்மை யுயிர்க்கழிவுறினும் அஞ்சாமை
மறுபுலத் தமைச்சர் துணைமையாம் தன்மை வாய்மைசொல் சோர்வுறாத் துணிவும்
மறுவற உடைய னாய்வழி யுரைப்பன் மத்திமத் தூதனாம் முடங்கல்
குறுகுபு கொடுப்பான் கடைப்படும் தூதன் கூறிய இவரையும் தழீஇக்கொள். — விநா. அரசி., 111

ஒருபுடை :

நல்லவு மொன்றோ தீயவு நாடி நவைதீரச்
சொல்லவும் வல்லீர் ......... ......... ......... — கம்ப., 4828
....... ............ சொற்கட வாத தூதன்
எயில்கடந் ......... ......... .........

............ இலங்கை யெய்தி யரக்கன் திருக்கை புக்கான்.

— கம்ப., 7114

69.9. விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன். (689)

உரைப்பகுதி :

அ) மணக் .: தன் அரசன் சொல்லிவிட்ட மாற்றத்தைப் பகை யரசர்க்குச் சொல்லுமவன், தன்னரசனுக்கு வடுவாகுஞ் சொற்களை மறந்தும் சொல்லாத அஞ்சாமையையுடைய தூதனாவன் எ—று.

ஆ) பரிதி .: பரராச்சியத்தில்[1] காரியம் கொள்ளப்போகிற தானாபதி குற்றமில்லாத சொல்லை வாய் தடுமாறாமல் சொல்ல வல்லான்; தூது அவனே எ—று.

இ) பரிப். : தன் அரசன் சொல்லிவிட்ட மாற்றத்தைப் பகை யரசர்க்குச் சொல்லுமவன், தன்னரசன் சொல்லும் சொற்களுக்கு வடுவான சொற்களை மறந்தும் சொல்லாத அஞ்சாமையை உடையவன் எ—று.

இது முதலாகச் சொல்லும் திறன் கூறுகின்றது ஆகலின் முற்படச் சொல் சொல்ல வேண்டும் என்றது.

ஈ) காளி. : ஒரு வேந்தன் சொல்லிவிடும் மாற்றத்தை ஒரு வேந்தர்க்குச் சென்று உரைப்போன் அவன் யாவன் எனின், தன் அரசன் வேற்றரசனுக்குச் சொல்லிவிடும் மாற்றமாயினும் இனி வேற்றரசன் தன் அரசர்க்குச் சொல்லிவிடும் மாற்றமாயினும் தனித்தனி இராச பாவனைக்கு[2] உரிய மாற்றமாம் அத்துணை யல்லது எளிமைப்பட நிகழாமை இயல்பு அன்றே? அதனின் இவை முழுதும் இவர் இவர்க்குச் சென்று இசைப்பின்[3] தனது இராசகாரியம் கெடும் ஆகலான் இருபாலும் சென்றால் வாய்ப்பன

1. பரராச்சியத்தில் — வேற்றுநாட்டில்
2. இராசபாவனை - அரசனாகப் பாவித்துக் கொள்ளுதற்கேற்ற உரைகள்
3. இசைப்பின் - சொன்னால்

கூறி, வடு அடுப்பன வழுவியும் புறப்படாமல் செறியப்பிடிக்கும் திறப்பாடு உடையவன் தூதாவது எ—று.

உ) பரிமேல். : தன் அரசன் சொல்லிவிட்ட வார்த்தையை வேற்றரசர்க்குச்சென்று சொல்ல உரியான், தனக்கு வரும் எதத்திற்கு அஞ்சி அவனுக்குத்[4] தாழ்வான வார்த்தையை[5] வாய் சோர்ந்தும் சொல்லாத திண்மையை[6] உடையான்.

தாழ்வு சாதிதருமமன்மையின் 'வடு' என்றார்[7]. 'வாய் சோரா' எனக்காரியம் காரணத்துள் அடக்கப்பட்டது.[8]

ஊ) கவிராசர் : தன்னரசன் சொன்ன வார்த்தையை வேற்றரசற்குச் சொல்லுகிற போது, தன்பிராணனுக்கு அறிவு வந்தாலும் அதற்கு அஞ்சாமல் தன் அரசன் சொன்னபடியே சொல்லுகிறவனே தூதனாவான் எ—று.

ஏ) பழைய2 : தன்னரசன் சொல்லிவிட்ட வார்த்தையை வாய் சோர்ந்து சொல்லாத திண்மையுடையான் (தூதனாவான்).

மல்லர் : 'வன்கண்ணவன்' பாடம்.

என்பது தன்னுடைய அரசன் விடுகிற பேச்சுகளை ஒரு அரசனுக்குச் சொல்லுகிறதுக்குரிய தொழிலைப் பண்ணுகிறவன் தன் அரசனுக்குத் தாழ்வான வார்த்தைகளை வாய் தவறிச் சொல்லாதபடிக்கும் ஏத்த வீரியத்தை[9] உடையவனாய் இருக்கவேணும் என்றவாறு.

ஸ்தானாபதியானவன் தன்னரசன் காரியமாக வேறே ஸ்தானங்களிலே பேசுகிற போது தன்னரசன் சொன்ன பிரகாரமாகப் பேசினால் தனக்குப் பொல்லாப்பு வரும் என்று அறிந்தாலும் அந்தப் பொல்லாப்புக்குப் பயப்படாத வீரியத்தை உடைய

---

4. அவனுக்கு - தன்னரசனுக்கு
5. தாழ்வான வார்த்தை - பணித்தமொழி 6. திண்மை - மனவுறுதி
7. புண் ஆறினும் மெய்க்கட் கிடக்கும் தழும்பு பணிமொழி வடுப்போல்வாதலின் கூறியதாம்
8. வாய் சோர்தல் - அச்சத்தால் பேச்சுத் தடுமாறுதல். பணிமொழியைச் சொல்லாமையாகிய காரியத்தை அதன் காரணமாகிய வாய் சோராமையில் அடக்கிக் கூறியதாம் 9) வீரியம் - வலிமை

வனாய் தன்னரசன் வேற்றரசனுக்குத் தாழ்ச்சியான வார்த்தை சொல்லுகிறாப் போலே சொல்லாமல் தன் அரசன் சொன்ன உத்தரவு எல்லாம் அவருடைய பெருமைக்குச் சரியான வார்த்தை களோடே பேசவேண்டியது என்பது கருத்து

விடும்—மாற்றம் விடுப்படுமாற்றம் — மாற்றம் — உத்தரம் வேந்தன் — ராசா, உரைத்தல் — சொல்லுதல், வடு — குற்றம் சோர்தல் — தவறல், வன்கண்ணவன் — வீரமுள்ளவன்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

"வடுமாற்றம் வாய்சோரா வன்கணவன்" என்ற தொடர்க்கு இயைபு தோன்றாது வருவித்த முறையில் தேவநேயர் 'தனக்கு நேரும் தீங்கிற்கு அஞ்சி வாய்தவறியும் தாழ்வான சொல்லைச் சொல்லாத திண்ணிய நெஞ்சினனாதல்' என்பர். மணக்குடவர் முதலிய தொல்லாசிரியர்கள் 'தன்னரசனுக்கு வடுவாகும் சொல்லைச் சொல்லாமை' என்பர்.

காளிங்கர், இக்குறளின் கருத்தை விளக்க ஒரு பின்னணியையே வகுக்கின்றார்; 'தூதுவிடுபவனும் அரசன்; கேட்கும் மறுமொழியளிப்பவனும் அரசன். இருவரும் தத்தம் தகுதிக்குறையாத வண்ணமேயளிப்பர். எளிமை படச்சொல்லார். ஆதலால் இருவர்பாலும் செல்கின்ற தூதன், அப்படியே நிகழ்ந்ததைச் சொல்வானாயின் தான்மேற்கொண்ட இராச காரியம் கெடும்; ஆதலால், வாய்ப்பன கூறி வடுப்பன வழுவி யும் வெளிப்படாமற் சொல்லுதல் தூதன் பண்பு' என்பர். இதனை ஒட்டி எழுதும் பரிமேலழகரும் 'தாழ்வு சாதி தரும மன்மையின் வடு என்றார்' என்பதும் இக்கருத்தை அரண் செய்யும்.

வ சுப.மா. 'வடுமாற்றம் வாய்சோராவன்கணவனே விடு மாற்றம் வேந்தர்க்குரைப்பான்' என மாற்றிப் பழிச்செய்தியை வாய்விடாத உறுதியாளனே மாற்றார் முன் சென்று செய்தி கூறத்தக்கவன்' என்பர்.

இவற்றுள் காளிங்கர் வழங்கும் சூழ்நிலை விளக்கமும் மணக்குடவர் பரிமேலழகர் உரைகளும் இயலுக்கும் அதிகாரத்துக்கும் ஏற்புடையன.

ஒ) ஒப்புமைப்பகுதி :

விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் :

பகைப்புல னணுகியுய்த்தார் பகர்ந்தது பகர்ந்து பற்றார்
மிகைப்புல னடக்கி மெய்ம்மை விளம்புதல் விரதம் பூண்ட
தகைப்புலக் கருமத் தோர், ...... ...... ...... -கம்ப. 6002

முற்றும் :

தடுமாற்றம் இன்றித் தகைசான்ற சொல்லான்
வடுமாற்றம் வாய்சோரா னாகி — விடுமாற்றம்
எஞ்சாது கூறி இகல்வேந்தன் சீறுங்கால்
அஞ்சாது அமைவது தூது. —பா.வெ.

69.10. இறுதி பயப்பினும் எஞ்சா திறைவற் (கு)
உறுதி பயப்பதாம் தூது. (690)

உரைப்பகுதி:

அ) மணக்.: தனக்கு இறுதி வருமாயினும், ஒழியாது தன் இறைவற்கு நன்மையைத்தருவது தூதாவது எ—று.,

ஆ) பரிதி.: தனக்கு இறுதிவரினும் அஞ்சாமல் அரசற்கு உறுதியான காரியம் பண்ணுவான் எ—று.

இ) பரிப்.: தன் உயிர்க்கு இறுதி பயக்கும் ஆயினும், சொல்லு தலை ஒழியாதே சொல்லுதலின், தன் அரசனுக்கு உறுதி உண்டாம் சொற்களைக் கூறுமவன் தூதன் ஆவான் எ—று.

இஃது இறுதி பயப்பினும் என்றமையான் அரசன் சொன்ன மாற்றத்தையே சொல்லுக என்றது.

ஈ) காளி.: தான் சென்று பகைவேந்தர் முன்னர்க் கருமம் சொல்லுங்கால் கண்ணஞ்சாது சொல்ல வேண்டுவனவும் சொல்லி மற்று அதனால் தன் உயிர்க்கு இறுதி அடுப்பினும்[1] ஒழிய விடாது[2] தன் இறைவனாகிய அரசனுக்கு வேண்டும் கரும உறுதி

1. அடுப்பினும் - வரினும் 2. ஒழியவிடாது - நீங்கவிடாமல்

யைப் பயக்க நிற்பது யாது? மற்று அதுவே தூதாவது எ—று.

இனி, இங்ஙனம் அமைச்சர் தூதாடி[3] நாடும் ஆக்கமும் பிறவும் செய்தமைந்து அடிப்படுத்த மன்னரைச் சேர்ந்து ஒழுக வேண்டும் அன்றே: அதனால் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) பரிமேல்.: அவ்வார்த்தை[4] தன்னுயிர்க்கு இறுதி தருமாயினும் அதற்கு[5] அஞ்சி ஒழியாது. தன்னரசன் சொல்லியவாறே அவனுக்கு[6] மிகுதியை வேற்றரசரிடைச் சொல்லுவானே தூதனாவான்.

இறுதி பயப்பினும் என்றதனால், ஏனைய பயத்தல்[7] சொல்ல வேண்டாவாயிற்று; இவை மூன்று பாட்டானும் கூறியது கூறுவானது இலக்கணம் கூறப்பட்டது.

ஊ) காலிங்கர்: தன் அரசன் சொன்ன வார்த்தையை வேற்றரசற்குச் சொல்லுகிறபோது தன் பிராணனுக்கு அழிவு வந்தாலும், அதற்கு அஞ்சாமல் தன் அரசன் சொன்னபடியே சொல்லுகிறவனே தூதனாவான் எ—று.

எ) பழைய2 : அவ்வார்த்தை தன்னுயிருக்கு இறுதி தருமாயினும் அதற்கு அஞ்சியொழியாது, தன்னரசன் சொல்லியவாறே உறுதி பயக்குமாறு வேற்றரசனுக்குச் சொல்லுவானே தூதன்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக். உரை சுருக்கமும் தெளிவும் உடையது. அதன் விளக்கம் போல்வது பரிமேலழகர் உரை. வரத. 'தூதன் தனக்கு இறுதி நேரினும் அரச காரியத்தை முடித்துவிட்டு இறுதியை எய்துக' என்ற கருத்துப்பட உரைப்பர்.

'எஞ்சாது'

'மாறுபடாமல்', 'விடாமல்', 'ஒழியாது' என்றெல்லாம்

3. தூதாடி - தூதுபோய்ச் சொல்லி
4. அவ்வார்த்தை - தன்னரசன் சொல்லிவிட்ட வார்த்தை
5. அதற்கு - தன்னுயிர்க்கு முடிவைத் தருதற்கு 6. அவனுக்கு - தன்னரசனுக்கு
7. ஏனைய பயத்தல் - காவலின் வைத்தல், கையிற் சிட்டி கட்டுதல், கைகால்களைக் குறைத்தல், கண்ணைப் பிடுங்கல் போல்வன

உரை காண்பர். அனைத்தினும் 'தனக்கு இறுதி வந்தாலும், அரச காரியத்தைச் செய்து முடித்து பின் இறுதி எய்துக' என்ற உரை சிறந்தது.

## 69. தூது

| | அன்புடைமை | அன்பறிவு | நூலாருள் | அறிவுரு | தொகச்சொல்லி | கற்றுக்கண் | கடனறிந்து | தூய்மை | விடுமாற்றம் | இறுதிபயப்பினும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 1 | 5 | 3 | 4 | 7 | 8 | 9 | 2 | 6 | 10 |
| பரிதி. | 6 | 9 | 4 | 7 | 2 | 1 | 3 | 5 | 8 | 10 |
| பரிப். | 1 | 5 | 3 | 4 | 8 | 9 | 10 | 2 | 6 | 7 |
| காளி. | 3 | 5 | 7 | 2 | 6 | 1 | 4 | 9 | 8 | 01 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

69வது அதிகாரம் 'தூது' முற்றிற்று.

# 70. மன்னரைச் சேர்ந்தொழுகல்

அ) மணக் .: மன்னரைச் சேர்ந்து ஒழுகலாவது அரசர்மாட்டு அமாத்தியர் ஒழுகுந்திறங் கூறுதல். இது முதலாக அவையஞ் சாமை ஈறாகக் கூறுகினறவை தம்அரசர்மாட்டு வேண்டுமாயினும், மாற்றரசர் மாட்டும் வேண்டுதல் இன்றியமையாத சிறப்புடைத் தாதலின், அதன் பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி .: மன்னரைச் சேர்ந்தொழுகலாவது மன்னனால் சேர்க்கை செய்யும் இயல்பு எ—று

இ) பரிப் .: மன்னரைச் சேர்ந்து ஒழுகல் ஆவது — அரசர் மாட்டு அமாத்தியன் ஒழுகும் திறன் கூறுதல். இது முதலாக அவை யஞ்சாமை ஈறாகக் கூறுகின்றவை தம் அர•ர் மாட்டு வேண்டுமாயினும் மாற்றரசர் மாட்டும் வேண்டுதல் இன்றியமையாத சிறப்பு உடைத்தாகலின் அதன் பின கூறப் பட்டது.

உ) பரிமேல் : அஃதாவது அமைச்சர் அரசரைப் பொருந்தி ஒழுகுமாறு. இது, 'வேந்தவாம் பண்புடைமை' என மேலே வேண்டப்பட்டமையின், தூதின்பின் வைக்கப்பட்டது.

ஊ) கவிராசர் : அஃதாவது அவர்களைச் சேர்ந்திருக்கிறவர் களுடைய லக்ஷணங்களைச் சொல்லுகிறது.

எ) பழைய2: அஃதாவது, மன்னரைச் சேர்ந்தொழுகும் அமைச் சர்க்குச் சொல்லிய வகைமை.

மல்லர் : அதாவது மந்திரியார் அரசரிடத்திலே புழங்குகிற வகை.

இ) தொகுப்பும் குறிப்பும் :

மணக் 'தம் அரசர் மாற்றரசர் இருவர் மாட்டும் சேர்ந் தொழுகலின் இன்றியமையாமையைத் தெரிவிப்பது' என்பர். ஏனையோர் பொதுமையில் 'அமைச்சர் அரசரைச் சேர்ந்து ஒழுகுமாறு' என்பர். தேவநேயர் 'அமைச்சர் மக்கள் படைத் தலைவர் தூதர் ஒற்றர் ஆகிய ஐம்பெருங்குழுவினர் அரசனை யடுத்து ஒழுகும் முறைமை' என்பர். குழந்தை 'அரசர்களோடு அரசியல் தலைவர்களைச் சேர்ந்தொழுகும் முறை' என்பர். 'நெருங்கிப் பழகும் அமைச்சரும் தூதரும் மன்னரிடம் எவ்வாறு பழக வேண்டும் என்பதைத் தெரிவிப்பது' என்பர் வரத. தூதரும் அரச காரியம் பார்ப்பாரும் மன்னனிடம் நடந்து கொள்ள வேண்டியமுறை; அரசரில்லாத இக்காலத்து அரசு நிலையிலிருக்கும் தனி மனிதனிடம் நடந்து கொள்ள வேண்டி யதுமாம்' என்பர் இராமலிங்கனார். 'மந்திரிகள் மன்னரைச் சார்ந்து காலத்திற்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டிய விதம்' என்பர் மு.ரா.அரு.

இவற்றால் இவ்வதிகாரம் சிறப்பாக அமைச்சர்க்கும் தூதருக்கும் உரிய பழகு முறைகளைக் கூறினும் ஐம்பெருங் குழுவில் ஏனோர்க்கும் உரியராதலை உணர்த்துவன பிற்கால உரைகள்.

70.1. அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். (691)

உரைப்பகுதி :

அ) மணக். : மாறுபாடுடைய வேந்தரைச் சேர்ந்தொழுகும் அமைச்சர் அவரை அகலுவதும் செய்யாது அணுகுவதும். செய்யாது தீக்காய்வார் போல இருக்க.

இது சேர்ந்தொழுகும் திறம் கூறிற்று.

ஆ) பரிதி. : அணுகில் சுடும் அகலின் குளிரும் என்று தீக் காய்வார் போல ராசசேவை பண்ணுக எ-று.

இ) பரிப். : தீக்காய்வாரைப் போல நீங்குதலும் செய்யாது குறுகுதலும் செய்யாது மாறுபாடு இல்லாத வேந்தரைச் சேர்ந்து ஒழுகுக அமாத்தியர் எ-று.

இது சார்ந்து ஒழுகும் திறன் கூறிற்று. இத்துணையும் பெரும்பான்மையும் மாற்றரசரை நோக்கிற்று.

ஈ) காளி. : 'போல' பாடம்.

குளிர்க்கு உடைந்து தீக்காய் கின்ற இடத்து மற்று அதனை அகல்வதும் செய்யாது அணைவதும் செய்யாது தீக்காய்ந்து இன்புறுகின்றார் யாதொருபடி ?அப்படியே அவரைப் போல ஒழுகுவார் யார் எனின் விறல் மன்ரைச்[1] சேர்ந்து ஒழுகும் விதி மரபு உடையோர் எ-று.

உ) பரிமேல். : மாறுபடுதலையுடைய[2] அரசரைச் சேர்ந்தொழுகும் அமைச்சர், அவரை மிகச்செறிவதும்[3] நீங்குவதும் செய்யாது[4] தீக்காய்வார்போல இடைநிலத்திலே நிற்க.

கடிதின் வெகுளும் தன்மையர்[5] என்பது தோன்ற 'இகல் வேந்தர்' என்றார். மிகவகலின் பயன் தொடாது மிக அணுகின் அவமதிபற்றித்[6] தறும்[7]வேந்தர்க்கு, மிக அகலின் குளிர் நீங்காது மிக அணுகின் சுடுவதாய தீயோடு உளதாய தொழிலுவமம பெறப்பட்டது.[8]

ஊ) கவிராசர் : அரசர்கள் அண்டையிலே சேர்ந்திருக்கிறவர் தூரவிட்டுப்போகாமலும், அதிகமாக நெருங்காமலும் நடுவாகத் தீக்காய்கிறவர்களைப் போல இருப்பராக எ-று.

ஏ) பழைய 2: 'போல்வார்' பாடம்.

---

1. விறல் மன்னர் — வலிமைமிக்க அரசர் 2. மாறுபடுதல் — பகைத்தல்
3. மிகச் செறிவது — மிக நெருங்குவதும்
4. மிக நீங்குவதும் மிகச் செறிவதும் செய்யாது என்றும் பாடமுண்டு
5. கடிதின் வெகுளும் தன்மையர் — விரைந்து சினக்கும் தன்மையுடையவர்
6. அவமதிபற்றி – இகழுதல் குறித்து 7. தெறும் —வருத்தும்
8. அணுகினால் சுடுவதாயும் விலகினால் குளிரைப் போக்காததாயும் ஆகிய தீயை அத்தன்மையுடைய அரசனுக்கு உவமமாகக் குறிக்கின்றமையின் இது தொழிலுவம மாயிற்று

இகல்வேந்தரைச் சேர்ந் தொழுகும் அமைச்சர் அவரை மிக நீங்குவதுமன்று, மிக அணுகு வதுமன்று, தீக்காய்வார் போலப் பொதுவாகச் சேர்ந்தொழுகுக.

மல்லர் : என்பது மனப்பேதகமாயிருக்கிற[9] அரசரிடத்திலே புழங்குகிறவன் நெருப்பண்டையிலே குளிர்காய்கிறவனைப் போலே அவனை மெத்தவும் கிட்டலாகாது மெத்தவும் நீங்கலா காது நடுநிலையிலே நிக்கவேண்டியது என்றவாறு.

தீயை மெத்த அணுகினால் சுடும் ; மெத்த அகன்று போனால் குளிர் காயாது. அப்படிப்போல் அரசனோடே மெத்தப் பழகினால் அவமதிப்பு வரும். மெத்த தூரமாயிருந்தால் அவ னால் வர்த்தகப் பிறையோசனம்[10] வராது என்பது கருத்து.

அகலல் - நீங்குதல், அணுகல் - கிட்டல், இகல் - மாறுபாடு, வேந்தன்ராசா, ஒழுகல்- நடத்தல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்., பரிமேல்., கவிராசர் முதலியோர் 'போல்க' எனப்பாடங்கண்டு, 'போல இருக்க', 'சேவை பண்ணுக' எனப் பொருள் கூறுவர்.

'இகல் வேந்தர்'

'மாறுபாடுடைய வேந்தர்' மணக்., பரிமேல்., கவி ராசர், சி.இ. முதலியோர்.

'ஒரு சமயம் அன்பும், மறுசமயம் கோபமும் கொண்டொழு கும் வேந்தர்' மு.ரா. அரு. ; 'வலிமையுள்ள பதவிவகிக்கும் அரசர்கள்'. இராம., தேவநேயர். 'அதிகாரமுடைய மன்னர்' வரத.

'விரைவில் வெகுளும் தன்மைமிக்க அரசர்' குழந்தை. 'வலியுள்ள மன்னர்' சாமி. சிதம். ; இவ்வுரையில் இகல்-மாறு பாடு, அன்பும் சினமும் மாறிவருதல், வலிமை, பதவியிலிருப்பார்

9. மனப்பேதகமாயிருக்கிற — மனவேறுபாடாய் இருக்கிற
10. வர்த்தகப் பிறையோசனம் — பழகுந் தொழிலாலாய பயன்

எனப்பல பொருள் தரும் ஒரு சொல். இவற்றுள் 'மாறுபாடு' என்னும் பொருளே சிறப்பு. 'காய்வார் போல' என்ற பாடத்தினும் மணக்குடவர், பரிமேலழகர் கொண்ட 'போல்க' என்ற பாடமே சிறந்தது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

அகலாது ஒழுகுவார் :

விடலைமை செய்ய வெருண்டகன்று நில்லா(து)
உடலரு மன்னர் உவப்ப ஒழுகின்
மடலணி பெண்ணை மலிதிரைச் சேர்ப்ப
கடல்படா எல்லாம் படும். — பழ. நா , 270

அகலாது அணுகாது தீக்காய்வார் போல :

அழல்போல் அணுகார் அகலார் நிழலன்ன நீரார்.
— திருவிளை. பன்றி. பந்திரி. 15

மன்னர் · தீ ஒப்புவர் :

தீண்டி னார்தமைத் தீச்சுடும் மன்னர் தீ
ஈண்டு தங்கிளை யோடும் எரித்திடும்
வேண்டில் இன்னமிர் தும்நஞ்சும் ஆதலான்
மாண்ட தன்றுநின் வாய்மொழித் தெய்வமே. — சீவக. 250

அளையுறை பாம்பும் அரசும் நெருப்பும்
முழையுறை சீயமும் என்றிவை நான்கும்
இளைய எளிய பயின்றனவென் றெண்ணி
இகழின் இழுக்கம் தரும். — ஆசாரக்., 84

எரியென்றற் குரியார் என்றே எண்ணுதி. —கம்ப., 4182

வாய்மைசால் அறிவின் வாய்த்த மந்திர மாந்த ரோடும்
தீமைதீர் ஒழுக்கின் வந்த திறத்தொழில் மறவரோடும்
தூய்மைசால் புணர்ச்சி பேணித் துகளறு தொழிலை யாகிச்
சேய்மையோ டணிமை யின்றித் தேவரில் தெரிய நிற்றி.
—கம்ப., 4226

தீக்காய்ந்தாற் போலிருக்கவேணும். —பழ.,

முற்றும்:

உயிர்க்கும் பொருட்கும் தலைவனும் பிரபுவுமாகிய வேந்தனை, எரிகின்ற நெருப்பைப் போலவும் சினமிக்க பாம்பைப் போலவும் அவன் பக்கல் அணுகவேண்டும். -சுக்கிர. அத்.2:சு.214

அக்கினி பராமுகமாய்த் தனதருகே வந்தவனை மாத்திரந் தகிக்கும்; அரசனாகிய அக்கினி கோபித்துக் கொண்டால் தன் தானியம் புத்திரமித்திர களத்திராதிகளோடும் அழித்துப்போடும்.
— மனு. அத்.,7

70.2. *மன்னர் விழைப விழையாமை மன்னரான்*
*மன்னிய ஆக்கம் தரும்.* (692)

உரைப்பகுதி :

அ) மணக்.: எல்லார்க்கும் பொதுவாகக் கருதப்பட்டவை யன்றி, மன்னரால் விரும்பப்பட்டவையிற்றை விரும்பாமை, அம்மன்னராலே நிலையுள்ள செல்வத்தைத் தருமாதலான் எ—று.

அவை நுகர்வனவும் ஒப்பனை முதலாயினவுமாம். இஃது அவற்றைத் தவிர்தல் வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: அரசன் விரும்பினதைத்தான் விருப்புவானல்லன்: விரும்பானாகில் மன்னரால் ஆக்கம் பெறுவான் எ—று.

இ) பரிப்.:எல்லார்க்கும் பொதுவாகக் கருதினவை அன்றி மன்னரான் விரும்பப் பட்டவையிற்றை விரும்பாது ஒழிக. அவ்விரும்பாமை அம்மன்னன் தானே நிலையுள்ள செல்வத்தைத் தரும் ஆகலான் எ—று.

அவை நுகர்வனவும் ஒப்பனை முதலாயினவும் ஆம். அவையிற்றைத் தவிர்தல் வேண்டும் என்றது.

ஈ) காளி.: 'விழையாரேல்' பாடம்.

அரசர் விரும்புவன யாவை சில. மற்று அவற்றைத்தாம் சிறிதும் விரும்பாரெனின் விரும்பாமையாகிய இதுதான்

அம்மன்னரால் நிலைபெற்ற செல்வத்தைக் கொடுக்கும் எ - று.

இனி, இவ்வாறு அமைச்சர் மன்னரைச் சேர்ந்து ஒழுகி நின்ற இடத்து அவர் உட் குறிப்பு அறிந்து அதனை முகக் குறிப்பினான் அறிந்து ஒழுகுதல் கடன் ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) பரிமேல்.: தம்மால் சேரப்பட்ட மன்னர் விரும்புவனவற்றைத் தாம் விரும்பாது ஒழிதல். அமைச்சர்க்கு அவரானே நிலைபெற்ற செல்வத்தைக் கொடுக்கும், (எ - று).

ஈண்டு 'விழைப' என்றது அவர்க்குச்[1] சிறப்பாக உரியவற்றை. அவை நுகரப்படுவன[2], ஒப்பனை[3] மேன்மை[4] என்று இவை முதலாயின[5]. இவற்றை ஒப்பிற்கஞ்சித்[6] தாம் விழையாது ஒழியவே, அவ்வச்சம் நோக்கி உவந்து அவர்தாமே[7] எல்லாச் செல்வமும் நல்குவர் என்பது கருத்து. எனவே, அவற்றை விரும்பின் கேடுதரும் என்பதாம்.

ஊ) கவிராசர் : தாம் சேர்ந்திருக்கும் அரசர்கள் ஆசைப்பட்ட வஸ்துக்களைத் தாம் ஆசைப்படாமல் இருக்கவேணும், அப்படி இருத்தல் அவர்களுக்கு அந்த அரசனாலே நிலைபெற்ற செல்வத்தைக் கொடுக்கும் (எ - று).

அரசன் வேண்டின வஸ்துக்களைப் பதனம் பண்ணி, அவன் வேண்டின பொழுது கொடுத்தால் அந்த வஸ்துவை அனுபவித்த சந்தோஷத்தினாலே அவ்வஸ்துவைக் கொடுத்தவனுக்கு வெகு சிறப்புச் செய்வர் (எ - ம்).

ஏ) பழைய2: தம்மாற் சேரப்பட்ட மன்னர் விரும்புவனவற்றைத் தாம் விரும்பாதொழிதல், அமைச்சர்க்கு அவரால் நிலைபெற்ற செல்வத்தைத் தரும்.

---

1. அவர்க்கு - தாம் பழகும் அரசர்களுக்கு
2. நுகரப்படுவன — பொருள்களால் நுகரப்படும் ஒலி முதலிய செய்திகள் விஷயமானது அறியப்படுந் தன்மையில் நுகர்ச்சிக்கு உதவியாய் உள்ளன
3. ஒப்பனை — அழகு 4. மேன்மை — எல்லாருக்கும் எல்லாவற்றிற்கும்
5. முதலாயின — மேலாக இருக்கும் தன்மை என்பதால் கொடி, குடை, குலவட்டம் முரசு, முடி முதலிய அரச அங்கங்கள் அனைத்தையும் கொள்க
6. ஒப்பிற்கஞ்சி — சமமாக இருத்தற்கு அஞ்சி 7. அவர் தாமே — அந்த அரசரே

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக். உரையில் 'விழையாமை ஆக்கந்தரும்' எனமுடியாமல் 'தருமாதலான்' என ஏதுப்பொருண்மையைத் தொடராக்குதல் ஏன்? என்பதறியக் கூடவில்லை. 'விழையாமை தரும்' என முடிபு காணும் பரிமேலழகர் உரையே சிறந்தது. 'மன்னர் விழைய தாம் விழையாமையைக் கீழ்ப்படியுங் குணமாகக் கருதி, அதனால் பெரிய நன்மை விளையும்' என்பர் மு.ரா.அரு.; தேவநேயர் 'மன்னர் விழைப உண்டி ஆடையணி, உறையுள். ஊர்தி, பெண்ணின்பம் முதலியனவும், மிகு புகழ், மிகுந்த கண்ணியம் இவைகளும் அரசற்கென்றே ஒதுக்கப்பட்ட ஆடிடம், நீர்நிலைகளும்,ஆம்' என்பர்.மு.கோ.'விழைப-அரசுத்தலைமை' என்பர். இராம. 'மன்னிய ஆக்கம்-பாராட்டப்படுகிற பெருமை; என்பர். மன்னிய ஆக்கம்-எல்லாவகையாலும் நிலைபெற்ற வளர்ச்சி அல்லது உயர்வு எனல் தகும்.

ஓ) ஒப்புமைப்பகுதி :

மன்னர் விழைப :

வேந்தர்தாம் விழைப எல்லாம் வெளிப்படார் மறைத்தல் கண்டாய்
நாந்தக உழவர் ஏறே நன்பொருளாவ தென்றான். -சீவக, 2910

மன்னர் விழைப விழையாமை :

கோல நேர் செய்யார்

பெரியார் உவப்பன தாம் உவவார் - ஆசாரக், 68

அறத்தொடு கல்யாணம் ஆள்வினை கூரை
இறப்பப் பெருகியக் கண்ணும் - திறப்பட்டார்
மன்னரின் மேம்படச் செய்யற்க செய்பவேல்
மன்னிய செல்வம் கெடும் - ஆசாரக், 85

உழைஏவல் செய்யும் சிறார்போல ஒதுங்கி வேந்தன்
விழைவுஏது அதனை விடம்போல வெறுத்து வெஃகார்

— திருவிளை. பன்றி. மந்திரி., 15

முற்றும் :

இறைசிறப் பாக அணிவன நுகர்வ இனிதுறு மேன்மையா
திகள் தாம்
உறல்அறை போதல் உரிமையின் மருவல் ஒண்பொருள்
வெஃவல் ......
........... சேர்ந்தவர்க்காகா. — விநா.அரசி., 112

70.3. போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது. (693)

உரைப்பகுதி :

அ) மணக். : காப்பின், காத்தற்கு அரியனவற்றைக் காப் பாற்றுக ; குற்றம் உண்டென்று ஐயப்பட்டபின்பு தெளிவித்தல் யாவர்க்கும் அரிது எ-று.

இஃது அடுத்தொன்று சொல்லாமல் ஒழுகவேண்டும் என்றது.

ஆ) பரிதி. : இராசாவின் உறவு அருமை; நெறிமுறைமை யிலே ராசசேவை பண்ணுக. அரசன் மனஞ்சலித்தால் தேற்ற முடியாது எ-று.

இ) பரிப் : காப்பான் ஆயின் காத்தற்கு அரியனவற்றைக் காக்க : குற்றம் உண்டு என்று ஐயப்பட்ட பின்பு தெளிவித்தல் யாவர்க்கும் அரிது எ-று.

அடுத்து ஒன்று சொல்லாமல் ஒழுக வேண்டும் என்றது. அது பெரும்பான்மையும் பெண்டிர் மாட்டே வரும்.

ஈ) காளி .: அரசர்மாட்டுக் குறிக்கொண்டு ஒழுக நினைப்பின் கீழ்ச்சொல்லிப் போந்தவையும்[1] பிறவும் ஆகிய அரியனவற்றைக் குறிக்கொண்டு நெறியின் ஒழுகுக ; என்னை எனின் அவற்றுள் ஒன்றினான் அரசர் முகம் கடுத்தபின் அவரைத் தெளிவித்தல் யாவர்க்கும் அரிது எனவே உயிர்க்கேடும் பொருட்கேடுமாய்விடும் என்பது பொருள் ஆயிற்று எ-று.

---

1. கீழ்ச் சொல்லிப் போந்தவை - கீழே குறித்தவை

உ) பரிமேல் .: அமைச்சர் தம்மைக் காக்கக் கருதின் அரிய பிழைகள்[2] தங்கண் வாராமல் காக்க; அவற்றை வந்தனவாகக் கேட்டு அவ்வரசர் ஐயுற்றால் அவரைப் பின் தெளிவித்தல் யாவர்க்கும் அரிதாகலான்.

அரியபிழைகளாவன அவரால் பொறுத்தற்குரிய அறை போதல்[3], உரிமையோடு மருவல்[4], அரும்பொருள் வௌவல்[5] என்றிவை முதலாயின. அவற்றைக் காத்தலாவது ஒருவன் சொல்லியக்கால், தகுமோ என்று ஐயுறாது தகாது என்றே அவர் துணிய ஒழுகல். ஒருவாற்றான் தெளிவித்தாலும் கடன் கொண்டான் தோன்றப் பொருள் தோன்றுமாறு போலக் கண்டுழியெல்லாம் அவை நினைக்கப்படுதலின் யார்க்கும் அரிது என்றார். இவை மூன்று பாட்டாலும் அது[6] பொதுவகையான் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: மந்திரிகள்' தங்களைக் காக்க நினைத்தால், பெரிய குற்றங்கள் தங்களிடத்திலே வசராமற் காக்கவேணும்; அந்தக் குற்றம் வந்ததென்று கேட்டு, அரசன் ஐயுற்றால், அவனைத் தேற்றுகிறது எவருக்கும் அருமையாம் எ-று.

ஏ) பழைய 2: அமைச்சர் தம்மைக் காக்கக் கருதின் அரிய பிழைகள் தம்மிடத்தின் வாராமற் காக்க; பிழை கண்டரசன் கடுக்குமிடத்துத் தடுத்தல் யாவர்க்கும் அரிதாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அரியவை போற்றல்' என்பதற்குப் பரிமேலழகர் தரும் விளக்கம் அரசியலுக்கு மிக ஏற்புடையது. கடுத்தபின்-ஐயுற்றால். கடுத்தல் பல பொருள்படும் ஒரு சொல்லாயினும் பின்னர்த் தேற்றுதல் என வரும் வினைக்கு ஐயப்படுதல் என்ற பொருளே

2. அரியபிழை - பெரிய பிழை; அருமை ஈண்டு பெருமை மேற்று
3. அறைபோதல் - கீழறுத்துச் செல்லுதல். அஃதாவது அமைச்சன் தன்பிழை யாகாதவாறு மறுத்து அரசர்க்குத் தீமை செய்தலும் மறை வெளிப்படுத்து தலும்
4. உரிமையோடு மருவல் - அரசர்க்குரிய பெண்களோடு கலத்தல்
5. அரும்பொருள் வௌவல் - அரசர்க்குரிய அரிய பொருள்களைக் கவருதல்
6. அது - மன்னரைச் சேர்ந்தொழுகல்

ஏற்புடையது 'அரியவை பெரும்பாலும் பெண்டிர் மாட்டே வரும்' என்ற பரிப்பெருமாள் உரையும் ஏற்புடையதேயாம்.

'கடுத்தபின்'

'சினந்தபின்' காளிங்கர் ; 'ஐயுற்றுக் கோபித்தால்' என்பர் மு. ரா. அரு. ; 'அரியவை பெரிய பிழைகள் அல்ல ; அடக்க இயலாத சிறுசிறு கெட்ட பழக்கங்கள் அவை பொடி போடுதல், கண்ணடித்தல் கைகொட்டி ஆரவாரித்தல் போல்வன இவற்றை அரசர்க்கு முன் அடக்குக' என்பர் இராம. ; இவை களால் அரசன் ஐயுறமாட்டான் ; சினப்பன். இவற்றான் வரும் கேட்டினும், பரிமேலழகர் காட்டியவற்றால் வரும் ஐயமும், தெளிவும் சிறந்தவை. ஆதலால் அவருரை ஏற்புடையது.

வரத. 'கடுத்தபின்' என்பதைக் கடுப்ப என்ற உவம இடைச் சொல்லடியாக வந்த வினை எச்சமாகக்கொண்டு 'அரசனைப் போல இருக்க எண்ணுகிறான் என்ற ஐயம் வருமானால் அரச னைத் தெளிவிக்க முடியாது' என்பர். இது வலிந்து கோடலாகும் அரிய பிழைகளாகக் குழந்தை கூறுவன 'பகைவரோடு சேர்தல் அரும்பொருள் கொள்ளுதல்'முதலியன ஆகும். 'அரியவை-பெருங் குற்றம்' என்பர் வ.சுப.மா. இவற்றுள் பல்லாற்றானும் பரி மேலழகர் கருத்தே பாராட்டுக்குரியன.

ஒ) ஒப்புமைப்பகுதி :

கடுத்தபின் தேற்றுதல் யார்க்கும் அரிது :

பொறுப்ப ரென்றெண்ணிப் புரை சீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும் - வெறுத்த பின்
ஆர்க்கும் அருவி அணிமலை நன்னாட
பேர்த்தாதல் யார்க்கும் அரிது. — நாலடி , 161

நீர்த்தன் றொருவர் நெறியன்றிக் கொண்டக்கால்
பேர்த்துத் தெருட்டல் பெரியார்க்கும் ஆகாதே
கூர்த்தநுண் கேள்வி அறிவுடையார்க் காயினும்
ஓர்த்த திசைக்கும் பறை. — பழ. நா. , 38

ஓ) மேற்கோள்பகுதி :

தெய்வச். : கடி என்ற உரிச்சொல் ஐயப்பொருளில் வந்ததற்கு மேற்கோள்.
— தொல். சொல். 379

குணவீர. : ஷ — நேமி. 58

அடியார். : கடுக்கும் என்நெஞ்சம் 'கடுக்கும் ஐயுறும்' ; கடி என்னும் உரிச்சொல் ஈறுதிரிந்தது ; 'போற்றின் அரியவை போற்றல் கடுத்த பின்...... அரிது' என்றாற்போல.
— சிலப். கனாத்.' 45

70.4. *செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்*
*ஆன்ற பெரியா ரகத்து.* (694)

உரைப்பகுதி :

அ) மணக். : அமைந்த பெரியாரிடத்து ஒருவன் செவியுட் சொல்லுதலும், ஒருவன் முகம் பார்த்துத் தம்மில் நகுதலும், தவிர்ந்தொழுகல் வேண்டும் எ—று.

இது செவிக்கூற்றும் நகையும் ஆகா என்றது.

ஆ) பரிதி : இரகசியமாக ஒருவர் கூடச் சொல்லுவதும் சிரிப்பதும் ராசசந்நிதியில் கைவிடுக எ—று.

இ) பரிப். : ஒருவன் செவியுடன் சொல்லுதலும் ஒருவன் முகம் பார்த்துத் தம்மில் நகுதலும் தவிர்த்து ஒழுகுக அமைந்த பெரியாரகத்து எ—று.

ஈ) காளி. : 'அவித்தொழுக ஆன்ற' பாடம்.

அரசரைச் சேர்ந்து ஒழுகும் அமைச்சரானோர் மற்று அவர் தம்மொடு சொல்லும் செவிச்சொலன்றிப் பிறரொடு பறையும்[1] செவிச்சொல்லும், இனி மற்று அவரோடாயினும் பிறரோடா

1. பறையும் - சொல்லும்

யினும் அங்குக்கூடி நகும் நகையும் என்னும் இவை இரண்டும் ஒழிந்து ஒழுகுக; யார் மாட்டு எனின் செல்வம் முதலிய முற்றுப்பெற்ற பெரியோராகிய அவ்வரசரிடத்து எ—று.

உ) பரிமேல்.: அமைந்த அரசர் அருகிருந்தால், அவர்காண ஒருவன் செவிக்கண் சொல்லுதலையும் ஒருவன் முகநோக்கி நகுதலையும் தவிர்ந்து ஒழுகுக.

சேர்தல் பிறனொடு சேர்தல். செய்தொழுகின்[2] தங் குற்றம் கண்டு செய்தனவாகக் கொள்வர் என்பது கருத்து.

காரி.: அவித்தொழுகல் பயனிலை.

ஊ) கவிராசர்: அரசன் அண்டையிலே இருக்கிறவர்கள், அரசன் முன்னே ஒருவன்காதிலே ரகசியம் சொல்லுகிறதையும், ஒருவன் முகத்தைப் பார்த்துச் சிரிக்கிறதையுஞ் தவிர்த்திருக்க வேணும் எ—று.

எ) பழைய2: அமைந்த அரசர் அருகு இருந்து அவர் காண ஒருவர்க்கொருவர் காதில் இரகசியம் பேசுதலும், ஒருவருக் கொருவர் நகைத்து விளையாடலும் தவிர்தொழுக.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'பெரியாரிடத்து ஒருவன் செவியுட்சொல்லலும்' என்ற மணக்குடவர் உரை பெரியாரிடம் சொல்லுதலையா அல்லது பெரியார் இருக்கும் இடத்தில் வேறொருவன் செவியிற் சொல்லு தலையா விலக்க வேண்டும் என்ற ஐயம் நிகழும். அதனைக் காளிங்கர் உரை தெளிவாக்குதலைக் காணலாம். அங்ஙனமே 'சேர்ந்த நகைக்கும்' காளிங்கர் உரை சிறந்தது. பரிமேலழகர் உரை தெளிவினதாயினும், 'அரசரோடு நகையாடலாம்' என்பதை ஒப்புகிறது; அதுவுங் கூடாது என்கின்றது காளிங்கர் உரை. நின்ற ஒளியோடு ஒழுகப்படும் அரசரிடையே சிரித்துப் பேசுதலும் ஆகாது ஆதலின். வரத. 'அறிஞர்கள் கூடிய சபையிலே இரகசியம் பேசுதலையும், கலகல

2. செய்தொழுகின் - அமைச்சர் வேறு ஒருவனோடு மறைத்துப் பேசுதலையும் முகத்தைப் பார்த்துச் சிரித்தலையும் செய்தால்

வெனச் சிரித்தலையும் ஒழிக்க' என்பர். இவ்வுரை அங்க இயலுக்கு ஏற்றதன்று. அரசன் முன் என்ற உரைகளே சிறந்தவை. மு கோ. 'அரசர் எதிரிலும், அரசனிடத்தும்; அரசவைப் பெரியோரிடத்தும் செவிச்சொல்லும் கூடிச்சிரித்தலும் கூடாது' என்பர். இது மணக்., பரிமேல்., காளிங்கர் முதலான அனைவருரைகளையும் தழுவிய கருத்து. இன்றியமையாத சூழ்நிலையில் அரசரிடமும் செவியிற் சொல்லுதல் கூடும் என்க.

ஓ) ஒப்புமைப்பகுதி:

செவிச்சொல் அவித்து ஒழுகல் ஆன்றபெரியாரகத்து:

செவிச்சொல்லும் கொள்ளார் பெரியாரகத்து. —ஆசாரக்., 75

பிறரொடு மந்திரம் கொள்ளார் இறைவனைச்
சாரார் செவியோரார் சாரில் பிறிதொன்று
தேர்வார்போல் நிற்க திரிந்து. —ஆசாரக்., 78

நகை அவித்தொழுகல் ஆன்றபெரியாரகத்து:

நகையொடு மந்திரம் நட்டார்க்கு வாரம்
பகையொடு பாட்டுரைஎன் றைந்தும் - தொகையொடு
மூத்தோர் இருந்துழி வேண்டார் முதுநூலுள்
யாத்தார் அறிந்தவர் ஆய்ந்து. —சிறுபஞ்ச., 85

முற்றும்:

......... ......... ......... ......... மன்னவன்முன்
பிறர்செவி மொழிதல் பிறரொடு நகைத்தல் பேணுறாப் பண்பு
வேந்து இளமை
முறைமதித் திகழ்தல் விரும்புறா வினையை முடித்தலும்
சேர்ந்தவர்க் காகா. —விநா. அரசி., 112

70.5. *எப்பொருளும் ஓரார் தொடரார்மற் றப்பொருளை*
*விட்டக்கால் கேட்க மறை.* (695)

உரைப்பகுதி:

அ) மணக்., பரிப்.: யாதொரு பொருளையும் செவிகொடுத்து

ஓராது[1], தொடர்ந்து கேளாது, அப்பொருளைமறைத்தல் தவிர்ந்தால் பின்பு கேட்க எ-று.

இது கேட்டல் விருப்பமும் குற்றம் என்றது.

ஆ) பரிதி.: மந்திரி ஒரு ரகசியத்தை முகத்திலே மனத்திலே காட்டாமல் மறைத்து அந்தக்காரியம் முடிந்தவாறே இரகசியத்தைப் பிரசங்கம் செய்வான் எ-று.

இ) காளி.: எப்பொருளும் ஓரார் என்பது அரசர் மாட்டுப் பிறரால் சில மறை உளதான காலத்து அப்பொருள் சிறிதேயாயினும் பெரிதேயாயினும் தாம் அதனை பொருட்படுத்திக் குறிக்கொண்டு விரும்பார். தொடரார் என்பது மற்று அவர் அங்குநின்றும் நீங்கிப்போன இடத்தும் பின்பும் அவரொடு பற்றிக் கொள்ளரர்; மற்று அப்பொருள்தான் புறத்து எங்கும் தானே விட்டு வெளிப்பட்ட காலத்தும் வேண்டுகின்[2] கேட்பாராக அம்மறைப் பொருளினை எ-று.

உ) பரிமேல்.: அரசனுக்குப் பிறரோடு மறை நிகழ்வுழி, யாதொரு பொருளையும் செவிகொடுத்துக்கேளாது, அவனை முடுகி[3] வினவுவதும் செய்யாது அம்மறைப்பொருளை அவன் தானே அடக்காது, சொல்லியக்கால் கேட்க, (எ—று).

ஒய்தற்கு ஏற்கும்[4] பொருளாயினும் என்பார் 'எப்பொருளும்' என்றார். மற்று வினைமாற்றின்கண் வந்தது[5].

ஊ) கவிராசர்: அரசன் ஒருவனுடனே ரகசியம் சொன்னால், அதைக் காதுகொடுத்துக் கேளாமலும், அவனை முடுகிக் கேளாமலும் இருக்கவேணும்; அவன் தானே சொன்னானாகிற் கேட்கலாம் எ-று.

---

1. ஓராது - செவிபடுத்துக் கேளாது
2. வேண்டுகின் - விரும்பினால். வேண்டின் என்பது பகுதியோடு 'கு'ச் சாரியைப் பெற்று வேண்டுகின் என்றாயிற்று
3. முடுகி - விரைந்து 4. ஓர்தற்கு ஏற்கும் - ஆலோசித்தற்குத் தக்க
5. மற்று என்பது தொடரார் என்னும் வினையை மாற்றித் தொடர்வார் என்னும் பொருளில் வந்தமையால் வினைமாற்றாயிற்று. அதாவது எதிர்மறைவினை உடன்பாட்டு வினைப் பொருளில் வந்தது எ-று

ஏ) பழைய 2 : அரசன் பிறரொடு இரகசியம் பேசும்போது யாதொரு பொருளையுஞ் செவிகொடுத்துக்கேளார், அவன் பின்றொடர்ந்தும் யாதொன்றும் வினவிக்கேளார்; மற்றப் பொருளை அரசன்தானே அடக்காது சொல்லியக்காற் கேட்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'தொடரார்' என்பதற்கு 'அரசனை நெருக்கியறியார்' என்பர் பரிமேலழகர். 'அரசனிடம் மறைபேசிச்சென்றவனைத் தொடர்ந்துபோய் அறியார்' என்பர், காளிங்கர். பரிதியுரை கருத்தளவிலும் பாடற்கு இயைபுடையதாக இல்லை. 'தம்மைப் பற்றியதாயினும் என்பர் எப்பொருளும் என்றார்' என்னும் தேவநேயர் கூறும் நயம் பரிமேலழகர் கூறுவதோடு இணைத்தும் இன்புறுதற்குரியது.

வரத. 'அமைச்சர் மறைகேட்கும் முறையை விளக்கும் இக்குறளை, எதனையும் செவிகொடுக்காமலும் தொடர்ந்து கேட்காமலும், சொல்பவர் அடக்கமுடியாமற் சொன்னால் கேட்டலுந்தான் இரகசியம்' என்பர். இவ்வதிகாரம் இரகசியம் எத்தகையது என மறைக்கு இலக்கணம் சொல்லவந்ததன்று; மந்திரி இரகசியங்களைக் கேட்கும் முறை சொல்ல வந்தது. அதனை இங்ஙனம் திசைதிரும்புதல் ஏற்றதாகாது. இராமலிங்கனார் 'மன்னன் புரிந்து கொள்ளாவிட்டாலும், கவனமாகக் கேட்கத் தவறினாலும் அதைப்பற்றிச் சபையில் குற்றஞ் சாட்டாமல் பின்பு தனியாகக் கேட்டுக் கொள்ளவேண்டும்' என்று கருத்துக் கொணருவர். இது குடியாட்சிக் காலத்து அரசவையை நினைவிற்கொண்டு எழுந்தகருத்து. தொல்லாசிரியர் காட்டியவை முடியாட்சிக் காலத்தில் மந்திரி மன்னனிடம் நடந்துகொள்ள வேண்டிய முறை குறள் நடைமுடியாட்சியில் மந்திரி இங்ஙனம் நடந்து கொள்க என்கின்றது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

எப்பொருளும் ஓரார்:

இறைவனைச் சாரார் செவியோரார் சாரிற் பிறிதொன்று
தேர்வார் போல் நிற்க திரிந்து. — ஆசாரக்., 78

**முற்றும்**

சிறப்புற ஓர்வ தாயினும் மறைதான் செப்பிடின் கேட்பினல் லாது
மறப்பினும் தொடரார் ஓர்தரார் அணுகார் மருங்கக லார்வினை
வலித்தார். — விநா.அரசி.,113

...................... பெருந்தக்கார்
சொல்லிற் செவிமடுத்துக் கேட்டிடுக மீட்டும்
வினாவற்க சொல்லொழிந்தக் கால். —ஆசாரக்,

*70.6. குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்பில*
*வேண்டுப வேட்பச் சொலல். (696)*

**உரைப்பகுதி :**

அ) மணக் : அரசன் குறிப்பறிந்து, காலம் பார்த்து, வெறுப்பில்லாதனவாய், சொல்ல வேண்டுவனவற்றை விரும்புமாறு சொல்லுக எ—று.

இது சொல்லுந்திறம் கூறிற்று.

ஆ) பரிதி : அரசன் குறிப்பறிந்து காலம் அறிந்து சோம்பாமல் அரசனது அவா உள்ளவாறு வசனம் சொல்லுவான்எ—று.

இ) பரிப். : அரசன் குறிப்பை அறிந்து காலம் பார்த்து வெறுப்பில்லாதனவாய்ச் சொல்ல வேண்டுவனவற்றை விரும்புமாறு சொல்லுக எ—று.

ஈ) காளி. : அரசனது உள்ளக்குறிப்பினை ஆராய்ந்து தான் சென்று அறிவுரைக்கும் காலத்தையும் கருதிச்சென்று உரைக்கும் இடத்து அவர்க்கு வெறுப்பு இல்லனவுமாய்ப் பின்னும் மிகுதிக் குறைவின்றி ஒருவண்ணம்வேண்டும் அளவினவுமாய் [1]இருப்பனவற்றையே அரசர் பெரிதும் விருப்புற்றுக் கேட்குமாறு சொல்லுக மன்னரைச்சேர்ந்து ஒழுகும் அமைச்சர் எ—று.

1, வேண்டும் அளவினவுமாய் - வேண்டிய அளவு

உ) பரிமேல் : அரசனுக்குக்காரியம் சொல்லுங்கால் அப்பொழுது நிகழ்கின்ற அவன் குறிப்பினை அறிந்து, சொல்லுதற்கு ஏற்ற காலத்தையும் நோக்கி, வெறுப்பிலவுமாய் வேண்டுவனவுமாய காரியங்களை அவன் மனம் விரும்பும்வகை சொல்லுக.

குறிப்புக் காரியத்தின்கண் அன்றிக் காமவெகுளி உள்ளிட்டவற்றில் நிகழ்வுழியும் அதற்கு ஏலாக்காலத்தும்[2] சொல்லுதல் பயனின்றாகலின் 'குறிப்பறிந்து காலங்கருதி' என்றும், அவன் உடம்படாதன முடிவு போகாமையின் 'வெறுப்பில' என்றும், பயனில்லவும் பயன் சுருங்கியவும் செய்தல் வேண்டாமையின் 'வேண்டுப' என்றும், அவற்றை இனியவாய்ச் சுருங்கி விளங்கிய பொருளவாய சொற்களான் சொல்லுக என்பார் 'வேட்பச் சொலல்' என்றும் கூறினார்.

ஊ) கவிராசர் : அரசனுக்குக்காரியஞ் சொல்லும் பொழுது அவன் குறிப்பை அறிந்து, சொல்வதற்கு ஏற்ற காலம் பார்த்து வெறுப்பில்லனவும் வேண்டுவனவுமாயிருக்கிற காரியங்களை அரசன் விருப்பமாய்க்கேட்கும் வகையாற் சொல்லுக எ—று.

ஏ) பழைய 2 : அரசனது காரியங்களைச் சொல்லும்போது அவன் மனக்குறிப்பறிந்து, சொல்லுதற்கேற்ற காலத்தையும் நோக்கி, வெறுப்பில்லனவுமாய் வேண்டுவனவுமாய காரியங்களை அவன் விரும்பும்வகை அறிந்து சொல்லுக.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

தொல்லாசிரியர்களில் கருத்து மாற்றம் இன்று. இராமலிங்கனார் 'குறிப்பறிந்து வெறுப்பில காலங்க கருதி வேண்டுப வேட்பச் சொலல்' எனக் கூட்டிப் பொருள் கொள்வர்.

'வெறுப்பில' 'வேண்டுப' என்பன அமைச்சர் அரசனிடம் தெரிவித்துக் கொள்ளும் செயல் மேலும், 'குறிப்பறிந்து' காலங் கருதி வேட்பச் சொலல் என்பன சொல்லும் முறை மேலும் நின்றன. 'வெறுப்பில' 'வேட்ப' இரண்டும் ஒரு பொருளனவாதல் இல்லை. முன்னது அஃறிணைப் பலவின்பாற் பன்மை குறிப்பு வினையாலணையும் பெயராய் வெறுப்பிலவாய நிகழ்ச்

2. ஏலாக் காலத்தும் - பொருந்தாக் காலத்தும்

சிகளையும், வேட்ப என்பது செயவென்எச்சமாய் சொல்லும் முறையால் மன்னன் விரும்ப? எனச்சொல்லின் மேலும் நின்றன.

ஒ) ஒப்புமைப்பகுதி :

குறிப்பறிந்து சொலல் :

விரைந் துரையார் மேன்மேல் உரையார்பொய் யாய
பரந்துரையார் பாரித் துரையார் - ஒருங்கெனைத்தும்
சில்லெழுத்தி னாலே பொருளடங்கக் காலத்தால்
சொல்லுக செவ்வி அறிந்து. —ஆசாரக், 76

காவன் மன்னவர் காய்வன சிந்தியார்
நாவினு முரையார் நவையஞ் சுவார். —சீவக.,

கைவரும் வேந்த னமக்கென்று காதலித்த
செவ்வி தெரியா துரையற்க - ஒவ்வொருகா
லெண்மை யனேனு மரியன் பெரிதம்மா
கண்ணில னுள்வெ யிர்ப்பினான். -நீதிநெறிவிளக்கம்

வெறுப்பில வேண்டுபசொலல் :

இகழின் இகழ்ந்தாங் கிறைமகன் ஒன்று
புகழினும் ஒக்கப் புகழ்ப - இகல்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செய்யும்
நீர்விழிப் பட்ட புணை. —நீதிநெறி., 42

வேண்டுப வேட்பச் சொலல் :

புன்னவை யான் மாற்றம் புகன்றவ ரெனினும் கேட்டாங்கு
இன்னவை நன்று நன்றென்று இதம்பட மொழிவ தல்லால்
மன்னவை இருந்து நாளும் வழிபடு மாந்தர் மன்னர்
சொன்னவை மறுத்து மாறு சொல்வரோ சுருதி வல்லாய்.
—வில்லி, நிரை., 122

முழ்றும் :

குறிப்பொடு காலம் அறிந்திறை விரும்பக் கோதறு பயன்மிகப் பயக்கும்

வெறுப்பில வினையை விளம்பிவேண்டாத வினையினைக்
கேட்பினும் விளம்பார் —விநா. அரசி., 113

என்குறை நீவயவேந்தற் கியம் புதியேல் வடங்கிடந்து
பொன்பிதிர் மின்சுணங்கார்ந்த பொம்மலிள முலையினர்பா
லன்புறு நல்லமய மதிலறையற்க வறைகுதியேல்
நன்குறை தீங்கா மவர்பா னயப்புற்ற தன்மையினால்.
—நைடதம்

வேற்றரசர் திறைகொணரும் வேலையிலுஞ் செல்லற்க
மாற்றரசர் பால்வெகுளு மமயத்தும் வகுதது‌ரையேல்
தேற்றமுடை மதிவல்லோர் தேர்ச்சியிலும் தெரிந்துரையேல்
சாற்றி னுரைத்தன வெல்லாந் தவறாதலநிதியே. - நைடதம்

70.7. *வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்*
*கேட்பினும் சொல்லா விடல். (697)*

உரைப்பகுதி :

அ) மணக். : எப்போதும் வேந்தனால் விரும்பப்படுவன வற்றைச்சொல்லி, தமக்குப் பயன்படாதனவற்றைக் கேட்டாலும் சொல்லாது விடுக எ - று.

சொல்லாது விடலாவது, தூதனை 'அரசர்க்குப் படை எவ்வளவு உண்டு' என்று பகையரசன் வினாவினால், 'நீ அறியாத தொன்றோ' என்று அளவு கூறாமை.

ஆ) பரிதி. : அரசன் விரும்பின காரியம் செல்லுக; விரும்பாத காரியம் கேட்டாலும் சொல்லாமை நன்று எ—று.

இ) பரிப். : வேந்தனால் விரும்பப் படுவனவற்றைச் சொல்லித் தமக்குப் பயன்படாதனவற்றைக் கேட்டாலும் சொல்லாது விடுக எ—று.

சொல்லாது விடல் ஆவது தூதனை நுமக்குப் படை எவ்வளவு உண்டு என்று அரசன் வினாவினால், நீ அறியாதது ஒன்றோ என்று அளவு கூறாமை. வினையில என்றமையால் பயன்

உண்டாயின் சொல்லுக என்பது கருத்து; தன் அரசன் பெண்டிர் முதலாயினாரைக் கேட்டார்க்குச் சொல்லாமை: இவை போல்வன சொல்லாமை வேண்டும் என்றது.

ஈ) காளி .: 'சொல்லார் விடல்' பாடம்.

அரசரைச் சேர்ந்து ஒழுகும் அருமை இத்தன்மைத்து ஆகலான் அவர் விரும்பிக்கேட்பனவற்றைச் சொல்லி மற்று ஆங்கும் அவ்வுரையினான் மேல் ஒருபயன்விளைத்தல் இல்லனவற்றை அரசர் கேட்டாராயினும் தாம்சொல்லாது ஒழிக எ—று.

உ) பரிமேல் .: பயன் பெரியனவுமாய், அரசன் விரும்புவனவுமாய காரியங்களை அவன் கேட்டிலனாயினும் சொல்லி, எஞ்ஞான்றும் பயனிலவாயவற்றைத் தானே கேட்டாலும் சொல்லாது விடுக, (எ-று).

'வினையில' எனவும், 'கேட்பினும்' எனவும் வந்த சொற்களரன், அவற்றின் மறுதலைச் சொற்கள் வருவிக்கப் பட்டன. வினையான் வருதலின் 'வினை' என்றும்,[1] வறுமை[2]க் காலமும் அடங்க 'எஞ்ஞான்றும்' என்று கூறினார். சொல்லுவனவும்[3] சொல்லாதனவும்[4] வகுத்துக் கூறியவாறு. இவை நான்கு பாட்டானும் அது சிறப்புவகையால் கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : பலன் பெரியனவும் அரசன் விரும்புவனவுமாய காரியங்களை அவன் கேளா விட்டாலும் சொல்லவேணும்; பலன் இல்லாத காரியங்களை, அரசன் கேட்டாலும், சொல்லாமல் விடவேணும் எ—று.

ஏ) பழைய .: 'சொல்லி வினைவில' பாடம்.

பயன்பெரியனவுமாய் அரசன் விரும்புவனவுமாய காரியங்களை அவன் கேட்டிலனாயினுஞ் சொல்லி, எந்நாளும் பயனிலவாயவற்றைத்தானேகேட்டாலுஞ் சொல்லாது விடுக

1. வினை-காரணம். அதனால் வருவன துன்ப இன்பங்கள், ஈண்டு வினை என்றது அவற்றின் வரும் துன்ப இன்பங்களையாதலின் கருவியாகுபெயராயிற்று
2. வறுமை-வறுமை என்பது நுகர்ச்சிக்குரிய பொருளின்மையாம்
3. சொல்லுவன-பெரும் பயன் அளிப்பன
4. சொல்லாதன-பயனில் காரியங்கள்

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'வினையில'

'தமக்குப் பயன்படாதன'; இதன்விளக்கம் 'அரசற்குப்படை எவ்வளவு என்று பகைமன்னன் கோட்டால்' என்பர் மணக். இதன் கருத்து அரசன் தன்னைத் தூதனுப்பிய நோக்கந்தவிர, தனக்குரிய தொழிலல்லாத படை எவ்வளவு? பொருணிலை என்ன? என்பன போன்ற தொடர்பற்ற செய்திகளைக்கேட்டால் சொல்லற்க என்பதாம். கேட்பவன் - பகை மன்னன். பரிப்பெருமாள் 'பயனுண்டாயின் வினையிலவற்றையும் கேட்டாற சொல்லலாம்' என்பர். காளிங்கர் 'கேட்பனவற்றைச் சொல்லுக; பயன் விளையுமாயினும் கேளாதனவற்றை என்பர். பரிமேலழகர் 'பயன் பெரியனவாக இருந்தாற்றான் அரசன் விரும்புவான்; அத்தகைய காரியங்களை அவன் கேட்காவிடினும் சொல்லுக. பயனிலவற்றைக் கேட்டாலும் சொல்லாது விடுக' என்பர்.

பகை மன்னனை நோக்கித் தூதுவன் கூறும் முறை மணக்குடவர் உரை. வந்த தூதனிடம் வந்த செய்தியோடு அவனரசனுடைய குடும்ப நல முதலியவற்றையும் கேட்பது உளவறியும் உபாயங்களுள் ஒன்று. அதனைப் பிறர் கேட்டாலும் சொல்லற்க என்கிறார் பரிப்பெருமாள்.

பிற்கால உரையாசிரியர்களிற் பெரும்போலார் பரிமேல ழகரை ஒத்தே உரைக்கின்றனர். அன்றியும் அவர் 'வினையில' என்றதால் வினையுள்ளன என்பதையும் 'கேட்பினும்' என்பதால் கேளானாயினும் என்பதையும் வருவித்துக் குறளின் கருத்துக்குப் பெருவலிவூட்டுகிறார். அதனால் இவர் உரை சிறந்தது.

70.8. *இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற*
*ஒளியோ டொழுகப் படும்.* (698)

உரைப்பகுதி :

அ) மணக். : இவர் நமக்கு இளையரென்றும் இத்தன்மை-யாகிய முறையரென்றும் இகழாது. அவர் பெற்று நின்ற தலைமையோடே பொருந்த ஒழுக வேண்டும் எ—று.

ஆ) பரிதி. : இவர்க்கும் நமக்கும் இப்படி நட்பு இவர் நமக்கு இன்னமுறையாம் என்ற இப்படி அரசரை அவமதியாது, அவர் மாட்டு நின்ற ஒளியோடு பொருந்த ஒழுகுதல் செய்யப்படும்.

இ) பரிப். : இவர் நமக்கு இளையர் என்றும், இத்தன்மை-யாகிய முறை என்றும் இகழாது அவர் பெற்று நின்ற தலைமை யோட பொருந்த ஒழுக வேண்டும் எ—று.

முறையார் என்றது இளங்கிழமையின் முறை[1]. இது காலத்துக்குத் தக்க காட்சி செய்ய வேண்டும் என்றது. இது மூன்றும் பெரும்பான்மையும் தன் அரசனை நோக்கிற்றின.

ஈ) காளி . : இவர் மிகவும் இளையராய் இருந்தார் என்றும், ஒருவாற்றால் நமக்கு இன்னமுறையினர் என்றும் கருதிக் கொண்டு இகழாராய் மற்று அவ்வரசர்க்கு அவரது குலமரபினால் உளதாம் நிலைபெற்று வருகின்ற பெரியதொர் ஒளி உண்டு அன்றே. மற்று அதனோடுசாரக் குறிக்கொண்டு ஒழுக அடுக்கும் அமைவுடையோர்[2] எ—று.

உ) பரிமேல் . : இவர் எம்மின் இளையர் என்றும் எமக்கு இன்ன முறையினையுடையர் என்றும் அரசரை அவமதியாது, அவர்மாட்டு நின்ற ஒளியோடு பொருந்த ஒழுகுதல் செய்யப் படும், (எ-று).

ஒளி, உறங்காநிற்கவும் தாம் உலகம்காக்கின்ற அவர் கடவுள் தன்மை. அதனோடு பொருந்த ஒழுகலாவது அவர்[3] கடவுளரும், தாம்[4] மக்களுமாய் ஒழுகுதல். அவ்வொளியால் போக்கப்பட்ட இளமையும் முறையும் பற்றி இகழ்வராயின், தாமும் போக்கப்படுவர்[5] என்பது கருத்து.

காரி. : 'பல்லோர் படர்க்கை' என்னும் விலக்குப் பற்றி ஒழுகப்படும் என்பதனை ஒழுகுதல் செய்யப்படும் என ஒழுகுதலை எழுவாயாக்கிச் செய்யப்படும் என்பதனைப் பயனிலையாக்கினது காண்க. ''வஞ்சரையஞ்சப்படும்''[6]

---

1. இளங்கிழமையின் முறை-தொடக்க காலத்துப் பழக்கத்தால் உண்டான முறைமை
2. அமைவுடையோர்-தகுதியுடையோர் 3. அவர்-அரசர் 4. தாம்-அமைச்சர்
5. போக்கப்படுவர்-அவரவர் பதவியிலிருந்து விலகச் செய்தல் 6. குறள்., 824

என்பதும் அது. ''செழுங்கார் முழவதிர்''[7] என்னும் கோவையாருள் ''வழங்காவதரின் வழங்கென்றுமோ இன்றெம் வள்ளலையே'' என்பதும் அது.

ஊ) கவிராசர் : 'அரசர் நமக்கு இளையவர்' என்றும், 'இன்னமுறை உடையவர்' என்றும் இகழாமல், அரசருடைய ஒளிக்குத் தக்கபடியே நடக்கவேணும் எ—று.

ஏ) பழைய 2 : இவர் எமக்கிளையர் என்றும், எமக்கு இன்ன முறையினர் என்றும் அரசரை அவமதியாதவரிடத்து நின்ற அரசாக்கினையை அறிந்து அதனோடு பொருந்த நடந்து கொள்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பரிதி. ''இப்படி நட்பு; இவர் நமக்கு இன்ன முறையர் என்பதால் இனமுறையர் என்பதை இன்னமுறையர் என்பதன் தொகுத்தல் விகாரமாகக் கருதுகிறார் எனலாம். மணக்., பரிப்பெருமாள் உரைகள் முறையே பொழிப்பாகவும், அதன் விளக்கமாகவும் இணைந்தவை.

'ஒளி' :

'தலைமை' மணக்.; 'குலமுறையால் நிலைபெற பெற்று வருகிற பெரியேதார் ஒளி' காளி.: 'கடவுட்டன்மை' பரிமேல்.; 'பதவி' இராம.;'தெய்வத்தன்மை தேவநேயர்;' இனமுறையர் —இன்ன உறவினர்' என்பர் தேவநேயர். இவற்றுள் உறங்குமாயினும் மன்னவன் தன்னொளி, கறங்குதெண்டிரை வையகங் காக்குமால்' என்ற மேற்கோளுடன் எழுதும் பரிமேலழகர் உரை சிறந்தது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

இளையர் என்றிகழ்தல் :

இளையன் இவனென உளையக் கூறி, — புறம்., 72:2

நம்மிற் பொருநனும் இளையன் — புறம்., 78:5

அறிவறியாப் பிள்ளையே யாயினும் நீத்துரையார் — ஆசாரக் ,68

---

7. திருக்கோவை., 157

அளையுறை பாம்பும் அரசும் நெருப்பும்
முழையுறை சீயமும் என்றிவை நான்கும்
இளைய எளிய பயின்றனஎன்று எண்ணி
இகழின் இழுக்கம் தரும். — ஆசாரக்., 84

சீர்த்தகு மன்னர் சிறந்தனைத்தும் கெட்டாலும்
நேர்த்துரைத் தெள்ளார் நிலைநோக்கிச் – சீர்த்த
கிளையின்றிப் போஒய்த் தனித்தாயக் கண்ணும்
இளைதென்று பாம்பிகழ்வார் இல் — பழ நா ,278

பாம்பு நெருப்பு நோய் ஆகிய இவற்றையும், தீயவன் அரசன் மருமகன் உடன்பிறந்தாள்மகள் பகைவன் ஆகிய இவர்களையும் முறையே சிறியன என்றும் சிறியவர் என்றும் கருதிப் பழகுங்கால் பொருட்படுத்தாமல் இருத்தலாகாது.

— சுக்கிர. அத்., 3 சு., 106

நின்ற ஒளியோடு ஒழுகப்படும்

—....... ......... ......... மற்றோர் பாசறை
உளனென வெரூஉம் ஓரொளி
வலனுயர் நெடுவேல் என்னைகண்ணதுவே —புறம் ,309:6-7

உறங்குமாயினும் மன்னவன் றன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால் — சீவக.,

வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி
ஒளியொடு வாழி யூழிதோ றூழி. — மணி : சிறைக்கோட்., 128-9

முற்றும் :

'அவ்வரசன் சிறுவனாக இருந்தாலும் அவனை மனிதனென்று அவமானஞ் செய்தல் கூடாது;, ஏனெனின், மேலாய தேவர்களின் அவ்வரசனுருவமாக யிருக்கின்றதல்லவா. —மனு. அத் ,7

ஓ) மேற்கோள்பகுதி :

சிவஞான. : படும் என்னும் சொல்லும் ஐம்பால் மூவிடத்துக்குப் பொதுவாய் வரும் என்பதற்கு மேற்கோள். — நன்., 339

சுவாமி .: தேற்றப் பொருளில்வரும் வேண்டும் என்னும் சொல்லின் குணம்தெரியாத பரிமேலழகர் தமக்கு வேண்டிய வாறே பொருளெழுதிச் செல்வர் என மறுப்பர். — இ.கொ., 85

70.9. கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர். (699)

உரைப்பகுதி :

அ) மணக் .: அரசனாலே கைக்கொள்ளப்பட்டோம் என்று நினைத்து, அவன் நெஞ்சிற் கொள்ளாதன செய்யார், அசைவற்ற தெளிவுடையார் எ—று.

இஃது அரசன் நெஞ்சிற்குப் பொருந்தினவை செய்ய வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: அரசன் உட்கொள்ளப்பெற்றோம் என்று அரசற்கு மனமில்லாத காரியம் செய்வான் அல்லன் அறிவுடையான் எ-று.

இ) பரிப்.: அரசனாலே கைக்கொள்ளப் பட்டேம் என்று நினைத்து அவன் நெஞ்சில் கொள்ளாதன செய்யார்கள் அசை வற்ற தெளிவுடையார் எ—று.

இஃது அரசன் இசைவன செய்ய வேண்டும் என்றது.

ஈ) காளி.: அரசரான் மிகவும் கைக்கொள்ளப்பட்டேம் என்று கருதி இதுகாரணமாக அரசரால் கைக்கொள்ளத்தகாதனவற்றைச் செய்வதிலர்: யார் எனின் கலக்கமற்ற திண்ணிய அறிவினை யுடையோர் எ—று

உ) பரிமேல் : அரசனால் யாம் நன்கு மதிக்கப்பட்டேம் என்று கருதி. அவன் விருப்பாதவற்றைச் செய்யார், நிலைபெற்ற அறிவினை உடையார், (எ-று).

கொள்ளாதனசெய்து அழிவெய்துவார் கொளப்பாட்டிற்குப் பின்[1] தம்மை வேறொருவராகக்[2] கருதுவராகலின், முன்னைய

1. கொளப்பாட்டிற்குப்பின் - அரசனால் பாராட்டுப் பெற்றபின்
2. தம்மை வேறொருவராக - வேறொரு சிறந்த நிலைமையுடையராக

ராகவே கருதி அஞ்சி ஒழுகுவாரைத் 'துளக்கற்ற காட்சியவர்' என்றார்.

ஊ) கவிராசர் : அரசன் நம்பேரிலே சந்தோஷமாய் இருக்கிறான் என்று அரசனுக்கு வேண்டாத காரியங்களைச் செய்யார் குற்றமற்ற அறிவினையுடையவர் எ—று.

ஏ) பழைய : 'கொளப்பட்டோம்' பாடம்.

அரசன் காரியத்தில்யாம் ஆதிக்கங் கொள்ளப் பெற்றோமென்று கருதி, அவன் விரும்பாதவற்றைச் செய்யார் நிலை பெற்ற அறிவினையுடையார்.

ஐ) **தொகுப்பும் குறிப்பும் :**

'கொளப்பட்டேம், கைக்கொள்ளப்பட்டேம், உட்கொள்ளப் பெற்றோம்', 'நன்கு மதிக்கப்பட்டோம்', 'அரச காரியத்தில் ஆதிக்கங் கொள்ளப்பெற்றோம்' என முறையே மணக., காளி., பரிதி., பரிமேல்., பழைய உரை 2 கூறுவர். கா.சு. 'ஏற்றுக் கொள்ளப்பெற்றோம்' என்பர். 'நண்பரானோம்' இராம; இவற்றுள் பரிமேலழகரும் கா.சுவும் கருதுவன தெளிந்தவை.

ஒ) ஒப்புமைப்பகுதி:

கொளப்பட்டேம் என்றெண்ணி கொள்ளாத செய்யார்:

கைவரும் வேந்தன் நமக்கென்று காதலித்த
செவ்வி தெரியாது உரையற்க — ஒவ்வொருகால்
எண்மைய னேனும் அரியன் பெரிதம்மா
கண்ணிலன் உள்வெயர்ப்பி னான். — நீதிநெறி., 46

*70.10. பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்*
*கெழுதகைமை கேடு தரும். (700)*

உரைப்பகுதி :

மணக் .: யாம் பழைமையுடையோம் என்று கருதி, இயல் பல்லாதனவற்றைச் செய்யும் நட்பின் தன்மை, நமக்குக்கேட்டைத் தரும் எ-று.

இது பின் பகையாவனவற்றைத் தவிரல் வேண்டும் என்றது.

ஆ) பரிதி .: அரசற்குப் பழையோம் என்று பண்பல்லாத காரியம் செய்தால் கேடுவரும் எ-று.

இ) பரிப் : யாம் பழையம் என்று கருதி இயல்பு அல்லாதன வற்றைச் செய்யும் நட்பின் தகைமை தனக்குக் கேட்டைத்தரும் எ-று.

இஃது இயற்கை அல்லாதன தவிரல் வேண்டும் என்றது.

ஈ) காளி. : அரசர்க்கு நாம் பழையர் எனக்கருதி, யாதானும் ஒன்று காரணமாக அரசர்மாட்டுத் தாம் ஒழுகும் பண்பிற்கு உரிய அல்லனவற்றைச் செய்யக்கருதும் கெழுதல் தன்மை[1]யானது கேட்டினைத்தரும்; எனவே என்றும் அரசர்மாட்டு அஞ்சி ஒழுகு தல் கடன் என்பது பொருள் ஆயிற்று.

உ) பரிமேல். : அரசனுக்கு யாம் பழையம் எனக்கருதித் தமக்கு இயல்பு அல்லாதவற்றைச் செய்யும் உரிமை, அமைச் சர்க்குக் கேட்டினைப் பயக்கும்.

அவன் பொறாது[2] செறும்பொழுதின் அப்பழமை நோக்கிக் கண்ணோடாது உயிரை வெளவுதலான், அவன் வேண்டாதன செய்தற்குக் 'கெழுதகைமை கேடுதரும்' என்றார். இவை மூன்று பாட்டானும் பொறுப்பர் என்று அரசர் வெறுப்பன செய்யற்க என்பது கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : அரசன் அண்டையிலே நாம் வெகு நாளாய் இருக்கிறோம் என்று நினைத்து, நன்மை இல்லாத காரியங் களைச் செய்தால், அது அவனுக்குகேடு தரும் எ-று.

ஏ) பழைய 2 : அரசனுக்கு யாம் பாரம்பரியம் என்று கருதித் தமக்கியல்பல்லாதவற்றைச் செய்யுமுரிமை தனக்குத் தானே கேடு வரும்.

1. கெழுதல் தன்மை — நட்பு கொள்ளும் தன்மை
2. அவன் பொறாது — அரசன் பொறுக்காது

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'பழைமை-விளையாட்டுத் தோழமை, கல்வித் தோழமையும் என்றும், கெழுதகைமை - சமநிலை' எனவும் கூறுவர் தேவநேயர். மு.கோ. 'பெரிய அரசியற் பதவியில் இருப்பவர் கட்கெல்லாம் செல்வாக்கு உடையேம், அந்நாட்டின் பழைய குடிகள் என்னும் உரிமை' என்றும் உரைப்பர். இவை இக்கால அரசியற்கு ஏற்றவுரைகள்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

பண்பல்ல செய்யும் கெழுதகை :

பூவுட்குங் கண்ணாய் பொறுப்ப ரெனக் கருதி
யாவர்க்கே யாயினும் இன்னாசெயல் வேண்டா. — பழ. நா. 335

பழைமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
கிழமை பிறிதொன்றும் கொள்ளார் வெகுளின்மன்
காதன்மை உண்டே இறைமாண்டார்க்கு ஏதிலரும்
ஆர்வலரும் இல்லை அவர்க்கு. — நீதிநெறி., 47

கழிகிழமை செய்யார் ......... கடைபோக வாழ்தும் என்பார்.
— ஆசாரக்., 69

முற்றும் :

பழையம் யாம் பண்பில செய்வரோ பருணிதர் பயனோர்வார்.
— கம்ப., 5138

பழையேம் இறை யூழ்கொளப்பட்டேம் என்று ஏமாப் (பு)
எய்தார். — திருவிளை. பன்றி. மந்திரி., 15

## 70. மன்னரைச் சேர்ந்தொழுகல்

| | அகலாது | மன்னர் | போற்றின் | செவிச்சொல்லும் | எப்பொருளும் | குறிப்பறிந்து | வேட்பன | இளையர் | கொளப்பட்டேம் | பழையம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 7 | 5 | 6 | 3 | 4 | 1 | 2 | 10 | 8 | 9 |
| பரிதி. | 7 | 10 | 9 | 8 | 6 | 1 | 2 | 5 | 3 | 4 |
| பரிப். | 7 | 5 | 6 | 3 | 4 | 1 | 2 | 10 | 8 | 9 |
| காளி. | 5 | 10 | 7 | 9 | 6 | 1 | 8 | 3 | 2 | 4 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

70 வது அதிகாரம் 'மன்னரைச் சேர்ந்தொழுகல்' முற்றிற்று.

# 71. குறிப்பறிதல்[1]

அ) மணக் .: குறிப்பறிதலாவது அரசர் உள்ளக் கருத்தை அமைச்சர் அறிதல். இஃது அமைச்சியலாதலின் அமைச்சர்குறிப் பறிதல் கூறியது என்னையெனின், குறிப்பறிதல் அரசர்க்கும் வேண்டுமாதலின், இறந்ததுகாத்தல் என்னும் தந்திர உத்தியால் கூறப்பட்டது என்க. இது பெரும்பான்மையும் அரசர்க்கும் வேண்டுமாதலின், மன்னரைச் சேர்ந்தொழுகலின்பின் கூறப் பட்டது.

ஆ) பரிதி .: குறிப்பறிதலாவது அரசன் நினைவு அறிதல் எ—று.

இ) பரிப் .: குறிப்பு அறிதலாவது அரசர் உள்ளக் கருத்தை அமைச்சர் அறிதலும் அமைச்சர் உள்ளக்கருத்தை அரசர் அறி தலும் இஃது அமைச்சர் இயல் ஆயினமையின் அமைச்சர் குறிப்பு அறிதல் கூறியது என்னை எனின், குறிப்பு அறிதல் அரசர்க்கும் வேண்டும்:ஆதலின் இறந்தது காத்தல் என்னும் தந்திரவுத்தியால் கூறப்பட்டது என்க. இது பெரும்பான்மையும் அமைச்சர்க்கு வேண்டுதலின் மன்னரைச் சேர்ந்து ஒழுகுதலின் பின் கூறப்பட்டது.

உ) பரிமேல் .: அஃதாவது அரசர் கருதிய அதனை அவர் கூறாமல் அறிதல். இஃது மன்னரைச் சேர்ந்தொழுகற்கு இன்றி யமையாதாகலின். அதன்பின் வைக்கப்பட்டது.

1. 'குறிப்பு, மனத்தாற் குறித்துணரப் படுவது' என்பர் சேனாவரையர்

ஊ) கவிராசர்: அஃதாவது—அரசன் நினைத்த காரியத்தை அவன் சொல்லாமலே அறிகிறது.

ஏ) பழைய 2: அஃதாவது, அரசன் கருதிய காரியத்தைச் சொல்லாமறிதல்.

மல்லர்: அதாவது அரசனுடைய முகத்திலே கண்ட அடையாளங் களைக்கொண்டு பிடிக்கிறது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அமைச்சன் அரசனது கருத்தைக் குறிப்பானறிதலும், அரசன் அமைச்சன் குறிப்பையறிதலும் ஆம்' என்பார் இயல் நோக்கி 'அமைச்சன் அறிதல்' என்றாராயினும் உத்திவகையான் 'அரசன் அறிதலும் ஆம்' என்பர் மணக்; பரிதியார் உரை அரசன் நினைவை அமைச்சன் அறிதலா? அமைச்சன் குறிப்பை அரசன் அறிதலா என மயங்க வைத்தலாக உள்ளது. பரிமேல ழகர் பின்னோர் கருத்துக்கள் தெளிவானவை. மு ரா. அரு. தேவநேயர். 'அரசரது உள்ளக்குறிப்பை அவர் முகக்குறிப்பால் அறிந்து கொள்ளுதல்'; கா. சு., இராம. 'இன்னொருவனுடைய மனக்குறிப்பைக் குறிப்பானறிதல்' என்பர். ஏனையோர் 'அமைச் சன் அரசன் கருத்தையறிதல்' என்னா நிற்க இவர் பொதுமையிற் கூறுதல் மயங்கவைத்தலின் பாற்படுவதாயினும் இயனோக்கித் தெளியலாகிறது. 'சொல்லாமல் குறிப்பானறிதல்' என்பர் சபா பதி. குழந்தை இவ்வதிகாரத்தை அவையஞ்சாமையின் பின் பும், வினைத்தூய்மையின் முன்பும் ஆக அமைப்பர்; 'பிறருள்ளக் கருத்தை அவரறியாமல் அறிதலாம்' என்பர். 'அரசர் மனத்திலிருப் பதை அவர் கூறாமலே அமைச்சன் அறிந்து செய்வது' என்பர் வரத.

71.1. *கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்*
*மாறாநீர் வையக் கணி.* (701)

உரைப்பகுதி:

அ) மணக்.: அரசன் மன நிகழ்ச்சியை அவன் கூறுவதன் முன்னே நோக்கி அறியுமவன், எல்லா நாளும் மாறாநீர் சூழ்ந்த வையகத்துக்கு அணிகலனாவன் எ—று.

இது மக்களிற் சிறப்புடையனாம் என்றது.

ஆ) பரிதி.: அரசன் மனத்திலே எண்ணியதைச் சொல்லாமல் அறிவான் சமுத்திரம் சூழ்ந்த உலகத்திற்கு ஆபரணம் எ—று.

இ) பரிப்.: அரசன் கூறுவதன் முன்னே அவன் மன நிகழ்ச்சியை நோக்கி அறியுமவன் எல்லா நாளும் மாறாத நீர் சூழ்ந்த வையத்துக்கு அணிகலன் ஆவான் எ—று.

இது மக்களில் சிறப்புடையன் ஆவான் என்றது.

ஈ) காளி: அரசன் சொல்லவேண்டாமல் அவன் உள்ளம் குறித்ததனை முன்னம் குறிப்பினான் அறிந்துகொள்வான் யாவனோர் அமைச்சன், மற்று அவன் எஞ்ஞான்றும் வற்றா நீராகிய கடல் சூழ்ந்த வைப்பிற்கு ஓர் அணிகலம். எனவே வையத்து வாழ்வோர்க்குப் பெரிதும் ஒளியுடை அணிகலத்தனையன் என்பது பொருளாயிற்று எ—று.

உ) பரிமேல்.: அரசனால் குறித்த கருமத்தை அவன் கூற வேண்டாவகை அவன் முகத்தானும் கண்ணானும் நோக்கி அறியும் அமைச்சன், எஞ்ஞான்றும் வற்றாத நீரால் சூழப்பட்ட வையத்துள்ளார்க்கு ஓர் ஆபரணமாம்.

ஒப்பம் உடையனாய் எல்லார்க்கும் அழகுசெய்தலான், 'வையக்கு அணி' என்றார். குறிப்பும் வையமும் ஆகுபெயர்.[1] வையத்திற்கு என்பது விகாரப்பட்டு நின்றது[2].

ஊ) கவிராசர்: அரசன் நினைத்த கருமத்தை அவன் சொல்லாமலே முகத்தினாலேயும் கண்ணினாலேயும் அறிகிறவன், சமுத்திரஞ் சூழ்ந்த பூமிக்கு ஆபரணமாம் எ—று.

ஏ) பழைய2: அரசன் குறித்த கருமத்தை அவன் கூறாமலிருப்ப, முகத்தைக் கண்ணை நோக்கியறியும் அமைச்சன் எக்காலமும் வற்றாத கடல் சூழ்ந்த உலகத்துள்ளார்க்கு ஓராபரணமாம்.

---

1. குறிப்பு என்னும் தொழிற்பெயர் குறித்த செயலை உணர்த்துதலால் தொழிலாகு பெயர். வையம் என்னும் இடப்பெயர் வையத்து வாழ்வாரை உணர்த்துதலால் இடவாகுபெயர்
2. வையக்கு என்பது வையத்திற்கு என்பதன் விகாரம்

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்குடவர் முதலான தொல்லாசிரியர் உரைகளிற் கருத்து மாற்றம் இன்று. இராம. 'கூறாமையை நோக்கிக் குறிப் பான் அறிவான்' என வேற்றுமையுருபுகளை விரித்து 'அரசன் வாயாற் சொல்லமுடியாதிருத்தலைக் குறிப்பாற் கண்டு' என உரை விரித்தனர். 'அரசனுக்கு ஏதோ ஒரு இக்கட்டான நிலை. அவன் சொல்ல இயலாமல் தயங்க அதைக் குறிப்பானறிந்து செய்து முடிக்க வல்ல அமைச்சன் உலகத்திற்கே அணிபோல் வான்' என்றனர். பரிமேலழகரும் பிறரும் அரசனுக்கு அத் தகைய சூழ்நிலையை உண்டாக்கின் இழுக்காம் எனக் கருதியும், அத்தகைய நிலையிற் குறிப்பானறிதல் அமைச்சர்க்குச் சிறப்புத் தருவதொன்றாகாமையையும் கருதி 'இயல்பான நிலையிலேயே குறிப்புணர்ந்து செய்வான் அணியாம்' என்றார். ஆதலாற் பரி மேலழகர் கருதும் பின்னணியும் பொருளும் சிறந்தவை. ஆனால், 'வையக்கு அணி' என்றதற்குப் பொருள் விளக்கமும் நயமும் காட்டிய பரிமேலழகர் 'மாறாநீர் வையம்' என்றமைக்கு ஒன்றும் குறித்திலர். தேவநேயர் 'ஞாலம் நீராற் சூழப்படாமல் அதைத் தன்னுள் ஒரு கூறாகக் கொண்டிருப்பதாலும், நீராற் சூழப்பட்டநிலப்பகுதி பலவாதலாலும் மாறாநீரைத் தன்னுட் கொண்ட ஞாலம்' என்றார். இதன் கருத்து 'உலக முழுதிற்கும் இவன் அணியாவன் என்பதாம்' என்பர்.

வரத. 'நீர் உலகமக்களுக்கு மிகமிக இன்றியமையாதது அதுபோல அரசனுக்கு அமைச்சன் இன்றியமையாதவன்' என்றும் அணிகள் ஒருவனுடைய தகுதியையும் தோற்றத்தையும் மிகைப் படுத்திக் காட்டும். அதுபோல அரசனுடைய தகுதியையும் பெரு மையையும் ஆற்றலையும் உலகறியச்செய்தலின் அணி என்றார்' என்றும் விளக்கம் காண்பர்.

இராம. 'குறிப்பறிவான் வற்றாத கடல் போல எப்போதும் சிறப்பிக்கத்தக்கவன் என்பது கருத்து' என்பர்.

'பிறவிப்பெருங்கடல்' என்றபோது, காரணகாரியத் தொடர்ச் சியாய்க் 'கரையின்றி வருதலின்' என்றும், 'நெடுங்கடல்' என்ற போது 'மழைக்குக் காரணமாய கடற்கும்' 'என்றும், 'கடலன் னகாமம்' என்றபோது 'கரையற்றகாமம்' என்றும் உரைகண்ட பரிமேலழகர் ஈண்டு வாளாவிடுத்தனர். வள்ளுவர் யாண்டும்

வெற்றெனத் தொடார் என்ற மரபினை எண்ணித்தேவநேயர் போன்றார் நயத்தை விளக்கத் தொடங்கினர். இதில் தேவநேயர் உரைக்குறிப்பு 'கடல் முக்காற்பகுதியும் நிலம் காற்பகுதியுமாக இருந்தும், ஞாலம் நீராற்சூழப்படாமல் நிலம் நீரை ஒருகூறாகத் தன்னுள் கொண்டிருத்தலால்' எனச் சுரக்கும் நீரைக் குறிப்பிடு கிறார் போலத் தோன்றுகிறது. நிலப்பகுதி பலவாதலால் என் பதால் பலகண்டங்களும் கடலாற் சூழப்பட்டமையையும் கருது கிறார் எனலாம். நீர் வையத்திற்கு எஞ்ஞான்றும் உதவுவது போல அமைச்சர் அணியாயிருந்து பெருமையையும் வெற்றி யையும் தருகிறார் எனலாம். இப்பொருளில் மாறாதநீர்-வற்றாத ஊறும் நீர் என்றாகலாம்.

மற்றொருபொருளில், நீராற்றுண்டிக்கப் பெற்றுப் பல கண்டங்களாகப் பண்பாடு முதலியவற்றான் மாறுபட்ட பலநாடு களிலும் என்பதாகும் இப்பொருளில் மாறா நீர்—கடல் என்ற அளவிலே தான் பொருள் கஞுதப் பெறுகிறது எனலாம்.

வரத. உரை அணி இன்றியமையாதனவற்றுள் ஒன்றன்று ஆதலான் இது ஆய்வுக்குரியது. இராம. கூறும் 'வற்றாத கடலைப்போல எப்போதும் சிறப்பிக்கத்தக்கவன்' என்பது பொருட்சிறப்பு இயைபும் இல்லாதது.

ஆதலால் கடலாகிய மாறாநீர் வையகத்திற்கு ஆடையாக அணி செய்வது போல் அமைச்சன் அரசற்கு அணியாவான் என்ற பொருள் போதர, மாறார் வையக்கு அணி. அமைச்சன் வையத் துள்ளார்க்கு அணி என இயைத்துப் பொருள் காணல் சிறந்த தாகுமா என்பதைச் சிந்திக்க.

குறிப்பறியும் அமைச்சனை அரசர்க்கு அணியென்னாது வையக்கு அணி என்றது, அமைச்சனாற் பயன் கொள்வது நாடேயாகலான் என்க.

ஓ) ஒப்புமைப்பகுதி :

கூறாமை நோக்கிக் குறிப்பறிதல் :

சொல்லாமை நோக்கிக் குறிப்பறியும் பண்பு. - பழ.நா., 255

கொண்டனன் குறிப்பினால் உணருங் கொள்கையான்
- கம்ப., 6100

......... ......... ......... அறிவனுந்தன்
புனைந்தசடை முடிதுளக்கிப் போரேற்றின் முகம்பார்த்தான்
வனைந்தனைய திருமேனி வள்ளலுமம் மாதவத்தோன்

நினைந்தவெலா நினைந்தந்த நெடுஞ்சிலையை நோக்கினான்.
-கம்ப., 774

ஒ) மேற்கோள்பகுதி :

தெய்வச்.: 'ஏனையெச்சம் வினைமுதலானும்' என்றசூத்திரத்தில் அன்னமரபினால் கொள்ளப்படுவனவற்றிற்கு 'கூறாமைநோக்கிக் குறிப்பறிவான், என்பதை மேற்கோள் காட்டுவர்.
-தொல். சொல். 225

நச்சி.: வினையெச்சம்'வினையெஞ்சு கிளவியும் வேறு பல் குறிய' என்பதனால் மகர ஐகாரயீறாய் வந்ததற்குக் 'கூறாமை நோக்கி' என்பதை மேற்கோள் காட்டுவர். -தொல். சொல். 230

மயிலை.: 'வான்பான் பாக்கின வினை எச்சம்' 'இன்ன' என்றதனால் 'கூறாமை நோக்கிக் குறிப்பறிவான்' என்பதுவும் இவற்றிற்கு எதிர் மறையாய் வருவனவும் இவ்வாய்பாடுகளிலே அடக்கிக்கொள்க' என்பர்.
-நன்., 342

சங்கர.: வினையெச்சவாய்பாடுகள் உணர்த்தும் சூத்திர உரையில் 'இன' என்றமையான், 'கூறாமை நோக்கிக் குறிப்பறிவான்' என எதிர்மறை விகற்பங்களாய் வருவனவும் கொள்க என்பர்.
-நன்., 343

71. 2. ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தொ டொப்பக் கொளல். (702)

உரைப்பகுதி :

அ) மணக். : பிறர் நினைத்ததனை ஐயப்படுதலின்றித் துணிந்து அறியவல்லாரை, தேவரோடு ஒப்பக்கொள்க எ—று.

ஆ) பரிதி. : சந்தேகமற மனத்தின் நினைவை அறியும் மந்திரிக்குத் தேவர் நிகராம் எ—று.

இ) பரிப். : பிறர் நினைத்ததனை ஐயப்படுதல் இன்றித் துணிந்து அறிய வல்லாரைத் தேவரோடு ஒப்புக் கொள்க எ—று.

அவரும் பிறர் நினைவு அறிவர் : இவரும் அவ்வாறு அறிதலான் இவரைத் தேவராக மதிக்கப்படும் என்றது. இவை இரண்டும் குறிப்பு அறிந்தார்க்கும் உளது ஆகும் நன்மை கூறின.

ஈ) காளி. : ஒருவர் தாம் உள்ளத்துக் குறித்த பொருளை அல்ல ஆம் என்று ஐயப்படாதே இதுவே ஆகும் என்று அறிய வல்ல குறிப்பு அறிவாளராகிய அமைச்சரை, அவ்வரசர் தெய்வத்தோடு ஒப்பக்கொண்டு ஒழுகுக எ—று.

எனவே கருதியது அறிவார் கடவுளர் ; ஆகலான், மற்று இவர் மக்கள் யாக்கையின் வந்தனராயினும் வானக்கடவுளரோடு ஒப்பர்.

இனி அமைச்சரானோர் அரசன் குறிப்பு அறிந்து ஒழுகுதலே அன்றி அரசர் மாட்டு இருக்கும் அவையினது மரபு அறிந்து ஒழுகுவேண்டுதலான் மற்று இதன் பின்னரே மரபு அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) பரிமேல் : ஒருவன் மனத்தின்கண் நிகழ்வதனை ஐயப்படாது ஒருதலையாக உணரவல்லானை மகனேயாயினும், தெய்வத்தோடு ஒப்ப நன்கு மதிக்க.

உடம்பு முதலியவற்றான் ஒவ்வானாயினும் பிறர் நினைத்தது உணரும் தெய்வத்தன்மை உடைமையின், 'தெய்வத்தோடு ஒப்ப' என்றார்[1]

1. உடம்பு முதலியவற்றான் ஒவ்வாமை — 'கண்ணிமைத்தலால் நிலந்தோய்தலால்' என்ற புறப்பொருள் வெண்பாமாலை செய்யுள் கொண்டு வேறுபாடு அறிக. ஒப்பு — பிறர் நினைத்தது உணரும் தெய்வத் தன்மையுடைமை, அதனால் ஒப்பக் கொளல் என்றார்

ஊ) கவிராசர் : ஒருவன் மனத்திலே நினைத்ததைச் சந்தேகப் படாமல் நிச்சயமாக அறியவல்லவனை, சாமான்ய மனுஷனே யானாலும் தெய்வத்தோடே சரியாக எண்ணுக எ—று.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

உரையாசிரியர்களில் 'அரசன் மனநினைவையறிந்து' என்பாரும், 'பிறர் மனநினைவை' என்பாரும், 'அவையோர் குறிப்பறிவாரும்' என்பாருமாகப் பல நோக்கினர் உளர். அரசன் கருத்தறிதல் முன்னும் பின்னும் பல்லாற்றாலும் உணர்த்தப் படுதலின் அவையோர் அல்லது பிறர் மனக்குறிப்பினையறிதல்' என்ற உரை சிறந்ததாகும்.

71.3 குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல். (703)

உரைப்பகுதி ;

அ) மணக். : 'யாதும் கொடுத்தும் கொளல் - பாடம்'.

முகக்குறிப்பினாலே உள்ளக்கருத்தை அறியுமவர்களை உறுப்பினுள் அவர் வேண்டுவது யாதொன்றாயினும் கொடுத்து, துணையாகக் கூட்டிக்கொள்க எ—று.

உறுப்பினுள் என்பதற்குத் தனக்கு அங்கமாயினவற்றுள் எனவும் அமையும்.

ஆ) பரிதி. : அரசன் நினைத்த நினைவை அறிவானைக் கரணம் வேண்டினாலும் கொடுத்து உறவு கொள்வான் எ—று.

இ) பரிப். : முகக் குறிப்பினாலே உள்ளக் கருத்தை அறியு மவர்களைத் தன் உறுப்பினுள் வேண்டுவது யாது ஒன்றாயினும் கொடுத்துத் துணையாகக் கூட்டிக் கொள்க. எ-று.

உறுப்பினுள் என்பதனைத் தனக்கு அங்கம் ஆயினவற்றுள் எனினும் அமையும். குறிப்பு அறிவாரை அறிதல் குறிப்பறிதல் ஆயிற்று. குறிப்பறிவாரை அரசன் கடியப்படுமோ கூட்டப்படுமோ என்று ஐயமுற்றார்க்குக் கூறப்பட்டது. இவை இரண்டும் அரசன் மேலன.

ஈ) காளி. : அரசரது முகங்கொண்ட குறிப்பினான் அவர் யாதானும் ஒரு கருமத்தை அவர் உள்ளம் கொண்ட குறிப்பினை அறிவார்யாவர் : மற்று அவர் தம்மை அவ்வரசரானோர் தாம்

படைத்துளவான அவற்றுள் பெரிதும் உறுப்பு உடையவாகச் சிறந்தனவற்றால் யாதானும் கொடுத்துக் கைக்கொள்க எ—று.

உ) பரிமேல். : தம் குறிப்பு நிகழுமாறு அறிந்து அதனால் பிறர் குறிப்பறியும் தன்மையாரை, அரசர் தம் உறுப்புக்களுள் அவர் வேண்டுவது ஒன்றனைக் கொடுத்தாயினும், தமக்குத் துணையாகக்கொள்க.

உள் நிகழும் நெறி[1]யாவர்க்கும் ஒத்தலின், பிறர் குறிப்பு அறிதற்கு தம் குறிப்புக் கருவியாயிற்று. உறுப்புக்களாவன பொருளும் நாடும் யானை குதிரைகளும் முதலிய[2] புறத்துறுப்புக் கள். இதற்குப் பிறர்முகக்குறிப்பானே அவர் மனக்குறிப்பு உணர் வாரை என்று உரைப்பாரும் உளர்[3]. இவை மூன்று பாட்டானும் குறிப்பறிவாரது சிறப்புக் கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : தம்முடைய குறிப்பினாலே பிறர் நினைத்த காரியங்களை அறியுந்தன்மையாரை, உறுப்பாகிய பொருள் நாடு சேனை முதலானவைகளிலே அவன் வேண்டியதைக் கொடுத்தாகிலும், தமக்குத் துணையாகக் கொள்க (எ—று.)

எ) பழைய 1 : மனதில் எண்ணத்தைக் குறிப்பினால் அறியும் பேரைத் தன்தேகத்தில் உறுப்பாகிய கண்ணையாகிலும் கொடுத்து உறவு கொள்வார் எ—று.

ஏ) பழைய 2 : அரசன் குறிப்பினை அறிந்ததனாற் பிறர் குறிப் பினையுமறியும் அமைச்சனை, அரசனுறுப்பாகிய படை குடி கூழ் அரண் முதலாகிய வுறுப்பினுள் வேண்டுவனவற்றைக் கொடுத்-தாயினுந் தமக்குத் துணையாகக் கொள்க.

மல்லர் : என்பது தன்னிடத்திலே கண்ட அடையாளங்களைக் கொண்டு ராசாவினுடைய சித்தத்தின் அடையாளங் கண்டுபிடிக்க வல்லமையுள்ள மந்திரியை அரசன் தனக்குண்டான அங்கங்களுக் குள்ளே அவனுக்கு வேண்டியதொன்று கொடுத்து சேர்த்துக் கொள்ளவேணும் என்றவாறு.

1. உள்நிகழும் நெறி — மனத்தில் உண்டாகும் முறைமை
2. முதலிய என்றமையான் — ஏவல் காவலாட்களும் உடை, படை முதலியனவும் கொள்க
3. குறிப்பிற் குறிப்புணர்வார் — முகக் குறிப்பைக்கொண்டு மனக்குறிப்பை உணர் வார். இவ்வாறு உரைப்பவர் மணக்குடவராவர்

தனக்கொரு காரியம் பொருந்துகிற சமயத்திலேயும் பொருந்தாத சமயத்திலேயும் தன்னுடைய முகத்திலே இன்ன அடையாளங்கள் காணும் என்று அறிந்த மந்திரி அந்த அடையாளங்களை அரசன் முகத்திலே கண்டு அவருக்கு இன்னது பொருந்தினது இன்னது பொருந்தாது என்று கண்டுபிடிக்க வல்லவனாயிருந்தால் அரசன் அப்படிப்பட்டவனுக்கு, தனக்கு அங்கமாகிய பொருளானாலும் நாடானாலுங் குதிரையானாலும் யானையானாலும் அவன்விரும்பினதை ஒன்றுங் கொடுத்துச் சம்மதி பண்ணித் தன் அண்டையிலே வைத்துக்கொள்ளவேணும் என்பது கருத்து.

குறிப்பு—அடையாளம், உணர்தல்—அறிதல். உறுப்பு—அங்கம், யாதும்—எதனாலும், கொளல்—வைத்துக்கொள்ளுதல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

''குறிப்பிற் குறிப்புணர்வார்''

,பிறர் முகக்குறிப்பினால் பிறர் உளக்கருத்தினை அறியுமவர்' என்ற பொருள் தோன்ற உரைப்பர் மணக்.; 'அரசன் நினைத்த நினைப்பை அறிவார்' என்பர் பரிதி.; 'அரசர் முகக் குறிப்பால் அவர் உளக்கருத்தை யறிவார்' காளிங்கர்; 'தங் குறிப்பு நிகழுமாறு அறிந்து அதனால் அவர் குறிப்பு அறிவாரை' பரிமேலழகர், கவிராசர்; 'அரசன் குறிப்பையறிந்தால் பிறர் குறிப்பையும் அறியும் அமைச்சர்' பழைய உரை 2; 'தம் மனத் துண்டாகும் செய்கையாலே பிறர் மன நிகழ்ச்சிகளையும் அறியுமவர்' மு ரா. அரு., சபாபதி; 'நினைப்பதும் நினைக்கப் போவதுமாகிய குறிப்புக்களையுணர்ந்து மு.கோ.; 'முகம் கண் இவற்றின் குறிப்பால் பிறர் கருத்தையறிவர் சாமி. சிதம்.; 'முகக்குறிப்பால் அகக்குறிப்பையறியவல்லவர்' சி இ.; 'தம் குறிப்பு நிகழ்வதையறிந்த பழக்கத்தால் பிறர் குறிப்பை அறிய வல்லவர்' குழந்தை; 'முகச்சாடையால் உள்ளத்தை யறிபவர்' வ.சுப மா.; ''முகக்குறிப்பால் உள்ளக் குறிப்பையுணரவல்லவர்'' கா.சு.; குறிகளிலிருந்தே ஒருவனுடைய உள்ளக்குறிப்பை உணர வல்லவர்களை'' இராம.; 'ஒருவரது முகக்குறிப்பால் உள்ளக்குறிப்பை உணர வல்லார்' தேவநேயர்; ''அரசன் கருத்தை குறிப்பால் உணர்பவன்'' வரத.

இவற்றுள், அரச காரியங்களுக்கு அரசன் மனக்கருத்தை யறிதல் மட்டும் போதாது, அவையோர் மாற்றார், குடிகள், பிறர் மனக் கருத்துக்களையும் அறிதல் வேண்டும். ஆகையால் 'அனைவர் மனக்கருத்தையும் அவரவர்கள் முகக்குறிப்பாலும், கண்பார்வையாலும் அறிபவனே அமைச்சனாதற்குரியவன்' என்ற உரையே சிறந்தது. தன் குறிப்பைக் கொண்டு பிறர் கருத்தையறிதலும் தன் குறிப்பைத் தானேயறிதலும் பொருளற்ற உரைகள்.

''உறுப்பினுள் யாதுகொடுத்துங் கொளல்''

'அவர் வேண்டுவனவற்றுள் வேண்டுவது எதனையும்' என்பதும், 'தனக்கு அங்கமாவனவற்றுள் எதையும்' என்பதும் மணக்குடவர் காணும் உரை. 'கரணம் (உறுப்பு) வேண்டினும்' பரிதி , 'தம்மிடமுள்ளவற்றுள் பெரிதும் உறுப்புடைய சிறந்தவற்றைக் கொடுத்து' என்பது காலிங்கர் ; இது யானை, தேர் நாடு, ஊர் இவற்றைக் கருதுகிறதா அல்லது வேறா என்பது அறியக் கூடவில்லை. 'உறுப்புக்கள்—பொருள் நாடு, யானை குதிரை முதலியவற்றுள் வேண்டுவகொடுத்து' என்பர் பரிமேலழகர். 'படை, நாடு முதலியவற்றுள் ஒன்றைக் கொடுத்துக் கொள்ளுக' என்பர் கவிராசர் மு.ரா.அரு. முதலிய அனைவரும். வரத. 'அங்கங்கள் அமைச்சரைக் கொண்டு இயங்குவன. அவற்றுள் ஒன்றைக் கொடுத்தாவது அமைச்சனைக் கொள்ள வேண்டும்' என நயம் உரைப்பர். அமைச்சரும் அங்கங்களில் ஒருவராகலின் ஓருறுப்பைக் கொடுத்து ஓருறுப்பைக் கொள்க என்பதில் சிறப்பின்று. இராமலிங்கனார் 'உறுப்பு—பக்கபலமாக உதவும் சிப்பந்தி. யாது கொடுத்தும்-வெகுமதி, சம்பளம் என்றும் கொள்ளலாம்' என்பர். இதுவும் இயைபு உடையதன்று. தலை கொடுத்துப் புகழ் தேடிக் கொண்ட குமணன் போல, தம் உறுப்பினுள் ஒன்றைக் கொடுத்தாவது குறிப்புணர்வாரைக் கொள்ளுக என்பதே அத்தகையாரின் இன்றியமையாமையை மிகுவிக்குமாதல் காண்க. இவ்வதிகாரத்து வரும் உறுப்புக்கள் யாவும் கண் முதலிய வற்றையே குறித்தலும் இக்கருத்தை வலியுறுத்தும்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

குறிப்பிற் குறிபுணர்வாரை :

......... ......... .................. யறிவனுந்தன்

புனைந்தசடை முடிதுனக்கிப் போரேற்றின் முகம்பார்த்தான்
வனைந்தனைய திருமேனி வள்ளலுமம் மாதவத்தோன்
நினைந்தவெலா நினைந்தந்த நெடுஞ்சிலையை நோக்கினான்.
— கம்ப., 774

கொடுத்தும் கொளல் :

கொடுத்தும் கொளல் ……… ……… — குறள்., 794

முற்றும் :

அகத்திடைத் தனக்கு நிகழ்ந்திடுங் குறிப்பா லவரவரகக்குறிப் பறிந்து
மிகத்தெளி பவனைக் கரிமுத லறுப்புள் விழைவன கொடுத்துங் கொள் மைந்தா — விநா. அரசி., 114

71.4. குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
உறுப்போ ரனையரால் வேறு. (704)

உரைப்பகுதி :

அ) மணக்.: நினைந்ததனைச் சொல்லாமைக் கொள்ளவல்லாரோடு மற்றையார் உறுப்பால் ஒருதன்மையர் அல்லது, அறிவினான் வேற்றுமையுடையர் எ—று.

இது குறிப்பறியாதார் அறிவில்லாதார் என்றது.

ஆ) பாரிதி : நினைத்த நினைவைச் சொல்லுவதன் முன்னே பார்வையினாலே அறிவான்; அவன் தேவரோடு ஒப்பாவன் எ—று.

இ) பரிப்.: நினைந்ததனைச் சொல்லாமைக் கொள்ள வல்லாரோடு மற்றையார் உறுப்பு ஒரு தன்மையார் அல்லது அறிவினால் வேற்றுமை உடையர் எ—று.

இது குறிப்பறியாதார் அறிவில்லாதார் என்றது.

ஈ) காளி.: ஒருவர் உள்ளம் குறித்தது ஒன்றினை அவர் உரைக்க வேண்டாமல் மற்று அவர் முகக்குறிப்பினால் கைக்கொள்வாருடன் மற்று ஏனை மாந்தர் முகம் கை கால் முதலிய மக்கள் உறுப்பின்கண் ஒருதன்மையர் ஆதலே உள்ளது. மக்கட்கு அன்பாகிய உணர்வில் பெரிதும் வேறுபாடு உடையார். எனவே உறுப்பின் அவரோடு ஒருதன்மையர்; உணர்வில் விலங்கொடு மக்கள் அனையர் என்பது வெளிப்படுத்தியவாறாயிற்று என்பது பொருள் எ—று.

உ) பரிமேல்.: ஒருவன் மனத்துக் கருதிய அதனை அவன் கூறவேண்டாமல், அறியவல்லாரோடு, மற்றை மாட்டாதார்[1] உறுப்பால் ஒருதன்மையராக ஒப்பாராயினும், அறிவான் வேறு.

கொள்ளாதார்[2] என்பதூஉம், ஆயினும் என்பதூஉம் அவாய்நிலையான்[3] வந்தன. சிறந்த அறிவின்மையின், விலங்கு என்னும் கருத்தான் 'வேறு' என்றார்.

ஊ) கவிராசர்: ஒருவன் மனத்திலே நினைத்ததை அவன் சொல்லாமல் அறிய வல்லவரோடு அறியமாட்டாதவர் உறுப்பால் ஒருதன்மையரேயானாலும், அறிவினாலேவேறு எ—று.

ஏ) பழைய 2. ஒருவன் தன் மனத்துக் கருதியதனை அவன் கூறாமல் அறிய வல்லாரோடு, மற்றை அறியமாட்டாதார், உறுப்பால் ஒரு தன்மையொப்பாராயினும் அறிவினால் ஒவ்வார் வேறாவர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதியுரை 702ன் உரையை எண்ணச் செய்வதாகலின் கூறியது கூறலாம். ஆதலால் ஏற்புடைத்தன்று. காளிங்கர்

1, மாட்டாதர் — மனத்தகத்து எண்ணத்தை அவன் சொல்லாமலே அறியும் வல்லமை யில்லாதார்

2. 'மாட்டாதார்' என்றும் பாடம்

3. அவாய்நிலை' — ஈண்டு ஒருசொல் தன்னோடு பொருள் முடித்தற்குரிய மற்றொரு சொல்லை வேண்டி நிற்றல்

கூறும் 'அன்பாகிய உணர்வில் பெரிதும் வேறுபாடுடையவர்' என்பதற்கு இயைந்த சொல்லமைதி குறட்பாவில் இல்லா மையை எண்ணுக. 'வேறு' என்றது 'அறிவான் வேறு அதாவது விலங்கு' என்ற பரிமேலழகர் உரை 'விலங்கொடு மக்கள னையர்' என்பதை எண்ணச்செய்வதால் இதுவே ஆசிரியர் கருத்தாம்.

வரத. 'வேறு' என்பதற்குத் தரும் விளக்கம் 'பேசுந் திறனால் மக்களனைவரும் சமம் ஆவர் அவருள் கூறாமையறிப வரும், கூறியபின் அறிபவரும் அறிவாலும் திறனாலும் வேறுபட்ட வர். ஆனால் உறுப்புக்களால் சமம் ஆவர் ஆயினும், குறிப்பறி வான் உறுப்பாவது போல ஏனைய நட்பு முதலிய உறுப்புக்கள் சிறந்த உறுப்பாகா' எனவும் கூறுவர்.' பிறர் சொல்லாமலே தானே உணர்பவன் சிறந்த உறுப்பு' என்பது கருத்தாகும். இராம. அமைச்சற்கும் ஏனைய அங்கங்களுக்கும் வேறுபாடு கூறுவதிக்குறள் எனக் கண்டு, 'வாயால் சொல்லக் கூடாத நேரத்தில் குறிப்பானுணர்பவர்கட்கு உணரமுடியா தவர் இணையாகார்' என்று கருத்தும் உரைப்பர். குறளமைதி சொல்லக் கூடிய நேரம் சொல்லக் கூடாத நேரம் என்ற வேற்றுமையின்றி எதினும் எஞ்ஞான்றும் குறிப்பறிவானே சிறந்தவன் என்கிறது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்

அகத்திடைக் குறித்த காரியம் அதனை ஐயுறா தவரவர் விழியான்
முகத்தினால் அறிய வல்லவ னாகி முகம்விழி இரண்டினும் அன்றி
அகத்திடை தனக்கு நிகழ்ந்திடும் குறிப்பால் அவ்வரவர் அகக்குறிப் பறிந்து
மிகத்தெளி பவனைக் கரிமுதல் உறுப்புள் விழைவன கொடுத் துங்கொள் மைந்தா. —விநா. அரசி., 114

71.5. குறிப்பின் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண். (705)

உரைப்பகுதி :

அ) மணக்.: ஒருவன் முகக்குறிப்பினானே அவனவன் மனக்

குறிப்பை அறியமாட்டாவாயின், தன் உறுப்புக்களுள் தன் கண்கள் மற்று என்ன பயனைத் தருமோ?

இது குறிப்பறியாதார் குருட்ரோடு ஒப்பார் என்பது.

ஆ) பரிதி.: அரசன் நினைத்த நினைவைப் பார்வையால் அறியாத மந்திரி தன் முகத்திலே கண் புண் எ—று.

இ) பரிப்.: ஒருவன் முகக் குறிப்பினானே அவன் மனக்குறிப்பை அறிய மாட்டாவாயின், தன் உறுப்புக்களுள் கண்கள் மற்று என்ன பயனைத் தருமோ? எ—று.

இது குறிப்பு அறியாதார் குருடரோடு ஒப்பர் என்றது.

ஈ) காளி.: தமது கண்கள் பிறர் நோக்கிய நோக்கிற்குப்பின உளதாகிய குறிப்பினையே உணரமாட்டாவாயின் உறுப்பினுள் என்ன பயத்தன கொல்லோ தாம்? எ—று.

உ) பரிமேல்.: குறித்ததுகாண வல்ல தம் காட்சியால் பிறர் குறிப்பினை உணரமாட்டாவாயின். ஒருவன் உறுப்புக்களுள் சிறந்த கண்கள் வேறு என்ன பயனைச் செய்வன?

முதற்கண் குறிப்பு ஆகுபெயர். குறிப்பறிதற்கண் துணையாதற் சிறப்புப்பற்றி உயிரது உணர்வு கண்மேல் ஏற்றப்பட்டது[1]. அக்கண்களால் பயனில்லை என்பதாம். இவை இரண்டு பாட்டானும் குறிப்பறியாரது இழிபு கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : எல்லா வஸ்துக்களையும் அறியவல்ல தன் கண்களால் பிறர்குறிப்பினை அறியமாட்டாவிட்டால், அவனுக்கு அங்கங்களிலே எல்லாஞ் சிறப்பான கண்கள் பின்னை என்ன பலனைச் செய்யும் எ—று.

ஏ) பழைய 2: ஒருவனுக்குத் தன் கண்ணாற் பார்த்துப் பிறர் குறிப்பைக் குறித்துக்காண மாட்டாதாகில், உறுப்புக்களுட் சிறப்பாகிய கண்கள் வேறு என்ன பயனைச் செய்வனவோ?

---

1. கண்ணாகிய கருவியின்றி உயிர் உணராது ஆதலின் உயிரின் இயல்பாகிய உணர்வு கண்மேல் ஏற்றிக் கூறினர்

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'ஒருவன் முகக்குறிப்பைப் பார்வையாலறிந்து கொள்ளாத மந்திரியின்கண் புண்' என்ற பரிதியுரை ''கண்ணுடையரென் போர் கற்றோர்'' (393) ''அஃதிலர் புண் என்றுணரப்படும்'' (575) என்னும் வள்ளுவர் மரபு பற்றி எழுந்த எண்ணமாகும்.

காலிங்கர் உரை ''அமைச்சன்கண் அரசனுடைய கண் பார்வையின் பின் உள்ள மனக்குறிப்பினை அறியாவாயின்'' என்பது இது ''கண்ணோடு கண்ணினை நோக்கு ஒக்கின்'' என்ற குறட் கருத்தைத் தழுவி எழுந்தது.

பரிமேல்., கவிராசர், பழைய, கா.சு., சபாபதி அனைவர் உரைகளும் சிறிதும் மாற்றமில்லாத ஒத்த கருத்தின. 'முகங்கண்டு உள்ளங் காணவில்லையாயின் கண்ணின் பயனென்ன?' என்று முகத்தைக் கொண்டு அறிதலைக் கருதுவர். வ சுப.மா. 'குறிப்பு குறிப்பாகப் பார்ப்பது உள்ளக் குறிப்பு'. 'இரண்டனையும் விளக்கும்' என்பர் இராம ; 'முகக்குறிப்பால் தெரியவில்லையாயின்' என்பர் வரத.; அத்துடன் 'கண் சென்று பற்றுவது; ஏனைய பொறிகள் வந்தடைந்தவற்றை யறிவன' எனவும் கூறுவர். இன்றை விஞ்ஞானிகள் 'கண்ணும், வந்தடைந்த உருவையே காண்கின்றது' என்பர். 'முகக் குறிப்பைக் கொண்டு மனக்குறிப்பை உணராவாயின்' என்பர் குழந்தை சி. இ.,; 'பார்வையால் பிறன் மனத்தை' என்பர் சாமி. சிதம்.

ஆகவே மன்னனுடைய முகக்குறிப்பினால் மனக்குறிப்பை அறிதல் என்பார் 'நெஞ்சங் கடுத்தது காட்டும் முகம்' என்ற வள்ளுவன் கருத்தை உள்ளங்கொண்டு எழுதியவர்கள் 'கண்ணைக் கொண்டு அவர் மனக் குறிப்பை' என்பார் முற் கூறியபடி 'கண்ணைக்கொண்டு மனக் குறிப்பையறியலாம்' என்ற வள்ளுவத்தை தழுவியவர்கள். இரண்டும் ஏற்புடையனவே.

ஒ) ஒப்புமைப்பகுதி:

குறிப்பின் குறிப்புணரும் கண் :

யாந்தீய செய்த மலைமறைத்த தென்றெண்ணித்
தாந்தீயார் தந்தீமை தேற்றாரால் — ஆம்பல்

மணலில் கமழும் மலிதிரைச் சேர்ப்ப
கணையிலும் கூரியவாம் கண். — பழ. நா., 144

உறுப்பினுள் கண்

மின்னு மணிப் ... ... ...
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங் கணோக்குமோ காண் — நன்னெறி.

கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை — நான்மணிக்கடிகை

71.6. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். (706)

உரைப்பகுதி ;

அ) மணக். : தன்னையடுத்த வண்ணத்தைக் காட்டுகின்ற பளிங்கைப்போல, நெஞ்சத்து மிக்கதனை[1] முகம் காட்டும் எ—று.

ஆ) பரிதி. : சோர்ந்த வண்ணம் காட்டும் கண்ணாடிபோல மனத்தின் எண்ணம் முகம் காட்டும். ஆகலின் முகத்திலும் கண்ணாடி உண்டோ? மனத்தின் கோபமும் பிரியமும் முகத்திற் காட்டிக்கொடுக்கும் எ—று.

இ) பரிப். : தன்னை அடுத்த வண்ணத்தைக் காட்டுகின்ற பளிங்கைப் போல் நெஞ்சத்து மிக்கதனை முகம் காட்டும் எ—று.

மேல் முகம் அறிவிக்கும் என்றார் : அஃது அறிவிக்குமாறு என்னை என்றார்க்கு வெகுட்சி உண்டாயின் கருகியும், மகிழ்ச்சி உண்டாயின் மலர்ந்தும் காட்டும் என்றது.

ஈ) காளி. : தன்னை வந்து அடுக்கத் தோன்றின வண்ணத் தான் காட்டும் பளிங்கே போல ஒருவன் நெஞ்சமானது குறித்த நீர்மையை கைக்கொண்டு நின்று காட்டுவன முகம். எனவே ஒருவர் முன்னி அறிதற்குக் கருவி முகம் என்பது பொருளாயிற்று எ—று.

---
1. நெஞ்சத்து மிக்கதனை - மனத்தில் பதிந்து மிகுந்திருக்கிற கருத்தை

உ) பரிமேல். : தன்னை அடுத்த பொருளது நிறத்தைத் தானே கொண்டுகாட்டும் பளிங்குபோல ஒருவன் நெஞ்சத்து மிக்கதனை அவன் முகம் தானே கொண்டு காட்டும், (எ-று).

'அடுத்தது' என்பது ஆகுபெயர். 'கடுத்தது' என்பது கடி என்னும் உரிச்சொலடியாய் வந்த தொழிற்பெயர். உவமை ஒரு பொருள் பிறிதொரு பொருளின் பண்பைக்கொண்டு தோற்று தலாகிய தொழில் பற்றி வந்தது[2].

ஊ) கவிராசர். : பளிங்கின் மறைவிலே இருக்கிற வஸ்துவினு டைய நிறத்தை அந்தப் பளிங்கு காட்டுமாறுபோல, ஒருவன் நெஞ்சிலே நினைத்த நினைவை அவன்முகம்தானே காட்டும் எ-று.

ஏ) பழைய2 : தன்னையடுத்த பொருளின் நிறத்தைத்தான் கொண்டு காட்டும் பளிங்குபோல ஒருவன் நெஞ்சத்தடுத்ததனை முகத்தான் கொண்டு காட்டும்.

நெஞ்சு அங்கு அடுத்தது எனப்பிரித்துக் காண்க. கடுத்தது என்று பொருளுரைப்பர், அது பொருளல்ல என்க.

மல்லர் : என்பது கண்ணாடியானது தனக்குச் சமீபமாயிருக் கிற பொருளைக் காட்டுகிறாப்போலே நெஞ்சில் எழும்பின கோபத்தை முகங்காட்டும் என்றவாறு.

கண்ணாடிக்குக் கிட்டயிருக்கிற பொருளை இருக்கிற இடத்திலே காணாதே போனாலுங் கண்ணாடியிலே காணலாம் என்பது.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

தொல்லாசிரியர் உரைகள் ஒத்த நோக்கின. 'கண்ணாடி பொருளைத்தான் காட்டும் ; மனம் முதலிய அகக் கருவிகள் தத்தஞ் செயலைச் செய்யாமையால் ஆன உணர்ச்சியை முகங் காட்டும்' என்றார் வ. சுப. மா. 'பிறன் தன்னைக் குறித்து நோக்கியவுடன் அவன் நோக்கத்தையும், அங்ஙனமே பிறன்

2. பளிங்கு தன்னையடுத்த பொருளின் தன்மையைத் தன்னுள் கொண்டு காட்டு தலால் முகம் ஒப்பிடப்பட்டது

குறிப்பைத்தானும் உணர வில்லையாயின்' என்பர். வரத. 'கண்ணாடி களங்கப்படாதபோது அனைத்தையும் காட்டும். பின் பக்கம் ரசம் பூசியிருந்தால் பார்ப்பவன் தன்னைத் தான் பார்ப்பான்' என்பது இப்பாட்டின் நோக்கம் என்பர்.

**'கடுத்தது'**

'குறித்த நீர்மை' காளி ; 'மிக்கது' பரிமேலழகர் ; 'நினைத்த நினைவை' கவிராசர்; 'நெஞ்சத்து அடுத்தனை' பழைய; இவருள் காளி., கவிராசர் முதலியோர் 'அடுத்தது காட்டும் முகம்' என்கிற பாடங் கண்டிருப்பர் போலும். பளிங்கு அடுத்த பொருளின் நிறங்காட்டும் என்ற உவமையால் இங்கும் மிகுதிப் பொருள் வேண்டாது அடுத்தது எனக் கொண்டு பொருந்தியது அடுத்தது எனவே பொருள் கண்டனராகாலம். 'நெஞ்சம் கடுத்தது அந்தச் சமயத்தில் மனத்தில் மேலெழுந்து நிற்கிற உணர்ச்சி' என்பர் இராம.

'கடுத்தது' என்பது கடி என்னும் உரிச்சொல்லடியாற் பிறந்த தொழிற் பெயர் எனக்கொண்டு 'மிக்கது' எனப்பொருள் காண்பர் பரிமேலழகர். இளம்பூரணர் சேனாவரையர் முதலானோர் 'கடுங்காலொற்றலின்' (பதிற்று, 25) கடுநட்பு முதலானவற்றை எடுத்துக் காட்டுவர். ஆதலால் கடி-கடு என ஆகலாம் எனத் தோன்றினும் இகரங்கெட்டு உகரம் வருதற்கு இயைபும் ஆட்சியும் ஆராய்ந்து ஒப்புதல் இன்றியமை யாததாகின்றது. கடுமை என்பதே உள்ளதன் மிகுதி என்னும் பொருளதாதல் கூடாதா? ஆதலால் கடி வேறு கடுமை என்னும் பண்படியாகப் பிறந்த கடுவேறு என்பதில் வருமிடையூறு என்ன? என்றெல்லாம் ஊன்றியாய்தல் இன்றியமையாதது.

ஓ) ஒப்புமைப்பகுதி :

அடுத்தது காட்டும் பளிங்கு :

கூட்டரக் கெறிந்த பஞ்சிற் கூடிய பளிக்கங்கிற் றோன்றும்
தீட்டரும் படிவ மன்னான் றிறங்கிளந் துரைத்தும். —சீவக, 1166

ஈர்ந்ததுண் பளிங்கெனத் தெளிந்த ஈர்ம்புனல்
பேர்ந்தொளிர் நவமணி படர்ந்த பித்திகைச்

சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச் சேர்தலால்
ஓர்ந்துணர் வில்லவர் உள்ளம் ஒப்பது — கம்ப., 3812

நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்:

முன்னங் காட்டி முகத்தின் உரையா — அகம்., 5 : 19

முன்னம் முகத்தின் உணர்ந்தவர்
இன்மை தீர்த்தல் வன்மை யானே — புறம்., 3: 25-26

முன்னம் முகம்போல முன்னுரைப்பதில் — நான்மணி 46

ஒருத்தன் முகனுரைக்கும் உள்நின்ற வேட்கை — நான்மணி. 69

பளிக்கறைப் பவழப் பாவை பரிசெனத் திகழுஞ் சாயற்
...... ...... ......... கண்ணாள் — சீவக, 192

அகத்ததை எல்லாம் முகத்தினி துணர்ந்து — பெருங்., 3:14: 238

வெள்ளம் வருங்காலை யீர்ப்படுக்கும் அஃதேபோல்
கள்ளம் உடையாரைக் கண்டே அறியலாம்
ஒள்ளமர்க் கண்ணாய் ஒளிப்பினும் உள்ளம்
பரந்ததே கூறும் முகம். — பழ. நா., 145

நோக்கி அறிகல்லாத் தம்உறுப்புக் கண்ணாடி
நோக்கி அறிப அதுவேபோல் - நோக்கி
முகனறிவார் முன்னம் அறிப அதுவே
மகனறிவு தந்தை அறிவு — பழ. நா., 301

...... ...... ......... அற்றந்தான்
மனங்கள் போல முகமும் மறைக்குமே — கம்ப., 1176

வரைத்தடந் தோளினான் வதன நோக்கினான் —கம்ப., 1851

அன்னவர் முகத்தினோ டகத்தை நோக்கினான் —கம்ப., 1853

நல்லவன் முகமே நம்பி நடந்தனன் என்னும் மாற்றம்
சொல்லலும் ...... ...... ......... ........ — கம்ப., 1987

சிந்தனை முகத்திற் றேக்கிப் போயினை — கம்ப., 2425

மானவாண் முகமே யெங்கட் குரைத்த மாற்றம் — கம்ப., 6049

...... ......... பளிங்கும் போல
மையரி நெடுங்கணோக்கம் படுதலுங் கருகிவந்து
கைபுகிற் சிவந்து காட்டும் கந்துகம் — கம்ப.,

உள்ளத்தின் உள்ளதை உரையின் முந்துற
மெள்ளத்தம் முகங்களே விளம்பும் ஆதலால் — கம்ப., 6580

அழிந்தது பிறவியென்னும் அகத்தியல் முகத்திற் காட்ட
—கம்ப , 6630

வாடிய முளரிபோல் மாறிட் டாரிடத்து
ஊடியும் மலர்ந்தபோது ஒப்ப மைந்தன்மேல்
நாடிய தண்ணளி நயந்தும் உட்கிடை
கூடிய முகத்தினர் குறுகுவார் அவை - திருவிளை, மாமனா., 20

அகத்தினழகு முகத்தில் தெரியும் -பழ.,

மகஞ்செயும் ஓமப் புகைபோய் விசும்பின் மழைபெய்வித்துச்
சகம்சலியாமல்செய் கோடீச் சுரவள்ளல் சாரலின்உன்
அகஞ்சலிப் புற்றதென் னார்என்ன ஓதினர் அன்னதைநின்
முகம்சிறி தோதிற்று நீசிறிது ஓது முகிழிமுலையே
-கோடீச்., 218

71.7. *முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினும்*
*காயினும் தான்முந் துறும்.* (707)

உரைப்பகுதி :

அ) மணக்.: முகம்போல முதிர்ந்த அறிவுடையது பிறி துண்டோ? ஒருவனை உவப்பினும் தான் முற்பட்டுக் காட்டும் எ—று.

குறிப்பறியுமாறு என்னை யென்றார்க்கு, இது முகம் அறிவிக்கும் என்றது.

ஆ) பரிதி.: உவப்பினும் முனியினும் முகத்திற் காணலாம் எ-று.

இ) பரிப்.: முகம் போல முதிர்ந்த அறிவு உடையது பிற உண் டோ? உவப்பினும் வெறுப்பினும் தான் முற்படக் காட்டும் எ—று.

குறிப்பு அறியுமாறு என்னை என்றார்க்கு இது முகம் அறிவிக்கும் என்றது.

ஈ) காளி.: மக்களானோர்க்கு உறுப்பிற் சிறந்ததாகிய முகத்தினும் பொறி உடையது ஒன்று உண்டோ? இல்லை அன்றே? என்னை எனில், ஒருவர் உள்ளத்தான் உவப்பினும் காயினும் மற்று அவை அவர் சொல்லானும் செயலானும் வெளிப்படுவதன் முன்னமே குறிப்பினால்தான் முந்துற்று நிற்கும் எ—று.

உ) பரிமேல்.: உயிர் ஒருவனை உவத்தலானும் காய்தலானும் உறின், தான் அறிந்து அவற்றின்கண் அதனின் முற்பட்டு நிற்கும் ஆகலான், முகம்போல அறிவுமிக்கது பிறிது உண்டோ இல்லை, எ-று.

உயிர்க்கே அறிவு உள்ளது; ஐம்பூதங்களான் இயன்ற முகத்திற்கு இல்லை என்பாரை நோக்கி, உயிரது கருத்தறிந்து அஃது உவக்குறின் மலர்ந்தும் காய்வுறின் கருகியும்[1] வரலான், உண்டு என மறுப்பார் போன்று குறிப்பறிதற்குக் கருவி கூறிய வாறு.

ஊ) கவிராசர்: மனசிலே ஒருவன்பேரிலே கோபித்தாலும் சந்தோஷித்தாலும், அந்தக் குறிப்பை வாயினாலே சொல்லு கிறதுக்குமுன்னே முகம் அறிவிக்கும் எ—று.

ஏ) பழைய 2: மனமொருவனை யுவந்து நிற்பினும் காயந்து நிற்பினும் அதனை முதற்றானத்து[2] உவந்து நின்றும் காய நின்றும் காட்டலால் முகத்தைப் போலப் பொறியுடையது பிறி தோர் உறுப்புண்டோ? இல்லை.

ஐ) தொகுப்பும குறிப்பும்:

பழைய உரைகளில் கருத்து வேறுபாடின்று. வரத. 'முதுக் குறைவு முதிர்ந்த அனுபவத்தின் அறிவு; ஒருசொல் முகத்தின்

1. கருகியும்—சுருங்கியும் வாடியும்

2. முதற்றானம்—முதற்கண்

முதுக்குறைந்ததுண்டோ என்றதால் முகத்தைக் கொண்டும் குறிப் புணரும் அறிவை அனுபவத்தால் பெற வேண்டும்' என்பர். முகாம் ஐம்பூதங்களான் ஆயது. அது அறிவற்ற பொருள் உயிர்தான் அறிவுடையது. அது உவக்குறின் உவந்தும் உவர்ப்புறின் உவர்த்தும் வருதலான் உணர்வுடையதாகும் என்பதறியப்படும் என்றதாம். முகம் உறுப்பாய் உடலின் ஒருபுடையாய் அறி வற்றதாயினும், பளிங்குபோல் நெஞ்சங்கடுத்ததைக் காட்டலின் அறிவுடையதுபோலக் கூறிய உபசார வழக்காம்.

ஓ) ஒப்புமைப்பகுதி :

முகம் உவப்பினும் காயினும் தான்முந்துறும்;

நாற்றம் உரைக்கும் மலருண்மை கூறிய
மாற்றம் உரைக்கும் வினைநலம் தூக்கின்
அகம்பொதிந்த தீமை மகனுரைக்கும் எல்லா
முகம்போல முன்உரைப்ப தில். —நான்மணி., 46

மகனுரைக்கும் தந்தை நலத்தை ஒருத்தன்
முகனுரைக்கும் உள்நின்ற வேட்கை. —நான்மணி., 69

புனங்கொள் கார்மயில் போலியொர் பொற்கொடி
மனங்கொள் காதன் மறைத்தலை எண்ணினாள்
அனங்க வேளறிந்தனன் அற்றந்தான்
மனங்கள் போல முகமும் மறைக்குமே —கம்ப.உலாவரு.,29

உள்ளத்தி லுள்ளதை யுரையின் முந்துற
மெள்ளத்தம் முகங்களே விளம்பும் ... ... - கம்ப., 6580

71.8. முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின். (708)

உரைப்பகுதி :

அ) மணக்.: முகத்தை நோக்கி நிற்க அமையும்; தன் மனத்தை நோக்கி அறியலுற்றதனை அறியவல்லாரைப் பெறின் எ-று.

இஃது அமாத்தியர் குறிப்பை அரசனும் அறியவேண்டும் என்றது; நிற்கின்ற தொழில் அமாத்தியன்கண்ணது ஆகலான்.

ஆ) பரிதி.: மனத்தின் நினைவை அறியும் மந்திரிக்கு அரசன் முகம் பார்க்கத் தெரியும் எ-று.

இ) பரிப்.: முகத்தை நோக்கி நிற்க அமையும் தன் அகத்தை நோக்கி அதில் உற்றதனை அறிய வல்லாரைப் பெறின் எ-று.

எனவே அமாத்தியர் குறிப்பை அரசரும் அறிய வேண்டும் என்றவாறு ஆயிற்று; நிற்கின்ற தொழில் அமாத்தியன் கண்ணது ஆகலான்.

ஈ) காளி.: தம் கருத்தின் கொண்டது உரைக்க நாணும் ஒள்ளியோர்[1] தாம் வறிதே முகத்தைநோக்கி மற்று உட்கொண்டதை உரையாமல் நிற்க அமையும்., யார்மாட்டு எனின், அப்பொழுதே தாம் உட்கொண்டதனை ஓர்ந்து மற்று இவர் உற்ற இன்பமும் துன்பமும் இது போல எனக்குறிப்பினான் அறிவாரைப்பெறின் அவர்மாட்டு எ-று.

உ) பரிமேல்.: குறையுறுவானும்[2] தன் மனத்தைக் குறிப்பானறிந்து தானுற்றவதனைத்[3] தீர்ப்பாரைப்பெறின், அவர் தன் முகம் நோக்கும்வரை[4] தானும் அவர்முகம்நோக்கி அவ்வெல்லைக்கண் நிற்க அமையும், எ-று.

'உணர்வார்' எனக் காரியத்தைக் காரணமாக்கிக் கூறினார்,[5] அவ்வெல்லையைக்[6] கடந்து சொல்லுமாயின் இருவர்க்கும்[7] சிறுமையாம். ஆகலின் அது வேண்டா என்பதாம். குறையுறுவான் இயல்பு கூறுவார்போன்று கருவி கூறியவாறு. இவை மூன்று பாட்டானும் குறிப்பறிதற்கருவி முகம் என்பது கூறப்பட்டது.

---

1. ஒள்ளியோர் — கூரிய அறிவினையுடையார்
2. குறையுறுவானும் — தன்குறையைப் பிறர்க்கு அறிவிப்பலானும்
3. தானுற்றவதனை — தானடைந்த அக்குறையை
4. 'வகை' என்றும் பாடமுண்டு
5. உணர்வார் என்றது உணர்தல் அளவில் நில்லாது உணர்ந்து நீக்குபவர் மேல் நிற்றலின் காரணங் காரியமாகிய உபசாரவழக்கு
6. அவ்வெல்லையை— முகநோக்தி நிற்கும் அவ்வளவு
7. இருவர்க்கும் — குறைகளைக் கூறுவானுக்கும் அதனைக் கேட்டுத் தீர்ப்பானுக்கும்

ஊ) கவிராசர்: தன் மனத்திலே நினைத்ததைக் குறிப்பால நிந்து அந்தக் குறையைத் தீர்க்க வல்லவர்களைக்கண்டால் அவர்கள்முகத்தைப் பார்த்து நிற்கிறதே போதும் எ-று.

ஏ) பழைய 2: 'அகநோக்கி' பாடம்.

ஒருவன் முகத்தைநோக்கி நிற்க அதுபோதும், அவன் மனத்தின் குறிப்பையறிந்து உற்றதனை யுணர்ந்து தீர்ப்பானைப் பெறின்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பா உரையாசிரியர்களைப் பெரிதும் மயங்கவைத் திருக்கிறது எனலாம். மணக்குடவர் '(அரசன்) முகத்தை நோக்கி உற்றதுணரும் (மந்திரியைப்) பெற்றால் (அரசன்) அவன் முகத்தை நோக்கி நின்றாலே போதும், அமைச்சன் குறிப்பறிந்து அனைத்தையும் செய்து முடிப்பான்' என்பர். 'அமைச்சனைப் போல அரசனும் முகநோக்கியுற்றதுணரும் வன்மையுடையனாதல் இன்றியமையாதது' என்னுங் கருத்தினர்.

'அமைச்சன் முகத்தைநோக்கி உற்றதுணரும் அரசனைப் பெற்றால், அமைச்சன் அரசனிடமிருந்து வாய்ச்சொல் வேண்டாது முகநோக்கி நிற்கவே அமையும்' என்ற கருத்தை 'நிற்கிற தொழில் அமாத்தியர்க்கேயாதலால் அமாத்தியர் குறிப்பை அரசனும் அறியவேண்டும்' என்றவிளக்கம் தருகிறது. இது முன்சொன்ன, அவருரையன்மையையும் அவர் கருதும் வேறுரை என்பதனையும் 'அரசனும் அறியவேண்டும்' என்பதாம் என்ற குறிப்பு அரண் செய்கிறது; இவரை இத்தகைய குறிப்பை எழுதத் தூண்டியது. இது அங்க இயலாதலானும், குறிப்பறிதலும் அறிந்து நடத்தலும் அமைச்சர்க்கேயுரியதாதலானும், அரசனும் அறிய வேண்டும் என்பதை வலியுறுத்த 'அரசனும்' என உம்மை கொடுத்து உரைத்தனராதலைக் காண்க.

பரிதி. கூறும் 'அரசன் முகம் பார்க்கத் தெரியும்' என்ற உரை 'அமைச்சன் அரசனது முகத்தைப் பார்க்கத் தான் செய்வன தவிர்வன இவையெனத் தெரியும்' என்ற கருத்தை விளக்குவது. 'முகநோக்கியுணரும் மந்திரி அரசன் முகம் நோக்க அறிந்து செய்வான்' என்னுங் கருத்தினது.

காளிங்கர் உரையும் உணர்வார் யார்? நிற்பார் யார் என்பதைச் சுட்டாமல் பொதுமையின் நிற்பது.

பரிமேலழகர் மனத்தில் 'இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்' என்ற தொடர்க்குக் காளிங்கர் தந்த உரை நிலவியிருக்கிறது அதனை "அரசற்கேற்ற வண்ணம் குறையுறுவானும் தன் மனத்தைக் குறிப்பானறிந்து தீர்ப்பாரைப் பெறின்' என்றனர். குறையுறுதல் — குடிகள் தங்குறைகளை மன்னனிடம் குறிப்பான் உணரச் செய்தலும், கூறியுணரச் செய்தலுமாம். குறையுறுதல் — இக்குறைகளைச் சொல்லிக் கொள்ளுதலாதலை — "இரந்து குறையுற்ற கிழவனை" (தொல். பொருள் : இளம். 99) தொல்காப்பிய நூற்பாக்கள் உணர்த்துகின்றன. ஆதலால் இவர் 'குறையுறுவானும்' எனக் குடிமக்கள் தம்குறை கூறுதலை எண்ணிக் கூறினராதல் தெளிவு. ஆகவே 'அரசகாரியம் பார்ப்பாராகிய அமைச்சர் அரசன் முகக்குறிப்பையறிந்தாற்றுதலேயன்றி குடிகளின் குறைகளையும் குறிப்பான் அறிந்து நீக்குதல் அமைச்சன் கடமையாதலின், முகநோக்கி நிற்க அமையும்' என்றனர். மன்னரைச் சேர்ந்தொழுகுவார்க்குக் குறிப்பறிதல் இன்றியமையாது என்பதை விளக்க வந்தபோது குறையிருப்பார் குறைகளையும் குறிப்பானறிந்து களைதல் அமைச்சன் கடமையாகலாம் என்று கருதியிருப்பர் எனலாம். ஆகவே 'குறையுறுவான் இரப்பானும், உணர்வான் ஈவோனுமாகார்; ஆதலால் தேவநேயர் மறுப்பும், உரைவேற்றுமையாசிரியர் கூற்றும் ஆழ்ந்த சிந்தனைக்குரியன.

இராம. "அகநோக்கி உற்றதுணர்வார், முகநோக்கி நிற்கப் பெறின் அமையும்" எனக் கொண்டு கூட்டிப் பொருள் காண்பர். இப்பொருளில் 'உணர்வார்' எழுவாய்ப் பொருள் ஏற்றுளது. 'உணர்வார்ப் பெறின்' என்ற பாடம் இரண்டாம் வேற்றுத் தொகையாகிறது. இலக்கண வழுவாதல் கண்டு ஆய்க. இவற்றுள் இயல் அதிகாரங்கட்கு இயைபுடைய உரைகள் சிறந்தன. சார்தலைப் பொதுவகையாக் கொண்டு குடிகள் குறிப்பறிதலையும் கொள்ளலாம்.

ஓ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

ஆர்த்தியும் உற்றதும் அறிஞர்க் கற்றந்தான்
வார்த்தையின் உணர்த்துதல் மாசன் றோமனம்
வேர்த்தனள் வெதும்பினள் மெலிந்து சாய்ந்தனள்
பார்த்தனள் ஒருத்திதன் பாங்க னாளையே. — கம்ப.,1100

கண்டபின் இளையவீரன் முகத்தினால் கருத்தை யோர்ந்த
புண்டரீ கக்க ணானும் — கம்ப., 5410

முற்றுணர் முனிவன்ன முகத்து நோக்கினான் — கம்ப.,2334

வண்டுள ரலங்கலாய் வஞ்சர் வாண்முகம்
கண்டதோர் பொழுதினிற் றெரியுங் கைதவம்
உணடெனி னஃதவர்க் கொளிக்க வொண்ணுமோ — கம்ப ,65 9

ஒருபுடை .;

வெளிச்சீர் உட்சீரைக் காட்டும் கண்ணாடி — பழ.,

அகத்துக்கு முகம் கண்ணாடி — பழ.,

அகத்தினழகு முகத்தில் தெரியும் — பழ.,

71,9. *பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின்*
*வகைமை உணர்வார்ப் பெறின்.* (709)

உரைப்பகுதி :

அ) மணக். : ஒருவனோடு உள்ள பகைமையையும் நட்பையும் கண்கள் சொல்லும்; கண்ணினது வேறுபாட்டை அறிவாரைப் பெறின் எ-று.

இது கண்கண்டு குறிப்பறிதல் நுண்ணியர்க்கல்லது பிறர்க் கரிது என்றது.

ஆ) பரிதி. : உறவும் பகையும் என்ற இரண்டினையும் பார்வை சொல்லும்; ஆகையாலே கண்ணிலும் ஒரு குறிப்பு இல்லை எ-று.

இ) பரிப். : ஒருவனோடு உள்ள பகைமையும் நட்பையும் கண் கள் சொல்லும் : கண்களினது வேறுபாட்டை அறிவாரைப் பெறின் எ-று.

இது கண் கண்டு குறிப்பு அறிதல் நுண்ணியார்க்கு அல்லது அரிது என்றது.

ஈ) காளி. : ஒருவரோடு ஒருவர்க்கு உள்ளத்தான் உள்ள

பகைமையும் கெழுமுதல் தன்மையும்[1] அவர் கண் தானே சொல்லித்தரும்; யார்க்கு எனின், அவை இரண்டையும் பிரித்து உணர்த்துகின்ற கூறுபாட்டை அங்ஙனம் தெரிந்து உணர் வார்க்கு எ-று.

கண் உரைக்கும் என்றது "மது மறைந்து உண்டோர் மகிழ்ச்சி" கண்ணினாலே கண்டு கொள்வார் என்பது.

உ) பரிமேல். : வேந்தர் தம் நோக்கு வேறுபாட்டின் தன் மையை அறியவல்ல அமைச்சரைப்பெறின், அவர்க்கு மனத்துக்[2] கிடந்த பகைமையையும் ஏனைக்கேண்மையையும் வேற்று வேந்தர் சொல்லிற்றிலராயினும் அவர்கண்களே சொல்லும்.

இறுதிக்கண் கண் ஆகுபெயர். நோக்கு வேறுபாடாவன வெறுத்த நோக்கமும் உவந்த நோக்கமும், உணர்தல் அவற்றை அவ்வக்குறிகளான் அறிதல்.

ஊ) கவிராசர் : அரசனுக்குத் தன்னுடைய பார்வைவேற்று மையை அறியவல்ல மந்திரிகளே வேணும். அப்படிப்பட்ட மந்திரிகள் வேற்றுவேந்தரிடஞ்சென்றால், அவர்கள் மனசிலே இருக்கிற பகையையும் சந்தோஷத்தையும் சொல்லாவிட்டாலும், அவர்கள் கண்பார்வையினாலேயும் முகக்குறிப்பினாலேயும் அறி வார்கள், எ-று.

ஏ) பழைய : 2 அரசன் தான் பார்க்கும் பார்வை வேறுபாடறிய வல்ல அமைச்சரைப் பெறின், அவன் மனத்துட் கிடந்த பகைமை யையும் கேண்மையையும் கண்ணே சொல்லும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறளிலும் 'உணர்வார் யார்? யாருடைய கண்கள் உரைக்கும், என்பதை அதிகாரத்தானும் அவாய் நிலைதன் னாலும் வருவித்துரைக்க வேண்டியிருத்தலின் உரையாசிரியர்கள் தம்முள் மாறுகின்றனர்.

---

1. கெழுமுதல் தன்மை — நட்பு கொள்ளும் த்ன்மை
2. மனத்து — மனம் என்றது ஈண்டு மாற்றரசர் மனத்தை

மணக்., பரிதி., காலிங்கர் உரைகள் குறட்பாவைப் போலவே பொதுமை நோக்கில் அமைந்தவை. பரிமேலழகர் 'வேந்தர்களின் கண்நோக்கை அறியவல்ல அமைச்சர்களைப் பெற்றால் வேந்தர்களின் கண்களே மாற்று வேந்தன மீதுள்ள மனநிலையைக் காட்டும்' என்பர்.

கவிராசர் 'வேற்று வேந்தர்களின் கண் உரைக்கும்' என்கின்றார். மேலும் கண் உரைக்கும் எனவே உப இலக்கணத் தான் முகமும் உரைக்கும்' என்று உரைக்கின்றனர்.

வரத. 'கண்ணின் வகைமை—கண்ணைப் பார்க்கும் விதம். அதாவது அமைச்சன் பேசும்போது பேசுபவன் கண்ணைக் கேட்ப வன் பார்ப்பதும், கேட்பவன் கண்ணைப் பேசுபவன் பார்ப்பதும் என இவையிரண்டானும் அறியலாம்' என்பர்.

இராம 'கண்ணின் தத்துவத்தையும் பயனையும் அறிந்தவர் கள் உண்டானால் அவனுக்குப் பகைவன் யார்? நண்பன் யார்? என்பதை அவர்களுடைய கண்களே சொல்லி விடும்' என்பர்.

'கண் உரைக்கும் என்பது பிறருடைய கண்ணல்ல. அதன் வகையறிந்து உபயோகிக்கிறவனுடைய கண்' எனக் குறிப்புந் தருவர்.

குறிப்பறிதல் பிறர் குறிப்பை அமைச்சர் அறிதல். ஆதலின் பிறர் கண்ணைக் கொண்டு தான் அறிதலே ஏற்புடையது. இக்கருத்தமைந்த பரிமேலழகர் முதலானோர் உரை சிறந்தது ஆகும்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் !

ஆற்றும் துணையும் அறிவினை உள்ளடக்கி
ஊக்கம் உரையார் உணர்வுடையார் — ஊக்கம்
உறுப்பினால் ஆராயும் ஒண்மை உடையார்
குறிப்பின்கீழ்ப் பட்ட துலகு. — நாலடி., 196

திருத்திய பளிக்கு வேதித் தெள்ளிய வேல்க ளென்னக்
கருத்தியல் புரைக்கும் உண்கண். — கம்ப., 5048

வண்டுளர் அலங்கலாய் வஞ்சர் வாண்முகம்
கண்டதோர் பொழுதினில் தெரியும் கைதவம்
உண்டெனின் அஃதவர்க் கொளிக்க ஒண்ணுமோ
விண்டவர் நம்புகல் விரும்பி வீழ்வரோ. — கம்ப.,6579

ஒ) மேற்கோள்பகுதி:

மயிலை.: அஃறிணையிடத்துக் கிளக்காதனவற்றைக் கிளக்குந போலக் கூறியதற்கு மேற்கோள் — நன்., 408

சங்கர.: ஷ — நன்., 409

71.10. *நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்*
*கண்ணல்ல தில்லை பிற.* (710)

உரைப்பகுதி:

அ) மணக்.: யாம் நுண்ணிய அறிவையுடையேம் என்றிருக்கும் அமைச்சர் பிறரை அளக்குங்கோலாவது ஆராயுமிடத்து. அவர் கண்ணல்லது பிற இல்லை எ-று.

ஆ) பரிதி.: கூரிய காரியத்தை அளக்கும் கோல் எது என்னில் கண்ணல்லது இல்லை எ-று.

இ) பரிப்.: யாம் நுண்ணிய அறிவு உடையம் என்பார் பிறரை அளக்கும் கோல் ஆவது. விசாரிக்கும் இடத்துக் கண் அல்லது பிற இல்லை: ஆகலான் கண் கண்டு அறிந்து கொள்க எ-று.

நுண்ணியார் முகத்தின் தோற்றம் விடார். அவரைக் கண்டு அறிய வேண்டும் என்றது.

ஈ) காளி.: உலகத்து யாவரினும் யாம் பெரிதும் கூரியேம் என்று இருப்பாரையும், தாம் மற்றுத் தம் குறிப்பினான் அதை அறிந்து சீர்தூக்கும் கோல், ஆராயும் இடத்து மற்று அவர் கண் தாமே அல்லது, வேறு இல்லை எ-று.

'அளக்குங்கோல்' என்பது ஏற்றமுந்தாழ்வும் இனிதுணரப் பலகாலும் தட்டியும் அசைத்தும் சீர்தூக்குந் தராசு என்றாயிற்று.

உ) பரிமேல்.: யாம் நுண்ணறிவுடையேம் என்றிருக்கும் அமைச்சர் அரசர் கருத்தினை அளக்கும் கோலாவது, ஆராயு மிடத்து அவர் கண்ணல்லது பிற இல்லை.

அறிவின் நுண்மை[1] அஃதுடையார்மேல் ஏற்றப்பட்டது இங்கிதம்,[2] வடிவு, தொழில், சொல் என்பன முதலாகப் பிறர் கருத்தளக்கும் அளவைகள் பல: அவையெல்லாம் முன்னறிந்த வழி அவரான் மறைக்கப்படும் நோக்கம் மனத்தொடு கலத்தலான் ஆண்டு மறைக்கப்படாது என்பதுபற்றி அதனையே பிரித்துக் கூறினார். இனி அலைக்குங்கோல் என்று பாடம் ஓதி, நுண்ணியம் என்றிருக்கும் அமைச்சரை அரசர் அலைக்குங் கோலாவது கண் என உரைத்து, தன் வெகுளிநோக்கால் அவர் வெகுடற் குறிப்பறிக என்பது கருத்தாக்குவாரும் உளர்.[3] இவை இரண்டு பாட்டானும் நுண்கருவி நோக்கு என்பது கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: 'யாம் நுட்பமான அறிவுடையோ' மென்றிருக்கிற மந்திரிகள் அரசர்கள் கருத்தினை அளக்குங்கோலாவது, கண்களல்லாமற் பின்னையொன்று இல்லை எ-று.

ஏ) பழைய 2: யாம் நுண்ணறிவு உடையம் என்றிருக்கும் அமைச்சர், அரசர் கருத்தினை அளக்குங்கோலாவது, ஆராயு மிடத்து அவர் கண்ணல்லது பிறிது வேறில்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'அமைச்சர் பிறரை அளக்கும் கோலாவது அவ்வமைச்சரின் கண்களே' என்பர் மணக்.; பரிதியார் உரையமைதியின் வண்ணம் அவர் கண்டபாடம் ''நுண்ணிதென்ப தளக்குங் கோல்'' என்பதாகலாம். கண்ணையும் முகத்தையும் அளப்பது கண்ணாதல் கூடுமேயன்றிக் காரியத்தையளப்பது கண் ஆகாமை தெளிக. ஆதலால் இவர் கண்டபாடம் போலக் கருத்தும் இயைபிலதாகும்.

1. நுண்மை என்பது அறிவின் பண்பு. அதனை அறிவுடையார் மேல் ஏற்றிக் கூறினார்
2. இங்கிதம் - குறிப்பு
3. தொகுப்பும் குறிப்பும் காண்க

மணக்., பரிப். உரைகள் 'நுண்ணியம் என்றிருப்பார் அமைச்சர். இவர்களே பிறரையும் அரசரையும் அளப்பவர்கள். அளக்கப்படுவார் அரசரும் பிறரும். கோல்-அமைச்சருடைய கண் கள்' என்பதில் மாற்றமில்லாதன.

காளிங்கர் 'நுண்ணியம் என்பாரையும் அளக்குங்கோல்' என இரண்டனுருபு விரித்துக் 'கண்-அமைச்சரின் கண்' எனப் பொருள் காண்பர்.

பரிமேலழகர் 'நுண்ணியம் என்பாராகிய அமைச்சர் (அரசர் கருத்தினை) அளக்கும் கோல் அவர் கண்ணலலது இல்லை' என்பார், அவர் என்பது அமைச்சரையும் சுட்டுவதா கலாம் அரசரையுங் குறிப்பதாகலாம். இவர் காட்டும் வேறு பாடமும் அதன் உரையுமாகிய இவற்றைக் காட்டிலும் இவருரை நேரிது.

'அளப்பார் அமைச்சரும், அளக்கப்படுவார் பிறர் அல்லது அரசரும், அளக்கப்படுவன அரசர் பிறர் கருத்துக்களும், கருவி அமைச்சர் கண்களுமாக அமையும்' உரைகளே ஏற்புடையன. தேவநேயர் உரை இதனையரண் செய்வது.

'அலைக்குங்கோல்' என்ற பாடம் காளிங்கரது என்பர். அவர் காணும் பொருள் அதற்கு இயையாமையின், பரிமேலழகர் மாற்றோர் கருத்தாகக் கூறும் அதற்கு இடஞ்சுட வேண்டிய எடுத்துக் கொண்ட வீண் முயற்சியாகும்.

'நுண்ணியம் எனத் தம்மைத் தாமே மதித்திருப்பார்' என்ற உரைக் குறிப்பு புகழ்ச்சியன்மையைக் காட்டுவதால் அவரையும் அளக்குங்கோல் அமைச்சர்களின் கண் என்ற உரை நயமுடை யதாகலாம்.

'கோல்', 'தராசு' என்றும், 'நீட்டியளக்குங் கோல்' என்றும் உரை காணுகின்றனர் கருத்து காட்சிப் பொருளன் மையான் அதனைக் கனம் பற்றியும், பரப்புப் பற்றியும் உருவகங் கண்டு இரண்டற்கும் இயையுமாறு செய்யலாம்.

**ஒப்புமைப்பகுதி :**

**வெவ்விய நெடுங்கணயில் வீசியயல் பாரா**
**நவ்வியி னொதுங்கியிறை நாணியய லின்றாள். —கம்ப., 2865**

## 71. குறிப்பறிதல்

| | கூறாமை | ஐயப்படாஅது | குறிப்பின் குறிப்புணர்வாரை | குறித்தது | குறிப்பிற்குறிப்புணரா | அடுத்தது | முகத்தின் | முகநோக்கி | பகைமையும் | நுண்ணியம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **மணக்.** | 7 | 8 | 10 | 6 | 5 | 2 | 1 | 9 | 4 | 3 |
| **பரிதி.** | 1 | 9 | 4 | 6 | 5 | 2 | 10 | 8 | 3 | 7 |
| **பரிப்.** | 7 | 8 | 10 | 6 | 5 | 2 | 1 | 9 | 4 | 3 |
| **காளி.** | 1 | 10 | 3 | 4 | 6 | 2 | 5 | 9 | 7 | 8 |
| **பரிமேல்.** | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

**71வது அதிகாரம் 'குறிப்பறிதல்' முற்றிற்று.**

# 72. அவையறிதல்

அ) மணக். : அவையறிதலாவது இருந்த அவையறிந்து அதற்குத்தக சொல்லுதல். அரசன் குறிப்பறிந்தாலும் அவை யறிந்து சொல்ல வேண்டுமாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி. : அவையறிதலாவது ஆஸ்தானம்[1] அறிதல் எ-று.

இ) பரிப். : அவை அறிதலாவது இருந்த அவையத்தாரை அறிந்து அதற்குத் தக்க சொல்லுதல். அரசன் குறிப்பு அறிந் தாலும் அவை அறிந்து சொல்ல வேண்டுதலின் அதன் பின் கூறப்பட்டது.

உ) பரிமேல். : அஃதாவது அரசனோடு இருந்த அவையினது இயல்பை அறிதல். காரியம் சொல்லுங்கால் அவன் குறிப்பறித லேயன்றி இதுவும் வேண்டுதலின், இஃது அதன்பின் வைக்கப் பட்டது.

ஊ) கவிராசர் : அஃதாவது - அரசனுடனே இருந்த சபை யினுடைய லட்சணத்தை[2] அறிகிறது.

ஏ) பழைய 2 : அஃதாவது, அரசனோடு இருந்த கூட்டத்தியல் பினை அறிதல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

தேவநேயர்: 'அமைச்சரும் தூதரும் அரசனோடு இருக்கும் அவையின் இயல்பை அறிதல். தம் அரசனது அவையை ஏற்

---

1, ஆஸ்தானம் - அரசவை 2, லட்சணத்தை - இயல்பை

கனவே அறிந்திருப்பாராதலால் இது சிறப்பாக வேற்றரசரின் அவையியல்பை யறிதலைப்பற்றியது' என்பர்.

வரத 'அரசன்முதலிய நல்லோர் கூடியிருந்த அவையினை அறிதல். குறிப்பறிதலே அன்றி, அவையிலுள்ளார் பேச்சையும் அறிதல் வேண்டும் ஆதலின் குறிப்பறிதலின் பின் இடம்பெற்றது' என்பர்.

சாமி. சிதம். 'சபையின் நிலையறிதல்' என்பர்.

சி.இ. 'கருத்துரைப்போர் அவையின் இயல்பையறிதல்' என்பர்.

இராம. 'சபையின் தரமறிந்து பேசுதல். இதுபிரசங்கம் செய்வார் அனைவருக்கும் பொது' என்பர்.

குழந்தை. 'அவை - அறிஞர் கூட்டம்; அரசவை. அதனியல்பறிதல்' என்பர். இவர் இவ்வதிகாரத்தைச் சொல் வன்மையின் பின்னும், அவையஞ்சாமையின் முன்னுமாக வைப்பர்.

கா சு. 'கழகத்தில் இருப்பவர்களின் தகுதியறிந்து பேசுதல்' என்பர்.

மு.ரா.அரு. 'அரசரோடிருந்த அவையின் இயல்பறிதல்'.

சொல் மாற்றமன்றிக் கருத்து மாற்ற மின்றாயினும் அதிகாரவைப்புமுறையை மாற்றுவர் குழந்தை. வரத. குறிப்பறிதலை அரசன் குறிப்புக்கே ஆக்கி, அவையறிதலைப் பேச்சால் அறிதல் என்ற கருத்து அத்துணைச் சிறந்தது அன்று. ஈண்டும் அவையினர் குறிப்பறிதலே கூறும்.

தேவநேயர் தரும் 'வேற்றரசர் அவையின் குறிப்பையறிதல்' என்ற உரையும், 'அவையினர் ஐம்பெருங்குழுவில் ஒற்றர் அல்லாதாரும் கற்றோரும் நண்பரும் ஆவர் என்றவிளக்கமும், 'அவை நல்லவை புல்லவை என இருதிறப்படும்' என்பதும், சொல்வாரோடு ஒப்புநோக்கி அவை ஒப்பு உயர்வு தாழ்வு என முத்திறத்ததாம்' என்பதும் சிறந்த கருத்துக்கள்.

72.1. அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர். (711)

**உரைப்பகுதி :**

அ) **மணக். :** இருந்த அவையத்தாரை அறிந்து, அதற்குத் தக சொல்லின் திறத்தை ஆராய்ந்து, சொல்லுக ; சொல்லின் தொகுதியை அறிந்த தூய்மையையுடையவர் எ-று.

தொகையறிதல்-திறன் அறிதல். இஃது ஆராய்ந்து சொல்லு மாறு கூறிற்று.

ஆ) **பரிதி. :** ஆஸ்தானம் அறிந்து பிழைவாராத சொல்லைச் சொல்லுக சொல்லறிந்த பேர் எ-று.

இ) **பரிப். :** இருந்த அவையத்தாரை அறிந்து அதற்குத் தக்க சொல்லும் திறனை ஆராய்ந்து சொல்லுக சொல்லின் தொகையை அறிந்து தூய்மையை உடையர், எ-று.

தொகையறிதல்-திறன் அறிதல். இஃது ஆராய்ந்து சொல்லு மாறு கூறிற்று.

ஈ) **காளி. :** அரசர்மாட்டு இருக்கும் அவையினது மரபினை அறிந்து அவ்விடத்தில் சொல்லத் தகுவனவற்றை ஆராய்ந்து பார்த்துச் சொல்லுக ; யார் எனின் சொல்லினது தகுதிக்குறை யில்லாத் தொகுதிப் பாட்டினை[1] அறிந்த தூய்மையினை உடைய அமைச்சர் எ-று.

உ) **பரிமேல். :** சொல்லின் குழுவினை அறிந்த தூய்மையினை உடையார் தாம் ஒன்று சொல்லுங்கால் அப்பொழுதை அவை யினை அறிந்து ஆராய்ந்து சொல்லுக, எ-று.

சொல்லின்குழு[2] எனவே செஞ்சொல்[3], இலக்கணைச்சொல்[4],

---

1. தகுதி குறையில்லாத் தொகுதி-அவையல் கிளவியும்,அவையில் சொல்ல வேண்டாத மறைச்சொற்கள் 2, 'சொல்லின் தொகை யெனவே' என்றும் பாடமுண்டு
3. செஞ்சொல் - நேராகப் பொருளைக் குறிக்கும் சொல்
4. இலக்கணச் சொல் - பெயர்ச்சொற்ஈள், வினைச்சொற்கள், வினைச்சொர்ற்க்ள், தத்தம் பொருளை உணர்த்தாது பொருளோடு தொடர்புடைய பொருளையும், கருத்துப்பொருளையும் அறிவிப்பது. 'கங்கைக்கண் இடைச்சேரி' என்பது போல, இதனை ஆக்கச் சொல் எனவும் வழங்குவர்.

குறிப்புச்சொல்[5] என்னும் மூவகைச் சொல்லும் அடங்கின. தூய்மை-அவற்றுள் தமக்கு ஆகாதான ஒழித்து ஆவன கோடல். அவை என்றது ஈண்டு அதன் அளவை; அது[6], மிகுதி ஒப்பு தாழ்வு என மூவகைத்து. அறிதல்-தம்மொடு தூக்கியறிதல்[7]. ஆராய்தல் - இவ்வவைக்கண் சொல்லுங்காரியம் இது. சொல்லு மாறு இது, சொன்னால் அதன் முடிவு இது என்று இவையுள ளிட்டன ஆராய்தல்.

காரி. : செஞ்சொல், இலக்கணைச்சொல், குறிப்புச்சொல் என மூன்றும் அடங்குதற்குச் சொல்லின் தொகை என்றார். "நோயும் இன்பமும் இருவகை நிலையில்"[8] என்னும் சூத் திர விதிபெற்றன இலக்கணைச்சொல் "வாரா மரபின வரக்கூறுதலும்"[9] என்பன குறிப்புச்சொல். இவ்விரண்டும் அல்லாதான செஞ்சொல். இலக்கணை குறிப்பு என்ற இவ் விரண்டுங் கூடிநிற்பது இலக்கணமருஉ, இலக்கண வழக்கு என்பனபோல என்க. இவையெல்லாம் காமத்துப்பாலுள் காண்க.

ஊ) கவிராசர் : செஞ்சொல், இலக்கணைச்சொல், குறிப்புச் சொல் என்னும் மூவகைச் சொல்லையும் அறிந்த நன்மையினை உடையவர், தாம் ஒன்றைச் சொல்லவேண்டினால், அப்பொழுது அவையை அறிந்து ஆராய்ந்து விசாரித்துச் சொல்லுக.

எ) பழைய 2: சொல்லின் வகை தொகையினை அறிந்த தூய்மையினையுடையார் தாம் ஒன்று சொல்லுங்கால் அப் பொழுது அவையினை ஆராய்ந்து சொல்லுக.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'தொகையறிதல்'

'திறனறிதல்' மணக். ; பரிதி. 'சொல்லின் தொகையை' ஒரு தொடராகக் கொண்டு 'சொல்லறிந்தபேர்' என்பர் காளி.

---

5. குறிப்புச் சொல் — குறிப்பால் பொருளுணர்த்துவது. அஃதாவது செம்பொருளும் ஆக்கப்பொருளும் அல்லாத வேறு பொருளை உணர்த்துவது. இதனை வியங்கியம் என்பாரும் உளர்

6. அது — சபையின் அளவு 7. தூக்கியறிதல்— ஆய்ந்தறிதல்

8. தொல்., 142 9. தொல்., 905

'சொல்லினது தகுதிக் குறையில்லாத் தொகுதிப்பாடு' என்பர். 'சொல்லின் குழு அவை செஞ்சொல் இலக்கணைச் சொல் குறிப் புச் சொல் என்னும் மூவகைச் சொல்' என்பர் பரிமேலழகர், கவிராசர், பழைய உரைகாரர் அனைவரும்.

தேவநேயர், பரிமேலழகர் கூறும் செஞ்சொல் முதலியன சொல்லின் வகையேயன்றித் தொகையாகா எனப் பரிமேலழகர் போன்றாரை மறுத்து, 'சொல்வார்க்கும் கேட்பவர் அனைவருக் கும் தெரிந்திருக்க வேண்டிய சொற்றொகுதி' என்பர்.

வரத. 'பல கருத்துக்களைத் தரும் சொல்லின் தரங்களை அறிந்தோர்' என்பர். பரிமேலழகருடைய கருத்தையும் தழுவு வர். மு.கோ. 'சொல்லின் தொகையறிதல்-அகராதியறிவு. தமிழ் வடமொழி முதலான பிற சொற்களின் தொகையையறிதல்' என் பர். சாமி. சிதம்பரனார் 'சொல்லின்' என்பதைச் செயின் என்னும் வாய்பாட்டு எச்சமாகக் கொண்டு, 'சொல்லின், அவை யறிந்து சொல்லுக' என முடிப்பர். 'தொகையறிந்த தூய்மையவர்' எழுவாய் சொல்லின் தொகை-சொற்களின் தன்மை எனக் குறிப்புத் தருவர். சொற்களின் கூறுபாடுகளை யறிந்து என்பர் சி.இ.சொற்களைத் தொகுத்துப் பேசுவதை யறிந்த தூய்மையவர் எனவும் 'தூய்மையவர் தூய்மையுடையவர்' என்பார் பலரை யும் மறுத்துத்' தூய்மையை விரும்புவார்' எனவும், 'தூய்மை யாவது — அவையறிந்து பேசுதல்' எனவும் பொருள் காண்பர் இராம. ; 'சொற் கூட்டம்' குழந்தை ; 'சொல்லின் தொகை சொற்பொழிவின் விளைவு' வ சுப.மா; 'சொற்களைத் தொகு-துரைப்பதின் பயன்' கா.சு. ; 'சொற்கூட்டம்' சபாபதி.

இவருள் 'திறனறிந்து, அச்சொற்களைத் தொகுத்துப் பேசுவதின் விளைவையறிந்து பேசுக'என்பார் உரைகள் சிறந்தன

'ஆராய்ந்து' கவர்பொருள் படுஞ்சொல், குறிப்புச் சொல் வழூஉச் சொல் முதலியன கலவாது என்னும் தேவநேயர் உரை சிறந்தது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

கேட்பாரை நாடிக் கிளக்க படும்பொருட்கள்

வேட்கை அறிந்துரைப்பர் வித்தகர் - வேட்கையால்
வண்டு வழிபடரும் வாட்கண்ணாய் தோற்பன
கொண்டு புகாஅர் அவை — பழ. நா., 18

தொகைபடு செஞ்சொல் இலக்கணைச் சொல்லே
சூழ்ந்திடும் குறிப்புச்சொல் மூன்றின்
வகையறிந் துயர்ந்தோர் ஒத்தவர் தாழ்ந்தோர்
மருவுமூன் றவையும் ஆராய்ந்து
தகையுற உணர்ந்தோர் அவையின்முந் துரையார்
சமத்தின்எவ் வாற்றினும் கிளப்பார்
நகைபடு தாழ்வின் ஒன்றையும் மொழியார்
நவைபடாச் சொற்பொருள் ஆய்ந்தோர். —விநா. அரசி.,115

72.2. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர். (712)

உரைப்பகிதி :

அ) மணக். : சொன்னால் அதற்கு வருங்குற்றத்தை ஆராய்ந்து• நன்மையாமவற்றையறிந்து, சொல்லுக; சொல்லினது வழக்காராய்ந்த நன்மையுடையார் எ-று.

இது ஆராய்ந்து சொல்லுமாறு கூறிற்று.

ஆ) பரிதி. : சொல்லின் இடையூறும் நன்மையும் அறிந்து சொல்லுக; சொல்லும் சாதுரியம்[1] அறிந்த மந்திரி எ-று.

இ) பரிப். : (குறிப்பு : இது சுவடியில் எழுதாமல் விடுப் பட்டுள்ளது) சொன்னால் அதற்கு வரும்கு ற்றத்தை ஆராய்ந்து நன்மை ஆம் அவற்றை அறிந்து சொல்லுக : சொல்லினது வழக்கு ஆராய்ந்த நன்மை உடையார்.

இஃது ஆராய்ந்து சொல்லு மாறு கூறிற்று.

ஈ) காளி. : எய்தியிருந்த அவையிடம் அறிந்து, பெரிதும் நன்மையைக் குறிக்கொண்டு அறிந்தும், பின் ஒன்று சொல்லுக.

1, சாதுரியம் - வன்மை

யார் எனின், சொல் ஒழுங்கினை நூன்முறையான் அறிந்து நன்மையினை உடையவர் எ-று.

உ) பரிமேல் : சொற்களின் நடையினை ஆராய்ந்தறிந்த நன்மையினை உடையார், அவைக்கண் ஒன்று சொல்லுங்கால் அதன் செவ்வியை ஆராய்ந்து வழுப்படாமல் மிகவுந்தெளிந்து சொல்லுக, எ-று.

சொற்களின் நடையாவது-அம்மூவகைச் சொல்லும் செம் பொருள், இலக்கணைப் பொருள், குறிப்புப்பொருள் என்னும் பொருள்களைப் பயக்குமாறு. செவ்வி-கேட்டற்கண் விருப் புடைமை. வழு-சொல் வழுவும் பொருள்வழுவும்.[2] இவை இரண்டு பாட்டானும் ஒன்று சொல்லுங்கால் அவையறிந்தே சொல்லவேண்டும் என்பது கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : சொற்களினுடைய நடையை அறிந்தவர்கள், சபையிலே ஒன்றைச் சொல்ல வேண்டினால், அதன் செவ்வியை ஆராய்ந்து, அறிந்து, வழுவுதல் இல்லாமற் சொல்லுக எ-று.

ஏ) பழைய2 : சொற்களின் நடையினை யறிந்து ஆராய்ந்த நன்மையினையுடையார் அவைக்கண் ஒன்று சொல்லும்போது அவ்விடத்தினியல்பை அறிந்து சொல்வழுவில்லாமல் நன்கு உணர்ந்து தெளிந்து சொல்லுக.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'இடைதெரிந்து'

'குற்றத்தையாய்ந்து' என்னும் மணக். உரை இடை- இடையூறு என்பதன் கடைக்குறையாகக் கருதியுள்ளது. பரிதி. கருத்தும் நோக்குக. 'இடத்தையறிந்து என இடை-இடம்' எனவும்,'நன்கு-நன்மை அதாவது சொல்லின் விளையும் நன்மை' எனவும், 'சொல்லின் நடை-சொல் ஒழுங்கு' எனவும் கூறுவர். பரிமேலழகர் 'சொற்களின் நடையையறிந்தோர்' எனவும் 'இடை-சமயம் அல்லது சந்தர்ப்பம்' எனவும் உரைப்பர். மு. ரா. அரு.

2. சொல்வழுவும் பொருள்வழுவும் – சொற்குற்றமும் பொருள் குற்றமும்

'சொல்லின் நடை-மூவகைச் சொல்லின் ஒழுக்கம்.' 'இடை-விரும்பி ஏற்கும் சமயம்' என்பர். வரத. 'நடை - சொல்லின் போக்கு,' 'இடை- சந்தர்ப்பம்' என்பர். மு. கோ. 'அவையின் நிலை' இராம. 'இடைதெரிந்து - சொற்பொழிவின் நடுவிலே சபையோர் ஆர்வத்தையறிந்து'. 'சொல்லின் நடைதெரிந்தவர்-சொற்பொழிவை நடத்தத் தெரிந்தவர்'என்பர் குழந்தை. 'சொல்லின் நடை-சுவைவிளையச் சொற்களையடுக்கிப் பேசுதல் 'இடை -இடையிடையே' வ.சுப.மா.; 'இடமறிந்து' கா. சு.; 'சொல்லின் நடை-சொற்களின் வழக்காறு', 'இடை-பேசுஞ்சமயம். அதாவது உணவுநேரம், கேட்டுக்கேட்டுச் சலித்த நேரம், உறக்கநேரம் முதலியன நன்குணர்ந்து - அவையினர் மனநிலையை நன்குணர்ந்து' என்பர் தேவநேயர். இவற்றுள் பரிமேலழகரை ஒட்டிப் புதுவிளக்கமுந் தந்த தேவநேயர் உரையும் ஏற்புடையன.

*72.3.* *அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்*
*வகையறியார் வல்லதூஉம் இல்.* *(713)*

**உரைப்பகுதி:**

அ) மணக்.: அவையினது அளவை அறியாது ஒன்றைச் சொல்லுதலை மேற்கொள்பவர், சொல்லின் வகையும்[1] அறியார் அவ்வாறன்றி வேறு வல்லதூஉம் இலராவார் எ—று.

ஆ) பரிதி : ஆஸ்தானம் அறியாமல் தன்சொல் மேற்பட விசாரியாமல் பயனில் சொல் சொல்லுவான் சொல்லறியாதான் எ—று.

இ) பரிப்.: அவையினது அளவை அறியாது ஒன்றைச் சொல்லுதலை மேற்கொள்பவர் சொல்லின் வகையும் அறியார், ஆவார்: அன்றி வேறு வல்லதும் இலர் ஆவர் எ—று.

வகை-சில சொல். இது பிறரான் மதிக்கப்படார் என்றது.

ஈ) காளி.; இவ்வாறு அவையினது மரபினை அறிந்து ஆராயாது வறிதே சொல்லுதலை ஒருப்பட்டு நடாத்துவார் யாவர்?

1. சொல்லின் வகை - ஆக்கச்சொல், குறிப்புச் சொல் முதலியன.

மற்று அவர் சொல்லின் தகுதியும் மற்று அல்லதும் ஆகிய கூறு பாட்டினையும் அறியார்: மற்று யாதானும் தாம் வல்லதும் இல்லையாய்விடும்; சொல்லின்கண் சோர்வு படுதலான் எ-று.

உ) பரிமேல் : அவையினது அளவை அறியாது ஒன்று சொல்லுதலைத் தம்மேற்கொள்வார் அச்சொல்லுதலின் கூறுபாடும் அறியார், கற்றுவல்ல கலையும்[2] அவர்க்கு இல்லை, (எ-று).

அம்மூவகைச் சொற்களால் வரும் சொல்லுதல்வகைமை கேட்பாரது உணர்வு வகைமைபற்றி வருதலான் 'சொல்லின் வகையறியார்' என்றும், இஃது அறியார் யாதும் அறியார் என்று எல்லாரானும் இகழப்படுதலின் 'வல்லதூஉமில்' என்றும் கூறினார். இதனால் அவையறியாக்கால் வருங்குற்றம் கூறப் பட்டது.

ஊ) கவிராசர்: சபையினுடைய அளவை அறியாது ஒன்று சொல்ல நினைப்பவர் சொல்லின் வகையையும் அறியார்; அவர்க்குக் கற்று வல்ல கலையு மில்லை, எ—று.

எ) பழைய 2 : 'சொல்லின்மேற்கொள்பவர்' பாடம்.

இருந்த சபையின் வகையினை யறியாது ஒன்று சொல்லு தலைத் தம்மேற்கொள்வார், அச்சொல்லின் கூறுபாடும் அறியார்; மற்றப் பல கலையும் அறிந்த வல்லமையும் அவர்க்கு இல்லை

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

தொல்லாசிரியர்கள் அனைவரும் ஒரு கருத்தினர். பின்னுரைகாரர்களிற் சிலர் வேறுபட்ட கருத்தினராவர். மு.கோ. 'சொல்லின் வகை நகை முதலிய சுவைகளான் வேறுபட்ட சொற்களின் வகை' என்பர். அவையின் போக்குக்கு ஏற்ப சுவைகள் மாறி யமையப் பேசுதலைக் குறிப்பர் இவர். சாமி.சிதம். 'கற்ற தூஉம் இல்' என்பதில் 'கற்றது' என்பதனை வினையாலணையும் பெயராக்கி எழுவாயுருபேற்றதாகக் கொண்டு 'இல்' என்னும் வினைமுற்றுக் கொண்டு முடிந்ததாகப் பரிமேலழகரைப் போன்று முடிப்பர். மணக்குடவர் போன்றார் 'இல்' என்பது

2. கலை - சாத்திரவுணர்ச்சி

இல்லை என்பதன் திரிபாதலின், 'அது வேறுஇல்லை உண்டு ஐம்பால் மூவிடத்துப் பொதுவினையாதலின்' வல்லதூஉம் இலராவர் என முடிப்பர். முடிபு மாற்றமேயன்றிப் பொருள் மாற்றமின்றாம் என்க.

72.4. ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல். (714)

உரைப்பகுதி :

அ) மணக் .: ஒள்ளிய[1] அறிவுடையார்முன்பு தாமும் ஒள்ளிய அறிவுடையாராயிருத்தலும், வெள்ளிய[2] அறிவுடையார் முன்பு வாலிய[3] சுதை[4] வண்ணம் போன்ற வெண்மையைக் கொண்டிருத்தலும், அவையறிதலாவது எ-று.

ஆ) பரிதி .: சமர்த்தன் முன்னே சமர்த்தன் என்று பெயர் பெறுதல் வெள்ளை முன்னே கறுப்பு வெண்மையாமோ எ-று.

இ) பரிப். ஒள்ளிய அறிவை உடையார் முன்னர் தாமும் ஒள்ளிய அறிவை உடையராய் இருத்தலும், வெள்ளறிவினார் முன்னர் வாலிய சுதை வண்ணம் போன்ற வெண்மையைக் கொண்டிருத்தலும் அவை அறிதலாவது எ-று.

மேல் அவை அறிந்து ஆராய்ந்து சொல்ல வேண்டும் என்றார்: அவற்றுள் அவை அறிதலாவது இது என்று கூறியது.

ஈ) காளி .: ஒள்ளிய அறிவாளர் அவை முன்னர்க்கு ஏற்பத் தாமும் ஒள்ளிய அறிவாளர் ஆதல் உடையர் எனின் அவ்வறிவு இல்லாப் பேதையார் ஆகிய வெள்ளறிவாளர் முன்னர்வரின், வெண்மை நிறமே தனக்கு இயல்பு ஆகிய சுதை போலும் வெள்ளை வண்ணத்தைத் தம்கண் உள்ளதாகக்கொண்டு கழிதல் எ-று.

ஒளியார் என்பது ஒள்ளிய உடையார். வெளியர் என்பது வெள்ளியார்; அறிவு கேடர். வான் சுதை வண்ணம்

---

1. ஒள்ளிய - ஒளிபொருந்திய
2. வெள்ளிய - உள்ளீடற்ற
3. வாலிய — வெண்மையான
4. சுதை — சுண்ணாம்பு

கொளல் என்பது-இதில் வாலிமை-வெண்மை: சுதை என்பது மணலும் நீறும் கூடிய சுண்ணாம்பு.

உ) பரிமேல் .: அறிவால் ஒள்ளியாரவைக்கண் தாமும் ஒள்ளியராக, ஏனை வெள்ளைகள் அவைக்கண் தாமும் வாலிய சுதையின் நிறத்தைக் கொள்க, (எ-று).

ஒள்ளியார் என்றது - மிக்காரையும் ஒத்தாரையும்.[5] அது விகாரத்தால் ஒளியார் என நின்றது. ஒள்ளியராதல் தம்நூலறிவும் சொல்வன்மையும்[6] தோன்றவிரித்தல். அவை அறியாத புல்லரை[7] 'வெளியார்' என்றது, வயிரமில் மரத்தை வெளிறு[8] என்னும் வழக்குப்பற்றி. அவர்[9] மதிக்கும் வகை அவரினும் வெண்மையுடையராக என்பார் 'வான் சுதை வண்ணங்கொளல்' என்றார். அவையளவு அறிந்தார் செய்யுந்திறம் இதனால் தொகுத்துக் கூறப்பட்டது. முன்னர் விரித்துக் கூறுப.

ஊ) கவிராசர் : அறிவினாலே பெரியவர்களுடைய சபையிலே தானும் அறிவுடையனாய் இருக்க வேணும்; அறிவில்லாத வெள்ளைகள் சபையிலே வெண்ணிறச் சுண்ணாம்பின் தன்மையை கொள்ளவேணும் எ-று.

எ) பழைய 2 : ஒள்ளிய அறிவினையுடையார் இருந்த சபை நடுவே தாமும் ஒள்ளியராக ஏனை வெள்ளைகள், அவைக்கண் தாமும் மிகுந்த சுதையினிறத்தையுடைய வெள்ளறிவினை யுடையராகக் கொள்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக் .: ..........ஒள்ளியராதலும், ... ........ வான்சுதை

5. மிக்காரையும் ஒத்தாரையும் — அறிவான் மிக்காரையும், அறிவான் ஒத்தாரையும்
6. சொல்வன்மை — எடுத்த காரியத்தை முடிக்கத்தக்க சொற்களைச் சொல்லும் திறம்
7. அவையறியாத புல்லரை — கல்வி கல்லாமல் கல்விக்கழகங்களில் பேசத்துடிக்கும் அற்பர்கள்
8. வெளிறு வயிரம் பாயாதது; அறிவு நிறையாதாரை வெளியார் என்று கூறுதல் மரபு
9. அவா — வெளியார்

வண்ணங்கொளலும் 'அவையறிதலாவது' என வினையால ணையும் பெயரைக் கொண்டு முடிப்பர்.

காலிங்கர் உரை நடை இடர்ப்பட்டுத் தங்கருத்தை விளக்குவது. 'ஒள்ளியார் முன் ஒள்ளியாராதலை ஒருவர் உடையர் எனின், வெளியார் முன்னும் அவர்கள் வெள்ளறிவே தம்கண்ணும் உள்ள தெனக் காட்டி (தம் ஒள்ளறிவு வெளிப் படுதற்குமுன்னே) வெள்ளியார் அவையைவிட்டுக் கழிக' என்னும் கருத்தினது 'வான்சுதை வெண்மையான சுண்ணாம்பு. சுதை-மணலும் நீறுங்கலந்த கலவை. மணல் நீற்றொடு கலந்தாலும் தன்னிறங் காட்டாது நீற்றின் நிறமேயாக இருத்தல் போல ஒள்ளி யோன் தன் ஒண்மையைக் காட்டாது வெண்மையாகவே அவ் வவையில் இருந்து கழிக' என்னுங் கருத்தினது என்க. உரை யமைதி எங்ஙனமிருப்பினும் பரிமேலழகர் மணக்குடவர்களின் கருத்தை ஒட்டியே அமைந்தமை காண்க. 'சுதை' என்றதை கலவை நீறு என்றமையே இங்ஙனம் மயங்கச் செய்தது.

பரிமேலழகர் 'சுதை-சுண்ணாம்பு' என வாளா கொண்டு 'வான்சுதை என்றதால் வெள்ளியாரினும் வெண்ணியராக' எனச் சிறந்த கருத்தினைக் கொணர்வர். இவையே இவருரைகளின் வேறுபாடு என்க. இவர் 'ஆதல்' என்பதனைத் தல்லீற்றுவியங் கோளாகக் கொண்டு 'ஆகுக' எனப் பொருள் தந்து இரண்டு தொடராக இக்குறளை முடிப்பர்.

பரிதியார் ஒள்ளியார்-சமர்த்தர். சமர்த்தர் முன்னே சமர்த் தர் எனத் தெளியப்பட்டார் ஒருவர், வெள்ளறிவினர் முன்னே வெள்ளறிவினராதல் இயலுவதொன்றாகுமா? கறுப்பு வெண்மை யாகுமா? அது போல வெளியார் முன் வான்சுதை வண்ணங் கொள்ளற்க' என்பர். பொழிப்பாக இங்ஙனம் கூறினர் என்க. 'கொளல்' என்பதனை ஈண்டு எதிர்மறை ஏவலாகக் கொண்டன ராதல் தெளிக. இதனாற் போந்ததுத க்கார் அவையிலே தக்கன சொல்லித் தக்கான் என்று பெயர் வாங்குக. அல்லார் அவையிலே அவர்கட்குத்தக பேச இயலாது: அகலுக என்பதாம்.

'வான்சுதை-வாலிய வெண்ணிறம்' என்பது. இதனை 'வளமுலை வான் கோட்டு' (கலி. 97. வரி 12) என்னும் பகுதி

யினும், ''ஆம்பல் வான்மலர்'' (கலி 72. வரி 6) என்ற பகுதியினும் வான் - வெண்மையையுணர்த்தினமை காண்க.

'வான்-வானம்' எனக்கொண்டு, அது நீலநிறமாதலின் சுதை-கருமை யாகுமோ என்றார் எனலும் ஆம். எங்ஙனமாயினும் அவர் கருத்து 'ஒள்ளியார் முன் ஒள்ளியராகுக. வெளியார்முன் வெளியார் ஆகற்க' என்பதே.

வான்சுதை வண்ணம் - காட்சிப் பொருள் வெண்மை. வெளியாரது வெண்மை. கருத்துப் பொருள் வெண்மை. உள்ளீடாகிய ஆழமில்லாத அறிவு. இங்ஙனம் காட்சி வெண்மையைக் கருத்து வெண்மையோடு இணைத்ததால் கருத்துப் பொருள் வெண்மையின் இழிவு மிக்குத் தோன்றுதல் காண்க. இதனாற் போந்த பயன் அரை முட்டாள் கூட்டத்தில் முழுமுட்டாளாக இரு என்பதாம்.

இராம. வெளியார்-அறிவிலிகள் அல்லர், பாமரர் என்பர். பாமரர் அவையில் பாமரர்போல் நடிக்க' என்பது.

மு.கோ. 'வெளியார்-வெளி நாட்டவர். மொழித்திறம் அறியார்' எனப் புதுப்பொருள் கருதுவர். 'சுதைவண்ணம் -பொம்மை: மொழித்திறம் அறியார் முன் பொம்மைபோல வாய் வாளா இருக்க' என்பர்.

இவ்வுரைகளுள், இக்குறளை இருதொடராகக் கொண்டு 'அறிவுடையார் முன் பேரறிஞனாகவும், பாமரர் முன் பாமரன் போலவும் இருக்க' என்ற கருத்தமைந்த உரைகளே அதிகார இயைபும், தெளிவும் உடையன.

ஒ) ஒப்புமைப்பகுதி :

தாரையுஞ் சங்கமுந் தாளங் கொம்பொடு
........... ............ ............ ............
பேரியு மியம்பில சென்ற பேதைமைப்
பூரியர் குழாத்திடை யறிஞர் போலவே. —கம்ப., 2364

ஓ) மேற்கோள் பகுதி :

நச்சி .: அறிவுமடம் படுதலும் அறிவு நன்கு உடைமையும் என்ற அடிக்கு உரை எழுதியவர் இக்குறளை எடுத்துக்காட்டு என்றார் பிறரும் எனக்கூறுவர். —சிறுபாண்., 216

72.5. நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு. (715)

உரைப்பகுதி :

அ) மணக். : நன்றென்று சொல்லப்பட்ட எல்லாவற்றுள்ளும் மிக நன்று, தம்மின் முதிர்ந்தார்முன் அவரின் முற்பட்டு ஒன்றனைச் சொல்லாத அடக்கம், எ-று.

முதுவர் - தவத்தானும் குலத்தானும் கல்வியானும் பிற யாதானும் முதிர்ந்தார். இஃது இருந்த அவையின் கண முந்துற்றுச் சொல்லல் ஆகாது என்றது.

ஆ) பரிதி. : நன்மை என்றதற்குள் நன்மையாவது ஆஸ் தானத்துக்கு நடுவேயிருந்து தன்சொல் மேற்படச் சொல்லுதல் எ - று.

இ) பரிப். : நன்று என்று சொல்லப்பட்ட எல்லாவற்றுள்ளும் மிக நன்று தம்மின் முதிர்ந்தார் முந்து உற்றுச் சொல்லாத அடக்கம் எ — று.

முதுவர் : தவத்தானும் குலத்தானும் முதிர்ந்தார். இஃது இருந்த அவையின்கண் முந்து உற்றுச் சொல்லல் ஆகாது என்றது. இவை மூன்றும் ஆராய்ந்து சொல்லுமாறு கூறின.

ஈ) காளி. : இது நன்று என்று சான்றோர் தெரிந்து கைக் கொண்டவற்றுள் எல்லாம் சால நன்றே: யாது? எனின், தம்மினும் முதிர்ந்த அறிவினை உடைய மூதறிவாளர் முன்னர் அவர் குறிப்பு அறிந்தன்றித்தாம் ஒன்றினை முந்து உற்றுச் சொல்லா மையாகி நின்ற அரணிப்பு எ-று.

அரணிப்பு ஆவது — நாவை மிகவும் ஒடுக்கிக் கொண்டிருத்தல் என்பது.

உ) பரிமேல் : ஒருவற்கு இது நன்று என்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட குணங்களெல்லாவற்றுள்ளும் நன்றே, தம்மின் மிக்காரவைக்கண்[1] அவரின் முற்பட்டு ஒன்றனைச் சொல்லாத அடக்கம், (எ-று).

தம் குறைவும் அவர்மிகுதியும் முந்துகிளந்தாற்[2] படும் இழுக்கும், கிளவாக்கால் எய்தும் நன்மையும் அறிந்தே அடங்கினமையின், அவ்வடக்கத்தினை 'நன்று என்றவற்றுள்ளும் நன்று' என்றார். முன்கிளத்தலையே விலக்கினமையின், உடன் கிளத்தலும் பின்கிளத்தலும் ஆம் என்பது பெற்றாம். இதனான் மிக்காரவைக்கண் செய்யுந்திறம் கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : நல்லதென்று சொல்லப்பட்ட குணங்களிலெல்லாவற்றிலும் நல்லது, தன்னிலும் பெரியவர்கள் சபையிலே தான் ஒன்றினை முந்திச் சொல்லாமல் இருக்கிறது (எ-று).

ஏ) பழைய 2 : ஒருவற்கிது நன்று என்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட குணங்களெல்லாவற்றுள்ளும் நன்று, தம்மின் மிக்காரிருந்த சபையின் முற்பட்டு ஒன்றினைச் சொல்லாத அடக்கம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பரிதி. 'முந்து கிளவாச் செறிவு' என்பதனை 'முந்து கிளக்குஞ் செறிவு' என்று பாடந்திரித்தோ, 'கிளவா செறிவு' என இயல்பாகக் கொண்டு செய்யா என்னும் வாய்ப்பாட்டைச் சமமாகக் கொண்டு, 'கிளந்து செறிவுடையனாதல்' என்று பொருள் கண்டனர் எனலாம். ஏனைய உரைகள் யாவும் ஒத்த கருத்தின.

1. தம்மின் மிக்கார் - கல்வி கேள்விகளில் தம்மினும் மேம்பட்டார்
2. முந்து கிளந்தால் - கல்வியறிவுகளில் சிறந்தவரை முற்பட்டு பேசுதல்

ஒ) ஒப்புமைப்பகுதி :
முதுவருள் முந்துகிளவாச் செறிவு:

வாசகம் வல்லார் முன்னின் றியாவர்வாய் திறக்க வல்லார்,
— கம்ப., 980

72.6. ஆற்றின் நிலைதளர்ந்த தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு. (716)

உரைப்பகுதி :

அ) மணக். : ஒருநெறியின்கண் நின்றார் அந்நிலைமை குலைந்தாற்போல[1] இகழப்படும், அகன்ற கல்வியைக்[2]கேட்டறிய வல்லார் முன்னர்த்தப்புதல் எ-று.

இது தப்புதல் வாராமல் சொல்லல்வேண்டும் என்றது.

ஆ) பரிதி. : ஆற்றுக்குள்ளே நிலைச்சுக்[3]கரையேறுவான் அவன் நீச்சிலேவிழுந்ததற்கு[4] ஒக்கும்: பெரியோரிருந்த சமயத்திலே மந்திரி சொல் தட்டுப்படுதல் எ-று.

இ) பரிப். : ஒரு நெறியின்கண் நின்றார் அந்நிலைமை குலைந்தாற் போல இகழப்படும் : அகன்ற கல்வியைக் கேட்டு அறிய வல்லார் முன்னர்த் தப்புதல் எ-று.

ஏற்று என்பது கேள்வியின் கண் வருதலின் கேள்வி ஆயிற்று. மேல் தப்பு வாராமல் சொல்ல வேண்டும் என்றார் : அதனால் வரும் குற்றம் என்னை என்றார்க்கு இது கூறப்பட்டது.

ஈ) காளி. : தொன்று தொட்டுத்தாம் ஒழுகி வருகின்ற ஒழுக்க நிலையின் தவறியது எத்தன்மைத்து? அவ்வளவு அன்றி அதனினும் சாலக்குற்றம் உடைத்து யாது? எனின் தம் கல்வியால் பரந்த அறிவினைத் தாம் ஒன்று சொல்லும்போது எதிர் ஏற்று அறிவோர் கூட்டமாகிய அவை முன்னர் தமது சொல்லின் இழுக்கம் எ-று.

---

1. குலைந்தற்போல-நிலை கலங்கியது போல 2. அகன்ற கல்வி-நிறைந்த படிப்பு
3. நிலைச்சு-நின்று 4. நீச்சிலே விழுந்ததற்கு-நீந்திச் செல்வதற்கு

ஆற்றின்நிலை தளர்ந்து அற்று என்பது தாம் ஒழுகி வருகின்ற ஒழுக்கின் நிலையின் தவறிய அத்தன்மைத்து என்றது. வியன்புலம் என்பது உயர்ந்த அறிவு என்றது. ஏற்று உணர்வார் என்பது உரை கலப்பதன் முன்னமே யாது எனக்கருதி இதனை எதிர் ஏற்று அறிவோர் என்பது.

உ) பரிமேல். : வீடு எய்தற் பொருட்டு நன்னெறிக்கண்[5] நின்றான் ஒருவன், அந்நெறியினின்றும் நிலை தளர்ந்து வீழ்ந் தாலொக்கும், அகன்ற நூற்பொருள்களை உட்கொண்டு அவற்றின் மெய்ம்மை உணர வல்லார்[6]வைக்கண் வல்லானொருவன் சொல்லிழுக்குப்படுதல்[7], (எ-று).

நிலைதளர்ந்து வீழ்தல் "உரனென்னும் தோட்டியான் ஓரைந்துங்கா[8]த்து ஒழுகியான் பின் இழுக்கிக் கூடா ஒழுக்கத்தனா தல்.[9] பயன் இழத்தலேயன்றி இகழவும்படும் என்பதாம். இத னான் அதன்கண் இழுக்கியவழிப் படுங்குற்றம் கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : மோக்ஷமடைய வேண்டி நல்ல நிலைகளிலே நின்றான் ஒருவன் அந்த நிலை குலைந்து வீழ்ந்ததோடு ஒக்கும் : பெரிய நூல்களைக் கற்று அவற்றின் பொருளை அறிந்த பெரி யோர்கள் முன்னே ஒருவன் சொன்ன வசனம் குறைபடுகிறது. எ று.

ஏ) பழைய 2 : நீரோடும் ஆற்றின்கண் நிலைதளர்ந்தமிழ்ந் —திய தொக்கும், அகன்ற நூற்பொருள்களை உட்கொண்டு அவற்றின் மெய்ம்மையுணர வல்லார் சபையின் அறிவில்லான் ஒருவன் சொல்லி சொல்லிழுக்குப்படுதல்.

---

5. நன்னெறி - நல்லொழுக்கம்; அவ்வையவான் விரத ஞானங்கள் முதலாயின

6. அவற்றின் மெய்ம்மை யுணரவல்லார் - அகன்ற நூற்பொருளின் உண்மையை அறிய வல்லவர் 7. சொல்லிழுக்குப்படுதல் - சொற்சோர்வடைதல்

8. குறள்,, 24 9. கூடாஒழுக்கத்தனதால்—தாம்விட்ட காம இச்சையை உறுதியில்லாமையால் பின்பும் பற்றிக் கெட்ட வழியில் ஒழுகுதல்

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஆறு'

'நெறி (ஒழுக்கம்)' மணக்., காளி ; 'ஆற்றுக்குள் (யாதறிதல்)' பரிதி ; 'வீட்டுநெறி' பரிமேல்.,

''புலம்''

'கல்வி' மணக் ; 'வியன்புலம்' புலம்—இடம்; அது காலம் ஆனதாகக் கொண்டு, 'பெரியோரிருந்த சமயம்' என்பர் பரிதி. 'தம் கல்வியாற் பரந்த அறிவு' காளி.; 'அகன்ற நூற்பொருள்' பரிமேல், தேவநேயர்.

இங்ஙனம் சொல்லளவாற் சிறிது வேறுபடினும் குறட்பாவின் கருத்து மாற்றம் இல்லாமை காண்க: யானைக்கும் அடி சறுக்குவது போல சொல்லிழுக்கு குற்றமின்மை ஆகாதோ எனின் ஆகாது; அடிசறுக்குதல் சொல்லான் வரும் பிழையை உணர்த்துமேயன்றிக் கருத்துப் பிழையையன்று என்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

வியன்புலம் ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு:

பிழைபடச் சொல்லேல் — ஆத்தி., 79

முற்றும்:

நெடும்பகற் கற்ற வவையத் துதவா
துடைந்துளா ருட்கு வருங்கல்வி — கடும்பகல்
ஏதிலான் பாற்கண்ட வில்லினும் பொல்லாதே
தீதென்று நீப்பரி தால். — நீதிநெறி விளக்கம்;

72.7. *கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்*
*சொல்தெரிதல் வல்லா ரகத்து.* (717)

உரைப்பகுதி:

அ) மணக்.: 'சொல் தெரிய' பாடம்.

நூல்களைக்கற்று, அதன் பயனும் அறிந்துள்ளாரது கல்வி விளங்காநிற்கும்: குற்றமறச் சொற்களைச் சொல்லவல்லார் முன்னர்ச் சொல்லின் எ-று.

இது கல்வியின் விழுப்பம் கற்றார்க்கு அல்லது பிறர்க்கு அறிதல் அரிது என்றது.

ஆ) பரிதி. : பலநூல் கற்ற அறிவுடையார் கல்வி பிரகாசிக்கும்; பழுதற்ற மந்திரியினிடத்து. எ-று.

இ) பரிப். : நூல்களைக் கற்று அவற்றின் பயனும் அறிந்தவர்களது கல்வி விளங்கா நிற்கும் : குற்றம் அறச் சொல்லை ஆராய வல்லார் முன்னர்ச் சொல்லின் எ-று.

கல்வியின் விழுப்பம் கற்றார்க்கு அல்லது அறிதல் அரிது ஆகலான் அவர் முன்பு சொல்லுக : அதனானே அக்கல்வி விளங்கும் என்றது.

ஈ) காளி. : 'சொல் தெரிய' - பாடம்.

பல நூல்களையும் திருந்தக்கற்று அமைந்த அமைச்சரது கல்வியானது விளங்கா நிற்கும்: எவ்விடத்து எனின், தமது சொல்லினை ஒரு குற்றம் அற இனிது உணரவல்லாரிடத்து எ-று.

உ) பரிமேல்.: வழுப்படாமல்[1] சொற்களை ஆராய்தல்வல்லாரவைக்கண் சொல்லின் பல நூல்களையுங்கற்று அவற்றினாய பயனை அறிந்தாரது கல்வி யாவர்க்கும் விளங்கித் தோன்றும்.

சொல்லின் என்பது அவாய்நிலையான் வந்தது.[2] ஆண்டே[3] சொல்லுக என்பதாம்.

ஊ) கவிராசர் : குற்றமற்ற சொற்களை அறிந்து சொல்லத்தக்க பெரியவர்கள் சபையிலே பல நூல்களையும் சொல்லின், அவர்களுடைய கல்வி விளக்கமாய் எல்லாராலும் அறியப்படும் எ-று.

எ) பழைய 2 : பழுது படாமற் சொற்களை ஆராய வல்லார் சபையின் சொல்லில், பல நூல்களையுங் கற்று அவற்றினாகிய பயனை அறிந்தார் கல்வி விளங்கித் தோன்றும்.

---

1. வழுப்படாமல் - குற்றப்படாமல்
2. அவாய்நிலை - வேண்டிநிற்கும் சொல்
3. ஆண்டே - அவ்விடத்தே

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறள் கூறும் பண்பினை மக்களனைவருக்கும் அமைய வேண்டிய குணமாகக் கூறியவர்கள் மணக்., பரிமேல்., கவிராசர், பழையஉரை 2, மு. ரா. அரு., சி.இ., கா.சு. முதலிய அனைவரும். 'உற்றறிந்தார் கல்வி' என்பது மணக்குடவர் பாடம்.

மந்திரிகளுக்கு உரிமையாக்கினவர்கள் பரிதி., காலி. முதலியோர். சொல்தெரிதல்வல்லார், அவையேயாரும் கற்றறிந்தார் சொல்வோரும் ஆகக் கருதும் உரைகள் சில சொல் தெரிதலையும் அமைச்சர் குணமேயாக்கி, சொல்லை ஆராய்ந்து பேசும் வன்மையுடையாரிடத்துள்ள கல்வி சிறக்கும் என உரைகண்டார் சிலர். இது அவையை நேரேயுணர்த்தாமல் சொல்வன்மையைக் குறிப்பதாகும் ஆதலால் அவையோர் பேச்சின் ஆழமும் பொருளும் அறிய வல்லராயின் பேசுவோரின் கல்வி சிறக்கும் என்ற பொருளே ஏற்புடையதாகும். இதனையரண் செய்வன இராம. சபாபதி. சி. இ., வ.சுப.மா. முதலானோர் உரைகள்.

72.8. உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று. (718)

உரைப்பகுதி:

அ) மணக் : யாதாயினும் ஒன்றைச் சொல்லுங்கால், அதனைத் தெரிந்தறியும் அறிவுடையார்முன்பு சொல்லுவது, வளர்வதொன்று நின்ற பாத்தியின்கண்ணே நீர் சொரிந்தாற்போலும் எ—று.

ஆ) பரிதி.: அறிவுடையார்முன் சொல்லும் கல்வி பூந்தோட்டப் பாத்திக்குத் தண்ணீர் சொரிதலாம் எ—று.

இ) பரிப். : யாதானும் ஒன்றைச் சொல்லுங்கால் அதனைத் தெரிந்து உணரும் அறிவை உடையார் முன்பு சொல்லுக: அது வளர்வது ஒன்று நின்ற பாத்தியின் கண்ணே நீர் சொரிந்தால் போலும் எ—று.

உணர்வது—அறிவது. மேல் சொல் அறிவார் முன் சொல்லுக என்றார்: அப்பொருள் அறிவார் முன்னர்ச் சொல்லுக என்பதூஉம், அச்சொல்லினாலே தம் கல்வி வளரும் என்பதூஉம் கூறிற்று:..........

ஈ) காளி.: ஒள்ளிய அறிவினை உடையோர் அவை முன்னர் தாமும் தமது ஒள்ளிய அறிவு புலப்படச் சொல்லுதல் எத்தன்மைத்தோ எனின், தானே இனிது வளர்வது ஓர்பயிருக்குக் கட்டிய பாத்தியுள் பருவக்[1] குறை வாராயல் நீர் கோலிச்[2] சொரிந்த அத்தன்மைத்து எ—று.

உ) பரிமேல் : பிறருணர்த்தலின்றிப் பொருள்களைத் தாமே உணரவல்ல அறிவினையுடையாரவைக்கண் கற்றார் ஒன்றனைச் சொல்லுதல், தானே வளர்வதொரு பயிர் நின்ற பாத்திக்கண் நீரினைச் சொரிந்தாற்போலும்.

தானேயும் வளர்தற்குறிய கல்வி மிக வளரும் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் ஒத்தாரவைக்கண் எவ்வழியுஞ் சொல்லுக என்பது கூறப்பட்டது.

ஊ) கவிராசர்; பிறர் சொல்லாமல் கல்வியின் பொருள்களைத் தாமே அறிய வல்லவர்கள் சபையில், கற்றவன் ஒரு வசனத்தைச் சொல்லல், தானே வளருகிற பயிர் நின்ற பாத்தியிலே தண்ணீரை வார்த்தாற் போலாம் (எ—று).

ஏ) பழைய2: 'வளர்வன' பாடம்.

பிறரறிவித்தல் அன்றி சொல்லின் பொருளைத் தாமேயறிய வல்ல அறிவினை யுடையார் சபையின், கற்றவன் ஒன்றைச் சொல்லுதல், வளர்வதொரு பயிர் நின்ற பாத்தியில் நீரினைச் சொரிந்தாற்போலும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மு.ரா.அரு. 'இக்குறள் ஒத்தோரவையத்து ஒருவர்

1. பருவக்குறை - பருவமழை
2. கோலி சொரிந்த - கோலி நீர் சொரிந்த - பாத்திகட்டி நீர்ப் பாய்ச்சிய

உரைப்பதைக் கூறுவது' என்பர். ஏனைய ஒத்தன. 'உணர்வது உடையார்' என்பதற்கு 'உணர்த்துவோர் ஒருவர் வேண்டாது தானேயுணருந் தன்மையர்' என்ற பாடம் சிறந்தது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

உணர்வதுடையார் முன்சொல்லல்;

செல்லிடத் தல்லதொான் றுரைத்தல் செய்கலா
நல்லறி வாளரி னவிந்த நாவெலாம் —கம்ப.,4367

சான்ற வன்னது தவிர்ந்தன னுணர்வுடைத் தம்பி —கம்ப ,8653

729. புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார். (719)

உரைப்பகுதி :

அ) மணக். : புல்லியவரிருந்த அவையின்கண் மறந்தும் சொல்லாதொழிக; நல்லவரிருந்த அவையின்கண் நல்லதனை இசையச் சொல்ல வல்லார் எ-று.

ஆ) பரிதி. : புல்லறிவாளர் கூட்டத்தில் வார்த்தை சொல்ல வல்லான் இட்டுக்கட்டிச் சொல்வான் அல்லன்; பெரியோர் முன்னே நல்லது செலச் சொல்லுமவன் எ-று.

இ) பரிப். : புல்லியார் இருந்த அவையின்கண் மறந்தும் சொல்லாது ஒழிக: நல்லார் இருந்த அவையின்கண் நல்லதனை இசையச் சொல்ல வல்லார் எ-று.

இது வெளியார் முன் வெள்ளையா யிருத்தலால் அவர் முன்பு சொல்லாது இருத்தல் என்றது.

ஈ) காளி. : தாம் புல்லறிவாளர் குழாத்துப்புக்கால்[1] தமது சிறந்த சொல்லினை மறந்தும் சொல்லற்க: யார் எனின், நல்லன

1. குழாத்துப்புக்கால் - கூட்டத்தில் புகுந்தால்

அறியும் நல்லறிவாளர் அவையின்கண் தமது நன்கு அமைந்த சொல் அவர் செவிக்குச் செல்லுமாறு சொல்லவல்ல தூய அமைச்சர் எ-று.

உ) பரிமேல் .: நல்லாரிருந்த அவைக்கண் நல்லபொருள்களை அவர் மனங்கொள்ளச் சொல்லுதற்கு உரியார் அவை அறியாத[2] புல்லர் இருந்த அவைக்கண் அவற்றை மறந்தும் சொல்லா தொழிக

சொல்லின், தம்மை அவை அறியாமை நோக்கி நல்லவையும் பொருளறி யாமையால் புல்லவைதானும் இகழ்தலின், இரண்டு அவைக்கும் ஆகார் என்பது கருதிப் 'பொச்சாந்தும் சொல்லற்க' என்றார்.

ஊ) கவிராசர்: நல்லோர்கள் இருந்த சபையிலே நல்ல பொருள்களை அவர்கள் மனத்துக்கேற்கச் சொல்லுகிறவர்கள், அறிவில்லாத புல்லரிருந்த சபையிலே, நல்ல பொருள்களை மறந்தும் சொல்லாமல் இருக்கவேணும் எ-று.

ஏ) பழைய 2: நல்லார்இருந்த சபையின் நல்லபொருளை அவர் மனங்கொளச் சொல்லுதற்குரியார், அவை அறியாத புல்லர் இருந்த அவைக்கண் அவற்றை மறந்துஞ் சொல்லாது ஒழிக.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதி. 'பொய்சார்ந்தும்' என்று பாடம் கண்டிருப்பர் போலும். இதனை 'இட்டுக் காட்டியும்' என்ற உரை காட்டுகிறது. வெளியார் முன் 'வான்சுதை வண்ணம் கொள்வார்க்கு வாய்வாளாமை நிகழுமன்றி பொய் சார்ந்து பேசவாராது,' என்பதாம்.

பரிப்பெருமாளின். 'வெளியார் முன் வெள்ளையாயிருத்தலால்' என்பது (714) என்ற குறட் கருத்தையுட் கொண்டு, இதற்கு ஏதுவாக உரைக்கப் படுகிறது.

---

2. அவை அறியாத - சபையின் திறமும் நோக்கமும் அறியாத
3. குறள்., 196

வரத. 'அற்பர் அவையிற் பேசுவதால் சொல்லும் நல்லுரைகளும் பயனற்றுப் போகின்றன. நல்லோரும் ஏற்கார்; விலக்குவர்; பேச்சில் குற்றமும் கலந்து விடுகிறது; புலவர் ஏற்கார் இழிப்பார், என்றெல்லாம் விளக்கந்தருவர். 'நல்லுரையைப் புல்லவை ஏற்காதே தவிரஉரை குற்றப்படாது. நல்லோர் விலக்கார் ஆதலால் நல்லுரையை நல்லவையிற் சொல்லுக. அல்லவையில் சொல்லற்க என விலக்கவந்த குறளுக்கு இவை புறம்பானவை எனலாம்.

ஒ) ஒப்புமைப் பகுதி :

புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க :

கைஞ்ஞானங் கொண்டொழுகும் காரறிவாளர்முன்
சொன்ஞானஞ் சோரவிடல் —நாலடி., 311

வென்றிப் பொருட்டால் விலங்கொத்து மெய்கொள்ளார்
கன்றிக் கறுத்தெழுந்து காய்வாரோ — டொன்றி
உரைவித் தகமெழுவார் காண்பவே கையுள்
சுரைவித்துப் போலும்தம் பல். — நாலடி., 315

அருளின் அறம்உரைக்கும் அன்புடையார் வாய்ச்சொல்
பொருளாகக் கொள்வர் புலவர் — பொருளல்லா
ஏழை யதனை இகழ்ந்துரைக்கும் பாற்கூழை
மூழை சுவையுணரா தாங்கு. —நாலடி., 321

வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின் — சிலம்பு.,

கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை ஒருவற்கு — நல்லாய்
இழுக்கத்தின் மிக்க இழிவில்லை இல்லை
ஒழுக்கத்தின் மிக்க உயர்வு. — பழ. நா., 16

புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற் றன்றே
— கம்ப., 413

தாரையுஞ் சங்கமுந் தாளங் கொம்பொடு
......... ......... ......... .........
பேரியு மியம்பில சென்ற பேதைமைப்

பூரியர் குழாத்திடை யறிஞர் போலவே — கம்ப., 2364

அவையின் நிறமறியா ராய்ந்தமர்ந்து சொல்லார்
நவையின்றித் தாமுரையார் நாணார் — சுவையுணரார்
ஆயகலை தெரியா ரஞ்சா ரவரன்றோ
தீய வவையோர் செருக்கு. — வச்சணந்திமாலை.,

நல்லவையுள் நன்கு செலச் சொல்லுவார் :

......... ......... ......... நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார் — குறள்., 728

புகழுந் தருமநெறி நின்றோர்பொய் காமம்
இகழுஞ் சினஞ்செற்ற மில்லோர் — நிகழ்கலைகள்
எல்லா முணர்ந்தோ ரிருந்த விடமன்றோ
நல்லா யவைக்கு நலம். — வச்சணந்திமாலை.,

72.10. அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தம்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல். (720)

உரைப்பகுதி :

அ) மணக். : அங்கணத்தின்கண் உக்க அமுதம்போல இகழப்படுவர்; தம்முடைய இனத்தாரல்லாதார் முன்னர் ஒன்றைச் சொல்லுவாராயின் எ-று.

கல்வியுடையார் புல்லவையுள் சொன்னால் உளதாகும் குற்றம் என்னை என்றார்க்கு இது இகழப்படுவர் என்று கூறிற்று.

ஆ) பரிதி.: அங்கணமாகிய சேற்றுக்குள் அமிர்தத்தை ஊற்றினதற்கு ஒக்கும் புல்லறிவாளர் முன் வித்தை செய்தல் எ-று.

இ) பரிப்.: அங்கணத்தின் உக்க அமிழ்தம் போல இகழப் படுவர்: தம்முடைய இனம் அல்லாதார் முன் சொல்லுவார் ஆயின் எ-று.

கல்வி உடையார் புல்லவையுள் சொன்னால் உளது ஆகும் குற்றம் என்னை என்றார்க்கு இஃது இகழப்படுவர் என்றது.

ஊ) காளி.: பொல்லாத நீர் உகுத்தற்கு உரியதோர் அங்கணத்துள் கொண்டுசென்று உகுத்த பாலும் தேனும் முதலிய அமுதம் எத்தன்மைத்து? மற்று அத்தன்மைத்து. யாது? எனின் தம்மோடு சிறந்த நல்லறிவினரல்லார் கூட்டத்து முன்னர், தமது கல்வி வினோதம்[1] கொண்டு ஒழுகல் எ-று.

உ) பரிமேல் : புல்லார் தம்மினத்தாரல்லார் அவைக்கண் ஒன்றனையும் சொல்லற்க; சொல்லின், அதுதூய்தல்லாத முற்றத்தின்[2] கண் உக்க அமிழ்தினை ஒக்கும்.

கொள் என்னும் முதனிலைத்தொழிற்பெயர் முன்னின்று பின் எதிர்மறை அல்விகுதியோடு கூடி 'மகனெனல்'[3] என்பது போல் நின்றது. சொல்லின் அது என்பன அவாய்நிலையான் வந்தன. பிறரெல்லாம் கொளல் என்பதனைத் தொழிற் பெயராக்கி உரைத்தார்; அவர் அத்தொழில் அமிழ்து என்னும் பொருளுவமையோடு இயையாமை நோக்கிற்றிலர்.[4] சாவா மருந்தாதல் அறிந்து நுகர்வோர் கையினும் படாது அவ்வங்கணத்துக்கும் இயைபின்றிக் கெட்டவாறு தோன்ற. உக்க அமிழ்து என்றார். அச்சொல்[5] பயனில் சொல்லாம் என்பதாயிற்று இவையிரண்டு பாட்டானும் தாழ்ந்தாரவைக்கண் ஒருவழியும் சொல்லற்க என்பது கூறப் பட்டது.

காரி : கொளல் - கொள்ளற்க; கொள் என்னும் முதனிலைத் தொழிற் பெயர் விதிமேல் நின்று பின் எதிர்மறை விகுதி யோடு கூடி, 'மகனெனல்'[6] போல நின்றது, 'அரங்கின்றி வட்டாடியற்றே'[7] என்பது போல வராமையால் என்க. இவ்வுரையாசிரியர் உடம்பாட்டினை விதி என்பர். இதனுள் அற்று என்பது பெயரெடுத்து நின்றதால் ஈண்டு இவ்வாறு உரைத்தார். ''வையத் திறந்தாரை எண்ணிக் கொண்டற்று''[8]

1, கல்வி வினோதம் - படிப்பில் விளையாட்டு, அவை இருபொருள் படப் பேசுதல், சிரிக்கப் பேசுதல் முதலியன
2. முற்றம் - முன்வாசல் 3. குறள் 196
4, தொகுப்பும் குறிப்பும் காண்க
5. அச்சொல் - தாழ்ந்தோர் சபையில் சொலும் சொல், அது தாழ்ந்தவர்க்குப் பயன் தராது விடுதலின் பயனில் சொல்லாயிற்று
6. குறள்., 196 7. குறள்,, 401 8. குறள்., 22

என்பது முதலியவற்றெல்லாம் வினை அடுத்து வருதலின் இவ்வாறு உரையாதொழிந்தார் என்க.

ஊ) கவிராசர் : நல்லவர்கள், தம்மோடொத்த நல்லவர்கள் - அல்லாத புல்லர் சபையிலே ஒன்றைச் சொல்லாமல் இருக்க வேணும்: சொன்னால், அச்சொல் சாக்கடையிலே விழுந்த அமுதத்தோடு ஒக்கும் எ - று.

ஏ) பழைய 2 : ''அங்கணத்துக்க வமிர்தற்றாற் றங்கணத் தல்லார்முற் கோட்டி கொளல்'' பாடம்.

நல்லார் தமக்கின மல்லாதார் சபையின் ஒன்றினைச் சொல்லாதொழிக; சொல்லின் அது, தூயதல்லாத முற்றத்தின் உகுத்த அமிர்தினை ஒக்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

ஆசிரியர் 'கோட்டி கொளல் உக்க அமிழ்து அற்று' என முடித்துக் 'கொளல்' என்னுந் தொழிற்பெயர் அற்று என்னும் குறிப்பு வினைமுற்றைக் கொண்டு முடிய யாத்துள்ளனர். இதனை மணக்குடவர் 'கோட்டிகொள்வார் அமுதம்போல இகழப்படுவர்' எனப் பொருளுக்குப் பொருளே உவமம் புணர்த்துக் கூறினர். கொள்ளுவாராயின் என எச்சமாக்கினும் அவர் என்ற எழுவாயை இத்தொடர் அவாவிநிற்றல் காண்க. ஆகவே மணக்குடவரும் பொருளுக்குப் பொருளே உவமித்தனர் ஆவர்.

பரிதியார் 'கோட்டி கொளல்' என்பதற்கு 'வித்தை செய்தல்' என உரை கண்டனர். 'கோட்டி வெறுங்கூட்டமன்று; கல்வித்திறன் காட்டுதல்' என்று கருதுகிறார். அதனுடன் 'உக்க அமிழ்தற்று' என்பதை 'அமிழ்தம் உக்கதற்று' என மாற்றி, 'கோட்டி கொளலாகிய தொழில் அமிர்தத்தை ஊற்றிய தோடொக்கும்' எனத் தொழிலுக்குத் தொழிலையே உவமமாகக் கருத வைக்கிறார்.

இங்ஙனமாகப் பரிமேலழகர் 'கோட்டி கொள்ளற்க; சொல்லின் அங்கணத்துள் உக்க அமிழ்து அற்று' என்று கூட்டிப் பொருள் காண்பர். கொளல் என்பதைக் 'கொள்ளற்க' என எதிர் மறை வியங்கோளாகக் கொள்வர். பிறர் எல்லாரும் 'கொளல்'

என்பதை எழுவாய் ஏற்ற தொழிற்பெயராகக் கொண்டு 'கொளல் அமிழ்தற்று' எனக் கூட்டித் தொழில் அமிழ்து என 'பொருளுவமையோடு தொழில் இயுயாமை நோக்கிற்றிலர் என மறுத்தார். பரிமேலழகரால் மறுக்கப்பெறுவார் யார் என்பது விளங்கிற்றிலது.

இவர் மறுப்பை மனங்கொண்ட மு.ரா.அரு 'கோட்டி கொளல்' என்பது 'கோட்டி கொண்டு சொல்லுஞ் சொல்' எனப் பொருள் கண்டு, 'அது அமுதம் ஒக்கும்' என இயைத்துப் பொருளொடு பொருள் ஒப்புக் காண்பர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

வரத 'கோட்டி கொளல் - பேசுவது அங்கணத்துக்க அமுதம் போல் பயனற்ற தாகும்" எனக் கூட்டிப் பொருள் காண்பர். இம்முடிபும் கொளல் தொழிற் பெயராகக் கொண்டு கொளல் (அமுதம்) போல்வது என வினை வினையைக் கொண்டு முடிந்த தாகவே விளங்குகிறது. சாமி. சிதம்பரனாரும் கா.சு.வும் பரிமேலழகரை ஒத்துரைப்பர். சி.இ. கோட்டிகொளல் அங்கணத்துள் அமுதம் கொட்டியதை ஒக்கும் எனக் கொலைத் தொழிற் பெயராகக் கொண்டு கொளலோடுகொட்டுதலோடு ஒப்பாக்குவர்.

உரைவேற்றுமை யாசிரியர் பரிமேலழகர் மறுத்ததை ஆசிரிய வசனங்காட்டி மறுத்து தொழிலும் பொருளும் உவமிக்கப் படலாம் என்பர். அவைகளும் ஆய்வுக்குரிய ஆதலை ஆண்டாண்டுக் காட்டுக.

'கோட்டி' என்பது (401) ஈண்டு ஆகுபெயர் 'புல்லா எழுத்திற் பொருளில் வறுங்கோட்டி' (நாலடி 155) என்றதுபோல என ஆட்சியுங் காட்டி அவையின்கண் ஒன்றனைச் சொல்லுதல் என உரை கண்ட பரிமேலழகர் ஈண்டு அவையெனவே கொண்டு மற்றோரை மறுத்தது ஏன் என்று விளங்கவில்லை. கோட்டி -இடத்தை விட்டு ஆகுபெயராக அவையிற் பேசும் பேச்சு அமிழ்தற்று என்றால் இழுக்கில்லையே என எண்ணத்தக்கது. ஆகவே இது பரிமேலழகர் தவறாகாது. இடைச் செருகலாக இருக்கலாம். 'நூலின்றிச் சொல்லாளுதல்' என்று வேற்றுபாட்டான் கூறத் தெரியாதவரல்லர் ஆசிரியர். ஆயினும் அவை மன்று, என்னாது கோட்டி கொளல் என்றது 'புல்லா எழுத்திற்

பொருளில் வறுங் கோட்டி' எனப் பயனின்மை காட்ட இழுத்துக் கூறியது என்க. இங்கும் அங்ஙனமே

ஓ) ஒப்புமைப்பகுதி :

**தம்கணத்தர் அல்லார் முன் கோட்டி கொளல் :**

டன்றிக்கூழ்ப் பத்தரில் தேமா வடித்தற்றால்
நன்றறியா மாந்தர்க் கறத்தா றுரைக்குங்கால்
குன்றின்மேல் கொட்டும் தறிபோல் தலைதகர்ந்து
சென்றிசையா வாகும் செவிக்கு. —நாலடி., 257

கல்வியா னாய கழிநுட்பம் கல்லார்முன்
சொல்லிய நல்லவும் தீயவாம் - எல்லாம்
இவர்வரை நாட தமரைஇல் லார்க்கு
நகரமும் காடுபோன் றாங்கு. —பழ. நா., 15

**அங்கணத்துள் உக்க அமிழ்து :**

புல்லிடை உக்கநல் லமுதம் போல் —கம்ப., 1557

**கோட்டி கொளல் :**

கோட்டி கெடில் —குறள்., 401

## 72. அவையறிதல்

| | அவையறிந்து | இடைதெரிந்து | அவையறியார் | ஒளியார் | நன்றென்ற | ஆற்றின் | கற்றறிந்தார் | உணர்வது | புல்லவையுட் | அங்கணத்துள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 1 | 3 | 10 | 2 | 5 | 4 | 6 | 7 | 8 | 9 |
| பரிதி. | 1 | 5 | 2 | 9 | 4 | 3 | 6 | 7 | 10 | 8 |
| பரிப். | 1 | 5 | 9 | 10 | 3 | 2 | 4 | 6 | 7 | 8 |
| காளி. | 1 | 6 | 2 | 3 | 7 | 8 | 10 | 4 | 9 | 5 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

72 வது அதிகாரம் 'அவையறிதல்' முற்றிற்று.

# 73. அவையஞ்சாமை

அ) மணக்.: அவையஞ்சாமையாவது அவையின்கண் அஞ்சாது சொல்லுதல். அவையறிந்தாலும் அஞ்சாது சொல்லுதல் வேண்டுமாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி .: அவையஞ்சாமையாவது நல்லோர் கூட்டம் கண்டால் அஞ்சாமை எ-று.

இ) பரிப் .: அவை அஞ்சாமையாவது அவையின் கண் அஞ்சாது சொல்லுதல். அவை அறிந்தாலும் அஞ்சாது சொல்ல வேண்டுதலின் அதன்பின் கூறப்பட்டது.

உ) பரிமேல் .: அஃதாவது — சொல்லுதற்குரிய சபையினை அறிந்து, சொல்லுகிற போது பயப்படாமல் இருத்தல்.

ஊ) கவிராசர் : அஃதாவது சொல்லுதற்குரிய சபையினை அறிந்து சொல்லுகிறபோது பயப்படாமல் இருத்தல்.

ஏ) பழைய 2 : அஃதாவது, சபையில் அஞ்சாமற் சொல்லுதல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இராம.: 'சபையில் பயந்து கூச்சப்பட்டு தடுமாறி விடாமற் பேசுதல்' என்பர். 'இது எல்லாருக்கும் வேண்டிய பண்பு' எனவுங் கூறுவர்.

குழந்தை: அவையறிதலின் பின்னும் குறிப்பறிதலின் முன்னுமாக அமைப்பர். 'அவையைக்கண்டு அஞ்சாமை' என்பர்.

வரத. : கற்றோர் சபையைக்கண்டு பயப்படாது பேசுவது. அவையறிந்த அமைச்சன் அவையில் அஞ்சாது பேசவேண்டும்' என்பர் மேலும் இது அமைச்சர்க்கும் ஏனோர்க்கும் வேண்டிய பண்பு என்பதனை விளக்குவது' எனவும் கூறுவர்.

கா.சு. 'பேசுதற்குரிய கழகத்தைத் தெரிந்து பேசத் தொடங்கியபின் அதற்கு நடுங்காமை என்பர்.

அமைச்சருக்குச் சிறப்பாகவும், கற்ற ஏனோர் அனைவருக்கும் பொதுவாகவும் இவ்வஞ்சாமை வேண்டும் என்ற உரைகள் ஏற்புடையன.

*73.1. வகைஅறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்*
*தொகைஅறிந்த தூய்மை யவர்.* (721)

**உரைப்பகுதி :**

அ) மணக். : தப்பினால் வருங்குற்ற வகையையறிந்து, கற்றுவல்ல அவையின்கண் அஞ்சுதலால் சோர்வுபடச் சொல்லார் சொற்களின் தொகுதியையறிந்த தூய்மையுடையவர் எ-று.

இது மேற்கூறியவாற்றால் கற்றவர் தப்பச் சொல்லா ரென்று அக்கல்வியால் வரும் பயன் கூறிற்று.

ஆ) பரிதி . : சொல்லின் திடப்பாடு[1] அறிந்து தான் கற்ற கல்விக்குச் சோர்வு வாராமல் சொல்வான் தூயனாம் எ-று.

இ) பரிப் . : தப்பினால் வரும் குற்றத்தை வகை அறிந்து கற்று வல்ல அவையின்கண் அச்சத்தினால் சோர்வுபடச் சொல்லார்: சொற்களின் தொகுதியை அறிந்த தூய்மையை உடையவர் எ-று.

மேல் கூறிய வாற்றால் கற்றவர்கள் தப்பச் சொல்லார் என்று அக்கல்வியால் பயன் கூறிற்று.

ஈ) காளி . : இக்குற்றம் தங்குதல் இன்றி அவை முன்னர்ச் சென்ற இடத்துத் தாம் கற்று வல்லவை சொல்லும் கூறுபாடு அறிவதும் செய்து மற்றும் அவைக்கு உரித்து அல்லதனை மறந்தும் அவர்வயின் சோரவிடுவது[2] இலர். யார்? எனின் கல்வி

1. திடப்பாடு - வன்மை 2. சோரவிடுவது - மறந்தும்விடுவது

மிகுதியால் சொல்லின் தொகை அனைத்தும் துரிசு அற[3] உணர்ந்த தூய்மையினை உடையோர் எ-று.

உ) பரிமேல் .: கற்றுவல்ல அவை, அல்லா அவை,[4] என்னும் அவைவகையினை அறிந்து வல்ல அவைக்கண் ஒன்று சொல்லுங் கால் அச்சத்தான் வழுப்படச்[5]சொல்லார், சொல்லின் தொகை அறிந்த தூய்மையினை உடையார், (எ-று).

இருந்தாரது வன்மை அவைமேல் ஏற்றப்பட்டது.[6] வல்ல வை என்பதற்குத் தாம் கற்றுவல்ல நூற்பொருள்களை என்று உரைப்பாரும் உளர்.[7] அச்சத்தான் என்பது அதிகாரத்தான் வந்தது. சொல்லின் தொகை, தூய்மை என்பனவற்றிற்கு மேல்[8] உரைத்தாங்கு உரைக்க.

ஊ) கவிரசர் : நூல்களைக் கற்று வல்லவராயினோர், சபை யிலே ஒன்றைச் சொல்லுகிறபோது, வழுவுதலில்லாமல் சொல்லு வர் எ-று.

ஏ) பழைய 2: கற்றுவல்ல பொருளின் வகை அறிந்து வல்லவரிருந்த சபையில் அச்சத்தால் தாமொன்று சொல்லும் போது வழுச்சொற்களை நாவினால் மறந்துஞ் சொல்லார் சொல் லின் தொகையெல்லாம் அறிந்த தூய்மையினையுடையோர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் ;

'வகையறிந்து'

'தப்பினால் வருங்குற்றவகைகளையறிந்து' மணக். ; 'சொல்லின திடப்பாடு அறிந்து' பரிதி ; ''சொல்லுங் கூறுபாடு

---

3. துரிசுஅற — குற்றம்அற 4. அல்லா அவை — கல்லாதார் நிரம்பிய அவை
5. வழுப்பட - குற்றம் பொருந்த
6. அவையில் இருப்பவரது வல்லமையை அவையின்மேல் ஏற்றி 'வல்லவை' என்று கூறியது இடத்து நிகழ்பொருளின் தன்மையை இடத்தின் மேலாக்கிய உபசார வழக்கு
7. வல்லஅவை என்பது வல்லவை என அகரம் தொக்குநின்ற குறிப்புப் பெயரெச்சத் தொடராகக் கொள்ளாது அஃறிணைப் பன்மைப்பெயராக்கிக் கற்றுவல்ல நூற்பொருளை என்று உரை கூறுவர் காளிங்கர்
8. குறள் , 711 காண்க

அறிந்து' காளி.; 'அவைகளில் நல்ல அவை புல்லவை யென்ற அவைவகையினையறிந்து' பரிமேல்.; கவிராசர் உரை பொழிப்பாமேயன்றிச் சொற்பொருளாக அமைந்திலது எனலாம். 'கற்றுவல்ல பொருளின் வகையினையறிதல் அவையுறிந்தலிற் போந்த தொன்றாம் ஆதலான் 'சொல்லுங் கூறு அறிந்து' எனல் இயைபுடையதாம்

'வல்லவை'

'கற்று வல்லஅவை' மணக்.; 'கற்று வல்லவை' காளி.; 'கற்றுவல்ல் அவை' பரிமேலழகர் ; 'வல்லவரிருந்த அவை' பழைய 2; 'அறிஞரவை' கா சு ; 'வல்லார் கூடிய அவை' வரத.; 'கற்றுவல்லார் இருந்த அவையில்' குழந்தை; 'சபைக்கு ஏற்றவைகளை' சாமி சிதம் ; 'தாங்கற்று வல்லவைகளை; சி.இ ; 'நினைத்ததைப் புலப்படுத்தும் சொற்கள்' மு.கோ.; 'வலியோர்கூடிய சபை' இராம ; 'வல்லார்சபை' மு.ரா. அரு.; 'கற்றோர்கூடிய வல்லவை' தேவநேயர்.

இவற்றுள் 'வகையறிந்து-சொற்கூறு அறிந்து' என்பதற்கியைய, 'தாம்கற்று வல்லவைகளை' என்ற பொருள் இயைந்ததாம்.

சொல்லின் தொகையறிந்த தூய்மையவர்''

'சொல்லின் தொகுதியையறிந்த தூய்மையுடையார்' மணக்.; 'கல்வி மிகுதியால் சொல்லின் தொகையனைத்தும் துரிசற உணர்ந்த தூய்மையினை உடையார்' காளிங்கர். செஞ்சொல் இலக்கணைச்சொல், குறிப்புச் சொல் என்ற மூவகைத் தொகையையும் அறிந்த தூயோர்' பரிமேலழகர்.

இவற்றுள் பரிமேலழகர் கூறும் சொற்றொகை இலக்கணத்துட்பட்டதும் பேச்சுக்கு இன்றியமையாததும் ஆகலின் ஏற்புடையது வ.சுப.மா. 'சொற்பொழிவையறிந்தவர் பாகுபாடு தெரிந்து இன்னாதவற்றைத் தவறியும் சொல்லார்' என்பர். ஒருங்கிணைத்து உற்றுநோக்கின், 'பல்லாயிரம் சொற்றொகுதியையுணர்ந்த தூய எண்ணமுடையார் தனக்கு எதில் மிக்கவன் மையுண்டோ அப்பொருளைச் சொற்சோர்வின்றிச் சொல்லுக' என்ற உரையும் இணைத்து எண்ணக் கூடுமாயிற் கொள்க

73.2. கற்றாருட் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார். (722)

**உரைப்பகுதி :**

அ) **மணக். :** கற்றாரெல்லாரினும் கற்றாரென்று சொல்லப் படுவார்; தாம் கற்றதனைக் கற்றார் முன்பு அவர்க்கு ஏற்கச் சொல்லவல்லார் எ-று.

ஆ) **பரிதி. :** கற்றோர் கூடின கூட்டத்திலே தாம் கற்ற கல்வியைச் செலுத்துதல், அமிர்தமானதை நல்லோர்முன்னே வைத்ததற்கு ஒக்கும்; கல்லார்முன் சொல்லுதல் மரப்பாவை முன் வைத்ததற்கு ஒக்கும் எ-று.

இ) **பரிப். :** கற்றார் எல்லாரினும் கற்றார் என்று சொல்லப் படுவார் தாம் கற்றதனைக் கற்றார் முன்பே அவர்க்கு ஏற்கச் சொல்ல வல்லார் எ-று.

இது, கற்றார் என்பதூஉம் அவை அஞ்சாதவரையே என்று கூறப்பட்டது.

ஈ) **காளி. :** உலகத்துக் கற்றவர் பலருள்ளும் இவர் பெரிதும் கற்றார் என்று அக்கற்றவர் தம்மிலே முன்எடுத்து உரைக்கப் படுவார் : யார் எனின் கற்றோர் முன்னர்த் தாம் கற்றனவற்றை ஏற்கச் சொல்ல வல்லோர் எ-று.

உ) **பரிமேல். :** கற்றாரெல்லாரினும் இவர் நன்கு கற்றார் என்று உலகத்தாரால் சொல்லப்படுவார். கற்றாரவைக்கண் அஞ்சாதே தான் கற்றவற்றை அவர் மனங்கொள்ளும் வகை சொல்ல வல்லார், (எ-று).

உலகமறிவது அவரையே[1]யாகலின், அதனால் புகழப்படு வாரும் அவர் என்பதாம்.

ஊ) **கவிராசர் :** கற்றவர் எல்லாரினும் இவர் நன்றாய் கற்றவர் என்று உலகத்தாரால் சொல்லப்படுவார் : கற்றவர்

---

1. அவரையே - தாம் கற்றவற்றைக் கற்றவர் மனங்கொளும்படிச் சொல்ல வல்லவரை

இருக்கிற சபையிலே தாம் கற்ற நூற்பொருள்களை அவர்கள் மனத்திற்கு ஏற்கச் சொல்ல வல்லவர் (எ-று).

ஏ) பழைய 2: கற்றார் எல்லாரினும் இவர் மிகவும் நன்கு கற்றார் என்று உலகத்தால் சொல்லப்படுவார். கற்றவரிருந்த சபையின் அஞ்சாது, தாம் கற்றவற்றை அவர் கொள்ளும் வகை சொல்ல வல்லார்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'செலச் சொல்லுதலுக்கு' முன்னர் அனைவரும் 'ஏற்றுக்கொள்ளச்சொல்லுதல்' என உரை கண்டனர். கற்றார் தந்நுண்மாண் நுழைபுலத்தால் எதனையும் எடைபோட்டு நன் கறிந்து குறையுங் காண்பராதலின் 'ஏற்றுக்கொள்ளச் சொல்லு தல்' என்றனர். கற்றார்க்குக் 'குற்றமே காணுவார்' என்பதும் ஒருபெயராகக் கந்தபுராண அவையடக்கம் கூறும்.

வரத. 'கற்றவர்களும் தாம் அறிந்ததையே கேட்டுச் சுவைக்கும் வண்ணம் சொல்லுதல் என்பர்.

புலவர் அவையில் என்றதால் பல புலவர்க்கும் பல நோக்கிற்கண்டு மதிப்பிடுவர் ஆகையால் அவையுட் செலச் சொல்வார் கற்றாரிற் கற்றார் ஆவர் என்பது.

73. 3. *பகையகத்துச் சாவார் எளியர் அரியர்*
*அவையகத் தஞ்சா தவர்.* (723)

உரைப்பகுதி :

அ) மணக்.: பகையின்கண்[1] அஞ்சாது நின்று சாவார் பெறு தற்கு எளியர்; அவையின்கண் அஞ்சாது சொல்லவல்லவர் பெறுதற்கு அரியர் எ-று.

இஃது அவையஞ்சாமை அரிது என்றது.

ஆ) பரிதி.: பகையகத்துச் சாதல் எளிது. ஆஸ்தானத்திலே அஞ்சாமல் கல்வி செலச் சொல்வது அரிது எ-று.

1. பகையின்கண் — பகைவரிடம். இது பகை என்னும் பண்புப்பெயர் பண்பாகுபெய ராய் உடையார் மேல் நின்றது

இ) பரிப்.: பகையின்கண் அஞ்சாது நின்று சாவார் பெறுதற்கு எளியர்; அவையின்கண் அஞ்சாது சொல்ல வல்லார் பெறுதற்கு அரியர் எ-று.

இஃது அவை அஞ்சாமை அரிது என்பது.

ஈ) காளி.: பகை நடுவுள் சென்றுபுக்க இடத்துத் தமது உயிர் ஓம்பாது மானம் ஓம்பிச் சாகத்துணிவார் உலகத்துள் எளியர் ஆகவும் கூடும்; அவையின் நடுவுள் சென்று புக்க இடத்துச் சிறிதும் அஞ்சாது தெளிந்து அறிவுறுத்தும் அமைவுடையோர் பெரிதும் அரியர்; எனவே ஆண்மைக்கு அவரும் அறிவுக்கு இவரும் சாலச் சிறந்தார் எ-று.

உ) பரிமேல்: பகையிடை அஞ்சாது புக்குச் சாவவல்லார் உலகத்துப் பலர்; அவையிடை அஞ்சாது புக்குச் சொல்லவல்லார் சிலர்.

அஞ்சாமை[2] சாவார் என்பதனோடுங்கூட்டி, அதனால் சொல்லவல்லார் என்பது வருவித்துரைக்கப்பட்டது இவை மூன்று பாட்டானும் அவை அஞ்சாரது சிறப்புக் கூறப்பட்டது.

காரி.: அஞ்சாது சாவார் என்று உரைத்ததனானும், அஞ்சாது சொல்லவல்லார் என்று உரைத்ததனானும் 'அஞ்சாமை சாவார்' என்பதனோடுங் கூட்டி, அதனால் சொல்வார் என்பது வருவிக்கப்பட்டது என்றார். அதனால் ஒன்று சுட்டியது சாவார் என்றதனை.

ஊ) கவிராசர்: சண்டையிலே பயப்படாமல் போய் விழுந்து சாகவல்லவர் உலகத்திலே மெத்தவுண்டு; சபையிலே போய்ப் பயப்படாமல் சொல்லவல்லவர் கொஞ்சம் எ-று.

எ) பழைய 2: பகைவரிடை அஞ்சாது புக்குச் சாவது மிகவும் எளிது, (இவர்) உலகத்துப் பலர்; சபையிலஞ்சாது புக்குச் செல்வது மிகவும் அரிது; அப்படிச் சொல்லவல்லவர் சிலர்.

2. அஞ்சாமை — அஞ்சாமல், மை என்பது வினையெச்ச விகுதி

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

காளிங்கர் 'எளியர்—எளியராகவுங் கூடும்; அவையகத்து அஞ்சாதவர் பெரிதும் அரியர்' என்று ஏற்றத்தாழ்வு தோன்ற எழுதியவர். கருத்துரையில் ஆண்மைக்கு அவரும், அறிவுக்கு இவரும் சாலச்சிறந்தார் என ஒப்புத் தோன்ற உரைத்தனர். வள்ளுவனார் போரில் உயிர்துறப்பார் எளியர், மேடையிற் பேசி வெல்வார் அரியர் எனக் கூறியதிலிருந்தே ஏற்றத்தாழ்வு தோன்றுதலின் ஒப்பாக்கல் ஒவ்வாது என்பதாம்.

'எளியர் — பலர்', 'அரியர் — சிலர்' என உரைப்பவர்கள் பரிமேல்., கவிராசர், கா.சு., வரத., குழந்தை, சாமி சிதம., இராம., முதலானோர். இங்ஙனம் எண்டொகையடி யாக எண்ணாமல் அருமையும் எளிமையுமாகிய பண்பு நோக்கினவாக உரைப்பதே ஏற்புடைத்து. வரத. கூறும் நயங்கள் சிறந்தன.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முதுமொழி :

ஆனை குதிரைகா லாட்படைக ளால்மிகுந்த
சேனைவளைந் தாலும் தினகரா—ஏனைப். — தினகர. 76

73.4. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல். (724)

உரைப்பகுதி :

அ) மணக்.: தாம் கற்றதனைக் கற்றவர்முன்பு இசையச் சொல்லி, தாம் கற்றதினும் மிகக்கற்றார்மாட்டு அவர் மிகுதி யாகக் கூறும் பொருளைக் கேட்டுக்கொள்ளுதல் அவையஞ் சாமையாவது எ—று.

இ) பரிதி.: கற்றார் மனம்மகிழும்படி தாம் கற்ற கல்வியைச் செலுத்தி, தம்மின் கல்வி மிக்காருள் மிகுந்த கல்வியைக் கண்டால் அவரிடத்திலே கற்பது கல்வி எ—று.

இ) பரிப்.: தாம் கற்றதனைக் கற்றவர்கண் முன்பே இசையச் சொல்லித் தாம் கற்றதனினும் மிகக் கற்றார்மாட்டு அவர் மிகுதியாகக் கற்ற பொருளைக் கேட்டுக் கொள்ளுதல் அவை அஞ்சாமை ஆவது எ—று.

கேட்டல் காணாமையால் வருதலின் அஞ்சாமை ஆயிற்று. மேல்[1] அரிது என்று கூறிய அவை அஞ்சாமை எத்தன்மைத்து என்றாற்கு இத்தன்மைத்து என்று கூறப்பட்டது.

ஈ) காளி.: இவ்வாறு அறிவு பெரிது உடைய அமைச்சரா னோர் யாது செயற்பாலது எனின், பலவற்றையும் கற்றுவல்ல சான்றோர் கூட்டத்து அவைமுன்னர்த் தாம் கற்றனவற்றை அவர் செவிக்குச் செல்லுமாறு சொல்லுதலும் செய்து மற்று அதுவேயும் அன்றி அவ்விடத்துத்தாம் கற்றனவற்றின் மிக்கார் உளர் எனின் மிக்கனவற்றை இகழாது பெரிதும் குறிக்கொள்க எ-று.

உ) பரிமேல்.: பலநூல்களையும் கற்றாரவைக்கண் தான் கற்றவற்றை அவர்மனம் கொள்ளுமாற்றான் சொல்லி, அவற்றின்[2] மிக்கபொருள்களை அம்மிகக் கற்றாரிடத்து அறிந்து கொள்க, (எ-று).

எல்லாம் ஒருவர்க்குக் கற்றல் கூடாமையின் வேறு வேறாய கல்வியுடையார் பலரிருந்த அவைக்கண் தாம் கற்ற வற்றை அவர்க்கு ஏற்பச் சொல்லுக; சொல்லவே அவரும்[3] அவையெல்லாம்[4] சொல்லுவராகலான், ஏனைக்கற்கப் பெறாதன கேட்டறியலாம் என்பதாயிற்று. இதனால் அதனது ஒரு சார் பயன் கூறப்பட்டது.

காரி.: அவற்றின் எனச் சுட்டியுரைத்தது தாம் கற்ற என்பதனை.

ஊ) கவிராசர்.: பலநூல்களையும் கற்றவர்களுடைய சபை யிலே தாம் கற்ற கல்வியை அவர்கள் மனசுகொளச் சொல்லி,

1. மேல் - 723 குறளில் காண்க
2. அவற்றின் - காரி. காண்க
3. அவரும் - பலகற்றவரும்
4. அவையெல்லாம் - தாம் கற்ற பல நூற் கருத்துக்களையெல்லாம்

அதிலும் மிகுந்த கல்வியைப் பெரியவர்களிடத்திலே அறிந்து கொள்க எ—று.

ஏ) பழைய 2 : பலநூல்களையும் கற்றார் அவைக்கண் தாம் கற்றவற்றை அவர் மனங் கொள்ளுமாறு சொல்லி அவற்றின் மிக்க பொருள்களை அந்த மிகக் கற்றாரிடத்து அறிந்து கொள்க.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பரிதியுரை கல்விச்சிறப்பைக் கூறுவது போலுள்ளது; ஏனோர் உரைகள் 'கொடுத்துக் கொள்முதல் செய்து அறிவைப் பெருக்கிக் கொள்க' என்கின்றன. 'மிக்ககொளல்' என்பதற்குப் பரிமேலழகர் தரும் விளக்கம் சிறந்தது. 'தாங்கற்ற மிக்கார்—ஆசிரியர்' என்பர் மு.கோ.; வரத. 'தான் கற்றவைகளைத் தன்னைவிடக் கற்றவர்களும் தன்னை மதிக்குமாறு சொல்லிச் சிறப்புப்பெறல் வேண்டும்' எனவும் கூறுவர். இது கருத்தாகலாம். சொற்பொருளாகாது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும்:

வல்லவர் அவையுள் கற்றதஞ் சாது வகுத்துரைத் தவருள் மிக்கான்
நல்லவை கேட்பார் கற்றவர் தம்முள் நன்குற மதித்திடப் படு வார். —விநா. அரசி., 119

ஓ) மேற்கோள்பகுதி:

இளம்.: அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கம்: அறுவகையில் ஓதுவித்தலுக்கு மேற்கோள். —தொல்.பொருள்.,74

73.5. *ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா*
*மாற்றம் கொடுத்தற் பொருட்டு.* (725)

உரைப்பகுதி ;

அ) மணக்.: அவையஞ்சாது மறுமாற்றம்[1] சொல்லுவதற்காக,

1. மறுமாற்றம் - மறுமொழி

நெறியானே[2] அளவு கூறு நூல்களை[3] அறிந்து கற்க எ - று.

நூல்கற்றலாவது மெய்யாராச்சியாகிய நூலைக்கற்றலும்[4] வேதமும் கற்றலும்[5], உழவும் வாணிகமும் கற்றலும், படை வழங்கல்[6] மநுநீதி முதலியன கற்றலும் என நான்கு வகைப் படும்.

ஆ) பரிதி.: ஒரு காரியத்தைக் கற்கும்போது பொருள் தெரிந்து கற்க; ஆஸ்தானத்திலே உத்தாரங் கொடுத்தல் பொருட்டாக எ—று.

இ) பரிப்.: அவை அஞ்சாது மறுமாற்றம் சொல்லுதற்காக நெறியானே அளவு கூறு நூல்களை அறிந்து கற்க எ-று.

அளவு-பிரமாணம். அது கூறும் நூல்கள் ஆவன : மீமாம்சை முதலான நூல்கள். கல்வியாவது மெய் ஆராய்ச்சியான நூல் களைக் கற்றலும் வேதவேதாந்தம் கற்றலும், உழவும், வாணி கமும் கற்றலும், படை வழங்கல் ஆகிய தண்ட நீதி கற்றலும் என நால் வகைப்படும் என்பது கௌடல்ய மதம். அந்த நான்கினும் பின் கூறிய இரண்டும் சொல்லாண்மை யன்மையானும், வேதம் கேட்டல் சொல்லாதே அமைதலானும், அவையிற்றைக் கூறாது தர்க்கம்[8] கற்றாற்கு அல்லது மறு மாற்றம் சொல்லுதல் அரிது ஆதலின் அதனைக் கற்க வேண்டும் என்று கூறப்பட்டது.

ஈ) காளி.: அரசர்க்கு அமைச்சராய் உள்ளார் முன்னமே தாம் கற்குமிடத்துக் கல்வி நெறியின் அளவு அறிந்து கற்பார் ஆக என்னை எனின், பின்பு தாம் சென்று எய்திய அவை

---

2. நெறியான் - முறைமையான்
3. அளவுகூறு நூல்கள் — அளவை நூல்கள்
4. மெய்யாராய்ச்சியாகிய நூல் — உண்மை உணர்தற்கு ஏற்ற நூல் என்றது தத்துவ நூல்கள்
5. வேதம் — இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்பன
6. படை வழங்கல் - வில், வேல், வாள் முதலான படைகளைப் பயன்படுத்து விதம்
7. உத்தாரம் - மறுமொழி
8. தர்க்கம் - உண்மைப்பொருளை உசாவியறியத் துணைசெய்யும் நூல்

யினை அஞ்சாது மற்று அவர் கேட்டவற்றிற்கு மாற்றம் வண்மையின் வழங்குதல் பொருட்டு எ-று.

இதனால் என்சொல்லியவாறோ எனின், அரசு நீதியும் அமைச்ச நீதியும் அறநெறிக்கு உரியவும், புரவியும் களிறும் பொருந்துவ குறிப்பவும் பிறவும் ஆகிய வரம்புக்கு ஏற்பன கற்க என்று இங்குச் சொல்லிய அன்றிப் புல்லிய[9] கற்பின் அவை அரசர்க்கும் அவைக்கும் அடாதன எ-று.

இனி மற்று இந்நீதி அரசரும் அமைச்சரும் கூடி வாழினும் தாமே பரிந்து கொள்ளும்[10] நாடு அன்றி இயல்பினால் வாழும் நாடு இவ்வாறே வேண்டும் என்பதனால் மற்று இதன் பின்னர் அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) பரிமேல்.: சொல்லிலக்கண நெறியானே அளவையியலை அமைச்சர் உட்பட்டுக் கற்க, வேற்று வேந்தரவையிடை அஞ்சாது அவர் சொல்லிய சொற்கு உத்தரம் சொல்லுதற் பொருட்டு.

அளவைநூல்[11], சொல்நூல்[12] கற்றே கற்கவேண்டுதலின், அதற்கு[13] அஃது ஆறெனப்பட்டது. அளக்கும் கருவியை 'அளவு என்றார்[14] ஆகு பெயரான். அவர்[15] சொல்லை வெல்வதொரு சொல்சொல்லலாவது நியாயத்து வாத செற்ப விதண்டைகளும்

9. புல்லிய - இழிந்த நூல்கள்

10. பரிந்து கொள்ளும் - விரும்பி ஏற்றுக்கொள்ளும்

11. அளவை நூல் - தர்க்க நூல்

12. சொல்நூல் - சொல்லிலக்கணம்

13. அதற்கு — தர்க்க நூலுக்கு

14. அளக்கப்படும் பொருளை 'அளவு' என்றது கருவியின் பெயர் காரியத்திற்காகிய கருவியாகுபெயர்

15. அவர் — வேற்றுவேந்தர்

சல சாதிகளும்[16] முதலிய[17] கற்றார்க்கேயாகலின், அவற்றைப்[18] பிழையாமல் கற்க என்பதாம். இதனால் அதன்[19] காரணம் கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : சொல்லிலக்கணநெறியான் அளவை நூல்களைக் கற்க; அப்படிக் கற்றவன், வேற்றுவேந்தரிடம் போனால், அவர்கள் சபையிலே அவர்கள் சொன்ன சொற்களுக்குத் தான் உத்தரம் சொல்லுதற்பொருட்டு எ-று.

ஏ) பழைய 2 : சொல்லிலக்கண வழியே அளவை நூல்களையெல்லாம் அமைச்சர் உட்கொண்டு கற்க, வேற்று வேந்தர் சபையிடை அஞ்சாது அவர் சொல்லிய சொற்குத் தாஞ் சொல்லுதற்பொருட்டு.

---

16. வாதம் ; உண்மைப்பொருளையறியும் விருப்பமுடையோர் இருவரில் ஒருவருக்கு ஒருவர் உண்டாகும் வினாவும் விடையும்

சொற்பம் : ஒருவரை ஒருவர் வெல்லவேண்டும் என்னும் விருப்புடையோர் இருவர் கொள்கைகளையும் தாபித்தல். ஜல்பம் என வழங்கும் வடநூல்

விதண்டை : வெல்லும் வேட்கையுடையோர் தம் கொள்கையை நிலைநாட்டுதல்

சலம் : ஒரு பொருள் கருதிச் சொல்லியதற்கு வேறுபொருள் கற்பித்துக் கொண்டு பழித்தல்

சாதி : போலி உத்தரம்

அது பொதுவியல்பு, வேற்றியல்பு, உயர்ச்சி, தாழ்ச்சி, புகழ்ந்துரை, பழித்துரை, விகற்பம், சாத்தியம், அடைவு, அடையாமை, பிரசங்கம், வேறு திருஷ்டாந்தம், உற்பத்தியின்மை, ஐயம், பிரகரணம், ஏதுவின்மை, அருத்தாபத்தி, விசேடமின்மை, உபலப்தி, அநுபலப்தி காரணம், நித்தியம், அநித்யம், காரியம் இவற்றின் சமமென்க

17. 'முதலிய' என்றதனால் தோல்வித்தானமும் கொள்ளப்படும். அஃதாவது வாதம் பேசுவோர் தோல்யுறுதற்கு ஏது : அது—மேற்கோளழிவு, வேறுமேற்கோள், மேற்கோள்மாறுபாடு,மேற்கோள்விடுதல், வேற்றேது, வேற்றுப்பொருள், பொருளின்மை பொருளுணரப்படாமை, பொருட்போலி, காலம்பெறாமை, குன்றக்கூறல், மிகைபடக்கூறல், கூறியது கூறல், பிற்கூற்றின்மை, அறியாமை, விடைதோன்றாமை, வேறுகாரணங் கற்பித்து வாதமொழிதல், தன்கோட்குற்றம கற்றாது பிறன்கோள் குற்றங் கூறல், பிறன் தோல்வியை யுணர்த்தாமை; உடன்படற்பாலதல்லதனை உடன்படுதல், சித்தாந்தப் போலி, ஏதுப்போலி என்பனவாம்

13, அவற்றை - வாதசற்பம் முதலியவற்றை

19, அதன் காரணம் - அவையஞ்சாமையின் காரணம்

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்., பரிப்., இருவரும் 'மறுமாற்றந் தருதற்காக படிக்க' என்றதால் 'மறுமொழிசொலற்கு இன்றியமையாத உண்மையான ஆய்வுக்கு வேண்டிய தருக்க நூலைக் கற்றல் வேண்டும்' என்ற உரை சிறந்தது. 'தர்க்கம்-உண்மை காணுதற் பொருட்டும் காட்டுதற் பொருட்டும் சொற்போர் புரிதலாம் ஆதலின் அஞ்சாமை இன்றியமையாததாதல்' தெளிக.

பரிதி. சொற்பொருளாக இல்லாததால் கருத்துரையாகக் கொள்ளலாம். காளிங்கர் 'மூன்னமே வழிதெரிந்து கற்க வேண்டும். ஏனெனின் பின்பு அரசவையில் அஞ்சாது மறுமொழி தருதற்காக' என்பர். இவ்வுரை அமைச்சரையும் அவையையுமே நோக்கியுள்ளது.

பரிமேலழகர் உரை 'தருக்க நூற்படிப்பார்க்கு, அதற்கு முன் இலக்கண அறிவு வேண்டும்' என்பதை வற்புறுத்த 'ஆற்றின்—சொல்லிலக்கண நெறியானே' என்பர். அவர் தரும் விளக்கமும் அவருரையும் அதிகார இயைபுடைய ; ஆதலால் மிக ஏற்புடையன.

தேவநேயர் 'ஆற்றின் அளவறிந்து—முறைப்படி அளவை நூலறிந்து' என்பார். வாதவகைகளின் தமிழாக்கமும் தருவர்.

இராம. 'ஒழுங்குமுறைக்கு ஒத்த அளவு கல்வியை அழுத்தமாகப் படிக்க' என்பர். இது ஏரணம் முதலான தமிழ் வாத நூல் இன்று இல்லாமையால் எழுதியதாம். குழந்தை 'முறையாகக் கற்க வேண்டிய நூல்களைப் படிக்க' எனப் பொது வகையிற் கூறுவர்; வரத. 'ஆற்றின் நூல் என்பதற்கே தருக்க நூல்' என்பர். இயையுமேல் ஏற்க.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

ஆற்றின் அளவறிந்து கல்லா தவையஞ்சும்
கூற்றினர்பால் ஏகாதே கூடாதே ........ — தமிழ்., 189

ஒருபுடை ;

நூல்பல கல். —ஆத்தி., 71

73.6. வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு
நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு. (726)

உரைபகுதி :

அ) மணக். : வன்கண்ணரல்லாதவர்க்கு வாளினால் பயன் என்னை? அதுபோல நுண்ணிய அவையின்கண் அஞ்சுபவர்க்கு நூலினால் பயன் என்னை? எ-று.

இது பிறர்க்குப் பயன் படாமையேயன்றி, தமக்கும் பயன் படாது என்றது.

ஆ) பரிதி. : தறுகணாண்மை யில்லாதார்க்கு வாளைக் கொண்டு காரியமில்லை, ஆஸ்தானத்தில் அஞ்சுவார்க்குக்கல்வி வேண்டாம் எ-று.

இ) பரிப். ; வாளினால் பயன் என்னை வன்கண்ணர் அல்லாதார்க்கு? அதுபோல நூலினால் பயன் என்னை நுண்ணிய அவையின்கண் அஞ்சுபவர்க்கு? எ-று.

இது பிறர்க்குப் பயன் படாமை அன்றித் தமக்கும் பயன் படாது என்றது.

ஈ) காளி. : பலநாளும் தாம் வாளொடு பயின்று போந்தன ரேனும்[1] என்ன பயன்? பகை வந்து உற்ற இடத்து அவ்வாளி னால் பணிகொள்ளும் தறுகண்மை உடையர் அல்லாதார்க்கு; மற்று அப்படியே சிலர் பலநாளும் நூலொடுபயின்று போந்தா ரேனும் என்ன பயன்? அந்நூலைத் தாம் எதிர்விடுத்து[2] இன் புறாது கல்விக்கு உரிய சான்றோர் குழாத்தை அஞ்சுமவர்க்கு எ-று.

உ) பரிமேல். : வன்கண்ணர் அல்லார்க்கு வாளொடு என்ன இயைபு உண்டு? அதுபோல நுண்ணியாரது அவையை அஞ்சு வார்க்கு நூலொடு என்ன இயைவு உண்டு?

---

1. பயின்றி போந்தவரேனும் - பயிற்சி பெற்றவர்களாயினும்
2, எதிர்விடுத்து - எதிராகச்சொல்லி

இருந்தாரது நுண்மை அவைமேல் ஏற்றப்பட்டது[3] நூற்கு உரியர் அல்லர் என்பதாம்[4].

காரி.: நுண்ணவை இருந்தாரது நுண்மை அவை மேல் ஏற்றப்பட்டது. நல்லவை, புல்லவை என்பவும் ஆம். அல்லாக்கால் 'நல்லாரவை யஞ்சுவார்'[5] என்பதுபோல வரும்.

ஊ) கவிராசர்: மனதிட[6]மில்லாதவர்களுக்கு வாளுடனே என்ன காரியமுண்டு? அதுபோல, நுண்ணியாரது சபைக்குப் பயப்படுகிறவர்களுக்குச் சாந்திரங்களுடனே யென்ன பலனுண்டாம் எ-று.

ஏ) பழைய 2: வன்கண்மையாகிய சவுரியம் இல்லாதவனுக்கு வாள் என்ன செய்ய இருந்தது? அதுபோல, நுண்ணிய அறிவுடையாரிருந்த சபையில் அஞ்சுவர்க்குக் கற்ற நூல் என்ன செய்ய இருந்தது?

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

வரத.: 'விளக்கத்தில் வன்கண்ணர்-ஊக்கமுடையார்' என்றுரைப்பர். அஞ்சாமையேயன்றி இப்பொருள் ஏற்புடையதாகாது. 'வீரர் அல்லார்க்கு வாளொடு என்ன உறவு? மேடையஞ்சுவார்க்கு நூலொடு என்ன உறவு' என்ற வ.சுப.மா. உரை குறட்கருத்தைச் சொன்னிலை மாறாமல் அப்படியே தருவது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு:
ஆற்றல் இலாதான் பிடித்த படை இன்னா. —இன்னா., 8

நூலொடு என்? நுண் அவை அஞ்சுபவர்:
கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்தும்
நல்லா ரவையஞ்சு வார். —குறள்., 729

......... ......... ......... பல்லவையுள்
அஞ்சுவான் கற்ற அரு நூலும் இம்மூன்றும்
துஞ்சுமன் கண்ட கனா. —திரிகடுகம், 7

---

3. அவையின்கண் இருந்தாரது நுணுக்கமான அறிவு இடமாகிய அவைக்கு ஏற்றிக் கூறப்பட்டது. இது தூளியவாகுபெயராம்
4. நுண்ணறிவுடையாரது சபையைக் கண்டு அஞ்சுவோர் நூல்களை வாசித்தற்கும் உரியரல்ல என்பது
5. குறள் 729   6. மனத்திடம் - மனவுறுதி

73.7. *பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்(து)*
*அஞ்சு மவன்கற்ற நூல்.* (727)

**உரைப்பகுதி :**

அ) மணக். : பகையின்கண் அஞ்சுவான் பிடித்த கூர்வாள் போலும், அவையின்கண் அஞ்சுமவன் கற்றநூலும் எ-று.

மேல் பயனில்லை என்றார் இங்குப் பயனில்லாதவாறு காட்டினார்.

ஆ) பரிதி. : உயுத்த களரியிலே[1]பேடி கையில் வாளன்றோ? ஆஸ்தானத்துக்கு அஞ்சுமவன் கற்ற நூல் எ-று.

இ) பரிப். : பகையின்கண் அஞ்சுமவன் பிடித்த கூர்வாள் போலும், அவையின்கண் அஞ்சுமவன் கற்ற நூலும் எ-று.

மேல் பயன் இல்லை என்றார் : இது பயன் இல்லாதவாறு காட்டிற்று.

ஈ) காளி. : ஒருவன் தான் பகை நடுவுள் புக்க இடத்தும் உறையகத்து ஒடுங்கிய கூரிய தெளிந்த வாளினை ஒக்கும் : யாது? எனின், ஒருவன் அவையில் சென்று புக்க இடத்துத் தனது கல்வியால் தெளிந்த கூரிய அறிவு புலப்படாமை அஞ்சி இருப்போன் கற்ற நூலானது எ-று.

உ) பரிமேல் . : எறியப்படும் பகைநடுவண் அதனை[2]யஞ்சும் பேடி பிடித்த கூர்வாளை ஒக்கும்; சொல்லப்படும் அவைநடுவண் அதனை[3] அஞ்சுமவன் கற்றநூல், எ-று.

பேடி — பெண்ணியல்புமிக்கு ஆணியல்பும் உடையவள். களமும் வாய்த்துத்[4] தானும்[5] நன்றாயிருந்ததே யாயினும் பிடித்தவள் குற்றத்தால் வாள் சிறப்பின்றாயினாற் போல, அவையும் வாய்த்துத் தானும்[6] நன்றாயிருந்ததேயாயினும் கற்றவன் குற்றத்தால் நூல் சிறப்பின்றாயிற்று.

---

1. உயுத்த களரி - போர்க்களம் 2. அதனை - பகையை 3. அதனை-அவையை
4. களமும் வாய்த்து - போர்செய்யும் இடமும் வாய்க்கப்பெற்று 5. தானும்-வாள்
6. தானும் - வாள்

காளி.: பேடியைப் 'பிடித்தவள் குற்றத்தால்' எனப் பெண் பாலாய் உரைத்தது. ''ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி ஆண்மை அறிசொற் காகிடனின்றே''[7] என்ற விதி பற்றி என்க. ''பெண்ணவாய் ஆணிழந்த பேடி யணி யாளோ' என்பதும் அது.

ஊ) கவிராசர்: சண்டையிலே பயப்படுகிறவன் கையிலே யிருக்கிற வாள்போலேயாம், சபையிலே சொல்லப்பயப்படுகிறவன் கற்ற நூல் (எ-று).

ஏ) பழைய 2: பகைவர் போரிடை அஞ்சும் பேடி கையிற் பிடித்த கூரிய வாளொடு ஒக்கும், சபையிற் சொல்ல அஞ்சுமவன் கற்ற நூல்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'எழுமைக்கும் ஏமாப்பு உடைய கல்வியும் வாள்போலத் தீமை பயக்கும்' என்பர்; 'நூலும் ஒள்வாளற்று' என இழிவு சிறப்பும்மை கொடுத்து உரை வகுத்த மணக்குடவர் உள்ளம் எண்ணி இன்புறுதற்குரியது.

காளி. 'அவையகத்து அஞ்சுமவன் கற்ற நூலறிவு வாய் வழி வந்து கேட்போருள்ளத்துத்தைத்து உணர்வை எழுப்புத லாகிய பயனைத் தராததால் பேடி கை வாளும் அத்தகையது என்பார்; உறையகத்து ஒடுங்கிய வாள் என்று உவமையினும் பொருளினும் பொதுத்தன்மை விரித்து விளக்கிய நயம் மிகச் சிறந்தது. பரிமேலழகர் உரை நூல் சிறப்பின்றாதலாகிய ஒருபயனைக் கருதுகிறது. காளிங்கர் உரையின் முடிவும் இதுவேயாயினும் 'அவைக் கோழை கற்றநூல் வாய்வழிப் பேச் சாக வெளிப்பட்டுக் கேட்டாரைப் பிணிக்காது. பேடிகைவாள் அச்சத்தால் உறையைவிட்டே வெளிவராது' என்ற உவமத்திற் கும் பொருளுக்கும் உள்ள பொதுத்தன்மையையும் காட்டிக் கருத்தை மிகுவிக்கிறது. இவை தம்முள் வேற்றுமையிதுவாம் ஆயினும், 'கைவாள்' என்றது உறைகழித்துக் கையிலே பிடித்த வாளையே ஆசிரியர் குறிப்பிட்டார் எனலாம்.

காளிங்கர் வாளில் உடைவாளும், சிறியகுத்துவாளும் எறி-

7. தொல். சொல். 92

வாளும் முதலிய வேறுபாடுகள் உண்மையின் கை-என்பதனைச் சிறியவாள் என்று கருதியுரைப்பர் எனக் கொண்டு அவருரை யமைதியைக் கருதலாம்.

தேவநேயர் 'பேடியர் — செயற்கைப் பேடியரும் இயற்கைப் பேடியரும் என இருவகைப்படுவர். செயற்கைப் பேடியர் உவளகம், பேடிமை இவற்றிற்காகப் பேடியாக்கப் பட்டவர்கள் என்பர். இயற்கைப் பேடியர் பிறப்பாலேயே பேடியர். செயற்கைப் பேடியர். பாரதக் கதையுள் அருச்சுணன் பேடியாக்கப்பட்டு உவளகத்து உத்தரைக்கு உறுதுணையாக அணி செய்யும் பணிப்பெண்ணாக அமர்ந்தும், நிரைமீட்கப் போரிட்டதுபோல, வெல்லுதல் கூடும். ஆதலால் பெண் அவாய் ஆணிழந்த பேடி யையே கருதினமை காண்க.

வரத. 'பேடியின் கையிலே வாளிருந்தது அவனுயிர்க்கே இறுதிப்பயப்பதானாற்போல அவை கோழையின் நூலறிவு அவன்வருந்தக் காரணமாயிற்று'எனநயங் காட்டுவர்.இதனுடன், மயிர்குலைந்தோன் அடி பிறக்கிட்டோன் கையிற் படையில்லா தோன் இவர்கள் மீது தறுகண்ணாளர் அம்பெய்யார் ஆதலின் கைப்பிடித்திருந்த வாளே அவனழிவிற்கு ஏதுவாயிற்று எனவும் கருதுக.

உரை காண்பார் ஒவ்வொருவரும் தனித்தனி நயங்கருதியே உரை வகுத்த சிறப்புடையது இக்குறள் என்க.

பேடியும் வடிவால் ஆண்மகனை ஒக்கினும் வாளைப் பயன் படுத்தாமையான் தன்னை வெளிக்காட்டிக் கொண்டது போலக் கற்றவனும் அச்சத்தால் நூலறிவு பயன்படாமையைக் காட்டிக் கொள்வதால் இகழப் படுவான் என்பதும் முற்குறளில் 'என்' எனப் பொதுப்படக் கூறியதோடு அமையாது உவமை முகத்தால் விளக்கியவாறு.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

நல்லவை கண்டக்கால் நாச்சுருட்டி நன்றுணராப்
புல்லவையுள் தம்மைப் புகழ்ந்துரைத்தல் — புல்லார்
படைத்தறுகண் அஞ்சுவான் இல்லுள்வில் லேற்றி
இடைக்கலத் தெய்து விடல்.

—பழ. நா., 25

73.8. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார். (728)

**உரைப்பகுதி :**

அ) **மணக்.**: பல நூல்களைக் கற்றாலும் ஒரு பயன் இல்லாதவரே ; நல்லவையின்கண் நன்றாக ஏற்கச்[1] சொல்லமாட்டாதார் எ-று.

இஃது. அவையஞ்சுவார் கற்றகல்வி பிறர்க்குப் பயன் படாது என்றது.

ஆ) **பரிதி .**: பலநூல் கற்றும் பலனில்லை ; நல்லோர் செவிக்கு ஏறச் சொல்லாத கல்வியுடையார் எ-று.

இ) **பரிப் .**: பல நூல்களைக் கற்றாலும் ஒரு பயன் உடையர் அல்லர் : நல்லவையின்கண் நன்றாக அவர்க்கு ஏற்கச் சொல்ல மாட்டாதார் எ-று.

இஃது அவை அஞ்சுவார் கற்ற கல்வி பிறர்க்குப் பயன் படாது என்றது.

ஈ) **காலி. :** பலவற்றுள் கற்று உணர்ந்தும் அவற்றால் ஒரு பயனும் இலர் : யார் எனின் நல்லறிவாளர் குழாத்துள் சென்ற இடத்தும் கல்விநன்மை அவர் செவிக்கு ஏற்குமாறு சொல்லு தற்கு வல்லாதார் எ-று.

உ) **பரிமேல். :** நல்லாரிருந்த அவைக்கண் நல்ல சொற் பொருளைத் தம் அச்சத்தான் அவர்க்கு ஏற்கச் சொல்ல மாட்டா தார், பல நூல்களைக் கற்றாராயினும் உலகிற்குப் பயன்படுதல் இலர்.

அறிவார் முன் சொல்லாமையின் கல்வியின் நுண்மை அறிவாரில்லை என்பதாம். இனிப்பயமிலர் என்பதற்குக் கல்விப் பயனுடையரல்லர் என்று உரைப்பாரும் உளர்[2].

ஊ) **கவிராசர் :** நல்லவர்களிருந்த சபையிலே நல்ல சொற் பொருள்களைப் பயத்தினாலே அந்தச் சபைக்கேற்கச் சொல்ல

1. ஏற்க - ஏற்றுக்கொள்ள
2. காளிங்கரும் பரிதியாரும் இவ்வாறு உரைப்பர்

மாட்டாதவர்கள், பல நூல்களையும் கற்றாலும், உலகத்தாருக்குப் பிரயோசனமில்லை எ-று.

ஏ) பழைய 2 : 'பயமிலவே' பாடம்.

நல்லார் இருந்த சபையில் அச்சத்தால் நல்ல பொருள்களை யவர்கட்கு ஏற்கச் சொல்ல மாட்டாதார், பல நூல்களைக் கற்றாராயினும் உலகிற்குப் பயன்படுதல் இல்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'நன்கு செல'

'நன்றாக ஏற்றுக் கொள்ள' மணக்., கவிராசர் ; 'கல்விநன்மை அவர்க்குஏற' காளி. ; 'நல்ல சொற்பொருளை' பரிமேல்., சபாபதி ; 'நல்ல அரிய பொருள்களை' வரத.; 'எடுத்து' தேவநேயர் ; 'நன்றாகக் கேட்பவர்கள் புரிந்து கொள்ளும்படி' இராம. ;

இங்ஙனம் நன்கு என்பதனைப் பண்பாகு பெயராகக் கொண்டு 'நல்ல சொற்கள்' என்பாரும் பண்புப் பெயராகக் கொண்டு 'நன்மையையுடைய சொல்' என்பாரும் 'செல' என்பதற்கு அடையாக்கி 'நன்றாக ஏற்பாரும் என ஆசிரியர்கள் வேறுபடுகின்றனர். இவருள் 'நன்றாக ஏற்ப சொல்லமாட்டாதார்' என்ற உரையே ஈண்டு பயனுடைத்து. நன்கு சொல்லாதார்' என இயையும். வேறு மாற்றம் இல்லை.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

நெடும்பகல் கற்ற அவையத் துதவாது
உடைந்துளார் உட்குவரும் கல்வி — கடும்பகல்
ஏதிலான் பாற்கண்ட இல்லினும் பொல்லாதே
தீதென்று நீப்பரி தால். — நீதிநெறி.,8

*73.9. கல்லா தவரின் கடைஎன்ப கற்றறிந்தும்*
*நல்லார் அவைஅஞ்சு வார். (729)*

உரைப்பகுதி:

அ) மணக்.: கல்லாதவரினும் கடையர் என்று சொல்லப்படு

வர்; உலகநூல் கற்றறிந்து வைத்தும், நல்லாரிருந்த அவையின் கண் சொல்லுதலஞ்வார் எ-று.

இது கல்லாதவரினும் இகழப்படுவர் என்றது.

ஆ) பரிதி.: கல்லாதவரினும் கடையராவர் கல்வியைக் கற்றும் ஆஸ்தானத்திலே அஞ்சுமவர் எ-று.

இ) பரிப்.: கல்லாதவரினும் கடை என்று சொல்லுவார் உலகத்தார்: கற்று அறிந்து வைத்தும் நல்லோர் இருந்த அவையின்கண் சொல்லுதல் அஞ்சுவாரை எ-று.

இது கல்லாதவரினும் இகழப்படுவர் என்றது.

ஈ) காளி.: மற்று இவ்வாறு அன்றிக் கற்று அறிவு இல்லாத மூடரினும் சாலக்கடை என்று சொல்லுப சான்றோர்; யாரை? எனின் கற்க வேண்டுவன கற்று அவற்றின் கருத்து அறிந்து வைத்துப் பின்னும் கல்வியால் பெரிதும் நல்லோரது குழாத்தைக் கண்ட இடத்து அஞ்சுமவர்களை எ-று.

உ) பரிமேல்.: நூல்களைக் கற்றுவைத்தும் அவற்றால் பயனறிந்து வைத்தும் நல்லாரிருந்த அவையினை அஞ்சி ஆண்டுச் சொல்லாதாரை உலகத்தார் கல்லாதவரினும் கடையர் என்று சொல்லுவர், எ-று.

அக்கல்வியறிவுகளாள் பயன் தானும் எய்தாது பிறரை எய்துவிப்பதும் செய்யாது கல்வித்துன்பமே[1] யெதிநிற்றலின், 'கல்லாதவரின் கடை' என உலகம் பழிக்கும் என்பதாம்.

ஊ) கவிராசர் .: நல்ல நூல்களைக் கற்று அவற்றின் பயனை யறிந்தும், நல்லோர்களிருந்த சபையிலே சொல்லப்பயப்பட்டவர்களை உலகத்தார் கல்லாதவர்களிலுங் கடையானவர்கள் என்று சொல்லுவார்கள் (எ-று.)

எ) பழைய: நூல்களைக்கற்றும் நல்லாரிருந்த சபையினை அஞ்சிச் சொல்ல மாட்டாதாரைக் கல்லாதவரினும் கடையர் என உலகம் சொல்லும் எ-று.

---

1. கல்வித் துன்பம் — கற்றலாகிய துன்பம்

ஏ) பழைய2 : பல நூல்களைக் கற்றும் அவற்றாற் பயனறிந் திருந்தும், நல்லார் இருந்த சபையினை அஞ்சி அங்ஙனஞ் செல்லாதாரை, உலகத்தார் கல்லாதவரினுங் கடையென்று சொல்லுவார்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'கற்றறிந்தும்' என்பதற்குக் காளி. 'கற்பவைகளைக் கற்ற றிந்தும்' என்பர். 'கல்வியைக் கற்றும்' பரிதி.; 'நூல்களைக் கற்றுவைத்தும்' என்பர் பரிமேல்.; மணக்குடவர் 'உலக நூல் கற்றறிந்து வைத்தும்' என விதந்தோதுவர். அவர் நோக்கு 'நூலாருள் நூல்வல்லனாகுதல்' போல கற்றார் முன் கற்ற செலச் சொல்லுதலும் உலகியலுள் ஒன்றாதலின் அதனை யறிந்து வைத்தும் பயன் பெற்றிலரே என்ற இழிவு தோன்ற நின்றதாம்.

வரத. 'அவையஞ்சுவார்க்குப் பிறர் பேசுவதைக் கேட்க வாய்ப்பு இல்லாமற் போய்விடும்' என்பர். சொல்ல அஞ்சுவா ரேயன்றிப் போகவும் கேட்கவும் மாட்டார்கள் என்பது குறட் கருத்தாகாது. அன்றியும் கல்லார் அரிய கருத்துக்களைக் கேட்டுத் திரும்புவார் என்பது.'கற்றார்க்கே கல்வியின் நுட்பம் கருத்துட்புகுமேயன்றிக் கல்லார்க்குப் பன்றிக் கூழ்பத்தரிற் றேமா வடித்தற்றாகும் ஆதலால் இக்கருத்துக் கொள்ளுதலும் சிந்தனைக்குரியது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் ;

கழனும் அவை யஞ்சான் கல்வி யினிதே —இனியவை.,13

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும்.........
பூத்தலில் பூவாமை நன்று. —நீதிநெறி.,6

சொல்லவை அஞ்சிக் கற்றன செலுத்தாச் சோர்வினர் கற்றும் கல்லாத
புல்லியர் இருந்தும் பொன்றினரதனால் போற்றுக அவையஞ்சா தவரை. —விநா., அரசி.,116

73.10. உளர்எனினும் இல்லாரொ டொப்பர் களன்அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார். (730)

உரைப்பகுதி :

அ) மணக். : உளராயினும் செத்தாரோடு ஒப்பர்; அவைக் களத்து[1] அஞ்சித்தாம் கற்றதனை அதற்கு இசையச் சொல்ல மாட்டாதார் எ-று.

இது செத்தாரோடு ஒப்பர் என்றது. இவை ஐந்தும் அவையஞ்சுதலரன் வருங்குற்றம் கூறின.

ஆ) பரிதி. : படித்தவைகளைப் பயந்து அவையிற் செல்லும்படி சொல்லமாட்டாதவர்கள் விளைவில்லாத நிலம் உடையராயினும் இல்லாரோடு ஒப்பாவார் எ-று.

இ) பரிப். : உளர் ஆயினும் செத்தாரோடு ஒப்பர் ; அவைக் களத்து அஞ்சித் தாம் கற்றதனை இவர்க்கு இசையச் சொல்ல மாட்டாதார் எ-று.

இவை ஐந்தும் அவை அஞ்சுதலான் வரும் குற்றம் கூறின.

ஈ) காளி. : இவ்வுலகத்து உயிர்வாழ்க்கை உடையரேனும் இறந்தாரோடு ஒப்பர்: யார்? எனின், தாம் எய்திய அவைக் களத்தை அஞ்சித்தாம் கற்றனவற்றை அவர் செவிக்கு ஏற்குமாறு சொல்லுதல் கல்லாதார் எ-று.

உ) பரிமேல். : அவைக்களத்தை அஞ்சித்தாம் கற்றவற்றை அதற்கு ஏற்கச் சொம்லமாட்டாதார், உயிர் வாழ்கின்றாராயினும் உலகத்தாரால் எண்ணப்படாமையின் இறந்தாரோடு ஒப்பர்.

ஈண்டுக்களன் என்றது ஆண்டு இருந்தாரை. இவை ஐந்து பாட்டாலும் அவை அஞ்சுவாரது இழிபு கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : தாம் கற்ற கல்வியைச் சபையிலே சொல்ல மாட்டாதவர்கள், பிராணனுடன் இருந்தாலும், செத்தாரோடொப்பர்.

---

1. அவைக்களம் என்றது அவையோரை; அவையை அன்று

ஏ) பழைய 2 ; அவைக் களத்தைக் கண்டஞ்சித் தான் கற்ற வற்றை அவர்க்கேற்கச் சொல்ல மாட்டாதார், உயிர் வாழ்கின் றாராயினும், உலகத்தார் எண்ணப்படாமையின் இறந்தாரோடு ஒப்பர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'உளர்' என்பதற்கு 'உயிருள்ளவர்' 'உயிர்வாழ்க்கை யுடையராயினும்' என்றெல்லாம் உரைப்பர். 'அவையஞ்சி உளரெனினும் சொல்லாதார்' என்றமையின் அவைக்கண் வந் திருந்தும் நல்லோர்சொல்வதைக் கேட்டும் தாங்கண்ட நல்ல கருத்தை அஞ்சிச் சொல்லமாட்டாதார் அவையிலிருந்தும் இல்லா தாரே ஆவர்; கற்றாருள் ஒருவராக எண்ணப்படார் எனலும் ஆம். பரிதியுரை 'பயவாக்களரனையர்' என்பதனை உளங்கொண்டு எழுந்த உரை. 'உளரென்னும் மாத்திரையர் அல்லால்' என்பது இருந்தும் பயன்படாமை குறித்தது. உளரெனினும் இல்லாரோ டொப்பர் கற்றாருள் ஒருவனாக வைத்து எண்ணப் படாமை நோக்கி என்க.

வரத. 'உளர்-செல்வர். இல்லார்-வறியார்' என உரைப்பர். செல்வம் உடையாரை 'உடையார்' என்று வழங்குதலே மரபு ஆதலின் சிந்திக்க. மூ.கோ. 'உளர்-பொருள் கல்வி உயிர் உளரெனினும்' என்றும், 'களனஞ்சிக்கற்ற' என இயைத்து 'கல்விக்களத்திலுள்ள ஆசிரியனுக்கு அஞ்சிக்கற்ற' என்றும் உரைப்பர். இவை புதியன. எலுமேற் கொள்க.

இராம. 'உளரெனினும் இல்லாரோடொப்பர் இருந்தும் இல்லா தவராவர்' என்பர். இப்பொருள் 'களனஞ்சி' எனப் பின் வருதலிற் செவ்விது அன்று என்பர்.

சாரங்கபாணியார். 'களனஞ்சி கற்ற செலச் சொல்லாதார் இல்லாரோடு ஒப்பர்' என்பதற்கு எங்ஙனம் மறுப்பாகிறது என்று எண்ணத்தோன்றுகிறது.

ஆனாலும் 460, 880 குறளாட்சிகளை எண்ணி, உயிர் வாழ்கின்றார் எனினும் இல்லாரோடு ஒப்பர் என்ற

பரிமேலழகர் உரை சிறந்தது என்ற அவர் குறிப்பு மிக ஏற்பு டையது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

உளரெனினும் இல்லாரொடொப்பர் :

உளரென்னும் மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர். —குறள்.,406

# 73. அவையஞ்சாமை

| | வகையறிந்து | கற்றாருள் | பகையகத்துச் | கற்றார்முன் | ஆற்றின் | வாளொடென் | பகையகத்துப்பேடிகை | பல்லவை | கல்லாதவரின் | உளரெனினும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 10 | 3 | 1 | 2 | 9 | 5 | 6 | 4 | 7 | 8 |
| பரிதி. | 8 | 6 | 4 | 7 | 9 | 2 | 1 | 3 | 10 | 5 |
| பரிப். | 10 | 3 | 1 | 2 | 9 | 5 | 6 | 4 | 7 | 8 |
| காளி. | 8 | 5 | 3 | 4 | 10 | 6 | 1 | 9 | 7 | 2 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

73வது அதிகாரம் 'அவையஞ்சாமை' முற்றிற்று.

# 74. நாடு

அ) மணக். : பொருளியலாவது[1] பொருளின் பகுதி: அது கூறிய அதிகாரம் ஐந்தினும் முற்படப் பொருளாக்குதற்கு இடமாகிய நாட்டியல்பு ஓரதிகாரத்தானும், அந்நாட்டிற்கு ஏமமாகிய[2] அரணியல்பு ஓரதிகாரத்தானும், அவ்விடங்களில் ஆக்கப்பட்ட பொருளியல்பு ஓரதிகாரத்தானும், அப்பொருளினா லாக்கும் படையின் நன்மை ஓரதிகாரத்தானும், அப்படையின் நன்மையாலாக்கும் படைச்செருக்கு ஓரதிகாரத்தானும், கூறப் படும். இஃது அமைச்சராற் செய்யப்படுதலின், அதன்பின் கூறப் பட்டது. நாடாவது நாட்டிலக்கணங்கூறுதல்.

ஆ) பரிதி. : நாடாவது அரசர்க்குத் தண்மையான நாடு வேண்டும் எ-று.

இ) பரிப். : 'பொருளியல்' அதிகாரம் என்பர்.

பொருள் இயல் ஆவது. பொருளின் பகுதி கூறுதல். அது கூறிய அதிகாரம் ஐந்தினும் முற்படப் பொருள் ஆகுதற்கு இடம் ஆகிய நாட்டு இயல்பு ஓர் அதிகாரத்தானும், அந்நாட்டிற்கு ஏமம் ஆகிய அரண் இயல்பு ஓர் அதிகாரந்தானும், பொருளினான் உண்டாக்கப்பட்ட படை இயல்பு இரண்டு அதிகாரத்தானும் கூறப்பட்டது. இஃது அமைச்சரால் செய்யப் படுதலின் அதன்பின்

---

1. மணக்குடவரும் பரிப்பெருமாளும் நாடு முதல் ஐந்து அதிகாரங்களையும் பொருளியல் என வகுத்துள்ளார்

2. ஏமம் - பாதுகாவல்

கூறப்பட்டது. அவற்றுள் நாடு ஆவது—நாட்டு இலக்கணம் கூறுதல்.

உ) பரிமேல்: இனி அவ்வரசனாலும் அமைச்சனாலும் கொண்டுய்க்கப் படுவதாய், ஏனை அரண் முதலிய[3] அங்கங்கட்கு இன்றியமையாச் சிறப்பிற்றாய நாடு ஓரதிகாரத்தால் கூறுகின்றார்.

ஊ) கவிராசர்: அஃதாவது — ராசாக்களாலேயும் மந்திரிகளாலேயும் காக்கப்பட்ட நாட்டினுடைய லக்ஷணத்தைச் சொல்லுகிறது.

ஏ) பழைய 2: அஃதாவது அவ்வரசனால் ஆளப்படும் நாட்டினதியல்பு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இராம. 'மக்கட் சமுதாயம் இன்பமான வாழ்க்கை நடத்த இயற்கை வளங்களும் கலகமனமில்லாத குடிகளும் நல்லாட்சியும் தேவை என்பதை இவ்வதிகாரம் சொல்கிறது' என்பர்.

தேவநேயர் 'அரசனும் அமைச்சருள்ளிட்டகுடிகளும் இருந்து வாழ்வதற்கு இன்றியமையாத ஆள்நிலத்தை யறிவிப்பது'என்பர்.

வரத. 'நாட்டையும் மக்களையும் பற்றிப் பேசுவது இவ்வதிகாரம்' என்பர். சாமி சிதம்., கா.சு., 'நாட்டின் அமைப்பு; சி.இ. 'நாட்டின் சிறப்பு' என்பர். குழந்தை 'ஒன்று ஒண் கூழ்' என்ற போக்கியார் பாடலையொட்டி இவ்வதிகாரம் கூழியல் ஆம் என்றும், கூழ்-உணவு, அதுவிளையும் நாடு கூறுவது கூழியல்; 'நன்நாட்டின் சிறப்புக் கூறுதல்' எனறும் கூறுவர். படைகுடி முதலாக அங்கங்கள் ஆறனுள் ஒன்றாகக் கூழையும் கூறினமை கொண்டு இது அங்கவியலின் அடங்கும் எனக் கருதுதலே சிறந்தது. அமைச்சியலைத் தனியாகக் கொண்ட போக்கியார் போக்கிற்கினைத்தழுவி கூழ்தனியாதல் பொருந்தும். மணக்குடவரும் பரிப்பெருமாளும் இவ்வதிகாரத்தைப் பொருளியல் என்பர்.

---

3. முதலிய என்றது பொருள் ப்டை நட்புக்களை

74.1. தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு. (731)

உரைப்பகுதி :

அ) மணக் : தப்பாமல் விளையும் நிலங்களும், தகுதியுடையாரும், தாழ்வில்லாத செல்வரும் சேர்வது நாடு எ-று

தள்ளா விளையுள்-மழையில்லாத காலத்தினும் சாவிபோகாத நிலம் [1]

ஆ) பரிதி : மாறா விளைச்சலும் நல்லோரும் குறைவில்லாத செல்வரும் சேர்வது நாடு எ-று.

இ) பரிப். : தப்பாமல் விளையும் நிலங்களும், தகுதி உடையாரும், தாழ்வு இல்லாத செல்வரும் சேர்வது நாடு எ-று.

தள்ளா விளையுள் - மழை இல்லாத காலத்தினும் சாவி போகாத நிலம். தக்கார்-குலத்தாலும் குணத்தாலும் அமைந்தார். தாழ்வு இல்லாத செல்வர்-பிறரால் இகழப்படாத செல்வர். பிறர்க்குப் பயன்படும் செல்வர் என்றது. இம்மூன்றும் எல்லா உயிர்க்கும் ஆகலின் சேரவேண்டும் என்று கூறப்பட்டது.

ஈ) காளி. : மாறாது விளையும் விளைச்சலும், தகுதியால் சிறந்த கல்வியும் ஞானமும் உடைய சான்றோரும், நாளும் யாவர்க்கும் ஈயக்குறைபடாத செல்வம் உடையோரும் செறிந்து இயல்வது நாடு எ-று.

உ) பரிமேல் : குன்றாத விளையுளைச் செய்வோரும், அறவோரும், கேடில்லாத செல்வமுடையோரும், ஒருங்கு வாழ்வதே நாடாவது. எ-று.

மற்றை உயர்திணைப் பொருள்களோடும் சேர்தல் தொழிலோடும் இயையாமையின், 'விளையுள்' என்பது உழவர்மேல்

1. சாவிபோகாத நிலம் — பயனற்றுப்போகாத நிலம்

நின்றது.[2] குன்றாமை - எல்லா உணவுகளும் நிறைய உள்வாதல். இதனான்[3] வாழ்வார்க்கு வறுமையின்மை பெறப்பட்டது. அறவோர்-துறந்தோர், அந்தணர் முதலாயினார்.[4] "நற்றவஞ்செய்வார்க்கிடம் தவஞ்செய்வார்க்கும் அஃது இடம்"[5] என்றார் பிறரும். இதனால்[6] அழிவின்மை பெறப்பட்டது. கேடில்லாமை-வழங்கத் தொலையாமை. செல்வர்-கலத்தினும் அரும்பொருள் தரும் வணிகர். இதனால்,[7] அரசனுக்கும் வாழ்வார்க்கும் பொருள் வாய்த்தல் பெறப்பட்டது.

காளி. : மற்றை உயர்திணைப் பொருள்களோடும் சேர்தல் தொழிலோடும் இயையாமையின் 'விளையுள்' விளையுளைச் செய்வோர் என உழவர் மேல் நின்றது.

ஊ) கவிராசர் : எந்நாளும் நல்ல பயிர்களை யிடுகிறவர்களும், பெரியோர்களும், கெடாத செல்வமுடையவர்களுமிருக்கிறதே நாடாவது (எ-று).

ஏ) பழைய 2 : குறைவு இல்லாமல் விளைநிலமும், தகுதியுடைய அறவோரும், தாழ்வில்லாத செல்வமுடையோருஞ் சேர்ந்து வாழ்வதே நாடு.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'தள்ளா விளையுள்'

"தப்பாமல் விளையும் நிலங்கள்" என்று உரை எழுதிய மணக்குடவர் 'மழையில்லாத காலத்தும் சாவி போகாத நிலம்' என விளக்கந்தருவர். 'மாறாத விளைச்சல்' பரிதி ; 'மாறாது விளையும் விளைச்சல்' காளி. ; 'குன்றாத விளையுளைச் செய்வோர்' பரிமேல் ; 'எந்நாளும் நல்ல பயிரை இடுகின்றவர்கள்' கவிராசர்; 'குறைவில்லாத விளை நிலம்' பழைய 2.

---

2. விளையுள் என்ற தொழிற்பெயர் விளைவைச் செய்வார் மேல்நின்ற தொழிலாகு பெயர். உடன் எண்ணப்படுகின்ற தக்கார் செல்வர் என்பன உயர்திணைப் பலர் பாலாய் இருத்தலின் இதுவும் அங்ஙனம் இருக்க வேண்டும் என்பதாம்

3. இதனால் — விளைவு குன்றாமையால்

4. முதலாயினார் என்றது சான்றோரை 5. சீவக., 77

6. இதனால் — தக்கார் இருத்தலினால்

7. இதனால் தாழ்விலாச் செல்வர் இருத்தலினால்

'தக்கார்'

'தகுதியுடையார்' மணக். ; 'நல்லோர்' பரிதி ; 'குலத்தாலும் குணத்தாலும் அமைந்தார்' பரிப். ; 'அறவோர்—துறந்தோர், அந்தணர் முதலாயினார்' பரிமேல் ; 'பெரியோர்கள்' கவிராசர் ; 'தகுதியுடைய அறவோர்' பழைய 2

'தாழ்விலாச் செல்வர்'

'குறைவில்லாச் செல்வர்' பரிதி. ; 'பிறரால் இகழப்படாத செல்வர்' பரிப். ; 'நாளும் யாவர்க்கும் ஈயக் குறைபடாத செல்வர்' காளி ; 'கேடில்லாத செல்வம் உடையோர்' பரிமேல் ; கவிராசர் ; காலத்தினும் காலினும் அரும்பொருளீட்டும் வணிகர்' என விளக்குபவர் பரிமேல்.

பிற்கால உரைகளில், 'தள்ளாவிளையுள்' 'குறையாத விளைபொருள்' சி. இ ; 'தன்னிடம் இருப்போரையும் வருவோரையும் உணவில்லை எனத் தள்ளா விளையுள்' மு. கோ. ; காலந்தப்பாது விளைவித்து விளைபொருள் செய்யும் உழவோர்' கா. சு , சபாபதி; 'குறையாத விளைச்சல்' வ. சுப. மா., தேவநேயர் ; 'எத்தனை முறை பயிர் செய்தாலும், பலவகைப் பயிர் செய்தாலும் வளங்குன்றாமல் பயிர் செய்ய வல்ல உழவர்கள்' என்பர் வரத. ; 'எல்லாப் பொருளும் விளைவிப்போர்' சாமி-சிதம் ; 'விளையும் வயல்' இராம.

'தக்கார்'

'அறிவாலுயர்ந்தோர்' மு. ரா. அரு. ; 'அளவாலும் குணத்தாலும் சிறந்த பொருள்களை உண்டாக்கிக் கொடுப்பவர்' வரத. ; 'நடு நிலைமையாளர்' வ. சுப. மா ; 'தக்க அறவோர்' சபாபதி., சி இ ; 'நன்னெறி ஒழுகுவோர்' கா சு. ; 'பொது நலம்புரியும் சான்றோர்' குழந்தை. ; 'பயிரிடத்தக்க உழவர்' இராம. ; 'புலவரும் முனிவரும்' தேவநேயர்.

'தாழ்விலாச் செல்வர்'

பரிமேலழகர் கருத்தொத்துக் கூறுவர் தேவநேயர். 'குற்றமற்ற செல்வர்களாகிய வணிகர்' இராம. ; 'கொடுக்கக்

கொடுக்கக் குறையர்த வருவாயுடைய செல்வர்' குழந்தை; 'கேடில் செல்வம் உடையோர்' சி.இ., கா.சு..; 'பொருள் ஏற்றத்தாழ்விலாச் செல்வர்' மு.கோ.

இங்ஙனம் இணைப்புச்சொல்லால் உரையாசிரியர்கள் கருத்தைத் திசைதிருப்ப முயன்றாலும், தள்ளாவிளையுள்-விளை நிலம், விளைவிப்போர், விளைச்சல் என்ற மூன்று பொருளில் வழங்குகின்றார்கள் என்பதைத் தொகுத்தறியலாம். 'விளைவிப்போர்' என்னும் உரை வழங்கும் பரிமேலழகர் முதலானோர் தக்கோர் செல்வர் முதலிய உயர்திணைப் பொருளோடும் சேர்தல் என்ற தொழிலோடும் இயையாமையின் உழவர் மேனின்றது என்று ஏனையோரை மறுத்தனர். தேவநேயர் இயற்கையுஞ் செயற்கையுமாகிய இருவகை விளையுள் இருப்பதனாலும், 'சேர்வது' என்பது கூடியிருப்பது அல்லது பொருந்தியிருப்பது என்றே பொருள் படுதலாலும், 'பலவயினானும் எண்ணுத்திணை விரவுப்பெயர் வருதல்' (தொல்-சொல். கிளவி. 51) வழுவன்மையானும் உயர்திணைப் பெயர்கள் தொழிலோடு இயைந்து வரலாம்; வழுவன்றென்க என மறுப்பர்.

நாடு என்பதே நிலம் ஆதலால் விளைபுலம் எனப் பொருள் காண்டலைக் காட்டிலும், விளைச்சல் என்பதே நாட்டின் சிறப்பை மிகுவிப்பதாதல் காண்க. வருங்குறளில் ஆசிரியர் விளைவையே வற்புறுத்துதல் இதனை அரண் செய்யும்.

ஓ) ஒப்புமைப்பகுதி :

**தள்ளா விளையுள் :**

நெல்பல பொலிக பொன்பெரிது சிறக்க — ஐங்., 1:2

விளைக வயலே வருக இரவலர் — ஐங்., 2:2

பால்பல ஊறுக பகடுபல சிறக்க — ஐங்., 3;2

**தக்காரும் சேர்வது நாடு :**

பகைவர் புல்லார்க்க பார்ப்பார் ஓதுக — ஐங்., 4:2

அறம்நனி சிறக்க அல்லது கெடுக — ஐங்., 7;2

நற்றவஞ் செய்வார்க்கிடம் தவஞ்செய்வார்க்கும் அஃதிடம்
— சீவக,,77

தாழ்விலாச் செல்வர்,

உரைசால் சிறப்பி னரைசுவிழை திருவிற்
பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்
முழங்குகடன் ஞால முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தாகி
யரும்பொரு டருஉம் விருந்திற் றேஎ
மொருங்குதொக் கன்ன வுடைப்பெரும் பண்டம்
கலத்தினுங் காலினுந் தருவன ரீட்டக்
குலத்திற் குன்றாக் கொழுங்குடிச் செல்வர்
அத்தகு திருவி னருந்தவ முடித்தோர்
உத்தர குருவி னொப்பத் தோன்றிய — சிலம்பு. 2:1 - 10

ஒ) மேற்கோள்பகுதி:

இளம்.: பொருளாவது நாடும், பொருளும், அரணும், அமைச்சும் நட்பும், படையும் எனக்கூறி நாடு என்பதற்கு இதற்கு மேற்கோள் காட்டுவர். — தொல்பொருள்.,75

சிவஞான.: நாடிய பொருள் கைகூடும் என்பதில் நாடி என்பது ஆகுபெயராய் அன்புடைக் காமத்தை உணர்த்திற்று எனக்கூறி 'தள்ளா ... ...... நாடு' என்புழி விளையுள் என்பது ஆகுபெயரான் உழவர்மேல் நின்றது என்றார் பரிமேலழகரும். ஆதலின் நாடி என்பது அவ்வாறு ஆகுபெயராதற்கு ஏற்குமாறு அறிக என்பர்.
— கம்ப, விருத். பக்., 18

74.2. *பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்*
*ஆற்ற விளைவது நாடு.* (732)

உரைப்பகுதி:

அ) மணக்.: பெரும்பொருளாலே விரும்பத்தக்கதாகி, கேடரிதாதலோடே மிகவும் விளைவது நாடு எ-று.

பெரும்பொருள்-நெல்லு. கேடாவது விட்டில், கிளி, நால்வாய், பெரும் புயலென்றிவற்றான் வரும் நட்டம்.

ஆ) பரிதி.: கலக்கத்தில் கெடப்பட்ட நாட்டார் செல்வம் பெறுவதாக முழு விளைச்சல் கொடுப்பது நாடு எ-று.

இ) பரிப் : பெரும்பொருளாலே விரும்பத்தக்கது ஆகிக் கேடு அரிது ஆகலோடே மிகவும் விளைவது நாடு எ-று.

விரும்பத் தக்கது என்றமையால் பெரும் பொருள் ஆவது நெல்லு. கேடு ஆவது விட்டில், கிளி, நால்வாய், பெரும்புயல். இது மேல் சொன்னவும் சொல்லாதனவும் தொகுத்துக் கூறிற்று.

ஈ) காளி : அவ்விடத்து வாழ்வார் பலரும் பெரும்பொருட் செல்வருமாய்ப் பிறநாட்டு உள்ளோரும் தம்மை நாள்தோறும் விரும்பத்தக்கதுமாய்த் தம் அரசானும் பிறவாற்றானும் எஞ்ஞான்றும் கேடு அறியாததுமாய் அளவு இறந்த விளைச்சலை உடையது யாது அதுவே நாடு ஆவது எ-று

பெட்டக்க என்றது விரும்பத்தக்க என்றது. அருங்கேட்டால் என்றது கேடறிய என்றது.

உ) பரிமேல்.: அளவிறந்த பொருளுடைமையால் பிறதேயத்தாரானும் விரும்பத்தக்கதாய், கேடின்மையோடு கூடி மிக விளைவதே நாடாவது. எ-று.

அளவிறப்பு, பொருள்களது[1] பன்மை[2] மேலும் தனித்தனி அவற்றின் மிகுதிமேலும் நின்றது. கேடாவது மிக்கபெயல்[3], பெயலின்மை, எலி, விட்டில்,[4] கிளி, அரசண்மை[5] என்றிவற்றான் வருவது. ''மிக்கபெயலோடுபெயல் இன்மை எலி விட்டில் கிளி-அக்கணர சண்மையோடாறு''[6] இவற்றை வடநூலார் ஈதி[7]

1. பொருள்கள் - மணி, பொன், நெல் முதலாயின
2. பன்மை - பல 3. பெயல் - மழை 4. விட்டில் - ஒருவகைப்பூச்சி
5. அரசண்மை - அரசன் அணுகியிருத்தல். இதனை வேற்றரசன் நெடுங்குதல் என்பாரும் உளர்
6. இது புறப்பொருள் வெண்பாமாலை, இவற்றில் அரசண்மையில் வேற்றரசையும் மிக்க பெயலில் பெயலின்மையையும் அடக்கி அது என்கிறது. புறப்பொருள் வெண்பாமாலை 7. ஈதி - கேடு

கள்[8] என்ப. இவற்றுள் முன்னையவற்றது இன்மை[9] அரசன் அறத்தானும் பின்னையது இன்மை[10] அவன் மறத்தானும் வரும். இவ்வின்மைகளான் மிக விளைவதாயிற்று.

காரி.: பெட்டக்கது-விரும்பத்தக்கது. 'செய்தக்க'[11] என்பது போலப் பெள் என்னும் முதனிலைத் தொழிற்பெயர் செய வெனெச்சமானது காண்க. மிக்க பெயல், பெயலின்மை, எலி, விட்டில், கிளி, பன்றி, புல்வாய், யானை, அரசண்மை, வேற்றரசு எனக்கேடு; இவற்றை வடநூலார் 'ஈதிவாதை' என்பர்.

ஊ) கவிராசர்: அளவிறந்த பொருள்களையுடைமையால் பிற தேசத்தாரும் விரும்பத்தக்கதாய், கேடில்லாமல் மிக விளைவதே நாடாவது எ-று.

ஏ) பழைய 2: 'பெட்டக்க தாக்கி' பாடம்.

அளவிறந்த பொருளுடைமையாற் பிறதேசத்தாராலும் விரும்பத்தக்கதாய்க் கேடில்லாமல் நிறைய விளைவதே நாடு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக்குடவர் கூறும் கேடுகள் 'விட்டில் கிளி நால்வாய் வேற்றரசு தன்னரசு நட்டம் பெருப்புயல் காற்று எட்டு' என்ற புறப்பொருள் வெண்பாமாலை மேற்கோட் செய்யுளின் விளைவு.

பரிப்பெருமாள் குறிப்பிலுள்ள 'மேற்சொன்ன' என்றது தாழ்விலாச் செல்வத்தையும், சொல்லாதன எண் வகைக்கேடு களின்மையையும் கருதியதாகலாம்.

காளிங்கர் உரை கேடுவகையுள் மணக்குடவர் விடுத்த அரசையும் கூட்டுதல் காண்க. தேவநேயர் உரை 'கேடுகள் மிகு மழை, மழையின்மை, எலி, விட்டில், கிளி, பகையரசண்மை

---

8. ஈதிவாதைகள் — என்றும் பாடமுண்டு
9. முன்னயதின்மை - முன்னே கூறப்பட்ட மிக்கபெயல் முதலிய ஐந்தின் இல்லாமை
10. பின்னையது இன்மை — வேற்றரசு தன்னரசு முதலிய இவற்றின் இன்மை
11. குறள்,, 446

என ஆறு என்றும், விட்டில், கிளி, யானை, காட்டுப்பன்றி, தொட்டியர், கள்வர் பெரும்புயல் என ஏழென்றும், விட்டில், கிளி, யானை, வேற்றரசு, தன்னரசு, மழையின்மை, கடுமழை, கடுங் காற்று என எட்டு என்றும் மூவகையான் சொல்லப்படும்' என்பர்.

குழந்தை: 'பெரும்பொருள்-நெல்-கம்பு சோளம் முதலிய தவசங்களைச் சிறுதவசம் என வழங்குவதால் பெரும்பொருள் —நெல் என்றாம். 'ஆற்ற விளைவது நாடு' என்றதால் விளை வின்மிகுதியை ஆசிரியர் குறித்ததால் பெரும்பொருள் என்பது நெல் ஒழிந்த மணியும் பொன்னும் முதலான விளையுயர்ந்த பொருள்களேயாம். தவசம் என்பது புன்செய்த் தானியங்களைக் குறிப்பதாலும், 'தவசதானியமோ' எனக் குற்றாலக்குறவஞ் சியில் (70:19) வழங்குவதாலும் அறியலாம். 'பெரும்பொருள் என்பது மணியும் பொன்னும் முதலான பொருள்களின் பன்மை மேலும், மிகுதிமேலும் நின்றது' என்ற பரிமேலழகர் உரை விளக்கம் ஏற்புடையது ஆகலாம். மணக்குடவர் 'பெரும் பொருள்-நெல்லு' என்பர்.

பரிதி. உரைப்போக்கு 'அருங்கேட்டார்' எனப்பாடம் கண்டிருப்பர் என்பதைத் தெரிவிக்கிறது ஏனைய உரையாசிரியர் கள் 'அருங்கேடன்' (210) என்பதுபோல 'அருங்கேட்டால் —கேடின்மையால்' என்றனர். ஏனையோர் உரை சிறந்தது.

இராம 'அருங்கேட்டால் - 'அதிகத்துன்பமில்லாமல்' அதாவது சிறு உழைப்பால் பெரும்பயன் அளிப்பதாக' எனவும் 'பெரும்பொருள்-உணவுப்பண்டம் அல்லாத பொருள்கள்' எனவும் கூறுவர். இது முற்கூறியகருத்துக்குத் துணையும் ஆகும்.

'ஏராளமான உற்பத்திப் பொருள்' என்பர் வரத.; 'பொருட் பெருக்கத்தால் விரும்பத்தக்கதாகி, என்பர் வ.சுப.மா , கா.சு. இவற்றுள் 'பொருளால் — பொருட்பெருக்கத்தால்' எனப் பொது வகையிற் கூறப்படுவன ஏற்புடையனவாம்.

பல்குழுவும், உட்பகையும், குறும்பும் என அஃறிணைவாய் பாட்டாற் கூறி அத்தகையினரை இல்லதே நாடாவது என்ற

வள்ளுவர் உள்ளம் இத்தகையோரை மக்களினத்தவராக மதித்தல் கூடாது என்பதே எனலாம். 'எனைத்துணையராயினும்' எனப் பலர்பாட்டாற் கூறிய ஆசிரியர் அவனது தீமைநோக்கித் தேரான் என ஒருமையாற் கூறுவதும் கல்லாதானை விலங்கென ஒப்பித்ததும் கொண்டு துணியலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

பெரும்பொருளால் பெட்டக்கது நாடு :

நந்து பல்பொருள் நாடு கலிங்கத்து —யசோ., 205

தொட்புறு பொருள்களெல்லா மிதனுழைச் செறிந்த ......
—கம்ப., 4941

அருங்கேட்டால் ஆற்ற விளைவது நாடு :

......... மரு தணிந்து கேடிலா
வளவயல் வைகலும் இன்ன தென்பதேன் —சீவக., 64

விட்டில் கிளியே நால்வாய் ஏனம்
தொட்டியர் கள்வர் சோனைப் பெரும்புயல்
நட்டம் நாட்டேழ் குற்ற மாகும். —பிங்கலந்தை 3:7

முற்றும் :

மலிபெரும் பொருளால் பெட்கும் வண்மையும் நாடாது யாதும்
மெலிவுக உதவும் வாய்ப்பும் மெலிகலார் மெலிந்த காலும்
நலிதரா வளனும் எல்லாம் நலிவுநீத் தாற்ற ஈண்டும்
ஒலிகெழு விளையு ளோடும் உடையது தொண்டை நாடு.
—தணிகை திருநாட்டுப்., 5

ஓ) மேற்கோள்பகுதி :

சுவாமி.: 'விளைவது நாடு' என்பது வினைமுற்றுப்பெயர் இடப்பொருள் ஏற்று வந்ததற்கு மேற்கோள் —இ.கொ., 83

விளைவது நாடு என்பது வருமொழி நோக்காமலே தனக்குரிய ஒருமைப்பாலை விட்டுப் பன்மைப்பாலையே விளக்குதலால் அஃறிணைச் சாதி ஒருமையாயிற்று என்பர்.
—இ.கொ., 130

74.3. பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்(கு)
இறைஒருங்கு நேர்வது நாடு. (733)

உரைப்பகுதி ;

அ) மணக்.: குடிமை செய்தால், ஒரு காலத்திலே பல குற்றம் தன்னிடத்து வரினும் அதனைப் பொறுத்து, நிச்சயித்த கடமையை அரசனுக்கு ஒருங்கு[1] கொடுக்கவல்லது நாடு எ-று.

குடிமையாவது கடமையொழிய வருவது.

ஆ) பரிதி.: நாட்டாண்மைக்காரர்க்குச் சேதம் வந்தால் தளராமல் இறைக்கடமை ஒருக்காலே கொடுப்பது நாடு எ-று.

இ) பரிப்.: குடிமை செய்தல் பல காலத்திலே பலவரினும் அதனைப் பொறுத்து நிச்சயித்த கடமையை அரசனுக்கு ஒருங்கு கொடுக்க வல்லது நாடு எ-று.

தளர்ச்சியைச் செய்தலின் பொறை ஆயிற்று. குடிமை ஆவது கடமை ஒழிய வரும் அவை. இதனானே குடிமக்கள் பண்பு உடையராக வேண்டும் என்பது கூறிற்று.

ஈ) காளி : கோல்கீழ் வாழும் குடிகள் ஆயினார் யாதானும் ஒரு காரணத்தான் முன் இறுக்கும்[2] ஆறு அன்றிப் பெரும் பொருள் பாரம் தங்கள் மேல் வரவேண்டும் காலத்தும் அதனைப் பொறுத்தும், அரசனைப் பாதுகாத்துப் பின்னும் அரசற்கு ஆறில் ஒன்றாக என்றும் இறத்தற்கு உரிய இறையினையும் ஒன்றும் குறைபடாமல் ஒருங்கு உடன்கொடுத்து இயல்வது யாது? மற்று அதுவே நாடு எ-று.

உ) பரிமேல்.: பிறநாடுகள் பொறுத்த பாரமெல்லாம் ஒருங்கே தன்கண்வருங்கால் அவற்றைத் தாங்கி, அதன்மேல் தன்னரசனுக்கு இறைப்பொருள் முழுதையும் உடம்பட்டுக் கொடுப்பதே நாடாவது.

---

1. ஒருங்கு - ஒருசேர 2. இறுக்கும் — வரியாகக் கொடுக்கும்

பாரங்கள்—மக்கள் தொகுதியும் ஆன் எருமை முதலிய விலங்குத் தொகுதியும். தாங்குதல்—அவை[3] தத்தம் தேயத்துப்[4] பகை வந்திருத்ததாக[5], அரசு கோல்கோடியதாக[6], உணவின்மையானாகத் தன்கண் வந்தால் அவ்வத்தேயங்களைப்போல இனிதிருப்பச் செய்தல். அச்செயலால் இறையைக் குறைப் படுத்தாது[7] தானே கொடுப்பது என்பார் 'இறையொருங்கு நேர்வது என்றார்.

ஊ) கவிராசர் : பிறநாடுகளிலே இருக்கிற மாடுகள் மனிதர்களெல்லாம் கூடிக் கலகத்தினாலே வந்தால், எல்லாம் பொறுததுக் கொண்டு, தன் அரசனுக்கு இறையுண்டானதெல்லாங்[8] கொடுப்பதே நாடாவது (எ-று).

ஏ) பழைய 2 : பிறநாடு பொறுத்த பாரமெல்லாந் தன்னிடத்தே வரும்போது அவற்றைத் தள்ளாமல் தாங்கி, அதன்மேற் தன் அரசனுக்கு இறைப்பொருள் மிகுதியுங் கொடுப்பதே நாடு.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'பொறை'

'பலகுற்றம் வரினும் பொறுத்துக்கொள்ளுதல்' மணக்.; நாட்டுப்புறங்களில் வரிவாங்கவருவாரையும் நாட்டாண்மையையும் மனத்திற்கொண்டு எழுந்தது பரிதி உரை.; ஏதோ ஒருகாரணமாகப் பெரும்பொருள் கொடுக்கவேண்டி நேர்ந்தாலும் அவற்றை முழுதும் கொடுப்பதோடு, ஆறில் ஒருபங்காக வழக்கமாகக் கொடுக்க வேண்டிய வரியை ஒருசேர உடன் கொடுக்க வேண்டிய நிலையில இருப்பது நாடு என்பார். காளி இது நாட்டின் பொருளாதார நிலையை எண்ணி எழுந்தவுரை. கா.சு., சி.இ 'வேற்று நாட்டுமக்கள் விரும்பிவந்து கூடிய காலையும் அவர்கள் பாரத்தையும் தாங்கவல்லது நாடு' என்பார். இது ஆட்சியின் நலம், வளம் கருதிப் பிறர் குடியேறுதலைக் கொண்டு எழுந்தவுரை.

---

3. அவை - மக்கட்டொகுதியும், ஆன் எருமை முதலிய விலங்குத் தொகுதியும்
4. தேயத்து - தேசத்து
5. வந்திருத்ததாக - வந்து தங்கியதாக
6. கோல் கோடியதாக - செங்கோல் வளைந்ததாக
7. இறையைக் குறைபடுத்தாது - வரியைக் குறையக் கொடுக்காமல்
8. இறையுண்டான தெல்லாம் - வரியாக விதிக்கப்பட்ட அனைத்தையும்

வ.சுப.மா. உரை 'வரும் சுமை எல்லாந்தாங்கி' எனப் பொது மையிற் செல்வது. சாமி சிதம். 'போர், பஞ்சம், கொலை கொள்ளை முதலிய இடையூறுகள், வெள்ளம் முதலிய காரணங் களால் மக்கள் திரண்டு வரினும் அச்சுமையைத் தாங்கும் வன்மை' என்பர். சபாபதி 'பிறநாடுகள் சுமந்த பாரமெல்லாம் தன் மேல்வரினும்' என்பர். ஏன் வந்தது? என்ற விளக்கம் இல்லை. குழந்தை 'இறையல்லாத அரசியற் செலவுகள்' என்பர். 'அயல் நாட்டோடு நடக்கும் போர்; தன்னாட்டின் ஒருபகுதியில் நடக்கும் வெள்ளம், பஞ்சம், அணைக்கட்டு, தெரு, பிறவசதிகள் இவை குறித்தோ பெரும் பொருட்செலவு ஏற்படின் அதனைக் குறித்துப் பெரும் பொருள் ஈதல்' எனவும் விளக்கந் தருவர். தேவநேயர் 'பிறநாடுகள் தாங்கிய மக்களும் கால்நடை களும் ஆகிய சுமை' எனக் கரணியமும் காட்டுவர். வரத. 'பஞ்சம் பிணி பகைகளலாலாம் பெருஞ்சுமை. பிறநாட்டார் தாக்குறும் பொழுதும், பிறநாட்டாருக்கு உதவும் போதும்' எனச் சூழ்நிலையையும் தருவர். இராம. 'பலவகையான பொறுப் புக்கள் திடீரென்று ஒருமிக்க வந்தாலும்' என்பர். மு கோ. 'தென்புலத்தார் முதலியோரைத் தாங்கும் பொறுப்பு, வாழ்க்கைச் செலவு போர்ச் செலவு முதலியவற்றான் நேரும் சுமை' என்பர். இங்ஙனம் 'பொறை ஒருங்கு மேல்வருங்கால்' என்பதில் பொறை —சுமையல்லது பாரம் என்பதில் யாருக்கும் கருத்து மாற்றமின்று சுமை எப்படி வரும் என்பதிலேயே கருத்து மாற்றம். அனைத்தும் இயைபு உடையன ஆதலின் காரணங்கள் அனைத்தையும் இணைத்து, அத்தனைவகையால் சுமைவரினும் தாங்கும் வல்ல மையுடையது நாடு எனல் ஏற்புடையது.

நெருக்கடிக்கும் பொருள் கொடுத்து, வரிகளையும் ஒருசேர உடனே தரவல்ல விளைபொருள் வாய்ப்பு உள்ளதே நாடு என்ற வள்ளுவரின் பொருளாதாரக் கொள்கை மிகத்தகுந்த அறிவுரை.

பொறையொருங்கு தாங்குதலாவது ஏனையநாடுகள் வறந்து அவற்றைத் தாங்கும் பொறுப்பு தன்மேலதாயினும் தாங்குதலும், அயல் நாடுகளிலிருந்து வரும் எல்லாப் பொருள்களும் நின்று குடிகளுடைய எல்லாத் தேவையையும் நிறைக்கும் பொறுப்பு வரினும் தாங்குதல்.

ஓ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

பல்குழு வேந்த லைக்கும் படர்கொலைக் குறும்பு தீய
பல்குழுட் பகையு டற்றும் பகையுறு பசிதீ ராநோய்
பல்குறி தானு மின்றிப் பொறையொருங் குறுகால் தாங்கி
நல்கிறை வேந்தர்க் குய்க்கு நலத்தது தொண்டை நாடு.

—தணிகை. திருநாட்டுப்., 6

ஒ) மேற்கோள்பகுதி:

சுவாமி.: நேர்வது நாடு என்பது அஃறிணைச் சாதி ஒருமைக்கு மேற்கோள்.

—இ. கொ. , 130

*74.4. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
*சேரா தியல்வது நாடு.* (734)

உரைப்பகுதி :

அ) மணக்.: மிகுத்த பசியும், இடையறாத பிணியும், ஒறுக்கும் பகையும், சேராது இயல்வது நாடு எ-று.

இது சேர்தலாகாதன இவை என்று கூறிற்று.

ஆ) பரிதி.: பசிப்பிணியும் பலபிணியும் பகைஞரும் இல்லாதது நாடு எ-று.

இ) பரிப்.: மிக்கபசியும், இடையறாத பிணியும், ஒறுக்கும் பகையும் சேராது இயன்றது நாடு எ-று.

இது சேர்தல் ஆகாதன இவை என்று கூறிற்று.

ஈ) காளி.: மிக்க பசியும், நிலத்து இயல்பால் உளது ஆகிய நீங்காப் பிணியும், தமைச் செறுக்கும்[1] பகையும் சேராது நன்கு நடப்பது நாடு எ-று.

உ) பரிமேல்.: மிக்க பசியும், நீங்காத நோயும், புறத்து நின்று

1. செறுக்கும் — ஒறுக்கும் அல்லது தண்டிக்கும்

வந்து அழிவு செய்யும் பகையும் இன்றி, இனிது நடப்பதே நாடாவது.

உறுபசி, உழவருடைமையானும் ஆற்றவிளைதலானும் சேராதாயிற்று. ஓவாப்பிணி தீக்காற்று, மிக்க குளிர், வெப்பங்களும் நுகரப்படுமவற்றது தீமையும் இன்மையின் சேராதாயிற்று. செறுபகை அரசன் ஆற்றலும் நிலைப்படையும்[2] அடவியும்[3] அரணும்[4] உடைமையின் சேராதாயிற்று.

ஊ) கவிராசர் : வெகு பசியும், விடாத வியாதியும், புறத்து நின்று வந்து உபத்திரவம் பண்ணும் பகையும் இல்லாமல் இருக்கிறதே நாடு (எ-று).

ஏ) பழைய 2 : 'சேராதியைவது' பாடம்.

மிக்க பசியும், நீங்காத பிணியும், புறத்து நின்று வந்து இழிவு செய்யும் பகையும் இல்லாமல் இனிது நடப்பதேநாடாவது.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'உறுபசி' முதலியவற்றிற்குத் தேவநேயர் கூறுங்கரணியங்கள் சிறந்தன. 'உறுபசி - உழைப்புக்குப்போதிய உழவர் களின்மை, வளமின்மை இவற்றான் நேர்வது. ஓவாப்பிணி -நிலைக்கேடு, நச்சுக்காற்று, தட்பவெப்ப மிகுதியும் குறைவும், நுகர்ப்பொருள்களின் கலப்படம், தீமைகள். செறுபகை - அரசன் அங்கங்களின் வலியின்மையால் விளைவது' என்பர்.

வரத 'பசி - பிணி - பகையில்லாமலேயே நாடு இருக்க முடியாது; ஆனால் குடிகளைத் தாக்காதபடி பாதுகாக்க வேண்டும்' எனக் கருதுவர். இக் கருத்து 'சேராதியல்வது' என்றதன் எதிரொலிதான்; புதிதன்றென்க.

பழைய ஆசிரியர்கள் சிறிதுமாற்றமின்றிக் கருத்துவகையான் ஒத்துள்ள குறளிது.

---

2, நிலைப்படை — நிலையாக இருக்கின்ற மலையரண் போல்வன
3. அடவி - காடு 4, அரண் — கோட்டை

ஓ) ஒப்புமைப்பகுதி :

உறுபசி சேராதியல்வது நாடு :

பேதித்த வுயிரனைத்தும் பெரும்பசியால் வருந்தாமல்
...... ...... நிலமடந்தை முலைசுரப்பச்
சாதித்த பெருந்தகை ...... ......... — கம்ப., 721

உறுபசியும் ஓவாப் பிணியும் சேராதியல்வது நாடு :

பசியில் லாகுக பிணிசேண் நீங்குக — ஐங்., 5:2

செறுபகை சேராதியல்வது நாடு :

வேந்து பகை தணிக — ஐங்., 6

உறுபகை யொடுக்கியிவ் வுலகை யோம்பினேன் — கம்ப., 182

...... ...... ...... சுடராழிப் படை வெய்யோன்
பனிவென்ற படியென்னப் பகைவென்று படிகாப்போன்
— கம்ப., 734

முற்றும்

பசியும் பிணியும் பகையும் நீங்கி — சிலப்.இந்திர ,72

ஒன்றுடைப் பதினை யாண்டைக் குறுகடன் இறைவன்
விட்டான்
இன்றுளீர் உலகத் தென்றும் உடனுளீர் ஆகி வாழ்மின்
பொன்றுக பசியும் நோயும் பொருந்தலில் பகையும் என்ன
மன்றல மறுகு தோறும் மணிமுரசு ஆர்த்த தன்றே.
—சீவக.,2375

74.5. *பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்*
*கொல்குறும்பும் இல்லது நாடு.* (745)

உரைப்பகுதி :

அ) மணக். : பலபலவாய்த்திரளுந், திரட்சியும்[1] பாழ்செய்யும் உட்பகையும், வேந்தனை அலைக்கின்ற[2] கொலைத் தொழிலி

1. திரட்சி - கூட்டம் 2. அலைக்கின்ற - வருந்துகின்ற

னையுடைய குறும்பரும்[3] இல்லாதது நாடு எ-று.

ஆ) பரிதி.: பலகுடியைச் சேதம்பண்ணும் தாயாதிகளும் ராசாவுடன் பகைசெய்யும் கூட்டமும் இல்லாதது நாடு எ-று.

இ) பரிப்.: பலவாய்த் திரளும் திரட்சியும், பாழ் ஆக்கும் உட்பகையும், வேந்தனை அலைக்கின்ற தொழிலை உடைய குறும்பரும் இல்லாதது நாடு.

பாழ் ஆக்கும் உட்பகை ஆவது-நாட்டுத் தலைவராயினும் அதிகாரியாயினும் நாட்டைக் கெடுக்குமவர்கள். இவை ஆராய்ந்து கடிய வேண்டுதலின் இது கூறப்பட்டது.

ஈ) காளி.: மறப்படை மாக்கள் பெருகக்கூடும் கூட்டமும், செல்வம் உடையோர் தம் செல்வத்தைத் தேய்க்கும் உட்பகையும், நாடு பற்றி வாழும் பெருநெறிவேந்தனைக் காடுபற்றி நிற்கச் செய்யும் கொல்வினைக் குறும்பும் இல்லது யாது? மற்று அதுவே நாடாவது எ-று.

உ) பரிமேல்.: சங்கேதவயத்தான் மாறுபட்டுக் கூடும் பல கூட்டமும், உடனுறையா நின்றே பாழாகச் செய்யும் உட்பகையும் அளவு வந்தால் வேந்தனை அலைக்குங் கொல்வினைக் குறும்பரும் இல்லாததே நாடாவது, எ-று.

சங்கேதம்[4]-சாதிபற்றியும் கடவுள் பற்றியும் பலர்க்கு உள தாம் ஒருமை[5]. உட்பகை-ஆறலைப்பார்[6], கள்வர், குறளை கூறுவார்[7] முதலிய மக்களும்; பன்றி, புலி, கரடி, முதலிய[8] விலங்குகளும். உட்பகை, குறும்பு[9] என்பன ஆகுபெயர்[10]. இம்மூன்றும்

3. குறும்பர் - குறுநிலமன்னர்கள் 4. சங்கேதம் — குறிப்பு

5. ஒருமை — கருத்து வேற்றுமையின்மை

6. ஆறலைப்பார் — பிரயாணிகளை வழியில் மறித்து நின்று பண்டங்களைப் பற்றிக் கொள்ளும் வழிபறிக்காரர்

7. குறளை கூறுவார் — பொய்ச்சாட்சி சொல்பவர்

8. முதலிய என்றமையின் — இச்சகம் பேசிப் பொருள் பறிப்பாரையும் முன்னே ஒன்று கூறிப் பின்னே ஒன்று பேசுபவரையும், பொய்ச்சாட்சி சொல்பவர்களையும் புத்திரபேதம் செய்பவர்களையும் கூறலாம் 9. குறும்பு — சிறுமைக்குணம்

10. பகையும், குறும்புமாகிய பண்புப்பெயர்கள். பகைவரையும் குறும்பரையும் உணர்த்துவதால் பண்பாகுபெயர்கள்

அரசனாலும் வாழ்வாராலும் கடியப்பட்டு[11] நடப்பதே நாடு என்பதாம்.

ஊ) கவிராசர் : கபட மனதாயிருக்கிறதிரளும், கூட இருந்தே பாழாக்குபவர்களும், பக்குவம் வந்தால் ராசாவை வாதை பண்ணும் துஷ்டர்களும் இல்லாததே நாடாவது.

ஏ) பழைய 2 : சங்கேத வகையால் மாறுபட்டுக் கூடுங் கூட்டமும், உடனுறைந்து நின்றே பாழ் செய்யும் உட்பகையும், வேந்தனை யலைக்குங்கொல்வினைக் குறும்பரும் இல்லாததே நாடாவது.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'பல்குழு'

'பலபலவாய்த் திரளும் திரட்சி' மணக் ; 'பலகுடியைச் சேதம் பண்ணும் தயாயாதிகள்' பரிதி. ; 'மறவர்கள் பெருகிக் கூடும் கூட்டம்' காளி. ; 'சங்கேதவயத்தான் மாறுபட்டுக்கூடும் கூட்டம்' பரிமேல்.; 'கருத்து மாறுபட்ட பல கூட்டம்' சாமி. சிதம்.;'சாதி-சமயம் பற்றி அரசோடு மாறுபட்ட பல கூட்டங்கள்' சபாபதி ; 'மாறுபட்ட பலகூட்டம். அதாவது செல்வாக்குள்ள சிலர் தங்கள் தலைமையின் கீழ் ஊர்மக்களை வெவ்வேறாகப் பிரித்து வைத்து ஊரைக்கெடுக்குங்கட்சிகள்' குழந்தை ; 'அரச பதவிக்காக மாறுபட்ட பலகுழுவும், சாதிசமய வேறுபாட்டால் விளையும் பலவகுப்புக்கள்' தேவநேயர் ; 'அரசியல் கட்சிகள்' வரத., இராம. ; 'தந்நலம் காரணமாக அமைந்துள்ள பல கூட்டங்கள்' சி. இ.

இவற்றுள் இனப்பற்று, தன்னலம், பதவிப்பற்று, இவை காரணமான குழுக்கள் என்ற கருத்தமைந்த உரைகள் ஏற்புடையன. இவை தவிர, தாயாதிகள், சமயம், சாதி பற்றியன ஏற்புடையவல்ல.

'பாழ்செய்யும் உட்பகை'

''மறப்படை மாக்கள் பெருகக்கூடும் கூட்டம்'' காளி. இவர் கரு

11. கடியப்பட்டு — நீக்கப்பட்டு, சினக்கப்பட்டு என்றும் கூறலாம்

துவது அரசுக்கு மாறான படைவீரர்களின் பெருங்கூட்டம் கூடாது என்பது. 'அரசுடன் பகைக்கும் கூட்டம்' பரிதி.; 'நாட்டைக் கெடுக்கும் தலைவர் அதிகாரிகள்' பரிப். ; 'ஆறலைப்பார், கள்வர், குறளை கூறுவார் முதலானோர்' பரிமேல். ; 'கூட இருந்தே பாழாக்குபவர்' கவிராசர் ; 'கூடிக்கெடுக்கும் பகை' சாமி. சிதம். 'உடனிருந்தே கேடுசெய்யும் பகை' சபாபதி, குழந்தை ; 'தந்நலம் பற்றித் தமக்காக நாட்டைக் காட்டிக் கொடுப்பார், பகைவராற் கீழறுக்கப்பட்டார் என இவர்' தேவநேயர் ; 'அரசனையழிக்கும் உட்பகை' வரத. ; நாட்டைப் பாழாக்கும் துரோகிகள்' இராம.

இவற்றுள் ''எட்பகவன்ன சிறுமைத்தேயாயினும்'' கேடு பயக்கும் உட்பகையைப் பாழ்செய்யும் உட்பகை என்னவேண்டா ஆயினும், 'பாழ்செய்யும்' இடைநிலைத் தீவகமாகக் கொண்டு பாழ்செய்யும் உட்பகை பாழ்செய்யும் பல்குழு எனல் ஏற்புடையதாகும்.

'கொல் குறும்பு'

'கொலைத் தொழிலையுடைய குறும்பர் மணக். ; 'அரசுடன் பகைக்கும் கூட்டம்' பரிதி. ; 'நாடுபற்றி வாழும் பெருநிலவேந்தனைக் காடுபற்றி வாழச் செய்யும் குறும்பும்' காளி. ; 'அளவுவந்தால் அரசனை அலைக்கும் குறும்பர்' பரிமேல்.. கவிராசர் ; இடம் வாய்த்தபோது அரசனைத் துன்புறுத்தும் கொலைத் தொழிற்குறுநில மன்னர்' கா.சு., சாமி சிதம் , சபாபதி ; 'அரசினை ஆட்டும் காலிக்கூட்டம்' வ சுப. மா. ; 'வேந்து அலைக்கும் குறும்பரும். வழிப் பறிப்பாரும், திருடரும், வஞ்சகம் பொய்பேசும் மனிதரும். புலி கரடி முதலிய கொடிய விலங்குகளும்' மு.ரா.அரு ; 'சிற்றரசர்கள் தங்களுக்குள் போரிட்டும், பலர் கூடிப் பேரரசை எதிர்த்தும் துன்புறுத்தும் சிற்றரசர்கள்' குழந்தை ; 'சமயம் வாய்க்கும் போதெல்லாம் போராலும், கொள்ளையாலும், அரசனையும் குடிகளையும் துன்புறுத்தும் அடங்காச் சிற்றரண் தலைவர்' 'காட்டரணும் மலையரணுங் கொண்ட சிற்றரசர் போன்ற கொள்ளைத்தலைவர் குறும்பு- சிற்றரண்' தேவநேயர். 'பல்குழுவால் அரசும், உட்பகையால் அரசனும், கொல்குறும்பால் குடிகளும் துன்புறுவர்' எனத் தனித்தனியியைத்துப் பொருள் காண்பர் வரத. மேலும் குறும்பு.

என்பது அரசாட்சியில் கட்டுப்பாடில்லாமையால் உண்டாவது என்பர். ஆகவே குறும்பு—மக்கள் மாட்டுண்டாகும் அடங்காமை எனப் பண்பாகக் கருதுகிறார் எனலாம். 'குறும்பு - கொடியர்' சி. இ. ; அராஜகக் குறும்புகள்' இராமை.

இவற்றுள் குறும்பு குணமாக்கொள்வர் சிலர். குறும்பர் சிற்றரசர் கொள்ளைக் கூட்டத்தார் என்பார் சிலர்; காட்டரணையும் மலையரணையும் இடமாகக் கொண்டு நாட்டைக் காக்க அரசனால் அமைக்கப்பட்டவர்கள் என்பர் சிலர். இங்ஙனம் பலநோக்கிற் பலபொருளைக் காண்கின்றோம்.

இவற்றுள் குறும்பு-நேர்மையற்ற குணம், மலைக்குன்று, பாலை நிலத்து ஊர், இவைகட்குப் பெயராய் வரும் பலபொருள் ஒரு சொல். இதுவும் முதலின் குணப்பெயராய் அக்குணத்தையுடைய பொருளின் பெயராய், அப்பொருள் மிகுதியாக உள்ள இடத்தின் பெயராய், பின்பு ஆகுபெயராய் அங்கு வாழும் மக்களை உணர்த்துவதாய், பின் ஒருசாதியின் பெயராய் வருவது எனலாம். ஈண்டு ஆசிரியர் வள்ளுவனார் குணத்தையுடைய இருதிணைப் பொருளும் உணர்த்தும் நிலையில் 'பல்குறும்பும்' என்றது ஊன்றி எண்ணி இன்புறத்தக்கது. அதனாலேயே மு. ரா. அரு. பல்குறும்புப் பட்டியலில், கொலைத்தொழிற் குறும்பரும், வழி பறிப்பாரும் திருடரும், பொய்யரும் ஆகிய மக்களையும், புலி கரடி பன்றி முதலிய விலங்கினங்களையும் சேர்த்துள்ளனர். மு ரா.அரு. பரிமேலழகர் உரையை ஒட்டித் தெளிபொருள் வசனம் எழுதியவர் என்பதை நினைவிற்கொண்டு, பரிமேலழகர் உரை ஆறுமுகநாவலர் சென்ற துன்மதிப் பதிப்புமுதல் இன்றுவந்த பதிப்பு வரை 'பாழ்செய்யும் உட்பகை' என்பதன் விளக்கமாக ஆறலைப்பார் முதல் கரடிவரையுள்ள முற்கூறிய மக்களினம் விலங்கினங்களைக் காட்டியுள்ளது.

உட்பகை என்பதற்கு ஆசிரியர் வள்ளுவனார் தரும் 'தமர் நீரும்', 'கேள்போல் பகைவர்', 'மனம் மாணா உட்பகை' உறல் 'முறையான் உட்பகை', ஒன்றாமை ஒன்றியார்கண்படின்', 'உடம்பாடிலாதவர் வாழ்க்கை' என்ற குறட்பாக்களால் உறவினராயும், ஐம்பெருங்குழு எண்பேராயத்தினராயும், காட்டரண் மலையரண்களிலிருந்து நாட்டுக் காவலர்களாயும் இருப்பவர்கள் நீறுமேற்

பூத்த நெருப்பாய் உட்பகையாயிருந்தால் கேடுறும் என்பதை வலியுறுத்துகிறார். ஆதலால், உட்பகையுள் ஆறலைப்பாரும், கள்வரும், பன்றியும் புலியும், கரடியும் அடங்கா என்பதுறுதி அன்றியும் ஆறலைப்பார் முதலாயினார்க்கு ஆறலைத்தல் முதலியன தொழிலாதலைப் பொருளிலக்கணமுங் காட்டுதலின் அது உட்பகையாகாது. புலி கரடி முதலியவற்றின் இயல்பே கொன்றுண்ணலாதலின் அது உட்பகையாகது.

குறும்பு என்பது முற்கூறியவாறு ஆறலைப்பார் முதல் பன்றியீறான உயிரின்ங்களை உணர்த்துதல் கூடும் என்ற ஆய்வில் ஆழ்ந்த கவிராயர் உட்பகையில் கூட இருந்தே கேடு நினைத்துப் பாழ்செய்யும் உட்பகையைக் காட்டி, குறும்புள் ஆறலைப்பார் முதல் பன்றியீறான அனைத்தையும் காட்டினர்.

இவர் பரிமேலழகர்வழி பிறழாத தெளிபொருள் வசனம் எழுதுபவராதலான் பரிமேலழகர் உரைப்பிரதியும் அப்படித் தான்இருந்திருக்க முடியும் எப்போதோ யாரோசெய்த தவறு வழி வழியாக வந்து கொண்டேயிருக்கிறது என்று எண்ணத்தோன்றுகிறது. இயையுமேல் பரிமேலழகர் உரைப்பகுதியைத் திருத்திக்கொள்க. அறிஞருலகம் ஏற்குமாயின் பாடத்தையுந் திருத்தலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

பழுதுசீர் நாட்டுக் கமரர்கள் சாதி பற்றுசங் கேதத்தி னீண்டும்
குழுவுமா றலைக்கும் கள்வர்பொய் குறளை கூறுவோர்
பன்றிமான் முதலாய்க்
கெழுவுமுட் பகையும் அளவுபார்த் தரசைச் கெடுக்கும்கொல்
குறும்பரும் மிக்க
மழைமழை இன்மை எலிகளி விட்டில் மன்னராங் கோளுமாம்
மைந்தா. — விநா., அரசி., 118

74.6. கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை. (736)

உரைப்பகுதி :

அ) மணக். : கெடுதலை அறியாதாய், கெட்டதாயினும் பயன்

குன்றாத நாட்டினை எல்லா நாடுகளினும் தலையான நாடு என்று சொல்லுவர் எ-று.

இது மேற்கூறிய[1] விட்டில் முதலாயினவற்றால் நாடு கெட்டதாயினும், பின்பும் ஒருவழியால் பயன்படுதல் கூறிற்று.

ஆ) பரிதி : பிறர் நாட்டிற்போய் ஏதொன்றும் தேடாமலும், பகைவரால் கெடுதல் வாராததாயும், வாழ்ந்தார் கெட்டால் நாட்டாண்மைக்காரனைச் செல்வனாக்குவதும் நாட்டுக்குச்சிகாமணி[2] எ-று.

இ) பரிப். : கெடுதல் அறியாதாய்க் கெட்டது ஆயினும் பயன் குன்றாத நாட்டினையே எல்லா நாடுகளினும் தலையான நாடு என்று சொல்லுவர் எ-று.

மேல் கூறிய விட்டில் முதலாயினவற்றால் கெட்டது ஆயினும் பின்பும் ஒருவாற்றால் பயன்படுதல் ஆவது தலையான நாடு என்றது.

ஈ) காளி. : வேற்று அரசரால் கேடு அறியாததாய் யாதானும் ஒருவாற்றால் கெட்டஇடத்தும் பின்னும் விளைவளம் குறைவு படாதாகிய நாடு யாது? மற்று அது நாடுகளில் பெரிதும் தலைமைப்பாடு உடையது எ று.

உ) பரிமேல். : பகைவரால் கெடுதல் அறியாததாய், அரிதிற் கெட்டதாயினும் பொழுதும் வளம் குன்றாத நாட்டினை, எல்லா நாட்டினும் தலை என்று சொல்லுவர் நூலோர்.

அறியாத, குன்றாத என்னும் பெயரெச்சங்களின் இறுதி நிலைகள் விகாரத்தால் தொக்கன. கேடறியாமை, அரசனாற்றலானும் கடவுட் பூசை அறங்கள் என்று இவற்றது செயலானும் வரும். வளம்-ஆகரங்களிற்[3] படுவனவும்[4] வயலினும் தண்டலையினும் விளைவனவுமாம். குன்றாமை-அவை செய்யவேண்டாமல் இயல்பாகவே உளவாயும் முன் ஈட்டப்பட்டும் குறைவறுதல். இவை ஆறுபாட்டானும் நாட்டது இலக்கணம் கூறப்பட்டது.

காரி.: அறியாது குன்றாத என்னும் வினையெச்சம் பெயரெச்சங்களின் இறுதிநிலை என்க.

1. மேற்கூறிய - 732ம் குறளிற் கூறியவண்ணம் 2. சிகாமணி - முடிமணி
3. ஆகரம் - சுரங்கம் 4. படுவன - பொன், வெள்ளி முதலியன

ஊ) கவிராசர் : பகைவராலே கெடுக்கப்படாததாய், ஒரு காலத்திலே கேடு வந்தாலும் அப்பொழுதும் தன் வளப்பம் குன்றாத நாட்டினை, எல்லா நாட்டினும் தலை என்று பெரியோர் கள் சொல்லுவர் எ-று.

எ) பழைய2 : 'கேடறியா கெட்ட' பாடம்.
பகைவராற் கருப்பினாற் கெடுதலறியாதாய்க் கெட்டாலும் வளமை குன்றாத நாட்டினையே மற்ற நாட்டினுக்கெல்லாம் தலைமையென்று சொல்லுவர் நூலோர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறளில், 'கேடுஅறியா' 'கெட்டவிடத்து' என்ற தொடர்கள் உரைகளானும், அவற்றிற் கூறும் இலக்கணவகை யானும் தெளிவற்ற நிலையைத் தருகின்றன.

உரைவகையரன்: 'கெடுதலை அறியாதாய்' மணக்.; 'கேடு அறியாததாய்' பரிமேல்., காளிங்கர் முதலானோர்; 'பிற நாட்டிற் சென்று ஏதொன்றும் தேடாமல்' பரிதி.; பரிதி உரை அவர்கண்டபாடம் 'தேடரிதாய்' என்றிருத்தல் தகும் என்பதைக் குறிக்கிறது.

இராம. 'ஒருகெடுதிவராமல் நடந்துகொள்வதோடு' என்று உரைகண்டு நாடு நடந்துகொள்வது எப்படியென்ற ஐயம் எழ முற்கூறியபடி உள்நாட்டுத்தீமைகள் இல்லாமல் நடந்துகொள் வதோடு என்று அமைதிதரும் வகையான் முற்குறளிற் கூறிய பல்குழு முதலியவற்றால் தீமைநேராதவண்ணம் எனவும் விரிப்பர். எங்ஙனம் ஆயினும் முடிபு வழு நீக்குமாறு இல்லை.

சாமி.சிதம். 'பகைவரால் கெடுக்கப்படாததும்' என்பர். இதுவும் கருத்துப் பொருளாயின் குற்றமின்று இல்லையாயின் 'அறியா' என்பது 'அறியாதது' என எங்ஙனம் வினையால ணையும் பெயராயிற்று என எண்ணச் செய்யும்; அங்ஙனமே பின்வரும் வளங்குன்றாதது என்பதும்.

வரத. கூறும் பகைவரால் கேடுசெய்யாதபடியும், வளங் களைகுன்றாது கொடுக்கும்படியும் என்பனவும் முடிவுவகையிற் குழம்பியனவே.

தேவநேயர், கேடறியாமைக்கும், வளங்குன்றாமைக்கும் காரணங்கூறி உரைவிரிப்பினும் 'கேடறியாததாய், வளங்குன்றாததாய்' என உரைவகுத்து 'அறியா' 'குன்றா' என்பன ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பர். மு.ரா.அரு. பரிமேலழகரை ஒட்டி உரைப்பர். குழந்தை 'கேடறியாததாய்' 'வளங்குன்றாத நாட்டினை' என உரை கூறி 'அறியாத,குன்றாத என்பன ஈறுகெட்டன என்பர். 'அறியாததாய்' என உரைத்து 'அறியாத' என்பது ஈறுகுறைந்தது என்றல் எங்ஙனம் பொருந்தும்? மூ.கோ. 'கேடு-தலைக்கேடு அதாவது மக்களின் மரணத் தொகை' எனப் புதுநோக்கில் திருப்புவர். சி.இ., சபாபதி முதலியோர் பரிமேலழகரை ஒத்துரைப்பர்.

இலக்கணவகையால் 'கேடறியாததாய்' 'வளங்குன்றாததாய்' என உரைகண்டவர்கள், பெயரெச்சங்களின் ஈறு விகாரத்தாற்றொக்கது எனல் எங்ஙனம் பொருந்தும்? சிந்திக்க. பெயரெச்சங்களாக்கியும் பெயரெச்சங்களின் ஈறுகெட்டது என்பதும் எங்ஙனம் பொருந்தும்? இதுவரை, சற்றேறக்குறைய 100 ஆண்டுகளாக வெளிவந்த பதில்களனைத்திலும் பரிமேலழகர் உரை அறியாத, குன்றாத என்னும் பெயரெச்சத்தீறுகள் விகாரத்தால் தொக்கன என்ற குறிப்பே தொடர்ந்து வருகின்றன.

'கேடறியாததாய்' என்ற பரிமேலழகரும் பிறரும் தரும் குறிப்புக்கள் முற்றெச்ச வாய்பாட்டால் விதிக்கப் பெற்றுள்ளன. வினைமுற்று வினையெச்சமாமேயன்றிப் பெயரெச்சமாகாது என்பது துணிபு. ஆகவே உரையும் இலக்கணக்குறிப்பும் இயையுமாறின்று

(1906—1908) ஆண்டு வரை வந்த செந்தமிழ் இதழ்களிலும் எமது திருக்குறள் உரைவளப்பதிப்புக்களிலும் (1950—1957) அடுத்து இவற்றை ஒட்டி வந்த 1980 பதிப்பிலும், 'கேடறியாது, வளங்குன்றாத என்னும் வினையெச்ச பெயரெச்சங்களின் இறுதிநிலைகள் விகாரம் என்க' என்ற குறிப்புள்ளது. இது பரிமேலழகர் உரைக்கு விளக்கமாகக் காரிரத்னகவிராயர் எழுதியது. ஆதலால் அவர்காலத்துப் பரிமேலழகர் உரைக்குறிப்பிலிருந்த உண்மை நிலை அறிதல் கூடும்.

இவ்வுரைக்குறிப்பின் உண்மையை நோக்கின் உரைப்பகுதிகளிலும் 'கேடறியாது கெட்டவிடத்தும் வளங்குன்றாத நாடே நாட்டின் தலை என்ப' என்றிருத்தல் கூடும் எனத்துணியலாம். 'அறியாதாய்' என்ற மணக்குடவர் உரை பிற உரைகளில், 'அறியாது' என்ற ஒன்றன்பாற்குறிப்பு முற்றின் எச்சமாக 'அறியாதாய்' என 'ஆய்' என்ற எச்ச விகுதி புணர்க்கப்பெற அதனை ஏடுகளில் எழுதுவோரானும் படிப்பார்க்க.போரானும் விளைந்த பிழை 'அறியாததாய்' என உருக்கொண்டது. இலக்கணக் குறிப்பிற்கு இது இயைபின்றி இருத்தலை அறிந்த பதிப்பாசிரியர்கள் 'வினையெச்சபெயரெச்சங்கள் விகாரமாயின' என்பதை 'அறியாத—குன்றாத என்ற பெயரெச்சங்கள் விகாரமாயின' எனத் திருத்தினர். இத்தனையும் பதிப்பாசிரியர்களால் நிகழ்ந்தவை. ஆகவே பரிமேலழகர் உரைப்பகுதி 'கேடறியாது, கெட்டஇடத்தும் வளங் குன்றாத நாடே தலை' என்றிருத்தலே பொருந்துவதாம். இத்திருத்தத்தைக் கருதத்துணைசெய்தது நுண்பொருள் மாலை என்க.

74.7. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு. (737)

அ) மணக்.: மேல்நீர் கீழ்நீர் நிறுத்தலாமிடத்தினைக் கிணறு கல்லி[1] நீருண்டாக்கும் இடத்தினையும், பயன்படு மலையினையும் ஆறொழுகும் இடத்தினையும் வலிய அரணாகும் இடத்தினையும் கண்டு, அவ் விடத்தை நாடாக்குக: அவை நாட்டிற்கு உறுப்பாதலால் எ-று.

இஃது இவை ஐந்துங் குறையாமல் வேண்டும் என்றது.

ஆ) பரிதி : கிணற்றுநீர், குளத்துநீர், ஆற்றுநீர் இந்த மூன்றுவகை நீரும் காடும் மலையும் அரணும் நாட்டிற்கு உறுப்பு எ-று.

இ) பரிப்.: ஆற்றுநீரும் வாய்ந்த மலையும் நிலை நீரும் ஊற்று நீரும் வலிய அரணும் நாட்டிற்கு அங்கம் எ-று.

நாடு ஆக்கும் இடத்து யாறு ஒழுகும் இடத்தினையும், பயன்படும் மலையினையும், ஏரி ஆக்கும் நீர் நிறுத்தல் ஆம்

1. கிணறுகல்லி - கிணறு தோண்டி

இடத்தினையும், குன்று கல்லி நீர் உண்டாக்கல் ஆம் இடத்தினையும், அரண் ஆக்கும் இடத்தினையும் கண்டு அவ்விடத்தை நாடு ஆக்குக : அவை நாட்டிற்கு உறுப்பு ஆகலான் என்றவாறு ஆயிற்று. இவ்வைந்து உறுப்பும் குறையாமல் வேண்டும என்றது.

ஈ) காளி. : 'வருபுனலும் வாய்ந்த மலையும் இருபுனலும்' பாடம்.

வருபுனல் என்றது கூடிக்கூடிப் பல இடத்தும் மலை முதலாகக் கடல் ஈறாக வழித்தொடர்பு அறாது[2] வருபுனல் உடைய ஆறுகளும்; வாய்ந்த மலை என்றது வாய்ப்புடை மலைகளும்; இருபுனலும் என்றது சிறிது கல்லிய இடத்துக் கீழ் நீரும் மேல்தெரியும் குளநீரும் ; அரணும் என்றது பல இடத்தும் தனக்கும் தன் படைத்தலைவர்க்கும் தனது நாட்டுக் குடிகளுக்கும் சென்ற இடத்துப் பிறர் நலியாது சேர்ந்து நீங்குதற்கு உரிய அரண்களும். இனி நாட்டு எல்லைக்கண் மாற்றார் வருதற்கு அரிய புலியும் எண்கும்[3] மாவும்[4] பயிலும்[5] அடர் பெருங் காடும், மிடைதரும்[6] கான்யாறும் இங்குச் சொன்ன இவை அனைத்தும் மாசு அறச் சிறப்புடைய நாட்டிற்கு உறுப்பு எ-று.

உ) பரிமேல். : கீழ்நீர் மேல்நீர் எனப்பட்ட தண்ணீரும், வாய்ப்புடைத்தாய மலையும், அதனின்றும் வருவதாய நீரும், அழியாத நகரியும்,[7] நாட்டிற்கு அவயமாம்.

ஈண்டுப் புனல் என்றது துரவுகேணிகளும்[8] ஏரிகளும் ஆறுகளுமாகிய ஆதாரங்களை;அவயமாதற்குரியன[9] அவையேயாகலின்[10] அவற்றான்[11] வானம் வறப்பினும்[12] வளனுடைமை

2. வழித்தொடர்பு அறாது - வழியில் இடையறாது ஓடி வருகின்ற தொடர்ச்சி
3. எண்கும் - கரடியும் 4. மாவும் - விலங்கும் 5. பயிலும் - பழகுகின்ற
6. மிடைதரும் - நெருங்கிய 7. அழியாத நகரி - அழியாத நகரம்
8. துரவு கேணிகளும் - கிணறும் சிறுகுளமும்
9. அவயவமாதற்குரியன - உறுப்பாதற்குரியன
10. அவையே யாகலின் - துரவு கேணிகளாகலின்
11. அவற்றான் - துரவு கேணி முதலியன இருத்தலால்
12. வானம் வறப்பினும் மழை பெய்யாது ஒழியினும்

பெறப்பட்டது. இடையதன்றி[13] ஒருபுடையதாகலும் தன் வளந்தருதலும்[14] மாரிக்கண் உண்ட நீர் கோடைக்கண் உமிழ்தலும் உடைமைபற்றி 'வாய்ந்த மலை' என்றார். அரண் ஆகுபெயர்[15] இதனான் அதன் அவயவம் கூறப்பட்டது.

ஊ) **கவிராசர்:** கீழ்நீர் மேல்நீர் எனப்பட்ட தண்ணீரும், வாய்ப்பான மலையும், மலையினின்றும் வரும் அருவியாறும், நல்ல அரணாகிய காவலும் உடையது நாட்டிற்கு அவயவமாம்

எ) பழைய 2: 'ஏய்ந்த மலையும்' பாடம்.
கீழ்நீர் மேனீரென்னு மிருபுனலும் பொருந்திய மலையும் மலையினின்று வருபுனலும் அழியாத கோட்டையும் நாட்டிற்கு அவயவமாம்.

ஐ) **தொகுப்பும் குறிப்பும்:**

மணக்குடவர் பரிப்பெருமாள் உரைகள் 'புதிதாகக் காடுகெடுத்து நாடாக்க வேண்டின் இவ்வைந்துறுப்புக்களும் ஒருசேர அமைந்த இடத்தைத் தேர்ந்து எடுக்க' என்கின்றன. ஏனைய உரைகள் 'இவ்வைந்தும் ஒருசேர அமைதல் அருமையாதலின் ஆங்காங்கமைத்தல் இன்றியமையாதது' என அறிவிக்கின்றன.

இப்போது கிடைத்த மணக்குடவர் உரைப்பிரதியில் "மேல்நீர்கீழ்நீர் நிற்கலாம் இடத்தினைக் கண்டு கல்லி நீருண்டாக்கும் இடம்" எனப் பாடம் உள்ளது பரிமேலழகர் கண்ணில் இந்தப்பாடம் பட்டிருக்கும்போலும். அதனால் அவர் கிணற்றை மட்டும் கூறாது 'பாசனத்திற்குப் பயன்படும் துரவு கேணிகளும்

---

13. இடையதன்றி - இடைப்பட்டதன்றி
14. தன்வளன்தருதலும் - மழை தன்வள்த்தைக் கொடுத்தலும்
15. மாரிக்கண் உண்டநீர் கோடைக்கண் உமிழ்தலும் - மழைக்காலத்தில் குடித்த நீரை வெயில்காலத்தில் வெளிப்படுத்தலும்
16. அரண் என்ற முதற்பொருளின் பெயர் அதன் சினைக்கு ஆயினமையின் சினையாகுபெயராம்

ஏரிகளும்' என்றும் காளிங்கர் 'சிறிது கல்லிய இடத்துக் கீழ் நீரும், மேல்தெரியும் குளநீரும்' என்றும் உரைக்ண்டனர். இங்ஙனம் கொள்ளின் மணக்குடவரும் ஏனையோர் போல 'நாடு அமைக்கும்போது உறுப்பைந்தையும் உண்டாக்கிக் கொள்க' என்னும் கருத்தினராதலையறியலாம்.

'வாய்ந்தமலை' என்பதற்குப் பரிமேலழகர் தரும் விளக்கம் வனப்புடையது, 'வருநீருக்குக்' 'கவிராசர் கருதும் பொருளைக் காட்டிலும் காளிங்கர் உரை நயமானது. தேவநேயர், 'வாய்ந்தமலை-நாட்டிற்கு எல்லையாகவும் அரணாகவும், வறப்பினும் வளந்தரும் வன்மையதாகவும் அமைந்தமலை' என்பர். கா. சு. 'இருபுனல்' என்பதிலேயே 'ஆறு,குளம், கேணி முதலியவற்றையடக்கி 'வருபுனலை — அருவி' என்பர். வ.சுப.மா. 'வருபுனல் — அருவியே' என்பர். இவர்களிருவரும் இருபுனலோடு வருபுனலை ஒருங்கொண்ணாமையாலும் வாய்ந்தமலையின்பின் இடம்பெறச் செய்தமையானும் இங்ஙனம் கருதினர் போலும். மு. ரா. அரு.வும் இக்கருத்தினரே. வரத., 'இருபுனல் — மிக்க புனல்' எனக் கொண்டு 'தண்ணீர் நிறைந்த ஏரி குளங்கள். வருபுனல்—அருவியாய் வரும் ஆறுகள். வல்லரண் — வலிமைபொருந்திய பாதுகாவல்' என்பர். 'அணைக்கட்டுக்களால், ஏரி கால்வாய்களால், பெரியநீர் நீர்நிலைகள் எனவும், உண்ணும் நீர், பாசன நீர் எனவும் கொள்ளலாம்' என்பர். இவையனைத்தும் முன்னோர்வழித் தோன்றிய புதிய சிந்தனைகள். சி.இ. 'இருபுனல்—பெரியகடல்' என்பர். இவர் மழைக்குக் காரணமாகிய நெடுங்கடல் என்பதனை எண்ணியிருக்கவேண்டும்; கடலும் இயற்கை அரண் வகையுள் ஒன்றாகலின்.

மு.கோ. 'இருபுனலும் வாய்ந்தமலை' எனக் கூட்டுவர். 'வாய்ந்தமலை—வெப்பநிலையைச் சமன்செய்யும் மலை' என்பர். இக்கற்பனைகள் யாவும் வள்ளுவர் நாட்டிற்குறுப்பு ஐந்தென்று இக்குறளில் தொகைகொடுத்தோதாமையின் விளைவாம்.

இவையனைத்தையும் இணைத்து எண்ணும்போது கருத்து வகையான் காளிங்கர் உரையும், செறிவால் பரிமேலழகருரையும் சிறக்கின்றன எனலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

இருபுனல் நாட்டிற் குறிப்பு :-

நீரகம் பொருந்திய ஊரகத்திரு —கொன்றை., 51

முற்றும் :

இருபுனல் வாய்ந்த மலைவரு புனலும் இடவிய நகர்களும் உடைத்ததாய்ப்
பெருகளப் பொருளும் ஒழிவற விளைக்கும் பெருங்குடி களும்கலம் காலால்
பொருள்பல ஈட்டும் செல்வரும் மறையோர் புரையறு தவத்தினர் துறவோர்
மருளுறு கலைஞர் ஆதியோர் பலரும் மன்னிவாழ்ந் திருப்பது நாடு. —வி நா. அரசி., 117

வருபுனல் வாய்ந்த ஓங்கல் வல்லரண் இருநீர் என்னும்
பொருவில்பல் லுறுப்பிற் றாகி ......... நாடு.
—தணிகை. திருநாட்டு., 4

*74.8. பிணி இன்மை செல்வம் விளைவின்பம் ஏமம்*
*அணிஎன்ப நாட்டிற்கிவ் வைந்து. (738)*

உரைப்பகுதி:

அ) மணக்.: நோயின்மையும், செல்வமுடைமையும், விளைவுடைமையும், இன்பமுடைமையும், காவலுடைமையும் என்று சொல்லப்பட்ட இவை ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று சொல்லுவர் எ-று.

ஆ) பரிதி.: நோயின்மை, செல்வம், பதினாறு தானியமும்[1] விளைவு, அரண், வினையற்றிருக்கை இந்த அஞ்சும் நிலத்துக்கு ஆபரணம் எ-று:

---

1, பதினாறு தானியம்— நெல் புல் வரகு திணை சாமை இறுங்கு தோரை இரசி எள்ளு கொள்ளு பயறு உளுந்து அவரை கடலை, துவரை மொச்சை

இ) பரிப் : நோய் இன்மையும், செல்வம் உடைமையும், விளைவு உடைமையும், காவல் உடைமையும் என்று சொல்லப்பட்ட இவை ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று சொல்லுவர் எ-று.

செல்வம் — பொன்னும் பசுவும் பலவாயின மிகுதல்; விளைவு ஆவது-பல தானியங்களும் பொலிவு உடைமை; இன்பம் ஆவது -கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் இன்பு உறப் படும் பொருள்களை உடைமை; காவல் ஆவது மாற்றரசனாலும் தன் அரசனாலும் நலிவு இன்மை. மேல் நாட்டிற்கு அங்கம் ஆவன கூறினார். இஃது அழகு ஆவன கூறிற்று.

ஈ) காளி.: நிலனும் நீரும் சோறும் முதலியவற்றின் இனிமை களானே பிணி பெரிது இன்மையும், பலர் வழிச் செல்வம் பெரிது உடைமையும், வேட்பன எல்லாம் விளைந்து செல்கின்ற விளைநுகர் பொருளும்[2] நுண்ணறிவு இன்பம் ஆகிய இன்பமும் ஒருநாள்போல் எந்நாளும் அரசனால் ஏமுற்றுச்[3] செல்வதோர் ஏமமும் என்னும் இவை ஐந்தும் நாட்டிற்கு அணிகலம் எ-று.

உ) பரிமேல்.: நோயின்மையும் செல்வம் விளைதல்[4] இன்பம் காவல் என்றிவை உடைமையுமாகிய இவ்வைந்தினையும் நாட்டிற்கு அழகு என்று சொல்லுவார் நூலோர், எ-று.

பிணியின்மை நிலநலத்தான் வருவது. செல்வம் மேற் சொல்லியன[5]. இன்பம் விழவும்[6] வேள்வியும்[7] சான்றோரும் உடைமையானும், நுகர்வன[8] உடைமையானும், நில நீர்களது நன்மையானும், வாழ்வார்க்கு உள்நிகழ்வது[9]. காவல் எனவே அரசன் காவலும் வாழ்வோர்காவலும் அரண் காவலும் அடங்கின. பிறதேயங்களின் உள்ளாரும் விழைந்து பின் அவை யுள்ளாமைக்கு ஏதுவாய அதன் அழகு இதனால் கூறப்பட்டது[10].

2. விளைநுகர்பொருள் — விளைந்த உண்ணக் கூடிய பொருள்

3. ஏமுற்று - இன்பமுற்று 4. விளைதல் - விளைச்சல்

5. மேற்சொல்லியன — கப்பலினும் வண்டியிலும் வணிகர் தரும் பொருள்களும் குடிகள் தரும் வரிப்பொருள்களும், சுரங்கத்திற் கிடைக்கும் புதைப்பொருள் களும் விளையும் மலைப்படுபொருள்களும் ஆம்

6. விழவு — விழா 7, வேள்வி - யாகம் 8, நுகர்வன — உண்பன

9. உள்நிகழ்வது — மனத்திலுண்டவாது

10. வேறுநாட்டில் வாழ்பவரும் எல்லா வளங்களும் பெற்றிருப்பதால் இதனையே விரும்பி தத்தம் நாட்டினை நினையாமைக்குக் காரணமாகிய அந்நாட்டினது பிணியின்மை முதலான அழகு

ஊ) கவிராசர் : வியாதியில்லாமையும், செல்வமுடைமையும், விளைவும், நல்லருசிகளையுடைய வஸ்துக்களும், நல்ல காவலும் எனப்பட்ட இவ்வைந்தும் நாட்டிற்கு ஆபரணம் எ-று.

ஏ) பழைய 2 : நோயின்மையும் செல்வமும் விளைவும் இன்பமும் காப்பும் என்றிவை ஐந்தினையும் நாட்டிற்கு அழகென்று சொல்லுவர் நூலோர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பரிப்பெருமாள் 'செல்வம்-தானியம் தவசம் என்னாமல் பொன்னும் ஆகும் என்பது காண்க. காளிங்கர் 'பிணியின் மைக்குக் காரணம் நிலம் நீர் சோறு முதலியவற்றின் இனிமை' என்பர். சபாபதி 'ஏமம் காவல்: அவை அரண்காவல், அறங்காவல் அரசுகாவல்' என்பர். மு.கோ. பிணியின்மை செல்வம்: செல்வம் விளைவு இன்பம்' எனக் கூட்டிப் பொருள் காண்பர். இங்ஙனம் கொள்ளின் அழகு ஐந்தாமாறில்லை. பிணி யின்மையாலாகிய செல்வம் என்பன போலக் கொண்டாலாவதும், பிணியின்மையும் அதனால் ஆகிய செல்வமும் அச்செல்வத் தாலாகிய இன்பம் என நான்காக்கி அதனோடு ஏமத்தைக் கூட்டி ஐந்தாக்கலாம். இதனால் புதுமை காணும் நோக்கம் நிறைவேறினும் இக்குறளுக்கு இயைபின்மை காண்க.

இவற்றுள் குறணடைக்கு மாறுபடாதன ஏற்புடையன என்க.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

ஆதலிற் குடிகளாதியோர் தொகவும் அழிவுசெய் குழுமுத லகன்று
போதவும் காவல் புரிபிணி யின்மை புகழ்திரு விளைவின்பம்
அனைத்தும்

கோதற நாளும் மிகவுள தாகும் குலைந்தயல் நாடுகள் உறினும்
மேதகத் தாங்கும் வருந்துறா தெவையும் வேண்டுழி அளித்திடும்
மைந்தா. —விநா, அரசி., 119

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து —யசோ.,6

அணி கொளுஞ் சியினி —யசோ.,206

... ... ... ... பொங்கிய செல்வம் ஏமம்
வெருள்பிணி இன்மை இன்பம் விளைவுநன் கணிந்து தாழ்வில்
திருவினர் தக்கோர் சாலச் செறிந்தது தொண்டை நாடு
— தணிகை. திருநாட்டுப்..4

செல்வம் விளையுள் பல்வளஞ் செங்கோல்
கொல்குறும் பின்மை கொடும்பிணி யின்மையென்
றிவ்வகை யாறு நன்னாட் டமைதி. — பிங்கலந்தை.

*74.9. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல*
*நாட வளம்தரும் நாடு. (739)*

உரைப்பகுதி :

அ) மணக். : தேடவேண்டாத வளத்தினையுடைய நாடு என்று சொல்லுவார்; தேடினால் வளந்தருகின்ற நாட்டை நாடு அல்ல என்று சொல்லுவர் எ-று.

ஆ) பரிதி. : புறத்திலேபோய் ஒன்றும் தேடாமல் நானா செல்வமும்[1] உண்டாயிருப்பது நாடு; அல்லது நாடல்ல எ-று.

இ) பரிப். : நாடு என்று சொல்லுவர் தேடவேண்டாத வளத்தினை உடைய நாட்டை; நாடு அல்ல என்று சொல்லுவர் தேடினால் வளம் தருகின்ற நாட்டை எ-று.

இஃது எல்லா நிலத்தினும் உள்ள பண்டம் கலத்தினால் ஆதல் காலினால் ஆதல் தன்னிடத்தே உடைத்தாதலும், தன் நிலத்தில் உள்ள பண்டத்தை மிகுதியாக உடைத்தாதலும் வேண்டும் என்றது.

ஈ) காளி. : நாடு என்று சொல்லுவர் பெரியோர்; யாதினை? எனின் புறத்து ஒன்று போய்த் தேடவேண்டாத பலவகைப்பட்ட விளைவளம் சிறந்த நாடுகளை; மற்று அல்லவை யாது? எனின்

1. நானா செல்வமும் — பலவகைப்பட்ட செல்வமும்

நிலத்து விளையும் வளம் புறத்துப் போய்த் தேடுமாறு விளையும் நாடு எ-று.

உ) பரிமேல்.: தங்கண் வாழ்வார் தேடி வருந்தாமல் அவர்பால்[2] தானே அடையும் செல்வத்தை உடையவற்றை நூலோர் நாடு என்று சொல்லுவர், ஆதலால் தேடி வருந்தச் செல்வம் அடைவிக்கும் நாடுகள் நாடு ஆகா, எ-று.

நாடுதல் இருவழியும் வருத்தத்தின்மேல் நின்றது. "பொருள் செய்வார்க்கும் அஃதிடம்"[3] என்றார் பிறரும். நூலோர் விதிபற்றி எதிர்மறை முகத்தான் குற்றம் கூறியவாறு, இவ்வாறன்றி என்ப என்பதனைப் பின்னுங்கூட்டி இருபொருள் பட உரைப்பின், அனுவாதமாம்[4].

ஊ) கவிராசர்: நாட்டிலே இருக்கிறவர்கள் தேடி வருந்தாமற் செல்வம் அடைவிக்கிறதையே பெரியோர் நாடென்று சொல்லுவர் தேடிவருந்தச் செல்வம் அடைவிக்கிற நாடுகள் நாடல்ல எ-று.

ஏ) பழைய 2: தன்னிடத்து வாழ்வார் தேடி வருந்தாமல் அவரிடத்துத் தானேயடையுஞ் செல்வத்தையுடையவற்றை நூலோர் நாடென்று சொல்லுவர்; ஆதலால் தேடி வருந்தச் செல்வம் அடைவிக்கும் நாடுகள் நாடாகா

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'எல்லாவகையானும் தன்னிறைவுடைய நாடே நாடு என்ற' கருத்தின உரைகள் அனைத்தும்; ஆனால் பரி பெருமாள். எல்லாப் பண்டங்களும் ஒருநாட்டில் விளையா; ஆதலால் தேவையான பண்டங்கள் கலத்தானும் காலானும் தானே வந்துநிறையும் நாடே நாடு'என்றனர். இவர் உரை பண்டமாற்று வணிகமுறையைக் கருதச் செய்கிறது. பரிமேலழகர் தரும் 'நாட்டில் வாழ்வார் தேடியலையாமல் தானே வந்தடையும்

2. அவர்பால் - நாட்டவர்பால் 3, சிவக., 77

4. முன்னர் கூறிய ஒன்றனைப் பின்னரும் ஒரு நிமித்தம் பற்றிக் கூறுதல் அனுவாதம். ஈண்டு 'நாடா . வளத்தன நாடு' என முற்கூறிய ஆசிரியர் பின்னரும் 'நாட வளந்தரு நாடு நாடல்ல' என்று கூறியதையே கூறியது அனுவாதம்

செல்வத்தையுடையது' என்பதும் இக்கருத்தினதே. அங்ஙன மாக வும் தேவநேயர் 'தேடி வருந்தாமல் தானே வந்தடையும் செல்வ முள்ள நாடு இவ்வுலகில் எங்குமில்லை. தேவையாய், தந்நாட்டில் விளையாத தாய் உள்ள பண்டங்களை ஒவ்வொரு நாட்டவரும் சென்று தொகுத்தல் வேண்டுதலின் பரிமேலழகர் கருத்து தவறு டைத்து'என மறுத்து 'பாடின்றிப் பயனில்லை' என்பது போன்ற, பழமொழிகளைக் காட்டி மறுப்பர். ஆகவே மனிதன் தேவை களைப் பெருக்கிக் கொள்ளாமல், தத்தம நாட்டில் விளையும் பொருள்களைக் கொண்டே நுகரும் இன்பத்தோடு அமைவதே நாடு என்னும் கருத்து அமைந்த உரைகள் சிறந்தன. நிலவளம் பருவகாலம். நீர்வளமாறுபாட்டிற்கேற்பப் பொருள்களின் தேவைமாறியே இருக்குமாதல் காண்க.

ஆகவே வள்ளுவர் நானில வேறுபாடும் விளைபொருள் வேறுபாடும் மக்கள் தேவையின்தன்மையும் அறியாதாரன்று பாடுபட்டால்தான் பயனெய்தலாம் என்பதை மடியின்மை முதலிய வற்றால் நன்குணர்த்தியவர். ஆகவே, 'நாடாமல்' என்பதற்கு 'உழைத்து வருந்தாமல்' என்பது பொருளன்று. உழைத்தும் விளைந்தும் தன்னிறைவின்றி மேலும் தேடியலைய வேண்டாமல் என்பதே பொருள். பரிமேலழகர் கருத்தும் இதுவேயாதல் காண்க.

ஒ) ஒப்புமைப்பகுதி: ... ... ... ... ... ... ...

ஓ) மேற்கோள்பகுதி:

சிவஞான : 'நாடென்ப..... நாடு' என்பவாகலின் தேடி வருந் தாதுபெறப் பொருள் கைகூடச் செய்தலாம்; அவ்வாறன்றித் தேடிப் பெறப்பொருள் கைகூடிடச்செய்தல் செய்யாமையோடு ஒக்குமாதலின் நாடாப்பொருள் கைகூடும் என்னாது நாடிய பொருள் என்றல் சிறப்பிலதாம். -கம்ப.விருத் பக்.,6

நாடாவளத்தன என்றது நாடி வருத்தம் உறாதுஎளிதின் எய்தும் வளத்தினையுடையன என்பதேயாம். அது பரிமேலழகர் உரையானும் காண்க.' -கம்ப. விருத். பக்.,9

74.10. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை யில்லாத நாடு. (740)

உரைப்பகுதி :

அ) மணக். : மேற் கூறியவாற்றால் எல்லாம் அமைந்த தாயினும், பயனில்லையாம்; வேந்தனது அமைதியை உடைத் தல்லாத நாடு நாடல்ல எ-று.

இது நாட்டுக்கு அரசனும் பண்புடையனாகல் வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: நாட்டுக்கு உறுப்பானது எல்லாம் உண்டாகிலும் நாட்டாண்மைக்காரன் நன்மையில்லாத நாடு நாடல்ல எ-று.

இ) பரிப்.:மேல் கூறியவாற்றான் எல்லாம் நேர்ந்தது ஆயினும் பயன் இல்லையாம்; வேந்தனது அமைதியை உடைத்து அல்லாத நாடு எ-று.

இது நாட்டிற்கு அரசனும் பண்பு உடையன் ஆக வேண்டும் என்றது.

ஈ) காளி.: அவ்வண்ணமே கீழ்ச்சொல்லி வந்த நன்மைகள் எல்லாம் முற்றுப் பெற்ற இடத்தும் யாதானும் ஒரு பயன் இலதே; யாது? எனின் கொற்றவன் காவல் முற்றுப் பெறுதல் இல்லாத நாடானது எ-று.

இங்ஙனம் பொதுவகையான் நாட்டு அரண் கூறி மன்னர் பதி அரண் கூறலும் இயல்பு ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) பரிமேல். : வேந்தனோடு மேவுதல்[1] இல்லாத நாடு, மேற்சொல்லிய குணங்களெல்லாவற்றானும்[2] நிறைந்திருந்த

1. மேவுதல் — பொருந்துதல்
2. மேற்சொல்லிய குணங்கள் — இவ்வதிகாரத்தில் தள்ளா விளையும் என்ற குறள் முதலாக இதுவரைக் கூறப்பட்ட நாட்டின் குணங்கள் அனைத்தும்

தாயினும் அவற்றான்[3] பயனுடைத்தன்று.

'வேந்தமைவு' எனவே, குடிகள் அவன் மாட்டு அன்புடையராதலும் அவன்றான் இவர் மாட்டு அருளுடையனாதலும் அடங்கின. அவையில்வழி[4] வாழ்வோர் இன்மையின், அவற்றால்[5] பயன் இன்றாயிற்று. இவை இரண்டு பாட்டானும் அதன்[6] குற்றம் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: வேந்தனோடே கூட்டம் இல்லாத நாடு, முன்சொல்லப்பட்ட செல்வங்களெல்லா முடைத்தாயிருந்தாலும், பலனில்லை.

ஏ) பழைய 2: மேற்சொல்லிய வளங்கள் எல்லாவற்றானும் நிறைந்த தாயினும் அவற்றாற் பயனுடைத்தன்று, வேந்தன் அமைதியில்லாத நாடு.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'அமைவு' என்ற பொதுச்சொல்லால் குடிகள் அரசனை மேவுதலும், அரசன் குடிகளை மேவுதலுமாகிய இருதலையும் ஒத்த மேவுதலை விளக்கும் பரிமேலழகர் உரை ஏற்புடையதாகும்

ஒ) ஒப்புமைப்பகுதி:

வந்தமைவில்லாத நாடு:

வள்ளுறு வயிரவா ளரசில் வையகம்
......... ........ ......... ............
......... ........ ......... ............
உள்ளுறை யுயிரிலா வுடலு மொக்குமால் —கம்ப., 2349

---

3. அவற்றான் — மேற்சொல்லிய குணங்களால்

4. அவையில்வழி — அரசன் குடிகளிடத்து அருளுடையனாகவும், குடிகள் அரசனிடத்து அன்பு இல்லா வழியும்

5. அவற்றான் — மேற்சொல்லிய குணங்களால் 6. அதன் — நாட்டின்

## 74. நாடு

| | தள்ளா | பெரும்பொருளால் | பொறையொருங்கு | உறுபசியும் | பல்குழுவும் | கேடறியாக் | இருபுனலும் | பிணியின்மை | நாடென்ப | ஆங்கமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 4 | 7 | 9 | 5 | 6 | 8 | 1 | 2 | 3 | 10 |
| பரிதி. | 3 | 6 | 7 | 9 | 8 | 5 | 1 | 2 | 4 | 10 |
| பரிப். | 4 | 7 | 9 | 5 | 6 | 8 | 1 | 2 | 3 | 10 |
| காளி. | 4 | 6 | 8 | 2 | 7 | 3 | 1 | 9 | 5 | 10 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

74 வது அதிகாரம் 'நாடு' முற்றிற்று.

# 75. அரண்

அ) மணக்.: அரணாவது அரணிலக்கணம் கூறுதல். மேல், நாட்டு இலக்கணம் கூறினார். நகர் இலக்கணம் கூறுகின் றாராதலின், அதன் பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: அரணாவது நாலுவகை அரண்[1] அரசர்க்கு வேண்டும் எ-று.

இ) பரிப்.: அரண் ஆவது-அரண் இலக்கணம் கூறுதல் மேல் நாட்டுஇலக்கணம் கூறினார் நகர்இலக்கணம் கூறுகின் றார் ஆகலின் அதன் பின் இது கூறப்பட்டது.

உ) பரிமேல்.: இனி, அந்நாட்டிற்கு[2] உறுப்பாய் அடங்குமா யினும் பகைவரால் தொலைவு[3] வந்துழி அது[4] தனக்கும் அரசன் தனக்கும் ஏமமாதற் சிறப்புப் பற்றிப் பிறிதோர் அங்கமாக ஓதப்பட்ட அரண் இவ்வதிகாரத்தால் கூறுகின்றார். அஃதாவது இன்னதென்பதூஉம், அதிகார முறைமையும் இதனுள் விளங்கும்.

ஊ) கவிராசர்: அஃதாவது-அந்த நாட்டுக்குப் பகைவராலே உபத்திரவம்[5] பண்ணப் போகாத காவலை உடையது (எ-ம்).

1. நாலுவகை அரண் — மலை, நீர், காடு, நிலம் ஆகிய அரண்கள்
2. அந்நாட்டிற்கு — வல் அரணும் நாட்டிற்கு உறுப்பு என்றதனால் அரணை உறுப்பாக உடைய நாட்டிற்கு என்க
3. தொலைவு — அழிவு 4. அது — அரண் 5. உபத்திரவம் — துன்பம்

ஏ) பழைய 2 : அஃதாவது, காடு, மலை, கோட்டை, முதலாயின வரண்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இராம. 'காவல் உள்ள இடம், அதாவது கோட்டை' போர்க்காலங்களில் தற்காப்பிற்கும்,ஏனைய காலங்களில் போர்க் கருவி, பொருள், உறுதிமொழிச் சாசனங்கள் இவற்றைப் பாது காக்கவும் பயன்படுவன என்பர்.

வரத. 'பாதுகாவல் அரண் இருவகை இயற்கையும் செயற்கையும் என. இயற்கை மலை கடல், நீர், காடு மணற் பரப்பு முதலியன செயற்கை கோட்டை கொத்தளங்கள் அகழ் முதலியன. மாற்றார்க்குத்தோற்றாத பாதுகாப்புக்கள் அனைத்து மாம்' என்பர்.

தேவநேயர் 'நாட்டிற்கும் தலைநகருக்கும், அரசனுக்கும் பாதுகாப்பளிக்கும் இயற்கையுஞ் செயற்கையுமாகிய இருவகை யமைப்பு' என்பர்.

கா. சு. 'நாட்டுக்குரிய பாதுகாப்புக்கள் இவை' என்பர்.

மு.ரா.அரு. 'போர்க்காலத்து அரசனையும் சேனைகளை யும் பாதுகாக்கும் சிறப்புடையமதில் என்பர். இவர் உரை மதி லரண் ஒன்றையே கருதுதல் காண்க சி. இ. காப்பு உடைமை' என்பர்.

குழந்தை 'அரணியல்' எனப் போக்கியார் கருத்தை ஒத்து அரண். பொருள் செயல் வகை இரண்டனையும் அடக்கிக் கூறுவர். அரணினது சிறப்புக் கூறுதல். அதனையறிந்து வாழ் விடத்தை அரண் செய்து கோடல்' என்பர்.

அரண் என்பது நாட்டிற்கும் நகருக்கும் பாதுகாப்பளிக்கும் ஒருறுப்பு. பெயர்ச்சொல்; இதன் அடியாக வேறு வாய்பாட்டு வினைகள் தோன்றாமையும் வழக்கின்மையுமே இது பெயர்ச் சொல்லே எனற்கு ஏற்ற சான்று. அத்தகைய அரண் என்னும் பெயர்ச்சொல் அதனிலக்கணத்தையுணர்த்தும் பகுதிக்குப் பெய ராயிற்று. இதனை நன்கு விளக்குவது தேவநேயர் விளக்கம்.

75.1. ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தன்
போற்று பவர்க்கும் பொருள். (741)

**உரைப்பகுதி :**

**அ) மணக்.:** வலியுடையார்க்கும் அரணுடைமை பொருளாவது பகைவர்க்கு அஞ்சித் தன்னைக் காப்பார்க்கும் அரணுடைமை பொருளாவதாம்; ஆதலால், அதனைச் செய்ய வேண்டும் எ-று.

**ஆ) பரிதி. :** வீரர்க்கும் அரணே பொருள்; பொருள் படைத்தார்க்கும் அரணே பொருள் எ-று.

**இ) பரிப் .:** வலி ஆற்றுவார்க்கும் அரண் பொருள் ஆம்: வலிவு இன்மையான் அஞ்சித் தம்மைக் காப்பார்க்கும் அரண் பொருள்: ஆதலால் அதனைச் செய்யவேண்டும் எ-று.

வலி உடையோர்க்கும் ஒரு காலத்தே வேண்டுதலின் வேண்டும் என்றார்: இஃது அரண் செய்ய வேண்டும் என்றது.

**ஈ)காளி. :** சோர[1] மன்னரைப் போர் ஆற்றுபவர்க்கும் அரண் பொருள்: இனி இங்ஙனம் போர் ஆற்றாது அஞ்சி அகம்புக்குத் தம்மைப் பேணிக் கொள்பவர்க்கும் அரண் பொருள்; அதலால் அதனை இகழ்தல் ஆகாது எ-று.

**உ) பரிமேல்.:** மூவகையாற்றலும்[2] உடையராய்ப் பிறர்மேல்[3] செல்வார்க்கும் அரண் சிறந்தது ; அவையின்றித்[4] தம்மேல் வருவார்க்கும் அஞ்சித்[5] தன்னையே அடைவார்க்கும் அரண் சிறந்தது

பிறர்மேல் செல்லுங்கால் உரிமை[6] பொருள் முதலியவற்

---

1. சோரமன்னர் - திருட்டு அரசர்
2. மூவகையாற்றல் - தன்வலி, துணைவலி, படைவலி, ஆகிய மூவகையாற்றல் ஆயின் அறிவு, ஆண்மை, பெருமை என்பர் கோ.வ.
3. பிறர் மேல் - பகைவர் மேல்
4. அவையின்றி - முற்கூறிய மூவகையாற்றலின்றி
5. தம்மேல் வருவார்க்கு அஞ்சி - தன்மீது படை எடுத்துவரும் அரசர்க்கு
6. உரிமை - மனைவி

றைப் பிறன் ஒருவன் வௌவாமல்[7] வைத்துச் செல்லவேண்டும் ஆகலானும், அப்பெருமை தொலைந்து[8] இறுதி வந்துழிக் கடல் நடுவண் உடைகலத்தார் போன்று ஏமங்[9]காணாது இறுவராகலானும், ஆற்றுபவர்க்கும்[10] போற்றுபவர்க்கும்[11] அரண் பொருளாயிற்று. இதனால் அரணினது சிறப்புக் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: இடம்பொருள் ஏவல் என்று சொல்லப்பட்ட மூன்றுவகையுடையராய்ப் பகைவர் மேலே தண்டுபோகிறவர்களுக்கும்[12] அரண் வேண்டியிருக்கும்; அதுவல்லாமல், தம் பேரிலே வருகிறவருக்கு அஞ்சித் தன்னையே அடைகிறவனுக்கும் அரணாகிய காவல் வேணும் எ-று.

ஏ) பழைய 2: வேற்று வேந்தர் மேற்சென்று போர் செய்வார்க்குந் தம்மைக் காக்கும் பொருளாவது அரண்; தம் மேல் வேற்று வேந்தர் வந்து போர் செய்யும் போது அஞ்சித் தம்மைப் போற்றும் பொருட்டுப் புகும்போதும் பொருளாகக் காப்பது அரண்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஆற்றல்மிக்குப் பிறர் மேற்படை எடுத்துச் செல்வார்க்கு, அவருடைய பொருள், உரிமை மகளிர் முதலியவற்றைப் பாதுகாத்தலானும், முற்றுகையிடப்பட்டார்க்குத் தன்னையும் தன்னுடைமைகளையும் பாதுகாத்துத் துணைசெய்தலானும் அரண்பொருள் போல்வதாயிற்று' என்னும் பொருளது இக்குறள்.

இதனையே பழைய உரைகளனைத்தும் பெரும்பாலும் ஒத்துரைக்கின்றன. 'அரண் இன்றியமையாதது' என்ற முடிபிலும் அனைவரும் இணைகின்றனர். ஆனால் பொருள் வகையில்

---

7. வௌவாமல் — அபகரிக்காமல்
8. அப்பெருமை தொலைந்து — பொருள் படை இவற்றால் வரும் பெருமைநீங்கி
9. ஏமங் காணாது — பாதுகாப்பான இடம் காணாமல்
10. ஆற்றுபவர் — பகைமேற் செல்வார்
11. போற்றுபவர் — பகைக்குப் பயந்து தம்மை வந்தடைபவர்
12. தண்டு போகிறவாகள் — ஆய்ந்தறிந்து செல்பவர்கள்

'ஆற்றுபவர்'

'வலியுடையார்' மணக்.; 'வீரர்' பரிதி.; 'போர் ஆற்றுபவர்' காளிங்கர்; 'மூவகை ஆற்றலும் உடையராய்ப் போர்மேற் செல்வார்' பரிமேல்., கவிராசர்., பழைய 2, தேவநேயர்' கா.சு., இராம ; 'போர் மேற் செல்வார்' சபாபதி, வ.சுப.மா.; 'முற்றுகையிடுவோர்' மு.கோ., சி.இ., குழந்தை; 'பூபாரந் தாங்கும் அரசர்' வரத.

ஆக 'ஆற்றுபவர்'-'செல்வார்', 'வலியுடையார்', 'தாங்குவார்' என மூவகையாற்கொண்டு பொருள் உரைப்பர். வலியுடையார் என்னும் பொருளில் ஆற்றல் என்னும் பண்படியாகப்பிறந்த வினைப் பெயராய் ஆற்றலவர் என வருதலே பெருவழக்கு. செய்வார், அதன் கருத்துப் பொருளாகிய போர் மேற்செல்வார் முற்றுகையிடுவார் என்னும் பொருளில் 'ஆற்று' என்னும் வினைப் பகுதியடியாகப் பிறந்த வினைப் பெயராம். அதனாலேயே 'வலியுடையார், என்ற மணக்குடவரை ஒத்தும், வினையமைதி ஏலாமையை எண்ணி 'மூவகையாற்றலும் உடையராய்ப் போர் மேற் செல்வார்' என்றனர் பரிமேலழகர். ஆகவே 'ஆற்றுவார் —பகைமேற்செல்வார்' என்ற பொருளே இதற்கு ஏற்புடைத்தாதலைக் கவிராசர் பழைய உரைகளும் விளக்குதல் காண்க.

'அஞ்சித்தற் போற்றுபவர்'

'பொருள் படைத்தார்க்கும் அரணே பொருள் என்ற உரை கருத்துரையேயன்றிச் சொற்பொருளன்று. அஞ்சி—பொருளழிவிற்கு அஞ்சி' என்றதன் கருத்திது. இப்பகுதிக்குத் தெ.பொ.மீ., கண்ணன் கூறிய யோகக்ஷேமம் நினைவில்வர, அதற்கு இயைய 'ஆற்றுதல்—பொருளைப் புதிதாகப் படைத்தல் அதாவது ஆக்குதல், வந்த பொருளைக் காத்தல் இரண்டனையும் பொருளாக்கி, இக்குறள் பொருளைப் படைப்பார்க்கும் காப்போர்க்கும் அரண் பொருளாம், என உரைப்பர். 'பொருளாற்றுபவர்க்கும் பொருள் போற்றுபவர்க்கும் அரணே பொருள்' என இயைத்து இடைநிலைத் தீவகம் அல்லது சிங்கநோக்காக்கிப் பொருள் கொள்ளலாம் என்பர். அரண் பொருட்காப்புக்கு மட்டு

மன்றித் தற்காப்பு முதலிய அனைத்துக்குமாதலின் அங்ஙனம் கொள்ளவேண்டிய இன்றியமையாமையின்று. வலிந்து கோடலு மாகும்.

'தற்போற்றுபவர்'

'தன்னைக் காப்பவர்' மணக்.; 'அகம்புக்குத் தம்மைப் பேணிக்கொள்வார்' காளி ; இவ்வுரைகள் மாற்றார் முற்றுகை யிட்ட ஞான்று அதற்கு அஞ்சி அரண்சாரும் அரசரைக்குறிப்பன. பரிமேலழகர் கூறும் 'அரணாகிய தன்னையடைவார்க்கு' என் தில் தன் என்பது அரணைக்குறிப்பது. பழைய உரை, மணக் குடவரை ஒட்டியுள்ளது. தன்னைப் பாதுகாத்துக் கொள்பவர் என்னும் பொருளில் 'தன்' என்பது ஒருமை. போற்றுபவர் பன்மை. தன்போற்றுபவர் என்பது ஒருமையோடு பன்மை தழுவிய வழு வாம் ஆதலால் மணக்குடவர் உரை வழுவாம் என்பர் வை. மு.கோ.; பரிமேலழகர் போற்றற்குரிய சொற்பொருளை விட்டு 'அடைவார்க்கு' என்றமையே வலிந்து கோடலை விளக்குதலா னும் தன்னைப்போற்றிக் கொள்வார் பலராதலின் தன்+போற்று பவன்—தற்போற்றுபவன் என்ற ஒருமைப் பெயர் அனைத்தும் ஒரு சொல்லாய்ப் பலர்பால்விகுதி ஏற்றுத் தற்போற்றுபவர் என வருதல் கூடுமாகையானும் இம்மறுப்பு இயையாதெனலாம்.

ஓ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

பலர்தொகினும் எத்திசையும் அஞ்சாஎயில் அரணும்
........ மண்ணாளும் வேந்தர்க் குறுப்பு —திரிகடு ,100

75.2. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடைய தரண். (742)

உரைப்பகுதி :

அ) மணக்.: தெளிந்த நீராயினும், நிழலும் நீருமிலாத வெறு நிலமாயினும், மலையாயினும், அழகிய நிழலினையுடைய காடாயினும் உடையது அரணாம் எ-று.

தெளிந்த நீர்-பெருநீர்; இது கலங்காதாதலின். அணி நிழற்காடு என்றதனாலே செறிவுடைய காடு என்று கொள்ளப் படும்.

இ) பரிப்.: தெளிந்த நீர் ஆயினும் நிழலும் நீரும் இல்லாத வெறுநிலம் ஆயினும் மலை ஆயினும் அழகிய நிழலினையுடைய காடு ஆயினும் உடைய இடம் அரணாம் எ-று.

மலை அரண் என்றும் காடு அரண் என்றும் கூறுப. சேற்று அரண் என்பதும் ஒன்று உண்டு. அதுவும் இவற்றினுள்அடங்கும் இஃது அரண் செய்யும் இடம் கூறிற்று.

ஈ) காளி.: மணிநீரும் என்றது பளிங்கு போலத் தெளிந்து ஆழம் உடைமையும் வற்றாமையும்; மண்ணும் என்றது நாற்பெரும் சேனையும் அகத்து[1] அடி இடுதற்கு அரிய இடமும்; மலையும் என்றது மற்று அதன் புறத்து முற்றி ஓங்கித் தலை மயக்குறுத்து நிற்கும் மலையும்; அணிநிழற் காடும் என்றது ஆங்கு அதன் புறம் சூழ்ந்து ஓங்கிப் பரந்த தூங்கு இருள் காடும் வகையறப் பெற்ற இவை நான்கினையும் உடையதே அரணாவது எ-று.

உ) பரிமேல்.: மணி[2] போலும் நிறத்தினை உடைய நீரும் வெள்ளிடை நிலமும் மலையும் குளிர்ந்த நிழலையுடைய காடும் உடையதே அரணாவது, எ-று.

எஞ்ஞான்றும் வற்றாத நீர் என்பார் 'மணிநீர்' என்றும், நீரும் நிழலும் இல்லாமருநிலம்[3] என்பார் 'மண்' என்றும், செறிந்த காடு என்பார் 'அணிநிழற்காடு' என்றும் கூறினார். மதிற்புறத்து மருநிலம் பகைவர் அரண் பற்றாமைப்பொருட்டு, நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் என இயற்கையும்[4] செயற்கையுமாய[5] இந்நான்கு அரணும் சூழப்படுவது அரண் என்பதாம்.

---

1. அகத்து - நாட்டிற்குள்ளே 2. மணி - நீலமணி
3. மருநிலம் - பாலைநிலம்
4. இயற்கையரண் - மலை, காடு, நீர், நிலம் முதலியன
5. செயற்கையரண் - அகழி, கோட்டை, செய்குன்று, வளர்த்த காடு, வெட்டவெளி முதலியவற்றை அவ்வவ்தேசத்தரசர் தாமே உண்டாக்கிக்கொள்வது

ஊ) கவிராசர்: மாணிக்கத்தைப் போலத் தெளிவாயிருக்கிற நீரும் வெளியாயிருக்கிற நிலமும், மலையும், குளிர்ந்த நிழலை யுடைய காடும் உடையதேஅரணாவது (எ-று).

ஏ) பழைய 2: முத்து, மணி போலும் நிறத்தையுடைய நீரும், வெள்ளிடை நிலமும், மலையும், குளிர்ந்த நிழலையுடைய காடும் உடையதே அரணாவது.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'மணிநீர்'

'தெளிந்த நீர்' மணக்.: 'பளிங்குபோலத் தெளிந்து ஆழம் உடைமையும் வற்றாமையும் உடைய நீர்' காளி.; 'எஞ்ஞான்றும் வற்றாமையின் மணிபோலும் நிறத்தினையுடைய நீர்' பரிமேல்.; குழந்தை; 'மாணிக்கத்தைப்போலத் தெளி வான நீர்' கவிராசர்; 'முத்து மணிபோலும் நிறந்தையுடைய நீர்' பழைய.; 'நீலநிறத்தையுடைய நீர்' சி.இ.; 'கடல்' மு.கோ.; 'முத்து பவழம் போன்ற உயர்ந்த பொருள்களைக் கொண்ட கடல்' வரத.; 'தெளிந்த அகழி' மு.ரா. அரு.; 'நீலமணிபோலும் அகழி நீர்' தேவநேயர்.

இவ்வுரைகளில் 'ஆழம் — நீர் வற்றாமையுடைமையான் நீலமணி போலும் கருமையையுடைய நீர்' என்பதே அகழிக்கு அமைவுடைய உரையாம். ''மணி மருளிருங்கழி'' (கலி. 21 : 5) ''மணிமருள் தெண்ணீர்'' (மலைபடு. 250) முதலிய ஆன்றோ-ராட்சியும் உரைகளும் நீலமணி போன்ற நீர் என்றே கருதுகின் றன. அகழிக்குக்கரிதாய் ஆழங்கான இயலாததாய் இருத்தலே அழகு. ஆதலின் ஏனைய உரைகள் இயைபில்லாதன எனலாம். மாணிக்கம் செந்நிறமாதலின் அவ்வுரை பொருந்தாது எனல் உறுதி.

'மண்' 'வெறுநிலம்' 'மணல்வெளி' என்று பிறர் கருதப் பரிப்பெருமாள் 'சேற்றரணையும்' உடன் சேர்ப்பர். காளிங் கர் 'நால்வகைப்படையும் அடி இடுதற்கு அஞ்சும் புதைமணற் காட்டைக்' கருதுவர். 'வெள்ளிடைநிலம்' என்பர் பரிமேல். முதலியோர்.

மணக்குடவர் பரிப்பெருமாள் உரைகள் கலந்தவை. மணக்குடவர் உரையை முதன்முதல் அச்சிட்ட பெரியோர்கள் பரிப்பெருமாள் உரையையே மணக்குடவரதென்று மயங்கி வெளியிட்டனரோ என்னவோ. உண்மையறியக்கூடவில்லை. திருப்பதிப்பில் இப்பதிப்பிலுள்ள மணக்குடவர் உரையே காணப்படுகிறது. விளக்கக்குறிப்பாக ''மலையரண் என்றும் காட்டரண்'. என்றுங் கூறுப. சேற்றரண் என்பதும் ஒன்றுண்டு அதுவும் இவற்றினடங்கும் என்பதும் காணப்படுகிறது. அதனால் இக்குறிப்பு அரண்வகை இரண்டென்றலே பரிப்பெருமாள் கருத்தன்று'. சுக்கிரநீதியைக் கொண்டு 'மணிநீரும் மண்ணும் மலையும்', 'அணிநிழற்காடும்' என இரண்டரண் கருதினார் எனல் ஏற்புடையதன்று. உண்மையான பாடங் கிடைப்பின் முடிவுக்கு வரலாம் என விடுக்க.

நகரோ நாடோ அமைக்கும் இடம் இயற்கையரண் உளதாயும், இயற்கையரணிலாத பகுதிக்குச் செயற்கையரண்களும் அமைதல் கூடும் என்பதனைக் கருதியே வள்ளுவனார் இயற்கை செயற்கை என விதவாது பொதுமையில் நால்வகையரணை நவின்ற நயம் ஓர்க. இதனை ஒட்டி நானிலங்களும் நாலரணும் என்ற ஆய்வின் முடிவும் அத்தகையதே. மலைநாட்டில் மலையரணும் ஏனைய காடு, அரண்களுட்சிலவும் இயற்கையில் அமையலாம். ஏனைய அரண் செய்யப்பட வேண்டியனவே. மண் — மருமண், களர்நிலம், பதுக்கை பரப்பிய நால்வகைச் சேனையும் அடிவைக்க இயலாத மண்நிலம், மண்ணாலாகிய கோட்டை, கோட்டை என்றெல்லாம் உரை காண்கின்றனர். இவையனைத்தையும் நால்வகையரணின் இருவகையுள் அடக்கியுரை வகுப்பர் பரிமேலழகர் முதலிய தொல்லாசிரியர்கள்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

மணிநீர் உடையதரண் :

மணிநீர கயநிற்ப — கலித்., 35 : 5

மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவில் பட்டிணம் — சிறுபாண்., 152—153

மண்ணுற வாழ்ந்த மணிநீர்க் கிடங்கின் — மதுரைக்., 352

அகழ்கிடங்கு அந்துகில் ஆர்ந்த பாம்புரி
புகழ்தரு மேகலை நாயில் பூண்முலை
திகழ்மணிக் கோபுரம் திங்கள் வாண்முகம்
சிகழிகை நெடுங்கொடி செல்விக்கு என்பவே. — சீவக., 1444

முற்றும்:

நீண்டநீர் காடு களர்நிவந்து விண்தோயும்
மாண்ட மலைமக்கள் உள்ளிட்டு — மாண்டவர்
ஆய்ந்தன ஐந்தும் அரணா உடையானை
வேந்தனா நாட்டல் விதி. — சிறுபஞ்ச., 49

ஓ) மேற்கோள்பகுதி :
யா·வி.: மென்மை மிக்குவந்த செய்யுளுக்கு மேற்கோள் — சூ., 2

75.3. உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல். (743)

உரைப்பகுதி :

அ) மணக். : 'அமைவரணாம் என்றுரைக்கும் பாடம்'

உயர்ச்சியும், அகலமும், திண்மையும், கிட்டுதற்கு அருமையும் என்னும் இந்நான்கினது அமைதியுடையது மதிலாம் என்று சொல்லுவர் நூலோர் எ-று.

திண்மை என்பது கல்லும் இட்டிகையும் இட்டுச் செய்தல்.

ஆ) பரிதி. : உயர்ச்சியும், அகலமும், வலிக்கையும்,[1] கொள்ளுதற்கு அருமையும் பெற்றது மலையரண் எ-று.

இ) பரிப். : உயர்ச்சியும் அகலமும் திண்மையும் கிட்டுதற்கு அருமையும் என்னும் நான்கின் அமைதியை உடையது மதில் என்று சொல்லும் இலக்கணம் எ-று.

அருமை ஆவது-முதலையும் கிடங்கும் அடியொட்டியும்[2] முதலாயினவற்றால் கிட்டுதற்கு அருமை. அமைவு என்றது

1, வலிக்கை - வலிமை
2. அடியொட்டி — இது ஒருவகைக் கருவி; சீவ., 2768 உரை பார்க்க

இதனின் மேல் செய்யப்படாது என்னும் அளவு உடைத்து ஆதல். திண்மை என்றது கல்லும் இட்டிகையும் இட்டுச் செய்தல். இஃது அரண் செய்யும் ஆறு கூறிற்று.

ஈ) காளி.: நோக்குதற்கு அரிய உயர்வு உடைமையும், அதற்கு அரிய அகலம் உடைமையும், குத்துதற்கு அரிய திட்பம் உடைமையும், எ.................மை வினையான் அருமை உடைமையும் என்னும் இந்நான்கினது முற்றுப்பேறு உடையது யாது? மற்று அதுவே அரண் ஆவது எ-று.

உ) பரிமேல்.: உயர்ச்சியும் அகலமும் திண்மையும் அருமையும் என்று சொல்லப்பட்ட இந்நான்கின் மிகுதியையுடைய மதிலை, அரண் என்று சொல்லுவர் நூலோர், எ-று.

அமைவு[3] நூல்[4] என்பன ஆகுபெயர். உயர்வு-ஏணி எய்தாதது. அகலம்-புறத்தோர்க்கு அகழலாகா அடியகலமும், அகத்தோர்க்கு நின்று வினைசெய்யலாந்[5] தலை[6]யகலமும். திண்மை-கல்லிட்டிகைகளால் செய்தலின் குத்தப்படாமை. அருமை-பொறிகளான் அணுகற்கு அருமை. பொறிகளாவன ''வளைவிற் பொறியும் அயிற்செறி நிலையும், கருவிரலூகமும் கல்லுமிழ் கவணும், பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும், காய்பொன் உலையும் கல்லிடு கூடையும், தூண்டிலும் துடக்கும் ஆண்டலை அடுப்பும், கவையும் கழுவும் புதையும் புழையும், ஐயவித் துலாமும் கைபெயர் ஊசியும், சென்றெறி சிரலும் பன்றியும் பணையும், எழுவும் சீப்பும் உழுவிறல் கணையமும், கோலும் குந்தமும்'[7] வேலும் சூலமும் என்று இவை முதலாயின.

3. அமைவு— மதில். அமைவு என்னும் பண்புப்பெயர் அதனை உடைய மதிலுக்கு ஆதலால் பண்பாகுபெயராம்

4. நூல் — நூலோரை உணர்த்தலின். காரியவாகுபெயர்

5. வினைசெய்யல் — போர்புரிதல்

6. தலை — மதில்மேற்புறம்

7. சிலப். அடைக். 207-216

காரி : "வரிவில் பொறியுங்..............கருவிரல் கூகையும்' என்பன பாட்டுக் குறை.

ஊ) கவிராசர் : உயரமும் அகலமும் கெட்டியும் அருமையுமுடைய மதிலை அரண் என்று சொல்லுவர் நூலோர் எ-று.

ஏ) பழைய2 : "நான்கும் அமைவரணம்" பாடம்.

கோட்டை மதில் உயர்ச்சியும் அகலமும் திண்மையும் சுரங்க மறுத்தற்கு[8] அருமையும் என்று சொல்லப்பட்ட இந் நான்கும் அமைதியுடைய கோட்டையை அரணென்று சொல்லுவர் மனுநூலோர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

குறட்பாவின் நோக்கில் ஒழுகும் மணக்குடவர், மு.ரா.அரு., சி இ., பரிமேலழகர் உரை மதிலரணுக்கு உரிய நான்கு இலக்கணங்களையே கூறுகிறது. ஏனையோர் சிறிதுமாறுபடுகின்றனர். பரிதியார் 'மலையரண்' என்றார். கா.சு., சாமி. சிதம்பரனார் 'கோட்டையரண்' என்றார். வரதராசனார் 'மதிலையே குறிப்பதாகவும்' பொதுவாகக் குறிப்பிடுவதாகவும் கொள்ளலாம்' என்று கூறி, 'உயர்வை மதிலுக்கும், அகலத்தையகழிக்கும், திண்மையை வன்மையான் படைக்கும், அருமையைப் பொறிகளான் அணுகுதற்கு அருமைக்கும்' கூறுவர் பரிமேலழகர் இவற்றைப் பொதுவகையான் அரண்கள் நால்வகைக்கும் ஆக்குவர், உயர்வகல முதலியன இயற்கையரண் நான்கிற்கும், செயற்கையரண் நான்கிற்கும் உரியவாதலையும்காண்க.

குறட்பா 'இந்நான்கின் அமைவு அரண்' என அரணின் பொதுஇலக்கணம் இந்நான்கும் உடைத்தாதல் என்று கூறுகிறது பரிமேலழகர் 'அமைவு' என்பதனைப் பண்பாகுபெயராகக் கொண்டு 'மிகுதியை உடைய மதில்' என்றார் இதுபோன்ற பொருளமைதி, தொன்முறையுரைப்பன. அத்தன்மையான், இட நோக்கி இவர் கொண்டதாதலான் ஆகுபெயராகாமையறிக. ஆதலால் மதிலுக்கு இலக்கணங் கூறியதன்றாய் தேவநேயரும்

8. சுரங்கம் அறுத்தற்கு — சுரங்கம் தோண்டுவதற்கு

'மதிலரண்' கூறியதென்பர். ஆகவே இக்குறட்பாவின் பொருள் உயர்வு முதலிய நான்கின் அமைவே அதாவது நிறைவே அரண் என்பதாம். தெ.பொ.மீ. 'உயர்வு—செயற்கையல்லது இயற்கை மதிலின் அளவு; அகலம்—இன்பக் கொள்கலமாகிய நாட்டின் அளவு அல்லது மக்கள்தொகை; திண்மை — கோட்டையின் இயல்பு; அருமை—அந்தந்தக் காவலின் நோக்கமாம் அளவு என நான்கு வேறு அள்வைகளைக் கூறினர் வள்ளுவர்' என்பர்.

சி.இ. 'இந்நான்கு தன்மைகளையும் பொருந்தியுள்ளது பாதுகாவல்' என்பர். விளக்கவுரையுள் 'மலை கடல் நாடு இவற்றுள் நாடு, காடு, வெற்றிடம் அனைத்தும் உயர்வகலம் முதலான நால்வகைகளையும் பெற்றிருக்க வேண்டும்' என்பர். 'அரண்-பாதுகாவல்' என்பர். நான்குதன்மைகளும் பெற்றிருப்பது இரண்டும், திண்மை மலை காடுகட்கும், அருமையை நான்கிற்கும் காட்டுவர்.

மதில் செயற்கையேயன்றி இயற்கையாதல் இன்றாதலின் மலையைக் கருதிக் கூறியதாமோ என்று ஐயுறத்தகும். அகலம் —பரப்பளவாகவே அதனை மக்கள் தொகை எனலாமா? அருமை —காவலின் நோக்கம் எனல் எப்படி என்பனவும் அன்னவாதலை எண்ணுக.

உயர்வு முதலிய நான்கையும் நால்வகையரண்களுக்கும் கொள்ளும் முறைமைகளைக் கௌடலீயம் 2ம் அதிகரணம் அரணமைத்தலினும், சுக்கிரநீதி அரணியலினும் காணலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

உயர்வு அரண் :

…… …… உயர்வினோ டுயர்ந்த தென்னவாம் பொன்மதி
னிலையே — கம்ப., 100

முற்றும் :

'மதிற்சுவரின் அடிப்படை அதன் உயரத்தின் சம அளவாதல்' பாதி அளவாதல், மூன்றிலொரு கூறாதல் இருத்தல்வேண்டும்.

அதன் அகலம் உயரத்தின் பாதியளவு இருத்தல்வேண்டும். அதன் உயரம் கள்வரால் கடக்கமுடியா வண்ணம் வேண்டிய அளவு உயர்ந்திருத்தல் வேண்டும் சுக்கிர. அத். 1. சு., 238

75.4. சிறுகாப்பின் பேரிடத்த தாகி உறுபகை
ஊக்கம் அழிப்ப தரண். (744)

உரைப்பகுதி :

மணக்.: காக்க வேண்டும் இடம் சிறிதாய், மதிலகலம் பெரிய இடத்தை உடைத்தாய் மதிலையுற்ற பகைவரது மிகுதியைக் கெடுப்பது அரணாவது எ-று.

ஆ) பரிதி.: உள்ளிடம் உள்ளதாய் வாசல் சிறிதாகிப் பகையை வெல்விப்பது அரண் எ-று.

இ) பரிப்.: காக்க வேண்டும் இடம் சிறிது ஆய் மதில் அகலம் பெரிய இடத்தை உடைத்தாய் மதிலை உற்ற பகைவரது மிகுதியைக் கெடுப்பது அரண்ஆவது எ-று.

சிறுகாவல் ஆவது — ஒரு பக்கம் மலை ஆயினும் காடு ஆயினும் நீர் ஆயினும் உடைத்து ஆதல். இஃது இடம் பெரிது ஆகவும் காவல் சிறிது ஆகவும் வேண்டும் என்றது.

ஈ) காளி : சிறு படையால் காக்கும் காப்பு அமைவு உடைத்துமாய், அகத்து வாழ்வோர்க்குப் பெரிதும் இடப்பாடு உடைத்துமாய்ப் புறத்துப் பகையினது உள்ளக் கோட்பாட்டினை ஒருங்கு[1] அழிப்பது யாது?

உ) பரிமேல்.: காக்கவேண்டும் இடம் சிறிதாய் அகன்ற இடத்தை உடைத்தாய், தன்னை வந்து முற்றிய பகைவரது மனவெழுச்சியைக் கெடுப்பதே அரணாவது எ-று.

வாயிலும்[2] வழியும் ஒழிந்த இடங்கள் மலை, காடு, நீர் நிலை என்றிவற்றுள் ஏற்பனவுடைத்தாதல் பற்றிச் 'சிறுகாப்பின்'

1. ஒருங்கு - ஒருசேர 2. வாயிலும் - கோட்டை வாசல்

என்றும், அகத்தோடு நலிவின்றி இருத்தல்பற்றிப் 'பேரிடத்த தாகி' என்றும், தம்வலி நோக்கி இதுபொழுதே அழித்தும் என்று வரும் பகைவர் வந்து கண்டால் அவ்வூக்கம்ஒழிதல்பற்றி 'ஊக்கம் அழிப்பது' என்றும் கூறினார்.

ஊ) கவிராசர் : காக்க வேண்டின வழிகள் கொஞ்சமாய், அகலமான விடத்தையுடையதாய், தன்மேல் வந்த பகைவர் மனச் சந்தோஷத்தைக் கெடுக்கவல்லதே அரண் எ-று.

ஏ) பழைய 2 : காக்கவேண்டும் இடஞ் சிறிதாய் அகன்ற இடத்தையுடைத்தாய்த் தன்னை வந்து முற்றிக்கை[3] செய்த பகைவா மன வெழுச்சியைக் கெடுப்பதே அரண.

ஐ) தொகுப்பும குறிப்பும் :

மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதி., பரிமேல் ,கவிராசர் முதலிய அனைவரும் 'காக்க வேண்டும் இடம் அகலது வழிசிறிதாகவும், உள்ளிடம் பெரிதாக இருக்கவேண்டும்' என்பர். காலிங்கர் 'சிறுபடையால் காக்கக்கூடியதாதல் வேண்டும்' என்பர். இவ்வுரையும் மணக்குடவர் முதலியோர் கருத்தையே சுற்றிவளைத்துக் காட்டுவதாயினும் அத்துணை விளக்கமின்று. பரிமேலழகர் தரும் விளக்கம 'வாயிலும் வழியும் அல்லாத இடங்கள் மலை காடு நீர் நிலையுடையதாதல் வேண்டும்' என்பது எல்லா இடங்களிலும் இந்த இயற்கையரண்கள் அமைய இயலாது; ஏற்றபெற்றி யிருந்தால் ஏனைய இடங்கட்கு மதிலரண் அமையலாம் என்ற கருத்தையே உடையது.

தேவநேயர் 'மதிலரணையே' கருதுவர். 'முதலிருகுறள்கள் தவிரப் பிறவெல்லாம் மதிலரணையே கருதுவதாலும், அகழி மதிலரணைச் சார்ந்திருக்கவும் கூடும் ஆதலானும் மலை, காடு, நீர் இவற்றில் ஏற்பன வுடைத்தாதல் என்ற பரிமேலழகர் உரை ஏலாது' என மறுப்பர். மு. கோ. 'சிறுகாப்பு-நாட்டின் வருவாயின் பெரும்பகுதியை இராணுவச் செலவு கொள்ளுதல் கூடாது' எனக் கருத்துரைப்பர். இவர் இக்கருத்தை யாங்ஙனம் பெறுதல் கூடும் என்பதையறியக் கூடவில்லை. வரத. 'அரண்-பாது

3. முற்றிக்கை - வளைத்துக் கொள்ளுதல்

காவலாகும்' என உரைப்பர். இவ்வுரை அரண்-பாதுகாவலா? பாதுகாக்கும் கோட்டை மதில்முதலிய இடங்களா? என்ற ஐயத்தை விளைவிக்கிறது. வள்ளுவர் இவ்வதிகாரத்து கோட்டையையே குறிப்பது கண்டு உள்பொருள் கொள்க.

குழந்தை 'சிறுகரப்பிற்குத்' தரும் விளக்கம் பரிமேலழகர் உரையை தழுவுவதாக உள்ளது. தேவநேயர் சிந்தனை இதற்கும் ஒக்கும்.

ஓ) ஒப்புமைப்பகுதி :

... ... ... யார்க்கு நோக்கருங் காவலின் ... ... ... —கம்ப., 103

75.5. *கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்*
*நிலைக்கெளிதாம் நீர தரண்.* (745)

உரைப்பகுதி :

அ) மணக். : பகைவரால் கொள்ளுதற்கு அரிதாய், தன்னகத்தே அமைக்கப்பட்ட உணவையும் உடைத்தாய், அகத்துறைவார்க்கு நிற்றற்கு எளிதாகும் நீரையுடைத்தாயிருப்பது அரணாவது எ-று.

எனவே, புறத்தார்க்கு நிற்றற்கரிதாகும் நீரையுடைத்தாதலும் வேண்டும் என்றவாறாயிற்று; தூரத்தில் நீரைப்பிறரறியாமல் உள்ளே புகுதவிடுதலும் வேண்டும் என்பதாம்.

ஆ) பரிதி. : மாற்றாரால் அழிக்கப்படாததாய், விளைவுண்டாய், நோயற்றதாய் உள்ளது அரண் எ-று.

இ) பரிப். : பகைவரால் கொள்ளுதற்கு அரிது ஆய்த் தன் அகத்தே அமைக்கப்பட்ட உணவையும் உடைத்து ஆய், அகத்து உறைவார்க்கு நிற்றற்கு எளிது ஆகும் நீரையும் உடைத்து ஆய் இருப்பது அரண் ஆவது எ-று.

எனவே புறத்தார்க்கு நிற்றற்கு அரிய நீரை உடைத்து ஆக வேண்டும் என்றவாறு ஆயிற்று. அஃதாவது அரணுக்கு நீங்குகிற்பது ஓர் ஆற்றினின்றும் பிறர்க்குத் தோற்றாமல்

சுருங்கையாகப் படுத்து[1] உள்ளே நீர் புகுதலும், மதிலை முற்றினார்க்கு அணைய நீர் இன்மையும், இன்னும் அதனானே வெற்றிலையும் பூவும் உள்ளே உண்டாக்குதலும் பிறவும் ஆம்.

ஈ) காளி.: பகைவேந்தர் முற்றி இருந்தும் கொளற்கு அரிதாய் அகத்தோர் நெடிது ஆண்டு இருப்பினும் உணர்க்கு எளிதாகப் பெரிதும் ஈட்டிக் கொண்ட நெல் அரிசி கொள்ளு பயிறு முதலிய உணவுப் பொருள்களையும் உடைத்தாய், நாற்பெருஞ் சேனையும் விட்டு உலாவுதற்கு வேண்டும் வீதியும் பூவும் சாந்தும் நீரும் நிழலும் பொதுவியர்க்கு உரிய மகளிரும்[2] பிறவும் உடையது யாது? மற்று அதுவே அரண் ஆவது எ-று.

உ) பரிமேல்.: புறத்தாரால்[3] கோடற்கரிதாய், உட்கொண்ட பலவகை உணவிற்றாய் அகத்தாரது போர்நிலைக்கு[4] எளிதாய நீர்மையை உடையதே அரணாவது. எ-று.

கோடற்கு அருமை-இளை[5] கிடங்குகளானும்[6] பொறிகளானும்[7] இடங்கொள்ளுதற்கு அருமை. உணவு தலைமை பற்றிக் கூறினமையின், மற்றுள்ள நுகரப்படுவனவும் அடங்கின. நிலைக்கெளிதாம் நீர்மையாவது அகத்தார் விட்ட ஆயுதம் முதலிய புறத்தார் மேல் எளிதிற்சேறலும், அவர் விட்டன அகத்தார்மேல் செல்லாமையும், பதணப் பரப்பும்[8] முதலாயின.[9]

ஊ) கவிராசர்: பகைவராற் செயிக்கிறதற்கு அரிதாய், பலவகை உணவுப் பொருள்கள் உடையதாய், உள்ளே இருக்கப்பட்டபேருக்குச் சௌக்கியமாய் இருந்து சண்டைபண்ணத் தக்கதாய் நீர்மையை உடையதே அரண் எ-று.

1. சுருங்கையாகப் படுத்து —கோட்டையிற் கள்ள வழி
2. பொதுவியர்க்கு உரிய மகளிர் — பரத்தையர்
3. புறத்தாரால் — மதிலுக்கு வெளியேயுள்ள பகைவரால்
4. போர் நிலைக்கு— நிலைத்துப் பகைவரோடு போர் புரிதற்கு
5. இளை — காவற்காடு 6, கிடங்கு— அகழி
7. பொறிகள்—மதில் மேலுள்ள வில், வேல், வாள், அம்பு முதலியவற்றை வீசும் எந்திரங்கள். (சிலம்பு, நகர்காண்காதையில் காண்க)
8. பதணப்பரப்பு—மதிலுள் மேடை
9. முதலாயின என்றது உடைக்க முடியாத வன்மை, தோண்ட முடியாத அடியகலம், பற்றி ஏற முடியாத வழுவழுப்பு, ஏப்புழை ஞாயில் முதலியன

ஏ) பழைய 2 : புறத்தாரிலக்கைப் பிடித்துக் கொள்ளுதற்கு அரிதாய், உட்கொண்ட பலவகை உண்பன தின்பன உடைத்தாய், அகத்தார் புறத்தாரை வெல்லும் போர்நிலைக்கெளிதாய நீர்மையை யுடையதே அரணாவது

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

உரையாசிரியர்கள் 'நிலைக்கு எளிதாம் நீரது' என்ற தொடர்க்கு உரை காண்பதில் மாறுபடுகின்றனர்.

நீரது-நீரையுடைத்தாயிருப்பது எனப் பொருள் கண்டு, அதனாற் போதரும் எதிர்மறைக் கருத்தாகப் 'புறத்தார்க்கு நிற்றற்கு அரிதாம் நீரையுடைத்தாதலும் வேண்டும்' என விளக்கமுந் தருவர். இதனால் அவர் கருதுவது 'உழிஞையாராகிய புறத்தார்க்கு நிலை கொள்ளாத அளவு பெருகுகிற நீரும் அகத்தோர்க்கும் நிலைக்குமளவு அளவான நீரும் உடையதேயரண்' என்பது.

பரிப்பெருமாள் 'அகத்தோர் நிலைத்து நின்று போர் செய்து வெல்லற் கேற்றதாய், அகத்தோர்க்கு அரணிலிருந்து வெகுதூரத்திற்கப்பாலுள்ள ஆற்றினின்றும் வெளியார் யார்க்கும் தோற்றாதபடிச் சுருங்கை வாய்க்கால் வழியாக அரணுக்குள் நீர் புகுதலும், முற்றுகையிட்டார்க்கு அணையக் கூட நீர் இன்மையையும் உடைமையோடு, உள்ளிருப்பார் நுகர்தற்குரிய பூ, வெற்றிலை முதலிய போகப் பொருள்களை விளைவிப்பதாயும் இருத்தல் வேண்டும்' என்பர். இவர் கருத்தும் 'நீரது—நீரை யுடையது' என்பதே.

காளிங்கர் 'அகத்தார் நிலைக்கு எளிதாய பூவும், நீரும், சாந்தும் நிழலும் பொதுமகளிரும் பிறவும்' என விரிப்பர். இவர் உரை நீரது — நீர்மையையுடையது என்பதா? தன்மையை யுடையது என்பதா? என்பதையறியக் கூடவில்லை.

பரிமேலழகர் உணவுவகையில், நுகரப்படுவனவாகிய மாலை, மாதர் உணவு அனைத்தையும் அடக்கி, 'நிலைக்கு எளிதாம் நீரது' என்பதில் நீரது — நீர்மையது எனப் பொருள் கண்டு, 'எளிதாதலாவது அகத்தார் விட்ட கணை முதலியன புறத்

தார் மேற்றவறாது சென்று தைத்தலும், புறத்தார் ஏவியன சிறிதும் அகத்தாரைத் தாக்காமையும், மதில்மேற்பரணின் பரப்பும் முதலாயின' என்பர். இவரும், இவரைத் தழுவிய கவிராசர் முதலியோரும் பண்டைய ஆசிரியர் கருத்துக்களை எஞ்சாமல் தழுவியதோடு, தம் அறிவுக்காட்சியானும் அனுபவத் தானும் அறிந்தவற்றையும் இணைத்து எண்ணச் செய்கின் றமையின் இவர் உரைவிஞ்சி நிற்கிறது.

வரத. 'எளிதாம்-எளிமையாக வாழ்க்கை நடத்தக்கூடிய தாய்' என்றும், 'அகத்தோர் அதிகவிலை கொடுத்து வாங்காமல் எளிய முறையில் விலைகொடுத்து வாங்கித் துய்க்கவேண்டும்' என்றெல்லாம் நினைவுபடுத்தி 'அங்ஙனம் உட்குழப்பமின்றியிருப் பதே அரண்' என்று வேண்டியவாறே விதப்பர். தேவநேயரும் பரிமேலழகரைப் போன்று நுகர்பொருள்களில் அனைத்தையும் அடக்கி நிலைக் கெளிதாதற்கு அகத்தார் விட்டகணைகள் புறத் தாரை எளிதிற் றாக்கவும், புறத்தார் விட்டவை அகத்தாரைத் தாக்காதவாறும் மதிலினை உயர்வு, மறைவிடம் பதணப்பரப்பு உடைத்தாதல்' என்பர்.

இவற்றுள் பூவும் வெற்றிலையும் பரத்தையரும் உடைய தாய் என்ற காளிங்கர், பரிப்பெருமாள் உரைகள் சுக்கிரநீதி போன்ற நூல்களின் கருத்தைத் தழுவி எழுந்தவை. தமிழ் நூல் களில் பகைமேற்சென்றோன் பாசறைக்கண்ணிருந்து வருந்து தலன்றிப் போகத்தை நினைக்கவும் மாட்டான் ஆதலின் இது பின்னோர் வழக்காம் என்க.

ஒ) ஒப்புமைப்பகுதி:

கொண்டகூழ்த்தாகி;

ஒன்றே சிறியிலை வெதிரின் நெல்விளையும்மே
இரண்டே தீஞ்சுளைப் பலவின்பழம் ஊழ்க்கும்மே
மூன்றே கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க்கும்மே
நான்கே அணிநிறவோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே. -புறம்., 109 : 4—8

பற்பல தானியத்த தாகிப் பலருடையும்
மெய்த்துணையும் சேரல் இனிது — இனியவை., 18

ஓ) மேற்கோள்பகுதி :

இளம். : பொருளாவது நாடும், பொருளும், அரசனும், அமைச்சும், நட்பும், படையும் எனக்கூறி அரசன் என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர். — தொல். பொருள். 75

நச்சி. : இருபெருவேந்தர் தம்முள் மாறுகொண்டவழி எதிர் செலற் காற்றாது போய் மதிலகத்து இருந்த வேந்தன் மதில் பெரும் பான்மையும் மருத நிலத்துள்ளது என்பதற்கு மேற்கோள்.
— தொல். பொருள்., 64

75.6. *எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்*
*நல்லாள் உடைய தரண்.* *(746)*

உரைப்பகுதி :

அ) மணக். : எல்லாப்பொருள்களையும் உடைத்தாய், உற்ற விடத்து உதவவல்ல வீரரையுடையது அரண் எ-று.

எல்லாப்பொருளுமாவன-நுகர வேண்டுவனவும் படைக் கலங்களும்.

ஆ) பரிதி. : எல்லாப்பொருளும் உண்டாய் உற்றவிடத்துதவும் சேவகர்களை உடையது அரண் எ-று.

இ) பரிப். : எல்லாப் பொருள்களையும் உடைத்தாய், உற்ற இடத்து உதவ வல்ல நல்ல வீரரையும் உடையது அரண் எ-று.

இது நல்ல வீரரும் வேண்டும் என்றது. எல்லாப் பொருளும் ஆவது நுகர வேண்டுவனவும் படைக்கலங்களும்.

ஈ) காளி : கீழ்ச்சொல்லிப் போந்த பரிசே [1]அரணியல் பொருளும் அகத்தமை பொருளும் பிறவுமாகிய எல்லாப் பொருள்களும்

1. பரிசே — தன்மை ! 'கீழ்ச் சொல்லிப் போந்தபடி'

இனிது அமைவு உடைத்தாய்ப் புறத்தகல் சேனைத்திறத்து அழிவினைக்குச்[2] சினத்து இடன் உதவும் திருந்திய வீரரையும் உடையதுயாது? மற்று அதுவே அரணாவது எ-று.

உ) பரிமேல் : அகத்தோர்க்கு வேண்டும் பொருள்களெல்லாவற்றையும் உள்ளே உடைத்தாய், புறத்தோரால் அழிவெய்தும் எல்லைக்கண் அஃது[3] எய்தாவகை உதவிக் காக்கும் நல்ல வீரரையும் உடையதே அரணாவது (எ-று)

அரசன் மாட்டு அன்பும் மானமும் மறமும்[4] சோர்வின்மையும்[5] முதலிய நற்குணங்கள் உடைமை பற்றி 'நல்லாள' என்றார்.

ஊ) கவிராசர் : உள்ள இருக்கிற பேர்களுக்கு வேண்டிய வஸ்துக்களை யெல்லாம் உடையதாய், பகைவரால் உபத்திரவம் வரின் அதனைப் பரிகரிக்கும் நல்ல வீரர்களை யுடையதே அரண் எ-று.

ஏ) பழைய 2 : 'இடைத்துதவும்' பாடம்.

அகத்தோர்க்கு வேண்டும் பொருள்களெல்லா முள்ளே யுடைத்தாய்ப் புறத்தார் இலக்கைப் பிடிக்கும் எல்லைக்கண் பிடியாவகை யுதவிக் காக்கும் நல்ல படைத்தலைவனையுமுடையதே யரணாவது.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'போர்க்காலத்து அடைமதிற் பட்டுக் கிடக்கின்ற அரசற்கும், அவனைச் சார்ந்தார்க்கும், காவல்வீரர்க்கும், குடிகட்கும் தேவையான எல்லாப் பொருளும் உடைத்தாய்' எனக் கூறிய வள்ளுவரின் தொலைநோக்கு, அமைதிக் காலத்துக்கும் ஏற்புடைதாய் விளங்குகிறது. மணக்குடவர், 'போர்க்காலத்தை மனத்திற்கொண்டு நுகர வேண்டுவனவும் படைக்கலங்களும்' என்றார். காளிங்கர் 'அரணியற் பொருளும் பிறவுமாகிய எல்லாப் பொருளும்' என்றார். பரிதி., பரிமேல்., கவிராசர்,

---

2. 'அறுவினை' பாடம் உரைக்கொத்து 3. அஃது — அழிவு
4. மறமும் — வீரமும் 5. சோர்வின்மையும் — தளர்ச்சியில்லாமையும்

பழைய உரைகளனைத்தும் 'அகத்தோர்க்கு வேண்டும் எல்லாப் பொருளும்' எனவும் கூறின. சாமி-சிதம்., மு. ஏ. அரு. முதலிய அனைவரும் பரிமேலழகர் வழிச் செல்வர். 'முற்றுகை யில்லாத காலத்திலும் எல்லாத் தளவாடங்களும் உடையதாய்' எனப் போர்க்கருவி ஒன்றையே கருதுவர் இராம.; 'நாட்டு மக்களுக்கு வேண்டும் எல்லாப் பொருளும் பெற்றிருப்பதாய்' என்பர் சி. இ.; 'உல்குபொருள் (செலாவணியிலுள்ள பொருள் கள், உறுபொருள்-நெல்முதலிய எல்லாப் பொருளும்' என்பர் மு.கோ.; 'வேண்டிய பொருள்களையெல்லாம் உற்பத்தி செய் யக்கூடியதாய்' என்பர் ஷ்ரத.; இவர் கருத்து 'கோட்டையல்லது அரண்பெருநிலப்பரப்பு' என்பது போலும். இங்ஙனம் தத்தம் கால நிலைக்கேற்ப விளக்கமுற்பட்ட உரையாசிரியர்களை 'விளக்க முடியாததனை விளக்க முற்படுவது வியப்பே' என வியந்து நகையாடிய தெ. பொ. மீ., சுக்கிரநீதி துணைக்கொண்டு இன்பப் பொருள் இருக்கும் வீதிகளும் அமைய வேண்டும்' என்கிறார். அடைமதிற்பட்ட அரசன் தன் மாட்டாமையைக் கருதி மயங்குவானேயன்றி மகிழமாட்டான். இன்பப் பொருளை நாடவும் மாட்டான். ஆகவே இவரும் ஏனைய உரையாசிரியர் களுள் ஒருவரே ஆகிறார்.

'ஆள்'

'இடத்துதவும் ஆள்' - 'வீரர்' மணக்.; 'சேவகர்கள்' பரிதி.; 'நல்லவீரர்' பரிப்., பரிமேல்.; 'கோட்டைக்கு வெளியே சென்ற சேனைகட்காக அவர்கள் உளவறியும் வினைக்கு பகைவர்மேற் சினந்து வாய்ப்புத் தேடித்தரும் வீரர்' என்பர் காளிங்கர்; 'அழிவினைக்கு' என்பது பாடமாயின் அவர்கள் அழிதற்கு உதவி காக்கும் வீரர்கள் என்க.

இங்ஙனம் 'இடத்துதவும் நல்லாள்' என்பதனுக்குத் தத்தம் காட்சிப் போக்கில் உரை காண்பர். தெ. பொ. மீ. முன்னோர் போக்கை மாற்றி 'நல் ஆள்-நல்ல மக்களாகிய அனைவரும் எனக் குடிமக்களையுமுணர்த்திற்று' என்பர். பரிமேலழகர் முதலானோர் 'போர்க்காலத்து உதவும் வீரரையும்' ஏனையோர் 'அமைதிகாலத்தும் உதவுவோரையும்', காளிங்கர் 'ஒற்றரையும்

உதவிசெய்வோரையும் கருதுகிறார்கள்' என்ற வேறுபாடு கொண்டு தெளிக.

ஒ) ஒப்புமைப்பகுதி :

...... ...... யார்க்கு நோக்கருங் காவலின் ........ — கம்ப., 103

75.7. *முற்றியும் முற்றா தெறிந்தும் அறைப்படுத்தும்*
*பற்றற் கரிய தரண்.* (747)

உரைப்பகுதி :

அ) மணக். : சூழவிட்டும், சூழவிடாதே ஒரு பக்கமாகப் போர் செய்தும், அரணிலுள்ளாரைக் கீழறுத்தும்[1] இம்மூன்றி னாலும் கொள்ளுதற்கு அரியது அரணாவது எ-று.

ஆ) பரிதி.: சூழ்ந்தும் சூழாது எறிந்தும் வஞ்சித்தும் பகைவ ரால் கொள்ளுதற்கு அரியது அரண் எ-று.

இ) பரிப். : சூழவிட்டும், சூழ விடாதே ஒரு பக்கம் முறிய எறிந்தும், அரண் உள்ளாரைக் கீழ் அறுத்தும் இம்மூன்றினாலும் கொள்ளுதற்கு அரியது அரண் ஆவது எ-று.

அரண் கொள்வார்க்கு உபாயம் இம்மூன்று அல்லது இல்லை: இம்மூன்றினாலும் கொள்ளப்படாமை வேண்டும் என்றது.

ஈ) காளி. : கொற்ற வேந்தர் புறம் கோலிக்கொண்டும்,[2] அங்ஙனம் கோலிக் கொண்டிராது புறத்து நின்று பொருதும், சென்று குத்தியும், அறைப்படுத்தும்[3] அதனைப் பற்றுவோம் என்று முயன்றாலும் பற்றுதற்கு அரியது யாது? மற்று அதுவே அரணாவது எ-று.

உ) பரிமேல். : புகலொடு போக்கொழியும்வகை[4] நெருங்கிச்

1. கீழறுத்து—சதி செய்து 2. கோலிக்கொண்டு—வளைத்துக் கொண்டு
3. அறைப்படுத்தும்—ஊடறுத்தும்
4. புகலொடு போக்கொழியும் வகை—நுழையவும் வெளிவரவும் முடியாதபடி

சூழ்ந்தும், அங்ஙனம் சூழாது நெகிழ்ந்த இடனோக்கி[5] ஒருமுகமாகப் பொருதும் அகத்தோரை அவர்[6] தெளிந்தோரைவிட்டுக் கீழறுத்துத் திறப்பித்தும், புறத்தோரால் கொள்ளுதற்கு அரியதே அரணாவது.

இம்மூன்று உபாயத்துள்ளும்[7] முதலாவது எல்லாப் பொருளும் உடைமையானும், ஏனைய நல்லாளுடைமையானும் வாயாவாயின.

ஊ) கவிராசர் : உட்புகுவதும் வெளிவருவதும் ஒழியும்வகை நெருங்கிச் சூழ்ந்தும், அப்படிச் சூழாமல் நெகிழ்ந்தவிடம் பார்த்து ஒருமுகமாய்க் கூடிப்பொருதும், உள்ளே இருக்கிறவர்களுக்கு இலஞ்ச பரிதானங்கள்[8] கொடுத்து உபாயசற்பனை[9] பண்ணியும் கொள்ளுதற்கு அரியதே அரணாவது எ-று.

ஏ) பழைய 2 : 'அறைபடுத்தும்' பாடம்.

அகத்தார் புறம் போகாது புறத்திருந்து வாராது முற்றிக்கை செய்து, முற்றிக்கை யாகாது இலக்கைப் பிடித்துப் போர் செய்தும் சுருங்கை யறுத்துத் திறப்பித்தும் புறத்தோராற் கொள்ளுதற்கு அரியதே அரணாவது.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'அரண் முற்றியும், முற்றாது எறிந்தும், அறைப்படுத்தும் பற்றுதற்கரியது' என மூன்றுபாயங்களான் அரண் பற்றற்கரியது என்பதை விளக்குவது இக்குறள். காளிங்கர் 'முற்றாது எறிந்தும்' என்பதனை, முற்றாதும், எறிந்தும் என இரண்டாக்கி 'கோலிக்கொண்டேயிராமல் புறத்து நின்றே பொருதும், சென்று குத்தியும்' என்பர். இவருரையின் வண்ணம் உபாயம் நான்காகிறது. இந்த அமைப்பில், முற்றியும் 'சூழலிட்டும்' மணக். 'புறங்கோலிக்கொண்டும்' காளிங்கர் ; 'புகலும் போக்குமின்றி நெருங்கிச் சூழ்ந்தும்' பரிமேல். முதலானோர்.

---

5. நெகிழ்ந்த இடனோக்கி—சோர்ந்த காலம் நோக்கி 6. அவர்— அகத்தோர்
7. மூன்று உபாயம் — முற்றுகையிடுதல், முற்றுகையிடாமலே உடைத்தல், ஊடறுத்தல் ஆகியவை 8. இலஞ்ச பரிதானங்கள் — இலஞ்சப் பரிசுகள்
9. உபாயசற்பனை — கொடுத்துத் தோற்கச் செய்யும் வஞ்சனை

'முற்றாதெறிந்தும்'

'சூழாமல் ஒருபக்கமாகப் போர்செய்தும்' மணக்.; 'புறத்து நின்று பொருதும் சென்றுகுத்தியும்' காளி.; நெகிழ்ந்த இடம் நோக்கிப் பொருதும்' பரிமேல். முதலானோர். 'முற்றுகை யாகாது இலக்கைப் பிடித்துப் போர்செய்தும்' பழைய 2.

''அறைப்படுத்தும்''

'அரணிலுள்ளாரைக் கீழறுத்தும்' மணக்.; 'வஞ்சித்தும்' பரிதி ; 'அறைப்படுத்தும்' காளி.; 'கீழறுத்துத் திறப்பித்தும்' பரிமேல். ; 'உள்ளேயுள்ளவர்கட்கு இலஞ்ச பரிதானங்கள் கொடுத்து உபாயசற்பனை பண்ணியும்' கவிராசர். ; 'சுருங்கை யறுத்துத்திறப்பித்தும்' பழைய உரை 2. இப்பகுதியில் மட்டும் கவிராசரும் பழ்ய உரைகாரரும் பரிமேலழக ரினின்றும் வேறுபடுகின்றனர்.

தேவநேயர் பரிமேலழகர் 'நெகிழ்ந்த இடம்' என்பதற்கு இவர் 'மதிலின் நெகிழ்ந்த இடம்' என்பர். சாமி. சிதம். 'முற்றாதெறிதல் — முற்றுகையிடாமலே பொருதல்' என்பர் ஏனைய பரிமேலழ்கரை ஒத்தன. மு.ரா.அரு. 'கீழறுத்தல் —கீழேயுள்ள நுழைவாயிலைத் திறக்கச் செய்தல்' என்பர். 'பூமியி லேசுரங்கம் தோண்டி' என்பர் வரத. இங்ஙனம் சிறுமாற்றங்கள் சிலவற்றைக் காணலாம்.

'முற்றியும்' என்பதற்கு 'முற்றுகையிட்டாலும்' என்பர் இராம.; இவ்வுரை முற்றினும் என்னும் செயவென்வினை எச்சத்திற்குப் பொருளாமேயன்றிச் செய்தெ னெச்சப் பொருளா காது ஆதலின் வழுவாம். அங்ஙனமே 'அறைப்படுத்தும்' என்ப தனை 'மறைப்படுத்தும்' எனப் பிரித்து மறைவிடங்களமைத்து என்பர் இராம.;அரணுக்குள் சுருங்கைவீதியமைத்தலும் உண்டா தலின் இவ்வுரையும் ஏற்புடையதாம்.

*75.8. முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்*
*பற்றியார் வெல்வ தரண்.* (748)

உரைப்பகுதி :

அ) மணக். : சூழவல்லாரைச் சூழ்ந்து, நலிந்தவரையும்

தன்னகத்து நின்று காக்க வல்லவராய்க் காப்பவர் வெல்வது அரணாவது எ-று.

பற்றாற்றுதல்—தாம் பற்றின இடம் விடாது வெல்லுதல்.

ஆ) பரிதி. : அரண் அழிப்போம் என்பார்க்கு அரிதாகி அரண் இருப்போம் என்பார்க்கு வென்றி கொடுப்பது அரண் எ-று.

இ) பரிப். : சூழ விடுதலைச் செய்து மதிலைச் சூழ்ந்து பொருவாரையும் அரணையும் பற்றுதலைச் செய்து மதில் தலையைப் பற்றியார் வெல்வது அரண் ஆவது எ-று.

இஃது அரண் இல்லாமையே அன்றி வெல்லவும் வேண்டும் என்றது.

ஈ) காளி. : 'அவ்வரண் யாம் கொள்வோம்' என்று அதன் புறத்து வந்து சூழ்ந்து கொண்ட பற்றலரை[1] முற்றும் வெற்றியரசர் முன் கடாவி[2]யவர் வேய்வர, வரத்து ஆற்றி[3] எவ்வாற்றானும் தன்னைப் பதி[4] யாகப் பற்றி வாழ்வோர் வெல்லுமாறு இருப்பது யாது? மற்று அதுவே அரணாவது எ-று.

உ) பரிமேல். : தானைப் பெருமையால் சூழ்தல்வல்லராய் வந்து சூழ்ந்த புறத்தோரையும், தன்னைப் பற்றிய அகத்தோர் தாம் பற்றிய இடம்விடாதே நின்று பொருது வெல்வதே அரணாவது, எ-று.

உம்மை சிறப்பும்மை, பற்றின்கண்ணே ஆற்றி[5] எனவிரியும். பற்று ஆகுபெயர்[6]. வெல்வது என உடையார்தொழில் அரண் மேல் நின்றது[7] பெரும்படையானைச் சிறுபடையான் பொறுத்து நிற்குந் துணையேயன்றி[8] வெல்லும் இயல்பினது என்பதாம்.

---

1. பற்றலர் - பகைவர் 2. கடாவி - செலுத்தி
3. வேய்வர வரத்து ஆற்றி - தூது வர வழிசெய்து 4. பதி - இடம்
5. பற்றின்கண்ணே ஆற்றி — நிலை பெயராது நின்று போர்செய்து
6. பற்று என்பது முதனிலைத்தொழிற்பெயராய் இடம்விட்டுப்பெயராத வீரரை உணர்த்தியது தொழிலாகுபெயர்
7. கோட்டையிலிருந்து போர்செய்யும் வீரரது வெல்லுதல் தொழிலை அரசனுக்கு ஏற்றி வெல்வது அரண் என்றது இடத்துநிகழ்பொருளின் தொழிலை இடத்திற்கு ஏற்றிக்கூறிய உபசார வழக்கு
8. பொறுத்துநிற்குந் துணையே யன்றி - தடுத்து நிற்கும் அளவினதல்லாமல்

இதற்குப் பிறிதுரைப்பாரும் உளர். இவை ஏழுபாட்டானும் அதனது இலக்கணம் கூறப்பட்டது.

காரி. : பற்றின்கண்ணே எனவிரியும், வெல்வது என்பது உடையார் தொழிலின் மேல் நின்றது.

ஊ) கவிராசர் : சேனைப்பெருமையாலே வந்து சுற்றிக் கொண்ட புறத்தோரை, உள்ளே இருக்கிறபேர், தாங்கள் இருக்கிறவிடம் விடாமல் நின்று பொருது வெல்வதே அரண் எ-று.

ஏ) பழைய2: வெகுதண்டாக[9] வந்திறங்கிச் சூழ்ந்து முற்றிக்கையைச் செய்து முற்றிக்கைப் பட்டவரையும் முற்றிக்கைப் படாமற் பற்றி யாற்றி யகத்தாரே வெல்வது அரண்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறட்பாவின் சொல்லமைதி உரைகளான் வலிதின் ஆழ்ந்து இயைத்துக் காண வேண்டிய நிலையில் உள்ளது.

'முற்று ஆற்றி முற்றியவரையும் — சூழவல்லாரைச் சூழ்ந்து (முற்றுகையால்) நலிந்தவரையும், பற்றாற்றிப் பற்றியார்— பற்றிய இடத்தைவிடாமலே நின்று காக்க வல்லவர், வெல்வது அரண்' எனச் சொற்பொருள்கண்டு 'முற்றுகையிட்ட புறத்தோரால் முற்றப்பட்டமையால் நலிந்தோரையும், அரணகத்திருந்து காப்பவரையும் வெல்லச் செய்வது அரணாம் என்று' பொருத்தும் மணக்குடவர் உரை. பரிதியுரை வழக்கம் போலக் கருத்துரையாகி, முற்றாற்றி முற்றியவர்—அரணழிப்போர் அவர்கட்கு அழித்தற் கரிதாய், பற்று ஆற்றிப் பற்றியார் —அரணிரருப்போம் என்பாராகியஅகத்தோர் அவர்கட்கு வெற்றி கொடுப்பது அரண்' என்பது.

பரிப்பெருமாள் உரை 'முற்றாற்றி முற்றியவர் —புறநின்று முற்றுகையிட்டுப் பொருவாரையும், அரண்—அரணையும், பற்றாற்றி (மதில் தலையைப்) பற்றியாராகிய அகத்தோர் வெல்லநிற்பது அரண்' என்பது.

காளிங்கர் இக்குறளின் பொருள்விளக்கத்திற்காக ஒரு பின்னணி ஓவியந் தீட்டுகிறார் : 'தமக்குள்ள படைவலியால்

---

9. வெகுதண்டாக - பலசேனைகளாக

''யாம் அவ்வரண்கொள்வேம்'' என்று அரண்புறத்து வந்துசூழ்ந்து கொண்ட பகைவரைமுற்றுகையிட்ட அரசன்முன்வினவியமன்னன் ஒற்றுவர, அவன் வருகையையும் தாங்கி அரணாகிய தன்னைப் பற்றி வாழ்வோர்கள் வெல்ல இருப்பதே அரண்' என்பர்.

இவர் உரையால் முற்றுகையிட்டார் உழிஞையார் எனக் கொள்வோம். அவரை முற்றுகையிட்டார் நொச்சியார். அவர் முன்னே உழிஞையார் ஒற்றுவர, அவ்வொற்றையும் தடுத்துத் தாங்கி அகத்தாராகிய நொச்சியார் வெல்லத்துணை செய்வதே அரண் என்றார் எனலாம்.

பரிமேலழகர் 'உழிஞையாரையும் அகத்திருந்த நொச்சியார் இடம் பெயராமலே இருந்து பொருது வெல்லத் துணை செய்வதேயரண்' என்னுங் கருத்துடையார். இதனை இவரையடியொற்றி எழும் கவிராசர், பழைய உரைகளுடும் நன்கு விளக்குதல் காண்க. இதனை உளங்கொண்டே தேவநேயரும் எழுதுவர்

வரத 'முற்றியவர்—போர்புரியவல்லோர். பற்று ஆற்றி —அவர்கள் உறுதியைத் தளர்த்தி அவர்கள் பிடியிலிருந்து காப்பாற்றி. பற்றியார்—நாட்டுப் பற்றினையுடையார்' எனக் குழப்பமான முடிவைத் தந்து 'நாட்டைக் காத்து வெற்றிகாண வல்லபடைகளையுடையதே அரண்' எனப் படையும் ஓரரண் என்பதைக் காட்ட முயற்சிக்கிறார். குறட சொல்லமைதி அவரிழுப்புக்கு இடந்தராமையால் கருத்தளவில் ஏற்புடையதாகிறது.

சாமி சிதம்., பரிமேலழகரை ஒத்துரைப்பர். சபாபதி இக்குறள் கோட்டையினிலக்கணம் கூறுவது என்பர்.

இங்ஙனம் அன்றி, முற்றாற்றி முற்றியவரையும் பற்றியார் பற்றுஆற்றி வெல்வது அரண் என அரண்சிறப்புரைப்பதாகக் கூறுதலே ஏற்புடைய உரையாம். இங்ஙனமன்றி மாறிக்கூறும் உரைகள் வலிந்து கோடல் புரிவன.

ஒ) ஒப்புமைப்பகுதி :

...... ...... யார்க்கு நோக்கருங் காவலின் ...... —கம்ப., 103

ஓ) மேற்கோள்பகுதி :

சுவாமி.: 'வெல்வது அரண்' என்பது வினைமுற்றுப்பெயர்கருவிப் பொருள் ஏற்றுவந்ததற்கு மேற்கோள். —இ.கொ.,83

75.9. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண். (749)

உரைப்பகுதி :

அ) மணக். : முந்துற்றமுகத்தினையுடைய பகைவர் கெடும்படியாக வினை செய்யுமிடத்து வெற்றியெய்தி மாட்சிமைப்பட்டது அரணாவது எ-று.

அஃதாவது அட்டாலகமும்[1] மதிற்பொறியும் முதலாயின மதில்தலையில்[2] அமைதல்.

ஆ) பரிதி . : எதிர்த்தபடை சயங்கொள்ளாமல் சாய்ந்துபோக அரணிருந்தார் வெற்றி கொள்வது அரண் எ-று.

இ) பரிப் . : முந்து உற்ற முகத்தினை உடைய பகைவர் கெடும்படியாக வினை செய்யும் இடத்து வெற்றி எய்தி மாட்சிமைப் பட்டது அரண் ஆவது எ-று.

அஃது ஆவது அட்டாலகமும்[1] மதில் பொறியும் முதலாயின மதில் தலையில் அமைத்தல். இது மதில் தலையில்[2] கருவிகள் அமைக்கவேண்டும் என்றது.

ஈ) காளி .: புறத்து அரசன் கடைப்புறத்துப்[3]போர் தொடங்கிய அளவிலே தலை சாய்ந்து ஓடுமாறு அகத்தோர் இயந்திரம் முதலிய கல்பொறியும் பாம்பும் கனலும் கடிகுரங்கும்வில்பொறியும் வேலும் வெந்நீவட்டும் காய்ச்சிய மணலும் கவவும் இருப்பு உலக்கையும் வீச்சுறுதூண்டிலும் விசைத்தெறி கவணும் ஆகிய வினைத் தொழில் உடைய மாட்சிமைப்பட்டது யாது? மற்று அதுவே அரணாவது எ-று.

முனைமுகத்து என்பது கடைப்புறந்து[3] வந்து போர் தொடங்கிய என்றது. வினைமுகத்து என்பது போர்த்தொழிலிடத்து என்றது. வீறுயெய்தி என்பது விருப்பம் உற்று என்றது.

---

1. அட்டாலகமும் - கோட்டை மதில்மேல் உள்ள மண்டபம்
2. மதில் தலையில் - மதில் உச்சியில்
3. கடைப்புறந்து - பின்படையைப் பாதுகாத்து

உ) பரிமேல் . : போர் தொடங்கின அளவிலே பகைவர் கெடும் வண்ணம் அகத்தோர் செய்யும் வினைவேறுபாடுகளான் வீறு பெற்று,[4] மற்றும் வேண்டும் மாட்சியை உடையதே அரணாவது, எ-று.

தொடக்கத்தில் கெட்டார்,[5] பின்னும் கூடிப்பொருதல் கூடாமையின், 'முனைமுகத்துச்சாய' என்றார். வினை வேறுபாடுகளாவன பகைவர் தொடங்கிய போரினை அறிந்து எய்தல்[6] எறிதல்[7], குத்துதல்,[8] வெட்டுதல்[9] என்று இவைமுதலாய வினைகளுள் அதனைச் சாய்ப்பனசெய்தல்[10], மற்றும் வேண்டும் மாட்சி என்றது புறத்தோர் அறியாமல் புகுதல் போதல் செய்தற்குக் கண்ட சுருங்கைவழி[11] முதலாயின உடைமை[12].

ஊ) கவிராசர் : போர் தொடங்கின மாத்திரத்திலே பகைவர் கெடத்தக்கதாய், உள்ளே இருக்கிற பேர் பண்ணின சண்டை செயம் வரத்தக்கதே அரணாவது (எ-று).

ஏ) பழைய 2 : போர் முகத்துப் பகைவர் தோற்றோட அகத்தார் செய்யும் வினைகளான் வீறு பெற்று மற்றும் பெருமையுடையதே அரணாவது.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'முனைமுகம்' 'வினைமுகம்' என்பதற்குப் பொருள் காணும் வகையில் ஆசிரியர்கள் வேறுபடுகின்றனர்.

முனைமுகம்—போர்முனையின் முன்னிடம். வினைமுகம்—போரின் முன்னணியில் என்பன தெளிவான பொருள்.

---

4. வீறுபெற்று - வேறு ஒன்றிற் செல்லாத பெருமை பெற்று
5. தொடக்கத்தில் கெட்டார் - போர்புரியவந்து முதலிலேயே தோற்றவர்
6. எய்தல் - அம்பெய்தல்
7. எறிதல் - சக்கரம், வேல் முதலியவற்றை வீசி எறிதல்
8. குத்துதல் - ஈட்டியாற் குத்துதல்
9. வெட்டுதல் - கத்தியால் வெட்டுதல்
10. அதனைச் சாய்ப்பன செய்தல் - எதிரிப்படையை அழிக்கக்கூடிய வினைகளைச் செய்தல்
11. சுருங்கை வழி - கோட்டையிலுள்ள கள்ள வழி
12. 'முதலாயின உடைமையை' என்றும் பாடமுண்டு

'முனைமுகத்துமாற்றலர்'

'முந்துற்ற முகத்தினையுடையமாற்றலர் 'மணக்.; கடைப் புறத்துவந்து போர் தொடங்கிய அளவில்' காளி.; 'எதிர்த்த படை' பரிதி .; 'போர்தொடங்கின அளவில்' பரிமேல்.; இங்ஙனமே ஏனோரும் மாறுபடுகின்றனர். இவ்வுரைகளே பொருள் தெளிவுடைய குறட்பாவையும் கலக்குகின்றன. முனைமுகம்-போர்க் களத்தின் முன்னிடம். 'முனைமுகத்து நில்லேல்' என்ற ஆத்திசூடியையும் காண்க. பரிமேலழகர் 'போர்தொடங்கின அளவு' என்றனர். அவ்வுரை அகரவரிசை யிலும் ஏறி அப்பொருளவாயின. ஆகவே 'போர்க்களத்தின் முதலிடத்திலேயே பகைவர் அழிய முதற்போரிலேயே தனிப் பெருமை எய்தி மாட்சிமைப்பட்டது அரண்' என்றவுரை ஏற்புடையதாகும்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

மருங்குநீர்க் கிடங்கு வெள்ளிடை கான
மலையுற அகன்றுயர்ந் துரங்கொண்டு
ஒருங்குபல் பொறியும் அணிந்துபே ரிடத்தாய்
உறுசிறு காப்பினல் வீரர்
நெருங்குபல் பொருளும் தழுவிஎத் திறத்து
நேரலர் கொளவப்படா தாகிச்
சுருங்கையா திகளும் பொதிந்தகத் துறைவோர்
தொழிலினி தாற்றுவ தரணே. —விநா. அரசி., 120

750.10. *எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி*
*இல்லார்கண் இல்ல தரண்.* (750)

உரைப்பகுதி:

அ) மணக். : 'இல்லை அரண்' பாடம்.

சொல்லப்பட்ட எல்லா மாட்சிமையும் உடைத்தாயினும் வினையின்கண் மாட்சிமை இல்லாதார்மாட்டு அரணால் பயனில்லை எ-று.

இது வினைவல்லாரும் வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: அரண் எத்தனை வலிக்கை உண்டாகிலும் சாதுரியவான் இல்லாத அரண் அரணல்ல எ-று.

இ) பரிப்.: சொல்லப்பட்ட எல்லா மாட்சிமையும் உடைத்து ஆயினும் வினையின்கண் மாட்சிமை இல்லாதார் மாட்டு அரணால் பயன் இல்லை எ-று.

இது வினை செய்யவல்லாரும் வேண்டும் என்றது.

ஈ) காளி.: 'நில்லாது அரண்' பாடம்.

கீழ்ச் சொன்னவும் பிறவும் ஆகிய எனைத்து வகைப்பட்ட மாட்சிமை உடைத்தாகிய இடத்தும், புறத்தவர் திறத்துப் பொழுது தோறும் வேறுபடச் செய்யும் வினையினது மாட்சிமை இல்லாதார் மாட்டு நில்லாது அரண்; எனவே அவ்வினைகள் ஆங்கு ஆங்குச் செய்து தெவ்வரை ஓட்டும் திறன் இல்லாதார்கண் உளதேனும் அழிந்து விடும் எ-று.

உ) பரிமேல்.: அரண், மேற்சொல்லப்பட்ட மாட்சியெல்லாம் உடைத்தாயவிடத்தும், வினை செய்தற்கண் மாட்சியில்லாதார் மாட்டு அவை[1] இலதாம், எ-று.

வாளாஇருத்தலும் அளவறியாது செய்தலும் ஏலாதது செய்தலுமெல்லாம் அடங்க 'வினைமாட்சியில்லார்' என்றும், ஏற்ற வினையை அளவறிந்து செய்து காவாக்கால் அம்மாட்சி களால் பயனின்றி அழியும் என்பார் அவையுடைத்தன்று[2] என்றும் கூறினார். இவை இரண்டு பாட்டானும் காப்பாரையின்றி அமை யாது என்பது கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: அரசனுக்கு வேண்டிய காவல் காடு மலை நீர் நிழல் முதலானவைகளெல்லாம் உண்டாயிருந்தாலும், சண்டை பண்ணுகிறதிலே கெட்டி இல்லாதவர்களிடத்திலே அரண் இல்லை.

ஏ) பழைய 2: 'இல்லார்கண்ணில்லா தரண்' பாடம்.

---

1. அவை — மதிலுக்கு இன்றியமையாதபொறிகளும் நுழைவாயிலும் முதலிய மதில் மேல் உறுப்புக்கள் அனைத்தும்
2. 'இல்லதரண்' என்றும், 'அவையிலதாம்' என்றும் பாடமுண்டு

மேற்சொல்லிய மாட்சிமையெல்லாம் உடைத்தாய இடத்தும் வினை செய்தற்கண் மாட்சிமை யில்லாதாரிடத்து நில்லாதாம் அரண்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்குடவர் முதலான அனைவர் உரைகளும் அரணுக்குரிய அனைத்துச் சிறப்புக்களும் இருப்பினும், அதனைப் பயன்படுத்திப் பயன்கொள்ளும் காவலில்லாயிற் பயன் இன்றாம் என்ற கருத்தையே விளக்கி வினைசெய்வாரின் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றன. காளிங்கர் 'உள்ளிருக்கும் அரண்காவலர் புறஞ்சூழ்வார் நிலைக்கு ஏற்பக் காலந்தோறும் போர்முறையை மாற்றிச்செய்து வெற்றிகாணவேண்டும்' என்பதை வற்புறுத்துவர். ஆனால் அனைவரும் அரணுக்கு வள்ளுவர் கூறிய அனைத்திலக்கணங்களிலும் ஒருமனப்பட்டவர்கள். இராம. பொறிகளின் சிறப்பினைமட்டும் கருதி 'அவற்றின் வேலைப்பாடு இரகசியங்களை அறியாதவர்களுக்குப் பயன்படாததே கோட்டை' எனக் கூறி, 'கோட்டையைப்பிடித்துக் கொண்ட எதிரிக்குப் பயன்படுத்திக் கொள்ளமுடியாமற் போவதே கோட்டை' என இரு திருப்பங்களைக் கூறுகிறார். அம்மட்டோடு அன்றி இக்குறள் கோட்டையின் சிறப்புக் கூறவந்ததேயன்றி வீரர்களின் சிறப்பின்மையைக் கூறவந்ததன்று' எனப் பரிமேலழகரை மறுக்கவும் செய்வர். அரண் பயன்படுவது அகத்தாராகிய வீரர்களின் செயற்றிறத் தானன்றிப் பிறவாற்றானில்லை என்பதை 'இடத்துதவும் நல்லாள் உடையது அரண்' (746) என வீரர்களை அகத்துறுப்பாகக் கூறிய வள்ளுவர் ஈண்டு 'இல்லார்கண் இல்' என எதிர்மறைமுகத்தானும் வலியுறுத்தினராதலையும் எண்ணவேண்டும்.

# 75. அரண்

| | ஆற்றுபவர்க்கும் | மணிநீரும் | உயர்வகலம் | சிறுகாப்பின் | கொளற்கரிதாய்க் | எல்லாப்பொருளும் | முற்றியும் | முற்றாற்றி | முளைமுகத்து | எனைமாட்சித் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 1 | 2 | 3 | 5 | 6 | 7 | 8 | 10 | 4 | 9 |
| பரிதி. | 7 | 2 | 10 | 4 | 1 | 3 | 9 | 6 | 5 | 8 |
| பரிப். | 1 | 2 | 3 | 5 | 6 | 7 | 8 | 9 | 4 | 10 |
| காளி. | 5 | 9 | 8 | 7 | 1 | 10 | 2 | 3 | 4 | 6 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

75 வது அதிகாரம் 'அரண்' முற்றிற்று.

# 76. பொருள் செயல்வகை

அ) மணக். : பொருள்செயல்வகையாவது பொருள் தேடு மாறும் அதனால்பயன் கொள்ளுமாறும் கூறுதல். இது மேற்கூறிய நாடும் நகரமும் உடையார்க்கு உளதாவதொன்றாதலின் அதன் பின் கூறப்பட்டது.

ஆ) பரிதி. : பொருள் செயல்வகையாவது மூன்று வகைப் பொருள் தேடும் முறைமை சொல்வது எ-று.

இ) பரிப். : பொருள்செயல்வகையாவது பொருள் தேடும் ஆறும், அதனால் பயன் கொள்ளும் ஆறும் கூறுதல். இது நாடும் நகரமும் உடையார்க்கு உளது ஆவது என்றார். ஆதலின்அதன் பின் கூறப்பட்டது.

உ) பரிமேல் . : இனிப் பெரும்பான்மையும் நாட்டானும் அரணானும் ஆக்கவும்[1] காக்கவும் படுவதாய பொருளைச் செய் தலின் திறம்[2] இவ்வதிகாரத்தால் கூறுகின்றார்.

ஊ) கவிராசர். : அஃதாவது - மெத்தவும் நாட்டினாலேயும், அரணாலேயும், ஆக்கவும் காக்கவும் படுவதாய பொருளைத் தேடுகிறது.

ஏ) பழைய 2 : அஃதாவது, திரவியங்களைத் தேடும் வகை,

---

1, ஆக்கவும்—மென்மேற் பெருகச் செய்யவும்

2, திறம் —வகை

ஐ) தொகுப்பும் குறிப்பும :

தேவநேயர் 'அரசன் அமைச்சரோடு கூடித் தன்நாட்டை அரணாற்காத்து, தனக்கும் ஆட்சிக்கும் இன்றியமையாத பொருளைத் தன்குடிகளிடத்தும், பகைவரிடத்தும், நண்பரிடத்தும் தேடும்வழிகள்; என்றும் 'ஆட்சியின்கீழ்க்குடிகள் பல்வேறு தொழில்களைச் செய்து பொருளீட்டுதலும் அடங்கும்' என்றும் கூறுவர்.

வரத.; 'பலவகைப் பொருள்களையும் பலவழிகளான் திறம் படச்செய்தலாம் உணவு முதலிய இன்றியமையாத தேவைகளையும் நாட்டின் பொருள் என்பர் வள்ளுவர். மக்களின் தேவைக்கும் அரணமைக்கவும் பொருள் தேவை. ஆதலால் அதனைத் தேடும் வகைகளைக் குறிப்பது இவ்வதிகாரம்' என்பர்.

சி.இ. 'பொருள் செய்யும் வகைகள்' என்பர். மு.ரா.அரு. 'நாடு அரண் இவைகளால் ஆக்கவும் காக்கவும் படும் பொருளைச் செய்யுந் திறம் கூறுதல்.' என்பர். சாமி. சிதம். 'செல்வப் பொருளைச் சேர்க்கும் வகை' என்பர்.

கா சு. 'பொருளும் அதனைச் செய்யும் வகையும் பொருட் செல்வத்தின் சிறப்பும் அதனை ஈட்டும் முறையும்' எனக் கூறுவர். குழந்தை 'பொருளைத் தேடும் வகை., பொருளின் சிறப்பு' என்பர். இராம. 'பொருளைச் சம்பாதிக்க வேண்டிய முறை; அவசியம் முதலியவைகளைக் கூறுவது பொருள் — பணம் இது எல்லாருக்கும் பொதுவாகும்' எனக் கூறுவர். இவருள் மணக். 'பொருளும், அதனைச் செய்யும் முறைகளும் ஆகிய இரண்டும் வேந்தர்க்கு உள்தாவன' என்பர். பரிதி 'வள்ளுவர் கூறிய உறுபொருள், உல்குபொருள், ஒண்ணார்த்தெறு பொருள் என்ற மூன்றனையும் தேடும் முறை' என்பர்.

பரிமேல். நாட்டானும் அரணானும் ஆக்கவும் காக்கவும் படும் பொருள்' என அறிமுகப்படுத்துகிறார். ஏன் நாட்டின் அரணி-

னையும் ஆக்குவதும் காப்பதும் பொருள் தானே ஆதலால் இரண்டையும் இணைத்து எண்ணுதலும் தகும்.

தேவநேயர் 'குடிகளின் தொழிற் சிறப்பால் வரும் பொருளையும் தேடுதலைக்'குறிப்பர். அதுவும் இயைபுடைத்தாம். வரத 'பொருளெனச் செல்வத்தை மட்டும் கருதினாரல்லர். உணவு முதலியவற்றையும் பொருள்'என்பர். ஏனையயோருரைகள் முன்னோர் வழிச் செல்வன.

76.1. *பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்*
*பொருளல்ல தில்லை பொருள்.* (751)

உரைப்பகுதி :

அ) மணக். : ஒருபொருளாக மதிக்கப்படாதாரையும் பொருளாக திக்கப் பண்ணுவதாகிய பொருளையல்லது வேறுபொருள் என்று சொல்லப்படுவது இல்லை எ-று.

இது வடிவில்லாதாரைப்[1] பெண்டிர் இகழ்வார். பொருளுடையாரை யாவரும் நன்றாக மதிப்பர் என்றது.

ஆ) பரிதி . : ஒரு பொருளும் அற்றாரை அநேகம் பொருளாகச் செய்யவல்லது பொருளல்லது வேறு பொருள் இல்லை எ-று

இ) பரிப். : ஒரு பொருள் ஆக மதிக்கப் படாதாரையும் பொருள் ஆக மதிக்கப் பண்ணுகின்ற பொருளை அல்லது வேறுபொருள் என்று சொல்லல் ஆவது இல்லை எ-று.

மேல் இன்பம் எளிது ஆக வரும் என்றார். அஃது எளிது ஆக வரும் ஆறு என்னை? வடிவு இல்லாதாரைப் பெண்டிர் இகழ்வர் ஆதலின், நன்னெறி உற்றார்க்குப் பொருள் உடையாரை யாவரும் நன்கு மதிப்பார் என்று கூறப்பட்டது.

1. வடிவில்லாதார்-அழகில்லாதார்

ஈ) காளி. : சத்துருக்களையும் மித்துருக்களையும் தமக்கு உறுதி பண்ணிக் கொடுக்கும் பொருளானது இது அன்றிப், பொருளாக மதிக்கலாவது ஒன்றும் இல்லை எ-று.

இனி இவ்வாறு அன்றிக் குலத்தில் இழிவாகியாரையும் உறுதி இல்லாதாரையும் யாவரும் மதிக்கப்பண்ணும் என்று உரைப்பினும் ஆம்.

உ) பரிமேல். : ஒரு பொருளாக மதிக்கப்படாதாரையும் படுவாராகச் செய்ய வல்ல பொருளை யொழிய, ஒருவனுக்குப் பொருளாவது இல்லை.

மதிக்கப்படாதார்—அறிவிலாதார், இழிகுலத்தார், இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. மதிக்கப்படுவாராகச் செய்தல் அறிவுடையாரும் உயர்குலத்தாரும் அவர்பாற்[2] சென்று நிற்கப்பண்ணுதல். அதனால்[3] ஈட்டப்படுவது அதுவே[4] பிறிதில்லை என்பதாம்.

ஊ) கவிராசர் : ஒரு பிரயோசனமாக எண்ணப்படாதவரைப் பிரயோசனவான்களாகச் செய்யவல்ல பொருளே ஒருவனுக்குப் பொருளாகிறது ; பின்னே வேறுபொருள் இல்லை எ-று.

ஏ) பழைய 2 : ஒருபொருளாக மதிக்கப்படாதாரையும் மதிக்கப்படுவோராகச் செய்ய வல்ல பொருளை யொழிய ஒருவனுக்குப் பொருளாவது இல்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்குடவர், பரிப்பெருமாள் உரைகளில் உள்ள 'வடிவு இல்லாதாரைப் பெண்கள் இகழ்வார்' என்ற விளக்கம் 'பொருளில்லாரை யாரும் பொருளாக மதியார்' என்பதை விளக்கவந்த தொடரேயன்றிக் குறள் உரையன்று.

2. அவர்பால்-அறிவில்லாதாரும், இழிகுலத்தாருமான செல்வர்பால்
3. அதனால்-நிற்கப்பண்ணுதலால் 4. அதுவே-பொருளே

பரிப்பெருமாள் காளிங்கர் உரைகளில் வரும் 'மேல் இன்பம் எளிதாக வரும், அஃது எளிதாக வரும் ஆறு என்னை?' என்பதும், 'சத்ருக்களையும் மித்துருக்களையும் தமக்கு உறுதி பண்ணிக் கொடுக்கும்' என்பதும் அவரவர்கள் கொண்ட குறளின் முறைவைப்பையொட்டி எழுதப் பெற்றவை.

'பொருளல்லவரை' என்ற இக்குறள் 'அறனீனும் இன்பமும் ஈனும்' என்ற குறட்குப் பின்னர் பரிப்பெருமாளால் கொள்ளப் பெற்றுள்ளது. ஆதலால் 'மேல் இன்பம் எளிதாக வரும் என்றார்; அஃது அங்ஙனம் வருமாறு என்னை?' என அனுவாதமுகத் தான் வினாவை எழுப்பி, 'வடிவற்றவனையும் பொருள் காரண மாக மாதர் விரும்புவர். அதுபோல பொருளல்லவரையும் பொருளாகச் செய்வது பொருள்' என்றனர்.

இங்ஙனமே காளிங்கர் 'செறுநர் செருக்கறுக்கும் எஃகு பொருள்' என்ற குறட்பாவை யடுத்து இக்குறளை வைத்தமை யின் அதன் கருத்தை வழிமொழிந்து சத்துருக்களையும் மித்துருக் களாக்கும் பொருள்' என்றார் இவர் உரைகள் சிறப்பில இயைபில எனல் சாலாதென்க.

பரிமேலழகர் 'பொருளல்லவர் குலத்தானும் அறிவானும் தாழ்ந்தவர்கள்' என்பர். தேவநேயர் 'மதிக்கப்படாதார் கல்லா தாரும், இழிதொழிலாரும். உறுப்பறையரும், ஒழுக்கம் இலா தாரும், நோயரும், இளஞ்சிறாரும் போல்வார்' என்பர்.

வரத. 'அறிவானும், குணத்தானும், தகுதியானும் மதிக் கப்படாதார்' என்பர். பொருளின் இன்றியமையாமையும், பயனும் கூறும் இக்குறட்பாவில் முன்னும் பின்னும் உள்ள குறட்கருத்துக் களை உடன் எண்ணி எழுதும் உரைகளைக் காட்டிலும் இக் குறட்பாவுக்குரிய கருத்தை மட்டும் நன்கு விளக்கும் உரை சிறந்தது

ஒ) ஒப்புமைப்பகுதி:

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்:

வென்றி யாக்கலும் மேதக வாக்கலும்
அன்றி யுங்கல்வி யோடழ காக்கலும்

குன்றி னார்களைக் குன்றென வாக்கலும்
பொன்றும் சாகத்தி னாய்பொருள் செய்யுமே. —சீவக.,1922

அளப்பரும் விஞ்சையே அன்றி மேன்மையும்
உளப்படு தன்மையும் உயர்ந்த சீர்த்தியும்
கொளப்படு கொற்றமும் பிறவும் கூட்டலால்
வளத்தினிற் சிறந்தது மற்றொன் றில்லையே.
—கந்த.மாயையுப., 12

பூரியர் தமைவேந் தாக்கும் புவிபுரப்பிக்கும் துய்க்கும்
சீரிய உண்டி சேர்க்கும் தேவர்தம் உலகம் போக்கும்
காரியம் அனைத்தும் கூட்டும் கருதலர் தம்மை வாட்டும்
கூரிய திதின்மே லில்லை கொழும்பொனீர் கொண்மின் என்றார்.
—கம்ப., அசுவமேத., 266

அலம்தரும் கல்வி கொணர்ந்து முடிக்கும்
குலந்த கிளைகள் அழிபசி நீக்கும்
நிலம்பக வெம்பிய நீள்சுரம் போகிப்
புலம்பில் பொருள்தரப் புன்கண்மை உண்டோ,
—வளையா., 47

......... ......... .........என் சொலினும்
கைத்துடையான் காற்கீழொதுங்குங் கடன்ஞாலம்.
—நீதிநெறி.,

பொருளல்லது இல்லை பொருள்:
மொருளல்லாற் பொருளும் உண்டோ —கலி., 14:1.

பணம் பந்தியிலே குலம் குப்பையிலே —பழ.,

பணம் உண்டானால் மனம்உண்டு —பழ.,

76.2. இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. (752)

**உரைப்பகுதி :**

அ) மணக்.: பொருளில்லாதாரை எல்லாரும் இகழ்வர்; பொருளுடையாரை எல்லாரும் சிறப்புச் செய்வர் எ-று.

இது சிறப் பெய்துதலும் பொருளுடைமையாலே வரும் என்றது.

ஆ) பரிதி.: பொருளற்றாரை எல்லாரும் இகழ்வர்; செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு எ-று.

ஈ) காளி.: கைப்பொருள் இல்லாதாரை யாவரும் இகழ்வர் கைப்பொருள் உடையோரை யாவரும் இன்பம் உற்றுச் சிறப்புச் செய்வார்கள் எ-று.

உ) பரிமேல்.: எல்லா நன்மையும் உடையராயினும் பொருளில்லாரை யாவரும் இகழ்வர், எல்லாத்தீமையும் உடையராயினும் அஃது உடையாரை யாவரும் உயரச்செய்வர்.

உயரச்செய்தல் தாம் தாழ்ந்து நிற்றல். இகழ்தற்கண்ணும் தாழ்தற்கண்ணும் பகைவர், நட்டார், நொதுமலர் என்னும் மூவகையாரும் ஒத்தலின் யாவரும்[1] என்றார். பின்னும் கூறியது அதனை வலியுறுத்தற் பொருட்டு.

ஊ) கவிராசர்: எல்லாக் குணங்களும் உடையராயினுயும், பொருள் இல்லாரை, எல்லாரும் இகழ்வர்; எல்லாப் பொல்லாங்கும் உடையராயினும், பொருள் உடையாரை எல்லாரும் புகழ்வர் எ-று.

ஏ) பழைய 2: எல்லா நன்மையு முடையாராயினும் பொருள் இல்லாரை எல்லாரும் இகழ்ச்சி செய்வர். எல்லாத் தீமையு முடையாராயினும் பொருளுடையோரை எல்லாருஞ் சிறப்புச் செய்வர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறட்கு 'யாவரும் என்பதற்குப் பரிமேலழகர் இகழ்தல் தாழ்தல் இரண்டற்கும் இயைய்த்தரும் விளக்கம் நயமானது. தேவநேயர் 'எள்ளுதல்-பார்த்தலும் உரையாடுதலும் செய்யாமை. சிறப்புச்செய்தல்-அரசன் பட்டமளித்தல் வணங்கல், வேண்டுகோளை நிறைவேற்றுதல் முதலியன செய்தல்' என்பர். குழந்தை' நல்லோராயினும் எள்ளுவர்; தீயோராயினும் சிறப்புச் செய்வர்' என விதத்தல் பொருட்சிறப்புத் தருவதாம்.

1. 'எல்லாரும்' என்றும் பாடமுண்டு

ஒ) ஒப்புமைப்பகுதி:

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் :

இலாஅர்க் கில்லைத்தமர் —நாலடி., 283

வாழாதார்க்கு இல்லைத்தமர் —நாலடி., 290

இன்மை இளிவாம் உடைமை உயிர்க்கு அச்சம் —வளை., 37

கெட்டே மிதுவெந் நிலையென்று சார்தற்கண்
நட்டவ ரல்லார் நனிமிகு பவர்சுற்றம்
பெட்டது சொல்லிப் பெரிதிகழ்ந் தாற்றவும்
எட்டவந் தோரிடத் தேகி நிற்பவே —வளை., 48

பெண்டிர் மதியார் பெருங்கிளை தானது
கொண்ட விரகர் குறிப்பினின் அஃகுப
வெண்டறை நின்று வெறுக்கை யிலராயின்
மண்டினர் போவர்தம் மக்களும் ஒட்டார். —வளை., 65

கொற்றங் கொள்குறிக் கொற்றவற் கென்பவே —சீவக., 1921

மாடுதானது இல்லெனின் மானுடர்
பாடுதான் செல்வா ரில்லை — அப்பர். கொண்டீச்சரம்., 3

வறுமை கண்டமெய்ஞ் ஞானியர் ஞாலத்துவரினும்

வெறுமை கண்டபின் யாவரும் யாரென விரும்பார் —கம்ப., 6731

ஏழையைக் கண்டால் மோழையும் பாயும் —பழ.,

செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு :

அருளுடை யாருமற் றல்லா தவரும்
பொருளுடை யாரைப் புகழாதார் இல்லை
பொருபடைக் கண்ணாய் அதுவால் திருவுடையார்
பண்டம் இருவர் கொளல். —பழ. நா., 200

கையிலுண்டானால் காத்திருப்பர் ஆயிரம்பேர் — பழ.,

முற்றும் :

உண்டாய போழ்தின் உடைந்துழிக் காகம்போல்
தொண்டா யிரவர் தொகுபவே—வண்டாய்த்
திரிதரும் காலத்துத் தீதிலிரோ என்பார்
ஒருவரும் இவ்வுலகத் தில். — நாலடி., 284

முட்டின் றொருவர் உடைய பொழுதின்கண்
அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவ ராபவே
கட்டலர்தார் மார்ப கலியூழிக் காலத்துக்
கெட்டார்க்கு நட்டாரோ இல். — பழ. நா., 59

பட்டாங்குத் தூயர் பழிச்சற் குரியராய்
ஒட்டின் றுயர உலகத்தோர் — கட்டளை
யாம்வெறுக்கை இன்றி அமையாராம் மையாவின்
ஆம்வெறுக்கை நிற்கும் உடம்பு. —இன்., 19

செல்வர்க்கே சிறப்புச் செய்யும் திருந்துநீர் மாந்தர் போல
அல்குற்கும் முலைக்கும் ஈந்தார் அணிகல மாய வெல்லாம்
நல் கூர்ந்தார்க் கில்லை சுற்றம் என்று நுண்ணுசுப்பு நைய
ஒல்கிப்போய் மாடஞ் சேர்ந்தார் ஒருதடங் குடங்கைக் கண்ணார்
— சீவக., 2535

பொருள்வகை யுண்டாய்ச் செல்லக் காணின் போற்றியென்
றேற்றெழுவர்
இருகொள் துன்பத் தின்மை காணின் என்னே என்பாரும் இல்லை
— திருவாய்., 9. 1 : 3

... ...... ...... ...... எந்நாளும்
இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பென்னும்—சொல்லாலே
அல்குற்கு மேகலையைச் சூழ்ந்தாள் அணிமுலைமேல்
மல்கிய சாந்தொடு பூண்புனைந்து—நல்கூர்
இடைஇடையே உள்ளுருகக் கண்டாள்... —திரு. உலா. 135-137

கல்லானே யானாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை

இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல். — நல்வழி., 34

இன்சொல்லன் தாழ்நடையன் ஆயினும்ஒன் றில்லானேல்
வன்சொல்லி னல்லது வாய்திறவா—என்சொலினும்
கைத்துடையான் காற்கீழ் ஒதுங்கும் கடன்ஞாலம்
பித்துடைய அல்ல பிற. —நீதிநெறி., 11

எல்லா முடையான் இயக்கனைநட் டான்எழுவாய்
பல்லக்கா ளாக்கினான் பல்கலைதேர் வேந்தனும்
இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. —இன்னிசை. இருநூறு
அதி. 14 : 2

*76.3. பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்*
*எண்ணிய தேயத்துச் சென்று.* (753)

**உரைப்பகுதி :**

அ) **மணக்.:** பொருளென்னும் மெய்யாகிய ஒளி, எண்ணப் பட்ட தேசமெல்லாவற்றினும் சென்று பகையென்னும் இருளை அறுக்கும் எ-று.

ஆ) **பரிதி.:** அகத்திலிட்ட விளக்கு அகத்திருளை ஓட்டும், தனம் என்கின்ற விளக்கு தான் இருந்ததேசத்தில் சத்துரு என்னும் இருளை ஓட்டும் எ-று.

இ) **பரிப் :** பொருள் ஆகிய மெய்யான ஒளி எண்ணப்பட்ட தேயம் எல்லாவற்றினும் சென்று இருள் அறுக்கும் எ-று.

இருள் ஆவது ஒளி இல்லாத இடம், பொருள் உண்டாகப் புகழ் உண்டாம்; புகழ் உண்டாக ஒளி எங்கும் பரக்கும் என்றது. அரசன் பொருள் உடையன் ஆயின் தான் கருதின தேயம் எல்லாவற்றினும் தன் ஆணை நடக்கும் என்றும் ஆம்.

ஈ) **காளி.:** நெறியினால் ஈட்டிய பொருள் என்று சொல்லப் படுகின்ற கெடாத விளக்கானது பிறவியில் இனிய மறுமை

உலகமும் பிறவி நீங்கிய முத்தியும் தாம் கருதிய வண்ணம் பெறலாவதும் செய்து, கொலை களவு கள் காமம் பொய் சினம் சூது முதலியவற்றில் செல்லுகின்ற அறியாமையாகிய இருளை நீக்கி நன்மை பயக்கும் எண்ணிய தேயத்து எய்துமாறு எ-று.

உ) பரிமேல்.: பொருளென்று எல்லாரானும் சிறப்பிக்கப் படும் நத்தாவிளக்கு[1], தன்னைச் செய்தவர்க்கு அவர் நினைத்த தேயத்துச் சென்று பகை என்னும் இருளைக் கெடுக்கும்.

எல்லார்க்கும் எஞ்ஞான்றும் இன்றியமையாததாய் வருதல் பற்றிப் 'பொய்யாவிளக்கம்' என்றும், ஏனை விளக்கொடு இதனிடை[2] வேற்றுமை தோன்ற 'எண்ணிய தேயத்துச் சென்று என்றும் கூறினார். ஏகதேசவுருவகம்[3] இவை மூன்று பாட்டானும் பொருளது சிறப்புக் கூறப்பட்டது.

ஊ) கவிராசர் : பொருளென்று எல்லாராலும் சிறப்பாய்ச் சொல்லப்பட்ட அவியாத விளக்கு,[4] தன்னைச் சத்தியத்துடனே தேடினவர்களுக்கு, அவர்கள் நினைத்த தேசத்திலே போய், பகை என்னும் இருளைக் கெடுக்கும் எ-று.

---

1. நந்தாவிளக்கு - அணையாதவிளக்கு
2. இதனிடைப் பொருள் என்னும் பொய்யா விளக்கத்திடை
3. ஏகதேசவுருவகம் - உருவகத்தில் உவமை பொருள் ஆகிய இரண்டனுள் ஒன்ற உருவகித்து மற்றொன்றை உருவகிக்காமல் விடுதல், ஈண்டு பொருள் என்னும் பொய்யா விளக்கம் எண்ணிய தேயத்துச் சென்று இருளறுக்கும் என்றவர் விளக்கு இருள் ஒட்டுவதை உருவகிக்கவில்லை. ஆகவே ஏகதேசவுருவகமாகும் இக்குறள் என்பாகோ வ.

   இக்குறளில் பொருள் பகை என்பன இரண்டும் உபமேயங்கள், விளக்கு இருள் என்பன இரண்டும் உபமானங்கள். பொருள் என்னும் பொய்யா விளக்கம் என உருவகித்த ஆசிரியர் பகை என்னும் இருள் எனக் கூறாது இருள் என்று மட்டும் கூறினார். ஆதலால் இஃது ஏகதேசவுருவகமாகாது. உவமைக்கும் பொருளுக்கும் வேற்றுமை தோன்றாது உருவகிக்குமிடத்து உவமையும் பொருளையும் நிரலே நிறுத்தி உருவகிப்பதும் உவமையைப் பொருளாகக் கூறுவதும் என இரு மரபு மேற்கொள்ளப்படும். இக்குறளில் இரண்டும் வந்துள்ளமையான் முற்றுருவகமே
4. அவியாத விளக்கு - அனணயாத விளக்கு

ஏ) பழைய 2 : பொருளென்று சொல்லப்படும் அவியாவிளக்கு தன்னைத் தேடி வைத்தவன் நினைத்த தேசத்துச் சென்று, பகை என்னும் இருளைக்கெடுக்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பரிதி. 'பொய்யா விளக்கம் இருள் (அகத்திருள்) அறுக்கும்; பொருளென்னும் விளக்கம் பகையென்னும் இருளைய கற்றும்'. என்பர். பொய்யாவிளக்கம் என்றதால் 'அகத்திலிட்ட அறிவு விளக்கம்' எனவும் 'பொருளென்னும் பொய்யா விளக்கம் —தனம் என்கிற விளக்கு சத்துரு என்னும் இருளை ஓட்டும்' எனவும் கூறுவர் பரிதியார். 'இருள் — ஒளியில்லாத இடம். பொருளாற்புகழ்; புகழால் ஒளி எங்கும் பரந்தும்' என உருவக விளக்கங்காட்டுவர் பரிப்பெருமாள்.

பரிமேலழகர் தரும் நயங்கள் ஏற்புடையன. பரிப்பெருமாள் 'இருள் அறுக்கும்-அடங்காமையாகிய இருளையகற்றும்' என்பதுபட உரைப்பர் வள்ளுவர் "எண்ணிய தேயத்துச் சென்று இருளறுக்கும்" என இம்மைப்பயனே கூற, காளிங்கர் 'மறுமையுலகம் மாபாதகங்களிற் செல்லுகின்ற அறியாமையாகிய இருளையும் கெடுக்கும் இருமைப்பயனையும் எண்ணச் செய்வர். இவ்வுரை குறளமைதிக்கு ஒவ்வாதது. மணக்குடவர், 'பொருளென்னும் மெய்யொளி, அவ்வொளியை உடையவனால் எந்தெந்தத்தேசம் எண்ணப்படுகிறதோ அங்கெல்லாம் சென்று பகையிருளை அறுக்கும்' என்றார். பரிதி. 'பொய்யாவிளக்கம் — உள்ளத்தேற்றிய ஞானதீபம். விளக்கம் - புறத்தேற்றிய விளக்கு, இருள் — அகத்திட்ட பகைமை என்னும் இருள், புறத்தே பகை என்னும் இருள் என இருபாலும் இயையப் பொருள் கண்டனர் இது ஊன்றியுணரத்தக்க நயமான உரை. ஆனால் 'ஓட்டும்' என்னாது 'அறுக்கும்' என்ற வள்ளுவர் உள்ளத்தையுணராமல் 'அறுக்கும் — ஓட்டும்' என்றே உரை கண்டனர். வலிமையுள்ள போது பகையை ஓட்டினால் அப்பகை தமக்கு வலிமிக்க போதோ அல்லது ஓட்டியவற்கு வலி குன்றியகாலத்தோ மீளவும் வரக்கூடும் ஆதலின் அங்ஙனம் வாராது என்பார் 'அறுத்து விடும்' என்றார், "உயிர்வரின்

உக்குறள் மெய்விட்டோடும்'' என்ற நூற்பாவில் 'கெடும்' என்னாது 'ஓடும்' என்றமையான் வருமொழிமுதலில் உயிர் வராது நீங்கின் ஓடியவன் திரும்பியும் வருதல்போல உக்குறள் திரும்பி ஈற்றின் இசைக்கும் என்ற சங்கரநமச்சிவாயர் உரைக்குறிப்பின் எதிராக 'ஓடும்' என்னாது 'அறுககும்' என்ற மையான் பகையின் முற்றழிவு கூறினார் ஆசிரியர் என்ற நயம் பெறப்பட்டது 'எண்ணிய தேசத்து' என்பதற்குத் 'தானிருந்த தேசத்து' என்ற வுரை ஆழமுடையதன்று. பரிப். 'இருள்' என்னும் பொருட்பெயரை 'இடம்' ஆக்கி,'பொருள் உண்டாகப் புகழ் உண்டாகும்' புகழால் ஒளியும், ஒளியான் எத்தேயத்தும் அவனாணை நடக்கும் என வழிவழியியைபு கூறி விளக்குகிறார். இது வலிந்து கோடலாம்.

காளிங்கர், 'அறனீனும்' என்ற குறட்குப்பின் இக் குறளைக் கொண்ட வராதலின் அக்குறட்கண்ணதாகிய 'திறன றிந்து தீதின்றி வந்த பொருள்' என்பதனை அனுவதித்து 'நெறியினீட்டிய பொருள் என்னும் விளக்கானது' என இயைத்து உரைத்தார். அதற்கேற்பவே, 'எண்ணிய தேயம் மறுமையுலகமும், பிறவி நீங்கிய முத்தியும், ஆகிய இடத்தை கொலை முதயலிவற்றிற்செல்லும் அறியாமையாகிய இருளை நீக்கி நன்மைபயக்கும்' என்றார். இவ்வெண்ணம் இவர்க்கு முற்குறளோடு இயைபுறுத்து நோக்கியதன் விளைவே என்க. பொருள் வந்த வழிக்கேற்பப் புத்திமாறுதல் இயல்பாதலான் என்க.

பரிமேலழகரை ஒட்டிச்செல்லும் கவிராசரும் இன் னாருக்கு என விதந்தோது மிடத்து சத்தியத்துடனே தேடின வர்க்கு' எனக் காளிங்கரையும் கருதுவது காண்க.

இராம. 'எண்ணிய தேசத்துச் சென்று-நினைத்த தேயத்த திற்குப் போனாலும்' என உரைகண்டு, 'அத்தகைய பொருளு டையவன் எங்குபோனாலும் 'அவனுக்கு வழிகாட்டும் : அவனை மதிக்கச் செய்யும்' என உரைப்பர். புதுமை போலத்தோன்றினும் குறளின் சொல்லமைதியையும் பொருட்கோப்பையும் மாற்று கிறது.

வரத. 'பொருளுடையான் போரிடும்போது தன்நாட்டின் சிறப்பையும், பொருளுடையானையும் விளங்கச் செய்யும்' என்பர். இந்த அடிப்படையிலே 'பொய்யா விளக்கம், இருளறுக்கும் என்பவற்றிற்குச் சில நயங்கள் காட்டுகிறார்.

இவ்வுரைகளில் பரிதியுரை இருபொருள்படக் கூறி ஒன்றற்கு ஒன்று உவமமாக்குவது. மணக்குடவர், பரிப்பெரு மாள் உரைகள் பரிமேலழகர்க்கு வழி காட்டுவன விராசர் பரிமேலழகரிற் சிறிதுவேறுபடுகின்றார்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

பொருள் இருளறுக்கும் : (ஒருபுடை)

உடைமையறா தீட்டல் உறுதுணையாம் யாண்டும்
உடைமையராச் சென்றக்கால் ஊரெல்லாம் சுற்றம்
உடைமைக்கோல் இன்றங்குச் சென்றக்கால் சுற்றம்
உடையவரும் வேறு படும். — இன்., 12.

76.4. *அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து*
*தீதின்றி வந்த பொருள்.* (754)

உரைப்பகுதி :

அ) மணக். : அறத்தையும் தரும், இன்பத்தையும் தரும்; பொருள் வரும் திறமறிந்து, பிறர்க்குத் தீமை பயத்தலின்று வந்த பொருள் எ-று.

இது பொருளால் கொள்ளும் பயன் அறஞ்செய்தலும் இன்பம் நுகர்தலும் அன்றே: அவ்விரண்டினையும் பயப்பது நியாயமாகத் தேடிய பொருளாமாதலின் என்றது.

ஆ) பரிதி. : தன்மமும் இன்பமும் கொடுக்கும் தீதின்றி வந்த பொருள் எ-று.

இ) பரிப். : அறத்தையும் பயக்கும் : இன்பத்தையும் பயக்கும்: திறன் அறிந்து பிறர்க்குத் தீமை பயத்தல் இன்றி வந்த பொருள் எ-று.

பொருளால் பயன் அறம் செய்தலும் இன்பம் நுகர்தலும் அன்றே? அவ்விரண்டினையும் பயப்பது நியாயம் ஆகத்தேடின பொருள் ஆகலின்பொருள் தேடுங்கால் நியாயத்தோடு தேட வேண்டும் என்றது.

ஈ) காளி.: அறத்தையும் தரும்: அறத்தினால் வழுவாத இன்பத்தையும் தரும்: யாது எனின்? நெறியினால் ஈட்டிய வேறு ஒரு குற்றம் இன்றி வருதலுற்ற பொருளானது எ-று.

உ) பரிமேல்.: செய்யுந் திறத்தினை அறிந்து அரசன் கொடுங் கோன்மையிலனாக உளதாயபொருள், அவனுக்கு அறத்தையும் கொடுக்கும், இன்பத்தையும் கொடுக்கும், எ-று.

செய்யுந்திறம்-தான் பொருள்செய்தற்குரிய நெறி. இலனாக என்பது இன்றி எனத் திரிந்து நின்றது. செங்கோலன் என்று புகழப் படுதலானும் கடவுட்பூசை தானங்களால் பயன் எய்தலானும் 'அறன் ஈனும்' என்றும், நெடுங்காலம் நின்று துய்க்கப் படுதலான் 'இன்பமும் ஈனும்' என்றும் கூறினார். அதனான்[1] அத்திறத்தான்[2] ஈட்டுக என்பதாம்.

ஊ) கவிராசர்: செய்கிற காரியத்தைப் பொல்லாங்கில்லாமல் நல்லவழியிலே செய்து தேடின பொருள், அவனுக்குத் தருமத்தையும் இன்பத்தையுங் கொடுக்கும் எ-று.

ஏ) பழைய 2: செய்யுந்திறத்தினை யறிந்தரசன் கொடுங்கோல் இலனாக, தீவினைவிட்டு ஈட்டிய பொருள் அவனுக்கு அறத்தையுங் கொடுக்கும், இன்பத்தையுங் கொடுக்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

தொல்லோர் அனைவரும் 'திறனறிந்து தீதின்றி வந்த பொருள்' எனப் பொருளுக்கே அடையாக்கிப் பொருள் உரைத்தனர். இராம. 'பொருள் திறனறிந்து அறனீனும் இன்பமும் ஈனும்' எனக் கூட்டிச் 'செல்வம் தீதின்றி வந்ததாகையால்

---

1. அதனான் — அறத்தையும் இன்பத்தையும் தருதலால்
2. அத்திறத்தான் — பொருள் ஈட்டுதற்குரிய வழியால்

அறம் இன்பங்களைத் தகுதியறிந்து கொடுக்கும்' எனப் பொருள் காண்பர். இங்ஙனம் கொண்டு கூட்டியதாலாம் பயனை விளங்கக் கூறியிருந்தால் நலமாம்.

வரத. 'நல்லதிறமையோடும், கெடாத வண்ணம் பிறர்க்குத் தீமையில்லாமல் உண்டான பொருள், பிறருக்கு நன்மையைச் செய்து, புகழையுண்டாக்கித் தனக்கும் இன்பத்தைக் கொடுக்கும்' என்றனர்.

விளக்கத்தில் 'பொருள் நல்லதிறமையோடு செய்யப்பட வேண்டும்; மேலும் உற்பத்திசெய்யும்போதும் வெளிநாட்டுக்கு அனுப்பும்போதும், கெடாமல் இருக்கவேண்டும். பிறருக்குத்தீமை செய்த பொருளைச் சேகரிக்கவும் கூடாது; அப்பொருளை வாங்கினவரும் பழுதின்றியதன் பயனை அடையவேண்டும்' என்று இதன் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளை எழுதுவர். இவர் எண்ணம் ஒருதொழிற்சாலையாக மாறியுள்ளது; ஏற்றுமதி, அயல் நாட்டுவாணிகம் ஏற்றுமதிப் பண்டத்தின் தராதரம் வாணிகப் போட்டி முதலியன எண்ணப்பட்டுள்ளது. அதனால் வந்த விளைவு இந்த எழுத்து. இத்தனையும் வள்ளுவர் உள்ளத்தில் இருந்திருக்குமா? அவர் பொருள்தான் அறம் இன்பம் இவற்றைத்தருவது; எப்போது பிறருக்குத் தீமை தராமல், கன்று விட்டுப் பால்கொள்ளுவது போல திறனறிந்து கொள்ளப்பட்டிருந்தால் அது 'அறன் ஈனும்' என்றார் 'இன்பம் ஈனும்' என்றார். 'அறம் பொருள் இன்பம் எனப்பெற்ற மூன்றில் நடுவணதெய்த இருதலையும் எய்துதல் இயல்பேயாக இருந்தும் 'ஈனும்' என்ற வள்ளுவர் உள்ளம் யாதாயிருத்தல் வேண்டும்.

திறனறியாது தீதாற் பெற்ற பொருள் கொண்டு அறஞ் செய்யின், அறப்பயன் பொருள் உடையார்மேலும், பொருள்வந்த வழியிற் பெறும் தீமை பொருளீட்டியான் மேலுமாக நின்று அறமாகாது எனவும், அங்ஙனமே கொலைசெய்த பாவத்தானீட்டியபொருள் கொண்டு இன்பந்துய்க்கும்போது இன்பந்துய்ப்பான் உளத்தில் இன்ப ஏதுவான பொருள்வந்த வழியும் தோன்றுதலின் இன்ப உணர்வு தோன்றுதற்குப் பதிலாகத் துன்பமே தோன்றியின்பத்தை யழிக்கும் என்பதையும் தீதின்றிவந்த பொரு

ளாயினும் திறனறிந்து தொடுக்கப்பெற்றிருக்கவேண்டும்; அப்போதுதான் அறத்தையும் இன்பத்தையும் மேலும் மேலும் சுரக்கச் செய்யும் என்கிற வள்ளுவனார் உள்ளப்போக்கிற்கு மாறான ஏற்றுமதியிறக்குமதி கொண்டு விற்கும் பொருள்கள் ஏலாஎன்க.

சபாபதி 'அரசன் திறனறிந்து தீதின்றி வந்தபொருள்' என்பதனை 'அரசன் சம்பாதித்த பொருள்' எனப் பொருள் கொள்வர். இது அங்கவியலாதலானும், அரசனும் அமைச்சர் முதலிய அங்கத்தினரும் கூடி ஈட்டிய பொருளையே குறிப்பதாகல் வேண்டும் எனக் கொள்க.

தேவநேயர் 'அமைச்சன் ஈட்டினும் அவையரசுக்கே வுரியவாகலின் அவை பயன்படும்வகை பொருளீட்டும்முறை, முதலியன பற்றிக் காணிக்கடன் குசக்காணம் தறிக்கடமை கல்யாணக்கானம் முதலியனவாக பலபெயர் பெற்றன' எனக் கல்வெட்டுக் கொண்டு விரித்துரைப்பர். குழந்தை 'தீதின்றி வந்த பொருள்' 'அறனீனும்' என்பவற்றிற்குத் தரும் விளக்கமும் மேற்கோளும் ஏற்புடையன.

மு.கோ. 'அறவிருப்பும்-இன்பவிருப்பும் ஒருவற்குப் பொருளைத் தேடும் விருப்பத்தைக் கொடுக்கும்' எனக் குறள் கூறும் பொருள் நோக்கையே மாற்றுகிறார், இவற்றுள் மணக்., பரிமேலழகர். காளிங்கர் உரைகள் சிறந்தன; முக்காலத்திற்கும் ஏற்றனவாதலின்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

அறனீனும் இன்பமும் ஈனும் :

................ ................ ............. அதனால்,
அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெரும நின் செல்வம். —புறம்., 28:15

வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவணது எய்த இருதலையும் எய்தும். —நாலடி., 114

ஐயமில்லை இன்பம்அற னோடவையும் ஆக்கும்
பொய்யில் பொருளே பொருள் மற்றல்ல பிறபொருளே.
—சீவக., 497

நீதி யால்அறுத்து அந்திதி யீட்டுதல் — சீவக., 1920

அப்பொருள்

துன்னுங் காலைத் துன்னாதன இல்லையே

— சீவக., 1923

தெருளின்பொருள் வானுலகம் ஏறுதற்குச் செம்பொன்
இருளில்படு கால்புகழ்வித்து இல்லையெனில் எல்லா
அருளுநக வையநக ஐம்பொறியும் நையப்
பொருளுநக ஈட்டும்பொருள் யாதும்பொரு ளன்றே.

— சீவக., 2872

ஆறிலொன் றறமென அருளி னல்லாதொன்று
ஊறுசெய் துலகினி னுவப்ப தில்லையே. — சூளா., 54

பழியில் நீங்கிநன் கீட்டிய பசும்பொருள் சிறிதும்
கழிப டாதுநல் வழிப்பயன் படுவது கடுப்பக்
கொழிதி ரைச்சுவைப் பாலியின் குளிர்புனல் முழுதும்
வழுவு றாதுகால் வழிச்சென்று வளவயல் நிரைக்கும்.

— காஞ்சி. நாட்டுப்., 70

அருள்கொண்டி யற்றும் அறமும் அறநெறியாய்ந்த மென்பூச்
சுருள்கொண்ட கோதையர் தோள்புண ரின்பமும் சூழ்கரும்பு
மருள்கொண்டு பாடு மதுமலர்ச் சோலை மயிலனையாய்
பொருள்கொண் டொழியமுற் றாதென்று ஞாலம் புகலுமன்றே.

இல்லார் இருமையும் நல்ல எய்தார்

........... வறியார் இருமையறியார்

**தீதின்றி வந்த பொருள் :**

அறத்தின் ஈட்டிய ஒண்பொருள் அறவோன்
திறத்து வழிப்படூஉம் செய்கை போல. — மணி., 17:3-4

அரும்பொருள். — சிலம்பு. பதி., 16

76.5. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல். (755)

உரைப்பகுதி :

மணக்.: அருளுடைமையோடும் அன்புடைமையோடும் வாராத பொருளால் வரும் ஆக்கத்தைப் பொருந்தாது போக விடுக எ-று.

இது பொருள் தேடுங்கால் பிறர் வருத்தத்திற்கு உபகரியாதும்[1], பயின்றார் மாட்டுக் காதலில்லாமலும், பொருள் தேடுதலைத் தவிர்க என்றது.

ஆ) பரிதி : அருளும் அன்பும் இல்லாமல் கொடுமையினால் வந்த பொருள் கொடுமையினாலே போம் எ-று.

இ) பரிப்.: அருளோடும் அன்போடும் வாராத பொருளான் வரும்ஆக்கத்தைப் பொருந்தாது போக விடுக எ-று.

எனவே பொருள் ஈட்டுங்கால் பிறர் வருத்தத்துக்கு உபகரியாதும் பயின்றார்மாட்டுக் காதல் அழியவும் பொருள் தேடுதலைத் தவிர்க என்றவாறு ஆயிற்று.

ஈ) காளி.: இப்படி நெஞ்சத்து அன்போடும் நல்ல அருளோடும் மருவி வாராத பொருளினது ஆக்கத்தை எஞ்ஞான்றும் பொருந்தாராய் நழுவவிடுக. எ-று.

உ) பரிமேல்.: தாம் குடிகள் மாட்டுச் செய்யும் அருளோடும் அவர் தம்மாட்டுச் செய்யும் அன்போடுங்கூடி வாராத பொருளீட்டத்தை, அரசர் பொருந்தாது கழியவிடுக, எ-று.

அவற்றொடு[2] கூடிவருதலாவது ஆறிலொன்றாய்வருதல். அவ்வாறு வாராத பொருளீட்டம் பசுமட்கலத்துள் நீர்போலச்[3]

1. உபகரியாதும்-உதவாதும் 2. அவற்றோடு-அருளோடும் அன்போடும்
3. பசுமட்கலத்துள் நீர் போல-'வினைத்தூய்மை'ல் குறள் 10 பார்க்க

செய்தானையுங்கொண்டு இறத்தலின், அதனைப் 'புல்லார்' என்று ஒழியாது 'புரளவிடல்' என்றும் கூறினார்.

ஊ) கவிராசர்: தாம் குடிகளிடத்திலே செய்யும் அருளோடும் அவர் தம்மிடத்திலே செய்யும் அன்போடும் கூடாத பொருளை அரசர் கைக்கொள்ளாமல் விட்டுவிடவேணும்.

எ) பழைய 2; அரசர் தாம் குடிகளிடத்துச் செய்யும் அருளோடும் குடிகள் அரசனிடத்துச் செய்யுமன்போடும் கூடிவாராத பொருளீட்டத்தை அரசர் பொருந்தாது கழிய விட்டெறிக.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பரிதி., காளிங்கர் முதலாயினார் 'அருளோடும் அன்போடும் வராத பொருள்'எனப் பொதுமையிற் கூறியதனை மணக்குடவர் விளக்கத்தில் 'அருள் கொண்டு பிறர் வருத்தத் திற்கு உபகரியாமலும், அன்பால் தம்மொடு பழகினரர்மாட்டுக் காதலில்லாமலும்' என வேறுபாடு தோன்றக் கூறுவர்.

பரிமேலழகர் முதலானோர் 'அரசன் குடிகள் மாட்டுச் செய்யும் அருளோடும், குடிகள் அரசன்மாட்டுச் செய்யும் அன்போடும்' என்பர்.

வரத 'அருளொடும் அன்பொடும் வாராத' என ஒடு உருபோடு உம்மையுங் கொடுத்து அடுக்கியதை 'இரக்கங் காட்டி உதவி செய்து அன்புநெறியினின்றும் வராத பொருள்' எனத் தமக்கு வேண்டியவாறே பொருள் திரிப்பர். பெறுபயன் யாது? என் பதறியக்கூடவில்லை.

தேவநேயர் 'அரசன் போலவே பண்ணையாரும், தக்க செல்வரும். இருத்தல் வேண்டும்' என இயைப்பர். பரிதி. கொடுமையால் வந்தபொருள் கொடுமையாற்போம்' என்றது கருத்துரையே யன்றிச் சொற்பொருளாகாமையின் 'புரளவிடும்' என்பது அவர்பாடம் எனல் பொருந்தாது.

'புரளவிடும்' என்பது பாடம் எனக் கொள்ளின் 'ஆக்கம் விடும்' எனல் வேண்டும், ஆக்கத்தைப் புல்லாராய் புரள விடும்

எனின் பலர்பால் செய்யுமென் முற்றேற்றகுற்றம் உண்டாம். ஆதலால் பரிமேலழகர் போன்றார் உரையே செப்பம் உடைத்து.

ஒ) ஒப்புமைப்பகுதி :

அருளொடும் அன்பொடும் வாராப் பொருள் :

அருளும் அன்பும் நீங்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோர் உரவோ ராயின்
உரவோர் உரவோ ராக. —குறுந்., 20

76.6. உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள். (756)

உரைப்பகுதி :

அ) மணக்.: தானே வந்துற்ற பொருளும். ஆயத்தால்[1] வரும் பொருளும், தன் பகைவரை அடர்த்துக்கொண்ட பொருளும் அரசனுக்குப் பொருளாம் எ-று.

ஆ) பரிதி. : குடிக்கடமையும் சுங்கமும் சத்துருக்கள் திறை யிடும்[2] பொருளும் அரசன் பொருள்.

இ) பரிப் : தானே வந்து உற்ற பொருளும், ஆய வர்க்கத் தால் வரும் பொருளும் பகைவரை அடர்த்துக் கொண்ட பொரு ளும் அரசனுக்குப் பொருள் ஆம் எ-று.

உறுபொருள் — கால் அற்ற பொருள். மேல் நியாயம் ஆகத் தேட வேண்டும் என்றார் : இவை நியாயமோ என்று ஐயுற்றாற்கு அரசற்கு நியாயம் என்று கூறப்பட்டது.

ஈ) காளி. : நாடு இறுக்கும் முறைமையின் பெறும் பொருளும், நீரினும் நிலத்தினும் வருவனவற்றுள் தனக்கு உளவாம் சுங்கப் பொருளும், தன் பகைவரைத் திறை வாங்கிக் கொள்ளும் பொரு-ளும் எல்லாம் வேந்தனுக்கு நெறியின் வரும்பொருள் எ-று.

இனி அரசர்க்குப் பொருள ஈட்டம் உண்டாய இடத்தும் படை இடம் இல்லையாயின் பகைவரை வெல்லற்கு அரிது ஆகலான்

1. ஆயத்தால்—சுங்கத்தால் 2. திறை —கப்பம்

மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது, மேலையதி காரம்.

உ) பரிமேல். : உடையார் இன்மையின் தானே வந்துற்ற பொருளும், சுங்கமாகிய பொருளும் தன் பகைவரைத் திறையாகக் கொள்ளும் பொருளும், அரசனுக்கு உரிய பொருள்கள், எ-று.

உறுபொருள் — வைத்தார் இறந்துபோக நெடுங்காலம் நிலத்தின்கண் கிடந்து பின் கண்டெடுத்ததூஉம், தாயத்தார் பெறாததூஉம் ஆம். சுங்கம்—கலத்தினும் காலினும் வரும் பண்டங்கட்கு இறையாயது. தெறுபொருள்—தெறுதலான்[3] வரும் பொருள் என விரியும். ஆறிலொன்றொழியவும் உரியன கூறியவாறு. இவை மூன்று பாட்டானும் அஃது ஈட்டும் நெறி கூறப்பட்டது.

> காரி. : உறுபொருள்—நெடுங்காலம் நிலத்திற்கிடந்து பின் கண்டெடுத்ததும் தாயத்தார் பெறாததும் என்க. உல்குபொருள்—சுங்கப் பொருள். தெறுபொருள்—பகை வரைவென்ற திறை.

ஊ) கவிராசர்: ஒருவர் கொடாமல் தானே வந்து சேருகிற பொருளும், சுங்கமாகிற பொருளும், தன் சத்துருவைக்கெடுத்து எடுத்துக்கொண்ட பொருளும், ராசாவுடைய பொருளாம் எ—று.

ஏ) பழைய 2 : ஒருவற்குஞ் சுதந்திரமில்லாமல் தானே வந்துற்ற பொருளும், சுங்கமாகிய பொருளும் தன் பகைவரை வென்று திறை கொண்ட பொருளும் அரசனுக்கு உரிய பொருள்கள்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

அரசற்குரிய பொருள் வகைகளைக் குறிக்கும் இக்குறளில் ஒவ்வொன்றும் கருத்து வேறுபாடுடையதாகும்.

'உறுபொருள்'

'தானே வந்துற்ற பொருள்' மணக். ; 'குடிக்கடமை' பரிதி. ; 'கால்அற்ற பொருள்' பரிப்.; 'நாம் இறுக்குமுறைமையின் பெறும் பொருள்' காளி.; 'உடையான் இன்மையின் தானே

3, தெறுதலான் —போர் செய்தலான

வந்துற்ற பொருள், அதாவது வைத்தார் இறக்க நெடுங்காலம் நிலத்திற் கிடந்து பின் கண்டெடுக்கப்பட்டதும் தாயத்தார் பெறாததும் ஆம்' என்பர் பரிமேல். 'ஒருவர் கொடாமல் தானே வரும் பொருள்' கவிராசர்; 'ஒருவற்கும் சுதந்திரமில்லாமல் தானே வந்துற்ற பொருள்' பழைய 2; 'அரசனாகிய உரிமை யினால் கிடைத்த பொக்கிஷச் செல்வம்' இராம.; 'இதற்குப் பரிமேலகழர் முதலானோர் கூறும் உரை சிறிதும் பொருந் தாது; ஏனெனில் இந்த அதிகாரம் ஒவ்வொருவரும் தீமையற்ற வழியில் சம்பாதிக்க வேண்டும் என்பது. ஆகவே அரசற்குரிய நியாய வருவாய்களைக் குறிக்கும் இந்த அதிகாரத்தில் புதையல் சேராது. எப்போதும் எல்லோருக்கும் கிடைக்கும் என்று சொல்லவும் முடியாது. அப்படியே கிடைத்தா, லும் எடுத்தவன் அரச்னிடம் கொடுப்பான் என்று கருதவும் முடி-யாது. ஆதலால் புதையல் வகைப்பொருளும் கேட்பாரற்ற — உரிமையற்ற பொருளும் நல்லவழியில் ஈட்டிய பொருள் வகை யைச் சேராது' என்றும் மறுப்பர் இராமலிங்கனார்.

பொக்கிஷச் செல்வம் மரபுவழி உரிமையாதலானும், அவை அரசின் கணக்கேட்டில் குறிக்கப்பெற்று கண்காணித்து வரப்பெறுவதொன்றாகலானும் அதனை உரிமையென்பதயன்றி உறுபொருள் என்னா ராகலானும்,இதனை வினைத்தொகை வாய் பாட்டாற்கூறியதே இப்பொருள் ஏலாமையைக் குறித்தலானும் பழைய உரையாசிரியர்கள் கருதியதே ஏற்புடையதாம் என்க. இதன் மறுப்பும் வலிந்து கூறலாதலையும் உன்னுக.

தேவநேயர் 'பண்டையோர் நெறியிற்படர்ந்து, உடை யோரின்மையானும் எதிர்பாராமலும் வந்தபொருள் உறு பொருள், என உறுபொருளை இரண்டுவகையாக்கி, உடை யோரின்மையான் வருவன பழம்புதையல், உரியோரில்லாச் சொத்துமாம். எதிர்பாராதுவருவன, குடிகள் காணிக்கை நன் கொடை, நண்பர்கொடை என்பன' என எடுத்துக்காட்டி, குன்றக் குரவர் செங்குட்டுவனுக்குப் படைத்தவை போல்வன காணிக்கை; அவந்தி மன்னன் கரிகாலனுக்கு உவந்தளித்த தோரணவாயில் போல்வன நன்கொடை என விரிவும் தருவர். இவை வரலாற்றுப் பின்னணியோடு கூடிய குறிப்புக்களாம்.

வரதராசனாரும் 'தானாகவே சேர்ந்த பொருள் புதையல்; 'உரிமையற்றோர் பொருள் போல்வன' என பழைமையைத் தழுவிக்கூறுவர் சபாபதி.; 'தனக்குத் தன் உரிமையால் அடையும்பொருள் என்பர் சி.இ. இவர்கருத்து எதனைக் குறிப்பது என்பது விளங்கவில்லை. மு.கோ. 'நிலமுழுதும் அரசிற்குச் சொந்தமாதலின் அதிலிருந்து வரும்பொருள்' என்பர். அது நிலவரியாமேயன்றி உறுபொருள் ஆகாது. சாமி.சிதம். 'நாதியற்று தானே வரும் பொருள்'எனப் பரிமேலழகரைக் கருதுவர். ஏனோரும் இக்கருத்தினர். ஆகவே உறுபொருள் - புதையல், உரிமையற்ற பொருள் முதலாக வந்தடைந்த பொருள் எனலே ஏற்புடையதும், இன்றைய-பழைய அரசின் கோட்பாட்டிற்கு ஏற்றதும் ஆம். ஏனைய புதுமை காணு முயற்சியால் விளைந்த தோல்விகளாம்.

'உல்குபொருள்'

'சுங்கப் பொருள்' என்ற முடிபே பலருரையினும் காணப் பெறுவது. இதில் ஒன்று கருதற்குரியது. பரிமேலழகர், மணக்குடவர் உரைகள் வெளிநாட்டிலிருந்து தன் நாட்டிற்கு வந்திறங்கும் பொருள்களுக்கு விதித்தமையையே குறிக்கின்றன; தன் நாட்டுப் பொருளாக வெளியிற் செல்வனவற்றைக் குறிக்கவில்லை; தம் நாட்டு வாணிகம் குன்றும் எனக் கருதிப்போலும். மு.கோ. 'வெளிநாட்டுச் செலாவணியைக்குறித்தது' என்பர் வரதராசனார் 'வெளிநாட்டுக்குப் போகும் பொருள் மீதும் வெளிநாட்டிலிருந்து வரும்பொருள் மீதும் வாங்கும்வரி' என்பர். இது இக்கால வரிவிதிப்பு முறை கருதிச் செய்ததாம். இவற்றுள் தன்னாட்டிற்கு வெளிநாட்டிலிருந்து வரும்பண்டங்களுக்கு வரி விதிக்கு முறையே பழைமையாதல் காண்க.

''தெறுபொருள்''

'பகைவரையடர்த்துக் கொண்ட பொருள்; திறைப்பொருள் தன்சத்துருவைக்கெடுத்து எடுத்துக் கொண்டபொருள்' என்பர் அனைவரும்.

தேவநேயர் 'திறையாகவும் தண்டமாகவும் கொண்ட பொருள்' என்பர், மேலும், 'போர்க்களத்தில் விட்டு ஓடின பொருளுமாம்' என்பர்.

வரத. 'பகைவர்கள் நஷ்ட ஈடுகொடுக்கும் பொருள்' என்பர். இது பகைவர் மேற்படைஎடுத்துச் சென்று பொருதார்க்கு எய்தாமை எண்ணிற்றிலர்.

இராம. பழையோர் கருத்துக்கள் அனைத்தையும் மறுத்து, 'ஒன்னார்—தம் அரசியர் நீதியொடு பொருந்தா குற்றம் செய்பவர்கள் அவர்கட்கு விதிக்கப்படும் அபராதமே தெறுபொருள்' என்பர். குடிகளும் குற்றம் புரியக்கூடுமாதலின் குடிகள் ஒன்னாராகார் ஆகவே அவர்கட்கு விதிக்கப்பெறும் குற்றத்தண்டம் ஒன்னார் தெறு பொருளாகாது. குடிகளையும் ஒன்னார் எனின் அவர்கட்கு விதிக்கப்பெறும் தண்டத்தையும் தெறுபொருள் எனற்கு இழுக்கின்று. இங்ஙனமாயின் பகைவர்பாற் கொள்ளும் திறையை எதன்பாற் படுத்துவது என்பதும் சிந்திக்கவேண்டி வரும். சொற்பொருள் நாமே படைத்திட்டுக்கொள்வது அன்று தொன்றுதொட்டு வழங்கிவருவது. அரசுக்கடங்காத குடிகளை ஒன்னாரென்றல் வழக்கு இருப்பின் இவ்வுரையும் சிந்திக்கத்தகும்.

ஓ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

கால்கலத்தால் சேர்பொருளும் கண்ணற்றார் தேர்பொருளும்
நாலிரண்டால் கூடும் நலப்பொருளும் — கோல்தாங்கிக்
கோடுமஅரசிற் குரியாமே தொல்புவிக்கீழ்
ஆடும் பொருளோ டணைந்து. —இன்., 17

மறுக்கும் செயல்நீத்து நடக்கையின் வையத் தோரை
ஒறுக்கும் பொருளும் பணிகேட்கையின் ஒன்ன லாரைச்
செறுக்கும் பொருளும் கவரார்விளை செல்வ மாக்கள்
இறுக்கும் பொருளே இறைவர்க்குஇவர் ஈட்டும் செல்வம்.
—திருவிளை.பன்றி-மந்திரி ,16

வேந்தர் வாங்கும் பொருள்கோள் வகைமூன்றே —தமிழ்.,77

அருள்கொடு புரக்கப் படும்குடி அன்போ
டளித்திடும் ஆறினி லொன்றும்
இருநிலத் தெடுத்த பழம்பொரு ளுரிமை
யின்றியே இறந்தவர் பொருளும்
மருவிய சுங்கப் பொருளுமொட் டலரை

மாட்டிய பொருளும்ஈட் டுகஇப்
பொருளறம் இன்பம் புகழ்தரும் பகையைப்
புரட்டும்எவ் வினைகளும் முடிக்கும். —விநா. அரசி., 121

ஒ) மேற்கோள்பகுதி ;

இளம்.;பொருளாவது நாடும், பொருளும், அரணும், அமைச்சும் நட்பும், படையும் எனக்கூறி, பொருள் என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர். —தொல். பொருள்.,75

6.7. *அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்*
*செல்வச் செவிலியால் உண்டு.* (757)

உரைப்பகுதி :

அ) மணக்.: அறம் செய்தற்குக் காரணமாகிய அன்பினின்றும் தோன்றிய அருளாகிய குழவி, பொருள் என்று சொல்லப்படும் செல்வத்தையுடைய செவிலித்தாய்[1] வளர்த்தலாலே உண்டாம் எ-று.

இது பொருளுடையார்க்கே அறஞ்செய்தலாவதென்பது கூறிற்று.

ஆ) பரிதி.: அன்பு என்னும் கற்பினாள் பெற்ற அருள் என்னும் குழவியைப் பொருள் என்னும் செவிலித்தாய் வளர்க்க வேண்டும் எ-று.

இ) பரிப்.: அறம் செய்தற்குக் காரணம் ஆகிய அன்பினின்று தோற்றின அருள் ஆகிய குழவி. பொருள் ஆகிய நல்ல செவிலித் தாய் வளர்த்தலாலே உண்டாம் எ-று.

மேல் பொருள் உடையாற்கு அறம் எளிது என்றார்: இது பெறும் ஆறு என்னை என்றார்க்கு அன்பும் அருளும் இயல்பு ஆக உடையர் ஆயினும் பொருள் இலர் ஆயின் அவற்றால் பயன் இல்லை ஆம்: ஆதலால் பொருள் உடையாற்கே அறம் செய்யல் ஆவது என்று கூறப்பட்டது.

---

1. செவிலித்தாய் - வளர்ப்புத்தாய்

ஈ) காளி. : இவ்வருள் என்று சான்றோரால் சொல்லப்படு டன்ற அனைத்து உயிர்க்கும் ஒத்தது ஓர் அன்பு ஈன் குழவி[2] யானது பின்பு பொருள் என்று சொல்லப்படுகின்ற செல்வம் யாது? மற்று அந்தச் செவிலித்தாயால் உளதாம் எ-று.

உ) பரிமேல். : அன்பினால் ஈனப்பட்ட அருளென்னும் குழவி, பொருள் என்று உயர்த்துச் சொல்லப்படும் செல்வத்தை உடைய செவிலியான் வளரும்.

தொடர்புபற்றாதே வருத்த முற்றார்மேல் செல்வதாய அருள் தொடர்புபற்றிச் செல்லும் அன்பு முதிர்ந்துழி உளதாவ தாகலின் அதனை[3] 'அன்பீன் குழவி' என்றும், அது வறியார்மேற் செல்வது அவ்வறுமை களையவல்லவர்க்கு ஆதலின் பொருளை அதற்குச்[4] 'செவிலி' என்றும், அஃது[5] உலகிற் செவிலியர் போலாது தானே எல்லாப்பொருளும் உதவி வளர்த்தலின் 'செல்வச்செவிலி' என்றும் கூறினார்.

ஊ) கவிராசர்: அன்பினாலே பெறப்பட்ட அருள் என்கிற பிள்ளை, பொருள் என்கிற செவிலித்தாயால் வளரும் எ-று.

ஏ) பழைய2: அன்பென்னுந் தாய் பெற்ற அருளென்னும் பிள்ளை, பொருள் என்னுஞ் செல்வத்தையுடைய செவிலித்தா யால் வளரும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறளுக்கு அமைந்த முற்கால—பிற்கால உரைகள் கருத்து மாற்ற மில்லாதன. மு. ரா. அரு. தம் விளக்கவுரை யில் 'யாதொரு சம்பந்தமும் இல்லாமல் வருத்தமுற்றவரிடத்துச் செல்வதாகிய ஒருவரது மனநெகிழ்ச்சி (இளகுதல்) ஆகிய அருள் ஏதேனும் ஒரு சம்பந்தம் பற்றிச் செல்லும் அன்பு மிகுதிப் பட்ட இடத்து உண்டாவது. ஆதலால் அவ்வருளை அன்புபெற்ற பிள்ளை என்றார்' என்பர். இவ்வுரை விளக்கம் அருள்விளை வது அன்பால் என்ற முடிபினதாயினும் அன்புவிளைவது தாய் தந்தை மகன் மனைவி முதலிய தொடர்புடையார் மாட்டு ; அது

2. ஈன் குழவி - பெற்ற குழவி
3. அதனை - அருளை 4. அதற்கு - அருளுக்கு 5. அஃது - அச்செவிலி

முதிர்ந்தே தொடர்பிலார் வருத்தங்கண்டுழியும் அருளாய் அவர் மாட்டும் நெகிழ வைக்கிறது. அன்பு விளைவது தொடர்புடையார் மாட்டு அருள் விளைவது தொடர்பிலார் மாட்டு. ஆனால் அன்பின் முதிர்வே அருள். அதனால் தாயும் சேயுமான முறையால் உருவகிக்கப்படுகிறது. செவிலி—வளர்ப்புத் தாய். அது செல்வம் இக்கருத்து அமைவதாயின் கவிராயர் விளக்கமும் சிறந்தது.

தேவநேயர் 'உயர்திணைப் பொருள் மீதுள்ள அன்பு முதிர்ந்துழி அஃறிணைப் பொருள்கள்மீதும் அருளாகப் பிறத்தல் போலத் தொடர்புடையார் மீது பற்றிய அன்புமுற்றித் தொடர்பில்லாத எளியார் மீதும் பிறப்பதால் அருளை 'அன்பின் குழவி' என்றும், பாலூட்டப் பெறாத குழந்தை பிழைக்காதது போலப் பொருளால் வெளிப்படாத அருளும் வலியுடைத்தாகாது ஆதலின் செல்வச் செவிலியால் வளரும் என்னாது 'ஏதோ இருக்கும்' என்ற பொருளில்உண்டு என்றும் கூறினார்' என நயம் விதப்பர். இவற்றுள் நேரிய-நயமான கருத்தைத் தரும் மணக்., பரிமேல். உரைகள் ஏற்புடையன.

ஓ) ஒப்புமைப்பகுதி:

அருளென்னும் அன்பு ;

அருளொடும் அன்பொடும் வாராப் பொருள் -குறள்., 755

அருளும் அன்பும் நீக்கி -குறுந்., 20:1

பொருள் என்னும் செல்வச்செவிலி :

மண்ணீர் உடையார் வழங்கிச் சிறுகாலைத்
தண்ணீரார் சாருமி நிலம்சார்வர் -உண்ணீர்
அறியின் அருஞ்செவிலி மாண்பொருளே வெள்நீர்ச்
சிறியரையும் ஏர்ப்படுத்தும் செய். -இன்., 13

76.8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்
தொன்(று)
உண்டாகச் செய்வான் வினை. (758)

உரைப்பகுதி :

அ) மணக்.: குன்றின்மேல் ஏறியிருந்து, யானையோடு யானை போர் செய்தலைக் கண்டாற் போலும்; தன் கையகத்து

எய்தியபொருளுண்டாக ஒரு வினையை யெடுத்துக் கொண்டு தொடங்கினவன் செய்யும் வினை எ-று.

இது பொருளுடையார் தாம் வருந்தாமல் பிறரை வினை செய்வாராக ஏவி வினைக்கண் விட்டிருக்கலாம் என்றது.

ஆ) பரிதி.: மலையின் உச்சியிலேறி யானைப்போர் பார்த்தற்கு ஒக்கும், தன் கையில் பொருள்கொண்டு மாற்றாரை வெல்கை எ-று.

இ) பரிப்.: பொருள் இல்லாதாரை எல்லாரும் இகழ்வர் பொருள் உடையாரை எல்லாரும் சிறப்புச் செய்வர் எ-று.

சிறப்பு எய்தலும் இதனானே வரும் என்றது.

ஈ) காளி.: தான் குன்றின் மீது ஏறிப்போய் இனிது இருந்து நிலத்துப் பொருகின்ற யானைப்போரினை அஞ்சாது கண்டு இன்புறூஉம் அத்தன்மைத்து; யாது எனின்? தன் மாட்டு ஒரு பொருள் உளதாகச் செய்து கொள்பவனது வினையும் எ-று.

எனவே பாவமும் பகையும் தன்னை நணுகாமல்[1] பரிகரித்து[2] இனிது வாழும் பொருளுடையோன் என்பது பொருளாயிற்று என அறிக.

உ) பரிமேல்.: தன் கையதாகிய பொருளுண்டாக ஒருவினையை எடுத்துக்கொண்டான் அதனைச் செய்தல், ஒருவன் மலைமேல் ஏறிநின்று யானைப்போரைக் கண்டாலொக்கும், எ-று.

ஒன்று[3] என்பது வினையாதல் செய்வான் என்றதனால் பெற்றாம். குன்றேறியான் அச்சமும் வருத்தமும் இன்றி நிலத்திடை யானையும் யானையும் பொரு போரைத்தான் இனிதிருந்து காணுமதுபோலக் கைத்துண்டாக வினையை மேற்கொண்டானும்

1. நணுகாமல்-அணுகாமல்
2. பரிகரித்து-நீக்கி
3. 'கைத்துண்டாக ஒன்று செய்வான்' எனக்கூட்டுக என்றும் இவ்வாக்கியம் உரைக்கொத்து கோ,வ. பதிப்புக்களில் உள்ளன

அச்சமும் வருத்தமும் இன்றி வல்லாரை ஏவித் தான் இனிதிருந்து முடிக்கும் என்பதாம்.

ஊ) கவிராசர் ; தன் கையிலே பொருளுண்டாயிருக்கிறவன் ஒரு காரியத்தைச் செய்ய நினைக்கிறது, மலைமேலே நின்று யானைச்சண்டையைப் பார்க்கிறதற்குச் சரி எ-று.

ஏ) பழைய 2 ; தன்கையதாகிய பொருள் உண்டாக ஒரு வினையைத் தொடங்கிச் செய்தல் ஒருவன் மலையின் மேல் ஏறியிருந்து மதயானைப்போரைக் கண்டாலொக்கும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பார்க்கின்ற தமக்குத் தீங்கு சிறிதும் நேராது பார்த்துச் சுவைக்க. 'குன்றேறி' என்பதற்கு மணக்குடவர் 'குன்றின்மேல் ஏறி' என்றும, பரிதியுரையுள் 'உச்சியில் ஏறி' என்றும், காளி. மலையுச்சியின் மீது ஏறி இருந்து' என்றும் கூறினர். ஆனால் பரிப்பெருமாள் இக்குறளுக்குப் 'பொருளுடையார் தாம் வருந்தியுழையாமல் பிறரை வினைசெய்வாராகக் கொண்டு ஏவி வினைக் கண் விட்டு வினையின் பயனைத்தாம் நுகரலாம்' என்று கருத்துக் கொணர்கின்றனர். காளிங்கர் 'பாவமும் பகையும் தன்னை நணுகாமலே இனிது வாழலாம்' என்பர். பரிமேலழகர் பரிப்பெருமான் கருத்தையே விதப்பர். இங்ஙனம் சொல்லும் வகையாற் சிறிது வேறுபடுவராயினும் முடிபு ஒத்தாராவர். பின் வந்த தேவநேயர், வரத , மு ரா. அரு. போன்றாரும் அத்தகையோரே. மு. ரா. அரு. 'மலைமேலிருந்து நிலத்தில் நிகழும் யானைப்போரை' என்பர். இராமலிங்கனார் புதிய நோக்கோடு புதிய கருத்தைக் கொணர முயல்கிறார். 'மத யானைகள் பொருவதைக் காண்பதால் ஊர்ச்சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி' என்ற அளவில் காட்சியின்பமே அன்றி, தாம் வென்ற இன்பம் விளையாதே என்று எண்ணி கைத்து ஒன்று செய்வான் வினை குன்றேறி நின்று யானையோடுபோர் செய்தது போலும்' என்பர். 'கண்டது-செய்தது. யானைப்போர் —யானையோடு போர்' என உரை காண்கிறார்.

மு. ரா. கந்தசாமி 'பொருள் கையத்திருக்க வினைமேற் கொள்ளுதல் ஒருவன் மலைமீது இருந்து யானையுடன் போர்

தொடுத்தலைப் போன்றதாம்' என்று இராமலிங்கனாரை ஒத்தோதுவர். இந்த வேறுபாடு 'கண்டற்று' என்பதற்குச் 'செய் தால் ஒத்தது' எனக் கொண்டமையே.

'கைவேல் களிற்றொடு போக்கி வருபவன் மெய்வேல்பறியா நகும், என்ற பண்புடைய தமிழ்நாட்டிலே நேருக்கு நேர் பொருதலே மரபாயிருக்க இவன் உயர்ந்த இடத்தும்,பொரப்படும் பொருள் நிலத்தும் இருந்து பொருதல் வீரத்திற்கு இழுக்கா தலின் இக்கருத்து சிந்தனைக்குரியதாம். இவ்வுவமை பெரிதும் வருத்தமின்றி வினைமுடியும் என்ற அளவில் கொள்ளத் தக்க தாதலின் கண்டு-செய்து என்று திசை திருப்பியதால் போதிய பயனும் இன்றாதல் எண்ணத்தோன்றுகிறது.

ஒ) ஒப்புமைப்பகுதி:

யானைப்போர்:

குடியுடை வேந்தெனுங் குழாங்கொ ணாகமும்
கொடியெனும் பிடியுடைக் குமர வேழமும்
வெடிபடு போர்த்தொழில் காண விஞ்சையர்
இடியுடை யினமழை நெற்றி யேறினார். -சீவக., 776

ஓ) மேற்கோள்பகுதி:

யா.வி.: வெண்சீரொடு வெண்சீர்ஒன்றிவந்த சிறப்புடை வெண்சீர் வெண்டளைக்கு மேற்கோள். — சூ., 18

சொல்வேறுபடுதலால் இரட்டைத் தொடையாகாது என்பர். — சூ., 51

அலகிட்டு ஓசை யூட்டுதற்கு மேற்கோள்- — சூ., 57

76.9. *செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்*
*எஃகதனின் கூரிய தில்.* (759)

உரைப்பகுதி:

அ) மணக்.: பொருளையுண்டாக்குக: பகைவரது பெருமி தத்தை [1] அறுக்கலாங்கருவி, அப்பொருள் போலக் கூரியது பிறிது இல்லை எ-று.

1. பெருமிதம்-செருக்கு

இது பொருளீட்டல் வேண்டும் என்றது.

ஆ) பரிதி .: அரசன் பொருளையே தேடுவான்; சத்துருக்கள் என்னும் காட்டை வெட்டுதற்கு அதுபோலும் ஆய்தம் இல்லை எ-று.

இ) பரிப். : பொருளை உண்டாக்குக : பகைவரது பெருமி-தத்தை அறுக்கல் ஆம் கருவி அப்பொருள் போலக் கூரியது பிறிது இல்லை எ-று.

இது பொருள் ஈட்ட வேண்டும் என்றது.

ஈ) காளி .: நெறியினால் இயற்றி ஈட்டுக பொருளை: என்னை எனின் வேந்தராயினும் பகைவரை வெல்லுங் கருவியானது இதனின் கூரியது பிறிது இல்லை; அதனால் பொருள் வழங்கச் செறுநர் சினம் தணிந்து பெரிதும் இனியர் ஆவர் எ-று.

உ) பரிமேல. : தமக்கு ஒன்று உண்டாகக்கருதுவார் பொருளை உண்டாக்குக; தம் பகைவர் தருக்கினை[2] அறுக்கும் படைக்கலம் அதுவாம்;[3] அதற்கு அதுபோலக் கூரிய படைக்கலம் பிறிதில்லை.

அதுவாம், அதற்கு என்பன அவாய்நிலையான் வந்தன.[4] பொருளைச் செய்யவே பெரும்படையும் நட்புமுடையராவர். ஆகவே, பகைவர் தருக்கொழிந்து தாமே அடங்குவர் என்பார் 'செறுநர் செருக்கறுக்கும் எஃகு' என்றும், ஏனை எஃகுகள் அது போல அருவப்பொருளை[5] அறுக்க மாட்டாமையின் 'அதனின் கூரியது இல்' என்றும் கூறினார்.

ஊ) கவிராசர் .: தமக்கு ஒரு காரியம் வேணும் என்று நினைக்கிறவன், பொருள் உண்டாகிறவழியைச் செய்யவேணும், அது, சத்துருக்களையெல்லாம் கொஞ்சமாக்கிப் போடும் ஆயுதம், அதினும் கூர்மையான ஆயுதம் வேறில்லை எ-று.

---

2. தருக்கினை-செருக்கினை 3. அதுவாம்-பொருளாம்
4. 'எஃகு 'என்பது 'அதுவாம்' என்பதனையுன், 'அதனின்' என்பது 'அதற்கு என்பதனையும் வேண்டி நின்றன
5. அருவப்பொருளை-உருவமில்லாத பொருளை

ஏ) பழைய 2 : தொழிற் செய்து பொருளைத் தேடிச் சேர்க்க; பகைவர் செருக்கினையறுக்கும் ஆயுதம் அதுவாம்: அதனைப் போலக் கூரிய படைக்கலம் பிறிதில்லை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

ஆசிரியர் 'பொருளை எஃகாக உருவகித்தமையின் பகைவர் களைக் காடாக' உரைத்தனர். எஃகு என்பது ஆயுதப் பொதுப் பெயர். 'அது அறுக்கும் என்ற வினையான் வாளாதலை யுணர்த்தும்' பரிதி ; அறுக்கப்படுவது பகைவரது செருக் கேயன்றிப் பகை வரன்மையின் இவ்வுரை சிந்திக்கத்தக்கது. ஆதலான் 'பகைவரது செருக்காகிய மரம்' எனல் தகும். காளிங்கரும் 'பகைவரை வெல்லுங் கருவி' என்றனர். அதற்கும் இங்ஙனமே கொள்க.

பரிமேலழகர் 'பொருளைச் செய்க; செறுநர் செருக் கறுக்கும் எஃகு; அதனின் கூரியது இல்' என மூன்று தொட ராக்கிப் பொருள் கொள்வர். கூரியது இல் எனவே அதனைப் போல என ஒப்புப் பொருள் கோடலைவிட்டு ஊழ்பொருள் கொண்டு அந்தப் பொருளாகிய எஃகினைக் காட்டிலும் எனல் மிகுநயம் பயப்ப தாகாதா? என்பது சிந்திக்க. 'அதினும்' என்ற கவிராசர் உரை இக்கருத்தையே வலியுறுத்தல் காண்க'

தேவநேயர் 'எஃகு-எஃகானியன்ற அரம்' எனக்கொண்டு அதனால் அராவப்படும் இரும்பாக அல்லது மரமாகப் பகைவர் செருக்கினைக் கருதுகிறார். வரத 'பொருளை உற்பத்தி செய்க; பொருள் பகைவரின் செருக்கையறுக்கும் வாள்போன்றது என்று உரைதந்து பொருளை உற்பத்தி செய்தால் பகையுண்டாகாது எனக் கருத்துரைத்தார். உற்பத்தி செய்தல் என்பது நெல் கம்பு போன்ற பொருள்களை விளைவித்தலைக் குறிக்குமன்றி பொன் னும் மணியும் முதலானவற்றை ஈட்டுதலாகாது. வள்ளுவர் விளைபொருளும்-பணம்காசாகிய பொன்முதற்பொருளும் ஆகிய இரண்டையும் செய்க என்ற பொதுச் சொல்லாற் குறித்தனர். சாமி சிதம். 'அதனின்-அந்தவாள்போல' என உவமை வாசக உரையே காண்பர். இவ்வாய்வான், சில குறிப்புக்களாளன்றிப் பொதுநோக்கான் பரிமேலழகர் உரை சிறத்தல் காண்க.

ஓ) ஒப்புமைப்பகுதி :

முற்றும்;

செறுவோர் செம்மல் வாட்டலும் சேர்ந்தோர்க்கு
உறுமிடத்து உவக்கும் உதவி யாண்மையும்
இல்லிருந் தமைவோர்க்கு இல்லென் றெண்ணி
............... வெஞ்சுரம் இறந்தனர். அகம்.,231

பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும் ......,தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநம் காதலர் —கலி.,11:2-4

செற்றாரைச் செறுத்தலின் தற்செய்கை சிறந்தன்று
—முதுமொழிக்.,6

தெருளா தொழுகும் திறனிலா தாரைப்
பொருளால் அறுத்தல் பொருளே —பழ.நா.,197

செய்கபொருள் யாரும்செறு வாரைச்செறு கிற்கும் எஃகு பிறி
தில்லை. —சீவக.,497

வென்றி யாக்கலும் மேதக வாக்கலும்
அன்றி யுங்கல்வி யோடழ காக்கலும்
குன்றி னார்களைக் குன்றென வாக்கலும்
பொன்துஞ்சு ஆகத்தி னாய்பொருள் செய்யுமே. —சீவக.,1922

நண்ணார்த் தெறுதலும்
தற்செய்வான் சென்றார்த் தருஉம் —கார்நாற்.,7

...... ... ... ... ... பொருள்
நாளுங் கண்டு நடுக்குறு நோன்மையின் —கம்ப.,1509

வரைத்தடந் தோளினான் வதன நோக்கினான் —கம்ப.,1850

...... ......... கருதலர் தம்மை வாட்டும்
கூரிய திதன்மே லில்லை கொழும்பொ னீர் கொண்மின் என்றான்.
—கம்ப அசுவமேத.,266

**76.10.** *ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்*
*ஏனை இரண்டும் ஒருங்கு.* **(760)**

**உரைப்பகுதி :**

**அ) மணக். :** ஒள்ளிய பொருளை முற்ற[1] உண்டாக்கினார்க்கு ஒழிந்த[2] அறனும் காமமுமாகிய பொருளிரண்டும் ஒருங்கே எளியபொருளாக எய்தலாம் எ-று.

**ஆ) பரிதி :** நீதியினால் தேடும் பொருளினால் அறமும் இன்பமும் உண்டாம் எ-று.

**இ) பரிப். :** ஒள்ளிய பொருளை முற்ற உண்டாக்கினார்க்கு ஒழிந்த அவ்வறமும் காமமும் ஆகிய பொருள் இரண்டும் எளிய பொருள் ஆக எய்தல் ஆகும் எ-று.

மேல் சில பொருள் உடையார்க்குப் பொருள் எய்துதல் வருந்தாமை வரும் என்றார்: அஃது அறமும் இன்பமும் வந்தால் எய்தல் ஆம் என்று கூறிற்று.

**ஈ) காளி. :** முறையின் வருவது ஆகிய பொருளினை முதிர[3] ஈட்டினவர்க்கு முன்பு கூறிய அறமும் இன்பமும் என்று சொல்லப்பட்ட ஏனைய இரண்டும் ஒருதன்மைப்பட எய்தும் எ-று.

**உ) பரிமேல் . :** நெறியான் வரும்பொருளை இறப்பமிகப் படைத்தார்க்கு, மற்றை அறனும் இன்பமும் ஒருங்கே எளிய பொருள்களாம், எ-று.

காழ்த்தல்-முதிர்தல். பயன்கொடுத்தல்லது போகாமையின் ஒண்பொருள் என்றும், ஏனை இரண்டும் அதன் விளைவாகலின் தாமே ஒரு காலத்திலே உளவாம் என்பார் 'எண்பொருள் என்றும் கூறினார். இவை நான்குபாட்டானும் அதனான் வரும் பயன் கூறப்பட்டது.

**காரி.:** காழ்த்தல்-முதிர்தல்.

---

1. முற்ற - முழுவதும் 2. ஒழிந்த - ஏனைய 3. முதிர - முற்ற
4. இறப்பமிக - ஒருபொருட் பன்மொழி - மிகுதியாக

ஊ) கவிராசர் : நியாய வழியாலே பொருளை மிக அதிகமாகத் தேடினவர்களுக்கு அறமும் இன்பமும் எளிய பொருள்களாகும். எ-று.

எ) பழைய 2 : ஒள்ளிய பொருளைத் தீதில்லாமல் மிகவுந் தேடிப் படைத்தாற்கு மற்றை அறனுமின்பமும் ஒருங்கே எளிய பொருளாய் வந்தெய்தும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'பொருளுக்கு (ஒன்மை) ஒளியுடைமை அது ஈட்டப்பெறுகின்ற அல்லது இயற்றப் பெறுகின்ற நெறி யொன்றானே அமைவது' என்பார் 'ஒள்ளிய பொருள்'', 'நீதியால் தேடிய பொருள்', 'முறையில் வருவதாகிய பொருள்', 'நெறியான் வரும் பொருள்' என்றெல்லாம் உரை கூறினர் அனைவரும்.

'காழ்ப்ப'

'முற்ற' 'முதிர', 'இறப்பமிக' என்றெல்லாம் உரைத்தனர். 'அழக்கொண்ட எல்லாம் அழப்போம்' என்றவாறன்றி அறவழியில் அள்ளி வீசினும் குலமுறைதோறும் அழியாது நின்று பயன படுதலைக் கருதி ஆசிரியர் 'காழ்ப்ப' என்றனர். காழ்-வயிரம், உறுதி; காழ்ப்ப-உறுதிகொள்ள, என்ற உரைகளே 'நிரம்ப' 'மிக' என்பனவற்றைவிடச் சிறந்தது என்க. 'காழ்ப்ப' என்ற செயவென் எச்ச வினைப் பகுதியின் பொருளும் அதுவாம்.

எண்பொருள்'

'எளிய பொருள்', 'முன்கூறிய பொருளாகிய அறமும் இன்பமும்' காளி. 'மற்றை அறனும் இன்பமும்' பரிமேல். என்ற பொருள்களைக் காட்டிலும்; 'முன் அறம் பொருள் இன்பம் என உடன் எண்ணப்பட்ட மூன்றனுள் அறனும் இன்பமும்' என்ற பொருளே சிறந்தது-

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் ;

அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்

ஆற்றும் பெருமநின் செல்வம் —புறம்.28:15-16

அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள் —குறள்.,754

அப்பொருள், துன்னுங் காலைத்துன்னாதன இல்லையே
—சீவக.,1923

பெருந்த டங்கப் பிறநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே. —கம்ப.,67

பொருள்தனைப் போற்றிவாழ் —ஆத்தி.,36

பொன்பொருட்டினால் யாவும் உண்டாம் —கந்த மாயைப் ,7

ஒ) மேற்கோள்பகுதி :

சிவஞான.: 'தோள்வலி கூறுவோர்க்கு அக்கூற்று, பொருளும் வீடும் பயக்கும் என்பதாயிற்று. ஆகவே மக்கட்கு உறுதிப்பயன் எனக் கூறப்படும் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான் கனுள் ஏனை அறமும் இன்பமும் பயவாபோலும் எனின்? அற்றன்று; 'ஒண்பொருள்...... ஒருங்கு' என்றதால் பொருள் பயத்தல் கூறவே ஏனை அறமும் இன்பமும் பயத்தல் கூறாமையே பெறப்பட்டது. —கம்ப.விருத்.பக்.,17

# 76. பொருள் செயல்வகை

| | பொருளள்ளவரை | இல்லாரை | பொருளென்னும் | அறனீனும் | அருளொடும் | உறுபொருளும் | அருளென்னும் | குன்றேறி | செய்க | ஒண்பொருள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 8 | 10 | 9 | 3 | 2 | 4 | 7 | 5 | 1 | 6 |
| பரிதி. | 8 | 10 | 7 | 1 | 2 | 9 | 4 | 5 | 6 | 3 |
| பரிப். | 8 | 10 | 9 | 3 | 2 | 4 | 7 | 5 | 1 | 6 |
| காளி. | 9 | 7 | 2 | 1 | 4 | 10 | 3 | 6 | 8 | 5 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

76 — வது அதிகாரம் 'பொருள் செயல்வகை' முற்றிற்று.

# 77. படைமாட்சி

அ) மணக்.: படைமாட்சியாவது படையினது நன்மை கூறுதல். படை மேற்கூறிய பொருளினால் உண்டாமாதலானும், அதனை ஈட்டுதற்கும் நுகர்தற்கும் படை வேண்டு மாதலானும், அதன் பின் இது கூறப்பட்டது.

ஆ) பரிதி.: படைமாட்சியாவது அரசன் படையின் பெருமையைச் சொல்லுதல் எ-று.

இ) பரிப்.: படைமாட்சியாவது படையினது நன்மை கூறுதல். இது மேல் கூறிய பொருளின் உண்டாம் ஆதலானும் அதனை ஈட்டுதற்கும் காத்தற்கும் படைவேண்டும் என்பதனாலும் அதன் பின் கூறப்பட்டது.

உ) பரிமேல்.: இனி அப்பொருளினான் ஆவதாய படை இரண்டு அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் படை மாட்சி கூறுகின்றார். அஃதாவது படையினது நன்மை.

ஊ) கவிராசர்: அஃதாவது-பொருளாலே ஆவதாய் வெல்வதாய சேனையினுடைய நன்மை.

ஏ) பழைய 2: அஃதாவது, அரசனுக்குரிய படையின் பெருமை.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

தேவநேயர் 'அரசனுடைய ஆட்சிக்கும், நாடுகாவலுக்கும்

இன்றியமையாத படையின் சிறப்பு' என்பர்.

மு ரா. அரு. 'சேனையின் நன்மை சேனை தேர்யானை குதிரை காலாள்' என்பர். இராம. 'பகையேயில்லையானாலும் படை 'அவசியம் என்பதையும், சேனை எல்லாப் பிரிவுகளையும் உடையதாய் இருத்தல் வேண்டும் என்பதையும், கெம்பீரமானதா கவும் தகுந்த தளபதிகளையுடையதாகவும் இருத்தல் வேணடும் என்பதையும் உணர்த்துவது' என்பர்.

வரத. 'பெருமையான படையைப் பற்றிப் பேசுவது படை என்றது படையைப் பயன்படுத்தி வெற்றிகாணும் வீரரை என்பர். இவருரைப்போக்குபடை என்பது ஆயுதத்தைக்குறிப்பது என்றும், அப்பெயர் படைகளைப் பயன்படுத்தி வெற்றிகாணும் வீரர்க்கும் ஆயிற்று என்றும் கருதுவதைக் காட்டுகிறது. குதிரையும் யானை யும் ஆகிய உயிருள்ளவை படையாகும் போது காலாள்நால் வகைப்படையுள் ஒன்றாதல் குற்றமின்று. ஏனோர் 'படையினது மாட்சி கூறுவது' என நால்வகைப்படைக்கும் கூறியதாகக் கருதும்போது இவர் மட்டும் வீரர்களைமட்டும் குறிப்பதாகக் கூறுவதுஏன்? வள்ளுவரும் இவ்வதிகாரத்து தானை—தானைத் தலைவர்களையே குறித்து ஓதுதல் காண்க.

குழந்தை, போக்கியார் கூறும் இயலமைப்பை எண்ணிப் படைமாட்சி படைச்செருக்கு இரண்டனையும் 'படை யியல்' எனப்பகுப்பர் 'படைமாட்சி படையினதுசிறப்புக்கூறுதல்' என்பர்.

இராமலிங்கர் 'போரேயில்லாத நாடாயினும் ஓர் அரசுக்கு நிலையான படைவேண்டும்' 'அதன் பெருமை கூறுதல் —படைமாட்சி' என்பர். வரத 'பெருமை யான படையைப் பற்றிப் பேசுவது படைமாட்சி. படை என்றது படையைப் பயன்படுத்தி வெற்றிகாணும் வீரரைக் குறிக்கும்' என்பர். இதனால் படைஎன்பது படைக்கலமாகிய ஆயுதங்கள் அவற்றைப்பயன் படுத்தும் வீரருக்கு ஆயிற்று என்பது இவர் கருத்தாகிறது. இது படுத்தல்—கொல்லுதல்; கொல்லுதலையுடை யது படை. ஐ வினைமுதற் பொருளில் வந்த விகுதி. ஆதலால் கொல்லும் வீரர்களையும் கருவியையும் உணர்த்தும் பொதுப் பெயர். ஆகவே சேனைகளின் சிறப்பு என்ற உரையே சிறப் புடையது. ''படையியங் கரவம்'' எனத் தொல்காப்பியத்தும் (தொல்-பொருள் 58) சங்கநூல்களிலும் சேனைக்குப் பெயராய்ப்

பின்னர் கருவிகட்குப் பெயராய் வருதலைக் காணலாம். இவற்றுள் 'சேனையின்சிறப்புக் கூறுதல்' என்பதே சிறந்த உரை.

77.1. உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை. (761)

உரைப்பகுதி ;

அ) மணக். : யானை, குதிரை, தேர், ருவி, காலாளாகிய உறுப்புக்களால் அமைந்து, இடுக்கண் உற்றால், அதற்கு அச்சமின்றி, வெற்றியுடைய படை, அரசன், தேடியபொருளெல்லாவற்றினும் தலையான பொருள்; ஆதலால், படை வேண்டும் எ-று.

ஆ) பரிதி. : சதுரங்கபலம்[1] உண்டாகிய அரசர்க்கு அழிவு வந்தால் கலங்காமனம் செல்வத்துளெல்லாம் தலையான செல்வம் எ-று.

இ) பரிப். : யானை, குதிரை கருவிகள் ஆகிய உறுப்புக்களால் அமைந்து இடுக்கண் உற்றால் அதற்கு அச்சம் இன்றி வெற்றி உடைய படை அரசன் தேடின பொருள் எல்லாவற்றினும் தலையான பொருள் எ-று.

ஆதலால் படை வேண்டும் என்றது.

ஈ) காளி. : பாதாதிகேசமாக[2] ஒர் ஆள் என்றதற்குத்தக, உறுப்பினரல் முற்றுப் பெற்றுக் கணை கருவி முதலியவற்றான்[3] வந்து உற்ற வடுப் பாட்டிற்கும்[4] சிறிதும் கண்ணஞ்சாத வீரப்படையானது அரசன் படைத்த செல்வத்துள் எல்லாம் பெரிதும் தலைமைப்பாடு உடைத்து எ-று.

1. சதுரங்க பலம் - நால்வகைப் படைப்பலம்
2. பாதாதிகேசமாக - உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை
3. கணைகருவி முதலியவற்றான் - அம்பு, வாள் முதலியன
4. வடுப்பாட்டிற்கும் - ஆறிய புண்ணிற்கும்

உ) பரிமேல். : யானை முதலிய நான்குஉறுப்பானும்நிறைந்து போரின்கண் ஊறு[5]படுதற்கு அஞ்சாது நின்று பகையை வெல்வ தாய படை, அரசன் செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் தலையாய செல்வம், எ-று.

ஈண்டுப்படை என்றது அந்நான்கன் தொகுதியை. ஊறஞ்சிய வழி வேறல்கூடாமையின்[6] 'ஊறஞ்சா' என்றும், ஒழிந்த அங்கங்கட்கும்[7] அரசன்றனக்கும் காவலாகலின் 'வெறுக்கையு ளெல்லாம் தலை' என்றும் கூறினார்.

ஊ) கவிராசர் : யானை, குதிரை, தேர், காலாள் என்று சொல்லப்பட்ட நாலுவகை உறுப்புக்களாலும் நிறைந்து, சண்டையிலே காயம்படுகிறதற்கு அஞ்சாமல் நின்று வெல்லுஞ் சேனை, இராசாவினுடைய செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் பெரியதான செல்வம் எ-று.

ஏ) பழைய 2 : யானை முதலிய நான்குறுப்பானும் அமைந்து போரின்கண் ஊறுபடுவதற்கஞ்சாது நின்று பகையை வெல்வ தாய படை, அரசன் செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் தலைமை யான செல்வமாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

காளிங்கர் 'பாதாதிகேசமாக ஓர்ஆள் என்றதற்கு ஏற்ற உறுப்புக்களைக்' கருதுகிறார். ஏனையோர் அனைவரும் 'அரசியலுறுப்பு ஆறனுள் ஒன்றாகிய படையின் உறுப்பு நான்கையும்' கருதுகின்றனர்.

பரிப்பெருமான் 'யானை குதிரை கருவிகள் ஆகிய உறுப்புக்களான் அமைந்து' என்கிறார். பரிப்பெருமாள் காளிங்கர் கருத்தும் ஏறத்தாழ ஒருநெறியிற் செல்வதுபோலத்

5. ஊறு-படைகள் உறுவதால் ஏற்படும் புண் முதலியன
6. வேறல் கூடாமையின் - வெல்லுதல் முடியாமையின்
7. ஒழிந்த அங்கங்கள் - குடி கூழ் அமைச்சு நட்பு அரண் முதலியன

தோன்றுகிறது. சிந்தனை மாறுபடக்காரணம் இல்லாமல் இங்ஙனம் உரைசெய்திருக்க மாட்டார்கள் என்பதைச் சிறிது உற்று நோக்குக.

'படைமாட்சி' அதிகாரம். படைகளில் யானையுங் குதிரையும் மாட்சியைப் பகுத்தறிவோடு விருப்பிமேற் கொள்வன அல்ல. ஏவ இயங்குவன. தேர் இயக்கப் படுவன; ஆகவே ஊறு அஞ்சா மாட்சியை இயல்பாகவே உடையதும், அதனை இடுக்கட்படினும் விட்டுக் கொடுக்காததும் காலாட்படை ஒன்றே. ஆதலால் இவ்வதிகாரம் காலாட்படையின் மாட்சியைக் கூறவந்ததேயாம். அதற்கேற்பக் காளிங்கர் 'ஆள் முழுமையாகத் தானிருக்கிறான் உறுப்பறையில்லை. ஆனாலும் போரில் ஊறுவரின் அஞ்சாமையும் வேண்டும். அத்தகைய காலாட்படையே அரசன் தேடிய பொருள்களிற் சிறந்த பொருள்; தலையாய பொருள்' என்கிறார். ஆதலால் இச்சிந்தனையை வளர்த்துக் காட்டும் காளிங்கர் மணக்குடவர் பரிப்பெருமாள் உரைகள் மாற்றுயர்ந்தவை. காளிங்கர் முதலாயினார்க்கு 'தானை படைத்தகையாற்பாடு பெறும்' என்ற ஆசிரிய வசனமே இவ்வெண்ணத்தைத் தந்திருக்கிறது.

பரிதி. 'அரசற்கு அழிவு வந்தால் கலங்காமனம் தலையாய செல்வம்' என்பர். இது இவ்வதிகார நோக்கிற்குச் சிறிதும் இயைபிலது. தேவநேயரும் பரிமேலழகரை ஒட்டிச் செல்வாருள் ஒருவராயினர். ஆனாலும், பரிமேலழகரும், ஊறஞ்சாமையைப் படைக்குரித்தாக்குதல் போல 'உறுப்பமைந்து' என்பதற்கு யானை குதிரை தேர் கருவி முதலிய உறுப்புக்களான் அமைந்து என்றிருப்பாராயின் அமைவுடைய தாகும். எண்ணித் துணிக. உரைவேற்றுமையாசிரியரும் இக்கருத்தை ஒத்தே உரைப்பர். 'போருடல் பெற்றுப் புண்ணுக்கு அஞ்சாத வெற்றிப்படை' என்ற வ. சுப. மா. கருத்தும் இதுவே. வரத. உரை பரிமேலழகரை ஒத்துச் செல்லினும் விளக்கத்தில் தெளிவின்று.

ஒ) ஒப்புமைப்பகுதி :

வெல்படை வேந்தன் வெறுக்கையுள் எல்லாம்தலை ;

பத்திமை சான்ற படை............ ............

மண்ணாளும் வேந்தற் குறுப்பு —திரிகடு., 10

போரறின் வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த
வேரறின் வாடும் மரமெல்லாம் - நீர்பாய்
மடையறின் நீள்நெய்தல் வாடும் படையறின்
மன்னர்சீர் வாடி விடும். —நான்மணி., 41

77.2. *உலைவிடத் தூறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்*
*தொல்படைக் கல்லால் அரிது.* (762)

உரைப்பகுதி :

அ) மணக். : அரசர் கெடுமிடத்து, வழிவந்த படைக்கல்லது பிறபடைக்குப் போர்க்களத்து அழிவு வந்தவிடத்து, உயிர்க்கு வரும் ஊறுஅஞ்சாத வன்கண்மை[1] இல்லை எ-று.

ஆ) பரிதி. : அரசன் படைசாய்ந்தவிடத்துத்[2] தன்சீவனைப் பாராத வீரர் தான் சேவகனான அரசற்கல்லது மற்றையோர்க்கு இல்லை எ-று.

இ) பரிப். : அரசு கெடும் இடத்து வழிவந்த படைக்கு அலலது போர்க்களத்து அழிவு வந்த இடத்து உயிர்க்கு வரும் ஊறு அஞ்சா வன்கண்மை இல்லை எ-று.

தொலைவிடம் என்பதை முன்னே கூட்டுக. மேல் வழி வந்த படை வேண்டும் என்றார்: அதனால் பயன் என்னை என்றார்க்கு அவர் தமக்கு முன்பு உள்ளார் செயலை நினைப்பார்: ஆதலான் அவர்க்கு அல்லது படை கெட்டால் நிற்றல் அரிது என்றவாறு ஆயிற்று.

ஈ) காளி. : தன்படை கெடுமிடத்தும் தன்மேல் வந்துற்ற கருவி வடுப்பாட்டிற்கும் சிறிதும் கண்ணஞ்சாத தறுகண்மையானது பண்டு படைத்தலை வீரரைக் கண்ணுற்றப் புறத்து எறியாது முன் எறிந்து முன் ஏற்றுக்கொண்டு வினோதித்து[3] அழிபடை

1. வன்கண்மை - வலிமை 2. படைசாய்ந்தவிடத்து - படை அழிந்த விடத்து
3. வினோதித்து - விளையாட்டாக

தாக்குதல் பழம்படைக்கு அல்லால் அரிது எ-று.

உ) பரிமேல். : தான் சிறிதாயவழியும் அரசற்குப் போரின்கண் உலைவு வந்தால் தன் மேலுறுவதற்கு அஞ்சாது நின்று தாங்கும் வன்கண்மை, அவன் முன்னோரைத் தொடங்கி வரும் படைக்கல்லது உளதாகாது.

இழிவு சிறப்புடைமை விகாரத்தால் தொக்கது மூலப்படை[4] கூலிப்படை,[5] நாட்டுப்படை,[6] காட்டுப்படை,[7] துணைப்படை, பகைப்படை[9] என்னும் அறுவகைப்படையுள்ளும் சிறப்புடையது மூலப்படையாகலான், அதனை அரசன் ''வெல்பொறியும் நாடும் விழுப் பொருளும் தண்ணடையும், கொல் களிறும் மாவும் கொடுத்தளிக்க[10]'' என்பது குறிப்பெச்சம்[11]. இப்படையை வட நூலார் மௌலம் என்ப.

ஊ) கவிராசர் : தான் சிறிதாயபொழுதும், இராசாவுக்குச் சண்டையிலே தோல்வி வந்தால், தன்மேல் ஆயுதங்கள் படுகிற தற்குப் பயப்படாமல் நின்று காக்கவல்ல திடம், அவன் முன் —னோரைத் தொடங்கி வரும் மூலப்படைக்கல்லது உண்டாகாது எ-று.

ஏ) பழைய 2: சேனை சிறிதாயவிடத்தும், அரசனுக்குப் போரின் கண் உலைவு வந்தவிடத்தும் காயம் படுதற்கு அஞ்சாது நின்று தாங்கும் வன்கண்மை அவனாதீனத்திற்[12] பழைய படைக்கல்லால் அரிது.

---

4. பலஆண்டுகளாகத் தொடர்ந்து நிற்பது மூலப்படை. தொல்படை என்பதும் இதுவே
5. பொருள் உதவிக் காக்கப்படுவது உரிமைப்படை. கூலிப்படை என்பதும் இதுவே
6. நாட்டிலுள்ள வீரர்களைச் சேர்ப்பது நாட்டுப்படை
7. தம் விருப்பின்படி ஒழுகும் வேடர் முதலியோரின் குழு காட்டுப்படை
8. துணைப்படை - நட்புரிமை பற்றிக் காரியத்திற்குத் துணைசெய்வது
9. பகைப்படை - பகைவனால் விலக்கப்பட்டுத் தன்படையுள் புகுந்ததும், பகைவனை வேறுபடுத்தி அவனிடத்தினின்றும், தன்வயமாகச் செய்யப்பட்டதுமாகிய படை
10. புறப்பொருள்வெண்பாமாலை, தும்பை, 2.
11. பொருளைக் குறிப்பாக அறியுமாறு குறைந்து நிற்கும் சொல். ஈண்டு தொல் படைக்கு நாடு பொருள் வயல் முதலிய ஐந்தும் கொடுத்து அளிக்க என்பது குறிப்பெச்சம்
12. அவனாதீனத்தில் - அவன் அரண்மனையில்

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்., பரிப்.; இருவரும் ''தொலைவிடத்து தொல்படைக் கல்லால், உலைவிடத்து உறைஞ்சா வன்கண் அரிது'' எனக் கூட்டி 'அரசன் கெடுமிடத்தும் தாங்குதல் தொன்றுதொட்டுவரும் படைக்கு உரிய கடமையாம்' என்று கூறுவர்.

பரிமேலழகர் 'படை பகையால் அழிக்கப்பட்டுச் சுருங்கிய காலத்தும் போரில் அரசனைப் பாதுகாப்பது தொல்படையாலன்றி இயலாது' என்பர்.

காளிங்கர், 'தொலைவிடத்தும், உலைவிடத்து ஊறு அஞ்சு வன்கண் தொல்படைக்கல்லால் அரிது' எனக்கூட்டி, 'தன்யானை தானை அழியினும் தன்மேல் வரும் கணை முதலியவற்றின் ஊறுபாட்டிற்கு அஞ்சாத தறுகண்மை முன்பே பல வீரர்களைப் பார்த்து அவர்கள கருவிகளைப் புறத்து எறியாது முன் எறிந்த வற்றைத் தாமே சென்று ஏற்றுக்கொண்டு அதனையும் ஒரு வினோதமாக எண்ணிச் சிதறியோடுகின்ற தன்படையையும் தடுத்து நிறுத்துதல் பழம் படைக்குத்தான் இயலுவதொரு செயலாம்' என்பர். இது 'அழிபடைதாங்கல்' என்னும் நொச்சித்திணையின் துறையையும், நினைவு படுத்தி எழுதியதாம். இதனாலும் காளிங்கர் கருத்து வலியுறுகிறது.

பரிமேலழகர் தரும் சிறப்புரையும், தொல்படையைத் தலையளிக்கும் வழிவகைகளும் மிகச்சிறந்தவை; இன்றியமையாதவை.

இராம. 'தொலைவிடத்து-போர் நிகழாத காலத்து' எனக் கொண்டு 'போரில்லாத காலத்தும் போரில் பழகிக்கொண்டேயிருக்கும் படை தொல்படை' என்பர். மற்றும் 'தொல்லுதல்-பழகுதல் அல்லது பயிற்சி பெறுதல். 'தொல்படை—பழகும்படை' எனவும் கூறுவர். தொன்மை-பழைமையையும், பழைமை-மேற்கொண்ட தொழிலில் இடைவிடாதபயிற்சியை வழிவழிப் பொருளாகவும் காட்டுமேயன்றித் தொல்லுதல்-பழகுதலாகாது. இங்ஙனம் இலக்கிய மரபுவழி மாட்சியின்மையையும் அறிக.

வரத. 'தொல்படை-நெடுங்காலம் போர்பயின்ற படை'

என்பர். தொல்-படை-மூலப்படை என்றலே தகுதி. பரிமேலழகர் கூறும் கூலிப்படை முதலியன போலாது மூலப்படையாகிய தொல்படை அரசோடு மகன்மகன் மரபில் வருதலான் நன்றியும் கடமையுணர்வும், நம்முன்னோர் காத்த நாட்டைத் தாமும் காத்தல் வேண்டும் என்ற ஊக்கமும் உடையதாம். அதனாலேயே ஆசிரியர் 'வழிவந்ததொல்படை' என்றார். இது நோக்காது கற்பனையால் பொருள்கோடல் அமையாதாம்.

தேவநேயரும் சிறந்தது இதுவென்ன...... ஆருயிர் என்னும் அவிவேட்டார்'' (பு.வெ.அவிப்பலி) என்னும் பாடலைக் காட்டி நிறுவுவர். சாமி.சிதம். 'பரம்பரைப் படை' எனல் காண்க. பரிதியும் 'தான் சேவகனான அரசற்கல்லது'என்பதும் இக்கருத்தையே காட்டுவது. கருத்துரையாதலின் குறட்சொல்லுக்குச் சொல் அமைதியிலது போலத் தோன்றலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி ;

முற்றும் :

அழிபடை தாங்க லாற்றும் ஆடவர் -கம்ப., 2163

ஒற்கம் வந்துத வாம லுறுகென
விற்கொள் வெம்படை வீரரை ஏவினான் -கம்ப., 7236

கரிபரி இரதம் தானையும் அமைந்து கருதும்ஊ றஞ்சுறா திகல் வேந்து
இரிதரப் பொருது வெல்வதெய் படைதான் எய்துகூ லிப்படை நாட்டுப்
பரிபடை காட்டுப் படைதுணைப் படைகைப் படைமூலப் படை என ஆறாத்
தெரிபடை இவற்றுள் சிறந்தது மூலப்படைஇதில் சிறந்தவர் வீரர். —விநா. அரசி., 122

உறவின் மிக்கவர் பகையின் எய்த்தவர் உதவு மப்படை குடை நிழல்
செறித லத்தினில் வளந கர்ப்படைதிரள்வ னப்படை பொருள் விலைத்

தறுகண் மெய்ப்படை உறுதி யில்பொரு தமத கப்படை எனவி
ராய்
அறுவ கைப்படை களும்வகுத்தன அணிகள் உட்கின பணிகளே
-வில்லி. அணிவகுப்பு.,12

பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நிற்பது மூலப்படை; தொல்படை என்பதும் இதுவே. பொருள் உதவிக் காக்கப்படுவது உரிமைப்படை; கூலிப்படை என்பதும் இதுவே. நாட்டிலுள்ள வீரர்களைச் சேர்ப்பது நாட்டுப்படை; வன்மை மிகுதியால் தம் விருப்பின்படி ஒழுகும் வேடர் முதலியோரின் குழு காட்டுப்படை; நட்புரிமைபற்றிக் காரியத்திற்குத்துணை செய்வது துணைப்படை பகைவனால் விலக்கப்பட்டுத் தன்படையுள் புகுந்ததும்,பகைவனை வேறுபடுத்தி அவனிடத்தினின்றும், தன்வயமாகச் செய்யப்பட்டதுமாகிய படை பகைப்படை; மற்றும் அமையப்படை, வன்படை மென்படை, பயிற்சிப்படை, பயிற்சியில்படை,குழுப்படை, தனிப் படை,கருவிபெறுபடை, தன்கருவிப்படை, ஊர்திபெறுபடை, தன் ஊர்திப்படை, எனப் பலதிறப்படைகளும் அரசனுக்கு உண்டு என்று சுக்கிரநீதி படையியலில் கூறப்பட்டுள்ளது. —பு-வெ, துப்பை.,2,

77.3. *ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை*
*நாகம் உயிர்ப்பக் கெடும்.* (763)

**உரைப்பகுதி :**

அ) **மணக்.** : கடல் போல ஒலித்தாலும் எலியினது மாறுபாட்டினால் வருந்தீமை என்னுள்ளதாம், எலி நாகம் உயிர்த்த அளவிலே கெடும் எ-று.

இது படைமிகுத்தது வெல்லும் என்று கருதாது, வீரரைத் தெளிந்து ஆளல் வேண்டும் என்றது.

ஆ) **பரிதி** : எலிக்கூட்டம் கடல்போலக் கூடினாலும் ஒரு நாகம் புறப்பட்டால் கெட்டாற் போல, கூட்டப்படையெல்லாம்[1] ஓர் பேர்பெற்ற சேவகன் புறப்பட்டால் கெடும் எ-று.

1. கூட்டப்படை யெல்லாம் - வலியின்றி மிகுதியாகக் கூடியிருக்கின்ற படை

இ) பரிப்.: கடல் போல் ஒலித்தக்காலும் எலியினது மாறு பாட்டினால் வரும் தீமை என் உளது ஆம்? அவ்வொலி நாகம் உயிர்த்த அளவிலே கெடும் எ-று.

இது படை மிக்கது வெல்லும் என்று கருதாது வீரரைத் தெளிந்து ஆளவேண்டுமென்றது.

ஈ) காளி.: எலிப்படை அனைத்தும் கூடிக்கொண்டு கடல்போல ஆர்த்துவரினும் பயன் இல்லை. என்னை எனின்? அவை அத்தனைக்கும் ஒரு நாகமானது வந்து பூத்தென மூச்சு எறியக் கெட்டுவிடும் எ-று.

உ) பரிமேல்.: எலியாய பகை திரண்டு கடல்போல ஒலித்தால் நாகத்திற்கு என்ன ஏதம் வரும்? அந்நாகம் உயிர்த்துணையானே அதுதானே[2] கெடும், எ-று.

உவமைச்சொல் தொக்குநின்றது. இத்தொழிலுவமத்தான்[3] திரட்சி பெற்றாம். வீரரல்லாதார் பலர் திரண்டார்த்தால் அதற்கு வீரனஞ்சான், அவன் கிளர்ந்த துணையானே அவர்தாம் கெடுவர் என்பது தோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதல்[4] என்னும் அலங்காரம். வீரரல்லாதார் பலரினும் வீரனொருவனை ஆடல் நன்று என்பதாம். இவை மூன்று பாட்டானும் முறையே அரசனுக்குப் படை ஏனையங்கங்களுள் சிறந்தது என்பதூஉம், அது தன்னுள்ளும் மூலப்படை சிறந்தது என்பதூஉம் கூறப்பட்டன.

ஊ) கவிராசர்.: எலியாகிய பகை திரண்டு கடல்போல ஒலித்தால் நாகத்துக்கு என்ன ஏதமுண்டாம்? அந்நாகஞ் சீறியவுடனே எலிப்படையெல்லாங் கெடும்.

எ) பழைய 2 : எலிகள் திரளாகக்கூடிக்கடலோசைபோலே ஆரவாரித்தாலும் நாகப் பாம்புக்கு என்ன தீங்கு வரும்? அந்த

---

2. அது-படை
3. இத்தொழிலுவமம் - ஒலித்தக்கால் என்பது கடலுக்கும் எலிக்கும் பொதுவாய் உவமிக்கப்படுவதால் இது தொழிலுவமம்
4. பிறிதுமொழிதல் எனினும் ஒட்டு எனினும் ஒக்கும். கருதிய பொருளைத் தொகுத்து அதுபுலப்படும்படி அதனோடு ஒத்த ஒன்றைக் கூறுதல். எலிப்பகையைக் கடலுக்கு ஒப்பிட்டது காண்க

நாகம் மூச்சுவிட்ட அவ்வளவினாலே எலிகள் தாமே கெட்டுப் போகும் எ-று.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பரிதி. எலிக்கூட்டம் மிகுதியாகக் கூடினமைக்குக் கடலை உவமித்தார். மணக்., பரிப., காளி., பழைய, கவிராசர் முதலியோர் 'எலிகளின் ஆரவாரத்திற்கு' உவமித்தனர். இரண்டும் ஒன்றுபோலத் தோன்றுமாயினும், ஒலிக்கு உவமிக்கும் உரைகளே சிறந்தவை. ஆரவாரத்தால் வெல்லலாம் என்ற படைக் கூட்டத்தையே நாகத்தின் மூச்சு தொலைக்கும் என ஆரவாரஞ் செய்கின்ற எலிகள் பலவற்றையும் நாகத்தின் மூச்சு சீறும் ஒலி கொல்லும் என்ற நயம் பயத்தலான் என்க. ஆனால் 'அத்தொழிலுவமத்தால் திரட்சி பெற்றாம்' என்ற பரிமேலழகர் விளக்கம் இக்கருத்தைச் சிறிது மாற்றுகிறது. 'நாகம் உயிர்ப்ப எலிப்பகை கெடும்' என்ற வினைமுடிவு ஆரவாரம் அவிதல் மட்டும் அன்று; ஆரவாரிக்கின்ற எலிக்கூட்டமே அழியும் என்றல் காண்க. எலிப்பகை என்றது பிறவியிலே எலி நாகத்திற்குப் பகையாய இயல்பை விளக்க வந்த அடையாகும்.

தேவநேயர் 'எலிகெடும் என்னாது அதன்பகை யவியும்' என்பர். ஆனால் பிறிதுமொழிதல் என்னும் அணியமைதி காட்டுகின்ற இவர் 'அவன் கிளர்ந்தெழுந்த துணையானே அவர் கெடுவர் என்பது பட நின்றது' என மாறுபடுவர். ஆயினும் குணமும் குணியும் தம்முள் ஒற்றுமைக் கிழமைபட நிற்பனவாதலின் ஓரளவு அமைத்துக் கொள்ளலாம்.

வரத. நயப்பொருள் கூறும்போது 'உவரிபோல்' என்றதால் படையின் தொகை மிகுதியும் ஆர்ப்பரவ மிகுதியுங் கூறினார். 'நாகம்' என்ற ஒருமையால் படைச்சிறுமையும், 'உயிர்ப்ப' என்றதால் முயற்சிக்குறைவும் கூறினார் எனல் சிறந்ததாகலாமோ எண்ணுக.

இராம. நாகத்திற்குப் போர்ப்பயிற்சியுடைய மூலப்படை வீரனையும், எலிகட்கு அஃதில்லாத திரளையும் உவமித்து விளக்குவர். பின்னுரைகள் முன்னுரைகளில் மாறின அல்ல.

ஓ) ஒப்புமைப்பகுதி :

எலியும் நாகமும் :
பைவிரி நாகத்து ஐவாய்ப் பிறந்த
ஒலிப்புயிர் பெற்ற எலிக்கணம் போல
ஒழிந்தோர் ஒழிய ... ... ... ... —பெருங் 1:56:273-5

எலியெலா மிப்படை யரவம் யானென
ஒலியுலாஞ் சேனையை யுவந்து கூயினான் —கம்ப., 2400

அரவின் நாமத்தை எலியிருந் தோதினா லதற்கு
விரவு நன்மையென்று ... ... ... ... —கம்ப., 6 65

புற்றி னின்றுவல் லரவினம் புறப்படப் பொருமி
இற்ற தெம்வலி யெனவிரைந் திரிதரு மெலிபோல்.
—கம்ப,. 9462

உவரி :

மாமுனி வர்க்குற வாகி வனத்திடை யேவாழுங்
கோமுனி யத்தகு மென்று மனத்திறை கொள்ளாதே
யேமுனை யுற்றிடிலேழு கடற்படை யென்றாலு
மாமுனை யிற்சிறு கூழென விப்பொழு தாகாதோ. —கம்ப., 2413

போர்ப் பெரும்படை பொம்மென் முழக்கமா
நீர்த்த ரங்க நெடுந்தடந் தோள்களா
வார்த்தெ ழுந்த திருதியி னார்களக்
கார்க்க ருங்கடல் கால்கிரைந் தென்னவே. —கம்ப., 2996

கடலினும் செரியர் —கம்ப., 5600

பரிமேலழகர் விளக்கவுரை :

வம்ப மள்ளரோ பலரே, எஞ்சுவர் கொல்லோ. —புறம்., 79:5-6

பலம் என்றிகழ்தே லோம்புமின் —புறம்.,301;11

மறுமனத்தான் அல்லாத மாநலத்து வேந்தன்

உறுமனத்தா னாகி ஒழுகின் - தெறுமனத்தார்
பாயிரம் கூறிப் படைதொக்கால் என்செய்யும்
ஆயிரம் காக்கைக்குஓர் கல். —பழ.நா.,250

சிங்கத்தி னாதம் வந்து செவிபுக விலங்கு சிந்தி
எங்குற்ற. ... ... ... ... —கம்ப.,8586

தேரிடை நின்று வீழ்ந்தார் சிலர்சிலர் படைகள் சிந்திப்
—கம்ப.,8608

முற்றும் :

ஒருபுடை இவன்போர் செய்ய ஒருபுடை உரக கன்னி
அருளுடை மைந்தன் எண்ணில் ஆயிரம் உருவ மாகி
இருபுடை யினும்போர் வேந்தர் எலிகள்போல் ஏங்கி அம்பால்
பொருபடை உருண்டு போகப் பொருவில்வெம் பூசல் செய்தான்.
—வில்லி.8ம்போர்.,18

ஒருபுடை :

புல்வாய் கூட்டத்துப் புக்க புலியெனக்
கொல்வா ளோச்சியே கூற்றம் விருந்துண
.........................................வீர ரழிந்திட
வள் வாள் வத்தவன் வாட்கிரை யிட்டனன். —உத.,58

77.4. *அழிவின் றறைபோகா தாகி வழிவந்த*
*வன்க ணதுவே படை.* (764)

உரைப்பகுதி :

அ) மணக். : கெடுதல் இன்றி, கீழறுக்கப்படாதாகி குலத்தின் வழி வந்த அஞ்சாமையை யுடையதே படையாவது எ-று.

வழிவருதல்—வீரன்மகன் வீரன் ஆகுதல். இது படையினது தன்மை கூறிற்று.

ஆ) பரிதி. : அழிவற்றதாய் அரசர்க்கும் மாற்றார்க்கும் இடம் கொடாமல் தலைமுறையான் இன்னான்மகன் என்று பேர்பெற[1] வெட்டுமது படை எ-று.

இ) பரிப். : கெடுதல் இன்றிக் கீழ் போகாதது ஆகிக் குலத்

---

1. பேர்பெற-புகழ்பெற

தின் வழிவந்த அஞ்சாமையை உடையது படையாவது எ-று.

வழிவருதல் வீரன் மகன் வீரன் ஆதல். இது படையினது தன்மை கூறிற்று.

ஈ) காளி : எதிர்ப்பட்ட முகத்து நெஞ்சழிவு[2] இன்றித் தன் கோமானை வஞ்சித்துக் கீழ்போகாதாகி வழிவருகின்ற தறுகண்மையை உடையது யாது? மற்று அதுவே படையாவது எ-று.

உ) பரிமேல். : போரின்கண் கெடுதலின்றி, பகைவரால் கீழறுக்கப்படாததாய், தொன்றுதொட்டு வந்த தறுகண்மையை உடையதே அரசனுக்குப் படையாவது, எ-று.

அழிவின்மையான் மற[3] மானங்கள்[4] உடைமையும், அலை- போகாமையான் அரசன்மாட்டு அன்புடைமையும் பெறப்பட்டன. வழிவந்த வன்கண்மை "கல்நின்றான் எந்தை கணவன் களப் பட்டான், முன் நின்று மொய்யவிந்தார் என்னையர்—பின்னின்று, கைபோய்க் கணை உதைப்பக் காவலன் மேலோடி, எய்போல் கிடந்தான் என் ஏறு[5]" என்பதனான் அறிக குற்றியலுகரத் தின் முன்னர் உடம்படுமெய் விகாரத்தான் வந்தது.[6] இது வருகின்ற பாட்டுள்ளும் ஒக்கும்.

> காரி. : வன்கணதுவே படை என்றது, குற்றியலுகரத்தின் முன் உடம்படுமெய் விகாரத்தால் வந்தது. "புணர்ப்போ நிலனும்[7]" என்னுங் கோவையாருள் 'புகுந்ததுவே' என்பதும் அது; "ஆற்றலதுவே படை[8]" என்பதும் அது. "விண்வத்துக் கொட்கும்" எனக்காட்டினார் நச்சினார்க் கினியர். "எல்சியின் எண்கு"[9] என்னுங்கோவையாருள்

---

2. நெஞ்சழிவு-மனமுடைதல் 3. மறம்-வீரம்
4. மானம் - நிலையில் தாளாமையும் இழிவால் தாழ்வுவரின் உயிர் வாழாமையும்
5. பு.வெ. வாகை.,22
6. வன்கண் அதுவே என்பதில் வன்கணது என்பதுஉயிர்த்தொடர் குற்றியலு கரமாகவும் ஏகாரம் வந்துழி உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் என்ற விதி பெறாது உடபம்டுமெய் பெற்று வந்தது விகாரத்தான் ஆம்
7. திருக்கோவை., 117
8. குறள்.,765 9. திருக்கோவை 764

'செல்வரிதன்று' எனக்காட்டினார் (பேராசிரியர்). இவ்விரண்டும் ஒன்றின்முன் உடம்படுமெய் வந்தது. "கல்நின்றான்" [10] என்னும் பாட்டும் இதனுள் காண்க.

ஊ) கவிராசர் : சண்டையிலே கெட்டோடிப் போகாமல், பகைவர்களாலே வெல்லப் போகாதாகிய பாரம்பரியமாய்வந்த சேவகத்தை உடையவர்களாய்க் கெட்டியாய் இருக்கிறதே சேனை (எ-று.)

ஏ) பழைய 2 : போரின்கண் முறிந்தோடுதலின்றிப்[11] பகைவர் கீழறுக்கப்படாதாகித் தொன்று தொட்டு வந்த தறுகண்மையை யுடையதே அரசனுக்குப் படையாவது.

ஐ தொகுப்பும் குறிப்பும் :

"அழிவு இன்றி"

'கெடுதலின்றி' மணக், பரிப்.; 'அழிவற்றதாய்' பரிதி ; 'எதிர்ப் பட்ட இடத்து நெஞ்சழிவு இன்றி' காளி : 'போரிற் கெடுதலின்றி' பரிமேல் ; 'சண்டையிலே கெட்டோடிப் போகாமல்' கவிராசர், பழைய 2; 'தோற்காமல்' தேவநேயர். இங்ஙனம் அனைவரும் சொல்வகைவேறுபடினும் தோல்வியின்றி என்ற ஒரே கருத்துடையர். அங்ஙனமே 'அறைபோகாது' என்பதற்குப் 'பகைவரால் கொடுத்தும் தடுத்தும் அடித்தும் அணைத்தும் தத்தமக்கு இடங்கொடுக்கச் செய்தலும், உளவு களைச் சொல்லுதலுமாம்' என்பதில் ஒப்பர்.

'வழிவந்தவன்கணது'

'இன்னான் மகன் இன்னான் என வழிவழிவந்த வன்கண்மையை உடையது' என்பதில் ஒப்புவர்.

வரத 'வழிவந்தபடை' என்பதிலுள்ள 'வருதல்' என்பதற்கு முன்படை தோற்றதைப் பார்த்தும், அடுத்தப்படை அறை போனதைக் கண்டும், பின்வந்த படை எதிர்த்து வெற்றி காண்பதாக வருதல்' என்பர். இவ்விளக்கங்கள் குறட்கருத்தோடு எங்ஙனம் இயைபுடையன என்பதையறியக் கூடவில்லை.

10. பு. வெ. வாகை., 22 11. முறிந்தோடுதலின்றி - இடையீடுபட்டு

ஆகவே அழிவின்மை முதலான குணங்களான் மறமானங்கள் உடைமை, அரசன்பு, இவை தோன்றலான் இவ்வுரையே எல்லா வகையினும் ஏற்றது எனலாம்.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

வகையு மானமு மாறெதிர்ந் தாற்றுறும்
பகையு மின்றி நிரந்து பரந்தெழு
தகவில் சேனை ......... ......... —கம்ப., 4553

ஓ) மேற்கோள்பகுதி :

இளம். : பொருளாவது நாடும், பொருளும், அரணும், அமைச்சும், நட்பும், படையும் எனக் கூறி, படை என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர். — தொல். பொருள்., 75

*77.5. கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்*
*ஆற்ற லதுவே படை.* (765)

உரைப்பகுதி :

அ) மணக். : கூற்றுமானது வெகுண்டு மேல்வரினும்,[1] சிதறுதலின்றியே[2] எதிர் நிற்கவல்ல வலியுடையதே படையாவது எ-று.

ஆ) பரிதி. : தன்னுயிரை ஒருவர்க்கும் கொடாத கூற்றவன் வந்தாலும் எதிர் நின்று தாக்குவது படை எ-று.

இ) பரிப். : கூற்றமானது வெகுண்டு மேல்வரினும் சிதறுதல் இன்றி எதிர் நிற்க வல்ல வலிமையை உடையது படையாவது எ-று.

இது மாற்றார் மேல் வந்தால் நின்று பொறுக்க வேண்டும் என்றது.

---

1. மேல்வரினும் - எதிர்த்துவரினும்
2. சிதறுதலின்றியே - இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சிதறிப் போகாமல்

ஈ) காளி. : எல்லைக்காலத்துக்[3] கூற்றம் கனன்று[4] எதிர்வந்து பொரினும்[5] அதற்கு இயைந்து தானும் எதிர்த்து அடர்த்து நிற்கும் திறமைப்பாட்டது யாது? மற்று அதுவே படையெனப் படுவது எ-று.

இனி மற்று இங்ஙனம் படைமாட்சி அமைத்ததற்பின் படை பொருசெருக்கு[6] உணர்த்த வேண்டுதலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) பரிமேல். : கூற்றுவன்தானே வெகுண்டு மேல்வந்தாலும் நெஞ்சு ஒத்து எதிர்நின்று தாங்கும் ஆற்றலை உடையதே படையாவது, எ-று.

மருந்தில் கூற்றாகலின்[7], உம்மை சிறப்பும்மை. மிகப்பலர் நெஞ்சொத்தற்குக் காரணம் அரசன்மேல் அன்பு. ஆற்றல்-மனவலி.

ஊ) கவிராசர் : எமன்தானே கோபித்துக்கொண்டு மேலே வந்தாலும் மனசு ஒத்து நின்று எதிர்க்கத் தக்க மனவலிமை (ஆற்றலை) யுடையதே படை எ-று.

ஏ) பழைய 2 : கூற்றுவன் தானே வெகுண்டு மேல் வந்தாலும் ஓடாமல் அஞ்சாமல் கூடி எதிர் நின்று போர் செய்யும் மன வலியை யுடையதே படையாவது.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'சிதறுதலின்றிக் கூடி' என்பதால் எதிர்ப்பார் படைமிகுதி காட்டிற்று. கூற்று என்பது தனிமையைக் காட்டிற்று என்பது மணக். உரைப்போக்கு.

பரிதி. 'பிறர்உயிரைக் கொள்ளுவதேயன்றித் தன் உயிரைப் பிறர் கொள்ளக் கொடுக்காத கூற்றுவன்' என்ற நயந்தோன்ற விரிப்பர்.

---

3. எல்லைக் காலத்தும் - இறுதிக் காலத்தும்
4. கனன்று - சினந்து
5. பொரினும் — போரிட்டாலும்
6. படை பொரு செருக்கு — படையானது சண்டையிடுகின்ற பெருமியதத்தை
7. மருந்தில் கூற்று — பரிகாரமில்லாத கூற்று

காளிங்கர் உரை எடுத்த 'உடலுக்குரிய ஊழ் முற்றி முடிந்த வழியன்றி வெகுண்டு வாராத கூற்று' என அவனுடைய தருமத்தையுணர்த்தியது. பரிமேல். உரை 'படை தொகுதிப் பெயரேயாதலின் நெஞ்சு ஒத்து எதிர்நிற்றல் வேண்டும்'என்பதை விளக்குவது. அனைவர் உரையும் அங்ஙனமே. தேவநேயர் 'காலஎல்லைக்கண் கூற்றுவன் வருதல் அவன் கடமைகளுள் ஒன்று; சினத்தால் வருவதன்று. அவனே சினந்து வரினும் எதிர்நிற்கும் ஆற்றலது படை' என நயந்தோன்ற "எப்போ தாயினுங் கூற்றுவன் வருகுவன் ...... தரியான் ஒருகணம்; தறுகணாளன்" (கபி. அக. 25—41) என்பதை எடுத்துக்காட்டி விளக்கியது ஏற்புடையதொன்று.

இராம 'உடன்றுவரினும்—சினங்கொண்டு படையெடுத்து வந்தாலும்' என்பர். கூடி—நெஞ்சொத்து என்று பொருள் கொள்ளு தல் முழுவதும் தவறு. ஒன்றாகச் சேர்ந்து நின்று என்பதுதான் பொருள் எனப் பரிமேலழகரை மறுப்பர். வரும் கூற்றுவன் ஒருவன் எதிர்நிற்பார் படைவீரர் பலர். அவர்கள் ஏதோ ஒரு சூழ்ச்சியாலோ உபதைகளாலோ மாறுபடுவராயின் வெல்லவே யியலாது என்பதை விளக்குவர் பரிமேலழகர். "அறுபதினாயிரர் எனினும் ஆண்டகைக்கு உறுதியின் நெஞ்சிவற்கொன்று என்றுன் னுவார்" என்பதுபோல மனமொத்தல் வேண்டும். மனமொத் தால்தான் கூடிநின்று பொர முடியும் என்று கருதிப் பரிமேலழகர் உரைப்பர். அதனை மறுப்பார் உரையினும் வேற்று விளைவு ஒன்றும் காண இயலவில்லையே; பிற்கால உரைகளும் இதில் மாறுபட்டில.

ஓ) ஒப்புமைப்பகுதி :

கூற்றுடன் மேல்வரினும் கூட எதிர்நிற்கும் ஆற்றல் :

கூற்று வெகுண்டு வரினும் மாற்று மாற்றலையே

—பதிற்., 14 : 10

கூற்றம் வரினும் தொலையான் —கலி.; 43 : 10

.......................... அருநவை நமனும் ஆற்றான்
என்னைநேர் நின்று வாழ்த லிருநிலத் தாவ துண்டே.

—சீவக., 1114

காலனுஞ் காலானன் றயிர்க்குங் காட்சியார் — கம்ப., 3013

மறலி யஞ்சுறு விறலர் — கம்ப., 3860

பிடிக்கு மேற்பெருங் காற்றையுங் கூற்றையும் பிடிக்கும்
— கம்ப., 4537

...... ...... ...... கூற்றையு
நீறு செய்திடுநீலன் ... ... ... ... — கம்ப., 4555

காலனு மஞ்சங் காய்சின மொய்ம்பீர் —கம்ப , 4826

கூற்றுவன் தன்னொடிவ் வுலகங் கூடிவந்
தேற்றன வென்னினும் வெல்ல வேற்றுள
மாற்றவன் தம்பி — கம்ப .6557

கூற்றையும் கட்பொறி குறுகக் காண்பரேல்
ஊற்றுறு குருதியோ டுயிரும் உண்பரால் — கம்ப .6565

கூற்றம் உன்னெதிர் வந்துயிர் கொள்வதோர்
ஊற்றந் தானுடைத் தன்று ......... — கம்ப., 9344

கூற்றின்வா யுற்றால் வீரம் குறைவரே இறைமை கொண்டார்
— கம்ப., 9481

கூற்றும் இவருடன் பகைக்க வற்றோ — கம்ப., 9486

கூடி எதிர்நிற்கும் ஆற்றலதுவே படை :

... ... .. .. கொலை ஞாட்பின்
மொய்ம்புடை வீரரும் அஞ்சார் முரண்மறவி
தும்பை முடிசூடி னும் — நீதிநெறி.,42

மண்டு ளங்கவவ வந்தகன் மணந்தளரவே — கம்ப., 2612

அந்தக னடிதொழு தடங்கு மாணையார் — கம்ப., 3012

எந்தை மற்றவன் னெயிற துக்குமேல்
அந்த கற்குமோ ரரண மில்லையால் — கம்ப., 3953

தண்டலாளர்கள் இவ்வணைக் கொடுபோய்நம்
பொருள்முழுதும் தடுத்தும் ஈர்த்தும்

மிண்டினால் வலிசெய்தும் வாங்கும்என
வெகுண்டரசன் விளம்பக் கூற்று
மண்டுமேல் மறஞ்செய்யும் வலியுடையார்
கதிரைஇருள் அடுத்துப் பற்றிக்
கொண்டுபோ னால்என்னக் கொடுபுறம்போய்
அறவோரைக் கொடுமைசெய்வார்

— திருவிளை. பரிநரி., 46

77.6. *மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்*
*எனநான்கே ஏமம் படைக்கு.* (766)

உரைப்பகுதி :

அ) மணக். : மறமும், மானமும், நல்லவழிச்சேறலும், தெளிவுடைமையும் என இந்நான்குமே படைக்கு அரணாம் எ-று.

ஆ) பரிதி. : வீரதத்துவ முனையில்[1] இன்னான்மகன் இன்னான் என்பது நம்பிக்கை. இந்த நாலுவகையாம் படைஞர் குணம் எ-று.

இ) பரிப். : மறமும் மானமும் நல்வழிச் சேறலும் தெளிவு உடைமையும் என்னும் நான்கும் படைக்கு அரண் ஆம் எ-று.

நல்வழிச் சேறல் ஆவது மறம் செய்யும் கால் அறத்தின் வழிச் செய்யும் தெளிவு கலக்கம் இன்மை. மேல் கெடாமை வேண்டும் என்றார் : இது கெடாமைக்குக் காரணம் கூறிற்று.

ஈ) காளி. : தன் நெஞ்சிற்கு இயல்பாயது ஓர் மறமும், சேவகத்தாழ்ச்சிக்கு[2] மானிப்பது ஓர் வாசிப்பாடும்[3] மாட்சிமைப் பட்ட வழிச்செலவும் என்றும் அரசர்க்கு ஏவல்வழி பிழையாது செல்லலும், எதிர்கண்ட விடத்துத்தடுத்து ஏறி நிற்கும் திறமையும் என்னும் இந்நான்குமே படைக்குச் சேம உறுதிப்பாடு எ-று.

உ) பரிமேல். : தறுகண்மையும் மானமும் முன் வீரராயினர்

---

1. வீர தத்துவ முனையில் - வீரத்தை வெளிப்படுத்தும் போர்க்கள முன்னணியில்
2. சேவகத் தாழ்ச்சி — வீரத்தின் இழிவு
3. மானிப்பது ஓர் வாசிப்பாடு — மானத்தோடு விளங்குவதாகிய ஒரு பெருமையும்

சென்ற நன்னெறிக்கண் சேறலும் அரசனால் தேறப்படுதலும் என இந்நான்கு குணமுமே, படைக்கு அரணாவது.

இவற்றான்[4]முறையே பகைவரைக் கடிதில் கொன்று நிற்ற லும். அரசனுக்குத் தாழ்வுவராமல் காத்தலும், "அழியுநர் புறக் கொடை[5] அயில்வாள் ஒச்சா''[6]மை முதலியவும்,[7] அறை போகா மையுமாகிய செய்கைகள் பெறப்பட்டன. இச்செய்கையார்க்குப் பகைவர் நணுகாராகலின்[8], வேறு அரண் வேண்டா என்பதாம்,

ஊ) கவிராசர்: கெட்டியும், மானமும், வீரராயினார் நடந்த வழியே நடக்கிறதும் அரசனாலே இவர்கள் நல்லவர்கள் என்று நம்பப்படுகிறதும் ஆகிய இந்த நாலுகுணமுமே படைக்கு அரணா வது எ-று.

ஏ) பழைய 2: தறுகண்மையும், அபிமானமும், வீரராயினார் சென்ற நன்னெறிக்கட் செல்லுதலும், அரசனால் தேற்றப்படுத லும் என இந்நான்கு குணமுமே படைக்கு அரணாவது.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறள் உரையில் அடிப்படையான கருத்து மாற்றம் பெரிதும் இல்லையாயினும் முன்னோரை மறுத்துப் புதிய உரை காணும் முயற்சி பெரும்பாலோரிடம் காணப்பெறுகிறது.

'மறம்''

'மறம்' மணக்., பரிப். 'தறுகண்மை" பரிமேல்.,பழைய.; கெட்டி' கவிராசர்; வீரத்தைக் காத்தல்' வரத.; 'உயிரை வாங்கவும் கொடுக்கவும் அஞ்சாத்தன்மை' இராம.; 'சாவுக்கும் நோவுக்கும் அஞ்சாத தறுகண்மை' தேவநேயர்.

'மானம்''

'சேவகத் தாழ்ச்சிக்கு மானிப்பது ஓர் வாசிப்பாடு' காளி ;

4. இவற்றான் - மறம் மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம் முதலியவற்றின்
5. பு. வெ. வஞ்சி., 20
6. முதலிய என்றமையின் போர்க்களத்தில் தேரைவிட்டு இரங்கினவன், பேடி, அஞ்சலி செய்தவன் தலைமயிர் அவிழ்ந்தவன், உட்கார்ந்திருப்பவன், அடைக்கலம் சொன்னவன், ஆடையில்லாதவன், தூங்குபவன், இறந்தவர்களைப் பற்றித் துன்புறுபவன் முதலியவர்களைக் கொல்லாமையும் கொள்க.
7. நணுகாராகலின் - அணுகாராகலின்
8. அபிமானம் - தற்பெருமை

'அபிமானம்' பழைய 2;'வீரத்தின் அழிவுக்கு அஞ்சுதல்' வரத.; 'ஆண்மைக்கு ஆகாதன செய்யாமை' இராம.

'மாண்ட வழிச்செலவு'

'நல்வழிச்சேறல்' மணக்., பரிப்.; 'மாட்சிமைப்பட்ட வழிச்செலவு' காளி ; 'கண்டவுடன் மாற்றாரும் அஞ்சும் கம்பீர மான வழிநடை' இராம.;

'முன்வீரராயினார் சென்ற நன்னெறிக்கண் சேறல்' பரிமேல்., கவிராசர், பழைய.; 'உயர்ந்த வீரர் ஒழுகிய நல்வழியிற் ஒழுகுதல்'தேவநேயர். 'நல்ல மறக்குடியிற் பிறந்திருத்தல்'வரத.

'தேற்றம்'

'தெளிவுடைமை' மணக்., பரிப் ;'என்றும் அரசர்க்கு ஏவல் வழி பிழையாது செல்லுதலும், எதிர்கண்டவிடத்துத் தடுத்து ஏறி நிற்கும் திறமையும்'' காளி. ; 'அரசனால் தேறப்படுதல்' பரிமேல்.; 'அரசனால் தேற்றப்படுதல்' பழைய; 'நல்லவர்கள் என்று நம்பப்படுதல்' கவிராசர்; 'வெற்றியில் தெளிவு' தேவநேயர்; 'போர் புரியுங்கால் தெளிவாகப் போர்புரிதல்' வரத.; 'அரசனாலே இவர்கள் நல்லவர்கள் என்று சேனைக்குள்ள தெளிவான திட்டம்' இராம ; 'சேனைக்குள்ள தேற்றம் அன்றி அரசனுக்குள்ள தேற்ற மன்று' என்றும் விளக்குவர் இராமலிங்கனார். பின்னுரைகள் பெரும்பாலும் முன்னவற்றை ஒத்துச் செல்கின்றன.

இவற்றுள், பரிமேலழகர் 'மறத்தால் பகைவரைக்கடிதிற் கொன்று குவித்தாலும், மானத்தால் அரசனுக்குத் தாழ்வு வராமற் காத்தலும், மாண்டவழிச் செலவால் அழிகுநகர் புறக்கொடை அயில் வாளோச்சாமை முதலியனவும், தேற்றத்தால் அறை போகாமை முதலியனவும் ஆகிய நான்குமே படைக்கு ஏமம், என்பர். இதில் தேற்றம் அரசனது தேற்றத்தையே குறிக்கிறது. இதுமுன்னர் 'அறைபோகாதாகி' என்பதாலேயே பெறப்பட்டமையின், படைமேற்கொண்ட போர்ச்செயலில் திட்டமிட்ட வெற்றியின் தெளிவைக்கோடலே சிறப்பு. இத்தகைய வெற்றியின் தெளிவிற்கு முற்கூறியபடி மானம் மாண்டவழிச்செலவு முதலிய பெரி

தும் உதவுவனவாதலையும் காண்க.

பரிதியார் மறம் முதலிய மூன்றும் தேற்றத்திற்கு அடி-நிலமாதலை விளக்கி இந்நான்கும் என்றனர். இன்னான் மகன் இன்னான் என்ற நம்பிக்கை, 'வழிவந்தவன்கணது', 'தொல்படை' என்பவற்றாற் பெறப்படுதலானும் வட நூலார் இதனை மௌலம் என்பர் என்ற குறிப்பானும் நினைக்கலாம். ஆதலால் பரிதியுரை கருத்தேயன்றி முழுமையானதன்று எனலாம். அதிகார இயை பின்றிச் சொற்பொருள் அளவாய்ப் பொதுமையினிற்பனவும், கூறியது கூறலாவனவும் ஆன உரைகள் ஏற்புடைய அல்ல.

ஒ) ஒப்புமைப்பகுதி :

மாண்ட வழிச்செலவு :

தீமைதீ ரொழுக்கின் வந்த திறத்தொழின் மறவ ரோடும்.,
— கம்ப., 4226

முற்றும் :

விரையவன் பகையை வெல்லும்வன் கண்மை வேந்துதா ழாவகை காக்கும்
புரையறு மானம் போரின்அஞ் சினரைப் பொருதடா ஒளியறை போகா. — விநா. அரசி., 123

77.7. *தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த*
*போர்தாங்கும் தன்மை அறிந்து.* (767)

உரைப்பகுதி :

அ) மணக். : உற்றவிடத்து உற்றபோரினைத் தடுக்கும் இயல்பறிந்து முன்வந்தாரைப் பொறுத்து, மேற்செல்லவல்லது படையாவது எ-று.

இது முந்திச் செல்லுவேண்டும் என்பதூஉம், செல்லுங்கால் இடமறிந்து செல்லவேண்டும் என்பதூஉம் கூறிற்று.

ஆ) பரிதி. : வெட்சி முதலான எட்டுவகை மாலை[1] சூடிப்

1. எட்டுவகை மாலை - வெட்சி முதலாக வயிறாகச் சொல்லப்பட்ட ஏழுடன் அவரவர்கட்குரிய அடையாள மாலையுஞ் சேர்த்து என்க

போர் செய்வது மாற்றானைக் கண்டபடை எ-று.

இ) பரிப். : முன் வந்த படையைப் பொறுத்து மேற்செல்ல வல்லது படையாவது ; அவ்விடத்துற்ற போரினைத் தடுக்கும் இயல்பு அறிந்து எ-று.

இது முந்திச் செல்ல வேண்டும் என்பதூஉம் செல்லுங்கால் இடம் அறிந்து செல்ல வேண்டும் என்பதூஉம் கூறிற்று.

ஈ) காளி. : எதிர்ப்படை வந்து தலைப்பட்ட காலத்து இவ்வாறு பொருவோம் என்று எண்ணிக் கலங்காது மற்று அதனைப் பொறுத்து அடர்த்துச் சென்று[2] நெருங்க வல்லது யாது? மற்று அதுவே தூசி[3] எனப்படுவது எ-று.

உ) பரிமேல். : மாற்றாரால் வகுக்கப்பட்டுத் தன்மேல் வந்த படையின் போரை விலக்கும் வகுப்பு அறிந்து வகுத்துக்கொண்டு, அவர் தூசியைத் தன்மேல் வாராமல் தடுத்துத் தான் அதன்மேற்[4] செல்வதே படையாவது.எ-று.

படைவகுப்பாவது வியூகம்; அஃது எழுவகை உறுப்பிற்றாய், வகையால் நான்காய், விரியால் முப்பதாம்.உறுப்பு ஏழாவன: உர முதல் கோடிஈறாயின,[5] வகைநான்காவன ; தண்டம்[6] மண்டலம்[7]

---

2. அடர்த்துச் சென்ற-நெருங்கிச் சென்று

3. தூசி - முன்படை (தார்)

4. அதன்மேல் - தூசிப்படையின் மேல்

5. உறுப்பு - ஏழு மார்பு, இரு சிறகுகள், இடை, பின்புறம், பிரதி கிரகம், கோடி என்பன-பிரதி கிரகமாவது முன்படைக்குப் பாதுகாவலாக இருநூறு விற்கிடைக்குப் பின்னே செல்வது

6. தண்டம்-தம்படைக்குச் சூழ நாற்புறத்திலும அச்சமுண்டானபோது தம்படையைக் குறுக்காக நிறுத்துவது

7. மண்டலம - பாமபு வட்ட மிட்டாற் போல வளைவாக நிறுத்துவது. இது தம சேனைக்குப் பின்புறத்திலே அச்சய கண்டபோது அமைக்கப்பெறும இதனைச் சக்கரவியூகம் எனவும கூறுவர்

அசங்கதம்[8] போகம்[9] என இவை: விரி முப்பதாவன; தண்டவிரிபதினேழும்[10], மண்டலவிரி இரண்டும்[11] அசங்கத விரி ஆறும்[12] போக விரி ஐந்தும்[13] என இவை. இவற்றின் பெயர் களும் இலக்கணமும் ஈண்டு உரைப்பிற் பெருகும்; அவையெல்லாம் வடநூல்களுள்[14] கண்டுகொள்க. இவை நான்குபாட்டானும் படையினது இலக்கணம் கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: மாற்றாரால் வகுக்கப்பட்டுத் தன்மேல் வந்த படையின் போரை விலக்கும் வகையறிந்து பிரிந்து நின்று, அவர்கள் விட்ட படைவகுப்பினைத் தன்மேல் வாராமல் தடுத்துந் தான் அதன் மேலே செல்வதே படையாவது எ—று.

ஏ) பழைய 2: மாற்றார் வகுத்துக்கொண்டு தம்மேல் வந்த படையின் போரை விலக்கும் வகுப்பறிந்து வகுத்துக்கொண்டு. பகைவர் தூசிப்படை தம்மேல் வாராமல் தடுத்துத் தாம் அதன் மேற்செல்வதே படையாவது.

---

8. அசங்கதம், - சேனைகளை வேறுவேறாகப் பிரித்து நிறுத்துவது, ஒன்றற்கொன்று இயைபில்லாதபடி அங்கங்கே பிரித்து வைப்பது. இது இரண்டு பக்கங்களிலும் அச்சம் உண்டானபோது அமைக்கப்பெறும், பன்றி தன் குட்டிகளோடு எங்கும் சிதறி ஓடுவது போல அமைக்கப் பெறுவதாதலின் வ்ராகம் எனவும் வழங்கும்

9. போகம் - நால்வகைச் சேனைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக நிறுத்துவது. இதுவும் பக்கங்களிலுண்டாகும் பயத்தைப் போக்கவே அமைக்கப் பெறுவது. பருந்தின் வீழ்வாகப் போர் செய்வதாதலின் கருடவியூகம் எனவும் வழங்கும்

10. தண்டவிரி பதினேழு - பிரதரம், திருடகம், சியாவஸ்தம், 'குக்ஷி' பிரதிட்டம் சுப்ரதிட்டம், சியேநம், விசயம், சஞ்சயம், விசாலம், நிசயம், சூசி, தூணம், கர்ணம், சமூமுகம், ரதாஸ்யம், வலயம் என்பன

11. மண்டலவிரி இரண்டு - சர்வதோபத்ரம், துர்ஜயம் என்பன

12. அசங்கதவிரி ஆறு - அர்த்த சந்திரம், சிருங்காடம், வஜ்ரம், கர்க்கடக சிருங்காரி காகபாதி, கோதிகா என்பன

13. போக விரி ஐந்து கோமுத்திரிகை, அபிசாரி, சகடம், மகரம, பதந்தகம என்பன

14. வடநூல்களுள் - காமந்தகம் முதலிய வடநூல்களில்

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்., பரிப்., பரிமேல். முதலானோர் உரைகள் 'படை நேர்ந்த இடத்து நேர்ந்த போரைத் தடுக்கும் இயல்பு அறிந்தும் இருக்கவேண்டும் எதிரியின் தூசிப்படையைத் தடுத்து அவர் வியூகத்தைப் பிளந்து முன்னேறிச் செல்லவும் வேண்டும்' என இரண்டு கடமைகளை விதிக்கின்றன.

பரிதியுரை 'புறத்திணை மரபுப்படி வெட்சி முதலான எழு வகைப் போர்மாலையோடு தத்தம் அடையாளமாலையையுந் தாங்கிச் சென்று முன்னேறிவந்த எதிரிப் படையைத் தடுக்க வல்லது தானை' என்பர். இது தமிழ்மரபை ஒட்டிய உரை.

பரிமேலழகர் தலைவந்த போர்-தன்மேல்வந்த போர் படை வகுத்துக் கொண்டு காமந்தகம் மனு முதலிய நூல்களை ஒட்டி வியூகம் மண்டலம் அங்கம் அவற்றின் விரிகளாகப்பகுப்பர். இத்தகைய பகுப்புக்கள் வெட்சி முதலிய மாலைசூடி இருபகுதி களாக இருந்து எதிர்த்து வெல்லும் தமிழ்மரபின்மை தெளிக

இராம. 'அப்போதைக்கு ஏற்பட்டுள்ள போரை நடத்த வேண்டிய விதத்தையறிந்து, அதற்குத்தக அணிவகுத்துச் செல் வதே சேனை' என்பர். இதனால் அவ்வப்போது நடக்கும் சண்டைக்கு ஏற்ப அணிவகுப்பது சேனை என்றாகிறது. இவ்வுரை பரிமேலழகரை இணைத்தே இயங்குகிறது.

தேவநேயர். உரையும் அணிவகுப்பிலும் எதிர் தாங்கு நெறியிலும் பரிமேலழகரை ஒட்டிச்செல்வதாயினும், பண்டைத் தமிழ்மற நூல்கள் இறந்தபின், அவற்றின் விரிவும் திரிபுமான வடநூன்முறை பற்றி எழுதினார் பரிமேலழகர் என்பர். புராண காலத்தன்றிச் சங்ககால இலக்கியங்களில் வியூக வகுப்பு இன்மை யையும் எண்ணுக.

வரத. 'எதிர்ப்படையின் வகுப்புமுறை திறமைகளை அறிந்து முனைப் படைக்கு முன்னே திறமாகத் தார்ப்படை அமைத்து எதிர்ப்பது தானை' என்பர். கருத்தாக 'முன்படை எதிர்த்து நிற் கவும், பின் படைவெற்றி காணவும் கூடியதாக இருக்கவேண்டும்' என்பர். இது ஏனையோர் உரையிலும் சிறிது வேறுபட்டது.

குழந்தை. பரிமேலழகரைப் பின்பற்றித் 'தலைவரு தலை' ஒருசொல்லாகக் கொண்டு அதனடியாகப் பிறந்த பெயரெச்சமாகிய 'தலைவந்த' என்பதற்குத் 'தன்மேல்வந்த போர்' என உரைகண்டார். மணக்., பரிப். 'தலைவந்த-முன்வந்த' என்றனர். தார்ப்படை, கொடிப்படை, தூசிப்படை என்பன ஒரு பொருட் சொற்கள்; அது கலப்பையில் கொழுமாட்டும் ஒண்டி போல் அமைந்தது என அமைப்பு முறை காட்டுவர்.

மு. கோ., பரிதியை ஒட்டி வெட்சி முதலிய மாலைகளைத் தாங்கிச் செல்வது படை, தலைவந்தபோர் தாங்கும் என்றமையால் தற்காப்புக்கும், சமாதானத்திற்குமாகவே படை பயன்பட வேண்டும் எனக் கருதுவர். ''இடஞ்சிறி தென்னும் ஊக்கந்துரப்ப'' ''பொதுச்- சாற்பொறாது'' முதலான போர் முதல் கூறும் புறப் பகுதிகளை மறந்தனர் போலும். ஈண்டு ஆசிரியர் கருதியது 'கூடார் மண்கொளல் குறித்த வஞ்சியான்' (தொல். புறத். நூற்பா.7.) படையெடுத்துவர அதனைத்தாங்குதலே தலைவந்தபோர் தாங்குதல் என்க.

ஒ) ஒப்புமைப்பகுதி : இல்லை.

ஓ) மேற்கோள்பகுதி :

சுவாமி. : 'தார்தாங்கிச் செல்வது தானை' முற்றுப்பெயர் வினை முதற் பொருளில் வந்ததற்கு மேற்கோள். —இ ,கொ. 83

77.8. அடற்றகையும் ஆற்றலும் இல்எனினும் தானை
படைத்தகையால் பாடு பெறும். (768)

உரைப்பகுதி :

மணக். : பகைவரைக்கொல்லுந்தகுதியும், அவர் மேல்வந்தால் பொறுக்கும் ஆற்றலும் இல்லையாயினும், சேனையானது படையழகினால் பெருமைபெறும் எ-று.

படையழகு என்றது தேர் யானை குதிரைகளின் அலங்காரமும், கொடியும், குடையும் முரசும், காகளமும் முதலாயினவற்றால் அழகு பெறுதல். இஃது அரசன் படையழகு அமைக்க வேண்டும் என்றது.

ஆ) **பரிதி. :** வெற்றிப்பாடும் சத்துவமும்[1] இல்லாத போதும் அரசன் போற்றுதலாலே சிறப்புப் பெறும் எ-று.

இ) **பரிப். :** பகைவரைக் கொல்லும் தகுதியும் அவர்மேல் வந்தால் பொறுக்கும் ஆற்றலும் இல்லை ஆயினும் சேனையானது படை யழகினாலே பெறும் எ-று.

படையழகு என்றது அலங்காரமும் கொடியும் குடையும் முரசும் காகளமும் முதலாயினவற்றால் அழகு பெறுதல். இதுவும் அரசன் அமைக்க வேண்டும் என்றது.

ஈ) **காளி :** எதிர்ந்தோரை எறிந்துகொள்ளும் தகைமையும்[2] அதற்கு உரிய ஆண்மைத் திறப்பாடும்[3] இல்லை ஆயினும், சேனையானது கைக்கொணடு நிற்குமிடத்து விட்டுவிளங்கிப்[4] பயின்றுள்ளதாகிய விறல் கருவிகளால்[5] பொலிவுடன் நிற்றம் சாலப்பெருமை பெறும்எ-று.

உ) **பரிமேல். :** தானை, பகைமேல் தான் சென்று அடும்[6] தறுகண்மையும் அது[7] தன்மேல் வந்தால் பொறுக்கும் ஆற்றலும் இல்லையாயினும் தன் தோற்றப்பொலிவானே பெருமை எய்தும்.

'இல்லெனினும்'[8] எனவே, அவற்றது இன்றியமையாமை பெறப்பட்டது. 'படைத்தகை' என்றது ஒரு பெயர்மாத்திரமாய் நின்றது. தோற்றப்பொலிவாவது அலங்கரிக்கப்பட்ட தேர், யானை,குதிரைகளுடனும், பதாகை,[9] கொடி, குடை, பல்லியம்,[10] காகளம்[11] முதலியவற்றுடனும்[12] அணிந்து தோன்றும் அழகு. பாடு-கண்ட அளவிலே பகைவர் அஞ்சும் பெருமை.

---

1. சத்துவம் - வலிமை
2. எறிந்துகொள்ளும் தகைமை - வெட்டிக்கொள்ளும் தகுதி
3. ஆண்மைத் திறப்பாடு - ஆண்மையின் திறமை
4. விட்டு விளங்கி - வெளிப்படுத்தி விளங்கி
5. விறல் கருவிகளால் - வலிமை, படை முதலியவற்றால் 6. அடும் - கொல்லும்
7. அது - பகை, படை
8. இல்லெனினும் என்ற இழிவு சிறப்பும்மையால் அவையின்றியமையாது வேண்டப் படும் என்பதாம்
9. பதாகை பெரிய கொடி
10. பல்லியம் - பலவகை வாச்சியங்கள், அவை அழப்பன, கொட்டுவன, ஊதுவன உரப்புவன
11. காகளம் - எக்காளம்
12. முதலியவற்றுடன் என்றமையின் - பம்பை தம்பட்டம் முதலானவையும் கொள்க

காரி: தகை-முன்னது தறுகண்மை; பின்னது தோற்றப் பொலிவு.

ஊ) கவிராசர்: சேனை, பகைவர் மேலே சென்று கொல்லுந் திண்மையும், அவர்கள் தன்மேலே வந்தால் பொறுக்கத்தக்க வலிமையும் இல்லாவிட்டாலும், அலங்காரத்தினாலே பெருமை பெறும் எ-று.

எ) பழைய 2: தானை பகைமேல் தான் சென்றடுந் தறுகண் மையும், தானை தன்மேல் வந்தால் பொறுக்கு மாற்றலும் இல்லையாயினும் தன் தோற்றப்பொலிவினானே பெருகை பெறும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறளில் 'படைத்தகையால்' என்பதே சிந்தனையைத் தூண்டுகிறது. மணக்குடவர் முதலான தொல்லோர் அனை வரும் 'சரக்கு மிடுக்காயில்லையாயினும் செட்டியார் மிடுக்கே போதும்' என்ற முதுசொல்லைப்பின்பற்றி படை எடுப்பும் சிறப்புமாக அதற்குரிய அணிகளுடன் இருந்தாற்போதும் என் கின்றன.

காளிங்கர் 'விட்டுவிளங்கிப் பயின்றுள்ள விறல் கருவி ளால் பொலிவுடன் நின்றால் போதும்' என்பர்.

பரிதியார் 'அரசனுடைய போற்றுதலாலே சிறப்புப் பெறும் படை' என்பர். 'அரசன் மதில்காக்கும் படைவீரர் அடற்ற கையும் ஆற்றலும் இலராயினும் அவர்கட்குச் சிறப்புச் செய்ய அவர்கள் வெள்வாள் வேந்தன் வேண்டிய தீயவும் கொள்ளா மறவன் நிலையைக் கண்டு வந்தோர் மீள்வராதலின் அதுவே பாடுதரும் செயலாம்' என்பர்.

தேவநேயரும் பரிமேலழகரை ஒட்டியே உரைத்தனர்; தெனாலிராமன் கதையைக் காட்டிப் போலி வெற்றியையும் புகல்வர்,

இராம. 'படைத்தகை—படைப்பயிற்சிகளின் வன்மை. அதாவது போரில்லாக் காலத்தும் இடைவிடாத போர்ப்பயிற்சி.

அடல்தகை - போர்புரியும் மனவலி ; ஆற்றல் - போர்த்துன்பங் களைத் தாங்கக் கூடிய உடல்வலி. பாடு-வலி. தகுதியும் ஆற்ற லும் இல்லையானாலும் கட்டுப்பாடான தன்மையே வலிமையைத் தருவது' எனக் கருத்துரைப்பர். இது சிறிது வலிந்து கோட லாகும்.

வரத. 'படைத்தகை—படைத்தலைவரின் திறமை எனப் படை-படைத்தலைவர்' என்பர். 'கொடி குடை முரசம் முதலிய படையணிகள் என்றும், அழகுபட அமைக்கும் வகுப்புத்திறன் என்றும், அதனை அமைக்கும் தலைவன் திறம்' என்றும் பல படக் கூறித் துணியாமை தோன்ற செய்வர்.

குழந்தை 'படைத்தகை-படைகள் ஒன்றுபட்டுச் செய்யும் போர்த்தொழில் வன்மை' என்பர். சபாபதி 'அணிவகுப்புத் தோற்றப்பொலிவு' என்பர். மு.கோ. முதலியோரும் இங்ஙனமே.

இவைகள் அனைத்தையும் இணைத்தெண்ணும்போது, 'ஒலித்தக்கால் என்னாம் உவரி' என்று வெற்றாரவாரமும் ஆடம் பரமும் பயனின்று என்றவர், 'கொடியும் ஆடையணிகளும் அமை யும்' என்பாரா? ''கூடி எதிர்நிற்கும் ஆற்றலதுவே படை'' என்றவர் மீண்டும் 'கட்டுப்பாடாக எதிர்நிற்கும் தன்மையை உரையாகக் கொள்ளும் நிலையில் படைத்தகையைப் பயன்படுத் தியிருப்பாரா?' மற முதலிய நான்கையே படையின் நாற்குண மாகக் கூறியவர் 'காகளம் சின்னம் பல்லியம் முதலிய புறஅழகை யறிவிப்பதாகப் படைத்தகைமை ஆண்டிரார். இவைகளை எண்ணும் போது அரசன் போற்றுதலாகிய படைத்தகை சிறந்த பொருளாகிறது. அடுத்து, இடையில் விட்டுப்போனாலும் பின் னர்ப் பயின்று விளங்கும் படைத்தகுதி அடுத்து நிற்கிறது. ஆனா லும் வாள் முதலிய கருவிகளை ஏந்திநிற்கும் மிடுக்கும் முன் னோர் கருதிய புறவழகுப்படுதலின் சிந்திக்கத்தக்கது. சிறந்தது சிந்திக்க. 'போற்றுதலே படைத்தகை' என்ற விதையிலிருந்து குறள் தோன்றுதலும்பரிதியின் கருத்திற்குத் துணைசெய்கிறது.

ஒ) ஒப்புமைப்பகுதி :

படைத்தகை :

காகளமும் பல்லியமுங் கனைகடலின் மேன்முழங்க —,கம்ப,

77.9. *சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்*
*இல்லாயின் வெல்லும் படை.* (769)

**உரைப்பகுதி :**

அ) மணக். : தான் தேய்ந்து சிறிதாகலும், மனத்தினின்று நீங்காத வெறுப்பும், நல்குரவும் தனக்கு இல்லையாயின், படை பகையை வெல்லும் எ-று.

ஆ) பரிதி. : மிடியும்[1] சேவகத்தன்மையும் சிறுமையும் இல்லை-யாயின் படைவெல்லும் எ-று.

இ) பரிப். : சிறுமை உறுதலும் போகாத் துன்பம் உறுதலும் வறுமையும் இல்லை ஆயின் படை வெல்லும் எ-று.

சிறுமை உறுதல் ஆவது இழிந்தார் பெற்ற சிறப்பு உயர்ந் தார் பெறாமை. போகாத்துன்பம் ஆவது பெண்டிரைக் கைக் கொள்ளுதலும் இளிவரவு செய்தலும் போல்வன. வறுமையாவது கொடாமை. இது படைக்கு அரசன் செய்யும் திறன் கூறிற்று.

ஈ) காளி. : படைச்சிறுமையும் நீங்காத கோபமும் படையினது வறுமையும் என்னும் இக்குற்றம் மூன்றும் இலதாயின் எதிர்ப் படையை எவ்வாற்றானும் வெல்லும் படை எ-று.

உ) பரிமேல். : தான் தேய்ந்து சிறிதாகலும்[2] மனத்தினின்று நீங்காத வெறுப்பும் நல்குரவும் தனக்கு இல்லையாயின், படை பகையை வெல்லும், ஏ-று.

விட்டுப்போதலும்[3] நின்றது[4] நல்கூர்தலும் அரசன் பொருள் கொடாமையான் வருவன. செல்லாத்துணியாவது[5] மகளிரை

---

1. மிடி - வறுமை
2. சிறுமை தேய்ந்து சிறிதாகல் - அரசர் செய்யும் அவமதிப்புமாம்
3. விட்டுப்போதல் - நாள்தோறும் சேனை சம்பளம் போடாமையால் நீங்கிப்போதல்
4. நின்றது - விட்டுப்போகாமல் எஞ்சி நின்ற சேனை
5. செல்லாத்துனி - ஒன்றாலும் நீக்க முடியாத பிணக்கு

வெளவல், இளிவரவாயின செய்தல்[6] முதலியவற்றான்[7] வருவது, இவை உள்வழி[8] அவன்மாட்டு[9] அன்பின்றி உற்றுப்பொரா மையின், இல்லாயின் வெல்லும் என்றார்.

ஊ) கவிராசர். : தன்னைக் கொஞ்சம் பண்ணிக்கொள்ளு கிறதும், மனதிலே விடாத வெறுப்பும், தரித்திரமும் இல்லா விட்டால், படை பகையை வெல்லும் எ-று.

ஏ) பழைய 2: படைதேய்ந்து சிறிதாகலும், நீங்காப் பிணக்கும், வறுமையும் இல்லையாயிற் படை பகைவரை வெல்லும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

சிறுமை முதலிய மூன்றுமே உரையாசிரியர்களின் உள்ளப் போக்கையும் உலகியல் அறிவையும், உணர்ச்சிவயப்பட்ட கருத் துக்களையும் தெரிவிக்கின்றன. அதனால் வள்ளுவர் உள்ளம் எதுவாகலாம் எனத் தேர்வதில் துன்பம் விளைகிறது.

மணக்குடவர், பரிப்பெருமான் இருவரும் 'பெரும்படை யாயிருந்தது தேய்ந்து தேய்ந்து அளவிற் குறைதலைக்' கருது கின்றனர்.

பரிதி. 'வறுமைக்கு முதலிடந்தந்து சிறுமை செல்லாத்துணியும் அடுத்து நிறுத்துவதால் பின் சொன்ன இரு குற்றங்களுமே மிடியின் வழியன. மிடியால் வருவன' எனக் கருதச் செய்கின்றனர் போலும்

மணக். சிறுமை-தான் (படை) தேய்ந்து சிறிதாகல். இதனை ஆசிரியர் முன்னரும் 'சிறுபடையான்' என்றனர்.

---

6. இளிவரவாயின செய்தல் - சூதாடல், கள்ளுண்டல், பொய்மொழிதல், ஈதல், மறுத்தல் போன்ற இழிவை உண்டாக்கும் செயல்களைச் செய்தல்
7. முதலிய என்றது- ஆறில் ஒன்றிற்குமேல் கப்பம் வாங்குதல், சுங்கத்தை மிகுதிப் படுத்துதல், தண்டிக்க வேண்டியவர்களைத் தண்டிக்காமல் விடுதல், சம்பளம் குறைத்தல் முதலியன
8. இவையுள்வழி — முற்கூறிய சிறுமை முதலாகிய குற்றங்கள் உள்ளவிடத்து
9. அவன்மாட்டு-அரசனிடத்து

பரிப். 'இழிந்தார் பெற்ற சிறப்பு உயர்ந்தார் பெருமை'என்பர். காளி. 'படைச்சிறுமை' என மணக்குடவரை எண்ணச் செய்வர். பரிமேலழகர் முதலானோரும் அங்ஙனமே.

பழைய 2 'தன்னைக் கொஞ்சம் பண்ணிக்கொள்ளுதல்' என்பர். இவர் இழிவு மனப்பான்மையைக் கருதுகிறாரா? அல்லது ஒவ்வொருவராகப் போகச் செய்து படையைச் சிறுக்குதலைக் கருதுகிறாரா? என்பது தெளியக்கூடவில்லை.

தேவநேயர். 'சிறுத்தல்-படைமறவர் விலகுவதால் நேர்வது' என்பதால் பரிமேலழகரை இணைகிறார் எனலாம்.

வரத. 'காமங்காரணமாகவோ குடும்பநிலைகாரணமாகவோ படையில் உண்டாகும் சிறுகுழப்பம்' என்பர்.

இரா ம. 'வீரர்களுக்குத் தகாத அற்பத்தனம் என்றும், எண்ணிக்கை குறைவு, விலகிப் போதல் என்பன சரியல்ல. படை வீரர்கள் நிரம்பிய படைதான் இங்குக் கூறப்படுகிறது; வெல்லும் படை என்ற குறிப்பே அதனைக் காட்டுகிறது' என்பர். படைக்கு இவர் சொல்லும் பொருளியைபு சரிதான்; அத்தகைய படை வெல்லும் படையாதற்குச் சிறுமை முதலிய முக்குற்றங்களும் இல்லையானாற்றான் வெல்லும் என ஆசிரியர் கூறுவதையும் கூர்ந்து நோக்கி ஏனோரைக் குறை கூறுதல் வேண்டும்.

சபாபதி. 'படை நால்வகையின் கூட்டுப் பெயராதலின், தான் தேய்ந்து சிறிதாகல்' என்பது 'தாம் தேய்ந்து' என்றிருப்பின் 'நலம்' என்பர். இவ்வதிகார உரை எங்கும் தான் என்றே கூறுவர். படைதொகுதிப் பெயராதலின் அங்ஙனம் கூறுகிறார் என அமைத்தும் கொள்ளலாம். படைமாட்சி என்பது படைவீரன் மாட்சி என்பதை மறத்தலாகாது. பிற்கால உரையாசிரியர்கள் அனைவரும் கூறியவற்றுள் ஒன்றையே சாருகின்றனர்.

செல்லாத்துனி :

மணக். 'மனத்தை விட்டகலாத வெறுப்பு' என்பர். 'போகாத்துன்பம் உறுதல்; அஃதாவது வீரன் மனைவியை

அரசன் கைக்கொள்ளுதல், இளிவரவு செய்தல் போல்வன' என்பர் பரிப்.; 'நீங்காத கோபம்' என்பர் காளிங்கர். 'மனத்தி-னின்று நீங்காத வெறுப்பு' என்று பரிப்பெருமாள் தந்த ஏதுக்களையே காட்டுவர் பரிமேல்.; 'நீங்காப் பிணக்கு' என்பர் கவிராசர். 'இடைவிடாத வெறுப்பு' என்பர் பழைய 2.; மனத்தை விட்டகலாத அஃதாவது அரசனிடம் சொல்லியும் நீக்கப்படாத குறை' என்பர் குழந்தை. 'அடங்காத சிறு முன்கோபத்தன்மை, அதாவது தலைவனுக்கு அடங்காது அவன் மேல் கோபங் கொண்டு கோஷ்டி சேர்த்தல்' என்பர் வரத.; முற் பகுதியில்தனக்கு அடங்காத கோபம் என்றவர் விளக்கத்தில் தலை வனுக்கு அடங்காது கோபத்தால் கோஷ்டி சோர்த்தால் என்று கலங்கிய கருத்தமைக்கிறார். இராம. 'அரசனிடம் சொல்லிக் கொண்டும்அதற்கு விடுதிகாணாமையால் மனத்தைவிட்டு நீங்காத குறை' என்பர். தேவநேயர், பரிமேலழகர் தந்த விளக்கமே தருவர். மு.கோ. 'மேற்செல்ல வேண்டாத வெறுப்பு. அலெக்ஸாந்தர் படைக்குச் சிந்து வெற்றிக்குப் பின் ஏற்பட்டது போன்றது என்பர். 'மனக்கசப்பு' என்பர் வ.சுப.மா.

பரிதி. 'செல்லாத்துணி — சேவகத்தன்மை' என்பர். வினைக்கண் ஆள்வார் ஏவுங்காலத்துச் சேவகரையும், வினை முடித்தபோது சிறப்புப் பல செய்து சேவகத் தன்மையை மறக் கவும் செய்து ஆளுதல் மரபாகவும், படையை எஞ்ஞான்றும் சேவகத்தன்மையிலே பணிகொள்ளின் அவனுக்கு அதில் வெறுப் புத்தோன்றும். வினையாளை வேலைமுடிவிலாது சேவகத் தன்மையை மறக்கச் செய்தல் வேண்டுமாதலின் இங்ஙனம் கூறி னர். இஃதோர் பெரிய அரசியல் தந்திரம் என்க. ஆதலால் இவர் உரை இதனைக் கருதியிருக்கிறது.

இவற்றுள், 'சிறுமை'க்குப் பரிப்பெருமாள் உரையும், 'செல்லாத்துணிக்'குப் பரிமேலழகர் முதலானோர் தரும் விளக்க மும், இந்நான்கண் விளைவும் அரசனாலாவன என்ற பகுப்புரைக் கும் பரிமேலழகர் விளக்கமும் சிறந்தன.

*77.10. நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை*
*தலைமக்கள் இல்வழி இல். (770)*

உரைப்பகுதி :

அ) மணக் : படையானது நிலையுடைய வீரரைப் பெரிது உடைத்தாயினும், தனக்குத் தலைவரை இல்லாத விடத்துத் தனக்கு வெற்றி இல்லையாம் எ-று.

இது படையமைத்தாலும் படைத்தலைவரையும் அமைக்க வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: நிலையுடைய வீரர் உண்டாகிலும் தளவாய்[1] நன்மை இல்லாதபோது சேவகம்[2] இல்லை எ-று.

இ) பரிப். : நிலை உடைய வீரரைப் பெரிதும் உடைத்து ஆயினும் படையானது தனக்குத் தலைவனை இல்லாத இடத்து வெற்றி இல்லை ஆம் எ-று.

இது படை அமைந்தாலும் படைத்தலைவன் அமைக்க வேண்டும் என்றது. இவை இரண்டும் படை ஆகும் திறன் கூறின.

ஈ) காளி . : எதிர்ப்படை கண்டால் பிறர் காதலிக்க நினையாது தெளிந்து நிற்கும் நிலைப்பாட்டினை[3] உடைய வீரரைச் சால உடைத்தேனும் சேனையானது சேனைத் தலைவராகிய தலைமக்கள் இல்லாத இடத்துச் செய்வது ஓர் சேவகம் இல்லை எ-று.

உ) பரிமேல். : போரின்கண் நிலையுடைய வீரரை மிகவுடைத்தேயாயினும், தனக்குத் தலைவராகிய வீரரில்லாத வழித் தானை நில்லாது.

படைத்தலைவர் நிலையுடையாரன்றிப் போவாராயின் காண்போர் இல் எனப் பொராது[4] தானும்[5] போம் என்பார், 'தலைமக்களில்வழி இல்' என்றார். இவை மூன்று பாட்டானும்

1. தளவாய் - தளபதி
2. சேவகம் - வீரன்
3. நிலைப்பாட்டினை-உறுதியுடைய
4. பொராது-சண்டையிடாது
5. தானும்-சேனையும்

முறையே படைத்தகையின்மையானும், அரசன் கொடைத்தாழ்வு களானும்[6], தலைவரின்மையானும், தாழ்வு கூறப்பட்டது.

காரி.1 நிலைமக்கள் சாலவுடைத்து என்பதனுள், தளகத்தன்[7] இல்லாத படை நில்லாது என்பது காண்க.

ஊ) கவிராசர்: சண்டைபண்ணும்போது வீரரானவர்கள் வெகுவாயிருந்தாலும், அதற்குத் தலைவனான துறை[8]யில்லா விட்டால், சேனை நில்லாது எ-று.

ஏ) பழைய 2: போரின்கண் நிலை பெற்ற வீரர் மிகவுடைத்தே யாயினும் அரசில்லாப் படை நில்லாது, (எ-று.)

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பாவின் பழைய உரைகள் அனைத்தும் 'நிலைத்த படையிருப்பினும் படைக்குத் தலைவன் ஒருவன் இன்றியமை யாது வேண்டப்படும்' என்ற ஒத்த கருத்துடையன. ஆயினும் காளிங்கர் உரை 'நிலைப்படைக்கு' ஒரு புதிய விளக்கந் தருகிறது. 'படை எடுத்து வரும் எதிர்ப்படைகண்டால், அதன் கண் உள்ள பிறர் இவ்வரணையும்-இப்படை களையும் நம் கையகப்படுத்தினால் என்ன என்று காதலிக்க நிணையா வண்ணம் உறுதியான மூலப்படையை மிகவுடைய தேனும், என்று தொல்படையின் இயல்பை விதக்கின்றது. ஏனைய உரைகள் 'நிலையான வீரரை உடையதாயினும்' என வாளாமொழிகின்றன.

பரிமேலழகர் உரை தலைவரின் இன்றியமையாமைக்கு ஏது கூறி விளக்குகிறது. கவிராசர் உரை தலையல்லாப்படை யின் தீங்குகூறிச் செல்கிறது. பழையஉரை 'படைத்தலைவனை விடுத்து அரசனில்லாப்படை' என்கிறது. இவ்வுரை ஈண்டு ஏற்பு டையதன்று. இராம. 'தலைமகன் இல்லையானால் இல்லை'

---

6. கொடைத்தாழ்வுகளானும்-அரசன் கொடுப்பதில் உள்ள குறைப்பாடு
7. தளகத்தன்-தளபதி
8. துறை-தளபதி

என்பதற்குச் 'சரியான தலைவனில்லாவிட்டால்' என விளக்கந்தருவர்.

தேவநேயர் 'நடத்த-பயிற்ற-ஏவிப்போர் செய்யத் தலைவன் தேவை' என்பர்.

இவற்றுள் 'தலைவன் ஒருவன் வேண்டும்' என்ற இன்றியமையாமை விளக்கும் பரிமேலழகர் உரையும் அதனை ஒட்டி உண்டான உரைகளும் சாலச்சிறந்தன.

ஒ) ஒப்புமைப்பகுதி :

முற்றும் :

காக்குந ரின்மை கண்ட கலக்கத்தாற் கவியின் சேனை
போக்கறப் போகித் தத்த முறைவிடம் புகுத லுண்டால்
தாக்கியிப் படையை முற்றுந் தலைதுமிப் பளவுந் தாங்கி
நீக்குதி நிருத ராங்கு நெருங்குவார் நெருங்கா வண்ணம்
— கம்ப., 9495

வரையறு தேற்றம் உடையரே யானும் வறுமையும் சிறுமையும் வெறுப்பும்
நிரைதரின் வெல்லார் தலைவரில் வழியும் நேர்ந்திடும் பகைவரை வெல்லார்.
— விநா. அரசி., 123

மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது — கொன்றை., 73

தலைவன் நிற்கத் தண்டு நிற்கும்; தலைவன் மயங்க சர்வமும் மயங்கும் — பழ.,

## 77. படைமாட்சி

| | உறுப்பமைந்து | உலைவிடத்து | ஒலித்தக்கால் | அழிவின்று | கூற்றுடன்று | மறமானம் | தார்தாங்கிச் | அடற்றகையும் | சிறுமையும் | நிலைமக்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 1 | 6 | 8 | 2 | 5 | 3 | 4 | 7 | 10 | 9 |
| பரிதி. | 10 | 9 | 8 | 1 | 2 | 3 | 4 | 6 | 5 | 7 |
| பரிப். | 1 | 6 | 9 | 2 | 5 | 3 | 4 | 8 | 7 | 10 |
| காளி. | 4 | 9 | 7 | 1 | 10 | 2 | 8 | 6 | 3 | 5 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

77 - வது அதிகாரம் 'படைமாட்சி' முற்றிற்று.

# 78. படைச்செருக்கு

அ) மணக்.: படைச்செருக்காவது படையினது வீரியம்[1] கூறுதல். இது படைக்கு இன்றியமையாமையின், அதன்பின் கூறப்பட்டது.

ஆ) பரிதி .: படைச்செருக்காவது படையின் வெற்றிப்பாடு கூறுதல் எ-று.

இ) பரிப்.: படைச்செருக்கு ஆவது படையினது வீரியம் கூறுதல். இது படைக்கு இன்றியமையாதது ஆயினமையின் அதன் பின் கூறப்பட்டது.

உ) பரிமேல் .: அஃதாவது அப்படையது மறமிகுதி. அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

ஊ) கவிராசர் : அஃதாவது,- அந்தச் சேனையினுடைய மிக்க வீரத் தனத்தைச் சொல்லுகிறது.

ஏ) பழைய 2 : அஃதாவது, படை போர் செய்யும் வகை,

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

தேவநேயர் படையின் மற மிகுதி.

இராம. 'படை எடுப்பதற்குமுன் எச்சரிக்கை செய்தல், எதிர்ப்ப -வரையன்றி முதுகிட்டவர்கள் மேல் அம்பு எய்யாமை, அரசற்காக

1. வீரியம் — வன்மை

உயிர்விடும் தியாகபுத்தி. முதலான வீரத்தன்மைகள்' என்பர்.

வரத. 'அஞ்சாநெஞ்சமும் வீரமும் கொண்டிருத்தல்' என்பர். சி.இ. 'படையின் வீர மிகுதி'.சாமி-சிதம். 'படையினது சிறந்த வீரம் என்பர்.

'செருக்கு' என்பது தன்தன்மையை மிகுத்து எண்ணிக் கொள்வதால் விளையும் தீயகுணம். இதனைப் பெருமை, களிப்பு, முதலிய நற்குணம் என்று இலக்கிய உலகு எடுத்தாளுகிறது. செருக்கால் விளையும் பயன் கருதியே அது நன்மையும் தீமையுமாகத் தனிக்கப் பெறுகின்றன. ஈண்டு ஆசிரியர் படைகட்கு இருக்க வேண்டிய இன்றியமையாதகுணம் என்ற பொருளிலேயே ஆளுகின்றார். படைவீரர் செய்ய வேண்டியது செரு. அது செருக்காற்றானே விளையும். ஆதலால் செருவிற்கு இன்றியமையாத செருக்கிளைக் கூறுவது படைச் செருக்கு என்க,

78.1. *என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை*
*முன்னின்று கல்நின் றவர்.* (771)

**உரைப்பகுதி!**

அ) மணக்.: என்னுடைய ஐயன் முன்னர்ப் பகைவீரரே; நில்லாது ஒழிமின்; முன்னாள் இவன் முன்னே நின்று, கல்லிலே எழுதப்பட்டு நிற்கின்றார் பலராதலால் எ-று.

இஃது எளியாரைப் போகச்சொல்லி, எதிர்ப்பாரோடு பொர வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: என்முன் நில்லாதீர்கள் வீரர்காள்! முன்னே என்முன்நின்றுபட்டுச்[1] சிலையிலே பலர் பிழைத்ததைக் கண்டீரில்லையோ என்பன் வீராதி வீரன் எ-று.

இ) பரிப்.: என்னுடைய அரசன் முன்னர்ப் பகைவீர்! நில்லாது

1. பட்டு - இறந்து

ஒழிமின் : முன் நாள் இவன் முன்னே நின்று கல் எழுதப்பட்டு நின்றார் பலர் ஆதலான் எ-று.

இஃது எளியாரைப் போகச் சொல்லி எதிர்ப்பாரோடு பொர வேண்டுமென்றது.

ஈ) காளி.: வறிதே என்முன் வந்து நில்லன்மின் தெவ்வீர்காள்: என்னை எனின், முற்பட மதியாது' என் முன் வந்து நின்று, பிற்படக் கல்லுருவாகி நின்றார் அளவிறந்த வீரர்ஆகலான் எ-று.

உ) பரிமேல்.: பகைவீர்! இன்றினூங்கு[2] என் தலைவனெதிர் போரேற்று நின்று அவன் வேல்வாய் வீழ்ந்து, பின் கல்லின் கண்ணே நின்றவீரர் பலர், நீவிர், அதன்கண் இன்றி நும்உடற் கண் நிற்றல் வேண்டின், என் தலைவனெதிர் போரேற்று நிற்றலை ஒழிமின்.

'என்னை' எனத் தன்னோடு தொடர்புபடுத்துக் கூறினமை யின், அவன் வேல்வாய் வீழ்தல் பெற்றாம். கல்—நடுதல். ''நம்பன் சிலைவாய் நடக்குங்கணை மிச்சி லல்லால், அம்பொன் மணிப்பூணரசும் இலை''[3] எனப் பதுமுகன்[4] கூறினாற்போல ஒருவீரன் தன் மறம் அரசன்மேல் வைத்துக் கூறியவாறு. இப்பாட்டு நெடுமொழிவஞ்சி.[5]

ஊ) கவிராசர்: பகைவர்களே! என் தலைவன் எதிரிலே நின்று அவன் வேலின் வாயிலே விழுந்து பிறகு கல்லின்கண் நின்ற வீரர் அனேகம் பேர் உண்டு. நீங்கள் உங்கள் உடலிலே பிராணன் இருக்கவேண்டினீராகில், என்னுடைய தலை வனுடனே சண்டை பண்ணுகிறதை விடுங்கள் எ—று.

2. 'இன்றிங்கு' என்றும் பாடமுண்டு 3. சீவக.,809

4. பதுமுகன் - சீவகனது நண்பன்

5. நெடுமொழிவஞ்சி - ஒரு வீரன் தனது பகைவர்கண் சென்று தனது வீரத்தைச் சிறப்பித்துச் சொல்லுதல். இது தன்மேம்பாட்டுரை எனப்படும். புறப்பொருள் வெண்பாமாலையில் இதற்கு எடுத்துக்காட்டாக 'இன்னர்என வேண்டா' என்ற செய்யுளை நோக்குக

ஏ) பழைய 2: செருக்களத்தில் அரசனை வெல்லச் சில வீரர் வரும்போது அரசன் முன்னின்ற ஒரு வீரன் கூறுதல்: என்னுடைய அரசன் முன்னே நிற்க வேண்டாம் பகைவரே: நும்மைப் போற் பலர் வந்தென் அரசன் முன்னே நின்று கன்[6]முன்னே நின்றவர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

ஒருவீரன் எதிர்த்த வீரர்கள் பலரை நோக்கி எச்சரிக்கும் போக்கில் தன்வலிகூறிச் செருக்கினையறிவிப்பதுபோல அமைந்துள்ளதுஇக்குறள்.

மணக்குடவர் இங்ஙனம் கூறுவதன் நோக்கம் 'எளியாரைப்போகச் சொல்லி எதிர்ப்பாரோடு பொருதல்' என்பர். இங்ஙனம் மொழிகேட்டு அகல்வார் படைக்கு வாரார் ஆதலால் இதனான் மிக்க பயன் இன்றாம்.

இக்குறட்பாவிற்கு உரைகாணும் முறையில் மணக்., பரிமேல்., கவிராசர், பழைய 2, தேவநேயர், மு.ரா. அரு., கா.சு., சி.இ., சபாபதி முதலிய அனைவரும், 'என் + ஐ × முன் நில்லன்மின்' எனச்சொற்சிதைவு செய்து, என் தலைவன் எதிர் நில்லாதீர்கள்' என்றுரைகண்டு, அரசனையும் தன்னோடு பகுத்துக் கூறியதால் 'அவன் வேல் வாய் வீழ்தல் பெற்றார். எனவும், ஒருமறவன் தன் தலைவன் மேல்வைத்த அன்பால் தன் மறத்தையும், தன்படைஞர் மறத்தையும் அரசன் மேலேற்றிக் கூறியது எனவும், நயமும் காட்டுவர். பரிமேலழகர் இப்பாட்டு நெடுமொழிவஞ்சி எனவும் புறத்துறை காட்டுவர்.

பரிதி காளிங்கர் இருவரும் 'என்முன் நில்லாதீர் வீரர்காள்!' வறிதே என் முன் வந்து நில்லாதீர் தெவ்வீர்காள்!, என வீரன் கூறுவதாக உரை காண்பர்.

வரத தன் கணவன் ஆற்றலை அவன்மனையாள் கூறுவதாகக் கருதி 'அவன் மனைவி பகையினருக்குக் காட்டிக் கூறுகிறாள்' என்பர். இவர் எண்ணம் 'கன்னின்றான் எந்தை கணவன் களப்பட்டான்'' என்ற பு.வெ. 176) ஏறாண்முல்லையில்

6. கன்-நடுகல்

மேனோக்காக ஓடியிருக்கிறது. அதனால் எண்ணாது வீரன் கூற்றை மனைவி கூற்றென மயங்கினர் என்க. இது கணவனை யிழந்தாள் கூற்று ஆதலைச் சிந்தித்து விடுக்க.

பரிமேலழகர் முதலிய பெரும்பான்மையோர் வீரன் தன்னரசனாற்றல் உரைப்பதாகக் கூறியதோ அதுவும் பொருந்தாதாம். எனெனின். துறை 'நெடுமொழிவஞ்சி' என்கிறார். நெடுமொழிவஞ்சி "ஒன்னாதார் படைகெழுமித் தன்னாண்மை எடுத்துரைத்தன்று" என்று 'என்னோடு எதிர்சீறிவரின் விண்அடைகுவார்' (பு.வெ.47) என வீரன் கூற்றாகவே கூறுகிறது தொல்காப்பியம். (தொல். பொருள். இளம். நூற்பா 63) சீர்சால் வேந்தன் சிறப்பெடுத்துரைத்தலைத் தனியொரு துறையாகவும் கூறுகிறது. வள்ளுவத் தினிலக்கணம் தொல்காப்பியமே யாதலின் வீரன் கூற்றாகக் கோடலே இயைபு எனத் தோன்றுகிறது. அன்றியும் "வேந்தன் சிறப்பெடுத்துரைத்தலாயின் அதனைப் பொதுவியலிற் கூறலாகாதென்றுணர்க" என மறுப்பர் நச்சினார்க்கினியர். (தொல். பொருள். நச்சி. நூற். 60 உரை) ஆகவே இக்குறட்பாவை தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலாகிய வஞ்சியாகக் கொண்டுவீரன் கூற்றாகக் கோடலே இயைபும் ஏற்றமும் உடையது.

அஃங்ஙனமாயின் 'என்னைமுன் நில்லன்மின்' என்னை முன்நின்று' என்ற தொடர்க்குப் பொருள் கோடல் யாங்ஙனமெனின், "செய்யவள் தவ்வையைக் காட்டி விடும்" (குறள் 167) "அறிவுடையந்தணன் அவளைக் காட்டென்றானோ" (கலி. மருதம்.7) என்பன போன்று 'தவ்வைக்கு' அவளுக்கு 'என்றாற் போல' 'எனக்குமுன் நில்லன்மின்' 'எனக்குமுன் நின்று' என்று 'தடுமாறு உருபுகள் தாஞ்சிலவுளவே' என்பதாற் போந்ததாகக் கோடலே நெடுமொழிக்குப் பொருந்துவதாம். சிந்திக்க.

ஓ ஒப்புமைப்பகுதி :

என்னை முன் நில்லன்மின் தெவ்விர்:
களம்புக லோம்புமின் தெவ்வீர் — புறம்., 87:1

என்னைநேர் நின்று வாழ்த லிருநிலத் தாவ துண்டே
—சீவக., 1114

முற்றும் ;

போற்றுமின் மறவீர் சாற்றுதும் நும்மை
ஊர்க்குறு மாக்கள் ஆடக் கலங்கும்
தாட்படு சின்னீர்க் களிறட்டு வீழ்க்கும்
ஈர்ப்புடைக் கராஅத் தன்ன என்ஐ. —புறம், 104:1-4

யாரே னுந்தா னாகுக யானென் றனியாண்மை
பேரே னின்றே வென்றி முடிப்பென் புகழ்பெற்றேன்
நேரே செல்வென் கொல்லு மெனிற்றான் நிமிர்வென்றி
வேரே நிற்கும் மீள்சில தென்னா மிடலுற்றான் —கம்ப., 9979

ஒ) மேற்கோள்பகுதி :

இளம்.: அரும்பகை தாங்கும் ஆற்றலுக்கு மேற்கோள்.
—தொல். பொருள்.,75

என்னை என்ற முறைப்பெயர் அகத்திற்கே அன்றி புறத்திற்கும் வரும் எனக் கூறி, இதனை மேற்கோள் காட்டுவர்.
—தொல். பொருள்., 242

நச்சி.: ஷை —தொல். பொருள் ,247

மயிலை.: ரவ்வீற்று உயர்திணைப்பெயர் விளி ஏற்குங்கால் ஈற்றயல் அகரம் இகரமானதற்குத் தெவ்விர் என்பது மேற்கோள்
—நன்.,308

சங்கர.: ஷை —நன்.,309

சிவஞான.: என்னை என்பது என்னுடைய தலைவன் எனப் பொருள்படும் என்பதற்கு மேற்கோள். —எடுத்.வைரக்.பக்.,66

ரவ்வீற்று உயர்திணைப்பெயர் ஈற்றயல் அகரம் இகரமாகி விளிப்பொருள் ஏற்றதற்கு மேற்கோள். — நன்.,309

'நின்மறங்கூறும் குழாத்தர்' என்பதன் உரையில், வீரர் தம் தலைவரது வீரத்தையே எடுத்தோதி மேம்படுத்தல் இயல்பு.

இதனை 'என்னைமின் நில்லன்மின்' என்று வீரர் தம் தலைவனது சிறப்பினை கூறும் குறளிற் காண்க. —பதிற்று.,49.

78.2. கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது. (772)

உரைப்பகுதி :

அ) மணக். : வீரர்க்குக் காட்டகத்து முயலைப்பட எய்த அம்பினும், யானையைப் பிழைக்க எறிந்த வேலை ஏந்துதல் இனிது எ-று.

இது மேலதற்குக் காரணமாகக் கூறப்பட்டது.

ஆ) பரிதி. : முயலை எய்த அம்பிலும் யானையைப் பிழைக்க எய்த வேல் ஏந்தல் இனிது. யானை பிழைத்த வேல் விசேஷமானாற்போல ஆயிரம் சேவகரில் ஒரு சுத்த வீரன் விசேஷம் எ-று.

இ) பரிப் : காட்டகத்து முயலைப்பட எய்த அம்பினும் யானையைப் பிழைக்க எறிந்த வேலை ஏந்துதல் இனிது வீரற்கு எ-று.

இது மேலதற்குக் காரணமாகக் கூறப்பட்டது.

ஈ) காளி. : ஒருவன் காட்டிடத்து முயலினைப் பட்டுக் கழலுமாறு[1] எய்த அம்பினின் போர்க்களத்து ஒருவன் ஒரு களிற்று யானையைக் குறித்து எறிந்து இலக்குப்[2] பிழைத்த வேலினை எடுத்து ஏந்திக்கொள்ளுதல் பெரிதும் இனிது எ-று.

உ) பரிமேல். : கானத்தின்கண் ஓடும் முயலைப் பிழையாமலெய்த அம்பை ஏந்தலினும், வெள்ளிடை நின்ற யானையை எறிந்து பிழைத்த வேலை ஏந்துதல் நன்று, எ-று.

'கானமுயல்' என்றதனால் வெள்ளிடை நின்ற என்பதும், 'பிழைத்த' என்றதனால் பிழையாமல் என்பதும், முயற்குத் தக

1. கழலுமாறு - ஊடுருவுமாறு
2. இலக்கு - குறி

'எய்த' என்றதனால் யானைக்குத் தக எறிதலும் வருவிக்கப் பட்டன இது மாற்றரசன் படையொடு பொருதானோர் வீரன் அது[3] புறங் கொடுத்ததாக நாணிப் பின் அவன்றன்மேல் செல்ல லுற்றானது கூற்று.

ஊ) கவிராசர் : காட்டிலே திரிகிற முயலை யெய்து கொன்ற அம்பை ஏந்தலினும், யானையை எய்து தப்பிப்போன வேலை ஏந்துதல நன்று, (எ-று.)

ஏ) பழைய 2 : கானின்கண் ஓடும் முயலைப் பிழையாமல் எய்த அம்பை ஏந்தலினும், வெள்ளிடை நின்ற யானையை எறிந்து படாமற் பிழைத்த வேலை ஏந்துதல் இனிது.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறட்கண் வரும் 'இதுமேலதற்குக் காரணமாகக் கூறப்பட்டது' என்ற மணக்குடவர் குறிப்பும், அடுத்துவரும் 'பேராண்மை' என்னுங்குறளில் "உலகியலாவது எளியார் மேற் செல்லாமை; அதாவது அடராமை" என்ற குறிப்பும் இயைபு டையன அல்ல என மறுப்பர் சில விளக்கப்பதிப்பாளர்கள். அவ்வுரையாசிரியர் கொண்ட குறள் முறைவைப்பிற்கு அவர்கள் குறிப்பு இயைபுடையனவே.

பரிமேலழகர் பெரும்பாலும் மணக்குடவரையும் பரிப்பெருமாளையும் தழுவியே உரை எழுதுவராதலின், பரிப்பெருமாள் தந்த குறிப்பே 'வீரன், படை புறங் கொடுக்க நாணி, அப்படைமீது செல்லாது, அப்படையையுடைய மாற்ற சன் மேற்செல்லலுற்றானது கூற்று' எனப் பரிமேலழகரைச் சொல்லச் செய்திருக்கிறது. பரிமேலழகர் குறிப்பை மேலோட் டமாகப் பார்த்த குறிப்பாசிரியர் ஒருவர் 'வலியிழந்தான் மேற் செல்லாது, இழவாதான் மேற்செல்லுமவன் வார்த்தையாதலால் இப்பாட்டுத் தழிஞ்சி' என்றார். அதனையப்படியே படியெடுத்த விளக்க ஆசிரியர் ஒருவர் பரிமேலழகர் உரைப்போக்கை

3. அது - மாற்றரசன் படை

உற்றுநோக்காது, அவரும் 'தழிஞ்சி' என்றார். ஆசிரியர் தொல்காப்பியனார் கூறும் தழிஞ்சி 'அழிபடை தட்டோரைத் தழுவிக்கோடலாக' வஞ்சியாக, புறப்பொருள் வெண்பாமாலையார் கூறும் வஞ்சித் தழிஞ்சி, 'கண்டோர் கூற்று' என்பதனை அதன் உரையாசிரியர் சொல்வதாற் பரிமேலழகர் தழிஞ்சியென்ற பெயராற் சுட்டாது 'வீரன் கூற்று' என்று மட்டும் கூறவும் இவர் தழிஞ்சியென்றது ஆழங்காற்படாமையின் விளைவாம் என்றொழிக.

பரிதி. பிறிதுமொழிதலுக்கு விளக்கமாக 'யானை பிழைத்த வேல் விசேஷ மானாற்போல, ஆயிரம் சேவகரில் ஒரு சுத்த வீரன் விசேஷம்' என்றதும் இவ்வணிக்கு நேரே இயைபுடைய விளக்கமாகாது.

காளிங்கர் கருத்து 'எளியோரை எதிர்த்துக் கொல்லுதலும், வலியோரை எதிர்த்துத் தப்பவிடுதலுமாகிய இரண்டுமே படைச்செருக்காகாவாயினும் முன்னதிற் பின்னது ஓரளவு சிறந்ததாய்ச் செருக்காம்' என்பது.

இதனை முதற்குறள்போல ஒருவீரன் கூற்றாகக் கொள்ளாது, ஆசிரியர் கூறும் செவியறிவுறூஉவாகக்கோடலே சிறப்பு.

ஆசிரியர் வள்ளுவனார் 'கானமுயல்' 'எய்த' 'அம்பு'[3] என்ற சொற்களால் காட்டுச்சாரோடுங் குறுமுயல் என்பதையும், அதனை எட்டிப் பிடிக்கவும் செய்யலாம், ஆனால் அது தப்புமாதலின் அம்பு எய்தான் என்பதும் அம்பு சேய்மைக்கண் இருப்பதன் மேல் எய்யப்பெறுவது ஒருகருவி என்பதும் பெறவைக்கின்றார். அங்ஙனமே முற்கூறிய அடைகளின் எதிர்ப்பொருளாகக் 'களிறு' என்றதால் ஆண்மையும் அஞ்சாமையும், நடைமலையாய் வெற்றிடை நிற்பது என்பதும் அம்பு சென்றிறுப்பின் அரும்புண் தாங்காது பயிற்சியான் எதிர்த்துப் பெரும் உளம்படைத்தது என்பதும் அதன்மேல் எறியப் பெற்ற வேல் அதன்மேல் தையாது தப்பினும் அதுவும் வீரனுக்குச் செருக்குப் பயக்கும் என்பதுமாய நயங்களைத் தெரிவிப்பன.

இதனைப் பிறிதுமொழிதலணியென வை.மு.கோ.வும், உரைவளப்பதிப்பின் குறிப்புரையில் அடியேனும் எம்மைப்

பின்பற்றிப்பின் வந்த விளக்க உரையாசியர்களும் எழுதினர். ஆனால், தண்டியலங்காரத்து இவ்வணி உவமப்போலி பிறிதுமொழிதல், நுவலாநுவற்சி எனவும் படும் என்றும் மாறனலங்காரம் இவ்வணி பொருள் முதலான ஆறுகூறு பாடுடைத்தென்றும் வகைகூறுவதில் வேறுபடுகின்றன. இலக்கணங்கூறும் வகையிலும், புலவன் குறித்த பொருளை மறைத்து அதுகற்றுவல்லோர்க்குப் புலப்படும்படி அதற்குஒத்த பிறிதொன்றைக் கூறுவது என மாறனலங்காரமும, கருதிய பொருளைத் தொகுத்து அது புலப்படுதற்கு ஒத்தவொன்றுரைப்பது எனத் தண்டியலங்காரமும் கூறுகின்றன, இரண்டும் ஒத்த கருத்தன. இருநூலும் கவிஞர்கள் கூற்றாகவே கொள்கின்றன ஒட்டாற்பெறப்படும் வீரன் கூறுவதாயின் அது ஒட்டோ பிறிதுமொழிதலோ ஆகாது என்பது உறுதி. ஆகவே பின்வரும் குறட்பாக்கள்போல வள்ளுவர் கூற்றாகக் கொள்வதே சிறப்பு. வீரன் கூற்றாகக் கொள்ளுதல் புறத்திணையியல், புறப்பொருள் வெண்பாமாலை மரபன்று. ஆகவே அதன் நிலைக்களங்கருதிப் பிறிதுமொழிதல் என்பதும் சிந்திக்கத்தக்கது எமது உரைவளப்பதிப்பிலும் இப் பிழைநேர்ந்துள்ளது. திருத்திக்கொள்க.

ஔ) ஒப்புமைப்பகுதி :

முற்றும்-ஒருபுடை :

இசையு மெனினும் இசையா தெனினும்
வசைதீர எண்ணுவர் சான்றோர்-விசையின்
நரிமா உளம்கிழித்த அம்பினில் தீதோ
அரிமாப் பிழைப்பெய்த கோல். —நாலடி.,152

நடம்பயில் எந்தை மங்கை நாணினால் வருந்தினாள் என்று
அடைந்தருள் சொல்வன் ஞால மலைக்குமம் மாயை சூளான
நெடுந்தகை முன்னம் சென்ற நிலையேநன் றாடுகொல்வோன்
மடங்கல்முன் வெல்வேன என்று வருதலே யாற்றலன்றோ.
—பிரபு.வசவண்.,32

78.3. பேராண்மை என்ப தறுகணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு. (773)

**உரைப்பகுதி:**

மணக்.: ஒன்று உற்றக்கால் அஞ்சாமையை ஒருவனுக்குப் பெரிய ஆண்மை என்று சொல்லுவர்; உலகியலறிந்து செய்தலை அவ் வாண்மைக்குப் படைக்கலம் என்று சொல்லுவர் எ-று.

ஆ) பரிதி.: செருவிடை வேண்டியகாலையில்[1] சுத்த வீரன்[2] விசேஷம். அது பேராண்மை; சுத்த வீரரில் வீராதிவீரன்[3] விசேஷம் அவன் வீரன் எ-று.

இ) பரிப்.: ஒருவனுக்குப் பெரிய ஆண்மை என்று சொல்லுவார்-ஒன்று உற்றக்கால் அஞ்சான் ஆதலை: அவ்வாண்மைக்குப் படைக் கலம் என்று சொல்லுவர் உலகு இயல் அறிந்து செய்தலை எ-று.

உலகியல் அறிதல்-தனக்கு எளியார் மேல் செல்லாமை இது வீரம் செய்யுங்கால் எளியாரை அடராமை வேண்டும் என்றது.

ஈ) காளி.: படை மக்கள் தமக்கு எப்பொழுதும் இயல்பு ஆகிய மிகவும் பெரிய ஆண்மை என்று சொல்லுவர் உலகோர்; யாதி னை எனின்? பகை வந்து உற்ற இடத்துப் பண்டை ஆண்மையை மிகவும் கூர்க்கப்பிடித்து [4]அடர்த்து எதிர் நடத்தல் கூர்மை யாவது எ-று,

உ) பரிமேல்.: பகைவர்மேல் கண்ணோடாது[5] செய்யும் மறத்தை நூலோர் மிக்க ஆண்தன்மை என்று சொல்லுவர், அவர்க்கு[6] ஒரு தாழ்வு வந்ததாயின் கண்ணோடி அது[7] தீர்த்துக்

1. செருவிடை வேண்டிய காலையில்-போரில் விரும்பியபோது
2. சுத்த வீரன்-உண்மையான வீரன்
3. வீராதி வீரன்-மிக்க வீரமுடைய வீரன்
4. மிகவும் கூர்க்கப் பிடித்து-மிக மிகுதியாகப் பிடித்து, கூர்க்க என்பது கூர் என்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்த செயவெனெச்சம்
5. கண்ணேடாது-தாட்சணியம் கொள்ளாமல்
6. அவர்க்கு-பகைவர்க்கு 7. அது-தாழ்வு

கோடற் பொருட்டு ஊராண்மை செய்தலை நூலோர் அதற்குக்[8] கூர்மை என்று சொல்லுவர், எ-று.

'என்ப' என்பது பின்னும் இயைந்தது. ஊராண்மை உபகாரியாந்தன்மை[9]; அஃதாவது இலங்கையர் வேந்தன்[10] போரிடைத் தன் தானை முழுவதும்படத் தமியனாய் அகப்பட்டானது நிலைமைநோக்கி, அயோத்தியரிறை[11] மேற்செல்லாது 'இன்று போய் நாளை நின் தானையோடு வா' என விட்டாற்போல்வது. இவை இரண்டு பாட்டும் தழிஞ்சி.[12]

ஊ) கவிராசர் : பகைவர் எதிர்த்தபோது அவர்கள் பேரிலே தயையில்லாமற் செயிக்கிறதையே பெரிய வாண்மை என்று சொல்லுவர்:அந்தப் பகைவர்க்குத் தாழ்வு வந்த போது அவர்கள் மேலே தயைவைத்து அந்தக் குறையைத் தீர்க்கிறது அந்த ஆண்மைக்குக் கூர்மை என்று சொல்லுவர் எ-று.

ஏ) பழைய 2: பகைவரிடத்துக் கண்ணோட்டமில்லாமல் வெட்டி வெல்லுந்தறுகண்மையை நூலோர் மிக்க ஆண்டகைமையென்று சொல்லுவர். அப்பேராண்மை யுடையவர்க்கு ஒரு தாழ்வு வந்தால் அதனைப் பகைவரிடத்துச் செய்யும் உபகாரமாம்; அது, அப்பேராண்மைக்குக் கூர்மையாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

மணக். 'ஒன்று உற்றக்கால் தறுகண் பேராண்மை என்ப; ஊராண்மை அதன் எஃகு (என்ப)' எனக் கூட்டிப் பொருள் கண்டுள்ளனர்.

மணக்குடவரும்பரிப்பெருமாளும்'உறின்உயிரஞ்சா'என் பதனை அடுத்து இக்குறட்பாவை வைத்தமையின் அதற்கு ஏற்ப

---

8. அதற்கு—கண்ணோட்டத்திற்கு
9. உபகாரத்திலே ஊர் முழுவதும் வயப்பட்டு ஏவல்கேட்குமாதலின் உபகாரியாந் தன்மையை ஊராண்மை என்றார்
10. இலங்கையர் வேந்தன்—இராவணன்
11. அயோத்தியர் இறை—இராமன்
12. தழிஞ்சி—782ம் குறளின் தொகுப்பும் குறிப்பும் காண்க

'ஒன்று' 'உலகியல்' என்று பொருள் காண வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டுள்ளது.

'பரிதி. ஒன்று-செரு அதாவது; போரொன்று வந்தபோது என்றும், தறுகண்-சுத்தவீரத்தையுடையவன்' என்றும் கொண்டு ஏனையவற்றைக் கருத்துப் பொருளாகக் கொண்டனர்.

காளிங்கர் 'ஒன்று-பகை'. 'கூர்க்கப் பிடித்து' என்பதால் 'கூராண்மை' எனப்பாடங் கண்டிருப்பர் எனத்தோன்றுகிறது. இங்ஙனம் கொண்டு ஒன்று உற்றக்கால்-பகை வந்துற்றஇடத்து. கூர் ஆண்மை-(பண்டைய ஆண்மையை மிகவும்) கூர்க்கப்பிடித்து (அடர்த்து எதிர் நடத்தல்) அதன் எஃகு - அதன் கூர்மையானது என வேண்டியபல சொல்வருவித்து உரை கண்டிருப்பர் என இயைத்து எண்ணலாமோ? சிந்திக்க. பகை நேர்ந்துழி எதிர்த்து அடர்த்தல் பேராண்மை என்பர் உலகர் என்பது இவர் கருத்தாகும்.

பரிமேலழகர் பகைவர் மேற்செலுத்தப்பெறும் மறம் பேராண்மை. பகைவர்க்கும் ஒரு தாழ்வுவரின் கண்ணோடி ஊராண்மை செய்தல் அத்தன்மையின் கூர்மைஎன்னும் கருத்தினர் பகைவனாயினும் தாழின் உதவுக என்பது. இவரை ஒத்தே கவிராசர் முதலிய இருவரும் தேவநேயரும் உரைப்பர்.

மு.கோ. 'இராணுவ ஆட்சியினும் குடியாட்சி சிறந்தது.' எனக் கருத்துக் கொணர முயலுகிறார். மு. ரா. அரு. 'ஒன்று-ஒருதாழ்வு அல்லது குறை. ஊராண்மை-உபகாரியாந்தன்மை. கூர்மை- (விளக்கம்)' என்பர். இவருரை பரிமேலழகர் உரைக்கு மிகத் தெளிவான விளக்கம் போல்வது.

இராம. : 'பேராண்மை அச்சமற்ற தன்மையே அவசியம். நேர்ந்தால் போர்புரிந்து வெல்லுதல் பேராண்மைக்கு ஒரு கருவி. ஊராண்மை-போர்செய்யும் படைச்செருக்கு என்பர். இவரதுரை நன்கறிந்து கருத்தமைதி காண்டாலும் அரிதாகவுள்ளது வரத. ஏனைய பகுதியில் பரிமேலழகரை ஒத்திருப்பினும் 'எஃகு-முதிர்ந்த பயன்' எனப் பொருள் காண்பர். இரக்கங்காட்டுதல் வேறு; கண்ணோட்டம் வேறு; கண்ணோட்டம் ஒத்தார் ஒரு-

நிலையில் துன்பப் படும்போது அவர்பாற் செயத்தகும் பெருமி-தமான உதவி. இரக்கம் காட்டல். நிலையிற்றாழ்ந்த போது அவன் மாட்டுக்காட்டும் பரிவு. இராமன் காட்டியது கண்ணோட்-டம். இது படைச்செருக்கு ஆகும்.

எய்தற்கரியதியைந்தக்கால் அந்நிலையே செய்தற்கரிய செய்ய வேண்டியிருக்க, அங்ஙனம் செய்யாது கண்ணோடிச் சோர விடுதல் தோல்வியாமே என்ற ஐயம் அகற்ற, மாற்றான் சோர்ந்தவிடத்துக் கண்ணோட்டம் காட்டல் செருக்கு என்றதாம். 'கண்ணோட்டத்துள்ளது உலகியல்' (குறள் 572) என்ற ஆசிரிய வசனமும், ஊராண்மைக்கு உபகாரியந்தன்மை' என்ற பொருளே சிறந்தது என்பதை விளக்குகிறது.

இவ்வுரைகளில், 'ஒன்றுற்றக்கால்' 'ஊராண்மை' எஃகு என்ற சொற்களுக்குப் பொருள் காண்பதில் மாற்றம் விளைந்-திருக்கிறது. இவையனைத்தினும் பரிமேலழகர் உரையும் அதன் விளக்கமும் சிறந்துள்ளன.

ஓ) ஒப்புமைப்பகுதி:

தறுகண் பேராண்மை என்ப :

எய்த்திடத் திடர் செய்தோன்... ... ... ... —கம்ப., 2293

ஒன்று உற்றக்கால் ஊராண்மை அதன் எஃகு :

எளியோர் உயிர்கோடல் நீதியன்றால் —கம்ப., 5699

முற்றும் :

தெற்றப் பகைவர் இடர்ப்பாடு கண்டக்கால்
மற்றுங்கண் ணோடுவர் மேன்மக்கள்—தெற்ற
நவைக்கப் படுந்தன்மைத் தாயினும் சான்றோர்
அவைப்படின் சாவது பாம்பு. —பழ. நா., 87

நிறப்பெரும் படைக்கல நிறத்தின் நேருற
மறப்பயன் விளைக்குறும் வன்மை யன்றரோ
இறப்பினுந் திருவெலா மிழப்ப வெய்தினும்
துறப்பில ரறமெனல் சூர ராவதே. —கம்ப., 1958

படைது றந்து மயங்கிய பண்பினோன்
இடைபெ றுந்துயர் பார்த்திக னீதியின்

நடைது றந்துயிர் கோடலு நன்மையோ
கடைது றந்தது போரென் கருத்தென்றான். —கம்ப. ,10017

அன்றுபோர்புரி சேனையின் பதியான வீரனைநீ
இன்றுபோ யினிநாளை வாவென இனிதியம்பினால்
வென்றிகூர் வரிவின்மையா லடல்வெவ் வரக்கரைமுன்
கொன்ற காளையை யொத்தபேரிசை கொண்டவாண்மையினான்
—வில்லிபாரதம்.,

78.4. *கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்*
*மெய்வேல் பறியா நகும்.* (774)

உரைப்பகுதி :

அ) மணக். : தன் கையிலுள்ள வேலைக் களிற்றின் உயிரோடே போக்கி, அதன்பின் கருவி தேடிச் செல்பவன், தன் மெய்யின்மேல் பட்ட வேலைப்பறித்துக் கருவி பெற்றேம் என்று மகிழும் எ-று.

இது வீரர் செயல் இத்தன்மையாதலால், புண்பட்டால் அதற்கு ஆற்றிப் பின்னும் போரின்கண் சாதல் அல்லது வெல்லல் வேண்டும் என்றது

ஆ) பரிதி : மதயானை கூடப் போர்செய்து கைவேல் பறிகொடுத்த வீரன், மெய்யிலேதைத்த வேலைப்பறித்து இந்தத் தறுவாயில் வேல் நேர்பட்டது என்று சிரித்துச் சலிப்பிலன் எ-று.

இ) பரிப். : தன் கையில் வேலை ஒரு களிற்றோடே போக்கி அதன் பின் கருவி தேடிச் செல்லும் அவன் தன் மெய்யின் மேல் பட்ட வேலைப் பறித்துக் கருவி பெற்றேம் என்று மகிழும் எ-று.

வீரர் செயல் இத்தன்மை யாதலால் புண்பட்டால் அதற்கு ஆற்றிப் பின்னும் போரின்கண் சாதல் அல்லது வெல்லல் வேண்டும் என்றது.

ஈ) காளி. : தனது கைவேலினை எதிர் வந்த களிற்றோடும் போக்கி மீண்டும் வருகின்ற வீரனானவன் தன் மெய்க்கண் வேறு

ஒருவன் எறிந்த வேலினைப் பறித்துக் கைக்கொண்டு நின்று சிரிக்கும் எ-று.

நகும் என்றது வெறுங்கையாளனை எறிந்தவன் என்ன வீரனோ என்று ஒரு நகையும், வெறுங்கைக்கு அம்மா! ஒரு வேல் வந்தது என்று ஒரு நகையும் என அறிக.

உ) பரிமேல். : தன்கைப் படையாய வேலைத் தன்மேல்வந்த களிற்றோடு போக்கி,வருகின்ற களிற்றுக்கு மேலநாடித்திரிவான், தன்மார்பின்கண் நின்ற வேலைக்கண்டு பறித்து மகிழும், எ-று.

களிற்றொடு போக்கல் - களிற்றினது உயிரைக்கொடுபோ மாறு விடுதல், மகிழ்ச்சி தேடியது எய்தலான் இதனுள் களிற்றை யல்லது எறியான் என்பதூஉம், சினமிகுதியான் வேலிடை போந்தது அறிந்திலன் என்பதூஉம், பின்னும் போர்மேல் விருப் பினன் என்பதூஉம் பெறப்பட்டன. நூழிலாட்டு[1].

ஊ) கவிராசர் : கையிலே இருந்த வேலைத் தன்மேல் வந்த யானையோடு போட்டுப் பின்னையும் வருகிற யானைக்குப்போட வேல்தேடுகிறவன், தன் மார்பிலே பட்டு உருவி இருக்கிற வேலைக்கண்டு பிடுங்கிக்கொண்டு சந்தோஷப்படுவன் எ-று.

ஏ) பழைய 2 : கைப்படையாகிய வேலைத் தன்மேல் வந்த களிற்றின் முகத்தின் எறிய அக்களிறு வேலோடுமோடிப்போகப் போக்கி, வருகின்றவன், மேல்வருங் களிற்றுக்கு வேல் நாடும் போது தன் மார்பின்கண் நின்ற வேலைக்கண்டு பறித்து மகிழும்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

காளிங்கர் உரையில் 'நகும்' என்றது 'வெறுங்கை யாளனை எறிந்தவன் என்ன வீரனோ என்று ஒரு நகையும், வெறுங்கைக்கு அம்மா ஒரு வேல் வந்தது என்ற ஒரு நகையும்' என அறிக' என்ற விளக்கம் எமது உரை வளப்பதிப்பிற்குக் கிடைத்த ஏட்டில் இல்லை. இது இடையிற் சேர்ந்ததாகவும் இருத்தல் கூடும். படைச்செருக்குப் பிறர் தவறு கண்டுழி நிகழும் இகழ்ச்சிச் சிரிப்பாகாது. தமக்கே யுரியதாகிய மகிழ்ச்சியேயாம். ஆதலால் வீரன் சிரிப்பு கருவி கிடைத்ததே என்ற சிரிப்புத்தான்.

1. நூழிலாட்டு - கொன்று குவித்தல். இதனை 'ஒள்வாள் வீசிய நூழிலும்' என்ற தொல். பொருள்.72:17-ஆம் வரியாலும், 'வேழப் பிழனத்து நூழிலாட்டு' என்ற மதுரைக் காஞ்சி157 — ஆம் வரியாலும் பிறவாற்றாலும் புரியலாம்.

கைவேலைப் போக்கிவருபவன் தன் மெய்யிற்பட்ட வேலையும் நோக்காது ஊறு உணர்விழந்து வீரவுணர்வுமிக்குக் கைவேலைக் களிற்றின் போக்கி வந்தான். பின் படையில்லாத நிலையில் எதிரி எதிர்ந்தால் அவன் படையிலாதான் மேற்போர் தொடுத்தல் ஆகாது ஒதுங்குவானே! என்று கவலையுற்றுவந்தவனுக்கு மெய் வேல் கையிற்பட்டது. பறித்தான் மகிழ்ந்தான் என்பதிலேதான் அவன் செருக்கு ஒளிமிகுகின்றது. ஆதலால் சூறவின் ஆழ நோக்கி அமைந்த உரைகளே சிறந்தன. அப்போது எனக்குக் கிடைத்த இரு பிரதிகளாலும் இப்பகுதி மிகைப்பாடம் என்றே துணியப்பெற்றன. அன்றியும் நகை நிலைக்களன் நான்கு .மேலும் வெறுங்கையாளனை எறிந்தவன் என்ன வீரனோ?என்றது இழிவு பற்றி பிறன்மாட்டுத் தோன்றிய நகை; மற்றொன்று தறுகண்மை பற்றி எழுந்த பெருமிதம். இரண்டும் மாறுபட்ட சுவையுணர்வு. ஒரு காலத்து ஒருள்ளத்தே தோன்றாதன. ஆகவே நகும் என்றது பெருமிதச் சுவையானியன்ற மகிழ்வேயாம். அதுதான் படைச் செருக்கும் ஆகும்.

மு.ரா.அரு. 'கைவேலைக்களிற்றின் மேற்போக்கினான் கையிற் கருவியில்லை. களிறொன்று வருகிறது. கருவியில்லா மையாற் கவலுகின்ற வீரன் எப்போதோ விடுத்த தன்மெய்வேல் கையிற்பட, அதனைப்பறித்து மகிழ்ந்தான்' என்பர். இவர் கூறும் நயமும் விளக்கமும் சிறந்தன.

தேவநேயர் 'பகைவர் தம்மீது விட்ட வேலையும் மற மிகுதியான் உணராதிருந்தான். உணர்ந்து பிடுங்கி கையில் வைத்துக்கொண்டு மகிழ்ந்தான்' என்பர்.

பரிமேலழகர் உரையின் இறுதிக் குறிப்பு இது 'நூழி லாட்டு' என்பது. இது தும்பைத்திணையின்துறை. களங்குழுமிய படையிரிய; உளங்கிழித்த வேல் பறித்தோச்சின்று' என்பது அதன் கருத்து. இக்குறள் கருத்தான் முற்றும் ஒத்தபின் 'நூழி லாட்டு' என்றார்.

ஓ) ஒப்புமைப்பகுதி :

கைவேல் களிற்றொடு போக்கி :

களிறெறிந்து முரிந்த கதுவாய் எஃகு —பதிற்று., 45;4

மெய்வேல் பறியா நகும் :

பூணேற் றகன்ற புடைகிளர் அகலத்துத்
தாமேற் றழுத்திய சத்தி வாங்கிப்
புரைசை உய்த்த பொருகழல் காலினர் —பெருங். 3:20:62-64

புண்ணிடம் கொண்ட எஃகம் பறித்தலின் —சீவக., 284

நெஞ்சகம் நுழைந்த வேலைப் பறித்து........ மிறைக் கொளீஇ
—சீவக., 2293

அள்ளினன் பறிக்குந் தன்பே ராகமே யாவ மாக
—கம்ப., 9280

மொய்யகத்து மன்னர் முரணினி என்னாங்கொல்
கையகத்துக் கொண்டான் கழல்விடலை - வெய்ய
விடுசுடர் சிந்தி விரையகலம் போழ்ந்த
படுசுடர் எஃகம் பறித்து. —பு. வெ., 142

மார்பிடையில் குறித்த பகழியை
வார்சிலையில் தொடுத்து விடுவரே —கலிங்., 436

கையில் வாளி தொலைந்தபின் காய்ந்துதம்
மெய்யில் வாளிகள் வாங்கிவில் வாங்கினார்
—வில்லி. முதற்போர்.,27

முற்றும் :

பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்
மேல்வரும் களிற்றொடு வேல்துறந்து இனியே
தன்னும் துரக்குவன் போலும் ஒன்னலர்
எஃகுடை வலத்தர் மாலொடு பரத்தரக்
கையின் வாங்கித் தழீஇ
மொய்ம்பின் நூக்கி மெய்க்கொண் டனனே —புறம்., 274

ஒ) மேற்கோள் பகுதி ;

இளம். : தானைநிலைக்கு மேற்கோள்.
—தொல். பொருள்., 72

நச்சி ; ஷ்
—தொல். பொருள்.,72

சங்கர: எழுத்துப் போலியுள் 'இச்செய்யுட்கண் தொடை நோக்கி ஐகாரம் நின்ற நிலைக்களத்துப் போலிவந்தவாறு காண்க,என்பர்.
—நன்., 125

சிவஞான.: 'ஐகாரக் குறுக்கம் மொழி முதற்கண் ஒன்றரை மாத்திரையாயும், ஏனையிடங்களில் ஒரு மாத்திரையாயும் குறுகும் என்பது உய்த்துணர்ந்து கொள்க. அவ்வாறு உய்த்துணர்ந்து கொள்ளாக்கால் 'கைவேல்.........நகும்' எனவரும் இலக்கியங்-களுக்கு இலக்கணம் இன்றாய் முடியும் என்க'. —நன்., 95

சுவாமி.: செய்விஎன் வினையுள் செய்வினை சிலவே என்பதற்கு மேற்கோள். —இ. கொ., 72

பெருந்.: வீரச்சுவைக்கு மேற்கோள் —வீர., 154

78.5. *விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்*
*ஒட்டன்றோ*[1] *வன்க ணவர்க்கு.* (775)

**உரைப்பகுதி :**

அ) மணக்.: மாற்றாரோடு எதிர்த்துச் சிவந்து நோக்கின கண்ணிலே ஒரு வேலினாலே எறிய, அதற்கு மீண்டும்இமைப் பாராயின், அஃது அஞ்சாதார்க்குக் கெட்டதனோடு ஒக்கும் எ-று.

விழித்தகண் என்பதற்கு மாற்றானை நோக்கி இமையாத கண் எனினும் அமையும்.

ஆ) பரிதி.: முகத்திலேவேல்படும் போது கண்ணிமைத்த தன்றே! அதுவும் வீரதத்துவத்துக்கு இழுக்காம் எ-று.

இ) பரிப்.: மாற்றாரோடு எதிர்த்துச் சிவந்து நோக்கின கண் ணிலே ஒருவன் வேலினானே, எறிய அதற்கு மீண்டும் இமைப் பர் ஆயின், இது கெட்டதனோடு ஒக்கும், அஞ்சாதார்க்கு எ-று.

---

1. ஒட்டன்றோ - ஓட்டு, ஓடுதல்; அதாவது முதுகுகாட்டி ஓடுதல்

விழித்தகண்-மாற்றாரை நோக்கி இமையாத கண் எனினும் அமையும். புண்பட்டால் ஆற்றார் ஆயின் கெட்டதனோடு ஒக்கும் என்றது.

ஈ) காளி. : தாம்கூர்த்து நோக்கிய இடத்தே மற்றை எதிர்ந்தோர் தம்கைக்கொண்ட வேலினைத் தம்மீது எறியப்பெற்று வைத்து, அதனைத் தலையழித்து[2] அப்பொழுது இமைப்பர் ஆயின், இமைத்தவர்க்கு முன்சொன்ன தறுகண்மையானது யாதும் இல்லை எ-று.

உ) பரிமேல். : பகைவரை வெகுண்டுநோக்கிய கண், அவர்[3] வேலைக்கொண்டு எறிய, அஃதாற்றாது அந் நோக்கை அழித்து இமைக்குமாயின், அது வீரர்க்குப் புறங்கொடுத்தலாம், எ-று.

அவ்வெகுளிநோக்கம் மீட்டலும்[4] போரின்கண் மீட்சி எனக்கருதி அதுவும்[5] செய்யார் என்பதாம்.

ஊ) கவிராசர் : பகைவரைக் கோபித்துக்கொண்டு பார்த்த கண், அவர்கள் தன்மேலே வேலை யெறிய அது பொறுக்க மாட்டாமல், அந்நோக்கை அழித்து இமைக்குமாயின், அதுவும் சேவகனானவனுக்குத் தோல்வியாம். எ-று.

ஏ) பழைய 2 : பகைவர், வெகுண்டு நோக்கியவுடனே வேலைக்கொண்டெறிய, அப்படிச் செய்யாமல் தன்னோக்கை யழித்திமைத்துப் பார்த்துப் பின் அப்பகைவர்மேல் எறிந்தானாகில் அவ்வீரர்க்குப் புறங்கொடுத்தலாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'விழித்தகண்'

'(பகைவரை) நோக்கிச் (சிவந்த) கண்ணிலே, வேல்

2. அதனைத் தலையழித்து — வேலினைக் கெடுத்து
3. அவர் — பகைவர் 4. மீட்டலும் — திருப்பிக் கொள்ளுதலும்
5. அதுவும் — இமைத்தலும்

கொண்டெறிய, அழித்து இமைப்பின் அதற்கு மீண்டும் இமைப் பாராயின்' என்ற மணக்குடவர் உரையும் 'அழித்து இமைப் பின்' என்ற பாடமே கொண்டது எனலாம். அழித்தல்-இமை யாது விழித்திருக்கும் நிலையை மாற்றுதல். ஆதலின் 'வழித்து' எனப் பாடங்கொண்டு இடர்ப்படுதல் வேண்டா. மணக்குட வரைப் பின்பற்றும் பரிமேலழகரும் இப்பாடமே கொண்டு உரை வகுத்தமை ஆய்ந்து காண்க.

பரிதி.,காளிங்கர் இருவரும் 'எதிரியின் வேல் தம் முகத்தில் படும்போது இமைப்பின்' என்பர்.

'விழித்தகண் இமைப்பின்' என எழுவாயாகக் கொண்டும், 'விழித்த கண்ணை எறிய இமைப்பின்' என இரண்டனுருபு விரித்தும் பொருள்கொள்ளும் வகையில் உரையாசிரியர்கள் மாறுபடுகின்றனர். வேலெறிவது மார்பு முதலிய உறுப்புக்களை நோக்கியன்றிக் கண்ணைக் குறிவைத்து எறியார் ஆகலின் மாற்றான் மேல் கொண்டெறியின் எனப் பொதுவகையாற் கோடலே சிறந்தது. இராம. 'வேலைக்கொண்டு கண்ணைக் குத்தினாலும்' என்பர்.

'ஒட்டு'

'கெட்டது' மணக்.; 'இழுக்கு' பரிதி.; 'அஞ்சாமைக்கு அழிவு' காளி., 'புறங்கொடுத்தல்' பரிமேலழகர் முதலியபின்னோர் அனைவரும். இவற்றுள் 'புறங்கொடுத்து ஓடுதல்' என்ற பொருளே இயைபுடையது. 'ஓடு' என்னும் முதனிலைத் தொழிற் பெயர் திரிந்து ஒட்டு என்றாயிற்று. வரத. 'தன் வெற்றியில் கருத்தூன்றி விழித்த கண்கொட்டாமலிருந்த வீரன் மனமாறிக் கண் இமைப்பானாயின், அதுவும் இழுக்கு' என்ற விளக்கம் தெளிவானது. 'அழித்து-மனத்தைமாற்றிக்கொண்டு' அழித்தழு தாள்' என்பதுபோல என்ற தேவநேயர் குறிப்பு சிறந்தது.

ஓ) ஒப்புமைப்பகுதி:

அழித்து இமைப்பின் ஒட்டு

எடுத்தெறி ஞாட்பின் இமையான் —புறம்.290;4

வேலும் கணையமும் வீழினும் இமையார்
வீரியத் தறுகணர் —பெருங்.1:46:17-18

இகலிடை இமையா எரிமலர்த் தடங்கண் —பெருங்.4:5:60

ஆரமருள் ஆண்டகையும் அன்னவகை வீழும்
வீரர்எறி வெம்படைகள் வீழஇமை யானாய் —சீவக ,288

ஏந்தல்தன் கண்கள் வெய்ய இமைத்திட எறித லோம்பி
நாந்தக உழவன் நாணி நாக்குநீ அஞ்சல் கண்டாய்
—சீவக.,2258

வெல்வது விதியி னாகும் வேல்வரி னிமைப்போ னாயிற்
சொல்லிநீ நகவும் பெற்றாய் தோன்றன்மற் றென்னை யென்றான்
—சீவக.,2317

ஏற்றவ ரிமைப்பினும் இகழ்ந் தெறிதல் செய்யார்
தோற்றவர் புறக்கொடையு நாணிமிக நோக்கார்
வேற்றவரை வீரநெறி காண் மினிது வென்று
தேற்றுவனர் போலவுணர் சென்று திரிகின்றார்
—சூளா.,1280

நினையு நெஞ்சின ரிமைத்தில ருருத்தனர் நின்றார்
—கம்ப.,3779

மாற்றமஃ துரைப்பக் கேளா மலைமுழை திறந்த தென்னச்
கூற்றுறழ் பகுவாய் வின்னச் சிரித்துநீ கொணர்ந்த குன்றை
யேற்றனெ னேற்ற காலத் திறையதற் கொற்க மெய்தின்
தோற்றனெ னுனக்கென் வன்மை சுருங்கமென் றரக்கன்
சென்னான். —கம்ப.,7599

முற்றும் :

விழித்தவெகு டிளிக்கண்இடன் ஆடுதொறும் மேவார்
அழித்திமைஎ னக்கருதி ஆர்ப்பர்என வெள்கி
ஒழித்துவலன் நோக்கின்அழல் சீற்றம்நனி காட்டித்
தெழித்து விறல் சாற்றிஅமர் ஏற்பர்திதி பெற்றார்
—காஞ்சி.வாணேசப்.,55

வேலெதிர் வரினும் விழித்தநண் இமையா வீறுமெய் யூறுகா
ணாமே
ஆலிய சினத்தின் நூழிலாட் டயரும் ஆண்மையும் அழியினல்லாது
சீலவஞ் சினம்செய் யாதமையாத தீரமும் மேந்துசீ றினும்செல்
வாலியமறமு மன்கண்நீர் உகுப்ப மடிதலும் படைச்செருக்
காக்கும். —விநா. அரசி.,124

ஒருபுடை :

எறிபடைக்கு ஓடா ஆண்மை —புறம். 154:10

ஊற்ற முற்றுடை யானுனக் காரமர்
தோற்று மென்று தொழுதுயர் கையனைக்
கூற்ற முண்ணக் கொடுப்பனென் றெண்ணினாய் —கம்ப. 4143

உண்ணிறைந் துயிர்க்கும் வெம்மை யுயிர்சுட வுலைவே னுள்ளம்
புண்ணுற வாளி தூர்த்தல் பழிதினிப் போதி மார —கம்ப., 4314

வில்லுவெங் கணையும் வீரர் வெஞ்சமத் தஞ்சினார்மேல்
புல்லு வல்ல வாற்றல் போற்றலர்க் குறித்தல் போலாம்
—கம்ப., 4315

78.6. *விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்*
*வைக்கும்தன் நாளை எடுத்து.* (776)

உரைப்பகுதி :

அ) மணக்.: தனது வாழ்நாளாகிய நாளை எண்ணி, அவற்றுள் விழுமிய புண்படாத நாளெல்லாவற்றையும் தப்பின நாளுள்ளே எண்ணி வைக்கும் வீரன் எ-று.

இது போரின்கண் முகத்தினும் மார்பினும் புண்படலும், முதுகு புறங்கொடாமையும் வேண்டும் என்றது.

ஆ) பரிதி.: வீரன் நாள்தோறும் தன்சரீரத்திலே புதுமைப் புண்படாத நாள்களை உயிருடன் வாழாத நாளாக எண்ணு வான் எ-று.

இ) பரிப்.: தனது வாழ்நாள் ஆகிய நாளை எண்ணி, அவற்றுள் விழுமிய புண்படாத நாள் எல்லாவற்றையும் தப்பின நாள் ஆக எண்ணி வைக்கும் வீரன் எ-று.

இது போரின்கண் முகத்தினும் மார்பினும் புண்பட வேண்டும் என்பதூஉம் முகுதுபுறம் கொடாமையும் வேண்டும் என்பதூஉம் கூறுகிறது.

ஈ) காளி.: போர்க்களத்துச் சென்று புக்கார் புறத்துப்படுதல்[1] இன்றி முகத்தினும் தோளினும் மார்பினும் விழுமிய புண்ணாகிய வீரத்தழும்புபடப்பெறாத நாட்களும் உளஅன்றே;அவை எல்லாம் தனக்கு உளவாகக் கருதாது தன்னை வழுக்கிக் கழிந்தனவற்றுள் சிலவையாக அந்நாட்களை வேறே நீக்கி வைக்கும் எ-று.

உ) பரிமேல்.: தனக்குச் சென்ற நாள்களை எடுத்து எண்ணி, அவற்றுள் விழுப்புண்படாத நாள்களையெல்லாம் பயன்படாது கழிந்த நாளுள்ளே வைக்கும் வீரன், எ-று.

விழுப்புண், முகத்தினும் மார்பினும் பட்ட புண். போர் பெற்றிருக்கவும் அது[2] பெறாத நாள்களோடும் கூட்டும் என்பதாம். இவை மூன்று பாட்டானும் ஊறஞ்சாமை[3] கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: தனக்குச் சென்ற வயசையெண்ணி, அதிலே சண்டைபண்ணிக்காயம் படாத நாளையெல்லாம், பிரயோசன மில்லாமற் கழிந்துபோன நாட்களுடனே வைப்பன் வீரனான சேவகன் எ-று

ஏ) பழைய2: தனக்குச் சென்ற நாட்களை எடுத்து எண்ணியவற்றுள் விழுமிய காயம் படாத நாள்களையெல்லாம் பயன்படாது கழிந்த நாள்களுள்ளே வைக்குஞ் சுத்தவீரன்.

---

1. புறத்துப்படுதல் — முதுகிற்படாமல் 2. அது — விழுப்புண்
3. ஊறஞ்சாமை — தனக்கு வருகின்ற புண்களுக்கு அஞ்சாமையாம், படைகள் வந்து உறுவதால் உண்டான துன்பத்திற்கு அஞ்சாமையாம்

ஐ) தொகுப்பும் குறிப்பும :

'வழுக்கு'

'தப்பினநாள்', ,வாழாத நாள்', 'தன்னை வழுக்கிக் கழிந்த நாள்', 'குற்றஞ்செய்த நாள்' என்பர் ஆசிரியர்கள் 'பேசாத நாளெல்லாம் பிறவாநாளே' என்றாற் போலப் பயனின்றிக் கழிந்தநாள்' எனலும் இயைபுடையதாம்,

ஒ) ஒப்புமைப்பகுதி :

விழுப்புண்:

பெருந்தகை விழுப்புண் பட்டமாறே —புறம்.,93:15

இரும்பு சுவைக் கொண்ட விழுப்புண் —புறம்.,180:4

போரடு தானை எவ்வி மார்பின்
எஃகுறு விழுப்புண் பலவென —புறம்.,233:6-7

ஒன்றுவாள் விழுப்புண் காணிய —நெடுநல்.,172

தன்காயம் தனக்குத் தித்திப்பு —பழ.,

ஓ) மேற்கோள்பகுதி:

நச்சி.: வாள் உழந்து அதன் தாள் வாழ்த்தி—வாட்போரிலே வருந்தினபடியாலே அவ்வருத்தத்தினால் பின்பும் அதன்கட் பிறக்கின்ற முயற்சியை வாழ்த்தி; என்றது வாட்போரின்கண் பெற்ற இனிமையைப் பின்னும் விரும்பி அதிலே முயல்கின்றார் என வீரச்சிறப்பு கூறிற்றாம். 'விழுப்புண்படாத......எடுத்து' என்றார் பிறரும். —மதுரைக்.,222

சுவாமி.: நிலை மொழியும் வருமொழியும் திரியாது தமிழ்மொழி விதியால் நிலைமாறுதலுக்கு மேற்கோள். —இ.கொ.,114

78.7. சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து. (777)

**உரைப்பகுதி :**

அ) **மணக். :** பரவும் புகழை விரும்பி உயிரை விரும்பாதவர் கழல்[1] கட்டுதல் அழகுடைத்து எ-று,

இது புகழ் விரும்பும் படை வேண்டும் என்றது.

ஆ) **பரிதி. :** பூமியிலே சுற்றித்திரிகின்றகீர்த்தியை வேண்டியும் உயிர் வேண்டாத வீரன் கட்டின வீரகடகம்[2] அழகு பெறும் எ-று.

இ) **பரிப். :** பரக்கும் புகழை விரும்பி உயிரை விரும்பாதவர் கழல் கட்டுதல் அழகு உடைத்து எ-று.

இது புகழ் வரின் பட வேண்டும் என்றது.

ஈ) **காளி. :** இன்னார் இன்ன போர்க்களத்து இன்ன விறல் தொழில்[3] செய்தார் என்று மற்று எண்திசையும் பரந்து திரியும் புகழினையே விரும்பி மற்று இது காரணத்தால் சிறிதும் விரும்பா உயிரினை உடையராயவர் தம்காலில் யுத்த வீரக்கழல் யாப்பானது[4] பெரிதும் ஆண்மைக் கட்டளைப்பாடு[5] உடைத்து. மற்றையார் காலில் கட்டிய கழல் யாதுக்கோ என்று அறியோம் யாம் எ-று.

உ) **பரிமேல். :** துறக்கத்துத் தம்மொடு செல்லாது வையத்தைச் சூழ்ந்து நிற்கும் புகழை வேண்டி, உயிர்வாழ்தலை வேண்டாத வீரர், கழல்கட்டுதல் அலங்கார நீர்மையை[6] உடைத்து, எ-று.

'வையத்தைச் சூழும்[7]' எனவே, அதன் பெருமை பெற்றாம் செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது சூழ்தல்-அகத்திடல்

1. கழல் - வீரர்கள் அணியும் காலணி. இது தோற்றம் மன்னர் முடி பொன்னைக் கொண்டு வென்ற மன்னர் அடுக்கிக் கழல் செய்வது வழக்கம்
2. வீர கடகம் - வீரர்கள் முழங்கைக்கு மேல் அணியும் ஒருவகை அணி
3. விறல் தொழில் - வலிமையான தொழில்
4. கழல் யாப்பானது - கட்டிக்கொள்வதானது, வீரர்கள் ஒருகாலில் கட்டிக் கொள்வதைக் குறிப்பது
5. கட்டளைப்பாடு - வரம்பு
6. நீர்மையை - தன்மையை
7. 'சுழலுமிசை' என்றும் பாடமுண்டு

துறக்கமும் புகழும் எளிதின் எய்துவராகலின், ஆபரணமாவது அதுவே என்பதாம்.

ஊ) கவிராசர் : வீரனானவன், பூமியிலே தன் புகழ் நிற்க வேண்டி, உயிர்வலாழ்கிறதை வேண்டான். அப்படிப்பட்டவர்கள் காலிலே வீரக்கழல் கட்டுகிறது அலங்காரமன்று; அந்தப் புகழே அவர்களுக்கலங்காரமாம் என்று.

ஏ) பழைய 2 : துறக்சத்துத் தம்மோடு செல்லாது வையத்தைச் சூழ்ந்து நிற்கும் புகழை வேண்டி உயிர் வாழ்தலை வேண்டாத வீரர் கழல் கட்டுதல் அலங்கார நீர்மையுடைத்து.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்குடவர் முதல் தேவநேயர், கா.சு. வரையுள்ள ஆசிரியர்கள் அனைவரும் 'வேண்டாவுயிரார்' என்பதனை விகுதி பிரித்துக் கூட்டி ''உயிர் வேண்டாதார்' எனவே பொருள் கண்டனர். தேவநேயரும் 'உயிர்வேண்டார்' என்பதை 'வேண்டா உயிரார்' என்றது செய்யுணடை என்பர். பரிமேல ழகர் முதலானோர் 'உயிர்வாழ்தலை வேண்டாத வீரர்' எனவே பொருள் கண்டுள்ளனர் 'வேண்டாஉயிரார்'-வாழாதார் எனப் பொருள் கோடல் வேண்டும்; அது நலிவுப்பொருள் என்கிறது. இது மரபுவழிவரும் பொலிவுப் பொருளேயன்றி நலிவுப் பொரு ளன்று. இதனை நலிவு எனின் தொல்லாசிரியர் உரைப்பகுதி களும் இணைத்து எண்ண வேண்டிவரும்.

'கழலும் இசை வேண்டி' என்பதற்குப் 'பரவும் புகழ்' 'பூமியிலே சுற்றித் திரிகின்ற புகழ்' ''துறக்கத்துத் தம்மோடு செல்லாதுவையத்தைச் சூழ்ந்து நிற்கும் புகழ்'' தம்மைப்பற்றிய வரலாற்றில் சூழ்ந்திருக்கும் புகழ்' என இவை போன்ற சிறு மாற்றங்களுடன் அனைவரும் உரை கூறுவர்,

'கழல் யாப்பு காரிகை நீர்த்து'

'கழல்கட்டுதல் அழகுடைத்து' மணக்.; 'கட்டின வீரகடகம் அழகு பெறும்' பரிதி.; 'வீரக்கழல் யாப்பானது பெரிது ஆண்மைக் கட்டளைப்பாடு உடைத்து' காளி.; 'கழல்

கட்டுதல் அலங்கார நீர்மையுடைத்து'' பரிமேலழகர் முதலா னோர் என்பர்.

இத்தொடர், 'இசை வேண்டி உயிர் வாழாதார் கட்டின கழல் அழகுதருவதாகும். ஏனெனின் இன்னபேரில் இன்ன மன்னனை வென்றார்; அவன் முடிப்பொன்னைத் தன்னடிக் கழலாக்கினான் என்ற புகழுடன் அழகும் செய்வதாகும். இசை வேண்டாது உயிர்வாழ்வார் கட்டின வெற்றழகு மட்டும் ஆம்' எனவும் கருத்தளிக்கும். மேலும் காளிங்கர் 'மற்றைய காலில் கட்டிய கழல் யாதுக்கோ' என நகைப் பொருளும் அமைய எழுதுவர். கவிராசர் 'கழல் அலங்காரம் அன்று. புகழே அலங் காரமாம்' என்றனர்- இவையனைத்தும் குறிப்பாற் போந்த பொருணயமும், சொற்பொருளான் பெற்ற நயமுமாக ஒரே கருத்தை விளக்குவன.

'காரிகை' என்ற சொற்கு முன்னோர் அனைவரும் பண் பாகக் கொண்டு 'அழகு' என்று பண்புப்பொருளையே தர, உரைவளம் பண்பாகு பெயராகக் கொண்டு 'பெண்தன்மைத்து' என்றது இவ்வளவே, கழல் ஆடவர்க்கன்றி பெண்ணிற்குரித் தல்லவே; கழலணிதல் பெண் தன்மைத்து எனல் பொருளாற் குற்றமுடைத்து என்று மறுத்திருக்குமாயின் ஏற்புடையதாகும். அதிலும் இசைவேண்டி உயிர் வாழாத மறவன் கழலணியின். பெண்ணொருத்தி கழல் அணிந்தால் காண்பார்க்கு நகை பயத்தல் போலாகும் என நயங்கூறலும் ஆம். இங்ஙனம் நயந்தோன்றச் சுவைத்தல் நலிந்துரையாகாது.

''ஒன்றாவுலகத்து உயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்பது ஒன்றில்'' (233) என்று ஈகையான் வரும் புகழை நிலைத்தது என்ற ஆசிரியர், வீரத்தான் வரும் புகழைச் சுழலும் இசை வேண்டி'' என்றதன் பொருள் நயம் ஆழ்ந்து சிந்தித்தற் குரியது. காலந்தோறும் படைச் செருக்குடையார் பலராதல் கூடும். ஒருவன் புகழ் நிலைத்துச் சுழல்கின்ற போது, அடுத் தவனும் உயிர்க்கொடை கொடுப்பானாயின் அவன்புகழ் சுழன்று மறைய மற்றவன் புகழ் மேலோங்கிவிடும். புறப்பாட்டில் வீரன் புகழைக் காட்டிலும் வள்ளல் புகழ்நிலைத்திருப்பதைக் காண்க.

ஓ) ஒப்புமைப்பகுதி :

சுழலும் இசை :

புகையுடைத் தென்னின் உண்டு பொங்கனல் அங்கென்று
உன்னும்
மிகையுடைத் துலக நூலோர் வினையமும் வேண்டற் பாற்றே
பகையுடைச் சிந்தை யார்க்கும் பயனுறு பண்பில் தீரா
நகையுடை முகத்தை யாகி இன்னுரை நல்கு நாவால்.
—கம்ப., 4227

கழல் :

ஆடவர் கொடையால் வீரத் தாலணி
பரதத் தனியே கழலணி யென்ப —பிங்கலந்தை.,

ஓ) மேற்கோள்பகுதி :

அடியார்க்கு நல்லார்: 'புகழ்வரைப் பூமிசிறு கலான்; மண் இடத்தாற் சிறுதென்றார்' வள்ளுவனாரும். 'மண்டேய்த்த புகழினான்' உரை. (சிலம்பு. மங்கல. 36)

78.8. உறினுயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர். (778)

உரைப்பகுதி :

அ) மணக். : ஒன்று உற்ற காலத்து உயிர்ப்பொருட்டு அஞ்சாத மறவர் தம்மரசனால் செறுக்கப் பட்டாராயினும்[1], தமது தன்மை குறைதல் இலர் எ-று.

இஃது அஞ்சாமையுடையார் வீரியஞ் செய்யுமிடத்துக் குறைய நில்லாமை வேண்டும் என்றது.

ஆ) பரிதி : அரசர்க்கு ஒரு தறுவாயான[2] இடத்திலே தன்னை உதாரம் பண்ணும்[3] சுத்தவீரனை அரசன் வெறுத்தாலும் தன் சேவகம் குன்றான்[4] எ-று.

---

1. செறுக்கப்பட்டாராயினும் - வெறுக்கப்பட்டாராயினும்
2. தறுவாயான - சமயமான
3. உதாரம்பண்ணும் - மேம்பாடு செய்யும்
4. சேவகம் குன்றான் - வீரம் குறையான்

இ) பரிப்.[1] ஒன்று உற்ற காலத்து உயிர்ப் பொருட்டு அஞ்சாத மறவர் தம் அரசனால் செறுக்கப்பட்டார் ஆயினும் தமது தன்மை குன்றுதல் இலர் எ-று.

மேல் அதிகாரத்துச் சிறுமை முதலாயின செய்யின் படை வெல்லாது என்றார் ஆயினும், இயல்பு ஆக அஞ்சாமை உடையார் வீரியம் செய்யும் இடத்துக் குறைய நில்லாமை[5] வேண்டும் என்றது.

ஈ) காளி.: எதிர்ப்படை தம்மேல் வந்து தாக்கும் அளவின் கண் தமது உயிர் பேணக்கருதி அஞ்சாது அவ்விடத்து உயிர் வழங்கக் கருதும் வீரர், தம்மை ஆண்ட அரசரானோர் ஒரு காலம் உற்றுச் செறினும்[6], தமது சேவகத் தறுகண்மையில் சிறிதும் குறைபடுதல் இலர் எ-று.

உ) பரிமேல்.: போர் பெறின் தம் உயிர்ப் பொருட்டு அஞ்சாது அதன்மேற் செல்லும் வீரர், தம் இறைவன் அது[7] வேண்டா என்று முனியினும் அவ்வீரமிகுதி குன்றார், எ-று.

போர்பெற்றறியாமையின், அது[8] பெற்றால் அரசன் தடுப்பினும் நில்லார் என்பதாம். பிறரும் ''போரெனிற் புகலும் புனைகழல் மறவர்[9]'' என்றும் ''புட்பகைக், கேவானாகலின் சாவேம் யாம் என-நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப''[10] என்றும் கூறினார்.

ஊ) கவிராசர்: சண்டை வந்தபோது பயப்படாமல் அதன் மேலே செல்லும் வீரர், தம் ராசா 'அதுவேண்டா' என்று கோபித்தாலும், அவ்வீர மிகுதியினாலே குன்றார் எ-று.

ஏ) பழைய2: போர் பெறின் தம் முயிர்ப் பொருட்டு அஞ்சாது செல்லும் வீரர், தம் மிறைவன் போர் முகத்துச் செல்ல வேண்டா மென்று வெகுண்டு சொல்லினும் அவ்வீரமிகுதி குன்றார்.

---

5. குறைய நில்லாமை - அஞ்சாமையில் குறைவில்லாமல்
6. உற்றுச் செறினும் - பகைவன் நாடுபுக்குக் கொள்ளினும்
7. அது - போர்
8. அது - போர்
9. புறம்.,31
10. புறம்.,68

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

மணக்குடவரும் பரிப்பெருமாளும் இக்குறளை முதற்பாடலாகக் கொண்டமையின் பரிப்பெருமாள் விளக்கத்தில் மேலதிகாரத்தோடு இதற்கு இயைபு தோன்ற எழுதினர்.

"உறின்" என்பதற்கு வினைமுதல் வருவித்துப் பொருள் நிறைவு செய்வதில் ஆசிரியர்களுக்குள் பெரிய மாறுபாடு இல்லை எனலாம். 'உயிர் அஞ்சாமறவர் அரசன் செறினும் சீர் என்றார்' என இயைத்தே பொருள் காண்கின்றனர். பரிமேலழகர் 'உறின்' என்பதற்குப் 'போர் பெற்றறியாமையின் அதுபெற்றால் அரசனே தடுப்பினும் நில்லார்' என்பர். இவ்வுரை இவ்வதிகார இயை போடு சிறப்பும் உடையது.

'உயிர் அஞ்சா மறவர்' என்றது கருத்துடை அடை புணர்த்த தொடர். அரசன் செறினும் அழிவது உயிர். போரினும் அழிவது உயிர். அரசன் செற அழிவதைக் காட்டிலும் பொருதழிதல் மேல் என எண்ணிச் சீர்குன்றல் இலர் என்றமை காணக.

இராம. 'சமயத்தில் உயிர் கொடுக்கவுந்துணிந்த வீரர்கள் அரசன் விருத்த முண்டாக்கிவிட்டாலும் ஒழுங்குதவற மாட்டார்கள் என்பர்.

ஓ) ஒப்புமைப்பகுதி :

உறின் உயிர் அஞ்சா மறவர் :

பொதுவிற் றூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோர் என்னும் என்னையும் உளனே. —புறம்.,89:7-9

மண்டமர் நசையொடு கண்படை பெறாது —முல்லை.,67

வேண்டுழி யினியன விளம்பி வெம்முனை
பூண்டுழி யஞ்சிவெஞ் செருவில் புக்குடன்
மாண்டொழி லின்றிநம மருங்கு வந்தவன்
ஆண்டொழி லுலகிலுக் கணி யாமன்றே. —கம்ப., 6553

78.9. இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர். (779)

**உரைப்பகுதி:**

அ) மணக் : முன் கூறிய வஞ்சினம் தப்பாமல் சாவாரை அவர் தப்பியது சொல்லிப் பழிக்கவல்லவர் யாவர் எ று.

இது வஞ்சினம் தப்பின் படவேண்டும் என்றது.

ஆ) பரிதி : அரசன் சொன்ன அவசரத்தினாலே தன் சீவனை விடும் சுத்தவீரனைப் பிழை கண்டாலும் ஒறுப்பவர் யாவர் எ-று.

இ) பரிப்.: முன் கூறிய வஞ்சினம் தப்பாமல் சாவாரைத் தப்பினார் என்று பழிக்க வல்லவர் யார் எ-று.

இது வஞ்சினம் தப்பின் பட வேண்டும் என்றது.

ஈ) காளி.: போர்க்களத்து எதிர் நின்ற வீரரை நோக்கி நும்மை யாம் இவை செய்வோம் என்று எண்ணி முன் கூறியது யாது மற்று அவ்வெண்ணத்தைக் கடவாமை[1] காரணமாகச் சென்று பொருது தம் உயிர் செருக்கும் திறல் உடையோரை இவ்வுலகத்து,யாரே தானென் எண்ணத்தைப் பிழைத்தார் என்று சொல்லி முன் நின்று ஒறுக்க வல்லார் எ-று.

உ) பரிமேல் : தாம் கூறின வஞ்சினம் தப்பாமைப் பொருட்டுச் சென்று சாவவல்ல வீரரை, அது[2] தப்பிய வாறு சொல்லி எள்ளுதற்கு உரியார் யாவர், எ-று.

இழைத்தல் - இன்னது செய்யேனாயின் இன்னேனாகுக எனத்தான் வகுத்தல். சொல்லி என்பது அவாய்நிலையான் வந்தது.[3] வஞ்சினமுடிப்பான் புக்கு முன்னே[4] சாவினும் தொலை

---

1. கடவாமை - மீறாமை
2. அது — சபதம்
3. ஒறுக்கிற்பவர் என்பது சொல்லி என்பதை விரும்பி நின்றது
4. முன்னே — தாம் கூறிய சபதத்தை நிறைவேற்றுதற்கு முன்பு

வன்மையின்,[5] அது[6] முடித்தாராவார் எனச் சாதற்சிறப்புக் கூறியவாறு .

ஊ) கவிராசர் : தாங்கள் சொன்ன வஞ்சினந் தப்பாதபடிக் குப் போய்ச் சாகவல்ல வீரர்களை, அது தப்பியவாறு சொல்லி யிகழ வல்லவர் யார்? எ-று.

ஏ) பழைய 2: 'இகவாமற் சாவாரை' பாடம்.

இன்னானைக் கொல்வேன் இன்னது சேய்வேன்; என்று, சபதம் ஒட்டினது தப்பாமற் போர் புரிவான் சென்று, அச்சபதஞ் செய்யு முன்னே சாவவல்ல வீரரை, அதுதப்பியவாறு சொல்லி இகழ்ச்சி செய்தற்குரியார் யாவர்.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'இழைத்தது'

'படைவீரன் போர்நேர்ந்துழிச் செய்த சபதம்' என்று தொல்லாசிரியர் கூறுவர். இராம. ''படைவீரனாகச் சேர் கின்ற காலத்தில் 'அரசனுக்காக உயிரையுங் கொடுப்பேன்' என்று செய்த வாக்குறுதி'' என்பர். அலுவலுக்குச் சேர்கின்ற காலத்து 'இன்னது செய்யேனாயின் இன்னன் ஆவேன்' என்று மேற் கொள்ளும் உறுதிமொழியே எல்லாவற்றினும் உயர்ந்ததாதலை எண்ணுக.

வரத. 'பிழைத்து அது ஒறுக்கிற்பவர் யார்?' எனக் கொண்டு கூட்டித் 'தடுத்துத் துன்புறுத்தி எவர் வென்று விட முடியும்?' என்பர் இது ஒருபுதியபோக்கு இவ்வுரை இத்தகைய படைச்செருக்கு உடையானைத் தடுக்கவும் முடியாது; வெல்லவும் முடியாது என்னுங் கருத்தினது இது, இறைவன் செறினும் என்பதை எண்ணிஎழுதியதுபோலத் தோன்றுகிறது. தேவநேயர் சூழ் வகையுட் சிலவற்றை விதந்து கூறி 'இவற்றுள் உயிர்விடுவேனாக என்றது இது' என்பர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

இழைத்த திகவாமைச் சாவார்;
உரைத்தவர் நாவோ பருந்தெறியா தென்று

---

5. தொலைவன்மையின் - சாக்காடு அன்று ஆதலால்
6. அது - சபதம்

சிலைத்தெழுந்து செம்மாப் பவரே-மலைத்தால்
இழைத்த திறவா தவரைக் கவற்றிப்
பலிப்புறத் துண்பர் உணா. — பழ. நா.,296

தேவியை விடுதி யாயிற் றிறலது தீரு மன்றே
ஆவியை விடுவ தல்லா லல்லதொன் றாவ துண்டோ
தாவரும் பெருமை யம்மா நீயினித் தாழ்த்த தென்னே
காவல விடுதி யின்றிக் கையறு கவலை நொய்தின்.
—கம்ப.,7436

ஒ) மேற்கோள் பகுதி:

இளம்.: ஒல்லார் நாணப் பெரியவர்க்கண்ணிச் சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்ந்துத் தொல்லுயிர் வழங்கிய அவிப் பலிக்கு மேற்கோள். —தொல்.பொருள்.75

நச்சி.: ஷை —தொல்.பொருள் 76

78. 10. புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்கா(டு)
இரந்துகோட் டக்க துடைத்து. (780)

உரைப்பகுதி :

அ) மணக்.: தம்மை ஆண்டவரது கண் நீர்மல்குமாறு சாக-வல்லாராயின், அச்சாக்காடு எல்லாரானும் வேண்டிக்கொள்ளும் தகுதியுடைத்து எ-று.

இது ஆண்டவனுக்குக் கேடுவரின், படவேண்டும் என்றது.

ஆ) பரிதி.: அரசன் கண்ணீர்மல்கச் சாகிறசாக்காடு தர வேணும் என்று தெய்வசந்நிதியிலே வேண்டிக்கொள்வான் எ-று.

இ) பரிப்.: தம்மை ஆண்டவரது கண்ணீர் மல்குமாறு சாவக் கடவராயின் அச்சாக்காடு எல்லாரானும் வேண்டிக் கொள்ளும் தகுதி உடைத்து எ—று.

இஃது ஆண்டவனுக்குக் கேடு வரின் பட வேண்டும் என்றது.

ஈ) காளி. : தம்மைப் பெரிதும் தலையளித்து ஓம்பின அரசன் முதலானோர் இவரை யாம் இழந்தோம்! என்ன பாவம்! என்று இரங்கிக் கண்ணீர் சொரியுமாறு அமரில் புக்குச் சாகவல்லாரா யின். அதுவே சாக்காடு என்பது, மற்று அது புறம் கொடுத்துச் சாகாது இரந்து கொள்ளும்[1] தகுதியினை உடைத்து எ—று.

உ) பரிமேல். : தமக்குச் செய்த நன்றிகளை நினைந்து ஆண்ட அரசர் கண்கள் நீர்மல்கும் வகைபோரிடைச் சாவப் பெறின், அச்சாக்காடு இரந்தாயினும் கொள்ளும் தகுதியை உடைத்து எ—று.

மல்குதலாகிய இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது.[2] கிளையழ[3] இல்லிடை நோயால் விளிவார் பழவினைப்பயனே[4] எய்தலின், அடுத்தவினையால்[5] துறக்க மெய்தும் சாதலை 'இரந்துகோட்டக்க துடைத்து' என்றார். இவை நான்கு பாட்டானும் உயிரோம்பாமை[6] கூறப்பட்டது.

ஊ) கவிராசர்: ராசா தனக்குச் செய்த நன்றிகளை நினைத்து தன் ஆண்டவன்கண்களிலே நீர் பெருகத் தக்கதாகச் சண்டையிலே சாகத்தக்க சாவை யிரப்பாகக்கேட்டுக் கொண்டாகிலுஞ் சாகிறது நல்லது எ—று.

ஏ) பழைய2 : 'சாகிற் பிற்' பாடம்.

தனக்குச் செய்த உதவிகளை நினைந்து ஆண்ட அரசன் கண்ணீர் ஒழுகும்வகை போரிடைச் சாவப்பெறின், அச்சாக்காடு இரந்தாயினுங் கொள்ளுந் தகுதியையுடைத்து.

---

1. இரந்து கொள்ளும் — வேண்டிப்பெறும்
2. இந்தப்பானை நானாழி பொங்கும் என்றால் இடத்து நிகழப்பொருளாகிய பானையிலுள்ள பொருளின் பொங்குதல் தொழில் பானைக்கு ஆனதுபோல கண்ணீர் மல்க என்பதில் மல்குதலாகிய நீரின்தொழில் கண்ணுக்காயிற்று. இது உபசார வழக்கு.
3. கிளை யழ — சுற்றம் அழ
4. பழவினைப்பயன் — முன்முன் பிறவிகளில் செய்த வினையால் வந்த பயன்
5. அடுத்த வினை — உடம்பு நீங்கிய காலத்து அடுத்துள்ள வினை
6. உயிரோம்பாமை - விரர்கள் தம்முடைய உயிரைப் பெரிதாக நினைத்து அதனைக் காக்க எண்ணாமை

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பரிதி. 'இரந்து கொள்ளுதற்கு இடம் தெய்வசந்நிதியாகக்' கொள்கிறார். காளிங்கர் 'புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் (அதுதான்) சாக்காடு; அது இரந்து கோள் தக்கது உடைந்து' எனச் சொற்சிதைவு செய்து கொண்டுகூட்டிப் பொருள் செய்வர். இது சாக்காட்டின் மேன்மையை வலியுறுப்பது.

பரிமேலழகர் முதலியோர் 'சாகிற்பின், சாக்காடு இரந்து கோட்டக்க துடைத்து' என ஒரு தொடராக்கி உரை காண்பர்.

வரத.'புரந்தார்-பாதுகாத்த அரசன், (தன்னால்) பாதுகாக்கப்பட்ட நாட்டுமக்களும் கண்ணீர்மல்க' என செய்வினை—செயப்பாட்டுவினை இரண்டிலும் கொண்டு பொருள் காண்பர். அங்ஙனமே, 'இரந்து கோள்தக்கதுடைத்து' என்பதற்கு 'வருந்தியும் இரந்தும் கொள்ளத்தக்கது' என்பர். 'வருந்தியும்' என்பது எவ்வியைபு பற்றி வருவிக்கப்பட்டது அறியக் கூடஇல்லை.

தேவநேயர். 'இத்தகைய சாவின் பயன் அரசன் கண்ணீர் வடிப்பது, நாட்டுக்காக உயிர்நீத்தான் என்று நாட்டுமக்களாற் புகழப்படுதல், வீரசொர்க்கம் பெற்றுத் தேவராய்த்தோன்றி யின்புறுதல், நடுகல்லில் தோன்றி நாணாளும் போற்றப்படுதல், குருதிக்காணிக்கை ஏற்படுதல் முதலிய பல' என விளக்கந்தருவர்.

ஒ) ஒப்புமைப்பகுதி:

முற்றும்:

குஞ்சரந் தலையடுத்துக் கடந்தன்மாக் காலணையாச்
செஞ்சோற்றுக் கடனீங்கிச் சினவான் பிடித்துடுத்த
பஞ்சிமேற் கிடந்துடைஞாண் பதைத்திலங்கக் கிடந்தாரை
அஞ்சிப்போந் திைநரியோ டோரிநின் றலறுமே.

—சீவக., 2240

வேண்டுழி யினியன விளம்பி வெம்முனை
பூண்டுழி யஞ்சிவெஞ் செருவில் புக்குடன்
மாண்டொழி வின்றிநம் மருங்கு வந்தவன்
ஆண்டொழி லுலகினுக் காணி யாமன்றே. —கம்ப., 6553

நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்து விட்டாற் குயிர்கொடா தாங்குப் போகேன்
—கம்ப., 7553

ஒருத்தரின் முள்ளஞ் சாதல் உண்டவர்க் குரிய தம்மா
—கம்ப.,7555

புகழுடம்பு அன்றிவ் இகழுடம் போமெய் —மனோன்.,4;1.162

## 78. படைச்செருக்கு

| | என்னைமுன் | கானமுயல் | பேராண்மை | கைவேல் | விழித்தகண் | விழுப்புண் | சுழலும் | உறின்உயிர் | இழைத்தது | புரந்தார்கண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 4 | 3 | 2 | 5 | 6 | 7 | 8 | 1 | 9 | 10 |
| பரிதி. | 8 | 6 | 7 | 5 | 3 | 4 | 10 | 1 | 2 | 9 |
| ப்ரிப். | 4 | 3 | 2 | 5 | 6 | 7 | 8 | 1 | 9 | 10 |
| காளி. | 3 | 6 | 2 | 5 | 4 | 7 | 8 | 1 | 9 | 10 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

78-வது அதிகாரம் படைச்செருக்கு' முற்றிற்று.

# நூலோதி


1. அகநானூறு, களிற்றியானை நிரை, சோமசுந்தரனார், பொ. வே. உரை, தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1970.

2. அகநானூறு, மணிமிடைபவளம், நித்திலக்கோவை, சோமசுந்தரனார், பொ.வே.உரை, தி.தெ.சை.சி நூ.ப.க., லிமி., சென்னை, 1970.

3. அடயோக பிரதீபிகை, மொழிபெயர்ப்பு, குப்புசாமி. ராஜு, த., தஞ்சை.

4. அறநெறிச்சாரம், முனைப்பாடியார், எஸ்.பி.சி.கே. அச்சகம், வேப்பேரி, 19்2.

5. ஆசாரக்கோவை, பதவுரை விளக்கவுரைகளுடன், தி. தெ. சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1968.

6. ஆதிநாதர் பிள்ளைத்தமிழ்.

7. இலக்கணக்கொத்து மூலமும் உரையும், சுவாமிநாததேசிகர், ஆறுமுகநாவலர் பதிப்பு, மூன்றாம் பதிப்பு.

8. இலக்கண விளக்கம், வைத்தியநாத தேசிகர், தஞ்சை சரசுவதி மகால், 1973.

9. இலக்கண விளக்கம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம்—மூலமும் உரையும், வைத்தியநாத தேசிகர், திருவாரூர், தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1973.

10. இன்னாநாற்பது, மூலமும் உரையும், தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை. 1971.

11. இனியவை நாற்பது, மூலமும் உரையும், தி.தெ.சை.சி.நூ. ப.க., லிமி., சென்னை, 1971.

12. உண்மை விளக்கம், மனவாசகங் கடந்தார், சிவஞானபோத யந்திர சாலை, சிந்தாதிரிப்பேட்டை.

13. உதயணகுமார காவியம்,சோமசுந்தரனார்,பொ.வே.,விளக்கவுரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1970.

14. உரைவேற்றுமை, சாரங்கபாணி, கோ., செல்வி பதிப்பகம், காரைக்குடி.

15. கம்பராமாயணம், பதிப்பாசிரியர் குழு, அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு, அண்ணாமலை நகர்.

16. கலித்தொகை, நச்சினார்க்கினியர் உரையும் விளக்கமும் சோமசுந்தரனார், பொ. வே., விளக்கவுரை,தி.தெ.சை.சி. நூ.ப.க.,லிமி., சென்னை,1970.

17. குண்டலகேசி, சோமசுந்தரனார். பொ.வே., விளக்கவுரை, தி,தெ.சை.சி நூ.ப.க., லிமி., சென்னை,1970.

18. குறுந்தொகை, சோமசுந்தரனார், பொ.வே., உரை, தி தெ. சை சி நூ ப,க ,லிமி., சென்னை, முதலாம் பதிப்பு, மறுஅச்சு, 1972.

19. கௌடலீயம் பொருணூல், தமிழ் மொழிபெயர்ப்பு, கதிரேசச்செட்டியார், பண்டிதமணி, மு., இராமாநுஜாசாரியார், பி,ஸ்ரீ, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1955

20. சட்தரிசன சங்கிரகம்.

21. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், சோமசுந்தரனார்,பொ. வே விளக்கவுரை, தி,தெ,சை.சி நூ.ப.க லிமி.,சென்னை 1726.

22. சிவபெருமான் இரட்டைமணிமாலை, 11—ஆம் திருமுறை, ஸ்ரீகுமரகுருபரன்சங்கம், ஸ்ரீ வைகுண்டம்,1971.

23 சீவகசிந்தாமணி மூலமும் உரையும், பகுதி—க, அரசு. புலவர், சோமசுந்தரனார், பொ.வே.உரை,தி.தெ.சை.சி. நூ.ப.க.லிமி ,சென்னை,1967.

24. சீவகசிந்தாமணி மூலமும் உரையும், பகுதி—உ,அரசு. புலவர் சோமசுந்தரனார், பொ,வே. உரை,தி.தெ. சை.சி நூ.ப.க., லிமி , சென்னை, 1968.

25. சுக்கிரநீதி (தமிழ்), கதிரேசச் செட்டியார், பண்டிதமணி, மு., மொழிபெயர்ப்பு, சன்மார்க்க சபை, மேலைச்சிவபுரி, 1926.

26. சூதசங்கிதை. தேவராஜபிள்ளை, ரிப்பன் அச்சியந்திரசாலை சென்னை.

27. சூடாமணி நிகண்டு, மண்டலபுருடன், வித்தியாநுபாலன யந்திர சாலை, தங்க சாலைத் தெரு, சென்னைப் பட்டினம்.

28. சூளாமணி மூலமும் உரையும், பகுதி—க, சோமசுந்தரனார், பொ. வே., தி.தெ.சை.சி.நூ.க., லிமி., சென்னை, 1970.

29. சூளாமணி மூலமும் உரையும், பகுதி —உ, சோமசுந்தரனார் பொ. வே., தி. தெ.சை சி. நூ. க., லிமி., சென்னை, 1962.

30 செந்தமிழ், தொகுதி 1, பகுதி 8, மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு.

31. சேந்தன் திவாகரம், சேந்தனார், மனோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை, 1904.

32. தத்துவார்த்த சூத்திரம்.

33. தண்டியலங்காரம், தண்டியாசிரியர், சுப்பிரமணியதேசிகர் உரை, தி. தெ சை. சி நூ. ப க., லிமி,, சென்னை. 1960.

34. தனிப்பாடல் திரட்டு, சந்திரசேகர கவிராஜபண்டிதர் (பதிப்பு) வித்தியாரத்தினாகரம் அச்சகம், சென்னை, 1902.

35. திருக்கலம்பகம், உதீசிதேவர், மதுரைத் தமிழ்ச் சங்க முத்திரா சாலை

36. திருக்குறள் உரை விளக்கம், வரதராசன், ஜி., பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1958,

37. திருக்குறள் எளிய பொழிப்புரை, இலக்குவனார், சி., வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1963.

38. திருக்குறள், கவிராசபண்டிதர், சாது அச்சுக்கூடம், சென்னை 1949.

39. திருக்குறள், குழந்தையுரை, குழந்தை, புலவர், பாரி நிலையம், சென்னை, 1967.

40. திருக்குறள் தமிழ் மரபுரை, தேவநேயன், ஞா., நேசமணி பதிப்பகம், காட்பாடி விரிவு, 1969.

41. திருக்குறள் தெளிபொருள் வசனம், மு.ரா. அருணாசலக் கவிராயர், மீனலோசனி அச்சியந்திர சாலை, மதுரை.

42. திருக்குறள் தெளிவுரை, வரதராசனார், டாக்டர். மு., தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை.

43. திருக்குறள் நயவுரை, கோவிந்தசாமி, மு., பாரி நிலையம் சென்னை, 1962.

44. திருக்குறள் பரிமேலழகருரையுடன் குறிப்புரையும், கோபால கிருஷ்ணமாசாரியர், ஸ்ரீ உ.வே.வை.மு., சென்னை, 1965.

45. திருக்குறள் புது உரை, இராமலிங்கன், நாமக்கல், வெ., சென்னை.

46. திருக்குறள் பொழிப்புரை, சுப்பிரமணியபிள்ளை, கா., தி.தெ. சை.சி.நூ.ப.க. லிமி., சென்னை, 1955.

47. திருக்குறள் மூலமும் ஓர் பழைய உரையும், டாக்டர் உ. வே. சாமிநாதஐயர் நூல்நிலையம், அடையாறு வெளியீடு சென்னை 1961.

48. திருக்கோவையார், மாணிக்கவாசகர், ஆறுமுக நாவலர் பதிப்பு, விந்தியாநுபாலன யந்திரசாலை, தங்கசாலைத் தெரு, சென்னை.

49. திருநூற்றந்தாதி, அவிரோதி ஆழ்வார், மதுரைத் தமிழ்ச் சங்க முத்திரா சாலை, 1905.

50. திருமந்திரம், திருமூலர், திருவாவடுதுறை ஆதீனம், தண்ட பாணி தேசிகர் உரையுடன்.

51. திருவந்தாதி.

52. திருவருட்பயன், உமாபதிசிவாசாரியார், கோ. சண்முக சுந்தர முதலியார், சென்னை.

53. திருவாசகம், மாணிக்கவாசகர். தண்டபாணி தேசிகர் செய்த பஞ்சாக்கர விளக்கவுரையுடன், திருவாவடுதுறை ஆதீனம்.

54. திருவிசைப்பா, 9—ஆம் திருமுறை, தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி. , சென்னை,

55. திருவிளையாடல் புராணம், பரஞ்சோதி முனிவர்,தி.தெ.சை. சி. நூ. ப. க., லிமி. , சென்னை.

56. திருவெம்பாவை,(சமண நூல்), திருக்குறள் மூலமும் கட்டுரைகளும், ஜைன இளைஞர் மன்றம். சென்னை.

57. திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது.

58. தேவாரம், அப்பர் சுவாமிகள், 4, 5, 6, ஆம் திருமுறை—தலமுறை, ஸ்ரீ குமர குருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம், 1971

59. தேவாரம், சுந்தரமூர்த்தி சுவாமிகள்,ஏழாம்.திருமுறை—தலமுறை, ஸ்ரீ குமர குருபரன் அச்சகம் .ஸ்ரீ வைகுண்டம், 1971

60. தேவாரம், திருஞானசம்பந்த சுவாமிகள் 1,2,3,-ஆம் திரு-முறை தலமுறை, ஸ்ரீ குமர குருபரன் அச்சகம், ஸ்ரீ வைகுண்டம். 1971.

61. தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, சிவஞான சுவாமிகள், ஆறுமுக நாவலர் பதிப்பு, மூன்றாம் பதிப்பு.

62. தொல்காப்பியம் எழுத்ததிகாரம், இளம்பூரணருரை,தி.தெ. சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1972

63 தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியருரை, தி.தெ சை சி.நூ.ப.க.,லிமி., சென்னை, 1961.

64. தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணருரை,தி.தெ. சை. நூ ப .க., லிமி., சென்னை,

65. தொல்காப்பியம் சொல்லதிகாரம், கல்லாடனாருரை, தி தெ. சை.சி.நூ.ப.க. லிமி.,சென்னை. , 6 1964.

66. தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையர் உரை, தி,தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1970.

67. தொல்காப்பியம்,சொல்லதிகாரம்,தெய்வச்சிலையார் உரை, தி தெ சை சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1963.

68. தொல்காப்பியம், சொல்லதிகாரம், நச்சினார்க்கினியருரை, தி.தெ.சை.சி.நூ.ப.க.,லிமி., சென்னை, 1962.

69. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1969.

70. தொல்காப்பியம், பொருளதிகாரம் (செய்யுளியல்), நச்சினார்க்கினியருரை, தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1965.

71. தொல்கர்ப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியருரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., 1971.

72. தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியர் உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை 1971.

73. தொன்னூல் விளக்கம், திறனாய்வு மூலம் விளக்கம், சுப்பிரமணியன், டாக்டர் ச.வே., தமிழ்ப் பதிப்பகம், சென்னை 1978.

74. தோத்திரத் திரட்டு.

75. நரிவிருத்தம், திருத்தக்கதேவர், 'செந்தமிழ்' வெளியீடு, மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

76. நற்றிணை நானூறு, நாராயணசாமி ஐயர், பின்னத்தூர், அ., உரையும் விளக்கமும், தி தெ சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1967.

77. நன்னூல், காண்டிகையுரை, சடகோபராமாநுஜாசாரியார் வை, மு., கிருஷ்ணமாசாரியார். சே., 18—ஆம் பதிப்பு, சென்னை 1958.

78. நன்னூல், மூலமும் விருத்தியுரையும், புத்தம்புத்துரை, சிவஞானசுவாமிகள், ச, தண்டபாணி தேசிகர் குறிப்புரைகள், பூரிநிலையம், சென்னை,1968.

79. நால்வர் நான்ம்மணிமாலை, சிவப்பிரகாச சுவாமிகள், துறைமங்கலம், மைலம் மடம் பதிப்பு.

80. நாலடியார், பாலசுந்தரம்பிள்ளை, தி, சு., உரை, தி. தெ, சை, சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1968.

81. நான்மணிக்கடிகை, பதவுரை விளக்கங்களுடன், தி, தெ, சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை 1966.

82. நீலகேசி, சோமசுந்தரனார், பொ. வே., விளக்கவுரை, தி. தெ. சை, சி. நூ. ப. க. லிமி., சென்னை. 1964.

83. நேமிநாதம், குணவீரபண்டிதர், கோவிந்தராசமுதலியார், கா. ர., குறிப்புரைகள், தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை. 1964.

84. பத்துப்பாட்டு மூலமும் உரையும், பகுதி—உ, சோமசுந்த ரனார், பொ. வே. உரை, தி. தெ. சை. சி.நூ.ப.க., லிமி., சென்னை 1971.

85. பத்துப்பாட்டு மூலமும் உரையும், பகுதி—க, சோமசுந்த ரனார், பொ, வே., உரை, தி. தெ. சை. சி, நூ. ப.க., லிமி., சென்னை, 1968.

86. பதிற்றுப்பத்து, மூலமும் விளக்க உரையும், துரைசாமிப் பிள்ளை, ஔவை, சு., தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1968.

87. பரிபாடல் மூலமும் உரையும், சோமசுந்தரனார், பொ. வே., உரை, தி. தெ. சை சி. நூ. ப, க., லிமி., சென்னை 1969.

88. பழமொழி நானூறு. முன்றுறையரையனார், இராசமாணிக் கம் பிள்ளை, புலவர். ம., உரை, தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1967

89. புறநானூறு, துரைசாமிப்பிள்ளை, ஔவை சு., விளக்க- வுரை, தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை 1970.

90. புறநானூறு மூலமும் பழைய உரையும், சாமிநாதையர் உ., வே., பதிப்பு, சென்னை 1971.

91. புறப்பொருள் வெண்பாமாலை, ஐயனாரிதனார், சோமசுந்த ரனார், பொ. வே., விளக்கவுரை, தி. தெ, சை. சி. நூ. ப.க., லிமி., சென்னை—1967.

92. பிரயோகவிவேகம் மூலமும் உரையும், சுப்பிரமணிய தீட்சி தர், தஞ்சை சரசுவதி மஹால். 1973

93. பெருங்கதை, சாமிநாதையர், உ. வே., பதிப்பு, டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம், 4-ஆம் பதிப்பு, திருவான்மியூர், சென்னை 1968.

94. பொன்வண்ணத்தந்தாதி, சேரமான் பெருமாள் நாயனார், ஸ்ரீகுமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம். 1972

95. மணிமேகலை, மதுரைக் கூலவாணிகன் சாத்தனார், சோம சுந்தரனார், பொ. வே., விளக்கவுரை, தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1971.

96. மதுரைத் தமிழ்ப்பேரகராதி, கோபாலகிருஷ்ணக்கோன், இ. மா., வெளியீடு, மதுரை, 1956.

97. மாறனலங்காரம், காரிரத்னகவிராயர், மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு, 1915.

98. முத்துவீரியம், முத்துவீர உபாத்தியாயர், திருப்பாற்கடல் நாத கவிராயர் உரை, தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1972.

99. முத்திநிச்சயப் பேருரை, தண்டபாணிதேசிகர், ச., குறிப்புரையுடன் குருஞான சம்பந்தர், தருமபுர ஆதீனம், 1942.

100. மேருமந்திரபுராணம், வாமனமுனிவர், சாது அச்சுக்கூடம் சென்னை, 1922

101. யசோதர காவியம், துரைச்சாமிப்பிள்ளை ஔவை சு.' உரை, தி. தெ சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1970.

102. யாப்பருங்கலக் காரிகை.

103. வள்ளுவம், மாணிக்கம், வ. சுப., பாரி நிலையம், சென்னை, 1969.

104. வள்ளுவர் கண்ட நாடும் காமமும், மீனாட்சி சுந்தரனார், தெ. பொ., சென்னை, 1954.

105. வள்ளுவர், நேரிசை, அரசஞ்சண்முகனார், ஸ்ரீகிருஷ்ண விலாசம் அச்சுயந்திரம், 1919.

106. வளையாபதி, சோமசுந்தரனார், பொ, வே, விளக்கவுரை, தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1970.

107. வில்லிபாரதம், வில்லிபுத்தூர் ஆழ்வார், ஆறுமுகநாவலர் பதிப்பு, வித்தியாநுபாலன யந்திர சாலை.

108. வீரசோழியம், புத்தமித்திரனார், பெருந்தேவனார் உரை, தி. தெ. சை. சி, நூ. ப. க., லிமி., சென்னை, 1970.

109. Tamil Lexicon, University of Madras, 1966.

# முதற்குறிப்பகராதி


அகலா தணுகாது 215
அங்கணத்துள் உக்க அமிழ்து 301
அடற்றகையும் ஆற்றலும் 469
அடுத்தது காட்டும் 260
அருளென்னும் அன்பீன் 429
அருளொடும் அன்பொடும் 422
அவையறிந்தாராய்ந்து 279
அவையறியார் சொல்லன் 284
அழக்கொண்ட எல்லாம் 108
அழிவின் தறைபோகா 455
அறனறிந்தான்றமைந்த 23
அறிகொன் தறியான் 34
அறிவுருவு ஆராய்ந்த கல்வி 191
அறனீனும் இன்பமும் 417
அன்புடைமை யான்ற 180
அன்பறிவு ஆராய்ந்தசொல் 183
ஆக்கமும் கேடும் 49
ஆங்கமை வெய்தியக்கண் 367
ஆற்றின் அளவறிந்து 315
ஆற்றின் நிலை தளர்ந்தற்றே 292
ஆற்று பவர்க்கும் 372
இடுக்கட் படினும் 90
இடைதெரிந்து நன்குணர்ந்து 282
இணருழ்த்தும் நாறாமலர் 77
இருபுனலும் வாய்ந்த 357
இல்லாரை எல்லாரும் 409
இழைத்த திகவாமை 512
இளையர் இனமுறையர் 235
இறுதி பயப்பினும் 211
ஈன்றாள் பசி 100
உணர்வ துடையார் 296
உயர்வகலம் திண்மை 379
உருவுகண்டு எள்ளாமை 134
உளர்எனினும் இல்லாரொடு 329
உறினுயிர் அஞ்சா 509
உறுப்பமைந் தூறஞ்சா 444
உறுபசியும் ஓவாப்பிணியும் 346
உறுபொருளும் உல்கு பொருளும் 424
உறைசிறியார் உண்ணடுங்க 174
ஊறொரால் உற்றபின் 117
எண்ணிய எண்ணியாங்கு 132
எப்பொருளும் ஓரார் 227
எல்லாப்பொருளும் 389
எற்றென் றிரங்குவ 94
என்றும் ஒருவுதல் 85
என்னைமுன் நில்லன்மின் 482
எனைத்திட்பம் எய்தியக்கண்ணும் 142
எனைமாட்சித்தாகிய 400
ஐயப் படாஅ தகத்தது 249
ஒண்பொருள் காழ்ப்ப 438
ஒல்லும்வாய் எல்லாம் 153
ஒலித்தக்கால் என்னாம் 451
ஓஒதல் வேண்டும் 88
கடனறிந்து காலம் 200
கடிந்த கடிந்தொரார் 106
கடைக்கொட்கச் செய்தக்க 122
கருவியும் காலமும்

கல்லாதவறிற்கடை 326
கலங்காது
கண்டவினைக்கண் 139
கற்றார்முன் கற்ற 513
கற்றாருட் கற்றார் 310
கற்றறிந்தார் கல்வி 294
கற்றுக் கண்ணஞ்சான் 196
கானமுயல் எய்த 487
குறிப்பறிந்து காலங்கருதி 230
குறித்தது கூறாமை 255
குறிப்பிற்
குறிப்புணர்வாரை 251
குறிப்பின் குறிப்புணரா 257
குன்றேறி யானைப்போர் 431
கூற்றுடன்றி மேல்வரினும் 458
கூறாமை நோக்கி 245
கேட்டார்ப் பிணிக்கும் 53
கேடறியாக்
கெட்டவிடத்தும் 353
கைவேல் களிற்றொடு 495
கொளப்பட்டேம்
என்றெண்ணி 239
கொளற்கரிதாய்க்கொண்ட 385
சலத்தால் பொருள் 110
சிறுகாப்பின் பேரிடத்தாகி 383
சிறுமையும் செல்லா 423
சூழ்ச்சி முடிவு துணிவு 147
சுழலும் இசைவேண்டி 506
செய்க பொருளை 434
செய்வினை செய்வான் 164
செயற்கை அறிந்த 30
செவிச்சொல்லும்
சேர்ந்தநகையும் 225
சொல்லுக சொல்லை 61
சொல்லுதல் யார்க்கும் 126
சொலல்வல்லன்
சோர்விலன் 66
தள்ளா விளையுளும் 334
தார்தாங்கிச் செல்வது 465
திறனறிந்து சொல்லுக 57
துணைநலம் ஆக்கம் 83
துன்ப முறவரினும் 140
தூங்குக தூங்கி 150
தூய்மை துணைமை 203
தெரிதலும் தேர்ந்து
செயலும் 19
தொகச்சொல்லித் தூவாத 193
நட்டார்க்கு நல்லசெயலின் 171
நன்றென்ற வற்றுள்ளும் 290
நாடென்ப நாடா 364
நாநலம் என்னும் 46
நிலைமக்கள் சால 476
நுண்ணியம் என்பார் 273
நூலாருள் நூல்வல்லன் 187
பகைமையும் கேண்மையும் 270
பகையகத்துச் சாவார் 311
பகையகத்துப் பேடிகை 322
பல்குழுவும் பாழ்செய்யும் 348
பல்லவை கற்றும் 325
பலசொல்லக் காமுறுவர் 73
பழிமலைந்து எய்திய 103
பழுதெண்ணும் மந்திரியின் 39
பழையமெனக் கருதி 240
பிணியின்மை செல்வம் 361
பிரித்தலும்
பேணிக்கொளலும் 16
புரந்தார் கண்ணீர் 54
புல்லவையுள் பொச்சாந்தும் 298
பெரும் பொருளால் 338
பேராண்மை என்பது 491
பொருள் கருவி காலம் 158
பொருளல்லவரை 406
பொருளென்னும் பொய்யா 413

பொறையொருங்கு 343
போற்றின் அரியவை 222
மணிநீரும் மண்ணும் 375
மதிநுட்பம் நூலோடு 26
மறமானம் மாண்டவழி 462
மன்னர் விழைப 219
முகத்தின் முதுக்குறைந்தது 264
முகம் நோக்கி நிற்க 266
முடிவும் இடையூறும் 163
முற்றாற்றி முற்றி 394
முற்றியும் முற்றாது 392
முறைப்படச் சூழ்ந்தும் 42
முனைமுகத்து மாற்றலர் 398
வகையறிந்து வல்லவை 307
வன்கண் குடிகாத்தல் 10
வாளொடென்வன்கண்ணர் 320
விடுமாற்றம் வேந்தர்க்கு 208
விரைந்து தொழில்கேட்கும் 69
விழித்தகண் வேல்கொண்டு 499
விழுப்புண் படாதநாள் 503
வினைத்திட்பம் என்பது 115
வினைபகை
யென்றிரண்டின் 155
வினையான் வினையாக்கி 168
வீறெய்தி மாண்டார் 129
வேட்பத்தாம் சொல்லி 63
வேட்பன சொல்லி 233


# பிழைத்திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 7 | 25 | அமைச்ச | அமைச்சு |
| 8 | | என்னுதலும் | எண்ணுதலும் |
| | | பெறுக் | பெறுங் |
| 19 | | துனையாயினாரை | துணையாயினாரைப் |
| 22 | | குளா | சூளா |
| | | ,, | ,, |
| 28 | 1 | சூழ்ச்சிக்கனமாய் | சூழ்ச்சிக்களமாய் |
| 34 | 2 | கறல் | கூறல் |
| 45 | | தடத்தற்கு | நடத்தற்கு |
| 47 | 19 | நுல் | நூல் |

| | | | |
|---|---|---|---|
| 49 | 15 | ஐந்தனும் | ஐந்தனும் |
| | | படமற் | படாமற் |
| | | கன் | கண் |
| 63 | | வெவ்லுஞ் | வெல்லுஞ் |
| 73 | 6 | என்றறு | என்றது |
| 89 | 19 | நாலடியரில் | நாலடியாரில் |
| 90 | 18 | உயர்தினை | உயர்திணை |
| 91 | 9 | வருமது | வருவது |
| 92 | 4 | திருதற் | தருதற் |
| | 8 | படி | படினும் |
| 93 | 32 | இழுக்கும் | இருக்கும் |
| 94 | 8 | வினயச் | வினையைச் |
| 95 | 6 | பிற்றொருடருக்குச் | பிற்றொடருக்குச் |
| 119 | 12 | பமுதுபடும் | பழுதுபடும் |
| 131 | 30 | பெறத்தக்கறாகலாம் | பெறத்தக்கதாகலாம் |
| 137 | 13 | யென்னு | யென்று |
| 207 | 16 | தறிநனாமெனச் | தறிஞனாமென |
| 209 | 10 | அறிவு | அழிவு |
| 235 | 21 | பெரும்போலோர் | பெரும்பாலோர் |
| 237 | 19 | பெரியேதார் | பெரியதோர் |
| 262 | 15 | உரிச்சொல்லடியார்ப் | உரிச்சொல்லடியாகப் |
| 269 | 26 | வேற்றுத் | வேற்றுமைத் |
| 309 | 33 | ஏண்ணக் | எண்ணக் |
| 327 | 12 | அக்கல்வியறிவு களாள் | அக்கல்வியறிகளான் |
| 332 | 17 | அதிகாரந்தானும் | அதிகாரத்தானும் |
| 337 | 23 | தள்ளாவினையுள் | தள்ளாவிளையுள் |
| 339 | அகு - 3 | நெடுங்குதல் | நெருங்குதல் |
| 340 | 22 | தாம்விலாச் | தாழ்விலாச் |
| 360 | 14 | ஒருங்கொண்ணாமை | ஒருங்கெண்ணாமை |
| 361 | அகு - 1 | திணை | தினை |
| 392 | 8 | குழவிடாதே | சூழலிடாதே |
| 406 | 12 | திக்கப் | மதிக்கப் |
| 430 | 22 | டன்ற | கின்ற |
| 433 | 31 | கையத்திருக்க | கையகத்திருக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| 434 | | 15 | வேழமும் | வேழமும் |
| 435 | | 22 | ஒரு | ஒரு |
| | அகு- | 2 | என்பதனையுன் | என்பதனையும் |
| 458 | | 16 | கூற்றுமானது | கூற்றமானது |
| | | 19 | கூற்றவன் | கூறறுவன் |
| 459 | அகு- | 4 | பெருமியதத்தை | பெருமிதத்தை |
| 463 | அகு- | 3 | இரங்கினவன் | இறங்கினவன் |
| 465 | | 24 | செல்லு | செல்ல |
| | அகு- | 4 | வழையீறாகச் | வகையீறாகச் |
| 471 | | 9 | பெருகை | பெருமை |
| | | 19 | ளரல் | களரல் |
| 473 | | 22 | செல்லாத்துணி | செல்லாத்துனி |
| 476 | | 18 | | |
| | | 28 | | |
| 476 | | 11 | சோர்த்தால் | சேர்த்தால் |
| | | 29 | நான்கண் | நான்கன் |
| 478 | | 17 | நிணையா | நினையா |
| 487 | | 1 | என்னைமின் | என்னைமுன் |
| 497 | | 31 | கறிற்றொடு | களிற்றொடு |
| 504 | | 2 | முகுதுபுறம் | முதுகுபுறம் |
| 507 | | 2 | உயிர்வலாழ்கிறதை | உயிர்வாழ்கிறதை |
| 513 | | 7 | சேய்வேன் | செய்வேன் |
| 518 | | 1 | திரை | நிரை |
| 519 | | 3 | சாரங்கபாணி,கோ, | சாரங்கபாணி,இரா. |

## திருக்குறள் ஆய்வக வெளியீடுகள்

| | | ரூ. | பை. |
|---|---|---|---|
| 1. | குறள் கண்ட பொருள் வாழ்வு (டாக்டர் தி. முருகரததனய) | 5 | 00 |
| 2. | குறள் கூறும் இறைமாட்சி (டாக்டர் தி. முருகரத்தனம்) | 7 | 00 |
| 3. | வள்ளுவர் வகுத்த அரசியல் (கருத்தரங்கக் கட்டுரைகள்) | 6 | 00 |

| | | | |
|---|---|---|---|
| 4. | வள்ளுவர் வகுத்த பொருளியல் (கருத்தரங்கக் கட்டுரைகள்) | 6 | 00 |
| 5. | குறள் கூறும் சமுதாயம் (செல்வி காமாட்சி சீனிவாசன்) | 10 | 00 |
| 9. | திருக்குறளும் விவிலியமும் (இரண்டாம் பதிப்பு) (செல்வி காமாட்சி சீனிவாசன்) | | |
| 7. | திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்—அறம் (கோ. வ. பதிப்பு) | 10 | 00 |
| 8. | திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்—பொருள் (கோ. வ. பதிப்பு) | 15 | 00 |
| 9. | திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்—காமம் (கோ. வ. பதிப்பு) | 10 | 00 |
| 10. | திருக்குறள் உரைக்களஞ்சியம்—பாயிரவியல் (முதுபெரும்புலவர் ச. தண்டபாணிதேசிகர்) | 20 | 00 |
| 11. | திருக்குறள் உரைக்களஞ்சியம்—இல்லறவியல் (முதுபெரும்புலவர், ச. தண்டபாணிதேசிகர்) | 30 | 00 |
| 12. | குறள் கூறும் அரசு (டாக்டர். தி. முருகரத்தனம்) | 8 | 00 |
| 13. | திருக்குறள் உரைக்களஞ்சியம் — துறவறவியல், ஊழியல் (முதுபெரும்புலவர் ச. தண்டபாணிதேசிகர்) | 30 | 00 |
| 14 | திருக்குறள் உரைக்களஞ்சியம்—காமத்துப்பால் களவியல், கற்பியல் (முதுபெரும்புலவர் ச. தண்டபாணிதேசிகர்) | 60 | 00 |
| 15. | திருக்குறள் உரைக்களஞ்சியம்—பொருட்பால் : அரசியல் (முதுபெரும் புலவர், ச. தண்டபாணிதேசிகர்) | 120 | 00 |
| 16. | திருக்குறள் உரைக்களஞ்சியம்—பொருட்பால் அங்கவியல் பகுதி 1 (முதுபெரும்புலவர், ச. தண்டபாணிதேசிகர்) | | |

அடுத்து வருவன :

17. திருக்குறள் உரைக்களஞ்சியம்—ஒழிபியல்
18. திருக்குறள் உரைக்களஞ்சியம்—அங்கவியல் பகுதி 2
19. திருக்குறளும் உறுதிப்பொருள்களும்
(கருத்தரங்கக் கட்டுரைகள்)